
வழி வழிச் சீலம்பு



T 821.081 414
SAR
CT13252
CICT

பாக்டர் சரளா ராசகோபாலன்

CT 13252

வழி வழிச் சிலம்பு

[illegible]

டாக்டர் சரளா ராசகோபாலன் எம்.ஏ.,பி.எச்.டி
தமிழ்ப் பேராசிரியர்
இராணிமேரி கல்லூரி

013252

ஒளிப் பதிப்பகம்
63, ரங்காச்சாரி சாலை
சென்னை-600 018.

முதற்பதிப்பு : டிசம்பர் 1986
உரிமை : ஆசிரியருக்கு

நூல் கிடைக்குமிடங்கள் :—

ஒளிப்பதிப்பகம், 63, ரங்காச்சாரி சாலை, சென்னை-18.
ஐந்திணைப் பதிப்பகம், 282, பாரதி சாலை, சென்னை-5.
சைவசித்தாந்த நூற்பதிப்புத் கழகம், 79, பிரகாசம் சாலை, சென்னை-108.
பூங்கொடிப் பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை-4.
வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை-17.

அச்சிட்டோர் :
ஸ்ரீ கோமதி அச்சகம்,
41, சூரப்பமுதலித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

013252

அணிந்துரை

முனைவர், சிலம்பொலி

சு. செல்லப்பன் எம். ஏ. பி. டி., பி. எல்,

வழி வழி வரும் ஆய்வு :

திருவள்ளுவருக்குப் பின் வந்தோர் திருக்குறட் கருத்துகளையும் திருக்குறளடிகளையும் எவ்வெவ்வாறு எடுத்தாண்டுள்ளனர் என்பதை "வழிவழி வள்ளுவர்" என்னும் நூலாகச் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை தந்துள்ளார். அவ்வாராய்ச்சி வழியைப் பற்றி நின்று இளங்கோ யாத்த சிலப்பதிகாரக் கதையை அவருக்குப் பின் வந்தோர் எவ்வெவ் வகையில் சொல்லியுள்ளனர் என்பதை எடுத்துக் கூறுகிறது திருமதி டாக்டர் சரளா ராசகோபாலனின் இந்நூல். புகழேந்திப் புலவர் தொடங்கி புத்தனேரி சுப்பிரமணியம் வரை 30 பேர் எவ்வெவ் வகையில் சிலம்பைத் தத்தம் போக்கில் ஆண்டுள்ளனர் என விரிவாக விளக்குகிறது இந்நூல். இவற்றில் 9 செய்யுள் இலக்கியம்; ஒன்று வில்லுப்பாட்டு; ஒன்று கும்மி; ஒன்று நாட்டுப்புறக் கதைப் பாடல்; இரண்டு சிறுவர்க்கென இயற்றப்பட்ட செய்யுள் நூல்கள்; நான்கு சிலம்பின் ஒரு கதை மாந்தரை விவரித்துக் கூறுவன; 12 நாடக வடிவின. இளங்கோவிற்குப் பின் வந்தவர்கள் சிலம்பைக் காப்பியமாக எழுதுவதை விட நாடகங்களாகப் படைப்பதிலேயே மிகுதியும் நாட்டம் செலுத்தியுள்ளனர் என்பதை இவ்விவரங்கள் புலப்படுத்துகின்றன.

கோவிலன் கதை

சிலப்பதிகாரக் கதை திரிந்து 'கோவிலன் கதை' என்ற பெயரில் புகழேந்திப்புலவர் பாடியதாக ஒரு நூல் உள்ளது. கோவலன், இக்கதையில் 'கோவிலன்' ஆக்கப்பட்டுள்ளான். பூசையை நிறுத்திய பாண்டியனைப் பழிவாங்குவதற்காகவே காளி கண்ணகியாகப் பிறந்தாள் என இக்கதை கூறுகிறது. அவளுக்கும், கோவலனுக்கும் திருமணம் நடக்கிறது. அங்கு நாட்டியமாட வந்த மாதகி (மாதவி) மாலையை வீச அது கோவிலன் கழுத்தில் விழுகிறது. கத்தியினால் அறுத்த போதும், அதை அகற்ற முடியவில்லை. மாதகி கொடுத்த வெற்றிலையைத் தின்ற கோவிலன், அதில் தடவப்பட்டிருந்த வசிய மருந்து காரணமாக, திருக்கடையூரிலிருந்த மாதகியின் இல்லம் தேடிச் செல்கிறான். சில காலம் அவளுடன் இருந்த அவன் பிரிந்து வருகிறான். கண்ணகியுடன் மதுரை சென்று மன்னனால் கொல்லப்படுகிறான். மதுரை அழிகிறது. இப்படிப் பல செய்திகள்,

சிலம்பிலிருந்து மாறிய தன்மையில் உள்ளன. இவ்வாறே பிற நூல்களிலும், ஆசிரியர்கள் தத்தம் மனப் போக்கிற் கேற்ப மாற்றங்களைச் செய்து எழுதியுள்ளனர். இந் நூலாசியர் ஒவ்வொருவருடைய கதையின் போக்கையும் விவரித்து மூல நூலான 'சிலப்பதிகாரத்திற்குப் பின் எழுந்துள்ள இந்நூல்கள் பாத்திர அமைப்பிலும் காப்பியக் கருத்தோட்டத்திலும் கொண்டுள்ள ஒற்றுமை வேற்றுமை களை நன்கு விளக்கிச் சொல்கிறார்.

யாப்பு மாற்றம்

சிலப்பதிகாரக் காப்பியத்தின் கருத்து மாறாது யாப்பை மட்டும் மாற்றிஎழுந்துள்ள நூல்களும் உள்ளன. ஸ்ரீ நிவாசாச்சாரியார் எழுதியுள்ள 'கோவல வெண்பாவில்' 290 வெண்பாக்கள் உள்ளன. மு.ரா. கந்தசாமிக் கவிராயர் 300 வெண்பாக்களில் 'கண்ணகி வெண்பா' எழுதியுள்ளார். அகவற்பாவால் அமைந்த சிலப்பதிகாரத்தை எ. வெ. முனிசாமி 1321 விருத்தப் பாக்களில் பாடியுள்ளார். பாவேந்தர் பாரதிதாசன், சிலப்பதிகாரத்தைக் 'கண்ணகி புரட்சிக் காப்பியம்' எனப் புதிதாகப் படைத்தல் மட்டு மன்றித் தன் கொள்கைக்கு ஏற்ற வண்ணம், பல மாற்றங் களையும் செய்து பாடியுள்ளார். சடங்குகள், ஊழ்வினை போன்ற பகுத்தறிவிற்கும் பொருந்தாதவை, சிலம்பில்இடம் பெற்றிருப்பதைஏற்கஅவர்உள்ளம்இடந்தரவில்லைஎனவே,

> .....அந்தச்
> சிலப்பதிகா ரப்பெருநூல்கள் எனை அழைத்துத்
> தனித்தமிழில் சிலபாட்டால் அடிகள் உள்ளம்
> கலப்பற்ற பசுப்பாலே யாக மக்கள்
> கவிந்துண்ணத் தருகஎனச் சொன்ன தாலே
> சொலப்புகுந்தேன் என்தமிழர் இருந்து கேட்பார்
> தூயதமிழ்ச் சுவைகண்டு வாழ்வார் நன்றே''

என்று பாடுகிறார்.

ஒரு மாந்தர் பற்றியவை

மாதவி பாத்திரத்தை மட்டும் விரிவாகப் பேசும் வகை யில் 'விதியோ வீணையோ' 'மாதவி காப்பியம்' என்னும் நூல்கள் எழுந்தன. கவிஞர் தமிழொளி, 'விதியோ வீணையோ' எனும் சிறு காப்பியத்தில் மாதவி, கோவலன் பிரிவுக்குக் காரணமாய் அமைந்த யாழை உடைத்தெறிவ தாகப் பாடியுள்ளார். மாதவியின் பெருமையைக் கூறும் முறையில் புலவர் பொன்னிவளவன் மாதவி காப்பியத்தைப் படைத்துள்ளார். பரத்தையர் சமுதாயத்தின் புன்மையை மாதவியின் தாய் சித்திராபதி வாயிலாக விளக்கி,

அந்தச் சூழலிலே தோன்றியும் மாசற்ற பொன்னாக மாதவி வீளங்கினாள் என்பதை இக்காப்பியம் தெளிவுறுத்துகிறது. காப்பியத்தின் 'ஒரு பாத்திரத்துக்கு முதன்மை கொடுத்து, அப்பாத்திரத்தின் மூலமே காவியக் கருத்தைச் சுருக்கிச் சொல்வது இந்தி மொழியில் கண்ட காவியம் எனும் உத்தியாகும். இதைப் பின்பற்றிச் 'சாலை இளந்திரையன்' பொற்கொல்லன் மூலம் சிலப்பதிகாரக்கதை யைக்காட்டுகிறார். பொற்கொல்லன் சூழ்நிலைக்கு அடிமைப் பட்டுத் தவறு செய்ததாக ஆசிரியர் படைத்துக் கொண்டு, அவன் பால் கதையைப் படிப்போர்க்கு ஓர் இரக்கம் தோன்றச் செய்து விடுகிறார். ச. து. சு. யோகியார் 'கண்ணகி' என்னும் தலைப்பில் பன்னிருவிருத்தங்களால் கண்ணகியின் பெருமையைக் கூறியுள்ளார்.

சிறுவர் இலக்கியம்

சிலம்பு சிறுவர் இலக்கியமாகவும் மலர்ந்துள்ளது. 'அய்யாசாமி' சிலப்பதிகாரக் கதைப்போக்கில் எவ்வித மாற்றமுமின்றி, சிறுவர்கட்கு ஏற்ற நடையில் கண்ணகி யின் திருமணம் முதல், அவள் தன் கணவனோடு விண்ணுலகு எய்தியது வரை எழுதியுள்ளார். வஞ்சிக் காண்டம் பாடப்படவில்லை. 'ஞானமணி' கதைக்கு ஒரு பாடலாக முப்பது பாடல்களில் சிலப்பதிகாரக் கதையைச் சிறுவர்க்கு உரைக்கிறார்.

நாட்டுப்புறப் பாடல் வடிவங்கள்

படித்தறியா மக்களிடையே கருத்தைப் பரப்ப வில்லுப் பாட்டு, கும்மி போன்றவை ஏற்ற சாதனங்களாம். அவ் வகையிலேயும் சிலம்பு பரப்பப்பட்டுள்ளது. 'அ. க. நவநீத கிருஷ்ணன்', 1953 இல் வில்லுப் பாட்டில் கண்ணகி கதை செய்துள்ளார். கரூர் வட்டத்தில் கண்ணகியின் வரலாறு கும்மிப் பாடலாகப் பாடப் பெறுகிறது.

நாடகங்கள்

சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழ்க் காப்பியம். அது தமிழில் கிடைக்கும் பண்டைய நாடகம் ஆதலின், அதை யொட்டி, நாடக நூல்கள் பெருமளவில் எழுந்திருப்பது இயல்பே! முதன்முதலில் அரங்கேறியது 'சங்கரதாஸ் சுவாமி' களின் கோவலன் நாடகம் ஆகும். இது 'கோவலன் கதை' என்னும் நாட்டுப்புறக் கதையின் நாடக வடிவமே ஆகும். கண்ணகி இந்நாடகத்தில் கண்ணகை எனப்படுகிறாள். பொற்கொல்லனுக்கு வஞ்சிப்பத்தன் எனும்பெயர் தரப்படு கிறது. புகழேந்திப்புலவரின் கதையை யொட்டியே, 'வட்டப்

பாறையில் வதைபட்ட கோவலன் கன்னகி நாடகம்' 'வீரபத்திரன்' என்பவரால் எழுதப் பெற்றுள்ளது. ச. க. சங்கரலிங்கம் கவிராயரின் 'கோவலன் சரித்திரம்' நாடக மும் ஏறத்தாழ இதேபோக்கில் உள்ளது. கலைஞர் மு. கருணாநிதி 'சிலப்பதிகார நாடகத்தை' முப்பத்தெட்டு காட்சிகளில் விளக்கிச் சொல்கிறார். பகுத்தறிவுக்குப் பொருந்தாத இயற்கை இறந்த நிகழ்ச்சிகளைக் கலைஞர் தம் நாடகத்தில் இடம் பெறாது செய்துள்ளார். காரண காரியங்கட்கு ஏற்றவாறு, சில இடங்களில் கதையில் மாற்றமும் செய்துள்ளார். இவர் போன்றே, மற்ற நாடக ஆசிரியர்களும் தத்தம் எண்ணத்திற்கேற்ப எவ்வெவ்வாறு மாற்றம் செய்துள்ளனர் என்பதை இந்நூலாசிரியர் ஒவ் வொரு கட்டுரையிலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடகங்களில், வஞ்சிக்காண்ட நிகழ்ச்சிகள் பெரும் பகுதி இடம் பெற்றுள்ளன. 'அண்ணா'வின் 'கல் சுமந்த கசடர்' ரா. வேங்கடாசலத்தின்' 'இமயத்தில் நாம்' 'அரசு வின்' 'குடமலைத் தெய்வம்' ஆகிய நாடகங்கள் வஞ்சிக் காண்டத்தை மட்டுமே மையமாகக்கொண்டு எழுந் துள்ளன. சிலப்பதிகாரப் பாடல் அடிகளைக் கொண்டே 'சிலம்புச் செல்வி' என்னும் பெயரில்,' மு. வை. அரவிந்தன், ஒரு நாடகத்தைத் தந்துள்ளார்.

மாற்றங்கள் மனத்தைத் தொட்டுள்ளனவா?

வால்மீகி இராமாயணத்தில்,வேண்டியமாற்றங்களைச் செய்து, தமிழ்ப் பண்புக்கு ஏற்றவாறு கம்பராமாயணம் பாடப் பெற்றது. கம்பராமாயணம் வால்மீகி ராமாயணத் தினும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. சிலப்பதிகாரத் திலும் மாற்றங்களைச் செய்து பல நூல்கள் தோன்றியிருக் கின்றன. இந்நூல்களில் எதுவும் — கம்பராமாயணம், வால்மீகி இராமாயணத்தினும் விஞ்சி நிற்பதைப்போல— சிலம்பை விஞ்சி, மக்கள் மனத்தில் இடம் பெற்றிருப் பதாகச் சொல்ல இயலவில்லை. இதற்குக் காரணம், இளங்கோவின் முத்தமிழ்ப் புலமையைப் பின்னர் வந்தவர் களால் விஞ்ச முடியவில்லை என்பதா அல்லது கம்ப ராமாயணத்தில் செய்யப் பெற்ற மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது போல, சிலம்பில் செய்யப் பெற்ற மாற்றங்கள் மக்கள் மனத்தைத் தொடவில்லையா என்பது ஆராய்தற்குரியதாகும்.

சீரிய ஆய்வு

திருமதி சரளா ராசகோபாலன் இவ்வாய்வை விரிவாகவும் ஆழமாகவும் செய்துள்ளார். ஒவ்வொரு நூலைப் பற்றியும் தனியே குறிப்பிட்டு அது எவ்வாறு மூல நூலாம் சிலப்பதிகாரத்திலிருந்து மாறுபட்டுள்ளது அல்லது மூல நூல் கருத்துகளை அரண் செய்கிறது என்பதை யெல்லாம் நன்றாக அலசி ஆராய்ந்துள்ளார். ஒவ்வொருவரும் செய்துள்ள மாற்றத்திற்குக் காரணமாக இருந்துள்ளது எது என்பதையும் இயன்ற இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். நெறி நின்று அரிய கருத்துள்ள பலவற்றைத் தொகுத்து முடிவு கண்டுள்ள இவருடைய ஆய்வுத்திறம் பாராட்டுதற் குரியது. இன்னும் இது போன்ற பல அரிய நூல்களை ஆக்கி இவர் தமிழுக்கு அணி சேர்ப்பாராக!

அன்புடன்

சு. செல்லப்பன்

இதயம் கலந்த இனிய நன்றி

சிலப்பதிகார உணர்வூட்டிய சிலம்புச் செல்வர்
டாக்டர் ம. பொ. சி. அவர்கள்,
அணிந்துரை அருளிய முனைவர் சிலம்பொலி
செல்லப்பன் அவர்கள்,
புலமை ஆசிரியர் முனைவர் பொற்கோ அவர்கள்,
நூல் அளித்த நன்னெஞ்சங்கள்:
முனைவர் த. வே. வீராசாமி.
முனைவா மா. செல்வராசன்.
கவிஞர் ரா. புத்தனேரி. சுப்பிரமணியம்,
சுவடியியல் அறிஞர் திரு. இராமன்.
செந்தமிழ்ச் செல்வி ஆசிரியர். திரு. முத்துக்குமாரசாமி.
அச்சுரு அளித்த திரு. சரவணகுமார்.
ஓவியர் இராஜா.
செல்வன் மு. சுப்பிரமணியன் ஆகியோருக்கு

சரளா ராசகோபாலன்

பொருளடக்கம்

	பக்கம்
சிலம்பு—ஓர் அறிமுகம்	1
கோவிலன் கதை	6
கண்ணகி வழக்குரை	90
கோவலன் கர்ண்ணகை கதை	143
கோவலன் கதை	199
வைசிய புராணம்	247
கண்ணகி புரட்சிக் காப்பியம்	252
கண்ணகி	290
கோவல வெண்பா	293
பூம்புகார்ப் பத்தினி	294
சிலப்பதிகாரச் செம்பொருட் காவியம்	298
கண்ணகி வெண்பா	299
கண்ணகி கதை	301
கண்ணகிக் கும்மி	305
சிறுவர் சிலம்பு	307
சிலப்பதிகாரம்	308
விதியோ வீணையோ	309
மாதவி காவியம்	317
சிலம்பின் சிறுநகை	322
கோவலன் சரித்திரம்	328
வட்டப்பாறையில் வதைபட்ட கோவலன் கன்னகி நாடகம்	355
கோவலன் சரித்திரம்	377
சிலப்பதிகாரம் நாடகம்	391
சிலப்பதிகாரம் ஒரு நாடகம்	422
நாடகச் சிலம்பு	426
சிலம்புச் செல்வி	431
கல் சுமந்த கசடர்	432
இமயத்தில் நாம்	436
குடமலைத் தெய்வம்	443
கண்ணகியோ மாதவி	445
சித்திரப் பாவை	447

□□□

சிலம்பு—ஓர் அறிமுகம்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் செந்தமிழ்க் கன்னியின் மணியாரம். இது வழி வந்த பழம்பெரும் இலக்கியம். முதலில் தோன்றிய முத்தமிழ்க் காப்பியம். இன்றுவரை இதயம் பதிந்த இணையிலாப் பெருநூல் பனித்தமிழ் வரலாற்றின் தனிச்சிறப்பு முதன்மைநூல். ஆட்சியாளரின் மங்கல மாட்சியைப் புலவர்களில் பலர் பணிந்து பாடிய அந்நாளில், முடிமன்னனின் இளவரசனால் ஒரு குடிமகள் மேல் பாடப்பட்ட புரட்சிப்படைப்பு. இன்றும் ஒன்று சேரும் இயல்பு இல்லாத தமிழினத்தின ஒற்றுமை நன்மையை அன்றே உணர்த்த முற்பட்ட எச்சரிக்கை எழுத்து கேட்பார் அற்றுக் கிடந்த நாட்டுப் பாடலின் சிறப்பை முன்பே நிலை நாட்டிய இலக்கியச் சான்று. மண்ணகம் மறந்து விடாதபடி, ஒரு துறவியின் எண்ணம் போற்றிய பெண்மையின் பெருமை. பொதுவுடைமைப் பொதுமகளை மதிப்புடைய திருமகளாக மாற்றிய சமுதாயச் சிந்தனை. மோதிச் சிதறிய நீதிச் சமயங்களை ஆதியிலேயே ஒருமை நெறியில் வழிப்படுத்திய சிந்தனை. இயற்கையைத் தொழுவதால் இறைவனை வணங்கும் முறைமையைக் காட்டிய ஒரு தனி முயற்சி. பிற நாட்ட வரும் விரும்பி வரவேற்று, தம் தாய்மொழி மடியில் சீராட்டிய தண்டமிழ் முத்து.

சிலம்பின் தலைவி கண்ணகி. இவள் சிலப்பதிகாரத் தில்தான் முதலில் பிறந்தாள் என்று சொல்வதற்கில்லை.

இக்கண்ணகியின் நிகழ்ச்சியோடு ஒத்த சில குறிப்புகள் சங்கப் பாடல்களில் உள்ளன.

எளியவரைப் புரந்த வளல் பேகன், தன் மனைவியைத் துறந்தான். பொருந்தாத ஒருத்தியுடன் உறவு கொண்டான். பிரிவு அவன் மனைவியை வருத்தியது; வாட்டியது; கண்ணீரில் குளிப்பாட்டியது. அதைச் சில புலவர்கள் கண்டார்கள். வள்ளலிடம் முறையிட்டார்கள். அவளுக்காக வாதாடினார்கள். கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் என்ற அந்தப் புலவர்கள், தம் வேண்டுகோளை வரலாற்றின் பக்கத்தில் பதிவு செய்தார்கள் (புறம்: 143-147)

அந்தப் புலவர்கள் அறிவுறுத்தினார்கள். ஆனால், பேகனின் மனம் மாறவில்லை. அவன் தன் காதலியின் மனையில் 'விடுதல் அறியா விருப்பினனாகி' மயங்கிக் கிடந்தான். புலவர்களின் பாடல்கள் பேகன் மனைவியின் பெயரைக் கூறவில்லை. ஆனால், 143 ஆம் பாட்டின் அடிக் குறிப்பில், "அவனால(பேகனால்)துறக்கப்பட்ட கண்ணகி காரணமாக அவனைக் கபிலர் பாடியது" என்ற குறிப்பு உள்ளது இதன்மூலம் பேகனால் துறக்கப்பட்ட மனைவியின் பெயர் கண்ணகி என்று தெரிகிறது.

நற்றிணையிலும் மற்றொரு குறிப்பு வருகிறது. தலைவனைப் பிரிந்து வாடும் காதல்பரத்தை, தன் பிரிவுத் துயரம், அவன் காதுக்கு எட்டவேண்டும் என்பதற்காக, தலைவிக்குப் பாங்காயினார் கேட்கும்படி தன் துயரம் பற்றிக் கூறுகிறாள். மதுரை மருதனிளநாகனார், அந்தப் பாடலைப் பாடியுள்ளார். (நற் 216) பேரன்புக் குரிய ஒரு காதலன், தன் அன்பைத் தூர எறிந்துவிட்டு அயலான் போலாகிவிட்டான் அவனைப் பிரிந்து வாடும் துயரம் தாங்க மாட்டாமல், தன் நிலை அறுத்து எறிந்தாள் 'திருமாவுண்ணி' என்ற பெண். அவளுடைய நிலை பிரிவுத் துயர் தாங்கமாட்டாமல் வாடும் பரத்தையின் நிலைமைக்கு எடுத்துக் காட்டாக வருகிறது.

"ஏதிலாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா வுண்ணி"
(நற் 216: 8-9)

என்னும் இப்பாடலிலிருந்து சங்ககாலத்திலேயே, காதலனை இழந்தவருத்தம் தாங்க மாட்டாமல் தன் மார்பை அறுத்தெறிந்த ஒரு பெண்ணின் கதை வழங்கி வந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. நற்றிணையின் உரையாசிரியரும் "திருமாவுண்ணி என்பது கண்ணகி கதையைக் குறிக்கின்றதுபோலும்" என்று எழுதியுள்ளார் (நற்றிணை —பின்னத்தூர் ஆ. நாராயணசாமி ஐயர் உரை. ப. 247)

ஒற்றை முலைச்சி என்ற தேவதை கேரளத்தில் மலையன்மாரிடமும் பிற இனத்தாரிடையேயும் பய பக்தியுடன் வணங்கப்படும் தெய்வமாக உள்ளது. இந்த ஒற்றை முலைச்சியை 'யட்சி தேவதை' என்றும் 'மலையில் வாழ்பவள்' என்றும் 'பாலை மரத்தடியில் நிற்பவள்' என்றும் கருதுகின்றனர். இந்த ஒற்றை முலைச்சியே திருமாவுண்ணியாக இருக்கலாம். சங்க காலத்து ஒற்றை முலைச்சியான திருமாவுண்ணியின் கதை வளர்ச்சியே கண்ணகி கதை என்று கருதலாம் என்று பி. எல். சாமி குறிப்பிடுகிறார் (தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு ப. 155).

மேற்கூறிய சான்றுகளைக்கொண்டு, மிகவும் அரிதான நிகழ்ச்சி ஒன்று சங்ககாலத்தில் நடந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

இந்த நிகழ்ச்சியோ இது போன்றதொரு நிகழ்ச்சியோ இளங்கோவடிகளின் உள்ளத்தைப் பாதித்திருக்கிறது. வீட்டைவிட்டு வெளிவரும் பழக்கமும் இல்லாத ஓர் ஏந்திழையாள் மன்னனையே எதிர்த்து நின்றது ஒரு புரட்சிகரமான நிகழ்ச்சி. இது அடிகள் நெஞ்சில் படிந்தது; காப்பியமாக மலர்ந்தது. உரை சால்பத்தினியை உயர்ந்

தோர் ஏத்துவர் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு புதிய சமுதாயத்தையே உருவாக்கினார் சேர இளவரசர். படிதாண்டி அறியாப் பெண்ணொருத்தி, முடிமன்னனையே எதிர்க்கும் ஆற்றல் பெற்றவளாக — மாநகரத்தையே எரிக்கும் புரட்சி மங்கையாக—உலகோர் தொழும்படி ஏற்றம் பெற்ற பத்தினிக் கடவுளாக மாற்றம் பெற்றதை அவர் கூறிச் சென்றார். சிலம்பின், இந்த மையக்கருத்து, சமுதாயத்தைத் திருத்த வேண்டும், என்ற விழைவு கொண்ட—பின்னால் தோன்றிய—நன்னெஞ்சங்களை நன்கு கவர்ந்துள்ளது.

அடிகள், தமிழகத்தில் ஊடுருவியிருந்த பரத்தமையைப் போக்க விரும்பினார். அதனால்தான் பரத்தமைச் சமுதாயத்தின் பிரதிநிதி சித்திராபதிக்குத் தன் நூலில் இடம் தரவில்லை. அவள் மகளை விலைமகளாக்காமல் குலமகளாகப் படைத்தார். மகளின் மகளைத் துறவியாக்கினார். இளங்கோவடிகளின் எழுதுகோலில் பிறந்த மாதவியின் பண்பு நலன்கள் பல கவிஞர்களால் தொழுது கொள்ளும்படி அமைந்தன.

தமிழர் வடவர் போராட்டம், இந்த நூற்றாண்டில் மட்டுமின்றி அடிகள் வாழ்ந்த அந்த நூற்றாண்டிலும் இருந்தது. தமிழர் வடவரைப் போரிட்டு வென்று இமய மலையில் தங்கள் கொடியை நடுதலைச் சிறப்பாகக் கருதியிருந்தனர். இப்பெருமையை அறிவிக்கும் முறையில் 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்பதைப் போன்று பெயரின் முன் சிறப்புப் பட்டம் அமைத்துக்கொண்டனர். அவ்வாறே சேரன் செங்குட்டுவன் வடநாட்டவரை வென்று, அங்கிருந்து சிலைக்குக் கல் கொண்டுவந்த செய்தி, தமிழ்ப் பற்று கொண்ட நெஞ்சங்களுக்கு விருந்தாக அமைந்தது. இப்படி, பல நிலையிலும் சிலம்பில் வந்த நிகழ்ச்சிகள், பின்னால் படைப்பாளிகளால், தங்கள்

கொள்கை, கற்பனை, சொல்லாட்சி, என்பனவற்றிற்கு ஏற்ப மாற்றம் பெற்றன.

குலமகளிரிடத்தில் கற்பின் சிறப்பை நிலை நிறுத்த விரும்பியவர்கள் கண்ணகியின் சிறப்பிற்கு முதன்மை தந்தனர். கற்புடைய மகளிரிடத்தில் அதீத ஆற்றல் இருப்பதாகக் காட்டினர். பரத்தையர்களிடம் செல்லும் ஆடவர்களின் புன்மையை வெளிப்படுத்த விரும்பியவர்கள் கோவிலனைக் கருவியாகக் கொண்டனர். பரத்தையர்களை உயர்த்த விரும்பியவர்கள் மாதகியின் பண்பு நலனில் ஈடுபாடு கொண்டனர். தமிழர்களின் சிறப்பை வெளிப்படுத்த ஆர்வம் கொண்டவர்கள் சேரன் செங்குட்டுவனுக்குச் சிறப்பிடம் தந்தனர். இவ்வாறு சிலப்பதிகாரத்தில் தோய்ந்தவர்கள் அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப, பல மாற்றங்களைச் செய்து மகிழ்ந்தனர்.

இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய கதைக்கரு, இருபதாம் நூற்றாண்டிற்கும் பொருந்துவதாக அமைந்தது. அதனால் பிற்காலத்தில், சிலப்பதிகாரத்தை ஒட்டிக் கதைப் பாடல்கள் தோன்றின. நாடக நூல்கள் பிறந்தன. இக்கதை தெருக்கூத்திலும் இடம் பெற்றது. நாடகத்திலும் மேடை ஏறியது. திரைப்படத்திலும் பங்கு கொண்டது. வானொலி தொலைக்காட்சி இவற்றிலும் உரிமை வாய்ப்புடன் திகழ்கிறது.

இனி சிலப்பதிகாரத்திற்குப் பின்னால் தோன்றிய நூல்கள் ஆயப்படுகின்றன. சிலப்பதிகாரத்தின் மையக் கருத்து பின்வரும் நூல்களில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளன என்பது விளக்கப்படுகிறது. பல நூல்கள் மக்களின் பார்வைக்கு வரமுடியா நிலையில் இருப்பதால் அந்நூல்களைப் பற்றிய கதைச் சுருக்கமும் சிறப்புக்கூறுகளும் கூறப்பட்டுள்ளன.

□□

கோவிலன் கதை

(புகழேந்திப் புலவர்)

சிலப்பதிகாரத்திற்குப் பின்னர்எழுதப்பட்டு அச்சிலும் வெளி வந்துள்ள நூல்களில் புகழேந்திப் புலவர் எழுதியதாகக் கருதப்படும் கோவிலன் கதையே பலரால் அறியப்படும் சிறப்புடையதாக விளங்கி வருகிறது. இந்நூல் அம்மானை வடிவில் உள்ளது. இது வெளி வருவதற்கு முன் வாய்மொழியாகவும் ஏட்டுச் சுவடிகளிலும் வழங்கியிருத்தல் வேண்டும் என்ற திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களின் கருத்து ஏற்றுக் கொள்வதாக அமைகிறது. (இலக்கிய மணிமாலை பக். 127) இந்நூலின் தலைப்பில் 'கோவலன் கதை' என்று குறிப்பிட்டிருந்தாலும் நூலின் உள்ளே 'கோவிலன்' என்றே காணப்படுகிறது. நூலாசிரியர் இந்நூலைக் குறிப்பிடும் இடங்களில் 'கோவிலன் கதை' என்றே குறித்துள்ளார்.

இந்நூலின் ஆசிரியர் விநாயகர், சுப்பிரமணியர் சொக்கநாதர், திருமால், சரசுவதியம்மன் ஆகியோருக்குத் துதி பாடுகிறார். இது இடைக்காலத்தில் தோன்றிய நூலானதால் புராணக் கருத்துகள் நிரம்ப இடம் பெறுகின்றன.

"பாலன்கோவி லன்கதையைப் பாரில்யான் பாடுதற்கு
காலன் அனுகாமல் கதையொன்றும் சோராமல்
பத்தினியாள் தன்கதையில் பழுதொன்றும் நேராமல்
உத்தமியாள் தன் கதையில் ஒன்றும் குறையாமல்."

இயற்ற, சரஸ்வதியை ஆசிரியர் வேண்டுகிறார்.

சிலப்பதிகாரம், சேரன் தம்பி இளங்கோவால் எழுதப் பெற்றது. கோவிலன் கதை, சோழனுடன் தொடர்புடைய புகழேந்திப் புலவரால் இயற்றப் பெற்றது என்று கூறப் படுகிறது. சிலப்பதிகாரம் தன்னிகரற்ற ஒரு காவியம். கோவிலன் கதை இடைக் காலத்தில் நாட்டுப் பாடல் அமைப்பில் எழுந்த கதைப்பாடல். சிலப்பதிகாரம் மானுடப் பெண்ணைத் தெய்வமாக்கிக் காட்டும். கோவிலன் கதை தெய்வத்தை மானுடப் பெண்ணாக்கிக் காட்டும். சிலப்பதிகாரம்—கற்றோர் அனைவரும் படித்தற் கேற்ற முறையில் எழுதப்பட்டுள்ளது. கோவிலன் கதை பாமர மக்களுக்கென்றே—சிறப்பாக மகளிருக்கென்றே—பாடப் பெற்றது. ஒட்டக்கூத்தரின் புலமைக் காய்ச்சலால் சிறையில் அடைக்கப்பட்ட புகழேந்திப் புலவர், அங்கு நீர் மொள்ள வந்த பெண்களுக்காகப் பாடியதாக முன்னுரை பகர்கிறது சிலப்பதிகாரம் தொட்டனைத் தூறும் மணற்கேணியாகப் புதுப்புது சுவையினைத் தரும் செந்தமிழ்க் காவியம். கோவிலன் கதை எளிய மாந்தருக்கு ஏற்ற சுவை தரும் கொச்சை மொழி நூல். சிலப்பதிகாரம் சங்க காலத்தைப் படம் பிடிச்சும் வரலாற்றுக் காப்பியம். கோவிலன் கதை சோழர் காலத்தைப் படம் பிடிக்கும் பாட்டு நூல். சிலப்பதிகாரம் ஆரியர்களின் ஆதிக்கம் கால் கொள்ளும் காலத்தில் தோன்றியது. கோவிலன் கதை ஆரியர்களின் ஆதிக்கமும் வைதிக நெறிமுறைகளும் உச்சக் கட்டத்திலிருந்த காலத்தில் பிறந்தது. சிலப்பதிகாரம் அனைத்து மதங்களையும் புகழ்ந்து செல்லும். கோவிலன் கதை சொக்கரைத் தவிர வேறெந்த தெய்வத்தையும் கூறாத தன்மையது. இரு நூல்களும் பாண்டியனின் அழிவைக்கூறுவதாயினும் இளங்கோவடிகள் பாண்டியனைப் பழி வாங்கவென்றே கண்ணகி தோன்றியதாகக் கூறவில்லை. வினையின் கருவியாகவே பாண்டியன் அமைக்கப்படுகிறான். அது கண்ணகியின் அணியாகிய சிலம்பை முதன்மையமாகக் கொண்டு எழுதியதால் 'சிலப்பதிகாரம்' என்று பெயர்பெற்றது. பின்னை நூலில்

கோவலனை விட கண்ணகிக்கே ஏற்றம் தந்திருந்தாலும் பெண்ணை விட ஆடவன் உயர்ந்தவன்என்பதைக் காட்ட 'கோவிலன் கதை' என்று பெயரிடப்பட்டுள்ளது. சிலப்பதி காரத்தில் ஊழ்வினை தான் பாண்டியனின் இறப்பிற்கும் மதுரையின் அழிவிற்கும் காரணமாகிறது. கோவிலன் கதையில் பாண்டியனையும் மதுரையையும் அழிப்பதற் காகவே காளி கண்ணகியாக அவதாரம் எடுத்ததாகக் காட்டப்படுகிறது. இரு நூல்களிலிருந்தும் அக்கால மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவை தெரிய வருகின்றன. ஆனால் கோவிலன் கதையில் வைதிக ஆதிக்கத்தைச் சிறப்பி ்கும் முறையில் நம்பிக்கை மாற்றப் பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் இயற்கைஇறந்த நிகழ்ச்சி கள் மிகக் குறைவாகவே காட்டப்பட்டுள்ளன, கோவிலன் கதையில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் மிகப் பலவாக உள்ளன.

சிலப்பதிகாரத்தைப் படிக்கும் போது ஏற்படும் கவிதை இன்பம் கோவிலன் கதையில் இல்லை மாயா ஜாலங்கள் நிறைந்த கதையைப் படிப்பது போன்ற உணர்வுதான் இதில்தோன்றுகிறது. கோவிலன்–கண்ணகி யின் திருமணம், கோவிலன் கண்ணகியை விட்டு நீங்கி மாதவியுடன் வாழ்தல். பாண்டியனை அழித்தல், மதுரையை எரித்தல் ஆகிய நிகழ்ச்சிகள்மட்டுமே சிலப்பதி காரக் கதையை நினைவூட்டுகின்றன.மற்றவை முற்றிலும் வேறுபட்டுள்ளன. அதனால் சிலப்பதிகார வழிநூலைப் படிக்கும் நினைப்பை விட புதியதொரு நூலைப் படிக்கும் நினைப்புதான் ஏற்படுகிறது. சிலப்பதிகாரத்தில் பெயர் கூறப்படாதமாந்தர்களுக்கு இந்நூலில் பெயர் கொடுக்கப் பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் இருந்த பெயர்கள் மாற்றம் பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் பெயர் குறிக்கப்படாத கோவலனின் தாய், கண்ணகியின் தாய் (பாண்டியமாதேவி) பொற்கொல்லன், அவன் மனைவி ஆகியோருக்கு முறையே வர்ணமாலை, கோவிலிங்கி,

வஞ்சிப்பத்தன், முத்துமாலை எனப் பெயர் சூட்டப் பட்டுள்ளன. கோவலன் கோவிலனாகவும், மாதவி மாதகி யாகவும், சித்திராபதி வசந்தமாலை யாகவும், மாசாத்துவான் மாச்சோட்டானாகவும் பெயர் மாற்றம் பெறுகின்றனர். வசந்தமாலை, தேவந்தி, கவுந்தி முதலாகியதுணைப்பாத்திரங்கள் இந்நூலில் இடம் பெற வில்லை.

கதைச்சுருக்கம்:

கஞ்சி கொண்டு மதகடைக்கும் காவிரிப்பூம் பட்டினத் தில் முத்துச்செட்டி என்னும் வணிகன் பிள்ளையில்லாத தால் பல அறங்கள் செய்தான்; புஷ்பவனம் வைத்தான். தினந்தோறும் கயிலையிலிருந்து காமதேனு அங்கு வந்து, புல் மேய்ந்து தாமரைப் பொய்கையினில் தாகம் தீர்ந்து முத்துச் செட்டியினை வாழ்த்தி, கயிலாயத்திற்கு நூலேணி மேல் ஏறி, நொடிக்குள் போய்ச் சேர்ந்து விடும். ஒரு நாள் காமதேனுவோடு அதன் கன்றும் வந்தது. இரண்டும் புல் மேய்ந்து நீர் குடித்துத் திரும்பும் போது முத்துச் செட்டி கண்டு, கவுண்டுகல் வீச, கன்று இறந்தது. உடனே காமதேனு, "பதினாறு வயதளவும் பால் கொடுத்து வளர்த்த எந்தனுடைய அருமை மகவினைக் கவுண்டு கல்லெறிந்து கொன்றாய். ஆனபடியால் யான் பெற்ற பாலனைப் போல உந்தன் வயிற்றில் உதிக்கின்ற மைந்தனும் பதினாறு வயதிலே இறப்பான்" என்று சாப மிட்டு விட்டுக் கயிலைக்குச் சென்றது. (ப. 2-4)

மதுரையில் மணியரசன் என்ற வணிகனுக்கு முதல் மனைவியின்மூலம் மூன்றுமகன்களும் இரண்டாம்மனைவி யின் மூலம் ஒருமகனும் இருந்தனர். மணியரசன் தன் செல் வத்தை இரண்டாகப் பங்கு வைத்து, முதல் மனைவியின் பிள்ளைகள் மூவருக்கும் ஒரு பங்கும், இரண்டாம் மனைவியின் மகனுக்கு ஒரு பங்குமாகக் கொடுத்தான். இளையவளின் மகன் எண்ணெய் வியாபாரம் செய்தான். அவனுக்கு எண்ணெய் விலை போகவில்லை. எனவே

மதுரையிலுள்ள பத்திரகாளியம்மன் கோயிலின்முன் அவன் வந்து, எண்ணெய் நன்றாக விற்றால், கோயிலில் விளக்கேற்றி வைப்பதாக வேண்டினான். ஆனால் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் தனக்குப் பிள்ளை யில்லாத குறையினால் அந்தக் காளியின் மீது கோபம் கொண்டு, அந்தக் கோயிலை மூடி வைத்திருந்தான். அந்தக் கோயிலில் யார் விளக்கேற்றினாலும் அவர்களுக் குத் தண்டனை உண்டு என்றும் அறிவித்திருந்தான். இதனை அறியாத எண்ணெய் வணிகன் கோயிலில் விளக் கேற்றி வைத்துச் சென்று விட்டான். கோயிலில் விளக் கெரிவதைக் கண்ட பாண்டிய மன்னன், அந்த விளக்கை ஏற்றியவரைப் பிடித்து வருமாறு உத்தரவிட்டான். வணிகர் தெருவில் சேவகர்கள் வந்து விசாரித்த போது, அந்த எண்ணெய் வணிகனின் சகோதரர்களே அவனைக் காட்டிக் கொடுத்து விட்டனர். இதன்பின் அரசனின் உத்தரவுப்படி, அந்த எண்ணெய் வணிகன் சிரச்சேதம் செய்யப்பட்டான். அவனுடைய வெட்டுண்ட தலை காளி யின் மடிமீது விழுந்து "உனக்கு விளக்கேற்றி வைத்ததற் காகவோ இந்தத் தண்டனை" என்று கேட்டது. உடனே காளியும் "பாண்டியன் செய்த செயலுக்கு நான் அவனைப் பழி வாங்குகிறேன்" என்று வணிகனுக்கு ஆறுதல் கூறினாள். வணிகனின் மனைவியும் கதறியழுது, உயிர் விட்டாள். மதுரைச் சொக்கநாதர் வணிகனின் உயிரையும் அவன் மனைவியின் உயிரையும் தங்கச்சிமிழில் அடைத்து வைத்தார். காளி, தான் வணிகச்செட்டி கோவிலனுக்கு மனைவியாக வந்து பாண்டியனைப் பழி வாங்கி உயிர் குடிப்பதாகக் கூறியதால், சொக்கலிங்கர் அவள் உயிரையும தங்கச சிமிழில் அடைத்து வைத்தார்.

காவிரிம்பூப் பட்டினத்தில் காமதேனுவின் சாபம் பெற்ற முத்துச்செட்டி, பிள்ளை வரம் கேட்டு தவம் செயததால் சொக்கலிங்கர் அவனுக்குப் பிள்ளை வரம் கொடுத்தார். அவனுடைய மனைவி வர்ணமாலை

கோவிலனைப் பெற்றாள். மதுரையிலும் பிள்ளை வரம் வேண்டிய பாண்டியனுக்கும் அவன் மனைவிக்கும் சிமிழில் அடைத்து வைத்திருந்த காளியின் உயிரை எலுமிச்சம் பழமாக்கிக் கொடுத்தார். அதை உண்ட பாண்டியனின் மனைவி கோவிலிங்கி கர்ப்பம் தரித்து கண்ணகியைப் பெற்றாள். இவளால் மதுரை அழியும் என்று கேள்வியுற்ற பாண்டியன் குழந்தையைப் பெட்டியில் வைத்து வைகையில் தள்ளி விட்டான்.

ஆற்றில் விட்ட பேழை காவிரிப்பூம் பட்டினத்தின் கரையோரம் வர அங்குக் கப்பலோட்டி வந்த மாநாய்கனும், மாச்சோட்டானும் அதைக் கண்டெடுத்தனர். அவர்கள் செய்த ஒப்பந்தத்தின் படி பெட்டியை மாச்சோட்டானும், பெட்டிக்குள்ளிருந்த குழந்தையை மாநாய்கனும் எடுத்துக் கொண்டனர். பிள்ளைப் பேறில்லாத மாநாய்கன் இக்குழந்தையை அருமையாக வளர்த்து வந்தான்.

திருக்கடையூரிலிருந்த வசந்தமாலை என்னும் தேவதாசி பிள்ளை வரம் வேண்டியதால் இரங்கிய சொக்கர் தான் சிமிழில் அடைத்து வைத்திருந்த எண்ணெய் வணிகனின் மனைவியின் உயிரை எலுமிச்சம்பழமாக்கி வசந்தமாலையிடம் கொடுத்தார். அதன் பயனாக அவளுக்கு அழகே உருவான ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு 'மாதகி' என்று பெயரிட்டு வளர்த்தாள்.

கோவிலனின் தந்தையான மாச்சோட்டான் செட்டி மாநாய்கன் வீட்டிற்கு வந்து கோவிலன் கண்ணகி திருமணத்திற்காகப் பரிசம் போட்டுச் சென்றான். பண ஆசை கொண்ட மாநாய்கன். பரிசப் பணமாகப் பலரிடம் பணம் வாங்கி விட்டதால், பஞ்சாயத்துக் கூடி, திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்தனர். சீட்டு, கோவிலன் பெயருக்கே வந்தது. அதனால் கோவிலனுக்

கும் கண்ணகிக்குத் திருமணம் நடந்தது. கோவிலன் தன் திருமணத்தின் போது சதிர்க்கச்சேரியில் மாதகிதான் ஆட வேண்டும் என்று வற்புறுத்தினான். மாதகியால் துயரம் வரும் என்று கோவிலனின் ஜாதகம் கணித்த போதே அவனுடைய தந்தை அறிந்திருந்ததால் அவர் மறுத்தார். ஆனால் கோவிலன் பிடிவாதம் பிடித்ததால் தந்தையும் சம்மதித்தார்.

மாதகி நடனத்திற்கு வரும்போது, 'என்னுடன் பிறந்த பொன்னுருவி மாலையைக் கழற்றி விட்டெறி வேன். அது யார் கழுத்தில் விழுகின்றதோ அவரை அழைத்துச் சென்று விடுவேன். அதற்குச் சம்மதித்தால் ஆடுவேன்' என்றாள். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. மாதகியைக் காண முடியாதபடி கோவிலன் மறைத்து வைக்கப்பட்டான். ஆனால் கோவிலன் வெளியே வந்து பார்த்தான். மாதகி சொக்கலிங்கரை வணங்கி விட்டெறிந்த பொன்மாலை கோவிலன் கழுத்தில் வந்து விழுந்தது. அவனால் மாலையைக் கழற்ற முடியவில்லை. "மாலையைத் தராவிட்டாலும் பரவாயில்லை. இந்த வெற்றிலையைப் போட்டுக் கொள்ளுங்கள்" என்று மாதகி வசிய மருந்து தடவிய வெற்றிலையை அவனுக்குக்கொடுத்தாள். அந்தத் தாம்பூலத்தைப் போட்டுக் கொண்ட உடனேயே கோவிலன் மாதகிபால் மையல் கொண்டு, அப்போதே அவளோடு சென்று விட்டான். அவளோடு வாழ்ந்த பன்னிரண்டு ஆண்டுக்காலத்தில் பொருளனைத்தையும் செலவழித்து விட்டான்.

குழந்தைப் பருவத்தில் திருமணம் செய்விக்கப்பட்ட கண்ணகி தன் கழுத்தில் தாலி இருப்பதைக் கண்டு, மாமியாரிடம் கேட்க, அவள் கோவிலன் மாதகியுடன் தங்கியிருக்கும் செய்தியைக் கூறினாள். உடனே கண்ணகி, தன் கணவன் வரவில்லையென்றால் தன் உயிர் நிலைக்காது என்று கடிதம் எழுதினாள். அதைக் கண்டகோவிலன் தன் மனைவியைக் காண மாதகியிடம் அனுமதி வேண்டி

னான். அவள் கோவிலனைப் போன்று பொற்பதுமை செய்து கொடுத்து விட்டுப் போகுமாறு கூறினாள். கோவலன், பத்தினி கண்ணகியை நினைத்தவுடனேபொற் பதுமை அமைந்து விட்டது. மாதகி பதுமையைப் பேச வைத்தாக வேண்டும் எனறு கூற, கோவிலன் உடனே கண்ணகியை நினைக்க, அந்தப் பதுமை பேசியது. மாதகியையும் பிரம்பால் அடித்தது. அதனால் மாதகி அவனை வழியனுப்பி வைத்தாள்.

தன் கணவன் தன்னிடம் வந்து சேராததைக் கண்ட கண்ணகி, கையை முறித்துச் சாபமிட்டதால் மாதகி வீட்டிலிருந்த பதுமை இறந்தது. இதைக் கண்ட மாதகி தன் தாயின் அறிவுரைப்படி, பாம்பு கடித்துத் தான் இறக்கும் தறுவாயில் இருப்பதாகச் செய்தி அனுப்பினாள். இதைக் கேட்ட கோவிலன் கண்ணகியிடம் செல்லாமல் மாதகியின் வீட்டிற்கே திரும்பினான். தன்னிடம் வந்த அவனை, தன் தாயின் அறிவுரையால் மாதகி பலவாறு கொடுமைப் படுத்தினாள். அவள் கோவிலனைக்கிணற்றில் பிடித்துத் தள்ள, அவன் கண்ணகியைநினைத்ததால் உயிர் தப்பினான். மறுபடியும் மாதகி கோவிலனைப் பிடித்து ஆற்றில் தள்ளினாள். அப்போதும் கோவிலன் கண்ணகியை நினைத்ததால் உயிர் பிழைத்தான். மனமும் மாறினான். கண்ணகியை அடைந்தான்.

ஆனாலும் அவனுக்கு மாதகியின் மீதுள்ள மோகம் முற்றும் தீரவில்லை. கணவனுக்காகக் கண்ணகி தானே சமைத்து உணவைப் பரிமாறியும் அவன் உண்ணவில்லை. மாறாக, மாதகியின் கடனைத் தீர்க்கக் காற்சிலம்பையும் கேட்டான். மதுரைக்குச் சென்று விற்று மாதகியின் கடனை அடைக்க விரும்பினான். கண்ணகி தன்னுடன் பிறந்த அச்சிலம்பைக் கழற்ற முனைந்தபோது, அந்தச் சிலம்பு வாய்விட்டுப் புலம்பி, கோவிலன் மதுரை சென்றால் அவனுக்கு உயிராபத்து நேரும் என்று கூறியது. ஆனாலும் கோவிலன் சென்றே தீர்வது என்று பிடிவாதம்

பிடித்தான். அதனால் கண்ணகி உடன் வருவதாகக் கூறினாள். அவள் வருவதற்குள் கோவிலன் அவளை விட்டுவிட்டுத் தான் மட்டும் புறப்பட்டு விட்டான். கண்ணகி விரைந்து பின்தொடர்ந்து அவனைச் சேர்ந் தாள். போகும் வழியில் தன்னிடம் தாலியைத் தரும்படி கேட்ட திருடர்களைக் கல்லாக்கினாள். வழியில் பிள்ளை யாரிடம் ஆரூடம் கேட்டாள். கோவிலனுக்கு நிகழப் போகும் நிகழ்ச்சிகளை விநாயகர் கூறினார். ஆனாலும் கண்ணகி அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

இதன்பின் கோவிலன் கண்ணகியை ஆயர் குலத்தைச் சேர்ந்த ஆய்ச்சியிடம் அடைக்கலமாய் விட்டுவிட்டு மதுரைக்குப் புறப்பட்டான். புறப்படுமுன் தனக்கு ஏதாவது நேர்ந்தால் ஏற்றிவைத்த திருவிளக்கு அணைந்து விடும்; மல்லிகைப் பூ வாடி விடும் என்று கூறிவிட்டுச் சென்றான். கோவிலன் புறப்பட்டபோது பல துர்ச் சகுனங்கள் தோன்றினாலும் அதைப் பொருட்படுத்தாமல் அவன் சென்றான்.

மதுரையில் வஞ்சிப்பத்தன் என்னும் பொற்கொல்லன் பாண்டியமாதேவியின் சிலம்பைப்பழுதுபார்க்கச்சுவர்மீது வைத்திருந்தான். இதற்கிடையில் வீட்டிற்கருகில்மரத்தின் மீதிருந்த கருடனின் கூட்டைவஞ்சிப்பத்தனின் பிள்ளைகள் கலைத்து விட்டனர். முட்டைகளையும் உடைத்து விட்டனர். இதனால் கருடன் பழி வாங்கக் கருதி, கா ய லைத்திருந்த சிலம்பைத் தூக்கிக் கொண்டு சென்றது. சிலம்பைப் பறி கொடுத்த வஞ்சிப்பத்தன், பாண்டியன் கோபத்துக்கு ஆளாகி இருந்த நிலையில்தான் கோவிலன் சிலம்பை விலை கூறி வஞ்சிப்பத்தன் வசிக்கும் வீதிக்கு வந்தான். வஞ்சிப்பத்தன், கோவிலனிடமிருந்த சிலம்பைக் கவர்ந்து கோவிலன் மீது திருட்டுக் குற்றம் சுமத்தினான். பாண்டிய மன்னனும் பொற்கொல்லனுக் குச் சாதகமாகவே தீர்ப்பு அளித்தான். மன்னனின் அமைச்சர்கள் இத்தீர்ப்புக்கு ஒப்பவில்லை. கோவிலிங்

கியிடம் சிலம்பை அனுப்பிக் கேட்டபோது அவள், அது தன்னுடையது அல்ல என்றாள், இதன்பின் பாண்டியன் கோவிலனைப் பலவேறு சோதனைகளுக்கு உள்ளாக்கினான். அதில் வெற்றி பெற்ற பிறகும் பாண்டியமன்னன் அவனை வெட்டுமபடி தீர்ப்பளித்தான். மீனாட்சி கோயிலருகில் சென்றபோது, மீனாட்சி அவனுக்கு முற் பிறப்பைப் பற்றிக் கூறினாள். இதன்பின் மழுவரசன் வெட்ட கோவிலன் மாண்டு மடிந்தான்.

கோவிலனைக் கொலை செய்தபின் மதுரை நகரில் பல துர்க்குறிகள் தோன்றின. கண்ணகி தீக்கனா கண்டாள். அவன் அவளுக்கு வைத்துவிட்டுப் போன அடையாளங்கள் அவனுக்குத் தீங்கு நேர்ந்துவிட்டது என்பதைஉணர்த்தின. இடைப் பெண்மணொருத்தியின் மூலம் உண்மையுணர்ந்த கண்ணகி தன் கணவன் கொலையுண்ட இடத்திற்குச் சென்றாள். மாண்டவனை உயிரெழுப்பி விவரம் கேட்டாள். கோவிலன் நடந்ததனைத்தையும் கூறினான். தனக்குத் தீங்கிழைத்தவர்களைப் பழிவாங்குமாறும் கூறினான். அவளும் அவ்வாறே செய்வதாகக் கூறினாள். கண்ணகி பாண்டிய மன்னவனைப் பார்த்து நீதி கேட்டாள். காணாமற்போன சிலம்பை வரவழைக்குமாறு கூறினான் பாண்டியன். கண்ணகி சிலம்பை வாவென்று அழைக்க அது கண்ணகி முன்னால் வந்தது. பிறகு அவள் கருடனை நினைத்து, சிலம்பினைக் கொணருமாறு செய்தாள். இதன் பின்னரே பாண்டிய மன்னன் தன் தவறுணர்ந்தான். கண்ணகி காளியின் உருவம் எடுத்துத் தனக்குத் தீங்கிழைத்தவர்களைக கொன்றாள். தன் சிலம்பை எடுத்து மதுரை மீது விட்டெறிந்தாள். தன் மார்பையும் திருகி வீசினாள். உடனே மதுரை நகரம் தீப்பிடித்து எரிந்தது.

கோவிலன் இறந்தசெய்தியைக் கண்ணகி மாதகிக்குத் தெரிவித்தாள். மாதகி கோவிலனுடன் உடன்கட்டை யறினாள். கண்ணகி இருவரையும் தகனம் செய்தாள்.

மாதகியைப் பத்தினி என்று புகழ்ந்தாள். பின்னர் மலை யாளப் பகவதியாகவும், திருவொற்றியூர் வட்டபுரியம்ம னாகவும் பெயர் பெற்று அங்கேயே தங்கிவிட்டாள்.

கதை மாந்தர்கள்—கோவிலன்

இந்நூலில் கதைத் தலைவனான கோவிலனும் தலை வியர்களான கண்ணகியும் மாதகியும் சிறப்பிடம் பெற்று கின்றனர்.

சிலப்பதிகாரத்தில் உள்ளது போன்றே இந்நூலிலும் கோவிலனின் பழம் பிறப்புக் கதை காணப்படுகிறது. ஆனால் சிலப்பதிகாரத்தில் நீலி சாபமிடுவதால் அடுத்த பிறவிக்கதை தொடர்கிறது. இந்நூலில் வாணிபன் காளி கோயிலில் விளக்கேற்றியபோது அநியாயமாகக் கொல்லப் பட்டான். அவன் இறந்தபோது காளி தேவி,

> "ஒருவன் பழிக்கு நாளை உலகம் பழிவாங்கிவைப்பேன்
> மைந்தன் பழிக்கு மதுரை பழிவாங்கி வைப்பேன் (ப 6)

என்று வஞ்சினம் கூறுகிறாள். அதனால் காளிதேவி சொக்கரிடம்,

> "வரனே இப்பிறப்பு நீங்கி மறுபிறப்பு யான்பிறந்து
> வணிகச்செட்டி கோவிலர்க்கு மனையாட்டி
> யாகவந்து
> விளக்கவித்த பாண்டியரை லெட்டித் தலைசாய்த்து
> மணிக்குடலைத் தான்பிடுங்கி வந்திடுவேன்
> கோயிலுக்கு" (ப.7)

என்று கூறியதால் சொக்கர் அவளுடைய உயிரையும் பொற்சிமிழில் பிடித்தடைக்கிறார்.

முத்துச்செட்டி பிள்ளையில்லையென்று மனைவி யொடு பெருந்தவம் செய்ய, சொக்கர் முத்துச்செட்டியின் மனைவி வர்ணமாலைக்கு மைந்தன் வரம் கொடுக்கிறார். காமதேனுவின் சாபத்தால் மைந்தனின் ஆயுளும் நிர்ண

யிக்கப்படுகிறது. முற்பிறப்பில் கொல்லப்பட்ட வாணியன் கோவிலனாகப் பிறந்து வளர்கிறான்.

"அட்டாளும் சொக்கரைப் போல் அழகுடைய மன்ன
வனும்

தேமல் பிறையழகன் தெள்ளுமணி வாசகனார்
உருமாலைக் கட்டழகன் உத்தமனார் கோவிலனும்
அள்ளித் தெளித்ததுபோல் அழகுசிறு தேமல்
மாங்கா முடியழகன் மாதளம்பூ மேனியனாம்
செக்கச் சிவந்தவன்காண் செங்கீரைத் தண்டழகன்
அட்டாளும் சொக்கரைப் போல் அழகுடைய
மன்னவன் (ப7-8)

என்று அவனழகு கூறப்படுகிறது.

"சோமன்கட்டி வீதிவந்தால் சுவாமி சொக் கேசரென்பார்
மண்டைக்கட்டி வீதிவந்தால் மதுரைவாழ் சொக்கரென்
பார்

பார்த்தால் முதலியென்பார் பார்ப்பாரச் சாதி என்பார்.
கண்டால் முதலியென்பார் கன்னடியச் சாதிஎன்பார்"
(ப.8)

என்று அவனை வளர்க்கும் வளர்ப்பும் அழகும் கூறப்படு கின்றன.

கோவிலனின் திருமணம்:

கோவிலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம்நடக்கிறது. சீக்குக் கழித்து, மணமக்களை அலங்கரித்தனர். கண்ணகி அம்மி மிதித்து அருந்ததி கண்டாள். சால்,கரகம், சந்திரன் ஆகியவற்றை அவர்கள் தொழுதனர். மாலை தரிக்கை யிலே கண்ணகி வாய்விட்டு அழுகிறாள். மாங்கனி கை கொடுத்து கோவிலன் மாலையிடுகிறான். தாலிகட்டுகி றான். உடனேகோவிலன் கச்சேரி வேண்டும் என்று கூறுகி றான்.யாரை வைப்பது என்று அங்கிருந்தவர்கள் கேட்க திருக்கடையூர்ப் பட்டினத்தில் தெய்வரம்பை மாதகியாள் இருக்கிறாள். அவளை அழைத்து வந்து ஆடல் வைக்க

வேண்டுமென்கிறான். அவளைப் பற்றிய செய்திகளையும் கூறுகிறான் கோவிலன். சதிராடவில்லையெனறால் வல்லு யிரைப்போக்கிக்கொள்வதாகவும் அச்சுறுத்துகிறான். இப் பகுதி சிலப்பதிகாரத்தினின்று வேறுபடுகிறது. மாதவியின் அரங்கேற்றத்தில் கூட கோவலன் இருந்ததாக இளங்கோவடிகள் காட்டவில்லை. அவன் கணிகையின் மாலை வாங்கியதால், மாதவியின் நடனத்தைக் கண்டிருக் கலாம் என்றே யூகிக்க முடிகிறது. இந்நூலில் அவன் மாதகியைப் பற்றிய முழு விவரத்தையும் அறிந்திருக் கிறான். அவனே தன்னுடைய திருமணத்திற்கு மாதகியின் சுச்சேரி வேண்டுமென்கிறான். "அவனுடைய சாதகத்தி லும் பன்னிரண்டு பிராயத்தில் பைங்கொடி மாதகியா ளிடம் மன்னன் போலானென்று சொன்னது சரியாகப் போச்சு" என்று தந்தை கவல்கிறார். (ப-15)

திருமணத்தின்போது பந்தல் அலங்காரம் கூறுகின்ற அளவிற்குத் திருமணச்சடங்குகளோ, கோவிலன் கண்ணகி மணவணி அலங்காரமோ குறிக்கப்படவில்லை. மாதகியின் நடனத்தின்போதோ கோவிலன் மிகவும்அலங்காரத்துடன் வருகிறான்.

"சேலத் துருமாலை ஜெமுதாடு பொன்சரிகை
காங்கு உருமாலை கள்ளர்கட்டும் முண்டாசு
ஒருபொன் னொருமுழமாம் ஒற்றைக்கம்பி சோமனத
திருநெல்வே லிச்சோமன் சேர்த்திறுக்கிக்
கட்டினானே
தங்க மிதியடியாம் தனிக்குமிழ் ரத்தினமாம்
முத்து மிதியடியாம் முழக்குமிழ் ரத்தினமாம்" (ப-19)

என்று அவனுடைய அலங்காரம் கூறப்படுகிறது. தந்தை யார் வர்ணமாலையைக் காவலுக்கு வைக்கிறார் அவனோ மாதகியின் நடனத்தைக் காணவில்லையென் றால் இறந்து விடுவேன் என்றதால் தாய் அஞ்சி அவனை விடுவிக்கிறாள். ஆலமரப் பிள்ளையார் கோயிலண்டை வருகிறான் அவன்.

மாதகி சுழற்றிவிட்ட மாலையானது கோவிலனைத் தேடிவந்து கண்ணுக்குத் தெரியாமல் அவன் கழுத்தில் விழுகிறது. மாதகி பொன்னுருவி மாலை கேட்க, அவனால் கழற்ற முடியவில்லை. இரம்பத்தைக் கொண்டு வந்து அறுக்க வாளும் மழுங்கியது. மாலை கழலவில்லை. "மாலை கொடாமல் போனாலும் தாம்பூலம் நான் தாறேன். தனஞ்செயரே, போட்டுக் கொள்ளும்" என்று அவள் கொடுக்கிறாள். தாம்பூலத்தைத் தரித்தவுடன் கோவிலன்,

"ஆசை தந்த மாதகியே அரிவையரே யுனைப் பிரிேயன்
சுகந்தந்த மாதகியே தோகையரே யுனைப் பிரியேன்"
(ப. 21)

என்று மாதகியிடம் மயங்கிக் கூறுகிறான்.

தந்தையும் மாமானாரும் ஓடி வந்து தடுக்கின்றனர்.

"மாலையிட்ட தேவி மயிலனையாள் தானிருக்க
கூறையிட்ட தேவியுந்தன் கொம்பனையா ளிங்
கிருக்க (ப. 21)

எங்குப் பிரிகிறாய்" என்று கோவிலனை வழி மறித்து இறுக்குன்றனர். மாதகியின் மையலில் மயங்கியவன்,

"தாயேது தந்தையேது தையல்பெண் சாதியேது
ஆசைதந்த மாதகியா ளரிவையரு மிங்கிருக்க
சுகந்தந்த மாதகியாள் சுந்தரியா ளிங்கிருக்க" (ப. 21)

என்று கூறித் தந்தையின் சொற்களை மறுக்கிறான். மாதகியுடன் சென்றே விடுகின்றான்.

இருவரும் திருக்கடவூரில் இறங்கி அமரகண்டீஸ்வரர் கோயிலுக்கு வருகின்றனர். பலியிடத்தை அடைந்து "உன்னை விட்டு நான் பிரியேன் உத்தமரே" என்று கூறுகிறாள்; முந்தானை போட்டு மாதகி தாண்டுகிறாள். அவனையும் தாண்டச் சொல்கிறாள். அவனும்,

"தாயும் நீ தந்தையும் நீயேயென்று"

கூறிப் புகழ்கிறான். இப்பகுதி பரத்தையர் சமுதாயத்தில் ஆடவர் அடிமையாக வாழ்வதைச் சுட்டுகிறது. (ப. 22) குல மக்களின் திருமண வழக்கமும், பரத்தையரின் திருமண முறையும் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியுடன் கோவலன் வாழ்ந்து 'யாண்டு சில கழிந்த பிறகே' பிரிவதாக இளங்கோவடிகள் காட்டுகிறார். ஆனால் இந்நூலில் கண்ணகி காளியின் அவதாரமாதலால் மெய்யுறு புணர்ச்சிக்கு ஆசிரியர் இடமளிக்க விரும்பவில்லை. அதனால் திருமணத்தன்றே இருவரையும் பிரிக்கிறார்.

சிலப்பதிகாரத்தில் கலையரசியின் கலையில் கட்டுண்டு பச்சை மாலையைத் தானே வாங்கிச் செல்கிறான் கோவலன். இந்நூலில் மாதகி தாம்பூலத்தில் வைத்த வசிய மருந்தில் கட்டுண்டவனாகச் செல்கிறான். இது இடைக்காலத்து மக்களின் வாழ்க்கை நிலையைக் குறிக்கிறது. மாதகி நடனமாடியதாகவோ, கோவிலன் நடனத்தைக் கண்டதாகவோ குறிப்பில்லை. மாதகி வந்தவுடன் மாலையைச் சுழற்றிப் போட, அது அவன் கழுத்தில் விழுகிறது. அவள் அழைக்க அவன் செல்கிறான் என்பதில் அவர்களின் சந்திப்பு காட்டப்படுகிறது.

கோவிலன் மாதகி வாழ்க்கை :

கோவிலன் மாதகியின் வாழ்க்கை மிகவும் அன்புடைய வாழ்க்கையாகவே இருக்கிறது. அவர்கள் மானும் கலையும் போல் விளையாடுகின்றனர். எள்ளுக்குள் எண்ணெய் போல், பாலில் வெண்ணெய் போல் கலந்து வாழ்கின்றனர்.

கண்ணகி தான் இறந்ததாக ஓலை எழுதிய பிறகே இவர்களுடைய வாழ்வில் மாற்றம் ஏற்படுகிறது. இரண்டு பெண்டாட்டிக்காரன் படுகின்ற பாட்டைக் கோவிலனும் அடைகிறான். ஒரு பக்கம் தான் இறக்கும் தறுவாயில்

இருப்பதாகக் கண்ணகியிடமிருந்து கடிதம் வருகிறது. இன்னொரு பக்கம் மாதகி இறந்ததாகக் கூறும் கடிதம் வருகிறது. இரு கைக்குள் அகப்பட்ட மத்தளமாக அவன் இருக்கிறான். மாதவி கிணற்றில் தள்ளினாலும், ஆற்றில் தள்ளினாலும் அவள் மீதத மோகம் கொண்டவனாக இருக்கிறான். (ப-43) இதற்த முற்பிறவியில் அவள் தன் மனைவியாக இருந்தமை ஒரு காரணமாகலாம். அக்காலப் பரத்தையர்கள் ஆடவர்களைக் கவர வசியப்படுத்தியமை யும் காரணமாகலாம்.

கோவிலனும் கண்ணகியும்:

கோவிலனுக்குக் கண்ணகியிடத்தில் உண்மையான அன்பிருந்ததாகத் தெரியவில்லை. அவள் இறக்கப் போவ தாகச் செய்தி வந்த போதும்,

"மாலையிட்ட தேவியவள் மாண்டு மடியலாச்சே;
உன்னாலே என்னசுகம் உத்தமியே நான் கண்டேன்
மாலையிட்ட தல்லாது மற்றொரு சுகமறியேன்
வீணுகுத் தாலிகட்டி விருதாவாய் விட்டுலைத்தேன்"
(ப-31)

என்கிறான். 'உன்னாலே என்ன சுகம் கண்டேன்' என்று கண்ணகி கேட்க் வேண்டிய கேள்வியைக் கோவலன் கேட்பது அவனுடைய தன்னலத்தையே காட்டுகிறது. அவன் கண்ணகியிடம் வருவதற்குக் கூட அவள் மீது உள்ள அன்பு காரணம் அல்ல.

"செத்துப்போன கண்ணகியாள் திருமுகத்தைப்
பார்க்க வேண்டும்
வாழ்வுக் குதவாவிட்டால் சாவுக் குதவவேண்டும்
நன்மைக் குதவாவிட்டால் தின்மைக் குதவவேண்டும்
இன்றேல் என்னொத்த வர்த்தகர்கள் என்னை
மதியார்கள்." (ப. 32)

என்பதற்காகவே கண்ணகியின் சாவுக்குச் செல்கிறான். மாதகி கேட்டபடி பதுமை செய்கிறானே தவிர விரை

வாகச் செல்லும் துடிப்பு அவனிடம் இல்லை. மாதகியின் சம்மதமல்லாமல் கண்ணகியின் சாவிற்குக் கூடச் செல்ல மாட்டேன் என்கிறான்.

மாதகியின் பிரிவுத் துயரத்தையும் அவள் அழுவதை யும் கோவிலனால் தாங்கமுடியவில்லை. அவள் அழுவதைக் கண்டு,

"முந்தானை கொண்டு முகமெல்லாந் தான் துடைத்து
உன்னைவிட்டு நான்பிரியே னொருநாழி யானாலும்
கொண்டவளை நான்பார்த்துக் கொம்பனையே
வாறேனடி
உற்றொருமை செய்துவிட்டு ஒரு நொடியில் வாறேனடி
கட்டியதாலி தன்னைக் கைமேலே வாங்கிக் கொண்டு
வைகையிலே ஸ்நானம்பண்ணி வருவேண்டி உன்மனைக்கு
ஒன்றுக்கும் அஞ்சாதே ஒளியுள்ள கண்மணியே" (ப. 34)

என்று அன்போடு கூறுகிறான். இதிலும் கண்ணகியின் சாவுக்குக் கலங்காதவன் மாதகியின் பிரிவுக்குக் கலங்கு கிறான். மாதகி இறந்ததாக வசந்தமாலை ஓலை வரைந்த போது கதறி விழுகின்ற கோவிலன்,

"கண்ணகியாள் மாண்டு நீ கணிகையிருக்
கொணாதோ
பத்தினியாள் மாண்டு நீ பரஸ்திரீ யிருக்கொணாதோ
உத்தமியாள் மாண்டு நீ ஒருத்தி யிருக்கொணாதோ"
(ப. 41)

என்றே அழுகிறான் கோவிலன். கண்ணகி இறந்தாலும் கவலை இல்லை;மாதகி உயிருடன் இருக்கவேண்டும் என்ற கோவிலனின் எண்ணம் தெரியவருகிறது. மாதகியின் சாவுச் செய்தி கேட்டவுடன் கண்ணகியின் தாதிகளிடம். பொய் கூறி அனுப்பி விடுகிறான். கிணற்றில் விழுந்த போதும், ஆற்றில் விழுந்த போதும் தன் பத்தினி

கண்ணகி தன்னைக்காப்பாற்றினாளே என்ற நன்றி யுணர்வு கூட இல்லாதவனாகிறான்.

கண்ணகியின் வீட்டிற்கு வந்தவன், அவள் தனக்குச் சமைக்கத் தெரியாது என்று சொன்ன பிறகும் தாதி கையால் சமைத்ததைச் சாப்பிடமாட்டேன் என்கிறான். கண்ணகி ஒருவாறு சமைத்த பிறகு மாதகியை நினைந்த வனாக எழுந்து விடுகிறான். கண்ணகியுடன் அன்பாகப் பேசாமல் மாதகியின் "கடன் தீர்க்கச் சிலம்பு கொடு" என்று கேட்கிறான்.

"மணிச்சிலம்பு தந்தாயான்ால் மதுரையிலே விற்று
வாறேன்
பொற்சிலம்பு தந்தாயானால், பொன்மதுரை விற்று
வாறேன்
செஞ்சிலம்பு விற்றுமே தேவடியாள் கடன் தீர்ப்
பேன்" (ப. 53)

என்பதனால் கண்ணகியின்பால் அன்பில்லா நிலைமையே காட்டப்படுகிறது.

கண்ணகியை உடன் அழைத்துக்கொண்டு செல் கிறேன் என்றவன் அவளிடம் கூறாமலே சென்று விடு கிறான். கண்ணகியைக் கண்ட பிறகும்,

'வீட்டைவிட்டு ஏன்வந்தாய் மெல்லி யிளங் கொடியே
என்னொத்த வர்த்தகர்கள் என்னை மதியார்கள்."(ப. 56)

என்று அக்கால வழக்கத்தைக் கூறுகிறான். வழியிடையில் தண்ணீர் வேண்டும் என்று கேட்கும் போது,

"பெண்சாதி கால்விலங்கு பிள்ளையொரு சுள்ளாணி,
கட்டுச்சாத மூட்டையுங் கைக்குக் கனம் என்
பார்கள்." (ப. 56-57)

என்று பழமொழி கூறிச் சலித்துக் கொள்கிறான்.

வண்டியூர்ப் பட்டணம் வரும்போது கண்ணகி கோவிலனிடம் மதுரை போகின்ற வரைக்கும் ஓர் இடத்தில் அடைக்கலம் வைக்கும்படி கூறுகிறாள். இந்த இடத்தில் பல் வேறு சாதியினரின் பழக்க வழக்கங்கள் தெரிய வருகின்றன. வேளாளன் வீட்டில் வைத்தால் வேலைகள் மெத்தவுண்டு. முப்போகம் விளைந்தாலும் உப்புக்கு நெல்லில்லை என்பார்கள். பள்ளர்கள் வீட்டிலோ ஏருழும் வேளையிலே வீட்டிலிருப்பவர்களையும் நாற்று நட வாரும் என்பார். கோமுட்டி வீட்டிலோ, கடைவிற்கும் வேளையிலே கடை பெருக்க வாடியென்பார். சேணியர் வீட்டிலோ தறிபோடும் வேளையிலே நூலிழைக்க வாடியென்பார். செட்டியார் வீட்டிலோ,

"அரைக்க மிளகிடுவார் அரைக் கணக் கெழுதி வைப்பார்
கறிக்கு மிளகிடுவார் கால்கணக் கெழுதி வைப்பார்
விருந்தாளி வந்தாலே வருந்தியுலை வைக்க
வொட்டார்." (ப. 61–62)

என்று அவர்களின் கஞ்சத்தனம் சொல்லப் படுகிறது. இடைச்சி வீடானால்,

"இளைப்பானால் மோர் குடிப்பாய், பசியானால் பால் குடிப்பாய்" என்றுரைப்பார் என்று கூறுகிறாள். அக்காலச் சமுதாயத்தில் வாழ்ந்த பலவேறு குலத்தினரைப் பற்றியும் கண்ணகி அறிந்திருக்கிறாள். ஆனால் கோவிலனுக்குத் தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருவரும் வரும்போது எதிரில் ஆய்ச்சி வருகிறாள். இருவரும் அவள் வீட்டிற்குச் செல்கின்றனர். பசியாயிருக்கிறது என்று கோவிலன் சொல்லியவுடன் கண்ணகியிடம் ஆய்ச்சி சமையலுக்கு வேண்டிய அன்னத்தையும் கொடுக்கிறாள். கண்ணகி சமைத்த உணவைக் கோவிலன் உண்கிறான்.

"போஜனங் களுண்டு பொடியிட்டுக் கை திமிறி
தாம்பூலமுங் கொடுக்க தான் தரித்தார் கோவிலரும்"
(ப. 64)

என்று கோவிலன் மூக்குப் பொடிபோடும் வழக்கமும் குறிக்கப் பெறுகிறது. கண்ணகி சமைத்த சாதத்தைக் கோவிலன் முதன் முதலாக—அதே சமயத்தில் கடைசி யாக—உண்பதாகக் காட்டப்படுகிறது.

கண்ணகியை ஆய்ச்சியிடம் அடைக்கலம் வைத்து "நல்வாக்கு நீ கொடடி நாயகமே" எனக் கேட்கிறான். கோவிலன். கண்ணகிக்கு அடையாளஞ் செய்து விட்டுப் போகிறான். மரப்பெட்டியில் மாங்கனி, மல்லிகைப் பூ, தேங்கனி, சந்தனம், திருவிளக்கு, செம்பு நீர் ஆகிய வற்றை வைத்து தேங்காயுடையாது; செம்பு நீர் குறை யாது; மல்லிகைப் பூ வாடாது; மாங்கனியும் அழுகாது; சந்தனம் உலராது; மாண்டு மடிந்தால் மாறுபட்ட நிலை யுண்டாகும் என்று கூறிச் செல்கிறான். (ப. 65)

கோவிலன் வீட்டை விட்டு வரும்போது பல துர்க்குறி கள் தோன்றுகின்றன. அக்காலச் சமுதாயத்தில் இருந்த நம்பிக்கைகள் இப்பகுதியில் தெரியவருகின்றன. பல்லி பல பலென்னுகிறது; பனைமரத்தில் ஆந்தை சீறுகிறது; வாசற்படி தலையில் தட்ட தலைப்பாகை தவறி விழு கிறது; [கோவிலன் தலைப்பாகை கட்டியிருந்தமை இதனால் தெரிய வருகிறது] குட்டியிட்ட கரும் பூனை குறுக்காக வருகிறது; எரிமூட்டை, மொட்டைத் தலை எதிரில் வருகிறது; ஒற்றைப் பார்ப்பான் எதிரில் வரு கிறான்; வாழாக் குமரியவள் மீளா நெருப்பெடுக்கிறாள்; எண்ணெய்க்குடமும், ஏணியும் எதிரில் வருகின்றன. சாணான் எதிரில் வருகிறான்; ஆண் கோட்டானும், பெண் கோட்டானும் அலறி அழுகின்றன. (ப. 66)

அசரீரி வாக்கையும் கோவிலன் கேட்கிறான். கைம் பெண் பறைச்சியவள் கதறியழுகிறாள்.

''மதுரைக்குப் போகாதே மாண்டு மடியாதே
தென்மதுரை போகாதே செத்து மடியாதே" (ப. 66)

என்று சொல்லி அப்பறைச்சி நின்று புலம்புகிறாள். ஒற்றைக் குரலிட்டு ஓங்கி அழுகிறாள்.

எல்லாவற்றையும் புறக்கணித்து விட்டுக் கோவிலன் செல்கின்றான். கோவிலன் தெருத் தெருவாகச் சிலம்பினை விற்கிறான்.

''மனையில் வெள்ளாணை கட்டிவாழ்ந்தது போதும்
போதும்
வேசி மருந்தாலே வெந்துநொந் ததும்போதும்
தாசி மருந்தாலே தான்வாழ்ந் ததும்போதும்
மூலா யிரங்கப்பல் முங்கியே போனதினால்
கப்பல்மூ வாயிரமுங் கரைத்தட்டிப் போனதினால்"
(ப. 67)

என்று கூறிக் கொண்டே சிந்தாமணித் தாசி வீதியில் விற்கிறான் கோவிலன். சிந்தாமணியைப் பார்த்தவுடன் சிலம்பு அழுகிறது.

'பத்தினியாள் காற்சிலம்பு பரஸ்திரீக் கேற்காது
உத்தமியாள் காற்சிலம்பு உந்தனுக்கு ஏற்காது'(ப.68)

என்று கூறி அவள் யார் யார் அதை அணியலாம் என்றும் கூறுகிறாள்.

'மீனாட்சி போட வேணும் மிக்கசொக்கர் பார்க்கவேணும்
வள்ளியவள் போட வேணும் வடிவேலர் பார்க்கவேணும்
பார்வதி போடவேணும் பரமசிவன் பார்க்க வேணும்
திருமாது போடவேணும் திருமாலும் பார்க்கவேணும்
இந்தச் சிலம்புமே எந்தனுக்கு ஏற்காது' (ப. 68)

என்று கூறுகிறாள் சிந்தாமணித் தாசி. 'ஆனைமேல்பணம் போட்டு அனுப்புவேன் உந்தனுக்கு' என்று கூறுகிறாள், அதறகுக் கோவிலன்,

"தாசியலள் நீ கொடுக்க தனலணிகன் வாங்குவேனா"
(ப. 68)

என்று பெருமிதத்துடன் கூறுகிறான்.

சிலப்பதிகாரத்தில் அரசியின் சிலம்பைப் பொற் கொல்லன் களவாடியதாகக் காட்டப்படுகிறது. சிலம்பின் சொட்டை எடுக்கக் கோவிலங்கி பொற்கொல்லன் வஞ்சிப் பத்தனிடம் கொடுத்ததாகவும் அவன் அதைக்காய வைத்த போது பழிவாங்க நினைத்த கருடன் கவர்ந்து சென்ற தாகவும் இந்நூலில் வேறொரு காரணம் காட்டப்படு கிறது. இராஜகன்னி கோவிலிங்கி சிலம்பு எடுத்த போது அமிர்தம் சொரிகிறது. கண்ணீரைச் சோரவிட்டு அவள் அழுகிறாள்.

"தவமாய்த் தவமிருந்து தையலரைப் பெற்றெடுத்தேன்
வரமாய் வரமிருந்து வைகையிலே ஒப்படைத்தேன்
அன்றுகண் டேன்மகளை இன்றுகண் டேன்சிலம்பை"
(ப. 72)

என்று கூறுகிறாள். அதனால், கோவிலனைப் பார்த்து,

'பாம்பெடுத்து மேற்போடும் பழிகாரத் தென்மதுரை
இந்த மதுரையிலே இறந்துபோக நாளாச்சே" (ப.5)

என்று கூறுகிறாள். பாண்டிய நாட்டரசி பாண்டிய நாட்டைப் பழித்துக் கூறுவது வியத்தற்குரியது. இந்த மதுரையில் அவன் இறக்கப் போவது இவளுக்கு எப்படி முன்னமே தெரிந்தது என்பதும் ஆய்தற்குரியது. அவளும், 'ஆனையின் மேல் திரவியத்தை அனுப்புகிறேன்; உன் அரண்மனைக்குத் திரும்பி விடு என்றுகூறுகிறாள். மகளின் சிலம்பைப் புரிந்து கொண்டவள் அவனை மருமகனாக நினைத்து உபசாரம் செய்யவில்லை.

அரசியின் வீட்டிலிருந்து வருகின்ற கோவிலன் வேத வாத்தியின் பள்ளிக்கூடத்திற்குச் செல்கிறான். அவர் கோவிலனுக்குப் பாலும் பழமும் தருகிறார். அவரும்

"பழிகார மதுரையிலே பட்டணத்தார் ஏன் வந்தீர்" என்று கேட்கின்றார். அவர் "காராம் பசுவை விற்றுக் கட்டழகா உந்தனுக்குத் கூத்தியார் கடனைடைக்கக் கொற்றவரே நான் தாரேன்" என்கிறார்.

சிலப்பதிகாரத்தில் மதுரை செல்வதற்குக்காரணமாக, வரை பொருள் வேட்கையேன் என்று கோவலன் கூறுறான். கவுந்திபடிகளிடம் கூட அவன் உண்மை கூறவில்லை. இந்நூலில் கோவிலன் தான் சந்தித்த தாசி, வாத்தியார், இடைச்சி, ஆகியோரிடம் உண்மையான காரணத்தைக் கூறுகிறான்.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த வஞ்சிப்பத்தன் பிள்ளைகள் ஒன்றுக்குப் போறோமென்று விடைபெற்று, தந்தையிடம் வந்து சிலம்பு விற்கவந்த கோவிலனை அவரிடத்தில் அனுப்புவதாகக் கூறுகின்றனர், எப்படி அவனைக் கொல்லவேண்டும் என்றும் கூறுகின்றனர்.

"மூத்த தமையனவன் முதற்றமையன் பிள்ளையென்று
ஒப்பாரி கொண்டு உறவு கொண்டு நீயழைத்து
செஞ்சிலம்பைத் தான்பறித்துத் திருடனென் றிறுகக் கட்டி
ராஜர்முன்னே கொண்டுவந்தால் நலமாக
வெட்டிடுவார்.
நீ தப்பிப் பிழைத்திடுவாய் தந்தையே..." (ப. 74)

என்று சொல்லி, கோவிலனிடம் "வஞ்சிப்பத்தன் வீதிக்கு நீங்கள் போவீரானால் சீக்கிரமே உந்தன் சிலம்பு விற்றுப் போகும்" என்கிறார்கள். பொற்கொல்லனையும் வஞ்சனையில் மிஞ்சுபவராகஅவனுடைய பிள்ளைகள்படைக்கப் பட்டுள்ளனர். தந்தைக்கே சதித்திட்டத்தைச் சொல்லித் தருகின்றனர். பிள்ளைகள்சொன்னவிதமே வஞ்சிப்பத்தன் செய்து பாண்டியன் முன் சொல்ல, அவர்கள் மனம் கலங்குகின்றனர். விதிவழி மதி செல்ல வேண்டும் என்று

திருவுளங்கொண்ட சொக்கர், வஞ்சிப்பத்தன் சொற் கேட்டு பாண்டியன் மதிமயங்கவேண்டுமென வெண்ணீறு தூவுகின்றார். [மனிதர்கள் தவறு செய்யத் தெய்வமே காரணமாவதாகக் காட்டப்படுகிறது] உடனே பாண்டியன்,

'இக்கணமே அக்கரையாய இழுத்துக் கொண்டு போய் நீங்கள்
காளியம்மன் கோவிலிலே கடுகப்பலி வாங்கிடுங்கள்"
(ப–76)

என்று ஆணையிடுகிறான். உடனே அங்கிருந்த சற்குண மந்திரிகள் உத்தியோகம் வேண்டாமென்று எழுந்து, "தேசத்திலில்லா தீர்ப்பு செய்தீர் நியாயத்தைக் கேட்டு நலமாகத் தீர்ப்பு செய்யும்" (ப 76) என்று கூறுகின்றனர். அப்போது இராஜகன்னியிடம் சிலம்பு அவளுடையதா என்று கேட்க அவள் தன்னுடையது அல்ல என்று சொல் கிறாள். அரசர்கள் கோவிலனிடம், ஐந்து சத்தியங்களைச் செய்யச் சொல்கின்றனர். பாம்புக் குடத்தில் கைவிடுதல், வேங்கையின் கூண்டில் விடுதல், மழுவைக் கையில் ஏந்துதல், யானையை அவன் மேல் விடுதல், நெய்க் கொப்பரையில் கைவிடுதல், ஆகிய ஐந்து சத்தியங் களை வைக்கின்றனர். கண்ணகியின் பத்தினித் தன்மையால் அவனுக்கு ஊறு விளையவில்லை. யானையானது கோவிலனைக் கொல்லாமல் அவனை மேல் ஏற்றிக் கொண்டு உலாவருவதைக் கண்டு இராஜகன்னி அழுகிறாள். அதைக்கண்ட பாண்டியன் கோபங்கொண்டு மழுவரசனை அழைத்துக் கோவிலனை வெட்டுமாறு கூறி விடுகிறான். கோவலன் சிலம்பு திருடினான் என்பதைவிட, கோவிலங்கி கோவிலனை விரும்பினாள் என்று பாண்டியர் கள் நினைத்தமையே கோவிலனுடைய கொலைக்குக் காரணமாகிறது. அப்போது கோவிலன்,

'ஒருவன் பழிக்குநாளை உலகம்பழி வாங்கிவைப்பாள்
மன்னன் பழிக்கு நாளைமதுரைபழி வாங்கிவைப்பாள்
மதுரையைக் கொளுத்திடுவாள் மன்னரைக் கொன்
றிடுவாள்
கண்ணகியாள் வந்தாலே கண்டதுண்டஞ் செய்திடு
வாள்' (ப.79)

என்று கூறுகிறான்.

மழுவரசர்கள் கோவிலனைக் கொல்ல மறுக்கின்றனர். கோவிலன் மதுரைக் குளத்திலே மூழ்கிச் சொக்கரையும் அம்மனையும் வணங்க அங்கயற்கண்ணி வந்துநிற்கிறாள். கோவிலன் அழ அம்மன் அப்போது,

"ஏனப்பா நீயழைத்தாய் என் மகனே கோவிலனே
சாதகமும் பொய்க்காது தலைவிதியுந் தப்பாது
என்னவரம வேண்டும் என்னைநீ கேளுமென்றாள்"
(ப.89)

உடனே கோவிலன் கண்ணகிக்குத் தான் செய்த கொடுமையை நினைந்து அழுகிறான்.

"மாலையிட்டு மூலைவைத்தேன் மற்றொன்றும்
நானறியேன்
கூறையிட்டு மூலைவைத்தேன் குறையொன்றும்
நானறியேன்
வீணுக்கு மாலையிட்டு விருதாவாய் அறுக்கலானாள்
காலிபறி போகுதம்மா தலைவனிங்கே மாளுகின்
றேன்" (ப.89)

என்ற அவனுடையசொற்களைக் கேட்டு,

"அவளுனக்குத் தாயலவோ நீஅவட்குப் பிள்ளையல்லோ
வயதுபதி னாறுதன்னில் மாளவோ நீபிறந்தாய்
கற்பாறைக் கென்று சொல்லிக் கட்டழகா
நீவளர்ந்தாய்
சாதகமுந் தப்பாது தலைவிதியும் பொய்யாது.

வாணியன் நீமுற்பிறப்பில் மாதகியுன் பெண்சாதி
கண்ணகி காளியப்பா கட்டழகா அழுகாதே
ஒருவன் பழிக்குமவ ளுலகம்பழி வாங்கவந்தாள்
மைந்தன் பழிக்குமவள் மதுரைபழி வாங்கவந்தாள்"
(ப.80-81)

என்று அம்மன் சொன்னபோது, கோவிலன் மாதகிக்கும் தன்னுடன் மோட்சம் தரவேண்டும் என்கிறான். 'அப்படியே தந்தேன்' என்று கூறி மறைகிறாள் மீனாட்சி. இதனால் கோவிலனின் மாசு அகற்றப்படுகிறது.

உடனே கோவிலன் மழுவரசர்களிடம் தன்னை வெட்டும்படி கூற, அவர்கள் வாளெடுத்து வீச அது கழுத்தில் மாலையாய் விழுகிறது. அவர்கள் அதைக் கண்டு ஓடியதால், கோவிலனார் அவர்களிடம் கண்ணகி வருமளவும் கற்பாறையினருகில் காத்திருச்சச் சொல்லி, வாளை எடுத்து பத்தினியை நினைத்து இரண்டாய் ஊடுருவச் செய்கிறான். மறுபடியும் சொக்கர் ஐந்து பூதங்களையும் தங்கச சிமிழில் அடைத்துக் கொள்கிறார்.

கோவிலனுடைய இரத்தத்தைப் பாண்டியன் திலகமிட்டுக் கொள்கின்றான். வஞ்சிப்பத்தன் ஓடி வந்து வாரி வாரிக் குடிக்கிறான். இந்நூலில் பாண்டியனும் வஞ்சிப் பத்தனும் இரத்த வெறியர்களாகக் காட்டப்படுகின்றனர்.

கோவிலனின் இறப்பை அறிந்த கண்ணகி சொக்கரின் உதவியால் உயிர்பெறச் செய்து நடந்ததைக் கேட்டறிகிறாள். அவனிடம் சபதம் செய்கிறாள். கண்ணகி கணவனைப் பார்த்து என்ன வரம் வேண்டுமென்று கேட்கிறாள்.

"பாண்டியர்கள் தம்குடலைப் பாவையே நீ கொண்டு வந்து
கூடமைத்து என்னோடு கொலுத்தி விட்டால் வெந்து விடும்

நான் செத்தாலுங் கைலாசஞ் சிவன்பாதஞ் சேர
வேண்டும்
என்னோடு மாதகியும் உடன்கட்டை சேர்க்க
வேண்டும்
இருவருக்குங் காட்சி ஏந்திழையே கொடுக்க
வேண்டும்." (ப. 98)

என்று கோவிலன் வேண்ட 'அப்படியே தாரே' னென்று ஆரணங்கு கைகொடுக்கிறாள்.

கண்ணகி பின்னால் கோவலன் வேண்டியபடியே மாதகியுடன் உடன்கட்டை வைத்து, இவளே கொள்ளி வைத்து அஸ்தியைக் காசி நதியில் சேர்க்கிறாள். அது பூவும் நாறுமாய் மிதக்கிறது.

சிலப்பதிகாரத்தில் கோவிலன் கருணை மறவனாகக் காட்சி அளிக்கிறான். இந்நூலில் கோவிலனோ பாண்டியன் குடலைக் கொண்டு வந்து கொளுத்தினால்தான் உயிர் அமைதியடையும் என்கின்றான்.

இளங்கோவடிகள் கண்ணகியைப் போன்று கோவலனைத் தெய்வ நிலைக்கு உயர்த்தவில்லை. தன்னேரில்லாத் தலைவனாகவும் படைக்கவில்லை. ஆனால் தலைமகனுக்குரிய பல பண்புகளை மாடல மறையோன் மூலம் உணர்த்தி, அவனை உயர்த்தி விடுகிறார். தலைமகனாக்குகிறார். இந்நூலில் காளியின் அவதாரமான கண்ணகியை உயர்த்துவதற்காகக் கோவிலன் கருவியாக்கப்பட்டிருக்கிறான். சராசரி மனிதனைவிடக் குறைந்தவனாகவே அவன் படைக்கப்பட்டுள்ளான்.

கண்ணகி

சிலப்பதிகாரம் கண்ணகியை மானுட மகளாகப் படைத்துத் தெய்வமாக்குகிறது. 'கோவிலன் கதை'யோ காளியே கண்ணகி அவதாரம் செய்வதாகக் காட்டுகிறது. அவதாரம் என்பதை நிறுவவும் கண்ணகி பத்தினி என்ப

தைக் காட்டவும், இந்நூலில் பல அற்புதச் செயல்களும், இயற்கை இறந்த நிகழ்ச்சிகளும் படைக்கப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரம் 'மாநாய்கன் குலக்கொம்பர்' என்று கண்ணகியின் பிறப்புண்மையைச் சுட்டுகிறது. 'கோவலன் கதையோ' அவளைப் பாண்டியன் மகளாகவே காட்டுகிறது. சிலப்பதிகாரத்தில் தெய்வமாகிய கண்ணகி பாண்டியன் குற்றமற்றவன் என்பதைத் தெரிவிப்பதற்காக 'பாண்டியன் தன்மகள்' என்று தன்னைக் கூறினாள். அதனால் இந்நூலில் பாண்டியனின் மகளாகக் கண்ணகி தோன்றுகிறாள். பிறகு அவள் மாநாய்கனின் வளர்ப்பு மகளாகவே காட்டப்படுகிறாள். சிலம்பில் கண்ணகியின் தாயின் பெயர் கூறப் பெறவில்லை. இந்நூல் பாண்டிய மாதேவி இராஜகன்னி கோவிலிங்கிதான் கண்ணகியின் தாயென்று காட்டுகிறது.

காளியின் வேண்டுகோளுக்கிணங்க, சொக்கர் தங்கச் சிமிழில் அடைத்த காளியின் உயிரை எலுமிச்சங்கனியாக்கித் தவமிருக்கும் கோவிலிங்கியின் கையில் கொடுக்க, அவள் உண்டு கருத்தரிக்கிறாள். பத்துமாதம் சென்ற பிறகு,

"வலதுகால் செஞ்சிலம்பு இடதுகை செப்பேடு
கழுத்திலே பூமாலை கன்ன வழியாக
கன்னத்து வழியாகக் கட்டழகிப் பெண்பிறந்தாள்"
(ப. 8)

என்று அவள் பிறப்பு தெய்வத் தன்மையுடையதாகக் காட்டப்படுகிறது. செஞ்சிலம்பால் மதுரையை அழித்துப் பழிதீர்ப்பதால் வலது காலில் செஞ்சிலம்புடன் அவள் பிறப்பதாகக் கூறப்படுகிறது. கூடப் பிறந்ததால் இச் சிலம்பைப் பெண்ணாக உருவகித்துப் பின்னால் கண்ணகி பழிக்கிறாள். கோவிலனின் பழிதீர்க்கப் பாண்டியர்கள் சிலம்பைத் தருவிக்கும்படி கூறும்போது,

"கூடம் பிறக்கலையோ கூட்டுப்பா லுண்ணலையோ
ஒக்கப் பிறக்கலையோ ஊட்டமுத முண்ணலையோ
எங்கே யிருந்தாலும் இப்போதே வாரும்" (ப 102)

என்று சிலம்பை அழைக்கிறாள். கன்னம் வழியாகப் பிறப்பதால் பின்னால் ஐந்து தலை நாகம் கண்ணகி என்று பெயரிடவும் வாய்ப்பாகிறது.

[தெய்வங்கள் மானுடக் குழந்தை போன்று கருத் தரிக்காமல் பிறக்கும் நிலை இந்து மதத்தில் மட்டுமன்றி கிறித்தவ மதத்திற்கும் உரியது என்பதை ஏசு கிறிஸ்துவின் பிறப்பு உணர்த்தும்.]

குழந்தை பிறந்தவுடன், சோதிடர்கள்,

"மாலையிட்டுப் பெண் பிறந்தால் மதுரைதனக் காகாது
கொடியிட்டுப்பெண் பிறந்தால் கொற்றவருக் காகாது
வாய்விட் டழுதாலே வடமதுரை வெந்துவிடும்
தேம்பி யழுதாலே தென்மதுரை வெந்துவிடும்" (ப. 8)

என்று கூறி, அதனால், "இவளை மரப் பெட்டியில்வைத்து வைகையிலே தள்ளுக" என்று கூறுகின்றனர். கோவிலிங்கி புலம்புகிறாள். தங்கத் தாம்பாளத்தில் குழந்தையை வளர்த்தி, பாலைக் கறந்து பக்கத்திலே வைக்கிறாள். பாண்டியர்கள் மகவதனைப் பார்த்து மிக அழுது, இதற்கோ தவமிருந்து ஏந்திழையைப் பெற்றோம் என்று வருந்துகின்றனர். "எட்டுக் கட்டு கட்டியவர் இயலாகச் சீலுமட்டு" வைகையில் தள்ளி விடுகின்றார். ஐந்துதலை நாகமொன்று பெட்டியைக் கண்டு அதன்மீது ஏறி வருகிறது. வைகை மணல் திடலோரம் வந்து ஒதுங்குகிறது. அப்போது 'குவ்வா குவ்வா' என்று குழந்தை அழுகை கேட்டு பெட்டியைத் திறந்து பார்க்கையில் கோடி சூரியன் போலக் குழந்தையைக் காண்கிறது. நாகரத்தினத்தைக் கக்கி வைத்தபோது எங்கும் பொருந்தாததால் வலது காற் சிலம்பில் பொருந்தும்படியாக இரத்தினத்தை வைக்கிறது.

அந்த நாகம் இக்குழந்தையைக் காளியென்று அறிந்து கனமாக வேது செய்கிறது. கன்னம் வழியாகப் பிறந்த கட்டழகியாகுமென கண்ணகி என்று பெயர் கொடுக் கிறது. பெட்டியைக் கட்டி வைகையில் தள்ளுகிறது. (ப10-11)

கண்ணகி என்பதற்குப் பெயர்க் காரணம் இங்குச் சுட்டப்படுகிறது. கண்ணகிக்குப் பெயர் சூட்டு விழாவிற்கு முன்னமேயே-பிறந்தவுடனேயே-வையையில் தள்ளியதால் கண்ணகி என்ற பெயரை ஐந்துதலை பாம்புதான் சூட்டு கிறது. [அந்தப் பெயர் மற்றவருக்கு எப்படித் தெரிய வந்தது என்பது அறிவிற்கு எட்டாத ஒன்று] பின்னால் கண்ணகி சிலம்பின் தரத்தை அறியவும், பாண்டியனைப் பழிவாங்கவும் நாகரத்தினச் சிலம்பு பயன்படும் வகையில் ஐந்துதலை நாகம் நாகரத்தினம் கக்கியதாகக் கூறப்படு கிறது. இந்நிகழ்ச்சி சிலம்பிலோ, மற்ற வழி நூல்களிலோ இல்லாமை குறிக்கத்தக்கது.

பெட்டியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கண்ணகி மாநாய்கன் மகளாகி வளர்கிறாள். காளி தேவியின் பிறப் பாதலால் கண்ணகியின் அழகு கூறப்படவில்லை. வளர் பிறைச் சந்திரன் போல் அவள் வளர்கிறாள்.

கண்ணகியின் திருமணம்:

கண்ணகி வளர்ந்து சிறுமியாகிறாள். மாமன் மச்சான் உறவுக்குள் திருமணம் நடப்பது இயல்பானதால் கண்ணகி கோவலன் திருமணத்திற்காக, மாநாய்கன் மாச்சோட்டான் மண உறவு முறையினராகக் காட்டப்படு கின்றனர். அக்காலத்தில் நடைமுறையில் இருந்த குழந்தைத் திருமணம் காட்டப்படுகிறது. அழுத கண்ணகிக்கு மாங்கனி கொடுத்துத் தாலி கட்டியது கூறப்படுகிறது.

கண்ணகிக்குத் திருமணம் பேசும் போது செட்டியார் களின் தில்லுமுல்லுத்தனமும் வெளிப்படுத்தப்படுகிறது.

மாநாய்கனுக்கு வாக்கு கொடுத்து, ஆயிரம் ரூபாய் பரிசம் வாங்கிக் கொண்ட மாச்சோட்டான், சுப்புச் செட்டியிடம் ஆயிரம், அங்குலிங்கி செட்டியிடம் ஆயிரம், மாணிக்கச் செட்டியிடம் இரண்டாயிரம் என மற்றவரிடமும் பரிசம் வாங்கிக் கொள்கின்றான். முத்துச் செட்டி மற்றவர் களைத் திருமணத்திற்கு அழைக்கப்போக உண்மை வெளிப்படுகிறது. உடனே பஞ்சாயத்தில் வழக்குப் போட அவர்கள் திருவுளச் சீட்டுப் போடுகின்றனர். கோவலன் பேரில் சீட்டு விழ, கண்ணகி அவனுடைய பாரியாள் என்று முடிவு எடுக்கின்றனர். பெரியவர்கள் நடத்தும் இந்தக் குழந்தை மண விளையாட்டில் கள்ளத்தனமும் கலக்கப் படுகிறது. இந்நிகழ்ச்சி அக்கால ஊழல் சமுதாயத்தையும் படம் பிடிப்பதாய் உள்ளது. (ப. 12–14)

கண்ணகியின் திருமணத்தில் பந்தல் சிறப்பு கூறுகின்ற அளவிற்கு மற்றச் சிறப்புகள் காட்டப்படவில்லை. எல்லர் நாட்டுப்புறப்பாடல்கள் போல் இத் திருமணக் காட்சியில் பந்தல் அலங்காரம் சிறப்பாகப் பேசப்படுகிறது. (ப. 14) திருமண நாளிலேயே கோவிலன் மாதவியை நாடிப்பிரிவ தாகக் காட்டப்படுகிறது. இதற்குக் குழந்தைத் திருமணம் என்பதும் காரணமாகலாம். கண்ணகி காளியின் அவதாரம் என்பதும் காரணமாகலாம். அதனால் குழந்தை கண்ணகியின் பிரிவுத்துயர் காட்ட வேண்டா நிலை ஏற்படுகிறது.

மணப்பருவத்தில் கண்ணகி:

கண்ணகிக்குப்பன்னிரண்டு வயது. நாளொரு மேனியாக நட்சத்திரம் போல் அவள் வளர்கின்றாள்; பொழுதொரு மேனியாக பொன்வண்டு போல் வளர்கிறாள். அப்போது தான் அவளுக்குத் தன்னைப் பற்றித் தெரியவருகிறது. கண்ணாடியில் தன்னழகைப் பார்க்கிறாள். தன் கழுத்தில் தாலி இருப்பது தெரியவருகிறது. உடனே, தாதிகளிடம் கண்ணகி அதைப் பற்றிக் கேட்க அவர்கள் கல்யாணப்

பந்தலிலே கட்டின தாலியிது என்று கூறுகின்றனர். உடனே கண்ணகி தன் கணவரைப் பற்றிக் கேட்டபோது அவர்கள் மாமியார் வர்ணமாலையைக் கேட்கலாம் என்கின்றனர். மாமியார் வீட்டிற்குக் கண்ணகி செல்ல மாமியார் பகடை ஆடுவதை விட்டுவிட்டு எதிர்கொண்டு வருகிறாள். மருமகளுக்கு ஆசனம் போடுகிறாள். மாமியாரிடம் கண்ணகி 'மாலை தரித்ததொரு மணவாளன் எங்கே?' என்று கேட்கிறாள். அவள் கோவிலன் வேசி வீட்டில் வாழ்வதைக் கூறுகிறாள். "அவரை ஏன் அழைக்கவில்லை?" என்று அவள் கேட்டதற்கு,

"வேசியுடன் போனவரை வீட்டுக்கு நாமழைத்தால்
நம்மொத்த வர்த்தகர்கள் நம்மை மதியார்கள்" (ப–29).

அதனால் அழைக்கவில்லை. உன்னால் முடிந்தால் அழையும்" என்று கூறுகிறாள். சிறிய வயதில் பேரறிவு நிறைந்த கண்ணகி,

"ஐந்து வயதுதனி லறியாத நாளையிலே
மாலையிட்டு மூலைவைத்து மாதகியாள் வீடுசேர்ந்து
தாலிகட்டி மூலைவைத்து தாசிவீடு போய்நுழைந்து
பன்னிரண்டு தன்வருஷம் பரத்தையர் வீடுவந்து
மாலையிட்ட தேவிநான் மாண்டு மடிகிறேனே
தொண்டையிலே சீவன் தொடுக்கிட்டுப் போகுது
காண்
உற்றார் பெற்றார்களும் பொன்னுரைத்துமே
நாவிலிட்டார்
அப்படியும் போகவில்லைஅடியாளின் இன்னுயிர்தான்
கல்லென்றா லுங்கணவன் புல்லென்றா லும்புருஷன்
உம்முடைய கையாலே துளசிதீர்த்தம் விட்டாலே
என்னுடைய சீவனது இறந்து மறந்துவிடும்
கட்டின தாலியதைக் கையாலே வாங்கிக்கொண்டு
உற்றொருமை செய்துவிட்டு உத்தமரே போய்வாரும்
நீர்வருமளவு மென்தனுயிர் மன்னவரே போகாது
ஓலைகண்ட நாழிகைக்கு வரவேண்டும் உத்தமரே"
(ப. 29–30)

என்று ஓலை எழுதினாள். சிலப்பதிகாரத்தில் மாதவிதான் இரு மடல்கள் எழுதுகிறாள். கண்ணகி எழுதவில்லை. இந்நூலில் மாதகி எழுதவில்லை. கண்ணகி மடல் எழுதுகிறாள். பொய்யாக—தான் இறப்பதாக—எழுதுகிறாள். இது அக்காலத்துக் குலமகளிர், பரத்தையர் வீட்டில் இருக்கும் கணவரை வரவழைக்கக் கையாண்ட உத்தி போலும்.

கண்ணகி அஞ்சனத்தைப் போட்டு ஆராய்ந்து பார்க்கிறாள். மையுருக மையுருக மையழகு தெரிகிறது. அனுமாரும் அங்கதரும் ஆரணங்கு முன்னே வருகின்றார். மாதகிக்குப் பதுமை செய்வது தெரிகிறது. உடனே கை முறித்துச் சாபமிடுகிறாள். பதுமை வாயடைத்து அங்கே செத்து மடிந்து சிவலோகம் சேர்கிறது. பதுமை இறந்தது கண்டு மாதவி கல்லில் அடிக்க அது பொடிப் பொடியாகப் போகிறது. (ப. 39)

மாதகியிடமிருந்து பிரிந்துவந்த கோவிலன், அத்தி மரத்தில் திருப்பதி குரங்கைப்போல் அமர்ந்திருப்பதைக் கண்ட சேடியர், கண்ணகியிடம் கூற, அவள் பல்லக்கு, ஆடை, அணிகலன்களைக் கொடுத்தனுப்புகிறாள்.

அல்லார் தலைகூந்தல் அறுபத்து மூன்றுமுழம்
கண்ணகியாள் கூந்தலது கணக்கு மிதங்களில்லை
கூந்தல் விரித்தாளே கொடியிடையாள் கண்ணகியும்
தேகமெல்லாந் தான்மறைத்து தேன்மொழியும்
வாராளே (ப. 50)

என்று கோவிலனைக் காணவந்த கண்ணகியின் தோற்றம் கூறப்படுகிறது.

கோவிலன் வந்தவுடன், அவள் மாதகியை அழிக்கப் போவதாகச் சொல்கிறாள். அவனை உணவு உண்ண அழைக்கிறாள். அவன் "சேடியர் கையால் செய்ததைச் சாப்பிடேன். நீ செய். சாப்பிடுகிறேன்" என்கிறான், அதற்குக் கண்ணகியோ,

"சுட்ட சட்டி தொட்டறியேன் சோற்றுப்பதம்
நானறியேன்
ஆக்க வகையறியேன் ஆளனுக்குப் போட்டறியேன்
எப்படிச் சாதந்தான் இதமாகச் சமைத்திடுவேன்"
(ப. 51)

என்று கூறுகிறாள். ஆனாலும் தன் ஆளனுக்கு வகை வகையாகச் செய்து போடுகிறாள். சாப்பிட உட்கார்ந்த கோவிலனோ, மாதகியை நினைத்தவுடனே எழுந்துவிடு கிறான். கண்ணகி காரணம் கேட்க, அவன் "மாதகியின் கடன் தீர்த்தால்தான் சாப்பிடுவேன்" என்று கூறுகிறான். கண்ணகியோ பணமில்லையே என்று வருந்துகிறாள். கோவிலன் "உன் சிலம்பைக் கொடு, நான் அதை விற்று மாதகிக்கு மரக்கால் பொன் கொடுக்கிறேன்" என்று கூறுகிறான்.

சிலப்பதிகாரத்தில் 'சலம்புணர் கொள்கைக் சலதியோ டாடி, குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைத்த இலம்பாடு நாணுத்தரும்' என்று கோவலன்கூறிய உடனே கண்ணகி, 'நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச் சிலம்புள கொண்ம்' என்று கூறிக் கொடுக்கிறாள். இந்நூலில் மாதகியின் கடனைத் தீர்க்கக் கோவிலனே சிலம்பு கேட்கிறான். கண்ணகியோ சிலம்பின் பெருமை யைக் கூறுகிறாள்.

"கூடப்பிறந்ததொரு கொடியிடையாள் காற்சிலம்பு
கன்னா னறிந்ததில்லை கடைத்தெருவில்
போனதில்லை
செட்டி யறிந்ததில்லைதராசில்வைத்து நிறுத்ததில்லை
கொல்ல னறிந்ததில்லை குண்டுவைத்து
நிறுத்ததில்லை
ஓடாணி தானுமில்லை உத்தமியாள் காற்சிலம்பு
திருகாணி தானுமில்லை தேன்மொழியாள்
காற்சிலம்பு
எப்படிக்குத்தான் கழற்றி இதமாய்க் கொடுப்பே
னென்று" (ப 53)

வருந்துகிறாள். கண்ணகியின் கூடவே காற்சிலம்பு பிறந்த தாகக் கூறுவதால் மேற்கண்ட பகுதி அமைந்துள்ளது; உடனே கண்ணகி சொக்கரை நினைக்க, திருகாணியும், ஒடாணியும் உண்டாகின்றன. கண்ணகி சிலம்பைக் கழற்றச் சிலம்பு புலம்புகிறது.

"கழற்றாதே கண்ணகியே கணவனுக்குத் தீம்புவரும்
தென்மதுரை போனாரானால் செத்து மடிந்திடுவார்
வடமதுரை போனாலே மாண்டு மடிந்திடுவார்
இந்தப் பயணமது இனிதிரும்பப் போறதில்லை
மதுரைக்குச் சென்றாலே மறுத்துவரப் போறதில்லை
என்றுசொல்லி செஞ்சிலம்பு ஏங்கிப் புலம்புகிறது"
(ப-53)

இந்த மணிச்சிலம்பு அழுவது கண்ணகிக்கு மட்டுமே தெரிகிறது.

கண்ணகியும் பத்தினித்தன்மையும்:

கண்ணகியின் பத்தினித் தன்மையைப் பறைசாற்றவே இந்நூல் எழுந்ததுஎனலாம். குலமகளிரிடம்தான்பத்தினித் தன்மை இருக்குமென்று அக்கால ஆடவர்கள்நினைத்தனர். அதனால் ஆடவர்கள் தமக்குத் தீங்கு நேரும்போது தம்மைக் காக்கும்படி வேண்டுவதும் மற்றைய நேரங்களில் மனைவியை மறப்பதும் இயல்பாகிறது. கோவிலன் தன் னுயிர்க்குத் தீங்கு வரும்போதுதான் கண்ணகியை நினைத் துப் பார்க்கிறான். இந்நூலில், கண்ணகியின் பத்தினித் தன்மையை விளக்கவே இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. கோவிலன் மாதகி வீட்டி லிருந்து வந்தவுடனேயே,

"தீயாயெரித் திடுவேன் தேன்மொழியாள் கண்ணகி
கல்லாக மண்ணாகக் கரியாகச் செய்திடுவேன்
புல்லாகப் பூண்டாகப் புழுவாகச்செய்திடுவேன்(ப-50)

என்று தன் பத்தினித் தன்மையை அறிமுகம் செய்கிறாள்.

கோவிலன் பதுமை செய்ய கண்ணகியை நினைக்கி றான். உடனே,

'ஓடியுருகு தங்கே உள்ளுருகிப் பாயுதுபார்
ஐந்தெழுத்துப் பாவனையும் ஆணழகன் கோவிலன்
போல்
பட்டணத்தார் போலாகப் பதுமையமைந்த தங்கே"
(ப-37)

என்று பதுமை அமைந்த விதம் கூறப்படுகிறது. மேலும் அப்பதுமை கண்ணைத் திறக்கிறது. கலகலவென்று பேசு கிறது. கோவிலனுக்கு மாதகி விடை கொடுக்காததால் பொற்பதுமை ஆங்காரக் கோபமுடன் ஜவுளிப் பிரம் பெடுத்து சாடுகிறது. (ப-37) கண்ணகி கைமுறித்துச் சாபமிட செத்துச் சிவலோகம் சேர்கிறது (ப-38) என்று கண்ணகியின் பத்தினித்தன்மை கூறப்படுகிறது.

சிங்கமுகக் கிணற்றில் கோவிலன் விழுந்தபோது, அரைக்கிணறாய் இருந்த நீரானது முழுக்கிணறாய்ப் பொங்குகிறது. (ப-43) ஆற்றில் கோவிலனார் அடித்துக் கொண்டு செல்லும் போதும் கோவிலன் நினைக்க, பத்தினியாள் தன் கணவனைக் கொன்றாலே பாவம் என்று ஆற்றில் ஒதுக்கி விடுகிறது. (பக்-46) கண்ணகியை நினைத்தவுடனே பசியினால் ஏற்பட்ட காதடைப்பும் நீங்குகிறது. (ப-46) அத்தி மரத்தருகில் வந்தவுடனே,

''பூவாத அத்திமரம் பூவாய்ச் சொரியுதங்கே
காயாத மரங்களுமே காய்த்துச் சொரியுதங்கே"
(பக்-46)

என்பதால் கண்ணகியின் பத்தினித் தன்மை வெளிப்படு கிறது. கோவிலனுக்குச் சமைப்பதற்காக நீர்மொள்ள, பலாக் கட்டுத் திருக்குளத்திற்குத் தோழிகளுடன்

கண்ணகி செல்கிறாள். கண்ணகியாள் சொன்னவுடன் கங்கை திரளுகிறது.

கோவிலன் நீர் கொண்டுவரச் சென்றபோது, கள்வர் எழுவர் வருகின்றனர், அவர்களிடம் கண்ணகி உச்சியி லிருந்து உள்ளங்கால் வரை உள்ள நகைகளைக் கழற்றிக் கொடுக்க, அவர்கள் மாங்கலியத்தைக் கேட்கின்றனர். கோபம் கொண்ட கண்ணகி கள்வர்களைக் குத்துக்கல்லா கப் போகச் சபிக்கிறாள். மரத்தின் மேல் நின்றவனை வெளவாலாகப் போகும்படி சபிக்கிறாள். கோவிலன் எழுப்பிவிடச் சொன்னதால் கள்வரை எழுப்பிவிடுகிறாள்.

சிலம்பில் இளங்கோ கவுந்தியடிகளை வழித்துணை யாகப் படைத்ததால் கோவலன் நீருக்காகச் செல்லும் போது, கவுந்தியடிகள் கண்ணகிக்குப் பாதுகாப்பாக நிற்கிறார். வம்பப் பரத்தர்கள் வரும்போதுகூட, கவுந்தி யடிகள்தான் முதுநரியாகும்படி சபிக்கிறார். ஆனால், இங்கு வழித்துணை இல்லாததால் கண்ணகியே கள்வர் களைக் கல்லாகப் போகும்படி சபிக்க வேண்டியதாயிற்று. சாபவிடை செய்யும் போது அவர்களை உப்பரவர் ஒட்டராகப் போகும்படி கூறுகிறாள். (பக்-55) சாதிக்குச் சிறப்பிடம் கொடுத்த சமுதாய நிலையை இது தெரிவிக் கிறது.

கோவிலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும் வழியில் கள்ள விநாயகரைக் கண்டு கண்ணகி ஓடிவந்து அவரிடம் ஆடை கேட்கிறாள். அவர் வாயைத் திறக்க வில்லை. கண்ணகிக்குக் கோபம் வந்து அடிமடியில் கை போட்டு இழுக்கிறாள். அப்போது விநாயகர்,

"இந்தப் பயணம் எழில்மதுரை போவாரானால்
மாண்டு மடிந்திடுவார் வரப் போறதில்லை" (ப. 60)

என்கிறார். அது மட்டுமல்ல. மதுரையையும் பழிக்கிறார்.

"துரும்பெடுத்து மேற்போடும் துன்மார்க்க மதுரையது
கொடியெடுத்து மேற்போடும் கொடிதான தென்மதுரை
நிந்தையிட்டுத் தலையை வெட்டும் நீதியில்லா
தென்மதுரை" (ப. 60)

என்று விநாயகரே மதுரையையும், அதனை ஆளும் பாண்டியனையும் பழிக்கிறார். இப்படி, சிலப்பதிகாரத்தி னின்று இது மாறுபடுகிறது. கண்ணகியும் கோவலனும் மதுரை நகர் நோக்கிச் செல்லும் போது மாங்காட்டு மறையோன்,

"தென்னவன் நாட்டுச் சிறப்புஞ் செய்கையும்
கண்மணி குளிர்ப்பக் கண்டு" சிலம்பு (காடு. 52–53)

வருகிறான்.

"கோள்வல் உளியமும் கொடும்புற் றகழா
வாள்வரி வேங்கையும் மான்கணம் மறவா
அரவுஞ்சூரும் இரைதேர் முதலையும்
உருமுஞ் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா
செங்கோல் தென்னவர் காக்கும் நாடென
எங்கணும் போகிய இசையோ பெரிதே"
(சிலம்பு : புறஞ் சேரி. 5-6)

என்று கோவலன் கேள்விப்பட்டதால் பகல் நேரத்தை விட, இரவிடைக் கழிதற்கு ஏதம் இல்லையென்று கூறு கிறான் மதுரை மாநகரைக் கண்ட பிறகும்,

"கோலின் செம்மையும் குடையின் தண்மையும்
வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
பதியெழு வறியாப் பண்புமேம் பட்ட"
(சிலம்பு : அடைக்கலக். 3-5)

மதுரை மூதூரைக் கண்டு வருவதாகக் கூறுகிறான். இந் நூலோ தொடக்கத்திலிருந்தே மதுரையைப் பழிகார மதுரையாக, அறிவிக்கிறது. பாண்டியர்களின் கொடுங் கோலைப் பரக்கப் பேசுவதாகவும் அமைகிறது.

விநாயகர், கண்ணகி கோவலனாரைப் போக வேண்டாம் என்று தடுப்பதோடு அமையாமல் எந்த முறையில் யாரால் அவன் கொல்லப்படுவான் என்பதையும் கூறுகிறார்.

வண்டியூர்ப் பட்டணத்திற்கு இருவரும் வரும்போது தன்னைப் பாதுகாப்பாக யார் வீட்டிலாவது விட்டுவிட்டு, சிலம்பு விற்கச் செல்லும்படி, கண்ணகி கூறுகிறாள். வேளாளர், பள்ளர், கோமுட்டி, சேணியர், செட்டியார் ஆகிய குலத்தினரின் குறைகளைக் கூறி, இடைச்சியரின் நிறைகளைக் கூறி அவர்கள் வீட்டில் கண்ணகியைத் தங்க வைக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்படுகிறது. அப்போது எதிரில் இடைச்சி வர அவர்கள் வீட்டில் புகுகின்றனர். ஆய்ச்சி கோவிலனைச் சொக்கர் என நினைத்து வணங்குகின்றாள். பசித்த கோவிலன் சோறு கேட்க ஆய்ச்சியரிடத்தில் பொருட்களை வாங்கிக் கண்ணகி சோறு சமைத்துப் போடுகிறாள். கோவிலனுக்குப் பாய் விரித்த கண்ணகி ஆய்ச்சியருகே போய்ப்படுக்கிறாள். (ப. 64) [சிலப்பதிகாரம் 'மாதிரி' என்று இடைச்சிக்குப் பெயர் கொடுக்க, இங்குப்பெயர் தரப்படவில்லை.]

சிலம்பு விற்கச் சென்ற கோவிலன் இறந்தானா என்பது கூடத் தெரியாமலே, இறப்புக்குக் காரணம் அறியாமலே,

"கொற்றவனைக் காணவேணும் கொடியபழி தீர்க்க வேணும்
மாண்டவரைக் காணவேணும் மன்னரைக் கொல்ல வேணும்
ஒருவன் பழிக்காக உலகம்பழிவாங்க வேண்டும்
மன்னன் பழிக்காக மதுரைபழி வாங்க வேண்டும்"
(ப. 84)

என்று கூறிக் கண்ணகி கோவலனைக் காணவேண்டும் என்று விரும்புகிறாள். இடைச்சியோ கண்ணகியைப்

போக வேண்டாம் என்று தடுத்துத்தான் போவதாகக் கூறுகிறாள். அதற்குச் சம்மதித்த கண்ணகி,

"வெறும்பானை வெறுங்கூடை மெல்லியரே நீயெடுத்து
ஆற்றிலேதான் முழுகி அரிவையரே நீ நினைத்தால்
நாலு அறையாகும் நலமான பானையிலே
நாலு அறைதனிலே நாலுவித முண்டாகும்
அதமவிலை கூறி அநீதமாய் விற்றாயானால்
அவர்சேதிதான் தெரியும் ஆரணங்கே யுந்தனுக்கு"
(ப. 85)

என்று சொல்கிறாள். கண்ணகியைப் பத்தினியாள் தான் என்று சொல்லிய இடைச்சி பக்குவமாய்க் கை குவிக்கி றாள். பால் வாங்க வந்த பெண்ணிடம் செய்தி கேட்க, அவள் கோவிலன் இறப்பைக் கூறுகிறாள். இடைச்சி வெட்டுண்ட கோவிலனைக் கண்டு தயிர்ப்பானையைப் போட்டு உடைத்து அழுகிறாள். மழுவரசர் பிடித்துக் கொண்டு சென்று அரசரிடம் விட்டபோது,

"மண்டைத்துள்ளிப் போகாதே மட்டடக்க வருவாள் நாளை
ஆண்மைகொண்டு துள்ளாதே யகமடக்க வருவாள் நாளை" (பக். 88)

என்று சொல்லிய இடைச்சி மண்ணைத் தூற்றிவிட்டு வருகிறாள். அவள் கோடிப் புடைவை, கொடிச் சீலை, பாக்குப்பை, மஞ்சள், சீப்பு, சிக்கங்கோல், மல்லிகைப்பூ, மாங்கனி, தேங்கனி, நல்லெண்ணெய், சிகைக்காய், மருக் கொழுந்து ஆகியவற்றை வாங்கி வருகிறாள். வண்டியூர் இடைச்சிதான்வாங்கி வந்த பொருட்களைக் கோவிலனார் அனுப்பினார் என்று கூற,

"மாலையிட்ட நாள்முதலாய் வாங்கிக் கொடுத்ததில்லை
செத்ததின் பிற்பாடு சீரனுப்பி வைத்தாரோ
ஆருக்கு ஏற்குமது ஆரணங்கு மாதகிக்கு
அவனுக்கு ஏற்குமது அடியாளுக் கேற்காது" (ப. 89)

என்று அழுகிறாள் கண்ணகி. 'புருஷன் படுகளம் போறேன்' என்று கூறிய கண்ணகியைத் தேற்றி இடைச்சி சாதத்தைப் போட அது புழுவாகிறது. பால் இரத்த மாகிறது. வெகுண்ட கண்ணகி இடைச்சி வீடு எரியச் சாபமிடுகிறாள். 'குடியிருந்த வீட்டிலே கொள்ளி வைக்க நாயுண்டோ? வீட்டையணைக்க வேண்டும்' என்று இடைச்சி கண்ணகியை வேண்ட முன்போல் வீடு உண்டா கிறது. உடனே, கண்ணகி கூந்தலை விரித்துப் புறப்படு கிறாள். அவளுடைய கூந்தல்,

"எல்லார்க்கும் கூந்தலது இருபாக மொருபாகம்
ஆரணங்கு கண்ணகிக்கு அறுபத்து மூன்றுபாகம்"
(ப. 90)

என்று சிறப்பிக்கப்படுகிறது. கண்ணகியின் மற்ற உறுப்பு நலனைக் கூறாமல் கூந்தலழகு மட்டுமே கூறப்படுகிறது. கண்ணகி வழக்குரைக்கச் செல்லும் போதும் அவிழ்ந்த கூந்தலுடன் சென்றமை இதற்குக் காரணமாகலாம்.

கண்ணகி பழி தீர்க்கச் செல்லும்போது,

"கொக்குக் குருவிகளா, கோவிலரைக் கண்டதுண்டா
காட்டானை புலியினமே கண்டதுண்டா கோவிலரை
சிங்கங் கரடிகளே செட்டியாரைக் கண்டதுண்டா"
(ப. 91)

என்று கேட்கிறாள். அவ்வுயிர்களோ,

"போறபோது கண்டதுண்டு; வரும்போது கண்ட தில்லை" என்று கூறுகின்றன. அங்கு வந்த மாட்டுக்காரப் பிள்ளைகளைக் கேட்ட போது, "பசியாயிருக்கிறது முதலில் சோறு போடு" என்கின்றனர். கண்ணகி "எப்படிச் சமைப்பேன்?" என்று கேட்க, "தென் மதுரை எப்படி இனிதாய் கொளுத்துவாயோ அப்படிக்குச் சாதம் அடை வாய்ச் சமையும்" என்று மாடு மேய்க்கும் பிள்ளை கள் கூறுகின்றனர். கண்ணகியும் தன் பத்தினித் தன்மை யால் சோறு ஆக்கிப் போடுகிறாள். ஆற்று மணலெடுத்து

அவல் கடலையாக்கிக் கொடுக்கிறாள். (92) அதன் பிறகே மாட்டுக்காரச் சிறுவர்கள், திருப்பரங்குன்றக் காட்டில் தெய்வக் காளி கோயிலண்டை கோவலன் இறந்த சகடப் பாறை என்ற இடத்தைக் காட்டுகின்றனர்.

கண்ணகி சேதியறிவதற்காகக் கோவிலனை எழுப்ப விரும்பிச் சொக்கரை மனதில் நினைக்கிறாள். உடனே சொக்கர் தங்கச் சரடு, தங்க ஊசி, பொற்பிரம்பு, திருநீறு ஆகியவற்றை அந்தரத்தில் வட்டெறிகிறார். உடனே கண்ணகி கோவிலன் உறுப்புகளை அந்தந்த இடத்தில் பொருத்தமாக வைத்துத் தங்க ஊசியில் நூல் கோர்த்து உச்சியிலிருந்து ஓட்டி விடுகிறாள். சரடு ஏற சரடு ஏற சதையேறி வருகிறது. பெரு விரற்குச் சரடு விட்ட பிறகு தங்கச் சிமிழதனைத் திறக்கிறாள். கோவிலன் உயிர், பொந்தில் அடைகிறது. வெண்ணீறு தூவி பொற்கொடி யாள் தட்டுகிறாள். (ப.86) உடனே கண்ணகி ஒளிந்து கொள்கிறாள். எழுந்த கோவிலனோ, "மாதகியானால் மடிமேல் வா, கண்ணகியானால் கடக்கப் போய் நில்" என்கிறான். கோவிலனிடம் கண்ணகி நடந்ததைக் கேட்க, அவன் அனைத்தையும் கூறுகிறான். உடனே கண்ணகி,

"ஒருவன் பழிக்கு நாளை உலகம்பழி வாங்கிடுவேன்
சிறுகுடலும் பெருங்குடலும் சேர்த்துப் பிடுங்கிடுவேன்

மணிக்குடலைத் தான் பிடுங்கி மாலையாய் நான்
தரிப்பேன்

இப்படி நான் செய்யாவிட்டால் என்பேரு
கண்ணகியோ" (பக். 98)

என்று மார்தட்டிச் சபதம் செய்கிறாள். சிலப்பதிகாரத் தில் பாண்டியன் அவைக்களத்தில் பாண்டிய மாதேவி முன் கண்ணகியே,

"பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசொடு ஒழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய்" (வஞ்சின 36—38)

என்று சபதம் செய்கிறாள். இங்குக்கோவிலிங்கி முன்னால் சபதம் செய்யவில்லை. கோவிலன் முன்னால் சபதம் செய்கிறாள்.

கண்ணகி காளியின் அவதாரமாதலால் மணிக்குடலைத் தான் பிடுங்கி மாலையாய் நான் தரிப்பேன் என்கிறாள். கணவனிடத்தும் "உனக்கு என்னவரம்வேண்டும்?' என்று கேட்கிறாள். கோவிலன் சொக்கநாதர் மூலமாக காளிதேவி என அறிந்துவிட்டதால் வரம் கேட்கிறான்.

கண்ணகி அங்கிருக்கும் மரத்திலிருந்து மாங்கனி பறித்துத் தரக் கேட்கிறாள். கோவிலன் சொத்தைக் கனிகளை அவளுக்குக் கொடுத்து நல்ல கனிகளை மாதகிக்காக மடியில் கட்டிக் கொள்கிறான். இதையறிந்த கண்ணகி கோபமுற்று, கோவிலனின் தலையில் பேன் பார்க்கும் பாவனையில், உச்சிச் சரட்டை உருவிவிட்டுக் கோவிலனை மாளவைக்கிறாள். (ப. 99) கொக்கு, மான், கட்டெறும்பு, சிற்றெறும்பு, ஆகியவற்றைக் கோவிலர்க்குக் காவல் வைக்கிறாள்.

பழிதீர்க்க விரும்பிய கண்ணகி பாண்டியன் அரண்மனைக்குச் செல்கிறாள். பாண்டியர்கள் பயந்து கதவைச் சாத்திக் கொள்கின்றனர். உடனே கண்ணகி தாண்டி உதைக்கிறாள். கதவு தவிடு பொடியாகிறது. காவலர்களில் ஒருவனைப் பிடித்து முன்பின்னாய்த்திருப்பி விடுகிறாள். மூதேவி கேள் என்று சொல்லித் தன் நிலையைக் கூறுகிறாள்.

"அள்ளினாரோ திருடினாரோ அணிமதுரைப்
பட்டணத்தில்
அள்ளின கோவிலர்க்கு அணிவிலங்கு
போடொணாதோ." (ப. 100)

என்று பாண்டியர்களை நோக்கிக் கேட்கிறாள்.

"கோட்டையேறிக் குதித்தாரோ கொலைகளவு
செய்தாரோ
அகழேறிக் குதித்தாரோ ஆட்டை மாட்டைச்
சாய்த்தாரோ
சுவரேறிக் குதித்தாரோ தொந்தரவு செய்தாரோ
வழி போவார் வருவாரைப் பறித்து அடித்தாரோ
(ப. 10)

என்று கண்ணகி பாண்டியரைக் கேட்பதில் அக்காலச் சமுதாயக் குற்றங்களைப்பற்றி அறிய முடிகிறது. உடனே பாண்டியர்கள்,

'செஞ்சிலம்பு கொண்டுபோன திருடனை வெட்டி
வைத்தோம்
காற்சிலம்பைத் தானழைத்தால் கள்ளன் பழி
தாரோம். (ப. 101)

என்று கூற, கண்ணகி தன் பத்தினித் தன்மையால் காற் சிலம்பை அழைக்கிறாள். பெட்டிக்குள்ளேயிருந்த பொற் சிலம்பு பத்துக் கட்டுகளை உடைத்து, அங்கிருந்த காவலர் கள் ஆயிரம் பேர் தலையுடைத்து, ஆவேசத்துடன் வந்து நிற்கிறது. அதைப் பார்த்த கண்ணகி கோபத்துடன்,

"அடிகிட்ட வர வேண்டா மெட்டநில்லு
செஞ்சிலம்பே
அண்டை வரவேண்டாம் அப்புறத்தே ஒதுங்கிநில்லு
என்தாலி பறிக்க வந்த தனிச் சிலம்பே ஒதுங்கிநில்லு
மாலை பறிக்க வந்த மாபாவி ஒதுங்கி நில்லு
வேசியுன்னைப் பார்த்தாளோ விலைமாது
கொண்டாளோ
தாசி யுன்னைப் பார்த்தாளோ தகாதவள்
தொட்டாளோ
மஞ்சள் பறிக்க வந்த மாபாவி ஒதுங்கிநில்லு"
(ப. 102)

என்று சிலம்பைப் பழிக்கிறாள். உடனே பாண்டியர்கள் உத்தமியே, பத்தினியே, உன் சிலம்பு வந்ததிங்கே; என் சிலம்பை வரவழைத்தால் பழியைத் தாரோமென்கின்றனர். கண்ணகி கருடனை அழைக்க, கருடன் தான் கொண்டு சென்ற சிலம்பை மீண்டும் தருகிறது. கோவிலிங்கியிடம் இரு சிலம்புகளையும் காண்பிக்க அவள் தன் சிலம்பைக் காலில் அணிந்துகொண்டு கண்ணகியின் நாகரத்தினச் சிலம்பை தன்னுடையதல்ல என்கிறாள். கண்ணகியைக் கண்டு அஞ்சிய பாண்டியர் "இவள் கீரி, சிட்டுக்குருவி, நாயைப் போலக் கத்துகிறாள், பிடித்துத் தள்ளுங்கள்" என்கின்றார். "அறியாமல் கொன்று விட்டோம். அரிவையே என் செய்வோம்" என்று சிலர் கண்ணகியை வேண்டுகின்றனர். அதற்குக் கண்ணகி,

"முற்பழி பிற்பழி தானிப்பழி தாரு மென்றாள்
இப்படிக்குச் சொன்னாலே ஏந்திழை நான்
விட்டிடுவேன்" (ப.105)

என்று கூறுகிறாள். (ஆனால் அவள் விடவில்லை என்பது கருத்திற் கொள்ளற்குரியது)

காளிதேவி பழிவாங்குதல்:

சிலப்பதிகாரக் கண்ணகி பாண்டியனைக் கொல்ல அவைக்குச் செல்லவில்லை. தன் கணவன் கள்வனல்லன் என்று நிறுவுவதற்காகவே அவைக்குச் செல்கிறாள். கண்ணகி அணிமணிக் காற்சிலம்பு உடைக்கிறாள். மன்னவன் வாய்முதல் தெறிக்கிறது மணி. அம்மணியைக் கண்டவுடனே,

"தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதைக் காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே' (வழக்குரை 73-78)

10163 / 22,331

என்கிறார் இளங்கோவடிகள். சிலப்பதிகாரத்தைப் பொறுத்தவரை நீதி பிழைத்தோம் என்ற அதிர்ச்சியால் பாண்டியன் தானே உயிரிழக்கிறான். இந்நூலிலோ பாண்டியனைப் பயங்கரமாகப் பழி வாங்குகிறாள் கண்ணகி!

கண்ணகி கோட்டைக்கு வெளியே அவர்களை அழைக் கிறாள். கிரீடம், புஜகீர்த்தி, கணையாழி, மோதிரம், பூணூல் ஆகியவற்றைக் கழற்றி வைக்கச் சொல்லி,

'முற்பழி பிற்பழிதான் இப்பழி மூன்று பழி
சொல்லி வாய் மூடுமுன்னே" (ப.105)

பாண்டியரைக் கொல்லத் தோகையவள் மறு ரூபத்தை வரவழைக்கிறாள். தெய்வம், குற்றம் செய்தவர்களை மன்னிக்காத நிலை இங்குக் காட்டப்படுகிறது. சிலப்பதி காரத்தில் கண்ணகி கடவுள் நல்லணி காட்டும்போது யாரும் கேட்காமலே,

'தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினான் நானவன் றன்மகள்
வெல்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்'
(சிலம்பு : வாழ்த்து :10:1-3)

என்று சொல்லுகிறாள். குற்றம் செய்த பாண்டியனைக் கொல்லாதது மட்டுமன்றி மன்னிக்கவும் செய்கிறாள். அவனுக்கு மகளாகவும் தன்னைக் கூறுகிறாள். ஆனால் இந்நூலில் பாண்டியனின் மகளாகப் பிறந்த கண்ணகி தந்தையை அவமானப்படுத்தி அழிக்கிறாள்.

இரு நூல்களிலும் கண்ணகியின் தெய்வக் கோலம் காட்டப்படுகிறது. சிலம்பு மானிடம் தெய்வமாவதைப் படிப்படியாகக் காட்டும். வஞ்சிக் காண்டத்தில் சேரன் கண்ணகிக்குக் கோட்டம் கண்டபோது, கண்ணகியின் தெய்வக் கோலம் கண்டு,

"என்னேயி தென்னேயி தென்னேகொல் பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலை வளைக்கை நல்லயிரப் பெற்றோட்டு நாவலம் பொன்னிழை சேர் மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றோன்றுமாற்"
(சிலம்பு : வாழ்த் 9: 1–4)

என வியக்கிறான்.

கோவிலன் கதை ஆசிரியரோ,

"காளிஎன்ற ரூபமதைக் கண்ணகியுந் தானெடுத்தாள்
சிங்கப்பல்லுஞ் செஞ்சடையுஞ் சிவனுடைய
ரூபமுந்தான்
கோடாலிப் பல்லழகுங் கோழிமுட்டைக் கண்ணழகும்
இரண்டு கரந்தனிலே எடுத்தாள் திரிசூலம்
சூல மொருகையில் சுக்குமாந் தடியொருகை
பாச மொருகையில் பன்னிருவேல் தானொருகை
மாடறுக்குஞ் சூரி மடியில்ரண்டு பாங்குடனே
(ப 105–106)

என்று கண்ணகி காளிதேவியாக உருவம் எடுக்கிறாள் என்று பாடுகிறார்.

காளிதேவி ஒவ்வொருவரையும் பழிவாங்கும் நிலை பயங்கரமாகக் காட்டப்படுகிறது. முதலில்,

ஆறாயிரம் பாண்டியரை அன்பாகத் தானிறுத்தி
சூலத்தைக் கொண்டுமவள் குத்தினாள் பாண்டியரை
சிறுகுடலும் பெருங்குடலும் சேர்த்துப் பிடுங்கினாளே
(ப–106)

அடுத்ததாக, வீடுவந்து பரணில் ஒளிந்திருந்த வஞ்சிப் பத்தனை,

"குத்திச்சரித்துமவன் குடலைப்பிடுங்கிக்கொண்டாள்
தோள்மாலை தானிழந்தான் தோகை மயிலனை
யான்" (ப–106)

என்று பொற்கொல்லனைப் பழிவாங்கியமை கூறப் படுகிறது.

அவன் மனைவி முத்துமாலையை,

"ஐந்துமா தங்கர்ப்பமாம் அரிவையந்த முத்துமாலை
அவள் வயிற்றின் கருவதனை வாய்தனிலே கவ்விக்
கொண்டு" (ப–106)

வருகிறாள் கண்ணகி. வஞ்சிப்பத்தனின்குழந்தைகளையும் எழுத்தாணியால் குத்திச் சிறு குடலையும், பெருங்குடலை யும் பிடுங்கி ஆகாசத்தில் விட்டெறிகிறாள். கருடன் அதைக் கவ்விக்கொண்டு பறந்து செல்கிறது. அரண் மனைக்குச் சென்று பகடையாடிக் கொண்டிருந்த கோவிலிங்கியைத் தாயென்றும் பாராமல் தள்ளிக்குத்தி, சிறுகுடலும் பெருங்குடலும் சேர்த்துப் பிடுங்கிக்கொண்டு வருகிறாள். இவ்வாறு காளிதேவி கோவலனைக் கொன்ற வர்களைப் பழிதீர்த்த நிலை பயங்கரமாகக் கூறப்படு கிறது.

கண்ணகி மதுரையைக் கொளுத்துதல்:

சிலப்பதிகாரத்தில் கண்ணகி மதுரையை எரிப்பதற் கும், இந்நூலில் காளி மதுரையை எரிப்பதற்கும் வேறுபாடு காணப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் இடநகிலைக் கையால் திருகி எறி கிறாள். அந்நேரத்தில் எரியங்கி வானவன் தோன்றி,

"மாபத்தினி நின்னை மாணப் பிழைத்தநாள்
பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவ லுடையேனா லியார் பிழைப்பார் ஈங்கென்னப்"
(சிலம்பு: வஞ்சின 50–52)

என்று வேண்ட, அருளுள்ளம் கொண்ட கண்ணகி

"பார்ப்பார் அறவோர் பசுபத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று"
(சிலம்பு: வஞ்சின 53–55)

கூறுகிறாள். இதிலிருந்து தீபவர்கள் நிறைந்த சமுதாயத்தை எரிக்கக் கண்ணகி விரும்புகிறாளே தவிர, மன்னனின் தலைநகரை அழிக்க வேண்டுமென்று நினைக்கவில்லை.

இந்நூலில் காளி மதுரையை எரிக்க எண்ணங் கொண்டு தனக்கு உதவி செய்த வேதவாத்தி, சிந்தாமணித் தாசி, பன்னிரண்டு அமைச்சர்கள் ஆகியவர்களை மதுரைக்கு வெளியே செல்லுமாறு கூறி நாலுமதுரைக்கும் நடுவில் வந்து நிற்கிறாள். தன் சிலம்பு, தாயார் சிலம்பு, வலது மார்பு, இடது மார்பு ஆகியவற்றை எடுத்து நான்கு திசைகளில் வீச, நான்கு திசைகளும் எரிகின்றன. எரிகின்ற காட்சியைக் கண்டும் அவள் கோபம் தணியவில்லை.

கண்ணகியின் கோபம் தணிக்கின்ற முறையும் இரு நூலிலும் வேறுபடுகிறது. சிலப்பதிகாரத்தில் வெப்பம் தாங்காமல் மதுராபதி தெய்வம் தோன்றி மன்னவன் செங்கோல் திறன் கூறி, கண்ணகியின் பழம் பிறப்புக் கதை கூறி, கண்ணகியின் துன்பத்திற்குக் காரணம் முற் பிறவித் தீவினையே என அமைதிப்படுத்துகிறது. அதனால் கண்ணகியின் சினம் தணிகிறது. இந்நூலில் கண்ணகியின் உக்கிரம் கண்டு தயிரிடைச்சி வந்து வெண்ணெயை எடுத்து மார்பில் விட்டெறிகிறாள். வெண்ணெய் உருகுவதை அங்கிருந்த பறைச்சி ஒருத்தி பார்த்துத் தன் முந்தானையைக் கிழித்து மார்பில் வரிந்து கட்டி முறத்தால் விசிறுகிறாள். தேகம் குளிர்ந்த கண்ணகி,

"எந்தத் தெரு வெந்தாலும் இடைச்சிதெரு வேகாது
பார்மதுரை வெந்தாலும் பறத்தெருவு வேகாது"
(ப–108)

என்று வாழ்த்தி வரம் கொடுக்கிறாள். இந்நிகழ்ச்சி அக் காலத்துச் சாதி நிலையைக் காட்டுகிறது.

கண்ணகி பாண்டிய மரபினரைக்கொன்றுபழி தீர்த்து, மதுரையை அழித்தபிறகுதான் கோவலனை நினைக்கிறாள்.

கண்ணகியும் மாதகியும்:

கண்ணகியே கோவிலனின் இறப்பை மாதகிக்குத் தெரிவிக்கிறாள்.

"என் சக்களத்தி மாதகியே சங்கதியும் நீகேளு
உன்கட னுக்காக வேதான் உத்தமனார் கோவிலனார்
செஞ்சிலம்பு விற்கவந்த செட்டியார் தாம்மடிந்தார்
மாண்டு மடிந்துவிட்டார் வடிவழகர் கோவிலரும்"
(ப-98)

என்று ஓலை எழுதுகிறாள். மாதகி களத்திற்கு வந்து அழும்போது, கண்ணகியும் அவளுடன் மாரடித்துக் கொண்டு அழுகின்றாள். மாதகி தன்னையும் உடன் கட்டையேற்ற வேண்டியபோது கண்ணகிசம்மதிக்கிறாள். கோவிலன்–மாதகியை சமபடுக்கையில் படுக்க வைத்து ஈனாத வாழை இலைபரைத் தண்டை எடுத்துப் பற்ற வைக்கிறாள். (ப-110) அவளை திருவின் அஸ்திகளையும் காசிநதியில் கரைக்கிறாள். அங்கிருந்து வேம்பூரு எல்லை தாண்டி மலையாளத் தெல்லையிலை வந்து பகவதியாள் என்று பெயர் பெற்று சில காலம் இருக்கிறாள். அங்கும் இருக்கப் பொருந்தாமல் திருவொற்றியூருக்கு வருகிறாள். அந்நேரத்தில் திருவொற்றியூரில் தியாகரும், அம்மனும் சொக்கட்டான் விளையாடுகின்றனர். கண்ணகியைக் கண்டு அம்மன் அஞ்சியலிகிறாள். எங்குவந்தீர்? என்று தியாகர் கேட்கிறார். தாகமுணர்த் தாருமென்கிறாள கண்ணகி. "ஆழச் சுனையிறங்கி அள்ளிப் புசியும்" என்கிறார் தியாகர். கண்ணகி இறங்கியதைக் கண்ட தியாகர் பாறைபோட்டு மூடுகிறார். கண்ணகியோ நம்பூதிரிமார் வீதி, பூந்தோட்டம், காசிதளம் மேடு முதலிய இடங்களில். எழ முயன்றும் தியாகர் பாறை போட்டு மூடுகிறார்.

கடைசியில் கண்ணகி கலங்க, தியாகர் "இன்று முதல் இங்கே இருந்துவிடு. சித்திரை மாதத்திலே சிறப்பான நாளையிலே முதற்பூசை உந்தனுக்குத் தருகிறோம். இன்னும் வேண்டியதை எனக்குக் கூறு" என்கிறார். அதற்குக் கண்ணகி.

"எட்டுகுட்டி எட்டு பொட்டை எட்டு முட்டை
எட்டுசட்டி
கம்மாளர் பலியெனக்குக் கடவுளே தரவேண்டும்
வருஷத்துக் கோர்பலிதான் வகையாய்க் கொடுக்க
வேண்டும்." (ப 112—113)

என்று வேண்டுகிறாள். வட்டபுரியம்மன் என்று பெயரும் பெறுகிறாள். கண்ணகி பலி வாங்கிக் கொண்டிருந்த நாளிலே ஒரு வயது ஆன கம்மாளக் குழந்தையொன்று பத்துப்பதிகம் பாட உடனே கண்ணகிக்குக் கங்கையாய்ப் பால் சுரக்கிறது. மகிழ்ந்த கண்ணகி, "இன்று முதல் எந்தனுக்கு இந்தப்பலி வேண்டாம். எருமைக் கடா தந்தால் இன்பமாய் நான் கொள்ளுவேன்" என இறைவனிடத்தில் கூற, இறைவன் கலியுகத்து மானிடர்க்குக் கனவில் வந்து கூறக் காவலர்களும் அல்வாறே செய்கின்றனர். செவ்வாய் புதன் கிழமைகளில் திருவாட்சி மேல் அவள் வந்து வரந்தருவாள். இந்தக் கதை கேட்டார் சிறக்க வாழ்வரென்று வரமளிக்கிறார், ஈஸ்வரனார்.

இலக்கியக் கண்ணகி புராண வட்டபுரியம்மனாக மாறிய நிலையை இந்நூல் கூறுகிறது. கடைசியில் காலட்சேப முறையில் முடிகிறது.

இளங்கோவின் கண்ணகியும், புகேழந்தியின் கண்ணகியும், பல நிலைகளில் வேறுபடுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் பிறப்பிலிருந்து கதை தொடங்காமல் திருமணத்திலிருந்து தொடங்கு

கிறது. மானுடக் கண்ணகி தெய்வக் கண்ணகியாக உயர்த்தப்பட்டதால் பிறப்பைக் கூறவேண்டிய அவசியம் இல்லை. புகழேந்தியின் "கோவிலன் கதை"யில் கண்ணகி பிறப்பிலிருந்து கதை வளர்கிறது. கன்னம் வழியாக வந்ததால் 'கண்ணகி" என்று காரணப் பெயரும் பெறுகிறாள். காளியே கண்ணகியாக அவதாரம் எடுத்ததால் கதை முழுவதும் இறைமைத் தன்மையை ஒட்டியே இயல்கிறது. அதனால் அற்புதச் செயல்களும் அதிகமாகவே உள்ளன.

சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியின் திருமணம் இரு முது குரவரால் நிச்சயம செய்யப்படுகிறது. 'கோவிலன் கதையில்' மாநாய்கன், மாசாத்துவான் உட்படப் பலரிடம் பரிசப்பணம் வாங்கி ஏமாற்றுகிறான். இறுதியில் திருவுளச் சீட்டு போட்டு கண்ணகியின் கணவனாகக் கோவிலன் தேர்ந்தெடுக்கப் படுகிறான். "சாதகமும் பொய்க்காது. தலைவிதியும் தப்பாது" என்னும் கூற்றிற்காகவே கோவிலன் கண்ணகி திருமணம் நடக்கிறது.

கோவிலன் வறுமையடைந்ததற்காக நாணும் நிலை கண்டு கண்ணகி சிலம்பைத் தானே கழற்றிக் கொடுக்கிறாள். ஆனால் கோவிலன் கண்ணகியிடம் சிலம்பைக் கேட்கிறான். கண்ணகி மறுக்கிறாள். தெய்வத்தன்மை கூறுகிறாள். ஓடாணி இல்லாமையைக் குறிக்கிறாள். சிலம்பும் புலம்புகிறது. இறுதியில் சொக்கரை நினைத்துக் கழற்றிக் கொடுக்கிறாள்.

'சிலப்பதிகாரத்தில்' வம்பப்பரத்தையரின் புன் சொற்களைக் கேட்டு சினந்த கவுந்தியடிகள் "முது நரி ஆகுக" எனச் சபிக்கிறார். 'கோவிலன் கதையில்' கவுந்தியடிகள் படைக்கப்படாததால் கண்ணகி தானே கற்பைக் காத்துக் கொள்ள வேண்டியவளாகிறாள். அதனால் திருடர்கள் தன் மாங்கல்யத்தைப் பறிக்க நினைத்தபோது இவளே

அவர்களை வெளவாலாகவும் குத்துக்கல்லாகவும் மாற்று கிறாள். இதிலிருந்து அவளுடைய இறைமைத் தன்மையும் புலனாகிறது.

'சிலப்பதிகாரத்தில்' கண்ணகியைக் கவுந்தியடிகள் மாதரியிடம் அடைக்கலம் கொடுக்கிறார். கோவிலன் கதையில் கோவலனே கண்ணகியின் வேண்டுகோளுக் கேற்ப, இடைச்சியிடம் அடைக்கலம் கொடுக்கிறான்.

'சிலப்பதிகாரத்தில்' வெட்டப்பட்ட கோவலன் தேவ வடிவிலே வந்து கண்ணகியிடம் பேசிப் பின் அமரவுலகம் செல்வதாகக் கூறப்படுகிறது. 'கோவிலன் கதையில்', இறந்த கோவிலன் கண்ணகியின் முயற்சியால் மீண்டும் மானிடனாகவே உயிர் பெற்றெழுகிறான். கண்ணகியின் ஆற்றல் அடிப்படை நோக்கமாகப்புலப்படுத்தப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி வாயிலோனிடம் தன் வரவு கூறிப் பாண்டியனைக் கண்டு வழக்குரைக்கிறாள். 'கோவிலன் கதையில்' கண்ணகி கோட்டைக் கதவுகளை உடைத்து பாண்டியர்களைத் தன்னை வந்து காணுமாறு செய்கிறாள். இதன் மூலம் அவளுடைய தெய்வீக நிலை உணர்த்தப்படுகிறது.

இளங்கோவின் கண்ணகி இடது மார்பைமட்டும் திருகி எறிந்து மதுரையை எரிக்கிறாள். பின்வந்த கவிஞரின் கண்ணகி இரு முலைகள், தன் சிலம்பு, தாயார் சிலம்பு ஆகியவற்றை எறிந்து மதுரையை எரிக்கிறாள்.

கண்ணகி செங்குட்டுவனுக்கும் மற்றவர்களுக்கும் காட்சி கொடுப்பதன் மூலம் தெய்வமாகிறாள். கோவிலன் கதைக் கண்ணகி காளியின் தெய்வீகஉருவம் எடுத்தபிறகே பாண்டியன் முதலானோரைக் கொல்கிறாள்.

இளங்கோவின் கண்ணகி இறுதிவரை மாதவியைச் சந்திக்க வில்லை. கோவிலன் கதையில் இருவரும் சந்திப் பதும், போராடுவதும் நிகழ்கிறது. இறுதியில் கோவில

னும் மாதகியும் உடன்கட்டை ஏறுவதும் கண்ணகி அவர்களின் அஸ்தியைக் கரைப்பதும் நடக்கிறது. கொடுமைக்காரியாகக் கருதப்பட்ட மாதகி கண்ணகியால் பத்தினி என்று புகழப்படுகிறாள்.

கண்ணகி சேரனால் தெய்மாக்கப் பெறுகிறாள் என்பதோடு காவியம்நிறைவுறுகிறது. பின்வந்த கண்ணகி காளியாக மாறிப் பின்பு திருவொற்றியூரில் வட்டபுரி அம்மனாக மாற்றம் பெறுகிறாள்.

இளங்கோவின்கண்ணகியுடன் கோவலன் சில ஆண்டுகள் வாழ்ந்த பிறகே பிரிகிறான் என்று காட்டுகிறார். இந்நூலில்கண்ணகியின் திருமண நாளன்றே கோவிலன் பிரிவதாகக் காட்டப்படுகிறது. கண்ணகி காளியின் அவதாரமாதலால் அவள் தூய்மையைக் காக்க மேற்கொண்ட முயற்சியாக இது அமைகிறது.

இவ்வாறு இரு நூல்களிலும் கண்ணகி என்னும் பாத்திரப் படைப்பு கதையோட்டத்திற்கேற்பப் பல மாற்றங்களைப் பெற்று விளங்குகிறது.

மாதகியாள் :

சிலப்பதிகார மாதவி 'கோவிலன் கதை'யில் மாதகியாகிறாள். சிலப்பதிகாரத்தில் தேவலோக ஊர்வசியின் மரபில் மாதவி தோன்றியதாகக் கூறப்படுகிறது. இப்நூலில் முற்பிறவியில் வாணிகனின் மனைவியாக இருந்தவள், இப்பிறவியில் பிறவித் தொடர்பு அறாமல், மாதகியாகிறாள். ஆனால் பிறவித் தொடர்வை ஒட்டி வாணிகக் குலத்தில் பிறக்காமல் பரத்தைக் குலத்தில் பிறக்கிறாள். வேறு குலத்தில் பிறந்திருந்தால் சாதி வெறிமிகுந்த சமுதாயத்தில் ஒருவனுக்கு மனைவியாக முடியாது. ஆனால் பரத்தைக் குலத்தில் பிறந்தால் எந்தக் குலத்து ஆடவனுக்கும் மனைவியாகலாம். காளி பாண்டியனை அழிப்பதற்குக் கோவிலனின் மனைவியாகும்படியாகச்

சபதம் பூண்டதால் மெய்யுறு புணர்ச்சிக்கு இட மில்லை; அதனால்தான் கோவிலனின் திருமணத்தின் போதே பிரிவு ஏற்படுகிறது. தன்முற்பிறவி மனைவியான மாதகியுடன் அவன் பன்னீராண்டு காலம் இன்பந்துய்க் கிறான். உயிரன்ன மாதகியிடம் காட்டும் பந்தமும் பாசமும் காளியான தன் மனைவியிடம் காட்ட, கோவில னால் முடியவில்லை.

மாதவி காவிரிப்பூம்பட்டினத்தைச் சேர்ந்தவள். மாதகியோ திருக்கடையூர் பட்டினத்தைச் சேர்ந்தவள். 'தெய்வரம்பை மாதகியாள்' என்று சிறப்பிக்கப்படு கிறாள்.

மாதகியின் பிறப்பு:

திருக்கடையூரிலிருக்கும் வசந்தமாலை என்னும் தேவதாசி பிள்ளையில்லையென்று பெருந்தவம் செய்ய, சொக்கலிங்கனார் முற்பிறவியில் கோவிலனின் மனைவி யாய் இருந்த வாணிச்சியின் உயிரை எடுத்து எலுமிச்சங் கனியாக்கிக் கொடுக்கிறார். சாதகம் கணித்தபோது, பத்தாம் பிராயத்தில் பைங்கொடியாள் மாதகியாள் அம்பலமேறி ஆடுவாள். அப்போது, மன்மதனைப் போலழகு வாய்ந்ததொரு வணிகனை-செப்புச் சிலை யழகனை-செங்கீரைத் தண்டழகனை அழைத்து வருவாள். பன்னிரண்டு வருஷம் பைங்கொடியாள் வைத்திருப்பாள். பதின்மூன்றாம் வருஷத்திலே பைங்கொடியும் மாண்டிடு வாள் என்று சோதிடம் கூறுகிறது.

மாதகி வளர்ந்த பிறகு கோவிலனின் பிடிவாதத்தின் பேரில் சதிருக்கு வரவேண்டுமென்று பெற்றோர் ஓலை விடுக்கின்றனர். ஓலையைக் கண்ட வசந்தமாலை சர்வாங் கமும் பூரித்து மாதகியை அனுப்புகிறாள்.

"கச்சை வரிந்து கட்டி தானணிருந்தாள் பொற்சரிகை
இழையாயிரம் விலைபொன் இந்திரவர்ணப்
பட்டாடை
பாவாடை யுள்ளாடை பட்டாடை மேலாடை
குத்தினி ரவிக்கைகளாம் குசும்பாவாம் பொற்சீலை
பிகுவெடுத்தா ளொட்டியானம் பின்பு இளங்
கொடியாள்
ஆடைகள் ஆபரணம் அடங்கலுந் தானணிந்து
ஆனையின் மேல் கம்பமது அடைவாகத் தானிறுத்தி
(ப–17)

மாதவி வருகிறாள். நட்டுவனாரையும் அழைத்துக் கொள்கிறாள். தாயை வணங்குகிறாள். உடனே தாயானவள்,

இளநீரி லூரவைத்த இன்பக்களிபாக்கும்
தங்கச் சிமிழதனில் மையையும் கொடுத்து (ப. 17)

வெற்றிலையில் வைத்துக் கொடுக்குமாறு கூறுகிறாள்.

பரத்தமைச் சமுதாயத்தையே ஒழிக்க விரும்பிய இளங்கோ அந்தச் சமுதாயத்திலிருந்து ஒரு கற்புடைய வளை உருவாக்குகிறார். எதிர்காலச் சமுதாயத்தையே மாற்றும் புரட்சிக்காரியாக்குகிறார். பரத்தமைச் சமுதாயத்தின் பிரதிநிதியாக இருந்த மாதவியின் தாய் சித்திராபதியைப் பற்றிக் குறிக்கவே இல்லை. அச்சமுதாயத்தின் இழிசெயலையும் அவர் விளக்கவில்லை. இந்நூலில் அக்காலப் பரத்தமைச் சமுதாயம் வெளிச்சமிட்டுக் காட்டப் படுகிறது. அதன் பிரதிநிதியாக வசந்தமாலை விளங்குகிறாள். வசந்தமாலை சொன்னதன்வழி செய்யும் ஆடிப் பாவையாக மாதகி இருக்கிறாள். அக்காலப் பரத்தையர்கள் தம்மிடம் வந்த ஆடவர்களை மயக்கும் விதமும் பணத்தைப் பறிக்கும் விதமும், பறித்த பிறகு அவர்களைக் கொடுமைப் படுத்தும் விதமும் மாதகி பாத்திரப் படைப்பில் வாயிலாக விளக்கப்படுகின்றன. ஆடவர்

களும் அம்மசளிரின் பிடியிலிருந்து மீளமுடியா நிலை சுட்டப்படுகிறது.

மாதகியின் சுயம்வரம்:

"அஞ்சாம் பிராயத்திலே அழகு சிலம்பெடுத்து
அழகு சிலம்புகட்டி ஆடுவாள் மாதகியாள்" (ப. 15)

என்று மாதகியின் பெருமை கோவிலனால் கூறப்படுகிறது. மாதகி சதிரில் [சுச்சேரி] ஆடுவதற்குமுன் சில விதிமுறைகளைக் கூறுகிறாள். கோவிலனின் திருமணத்தில் அவள் ஆடியதாகக் குறிப்பில்லை

"என்னுடன்கூ டப்பிறந்த பொன்னுருவி மாலைதனை
கழற்றி யெறிவேன்காண் கட்டழகர் வர்த்தகர்மேல்
ஆர்கழுத்தில் போய்விழுமோ அலரையழைத்
தேதகிடுவேன்
அதற்குச் சம்மதி தானென்று தாம்பூலந்
தாருமென்றாள்" (ப. 18)

என்று அவள் இட்ட விதிமுறை கூறப்படுகிறது. பொன்னுருவி மாலை யார் கழுத்திலும் விழாமல் கோவிலனைத் தேடி வருகிறது. அவன் கண்ணுக்குத் தெரியாமல் கழுத்தில் விழுகிறது. (19) கோவிலன் கழுத்திலிருந்து அதைக் கழற்ற முடியவில்லை. இரம்பத்தைக் கொண்டுவந்து அறுக்கச் சொன்னபோது வாள் மழுங்கியதே தவிர மாலை கழலவில்லை. "மாலை கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. தாம்பூலம் நான் தாரேன் தனஞ்செயரே போட்டுக் கொள்ளும்" என்கிறாள் மாதகி. மைதடவிக் கொடுக்கிறாள். மருந்து மயக்கத்தால், கோவலனின் நிலை மாறி மாதகியிடம் செல்ல முயல்கிறான். மாநாய்கன் செட்டியார், முத்துச் செட்டியார் ஆகியோர் அவனை மாதகியுடன் போகவிடாமல் தடுத்தபோது தனக்குத் தாய் தந்தையரில்லை. மாதகி மட்டும்தான் இருக்கிறாள் என்று அலன் மோகத்துடன்

கூறுகிறான். மாதகி அமர கண்டீஸ்வரர் முன் பிரியேன் என்று கோவலனை ஆணை இடும்படியாகச் செய்கிறாள். இதன் மூலம் அக்காலப் பரத்தையர் தமக்கேற்ற நாயகரைத் தேர்ந்தெடுப்பதும் வசிய மருந்தின்மூலம் வசப்படுத்துவதும் இதற்குப் பரத்தையரின் தாயார் உடந்தையாக இருப்பதும் தெரிய வருகிறது.

மாதகி கோவிலன் வாழ்க்கை:

அக்காலப் பரத்தையரின் வாழ்க்கையை ஆசிரியர் மாதகியின்மீது ஏற்றிக் கூறுகிறார். பரத்தையர்கள் ஆட வர்களிடம் கையாளும் திறமையும் கேட்கும் முறையும், கேட்கப்படும் பொருள்களும் வியக்கச் செய்கின்றன.

மாதகியின் வீட்டிற்குச் சென்று உட்கார்ந்தவுடன் கட்டில் உடைந்து கட்டழகன் கோவிலன் விழுகிறான், மாதகியோ,

''என்னதான் செய்வேன்கா ணெண்ணுடைய புண்ணி
யரே
இந்தநல்ல கட்டில்விட எந்தனுக்கு வேமறியில்லை
உன்னாலே யெந்தனுக்கு உண்டாக வேணுமென் றாள்
(ப-12)

என்பதால் மாதகியின் சுரண்டல் உள்ளம் புலப்படுகிறது.

மாதகி விதவிதமாக விருந்து சமைத்து கோவிலனை உண்பிக்கிறாள்.

''பானையைத் தான்கழுவி பனிநீ ருலைவார்த்து
சின்னசம்பா வரிசிதீட்டி யுலையிலிட்டாள்
முத்துபோல் சாதம் வடித்தாளே மொய்குழலாள்
நல்லவெல்லம் பூசுணைக்காய் நாலுவிதஞ்சமைத்தாள்
கத்தரிக்காய் கொய்திடுவாள் கருணைப் புளியிடுவாள்
வாழைக்காய் கொய்திடுவாள் வாழைத்தண்டு
நாரிழுப்பாள்

சுழப்பலாக்காயை இளமுள்ளு போக்கிடுவாள்
சோலைப் பலாக்காய்கள் சுளைதிருத்தி வாங்கிடுவாள்
காயுங்கரி வகையுங் கனமாகத் தான் சமைத்து
வாழையிலை போட்டு வட்டித்தாள் சாதமது" (ப–12)

என்று மாதகி உணவு சமைத்தவிதம் கூறப்படுகிறது.

மாதகிக்குக் கொடுப்பதற்கென்றே பன்னிரண்டு கப்பல் பொன்னை மாநாய்கனிடம் கோவிலன் கேட்கிறான். அவரும் மகிழ்ச்சியுடன் அனுப்புகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பணம் வந்தவுடன் 'உமக்கென்ன வேண்டும்?' என்று கோவிலன் வினவ மாதகி பன்னிரண்டு காணி நிலம் கேட்கிறாள். அந்த நிலத்தில் வீடு கட்டுகிறான் கோவிலன்.

'ஏழடுக்கு மாளிகைதான் இன்பமுடன் கட்டுகிறான்
அரண்மனை களாஸ்தானம் அன்பாகக் கட்டுகிறான்

பூசை பண்ணு மண்டபமும் பொற்கொடிக்குக் கட்டினான்
பற்றியு லாவுதற்குப் பன்னக சாலைகளாம்
சன்னமெல்லாம் பொன்னாலே தையலுட மாளிகைக்கு
காலெல்லாம் வயிரத்தூண் கதவெல்லாங் கண்ணாடி
வீதித் திரிந்துமவள் வீட்டுக்கு வந்தாலே
கைகால் கழுவுமிடம் கணக்கிடப் போகாது
சாளர வாசலுக்குச் சலவைக்கல் தான் புதைத்தார்
இத்தனையுங் கட்டிவைத்தா ரிளங்கொடியாள்
நாயகிக்கு (ப–25)

என்று கோவிலன் அவளுக்கு மாளிகையைக் கட்டிக் கொடுத்ததைக் கூறுகிறார். கண்ணகியின் பணத்தில் மாதகிக்குச் செலவழிப்பதைக் கூறுமுகத்தால் பரத்தையின் கூட்டுறவால் ஆடவர்கள் பொருளை அழிக்கும் நிலை காட்டப்படுகிறது. இது போதாதென்று இன்னும் என்ன வேண்டும் என்று கேட்க, அவளோ ஒரு பெரிய பட்டியலையே தருகிறாள்.

''காலைகடைச் செலவு கொள்ள கால் மரக்கால்
பொன் வேணும்
உச்சி கடைச் செலவு கொள்ள ஒரு மரக்கால் பொன்
வேணும்
அந்தி நடைச் செலவு கொள்ள ஒரு மரக்கால் பொன்
வேணும்
பாக்குகொள்ள வெந்தனுக்கு பத்து லட்சம் பொன்
வேணும்
வெற்றிலை வாங்குவதற்கு வேணலட்சம் பொன் வேணும்
புகையிலை வாங்குதற்குப் பொன் கப்பல் பணம் வேணும்
சுண்ணாம்பு வாங்குதற்குச் சொர்ண கப்பல் பொன்
வேணும்
நித்தமொரு ஆயிரம் பொன் சத்தியமாய் தரவேணும்
பொழுதைக்கு ஆயிரம் பொன் சத்தியமாய் தரவேணும்
(ப. 26)

என்று வீட்டுச் செலவுக்குப் பணம் கேட்கிறாள் மாதகி. இவற்றைக் கொடுத்துவிட்ட கோவிலன் மாதகிக்கு அடிமையைப் போல் சேவகம் செய்கிறான். பரத்தையர் சமுதாயத்தில் ஆடவர்கள் கட்டுண்ட நிலையையே இப் பகுதி குறிக்கிறது.

''ஆட்டமாடி வீடுவந்தால் அவளடியைத்தான் பிடிப்பான்
பாட்டுப்பாடி வீடுவந்தால் பக்கமெல்லாந் தான்
பிடிப்பான்
வைத்த சாத முண்ணுவான் வழிநடந்த கால் பிடிப்பான்
அவட்குத் தம்பலக் காளஞ்சி தலைமேல் சுமந்திருப்பான்
எச்சிற் படிக்கமதை யேந்தி யிருப்பானே'' (ப. 25)

என்று கோவிலன் மாதகி வாழ்க்கை நிலை உணர்த்தப் படுகிறது.

மாதகியிடம் அன்பு:

பொருளையெல்லாம் கொடுத்து, அவளுக்குச் சேவகம் செய்து வந்தாலும் மாதகி கோவிலன் வாழ்வு, அன்பு கொண்டதாகவே இருக்கிறது.

சாரையும் சர்ப்பமும் போல் சீராய்விளை
யாடிருந்தோம். (ப. 27)

குயிலும் மயில் போலக் களித்து விளையாடிருந்தோம்
மானுங் கலை போலே மகிழ்ந்து விளையாடிருந்தோம்
''எள்ளுக்கு ளெண்ணெய் போல் எந்நாளும்
வாழ்ந்திருந்தோம்
பாலுச்குள் வெண்ணெயைப் போல் பரமியே
நாமிருந்தோம் (ப.33)

என்று மாதகியும் கோவிலனும் வாழ்ந்த வாழ்க்கை கூறப் படுகிறது.

கோவிலனை வரவழைக்க, பாம்பு கடித்து மாதகி இறந்தாளென்று வசந்த மாலை கடிதம் எழுதுகிறாள். அதைக் கோவிலன் பார்த்ததும், கண்ணகி இறந்தாலும் மாதகி இருக்கக் கூடாதா என்று ஏங்குகிறான்.

கண்ணகியைப் பார்க்கப் போனவன் மாதகி இறந்த தைக் கேட்டவுடனே, கண்ணகியப் பார்க்கச் செல்லா மல் மாதகியைப் பார்க்கத் திரும்பி விடுகிறான்.

மாதகி அவனை சிங்கமுகக் கிணறறில் தள்ளியபோதும் பாறையை மேலே வைத்தபோதும்,

''பெண்ணே கண்ணே மாதகியே பெண்ணரசே
நாயகமே
ஆசைதந்த நாயகியே அரிலையரே மாண்டாயோ
செத்தாலுஞ் சேதமில்லை தேன்மொழியே
மாண்டாயோ (ப-45)

என்று மாதகியைத் தானினைந்து வாடிப் புலம்புகிறான்.

கிணற்றில் தள்ளியது தெரிந்தும், கண்ணகியின் பத்தினித் தன்மையால் கிணற்றிலிருந்து மேல் எழுந்த வுடன் கிணற்றின் அருகில் மாதகியாள் காலடியை மன்னவனும் கண்டு விட்டே, காலடியின் சேற்றைக் கட்டழகன் குழைத்து நெற்றித்திலகமாக இடுகிறான். (43)

ஆசையுடன் கண்ணகி சமைத்த சமையலைச் சாப்பி டாமல், "மாதகியாளுக்குமரக்காற் பொன்கொடுக்கவேண் டும். கடனுக்கு வழி சொன்னால் தான் சாதம் உண்பேன்" என்கிறான் கோவிலன். மாதகியின் கடனடைக்கச் சிலம் பையும் கேட்கிறான். (ப.50)

உடன் வருவேன் என்ற கண்ணகியைக் கோவிலன் வீட்டிலேயே விட்டுவிட்டுப் புறப்படுகிறான். கண்ணகி தன் பத்தினித் தன்மையால் அங்கிருந்த குத்துக்கல்லை மாதகியாக்குகிறாள். அதைக் கண்ட கோவிலன் மாதகி யின் வரவிற்கான காரணத்தை வினவுகிறான். உடன் வருகின்ற கண்ணகியின் கால்கள் கொப்பளிப்பது அவன் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆனால் கல்லைப் பார்த்து,

"காலுமிகக் கடுக்க குறுவடியும் கொப்பளிக்க
வெயிலிலும் காளலிலும் மெல்லியரே வந்ததென்ன"
(ப-55)

என்று வினவுகிறான்.

வெட்டுண்ட கோவிலன் கண்ணகியால் மீண்டும் உயிர்பெறுகிறான். எழுந்தவனோ,

"மாதகியாள் வந்தாலே வாடியென் மடிமேலே
கண்ணகியாள் வந்தாலே கடக்கப்போய் நில்லு
மென்றான". (ப-96)

கோவலனின் இக்கூற்றால் அவன் கண்ணகியைவிட மாதகியை விரும்புகின்ற தன்மை தெரியவருகிறது.

கண்ணகிக்காக மாங்கனி பறித்தபோதும், நல்லதை மாதகிக்கு வைத்து விடுகிறான். இதனால் வெகுண்ட கண்ணகி, "நீர் செத்தும் மறக்கவில்லை தேன்மொழியாள் தன்னாசை" என்று கூறி, கோவிலனின் உச்சிச் சரட்டை உருவிவிட கோவிலன் இரண்டாய் விழுகிறான். (ப.99) மீனாட்சியிடமும், கண்ணகியிடமும் வரம் வேண்டும் போதும்,

"செத்தாலுங் கயிலாயஞ் சிவன்பாதஞ்சேரவேண்டும்
உமையவளே மாதகியை உடன்கட்டை சேர்க்க
வேண்டும்
நாயகி மாதகிக்கும் நற்பதவி கொடுக்கவேண்டும்
எனக்கு மவளுக்கும் இன்பமோட்சந் தரவேண்டும்"
(ப-81)

என்று மாதகியை நினைந்து உருகுகிறான் கோவிலன்.

மாதகியும் கண்ணகியும்:

ஆடவர்களின் புறத்தொழுக்கத்தினால் பெண்கள் தாம் வேதனைப்படுகின்றனர். ஆடவர்களைத் திருத்த முடியா நிலையில், புறத்தொழுக்கத்தைக் கடிய முடியா நிலையில் பாதிக்கப்பட்ட பெண்கள், ஒருவருக்கொருவர் பழித்துக் கூறுவதை இலக்கியங்கள படம்பிடித்துக் காட்டுகின்றன, இந்தச் சகக்கழுத்திப் போராட்டம் இந்த நூலிலும் இடம்பெறுகின்றது. கோவிலனைப்பழிக்க முடியாத நிலையில் இந்த இரு பெண்களும் ஒருவரை யொருவர் பழித்துக் கொள்கின்றனர். குலமகளிர் பரத்தையரிடம் சென்ற ஆடவரை வெறுத்தல் பத்தினித் தன்மைக்கு இழுக்கு என நினைததனர். அதே நேரத்தில் பரத்தையை வெறுக்கும் போக்கும் இருந்துள்ளது.

தன் வாழ்க்கையைப் பறித்துக் கொண்டாளே என்று கண்ணகி மாதகியை வெறுக்கிறாள். கோவிலன் இறந்ததைக் கண்டு புலம்புகிறாள் கண்ணகி,

"அஞ்சுவயது தனி லறியாதநாளையிலே
மாலையிட்டு முலைவைத்து மாதகியாள் வீடுவந்தீர்
கூறையிட்டு முலைவைத்து கூத்தியிடம் போய்
சேர்ந்தீர்
பன்னிரண்டு தன்வருஷம் பரஸ்தீரி வீடிருந்தீர்
அவளிடத்திருந்தது போ மெல்லி டத்திருப்பீரானால்
கொள்ளிவைக்கப் பிள்ளையுண்டு குடிமுடைக்க
மைந்தனுண்டு
ஆழிவிடுங் கையாலே அரிசியிட மைந்தனுண்டாம்
உற்றுரிமை செய்வதற்குப் புத்திரனு மீன்றெடுப்பீர்
சேம்புக்கிரைத்தீர செல்வாழை வைத்தீர
சேம்புக்கிரைத்தீர விருதாவாய் நின்றீர
எருக்குக்கு நீர் சொரிந்து எத்தனைப்பூ பூத்தாலும்
மருக்கொழுந்து போல் வருமோ மாதகியாள மீநசமெல்
லாம் (ப94)-

என்று அழுகிறாள் கண்ணகி.

இதிலிருந்து சகக்கழுத்திப் (சக்களத்திப்) போராட்டத்தையும் தாய்தகப்பனுக்கு மக்கள் செய்யும் சடங்கு முறைகளையும் அறிய முடிகிறது. சிலம்பில் மாதவிக்கு மணிமேகலை பிறக்கிறாள். ஆனால் இந்நூலில் மாதகிக்குக் குழந்தைப் பேற்றையே வைக்கவில்லை. கோவிலன் இறந்தபோது மகன் செய்யும் கடமையை மனைவி கண்ணகியே செய்கிறாள்.

கண்ணகியால் உயிர்மீண்ட கோவிலன் கண்ணகியாள் வந்தாலே கடக்கப்போய் நில்லுமென்கிறான். இதைக் கேட்ட கண்ணகி கொதித்தெழுந்து.

"ஆனையை நான் கொண்டேன் ஏறினாள் மாதகியும்
ஆனை கொண்டாள் வந்தேனே ஏறினவளேன்
வருவாள்
தோட்டம் கொண்டாள் வந்தேனே பூ முடித்தாள்
ஏன் வருவாள்.

கிண்ணியும் நான் கொண்டேன் கீறியுண்டாள்
மாதகியாள்
கிண்ணி கொண்டாள் வந்தேன் கீறியுண்டாள் என்
வருவாள்
பட்டையும் நான் கொண்டேன் பாவித்தாள்
மாதகியாள்
பட்டுகொண்டாள் வந்தேனே பாவித்தாளேன்
வருவாள்
மாலையிட்டாள் இங்கே வந்தேன் மாதகியாளேன்
வருவாள்
கொண்டவள் நானிங் கேவந்தேன் கூத்தியாளேன்
வருவாள்"

என்று கண்ணகி தனக்கும் மாதகிக்கும் உள்ள வேறு பாட்டை ஏக்கத்துடனும் கோபத்துடனும் கூறுகிறாள். (ப–96)

இதிலிருந்து அக்காலச் சமுதாய நிலையை அறிய முடிகிறது.

அக்காலப் பரத்தமைச் சமுதாயம்:

ஆடவரிடம் பொருள் இருக்கும்வரை அன்பாக வாழ்வதும், இல்லாதபோது துரத்தி விடுவதும், கொடுமை செய்வதும் பரத்தையர்களின் செயலாக இருந்து வந்துள்ளது. மாதகி கோவிலனிடம் அன்பு உடைய வளாயினும் தன் தாய் வசந்த மாலையின் அறிவுரைப்படி கோவிலனைக் கொடுமை செய்பவளாகவே இருக்கிறாள்.

கோவிலன் கண்ணகியின் சாவுக்குச் செல்ல வேண்டும் என்றவுடன் மாதகி,

"என்னிலுந் தானழகோ ஏதுங்கெட்ட கண்ணகியாள்
கூத்தியார் நானிருக்க கொண்டவள்மே லாசையென்ன
வேசியவள் நானிருக்க விரல் கொடுத்தாளாசையென்ன"
(ப–33)

என்று தனக்கும் கண்ணகிக்கும் இருக்கும் வேற்று மையைச் சுட்டுகிறாள். கண்ணகியை "ஏதுங்கெட்ட" என்று பழிக்கிறாள். அதனால் "மறந்துவிடு மாலையிட்டாள் தன்னாசை" என்று கோவிலனுக்கு எடுத்துக் கூறுகிறாள். கோவிலனின் மனத்தை மாற்றத் தங்கள் அன்பு வாழ்வை எடுத்துக் காட்டுகிறாள். (ப.31) தங்கள் அன்பு வாழ்வைக் கூறியவள் பிரிவைப் பற்றியும் கூறுகிறாள்.

> "விட்டதோ வுன்னாசை விளாம்பழத்து ஓடதுபோல்
> வேண்டுமென்ற நாளையிலே மேப்பங் கசப்பானேன்
> சட்டிசுட்ட தென்றுகையை விட்டு நீர் போறேனென்
> றீர் (ப–33)

என்று முத்துப் போல் கண்ணீரை முகமெல்லாம் சோர விடுகிறாள்.

கோவிலன் பிரிந்துவிடாதபடி சூழ்ச்சி செய்யும் மாதகி தன்னைப் போலொரு பதுமை செய்து விட்டுப் போகச் சொல்கிறாள். (34) பதுமை கிடைத்த பிறகும் அது பேசிய பிறகே "போகலாம்" என்கிறாள். (38) கடைசியில் பதுமை ஆங்காரக் கோபம் கொண்டு ஜவுளிப் பிரம்பெடுத்து அடித்த பிறகே கோவிலன் ஊருக்குப் போக விடையளிக்கிறாள். அதன் பிறகும் கோவிலனிட முள்ள பாக்குப்பை, கரண்டகம், கணையாழி, உருமாலை, அங்கவஸ்திரம், தாடி மீசை, குடுமி, அரை ஞாண், நீர்ச்சீலை, ஆகிய அனைத்தையும் கேட்டு வாங்கிக் கொள்கிறாள். இங்குத்தான் பரத்தமைச் சமுதாயத்தின் இழிவு புலப்படுத்தப்படுகிறது. அவளுக்குத் தேவை யில்லாத தாடி, மீசை, குடுமி, நீர்ச்சீலை ஆகியவற்றையும் கேட்டு வாங்கிக்கொண்டு 'திருப்பதி திம்மனைப் போல்' விடுகிறாள் என்னும்போது பரத்தையர்களின் பொருளா சையும் ஆடவர்களின் மோக நிலையும் வெளிப்படுகிறது. கோவிலனைச் சிங்கமுகக் கேணியிலே நீர் கொண்டு வரச் சொல்கிறாள் மாதகி. அறுபது பாகமெனும் ஆழமுள்ள

கிணற்றுக்கு முப்பது பாகக் கயிறு கொடுக்கிறாள். கயிறு எட்டாததால் கோவிலன் கிணற்றில் இறங்கி நீர்மொள்ள மாதகி அவனைத் தள்ளி விடுகிறாள். சிங்கமுகக் கேணியிலே கோவிலனார் திட்டென்று விழுந்துவிட பாறையை அதன் மேல் மூடிவிட்டு வந்து விடுகிறாள். (42)

வைகை பெருக்கெடுத்தோடும்போது ஆற்றிலே மூழ்கச் சொல்கிறாள். ஆரணங்கு மாதகியாள் எண்ணெய் தேய்த்து ஊனாங்கொடி கொண்டுவந்து உத்தமனைக் கட்டி ஆற்றிலிறங்க வேண்டுமென்கிறாள்.

மாதகி கோவிலனைக் கொல்லப் பலவாறு முயன்ற போதும், கோவிலன் கோபம் கொண்டதாகவோ வெறுப் புற்றதாகவோ கூறப்படவில்லை. கண்ணகியின் பத்தினித் தன்மையால் தான் உயிர் தப்பிப் பிழைப்பதால் அவளிடம் அன்பு கொள்வதாகவோ, நன்றியுணர்ச்சி மேலிடுவ தாகவோ, தெரியவில்லை. இவ்வளவு கொடுஞ் செயல் களையும் மாதகி தானாகச் செய்வதாகக் காட்டாமல், தன் தாயின் தூண்டுதலாலேயே செய்வதாகக் காட்டப் படுவது குறிக்கத் தக்கது.

மாதகியின் பத்தினித் தன்மை:

இந்நூலில் கண்ணகியின் பத்தினித் தன்மை பலவிடங் களில் புலப்படுகிறது. அவளை ஆய்ச்சியும் புகழ் கிறாள். பத்தினியான கண்ணகியே புகழும் பத்தினியா கிறாள் மாதகி. கோவிலன் இறந்தவுடன்,

> "என்சக்களத்தி மாதகியே சங்கதியும் நீகேளு
> உன்கடனுக் காகவேதான் உத்தமனார் கோவிலனார்
> செஞ்சிலம்பு விற்கவந்து செட்டியார்தாம் மடிந்தார்"
> (ப.108)

என்று ஓலை எழுதிக் கொடுக்கிறாள். ஓலையைப் படித்த மாதகி துக்கம் பெருகி, துரிதமாய் உள் நுழைந்து செட்டியார் கொடுத்த பொருளத்தனையையும் நான்கு பங்காக்குகிறாள்,

"கோவிலுக் கோர்பங்கு குநக்கள் தமக் கோர்பங்கு
தாயாருக் கோர்பங்கு தருமத்துக்கோர் பங்கு" (ப 108)

வைக்கிறாள். [இப்பகுதியால் அக்காலத்தில் தானம் செய்கின்ற முறையும் சமய ஆதிக்கமும் வெளிப்படுகிறது.

"கோடாலிமுடி போட்டு மஞ்சள் துகிலுடுத்தி
தம்பூல மும்பழமுந் தன்மடியில் கட்டிக்கொண்டு
அழுதுகொண்டு வாறாளே அணிமதுரை வீதியிலே"
(ப.109)

என்று அவளுடைய துயரமும், செய்யவேண்டிய சடங்கு முறையும் புலப்படுத்தப்படுகிறது. அவள் மாரடித்துக் கொண்டு அழுகிறாள். கண்ணகி மாதகியிடம் "நான் செட்டியாருடன் மாளுகிறேன்; எங்களிருவரையும் எடுத்து தகனம் செய்" என்கிறாள். அப்போது மாதகி,

"பலன்கண்டாள் நானிருக்க பத்தினியாள் மாளுவானேன்
சுகங்கண்டாள் நானிருக்க தோகையாள்நீ மாளுவானேன்
நீஎன்னசுகமறிவா யென்றன் தமக்கையரே
நான்கூட மாளுகிறேன் நாயகனார் தம்முடனே!" (ப.109)

என்று கூறி அவளுடைய சம்மதத்தைவேண்டுகின்றாள். மாதகியே விரும்பி உடன்கட்டை யேறுகிறாள். வாழை வெட்டி மகாகாஷ்டம் அடுக்கி, கோவிலரைக் கழுவிக் குளிப்பாட்டுகின்றனர். கால்கட்டு கட்டுகின்றனர். கோவிலனுடன் மாதகி படுக்கிறாள். இவள் கைமேல் அவர் சிரசும், அவர் கைமேல் இவள் சிரசும் கட்டியணைத்துக் கொண்டு கட்டழகி படுக்கிறாள். கண்ணகியைக் கொள்ளி வைக்கமாதகிசெயகூறுகிறாள்கொள்ளிக்கு பிள்ளையானேன் குடமுடைக்க மைந்தனானேன்' என்று கண்ணகி சொல்லி வாய்க்கரிசி அள்ளியிடுகிறாள். சொக்கரை நினைத்துக் கொள்ளி வைக்கிறாள். உடனே பற்றி எரிகிறது. மாதகி என்று கண்ணகி மூன்று முறை அழைக்க 'ஏனம்மா' எனச் சொல்லி மாதகியும் குரல் கொடுக்கிறாள். அதனால்

மகிழ்கிறாள் கண்ணகி. இரு நடைய அஸ்திகளை எடுக்கையில் மாதகி மடியில வைத்திருந்த புஷ்பம் முதலானவை வைத்தபடியிருக்கக் கண்டு, கண்ணகி 'மாதகி பத்தினியாள்' என்று மனதில் நினைக்கிறாள். காசி நதியில் அஸ்திகளை விடுகிறாள். கோவிலர் அஸ்தி யெல்லாம் மல்லிகைப் புஷ்பமாயிற்று. மாதகியாள் அஸ்தி யெல்லாம் பூத்தொடுக்க நாராயிற்று. நாரும் நல்ல பூவும் நீரில் மிதக்கிறது. கண்ணகி இதைக் கண்டும் மனத்தில் மாதகி பத்தினியாள் என்று நினைக்கிறாள். கோவிலனுக்குக் கொடுமைகளைச் செய்த மாதகியின் கற்புடைமையும், நெஞ்சுரமும நம்மை வியக்கச் செய்கிறது. அக்காலத்தில் வழக்கத்திலிருந்த உடன்கட்டை ஏறும் முறையும் தெரியவருகிறது. கோவிலனின் இறப்பைக் கேட்டவுடனே தனது சொத்து முழுவதையும் தானம் செய்தமை அவளின் பொருள் பற்றின்மையைத் தெரிவிக்கிறது. இளங்கோவடிகளின் மாதவி தன் கலைகளையும், இளமையையும் துறந்து துறவு பூண, இவளோ உயிரையே துறக்கிறாள்.

இளங்கோவின் மாதவி நம் உள்ளத்தில் நிலைத்து நிற்பதைப் போல் புகழ்ந்தியின் மாதகியும் நம் உள்ளத்தில் நிலைத்து விடுகிறாள்.

இந்நூலிலிருந்து அறியலாகும் சில செய்திகள் :

சாதிமுறை:

இந்நூலாசிரியரின் காலத்தில் சாதி முறைகள் பலவாக இருந்தன. செட்டியார் குலத்தில் பிறந்த கோவிலனின் அழகைப் பற்றிக் கூறவந்த ஆசிரியர்,

பார்த்தால் முதலியென்பார் பார்ப்பாரச்
சாதியென்பார்
கண்டால் முதலியென்பார் கன்னடியச்
சாதியென்பார் (ப.8)

என்று கூறுகிறார். கோவிலனின் திருமணத்தில் சேணியன் கூறைகொண்டு வருவதும், சாலியன் சால் கொண்டு வருவதும் தெரியவருகிறது (ப.16) மாதகியைப் பற்றிச் சொல்லும்போது பரத்தையர் குலத்தைப் பற்றி விவரமாகக் கூறப்படுகிறது. செட்டியார்களின் தில்லுமுல்லுத் தனம், கண்ணகிக்குத் திருமணம் முடிக்கும்போது அறிவிக்கப்படுகிறது. (ப.13) யார் வீட்டில் கண்ணகியை அடைக்கலம் வைக்கலாம் என்று ஆய்கின்ற முறையில் ஒவ்வொரு குலத்தினரின் வாழ்க்கை முறையும் தெரிவிக்கப் படுகிறது. (ப.61–62) பார்ப்பானும் சாணானும் எதிர் வருதலும் கணக்கன் கட்டோலை பிடித்து வருதலும் அபசகுனம் என நினைத்தனர். (ப 61) கண்ணகி, தன் மாங்கல்யம் கேட்ட கள்ளர்களை ஒட்டர்களாகவும் உப்புரவர்களாகவும் மாறும்படி சபிக்கிறாள். (ப.59)

சமயம் :

சிலப்பதிகாரத்தில் சமயப் பொதுமை காணப்படுகிறது. இந்நூலில் சைவ சமயத்தைத் தவிர வேறு எந்தச் சமயக் குறிப்பும் இல்லை.

காளிதேவி பழி வாங்குவதற்காகவே இவ்வுலகில் அவதாரம் எடுத்து, கோவிலனின் மனைவியாகிறாள். கடைசியில் காளிதேவி திருவொற்றியூருக்கு வந்திருந்து வட்டபுரியம்மனாக இருந்து பலிபெறுகின்ற வரைக்கும் கதை தொடர்கிறது. சொக்கநாதர் கண்ணகி, கோவிலன், மாதகி ஆகியோரின் உயிரைப் பொற்சிமிழில் அடைத்து வைத்து, திறப்பதும் மூடுவதுமாக இருக்கிறார். (ப.7)

கோவிலனைக் காண்பவர்களும் அவனைச் சொக்கன் என்றே நினைத்துப் போற்றுகின்றனர். கோவிலனைப் பஞ்சாயத்தார்கள் (ப.35) வேதவாத்தியார் (ப.72) ஆய்ச்சி (ப.62) பாண்டியர்கள் (75) ஆகிய அனைவரும் (5) சொக்கர் என்றே நினைத்து வழிபடுகின்றனர். கோவிலன் தினந்தோறும் உணவு உண்பதற்கு முன்

சொக்கரை வழிபடுகின்ற முறை கூறப்படுகிறது.(ப.35-36) கடைசியில் இறைவி அங்கயற்கண்ணி நேராக வந்து ஆறுதல் கூறி, முன்பிறவி உண்மை கூறி வரங்களையும் கொடுத்துச் செல்கிறாள். (ப.80-81) இந்நூலாசிரியர். கோவிலனைச் சிறந்த சிவபக்தனாகவே படைத்துள்ளார்.

பிள்ளையார் வழிபாடும் அக்காலத்தில் இருந்துள்ளது. கோவிலன் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று வேண்டுகிறான். (ப.62)

கண்ணகியும் பிள்ளையாரிடம் ஆடை கேட்கிறாள். பின்னால் கோவிலன் இறக்கப்போகும் சேதி முழுவதையும் அவர் கூறுகிறார். (ப. 60-61) பிள்ளையார் வழிபாடு சங்க காலத்தில் கிடையாது. பல்லவர் காலத்தில்தான் அது அறிமுகப்படுத்தப்பட்டது. பிற்கால நூலான இந்நூலில் அவ்வழிபாடு காணப்படுகிறது. காளி கோயிலில் திருவிளக்கு ஏற்றுவதாக வேண்டும் முறையும் காணப்படுகிறது.(ப.5)

நம்பிக்கைகள் :-

கனவு காணல் :

சிலப்பதிகாரத்திலும் கனவுகாணல் கூறப்படுகிறது. அதன்மூலம் பின்னால் நிகழப் போவதை அறிவுறுத்தும் திறன் காணப்படுகிறது. இந்நூலில் கண்ணகி மட்டும் சொப்பனம் காண்கிறாள். மரப்பெட்டி உடைதல், பூ வாடுதல், ஏற்றிய திருவிளக்கு இருள் அடைதல், அரைத்த சந்தனம் உலர்ந்து உதிர்தல், தேங்காய் உடைதல், செம்பு நீர் குறைதல், மதுரை இடிதல், மதிலிடிதல், உள்ளூர்த்தேர் உடைதல், அயலூர்த்தேர் அச்சு முறிதல், கொண்டை கலைதல், கொண்டைப்பூ வாடுதல், மாலை கசங்குதல், மணவாளன் மாளக் காணுதல்,மங்கிலியம் கடகம் கழன்று விழுதல், முத்துத் தாழ்வடமும் கொலுசும் உதிர்தல், வயிரமணி அறுதல்,உட்கழுத்து வயிரமணி உருவி விழுதல், மஞ்சள் அழிதல், தாலி பறிபோதல், மாலை பறிபோதல்,

காளியம்மன் கோயிலில் கண்டதுண்டம் செய்தல், குன்ல வெட்டி சாய்தல் போல் கோவிலர் சாய்தல், பாதியுடலாக வெட்டிப் பாறைமேல் சாய்தல், இரத்தம் சொரிதல், சிறுகுடலும் பெருங்குடலும் சிதறி விழுதல் முதலிய பின்னால் நடக்கப்போகும் காட்சிகளை முன்னதாகவே கனவு காண்கிறாள் கண்ணகி.(ப.83-84) சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவிலன், பாண்டியமாதேவி ஆசிய மூவரும் கனவு காண இங்குக் கண்ணகி மட்டும் கனவு காண்பது கனவு நிலை ஆதிக்கம் இழந்தமையையே சுட்டுகிறது.

துற்குறி காணுதல்:

சிலப்பதிகாரத்திலும் சகுனம் காணும் முறைஉள்ளது. கோவலன் இமிலேறு எதிர்ந்து வருதல் தீச்சகுனம் என அறியாதவனாகச் செல்கிறான். ஆயர்பாடியிலும் மாதரி பல தீச்சகுனங்களைக் காண்கிறான். இந்நூலிலும் சகுனங்கள் "துற்குறி" என்ற சொல்லாட்சியுடன் காணப் படுகின்றன. கோவிலன் சிலம்பு விற்க ஆய்ச்சியின் வீட்டைவிட்டு வெளியே வரும்போது பல துற்குறிகளைக் காண்கிறான்.

பல்லி ஒலித்தல், ஆந்தை சீறுதல், வாசற்படி தலையில் தட்டுதல், தலைப்பாகை தவறி விழுதல், குட்டியிட்ட கரும்பூனை குறுக்காக வருதல், எரிமூட்டை, மொட்டைத் தலை எதிரில் வருதல், ஒற்றைப் பார்ப்பான் எதிரில் வருதல், வாழக்குமரி நெருப்பெடுத்து வருதல், எண்ணெய்க் குடம் எதிரில் வருதல், ஏணி, சாணான் எதிரில் வருதல், கட்டோலை பிடித்துக் கணக்கன் வருதல், ஆண், பெண் கோட்டான்கள் அலறி அழுதல் (ப-66) ஆகிய தீச் சகுனங்கள் கூறப்படுகின்றன.

கோவிலன் இறந்தபோது பல துற்குறிகள் தோன் றியதால் அஞ்சிய பாண்டியர்கள் கதவடைத்து விடு கின்றனர். கல்மழை பெய்தல், கோட்டையிடிதல், கொடி

மரம் சாய்தல், எட்டு சுத்து கோட்டைகளும் இடிதல், சுழுதைகள் ஓலமிட்டுக் கதறியழுதல் (ப-82) என இவ்வாறு தீக்குறிகள் சுட்டப்படுகின்றன.

தெய்வம் கண்ணுக்குந் தெரியாமல் பேசுவதை அசரீரி என்று குறிப்பர். மனிதர் பேசுவதை விரிச்சி என்று கூறுவர். இந்நூலில் ஒருத்தி அசரீரியாகப்புலம்புவது குறிக்கப்படுகிறது இச்சொல் காலவோட்டத்தில் மாற்றம் பெறுவதைக் காட்டுகிறது.

கோவலன் சிலம்பு விற்கச் சென்றபோது,

"மதுரைக்குப் போகாதே மாண்டு மடியாதே
தென்மதுரை போகாதே செத்து மடியாதே"

என்று சொல்லிப் பறைச்சி அழுகிறாள். அவள் ஒற்றைக் குரலிட்டு ஓங்கி அழுகிறாள். (ப–66)

ஆருடம் கேட்டல்:

மதுரைக்குப் போகும் வழியில் கள்ள விநாயகரைக் கண்ணகி ஆருடம் கேட்கிறாள். அவர் முதலில் வாய் திறக்க மறுக்கிறார். கண்ணகி மடியில் கைபோட அவர் கோவிலனுக்கு நிகழப்போவது அனைத்தையும்கூறுகிறார். (ப-60-67)

சோதிடம் பார்த்தல்:

குழந்தை பிறந்தவுடன் பஞ்சாங்கம் பார்க்கும் வழக்கம் இருந்துள்ளது. கண்ணகி பிறந்தவுடன் பார்ப்பான் சோதிடத்தை ஆராய்ந்து,

"மாலையிட்டுப் பெணபிறந்தால் மதுரை தனக்
காகாது
கொடியிட்டுப் பெண்பிறந்தால் கொற்ற
வருக்காகாது
வாய்விட் டழுதாலே வடமதுரை வெந்துவிடும்
தேம்பியழுதாலே தென்மதுரை வெந்துவிடும்."

(ப.8-9)

என்று கூறுகிறான் 'இக்குழந்தையை மரப்பெட்டியில் வைத்து வைகையில் தள்ளுங்கள்' என்கிறான்.

மாதகி பிறக்கும் போதும் சோதிடரே அழைத்துச் சாஸ்திரம் பார்க்கின்றனர்.

இதிலிருந்து அவளுடைய பிறப்பு முதல் இறப்பு வரை அறியமுடிகிறது. (ப–11) இவற்றால் அக்கால மக்கள் சோதிடத்தில் கொண்டிருந்த நம்பிக்கை புலப்படுகிறது.

வசியம் செய்தல்:

வசந்தமாலை தன்மகளான மாதகியிடம் இளநீரில் ஊற வைத்த இன்பக் களிபபாக்கும் தங்கச் சிமிழதனில் மையும் கொடுக்கிறாள். வெற்றிலையில் மைதடவிக் கொடுத்தால் அதை உண்பவர் பின்தொடர்ந்து வருவர் என்று கூறப்படுகிறது. இதனால்தான் மாதகியைத் தொடர்ந்து கோவிலன் வருவதாகவும அவன் அடிமையாக வாழ்வதாகவும் காட்டப்படுகிறது. (ப 20-2) சிலப்பதிகார ஆசிரியர், கலையுளளம் காரணமாக, கோவலன் மாதவிக் கும் கட்டுண்டதாகக் கூறுவர். இந்நூலாசிரியரோ மாதகி கொடுத்த வசிய மருந்தனால் கோவிலன் அடிமையான தாகக் கூறுகிறார். அக்காலப் பரத்தையர்கள் ஆடவர் களை மயக்கக் கையாண்ட முறையும் இதில் தெளிவுறுத்தப்படுகிறது.

பழக்க வழக்கங்கள்:

இலக்கியம் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டு வதால் வரலாற்றுக் கருவூலமாகவும் இருக்கிறது. இடைக் கால மக்களின் பழக்க வழக்கங்களை நாம் இந்நூலி லிருந்து அறிய முடிகிறது.

திருமணத்திற்குமுன மணமகன் வீட்டார் மணமகளுக் குப் பரிசம் போடும் வழக்கம் இருந்துள்ளது. மாநாய்கன் பலரிடம் கண்ணைக்காகப் பரிசம வாங்கியதிலிருந்து அக் கால மோசடி நிலையும புலப்படுத்தப்படுகிறது. எவரே

னும் குற்றம் செய்தால் பஞ்சாயத்தாரிடம் நியாயம் கேட்கும் முறையும் இருந்துள்ளது. ஆனால் அவர்கள் குற்றத்தை விசாரிக்காமல் திருவுளச்சீட்டுப் போட்டுப் பார்க்கும் நிலை, நீதிமுறை மாறியதைக் காட்டுகிறது. (ப 13-15)

திருமணவீட்டில் பந்தலை அலங்கரித்தலை முதன்மையாக நினைத்துள்ளனர். சீக்குக் கழித்தல், தாலி தரித்தல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல், சால், கரகம், சந்திரனைத் தொழுதல், வந்தவர்களுக்கு விருந்து படைத்தல், சதிர் வைத்தல் முதலிய திருமணச் சடங்குகள் காட்டப்படுகின்றன. (ப 14-15)

அக்காலத்தில் குழந்தைத் திருமணம்தான் வழக்கத்தில் இருந்துள்ளது. கண்ணகியின் கையில் மாங்கனியைக் கொடுத்து தாலி கட்டினர் என்று கூறப்பட்டுள்ளது. (ப 15–16)

கடிதம் எழுதும் முறை இந்நூலில் காட்டப்படுகிறது

"ஈழப்பனையோலை இருபக்கந்தான் வாரி
தாளிப்பனையோலை தலைப்பக்கங்காம்பரிந்து
கணபதிமுன்பாகக் காம்பிட்டுக் கொண்டாரே" (ப-16)

என்பதிலிருந்து கடிதம் எழுதிய முறைமை தெரியவருகிறது.

"அவிசாரின்னு யானைமேல் ஏறிவரலாம், திருடின்னு தெருவில் வரக்கூடாது" என்பது ஒரு பழமொழி. இப் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக நிகழ்ச்சி உள்ளது. மாதகி கோவிலன் திருமணத்தன்று சதிருக்கு ஆடச் செல்லும்போது ஆனையின் மேலேறிச்செல்கிறாள் (ப–17) கோவிலன் திருடன் என்று தெருவில் செல்லும்போது கொல்லப்படுகிறான். இதிலிருந்து அக்காலத்தில் பரத்தமை இயற்கையாகக் கருதப்பட்டமையும், திருடுதல் பெருங்குற்றமாகக் கருதப்பட்டமையும் தெரியவருகிறது.

இதனையே, 'கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று, வெள்வேற் கொற்றங் காண்" என்று கண்ணகியிடம் பாண்டியன் கூறுவதாகச் சிலப்பதிகாரம் அறிவிக்கிறது.

சத்தியம் செய்தல்

தாம்பூலம் தருதல் உறுதிமொழி அளிப்பதாகக் காட்டப்படுகிறது. (18) பரத்தையர்கள் முந்தானை போட்டுத் தாண்டுதல் சத்தியம் செய்யும் முறையாகக் கருதப்படுகிறது. (ப. 21)

ஒருவனைக் குற்றவாளி அல்ல என்று நிறுவ, சில முறைகள் கையாளப்பட்டுள்ளன. ஒரு புதுக்குடத்தில் பாம்பையும் அரிசியையும் போட்டு, குற்றவாளி கையை விட்டு அரிசியை எடுக்கச் சொல்லுதல், வேங்கையின் கூண்டில் குற்றவாளியை விடுதல், கொப்பரையின் கொதிக்கும் எண்ணெயில் தள்ளி விடுதல், மழுவைக் காய்ச்சிக் கையில் பிடித்தல், மார்பளவு பள்ளம் வெட்டி அதில் குற்றவாளியை உட்கார வைத்து சாலெடுத்து மூடி விட்டு யானையைக் கொண்டு இடறச் செய்தல் ஆகிய முறைகள் கையாளப் பட்டுள்ளன. (ப.77—79) சத்தியம் செய்யும் முறையில் குற்றத்தை நிறுவுகின்ற முறை ஆய்தற் குரியது. உண்மை வழி நிற்பவனுக்குத் தெய்வம் துணை நிற்கும் என்ற நம்பிக்கையைத்தான் இது அறிவுறுத்து கிறது. சத்தியம் செய்யும் முறை அற்புதங்களின் நிகழ்ச்சி யாகவே காட்டப்படுகிறது. இறப்பு நிச்சயமாதலால் குற்றவாளிகள் குற்றம் செய்ய அஞ்சுவர் என்பதால் இம்முறை கையாளப் பட்டிருக்கலாம். குற்றம் செய்த தற்குப்பின் கொடுக்கப்படும் தண்டனை குற்றம் நிரூபிக்க முன்னதாகவே பயன்படுகிறது.

உணவு சாப்பிடுவதற்கு முன் இறைவனைப் பூசை செய்தல், உண்ட பிறகு தாம்பூலம் தரித்தல், மூக்குப் பொடி போடுதல் ஆகிய பழக்கங்கள் தெரிய வருகின்றன.

பல்வேறு சுவையான உணவுகளில் விருப்பம் கொண்டு உண்டமை தெரிய வருகிறது. (ப. 22) தாதியர்கள் சமைத்ததைக் கோவிலன் உண்ணாமல் மனைவியைச் சமைக்கச் சொல்கிறான். (ப. 60) பொற்கொல்லன் வீட்டில் சைவனான கோவிலன் உண்ணாமல் தானே சமைத்து உண்கிறான். (ப. 75) வேதவாத்தி வீட்டில் பால் பழம் உண்கிறான். (ப. 73) இம்முறை அக்காலத்துச் சாதியின் அடிப்படையில் எழுந்த ஏற்றத் தாழ்வுகளை விளக்குகிறது.

கணவன் இறந்தபோது மனைவியையும் உடன் கட்டை ஏற்றும் வழக்கம் இருந்துள்ளது. கொள்ளி வைக்கவும், குடம் உடைக்கவும், அரிசியிடவும், புத்திரனை விரும்பினர். அஸ்தியைக் காசிநதியில் கரைத்தல் வழக்கமாக இருந்தது (ப. 34) உயிர் போகும் தறுவாயில் இறந்தவரின் வாயில் துளசி தீர்த்தம் விட்டால் உயிர் அமைதி பெறும் என்ற நம்பிக்கை இருந்தது. (ப. 29)

குல மகளிர் வெளியில் வாராமை

கோவலனுடன் கண்ணகி மதுரைக்குச் சென்றதை யறிந்த மாதவி, 'குலப்பிறப்பாட்டியோ டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது' என்று வருந்தி மடல் எழுதுகிறாள். இந்நிலை இந்நூல் எழுந்த காலத்தும் இருந்துள்ளது. ஆடவர்கள் மட்டுமே வெளியில் சென்று தொழில் புரிந்தமையும் மகளிர் இல்லாள், மனைவி என்ற பெயருக்கேற்ப இல்லிலிருந்து கடமையாற்றலையுமே சிறப்பாக நினைத்தனர். கோவலனுடன் கண்ணகி உடன் வருவதாகக் கூறியபோது அவன் மறுத்துவிடுகிறான்.

"பேரஞ்செய்யப் போமிடத்தே பெண்ணாள் வரலாமோ
வீட்டிலே உன்னைவிட்டு மெல்லியலே வந்தேனே
வீட்டைவிட்டு ஏன்வந்தாய் மெல்லி யிளங் கொடியே
என்னொத்த வர்த்தகர்க ளென்னை மதியார்கள்
சரியொத்த வர்த்தகர்கள் சற்று மதியார்கள்," (ப. 56)

என்பதிலிருந்து அக்கால மகளிர் வெளியில் செல்லாமை தெரிய வருகிறது.

இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்

இந்நூல் பரத்தையரின் இழிவையும், குலமகளிரின் பெருமையையும் காட்டவே எழுந்தது எனலாம். பரத்தையர்கள் ஆடவனின் பொருளையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தமையும், குலமகளிர் அவனுடைய உயிரையே பெரிதாக மதித்தமையும் புலப்படுத்தப்படுகிறது. மாதகி தாயின் பேச்சைக்கேட்டு, கோவிலனின் பொருளைப் பறித்துக் கொண்டு கொலை செய்பவளாகவும் கண்ணகி கோவிலனுடன் வாழாதவளாயினும் அவனுயிரைக் காப்பாற்றுபவளாகவும் படைச்சப்பட்டுள்ளனர். பரத்தமையால் அலைக்கழிக்கப்படும்போதுதான் கணவன் தன் மனைவியின் பத்தினித் தன்மையை நினைக்கிறான். பொற்பதுமை உண்டாதல் (ப. 36-37) பதுமை பேசுதல் (ப. 38) பதுமை மாதவியை அடித்தல் (ப. 38) பதுமை இறத்தல் (ப 39) சிங்கமுகக் கிணற்றிலிருந்து கோவிலன் எழுதல் (ப. 45) ஆற்றிலிருந்து கோவிலன் எழுதல் (ப, 47) கண்ணகி ஆற்றில் நீரை மொள்ளும்போது கங்கை திரண்டு குடத்துள் புகுதல் (ப 51) கண்ணகியிடம் சிலம்பு பின் விளைவைக் கூறல் (ப. 53-54) குத்துக் கல்லை மாதகியாக்குதல் (ப. 55-56) சிலம்பைத்தான் திருடவில்லையென்று கோவிலன் சத்தியம் செய்யும்போது கண்ணகியை நினைக்க, குடத்தில் இருந்த பாம்பு கடிக்காமல் விலகி நிற்றல் (ப. 78) வேங்கை கூண்டில் கோவிலனைத் தள்ளியபோது அது அவனைக்கொல்லாமல் பாராதது போல் பார்த்து நிற்றல் (ப. 78) நெய்க் கொப்பரையில் தள்ளும்போது அவன் பிழைத்தெழுதல் (ப. 78) காய்ந்த மழுவை ஏந்திச் சொக்கர் கோயிலில் வாசற்படி மீது வைத்த போது மழுவும் உருகி வாசற்படியாதல் (ப. 78) யானையைக் கோவிலன்மீது ஏவுகையில் யானை அவனைக் கொல்லாமல் மத்தகத்தில்

வைத்துக் கூத்தாடுதல் (ப. 79) இடைச்சியின் பானையில் நாலு விதமாக்குதல் (ப. 95-80)பொய் சொன்ன இடைச்சி வீடு வெந்து சாம்பலாதல் (ப. 90) மறுபடியும் வீடு உண்டாதல் (ப. 90) ஆற்று மணலை எடுத்துச் சோறு ஆக்குதல் (ப. 92) உதிரி இலைகளை ஒன்றாகச் சேர்த்தல் (ப. 92) ஆற்று மணலை எடுத்துக் கடலையும் அவலையும் செய்தல் (ப 93) கொக்கு, மான், கட்டெறும்பு சிற்றெறும்பு ஆகியவற்றைக் கோவிலன் பிணத்தைக் காக்குமாறு கூறுதல் (ப. 99) இறந்த கோவிலன் எழுந்து பேசுதல் (95-96) கண்ணகி தன்னுடைய சிலம்பை வர வழைத்தல் (ப. 101-102) கோவிலிங்கியின் சிலம்பையும் சபையில் கொண்டு வருமாறு செய்தல் (ப. 103) வல, இட மார்புகளைத் திருகி விட்டெறிதல் (ப. 107-108) முதலியன, இந்நூலில் வரும் இயற்கை இறந்த நிகழ்ச்சி களாகும்.

இதனைப் பாடிய புலவர் தான் வழிபட்ட மதுரைச் சொக்கரின் பெருமையையும் அறிந்து அவரை வழிபட வேண்டும் என்று விரும்பியதால், சொக்கரின் ஆற்றலை யும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளின் மூலம் விளக்கு கிறார். மதுரைச் சொக்கநாதரின் அறுபத்தி நான்கு திருவிளையாடல்களும் காரணமாக அமையலாம். வாணியன், வாணிச்சி, காளி ஆகியோரின் உயிர்களைத் தங்கச் சிமிழில் அடைத்தல், வேண்டியபோது திறந்து விடுதல், உயிரை எலுமிச்சங்கனியாக்கித் தருதல், எலுமிச்சங்கனி உண்டதால் கரு உண்டாதல் (ப. 8) சொக்கரை வேண்டியவுடன் கண்ணகியின் சிலம்பிற்குத் திருகாணி உண்டாதல் (ப. 53) அங்கயற்கண்ணி கோவிலன்முன் வந்து பழம் பிறப்பு கூறுதல் (ப. 80) சொக்கலிங்கர் கண்ணகிக்குத் தங்க ஊசியும், சரடும், பொற் பிரம்பும் பூசுநீறும் அந்தரத்தில் விடுதல் (ப. 95) கண்ணகி சொக்கரை மனத்தில் நினைத்து வாழைத் தண்டெடுத்துக் கொள்ளி வைக்க, அது தீப்பற்றுதல்

(ப. 110) கண்ணகி மூன்று முறை குரல் கொடுக்க மாதகி பதில் குரல் கொடுத்தல் (ப. 110) சொக்கலிங்கர் கண்ணகி காஞ்சிக்குச் செல்லும் வழியில் குரல் கொடுத்தல்; (ப. 111) கண்ணகி திருவொற்றியூருக்கு வரும்போது தியாகரும் தேவியும் சொக்கட்டானாடுதல், (ப. 111) கண்ணகி தாகம் தணிந்து எழுந்தபோது சொக்கர் கல்லால் மூடுதல் (ப. 112) கண்ணகி வேறு பல இடங்களில் எழ முயன்றும் சொக்கர் கல்லால் மூடி விடுதல் (ப. 112) போன்ற பல அற்புதங்கள்—இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்—சொக்கரின் பெருமையை உணர்த்தப் படைக்கப் பட்டவை ஆகும்.

வேறு பல இயற்கையிறந்த நிகழ்ச்சிகளும் இந்நூலில் படைக்கப்பட்டுள்ளன. மாதகியுடன் பொன்னுருவி மாலை பிறத்தல் (ப. 18) அது கோவலனைத் தேடிச் சென்று அவன் கழுத்தில் விழுந்து கழற்ற முடியாமலிருத்தல் (ப. 19) சிலம்பைப் பார்த்தவுடன் இராஜ கன்னிகை கோவிலிங்கிக்கு அமுதம் சொரிதல் (ப. 72) கோவிலன் இறந்த பிறகு கண்ணகி சாப்பிடத் தொடங்கினால் சாதம் புழுவாக மாறுதல் (ப. 89) செம்பில் வைத்த பால் இரத்தமும் சீழுமாதல் (ப. 90) கண்ணகி காளி அவதாரம் எடுத்துக்குடலைக் கிழித்தல் (ப. 105-106) எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் கதைக்கு விறுவிறுப்பூட்டவும் அமைந்துள்ளன. இவ்வாறு காளியின் அவதார மகிமையைக் காட்டவும், சொக்கரின் பெருமையைக் கூறவும், கண்ணகியின் பத்தினித் தன்மையை நிலைநாட்டவும் பல இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பேச்சு வழக்கு

இந்நூலில் பேச்சு வழக்கு அதிகமாயுள்ளது. ராவு கவுண்டு கல், கனமாய் அடித்தல், எந்தனுட சோமன் பொட்டெனப் பார்த்தல், நிமை, அடைவாக, நேமகம் பாரி, சீக்குகழித்தல், சதுர் வைத்தல், அட்சணமே,

கைநாட்டு, செந்திரிகம், ரேவுத்துறை, முனிசீப்பு, குதளை, சீவன் தொடுக்கிடுதல், எதாஸ்தானம், விருதாவாய், கூத்தியார், பஞ்சாயத்தார், குபுகுபுவென்று, ஜாடுது, குத்துக்கு உழக்குரத்தம் கொப்புளிக்குது, கொப்பெனவே, தீம்பு வரும், சிலுகில்லாமல், பரஸ்திரீ, கொட்டை, குந்த வைத்தல், ஒன்றுக்குப் போதல், மார்க்கண்டம், ஆகிய பேச்சு வழக்குகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

சீல் வைத்தல், கைநாட்டு, முன்சீப்பு, பஞ்சாயத்தார், தோத்தரித்தல் போன்ற சொற்கள் கலந்து வருவதால் ஐரோப்பியர் வரவிற்குப் பின் இந்நூல் தோன்றியது என்று கருத இடம் தருகிறது.

நாட்டுப் பாடல் அமைப்பு :

'கோவலன் கதை' சிறந்த நாட்டுப்பாடல் அமைப்பில் அமைந்துள்ளது. இவ்வாசிரியர் கதையைத் தொடங்கும் போதே,

> ''பட்டணமாம் பட்டணமாம் காவிரிப்பூம்
> பட்டணமாம்
> கஞ்சி கொண்டு மதவடைக்கும் காவிரிப்பூம்
> பட்டணமாம்
> சோறு கொண்டு மதவடைக்கும் சொர்ணகிரிப்
> பட்டணமாம் ப. (4)

என்று தொடங்கியுள்ளார்.

நாட்டுப்புறப் பாடலில் ஒரு கருத்தை விளக்கப் பல அடிகளால் கூறுவர். கோவிலன் ஆய்ச்சியிடம் கண்ண கையை அடைக்கலம் வைக்கும் போது,

> ''பெற்ற பிள்ளை போலாகப் பேணி வளர்த்திடுவாய்
> கண்ணகியை யுன்மகள்போல் காத்து வளர்த்திடுவாய்
> பத்தினியை உன்மகள்போல் பார்த்தே யிருந்திடுவாய்

உத்தமியை உன்மகள் போல் உகந்துநீ காத்திடுவாய்
ஆயனைக் காத்ததுபோல் ஆய்ச்சிநீ காத்திடுவாய்
மாயனைக் காத்ததுபோல் மாதாவேநீ காத்திடுவாய்
(ப 64–65)

என்று ஒரு கருத்தைப் பல முறையாகக் கூறும் முறை காணப்படுகிறது.

நாட்டுப் பாடல்களில் கண் எதிரில் காட்டுவது போன்று சில நிகழ்ச்சிகளைக் கூறுவதுண்டு. கள்ளர்களின் வருகையை,

"அந்நேர வேளையிலே அவ்வனத்தில் வாழுகின்ற
எதிர்காட்டுக் கள்ளரவ ரேழுபேர் வாறார்கள்
வெட்டிக் களைபறிக்கும் குலசீவடர்கள் வாறார்கள்
குத்திக் களைபறிக்கும் குலவேடர்கள் வாறார்கள்
(ப 57)

என்னும் பகுதி படம் பார்ப்பதுபோல் அமைந்துள்ளது.

எதிரில் இருப்பவர்களுக்குப் புரிவதற்காகச் சில நேரங்களில் அவர்களே கேள்வி கேட்டு, பதில் சொல்லும் முறையும் காணப்படுகிறது.

"அப்போது பாண்டியர்கள் ஆணழகரேது சொல்வார்?
காற்சிலம்பு கொண்டுபோன களளனை வெட்டி
வைத்தோம்
செஞ்சிலம்பு கொண்டுபோன திருடனை வெட்டி
வைத்தோம்
காற்சிலம்பைத் தானழைத்தால் கள்ளன்பழி தாறோம்
செஞ்சிலம்பை வரவழைத்தால் திருடன்பழி
தாறோம்" (ப. 101)

என்னும் பகுதி வினாவும் விடையுமாகக் காணப்படுகிறது.

ஒரே தொடரை பல இடங்களில் கூறும் முறையும் இதில் காணப்படுகிறது. 'முத்துப்போல் சாதம வடித்தாளே, தாளிப்பனையோலை தலைப்பக்கம் காம்பரிந்து

சில்லென்ற காடுவிட்டுச் செடியும் வனம் தாண்டி, புட்ப மதை குபுகுபுவென்று சொரிந்து, கஞ்சி கொண்டு மத கடைக்கும் காவிரிப் பூம் நன்னாடு, பத்தாத பத்தினியே பழுதுபடா ரத்தினமே, இன்பமுள்ள, ஆணழகர், போன்ற பல தொடர்கள் பல முறை வந்துள்ளன.

நாட்டுப் பாடல்கள் திருமணத்தில் பந்தல் போடு தலைச் சிறப்பாகக் கூறியுள்ளன.

"முத்தாலே கால் நிறுத்தி முக்காதம் பந்தலிட்டார்
பவளத்தால் கால்நிறுத்தி பதின்காதம் பந்தலிட்டார்
வெற்றிலை யாலேயவர் வெகுதூரம் பந்தலிட்டார்
எங்கு மலங்கரித்தார் எத்திசையும நீர்தெளித்தார்
கண்ணாடி சல்லிகட்டிக் கவரிமான் குச்சுவிட்டார்"
(ப. 14)

என்று மணப்பந்தல் அலங்காரம் கூறப்படுகிறது.

நாட்டுப் பாடல்களில் சோறு சமைத்தல் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. (ப. 22, 51)

"பானைதனைக் கழுவி பனிநீருலை பார்த்து
முத்துப்போல் சாதம் வடித்தாளே மொய்குழலும்
நந்தியெனும் பூசனிக்காய் நாலுவிதங் கறிசமைத்தாள்
வாழைக்காய் பொரியலிட்டாள் வழுதலங்காய்த்தான்
குழம்பு
பீர்க்கங்காய் பொரியலிட்டாள் புடலங்காய்த்தான்
குழம்பு
பத்துவிதக் கறியும் பதினெட்டுப் பச்சடியும்
புத்துருக்கு நல்ல நெய்யும் பொன்போல் சிறுபருப்பும்
அத்தி விறகொடித்து தித்திப்பால் காய்ச்சி
இத்தனையுஞ் செய்துவைத்தாள் ஏலக்கருங் குழலாள்"
என்று கண்ணகி சோறு சமைத்த விதம் கூறப்படுகிறது.
(ப. 51)

ஒப்பாரி இல்லாத நாட்டுப் பாடலே இல்லை எனலாம். இந்நூலில் ஆய்ச்சி, மாதகி, கண்ணகி, ஆகியோரின் புலம்பல் காணப்படுகிறது.

"பாறைக்கிரை யென்றுசொல்லிப் பட்டணத்தில்
நீர் வளர்ந்தீர்
கற்பாறைக் கென்றுசொல்லிக் கட்டழகர் நீர்
வளர்ந்தீர்
பாறை யுறுத்தலையோ பட்டணத்தார் கோவிலரே
கற்பாறை யுறுத்தலையோ கட்டழகா வுந்தமக்கு
மாதகியாள் பஞ்சணையில் மயிரிருந்து வுறுத்து
தென்று
கட்டிவைத்துத் தானடித்தீர் கனவணிக வர்த்தகரே
பொற்பாறை யுறுத்தலையோ புண்ணியரே
யுந்தமக்கு
நீர்மாள வயதலவே மாண்டிருக்க நாளலவே
சின்ன வயதிலே செந்திறக்க நாளலவே" (ப. 94)

என்று கண்ணகியின் அழுகை கூறப்படுகிறது.

நிறைவுரை : பின்னால் தோன்றிய கதைப்பாடல்களிலும் நாடகங்களிலும் சிலப்பதிகாரத்தின் தாக்கத்தை விட, "கோவிலன் கதை"யின் தாக்கமே அதிகமாக இருக்கிறது. அதனால் பலரின் உளளங் கவர்ந்த நூலாக உள்ளது. பாமரருக்கும் புரியும்வண்ணம் அமைந்திருத்தல், கூத்தாக நடிக்கப் படுதல், இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் பலவாக அமைந்து மக்களின் உள்ளத்தைக் கவர்தல், காளியே கண்ணகியாகத் தோன்றுதல், கண்ணகியின் மூலம் கற்புடைமையைப் பெண்களுக்கு அறிவுறுத்தல், மாதகியின் மூலம் பரத்தையர்களின் புன்மையை ஆடவர்களுக்கு அறிவுறுத்தல், கோவலனின் வாயிலாகப்பரத்தமை இழிவை ஆடவர்களுக்கு அறிவுறுத்தல் ஆகியவையும் இந்நூல் மக்களின் உள்ளங் கவர்ந்தமைக்குக் காரணமாகக் கூறலாம்.

□ □ □

கண்ணகி வழக்குரை (ஈழம்)

நூல் அறிமுகம்

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத் தினைத் தழுவி ஈழ நாட்டில், தமிழில்எழுந்த இடைக்காலக் காப்பியம் கண்ணகி வழக்குரை என்பதாகும். இது கண்ணகி கோவலன் [வரலாற்றுக்கு இந்து சமய மணத்தை ஊட்டிக் காட்டுகிறது. கற்புடைய மகளிரும் கடவுளர் எனப் போற்றி வழிபடத் தக்கவர் என்பது சிலப்பதிகாரம் காட்டும் மூன்று பெரிய உண்மைகளுள் ஒன்றாகும். அந்த உண்மையை மக்கள் வாழ்வில் நுழைத்து, நடைமுறையில் அதனை நிலைப்படுத்த, எழுந்த நூல் கண்ணகி வழக்குரை எனக் கூறலாம்.

ஈழத்தில், தமிழர் வாழும் வடபுலத்திலும் பிற இடங் களிலும் கண்ணகி அம்மன் கோயில்கள் இருக்கின்றன. எனினும் மட்டக் களப்பில் எல்லாஊர்களிலுமே கண்ணகி கோயில்கள் காணப்படுகின்றன. இக்கோயில்களில் கண்ணகியின் புகழ் உரைப்பனவாய்க் குளுத்திப் பாடல் கள், கொம்பு விளையாட்டுப் பாடல்கள், வசந்தன் கவிகள், உடுகுச் சிந்து முதலியன இன்றும் வழங்கி வருகின்றன. இவையாவற்றிலும் முக்கியமானதாகவும் புகழ் பெற்றதாகவும் "கண்ணகி வழக்குரை" இருக்கிறது. கண்ணகி அம்மன் கோயில்களில் படிக்கப்படும் இப் பழைய காவியம் கண்ணகி உரைத்த வழக்கின் பெயரால் "கண்ணகி வழக்குரை" எனவும் "கண்ணகி வழக்குரைக் காவியம்" எனவும் மட்டக்களப்பில் வழங்கப்படுகிறது. கண்ணகி கூறிய வழக்கினைச் சிறப்பாக எடுத்துக்காட்டி,

மதுரையைத் தீக்கிரையாக்கியதோடு இந்நூல் முற்றுப் பெறுகிறது.

நூல் அமைப்பு முறை

இளங்கோவடிகள், தம் நூலுக்குக் கண்ணகி தேவியின் காற்சிலம்பே பெயராகச் சிலப்பதிகாரமென அமைத்தார். கண்ணகியின் பெயராலோ, விலைமதிப் பறியாத அவளின் சிலம்பின் பெயராலோ அன்றி அத்தேவியார் பாண்டிய மன்னனுடன் தொடுத்த வழக்கின் பெயராலே இக் கண்ணகி வழக்குரை எழுந்துள்ளது.

இக்காவியமானது, வரம்பெறு காதை, கப்பல் வைத்த காதை, கடலோட்டுக் காதை, கலியாணக்காதை, மாதவி அரங்கேற்றுக் காதை, பொன்னுக்கு மறிப்புக் காதை, வழிநடைக் காதை, அடைக்கலக் காதை, கொலைக்களக் காதை, வழக்குரைத்த காதை, குளிர்ச்சிக் காதை எனப் பதினோரு காதைகளாகப் பகுக்கப் பட்டுள்ளது.

சில காதைகளில் உட்பிரிவுகளாகக் கதைகள் அமைந் துள்ளன. வரம் பெறு காதையில் கோவலனார் பிறந்த கதையும், அம்மன் பிறந்த கதையும் இடம் பெறுகின்றன. கப்பல் வைத்த காதையில் மீகாமன் கதை, தூரியோட்டுக் கப்பல் வைத்தல் முதலியன இடம் பெறுகின்றன. கடலோட்டுக்காதையில், வெடியரசன் போர், நீலகேசி புலம்பல், வீரநாராணன் கதை, மணி வாங்கின கதை, விளங்குதேவன் போர் போன்ற பகுதிகள் காணப்படு கின்றன. பொன்னுக்கு மறிப்புக் காதையில், பொன்னுக்கு மறிப்பு, இரங்கிய காதல் என்னும் இருபகுதிகள் அடங்கு கின்றன. வழி நடைக் காதையில் வயந்தமாலை தூது, வழிநடை என்னும் இரு பகுதிகள் காணப்படுகின்றன. கொலைக்களக் காதையில் சிலம்பு கூறல், கொலைக்களக் கதை, அம்மன் கனாக்கண்ட கதை, உயிர் மீட்புக் கதை என்னும் நான்கு பகுதிகள் காணப்படுகின்றன. குளிர்ச்சிக்

காதையில் குளிர்ச்சி, வழக்குரைக் காவியம் என்னும் இரு பகுதிகள் அடங்கியுள்ளன.

கண்ணகி வழக்குரையில் உடுகுச்சிந்துப் பாடல்களும் அம்மன் குளுத்திப் பாடல்களும் பிற்சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பகுதி கதையுடன் தொடர் புடையதல்ல. உடுகுச்சிந்தில் ஊர்களைப் பற்றியும், அந்த அம்மனின் அருட்சிறப்புப் பற்றியும் கூறப்படுகிறது. இப்பாடல்கள் கண்ணகி அம்மன் சடங்குக் காலங்களிற் பூசையின் போது படிக்கப்படுகின்றன. சடங்கின் இறுதிநாளில் நடப்பதும், கண்ணகி விழாவின் முக்கிய நிகழ்ச்சியாய் அமைவதும் ஆகிய அம்மன் குளுத்தி நிகழ்ச்சியில்(மனக்குளிர்ச்சி)பாடப்பெறுகின்றன,கண்ணகி அம்மன் குளுத்திப் பாடல்கள். இவ்வாறான முதன்மைக் காரணங்கள் பற்றி உடுகுச்சிந்து என்று வழங்கப்பெறுவ தான ஊர்ச்சுற்றுக் காவியம், கண்ணகி அம்மன் குளுத்தி என்ற இரண்டு பாடற்பகுதிகளும் பிற்சேர்க்கையாக அமைக்கப்படுகின்றன.

இவ்வழக்குரை நூல், தாழிசைகளைப் பெரும்பாலும் கொண்டு, அந்தாதித் தொடையமைந்து, இடையிடையே விருத்தச் செய்யுள்களும் கலந்து வெண்பாவில் முடிந்து, பொதுமக்கள் படிப்பதற்கேற்ற இனிய நடை பயின்று செல்கிறது. கலி விருத்தங்களை 'நடை' என்றும் 'நடை சாரி' என்றும் மற்றைய சந்த விருத்தங்களைச் 'சிந்து', என்றும் இந்நூல் கூறுகிறது. நூற் கதையினைத்தொடர்ச் சியாக எடுத்துரைப்பனவான வரந்தருகாதை முதல் வழக் குரைத்த காதை முடியவுள்ள பகுதிகளின் செய்யுட் டொகை 2159 ஆகும். சிலர் இவை மட்டுமே வழக்குரைச் செய்யுள்கள் என்று கொள்ளுகின்றனர். குளிர்ச்சிக் காதை, வழக்குரைக் காவியம் இரண்டிலும் முறையே 49, 18 பாடல்கள் உள்ளன. அவற்றையும் சேர்க்க இந் நூற் செய்யுள் 2226 ஆகும்.

வாய்மொழிக் காப்பியம்

'கண்ணகியின் கதையைப் பாட்டாகவும் பொது மக்கள் கேட்டு மகிழ்ந்தார்கள். வாய்மொழிக் காப்பிய மாக இது வளர்ந்திருக்க வேண்டும். அதற்குரிய இலக் கணங்களை இக்காதைப் பாடற்பகுதிகளில் காணலாம்' என்று திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் இந்நூலைப்பற்றி முன்னுரையில் கூறுகிறார்.

வழிநூல்

கண்ணகி வழக்குரைத்த செய்தியைக் கிராமப்புறத் துப் பொது மக்களிடையே நன்கு பரப்புதற்கேற்ற நடை யிலே பாடவேண்டுமென்னும் சிறந்த நோக்குடன் ஆசிரியர் இந்நூலை இயற்றியுள்ளார் இக்கருத்து

"தென்மலயத் திருமுனிவன் செய்தவருந் தமிழ்தன்னை
முன்னைவிதிப் பயனாலே மொழிந்தனர்மூ தறிவாளர்
அன்னதுகொண் டேயிளங்கோ அடிகள்மொழி காதையது
தன்னிலொன் றைறப்புகல்வேன் தண்டமி ழோர்க்கே
சரணம்"

என இந்நூலில் மாதவி அரங்கேற்றுக்காதை 7-ஆம் செய்யுளால் புலப்படுத்தப்படுகிறது. எனவே சிலப்பதி காரத்தின் வழிநூலாக இக்காவியம் அமைகிறது.

முறைவைப்பு

காதைத் தொடக்கந்தோறும் காப்பு, தற்சிறப்புப் பாயிரம், அவையடக்கம், நூலாசிரியரைப் பற்றிய தற் கூற்றுகள் என்பனவற்றுள், முழுவதுமோ ஒரு சிலவோ கூறப்படும் முறையமைப்பு காணப்படுகிறது.

மாதவி அரங்கேற்றுக் காதையில், "குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பில்லை, அதுபோல் என் கவிதையை யும் இவ்வுலகோர் ஏற்பார்" (8) என்று நம்பிக்கையுடன் ஆசிரியர் கூறுகிறார். தன் காவியத்தில்,

"செய்கதைக்குச் சொற்குற்றம் சிறிதுபொருட் குற்றமலை
ஐயமிலா யாப்புக்குற்றம் அலங்காரக் குற்றநெறி" (10)

இருந்தாலும் பிழைபொறுத்தல் பெரியோர் கடன் என்று கூறுகிறார் ஆசிரியர். மதிக்குக் கறுப்பு இருத்தல் குற்றமில்லை; தாமரையில் முள்ளிருத்தல் குற்றமில்லை, கடல் உவர்ப்படுதல் குற்றமில்லை; இத்தண்டமிழ் காவியத்தில் குற்றம் இருத்தல் குற்றமில்லை (13) என்று தன்குற்றத்தை நெறிப்படுத்துகிறார் ஆசிரியர். ஏனெனில்,

"தழுவுகின்ற திணையிரண்டும்தண்ணளிசேர் பாலைந்தும்
எழுவழுவும் வேற்றுமைகள் எட்டுடனே தொகையாறும்
விழுமியுள்ள காலங்கள் மூன்றுடனே வரவு சொல்ல
முழுதுலகில் வல்லனென்பான் முழுமோடன்
தானல்லவோ" (14)

என்று தன் கருத்தை உறுதிப்படுத்துகிறார், இந்நூலாசிரியர். அப்படியாரேனும் குற்றம் சொன்னால் நான் அவர்களுக்கு நாகத்திற்குக் கருடனாக, காகத்தைக் கடிந்தெறியும் வல்லூறாக, பசுவைக் கொல்லும் புலியாக, கோபமுள்ள வேழத்திற்கு எதிரான சிங்கமாக மாறுவேன் (16), 'சங்கமென்னும் இயலிசையாம் சம்மட்டியாற் சாடுவேன்' (17) "கவிமாலையெனும் கயிற்றாலே வரிந்து கட்டி விழ வைப்பேன்" (18) என இவ்வாறு ஆசிரியர் தண்டிப்பதாகக் கூறும் முறை புதுமையுடையது.

நூலாசிரியர்

நூலறிவும் உலகியலறிவும் கைவந்த இந்நூலாசிரியர் யாரென்பது தெரியவில்லை. எனினும் இவர் மட்டக்களப்பின் இருவகை வழக்கினையும் நன்குணர்ந்த ஒரு நூலாசிரியராகக் காணப்படுகிறார். நூலின் இடையில் காங்கேயன் என்னும் பெயர் காணப்படுவது கொண்டு, இவர் அடியார்க்கு 'நல்லார் காலத்தில் வாழ்ந்தவராகக் கொள்ளலாம்.

இந்நூலாசிரியர் இலங்கையைச் சுற்றி இருந்த கடற்கரைத் துறைமுகங்கள், ஈழ நாட்டிற் பெருமரச் சோலைகளிலிருந்த இடங்கள், இரத்தினச் சுரங்கங்களில் உட்புகுவதற்கான படிவகைகள், மட்டக்களப்பு நாட்டுக் கூத்து மரபுகள் முதலியன பற்றி நன்கு அறிந்தவராகக் காணப்படுகிறார். அவருடைய இந்த இலக்கியப் படைப்பில் மட்டக்களப்பில் வழங்கும் பேச்சுத் தமிழ்ச்சொற்கள், சமூக வழக்கங்கள், மாந்திரீக முறைகள் முதலியன இடம் பெறுகின்றன. அவர் திருக்கோணமலை (வரம்பெறு, கடவுள் வணக்கம், 3 தூரியோட்டு 148) கதிர்காமம் (கலியாணக்காதை 2) ஆகிய தலங்களில் பேரன்புடையவர். மொண்ணையப்பர் என்று சிவபெருமானுக்குரிய பெயரொன்று இராமநாதபுரப் பகுதியில் வழக்கத்தில் இருந்திருக்கிறது. "மொண்ணையப்பர் சீர் பாதம் முடிவிலும் நான் மறவேனே' (வரம்பெறு கடவுள் வணக்கம் 2) என்று இவ்வாசிரியர் பாடியிருக்கிறார். மொண்ணையப்பர் என்ற பெயருடையோர் மட்டக்களப்பிலும் அதை ஒட்டிய எப்பகுதியிலும் இல்லை. இராமநாதபுரத்திலிருந்து பலர் 14-ஆம் நூற்றாண்டில் ஈழத்துக்கு வந்து அதன் வடக்கு கிழக்குக் கரையோரங்களிற் குடியேறினர் என்பது வரலாறு.

இத்தகைய காரணங்களால் இராமநாதபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு ஈழத்திலே குடியேறி வாழ்ந்த ஒரு புலவர் இந்நூலைச் செய்திருத்தல் கூடும் என்ற கருத்து வழங்கப்படுகிறது. அவர் பெயர் காங்கேசன் என்றும் சொல்லப்படுகிறது.

காதைகளின் வழி ஆய்வு

இந்நூல் தமிழகத்திற்குப்புதியதாதலால் காதைகளின் வழி இந்நூல் அறிமுகப்படுத்தப்படுகிறது. தமிழக ஈழக் காவியங்களுக்கு இடையில் காணப்படுகின்ற ஒற்றுமை வேற்றுமைக் கூறுகள் புலப்படுத்தப்படுகின்றன. ஈழக்

காவியத்தில் பெரும் பிரிவு காதையென்றும் சிறு பிரிவு கதையென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இக்கட்டுரையில் பிறைக்குறியில் குறிக்கப்படும் எண்கள் சிலப்பதிகார மாயின் அடிகளையும் வழக்குரை காதையாயின் பாடல் களையும் குறிக்கும்.)

கோவலன் பிறப்பு

சிலப்பதிகாரம் தலைவன் பெயரைக் கோவலன்என்று சுட்டிச் செல்ல, ஈழக்கதை கோவலனார் என்று உயர்வுப் பன்மை விகுதி சேர்த்துக் கூறுகிறது. இவன் பிறப்பு 'கோவலனார் பிறந்த கதை", என்று கண்ணகி வழக்குரை யில் கூறப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் முதன் முதலாக மங்கல வாழ்த்துக் காதையில் கோவலன் அறிமுகப்படுத்தப்படுகிறான். அந்த அறிமுகத்திலேயே அவன் பிறப்பும் வளர்ப்பும் பண்பு நலனும், குடிச்சிறப்பும் கூறப்பட்டு விடுகிறது.

"வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பான்
இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டாண் டகலையான்,
அவனுந்தான்
மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினா ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்குங்
காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலனென்
பான்மன்னோ (மங்கல வாழ்த்து 33-39)

என்று கோவலனை அறிமுகப்படுத்தும் இளங்கோவடிகள் கோவலனின் குடிச்சிறப்பு அகலை அழகு, கண்ணகிக் கேற்றவனாகும் தகுதி, தந்தையின் சிறப்பு ஆகிய அனைத் தையும் குறிப்பிட்டு விடுகிறார்.

கண்ணகி வழக்குரையின் வரம்பெறு காதையில் கோவலன் பிறந்த கதை 42 பாடல்களிற் கூறப்படுகிறது.

(1-42) மாசாத்துவானும் அவன் மனைவியும் செய்த அருந் தவத்தால் கோவலனார் பிறக்கிறார். கோவலனாரின் தாய் கருவுறுவதற்கு முன் சிவபெருமானிடம் பொன் னெழுத்தாணி ஒன்று பெற்றதாகக் கனவு காண்கிறாள். வணிகர் குல முறைப்படி தொட்டிலிலிட்டு மறையவரிடம் பாடம் கற்பித்துப் பதினாறு வயது உற்றபோது கோவலனாருக்கும் கண்ணகிக்கும் திருமணம் செய்வ தென்று முடிவு செய்கின்றனர்.

கண்ணகி பிறப்பு

சிலம்பில் 'கண்ணகி' என்று கூறப்படும் தலைவியின் பெயர் வழக்குரையில் 'கண்ணகை' என்று சுட்டப்படு கிறது. அவள் பிறப்பை 'அம்மன் பிறந்த கதை' என்றே வழக்குரை சுட்டுகிறது. இளங்கோவடிகள் கண்ணகியை மானிடப் பெண்ணாகக் காட்டித் தெய்வமாக்குவர். 'கண்ணகி வழக்குரை' ஆசிரியர், கண்ணகைக்குத்தெய்வீ கத்தை ஏற்றிக் காட்டுவர். அதனால் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளும் புராணக் கதைகளும் கலந்து விடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. சிலப்பதிகாரம் கண்ணகியைப் பிறப்பிலிருந்து விவரிக்காமல் திருமண மேடையில் அறிமுகப்படுத்துகிறது. கோவலனின் அறிமுகத்திற்கு முன்னால் கண்ணகிக்குச் சிறப்பளிக்கும் வகையில், அவளை அறிமுகப்படுத்துகிறார் அடிகள்.

"போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னில்
மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
சுகைவான் கொடியன்னாள் சீராறாண்டகலையாள்
அவளுந்தான்
போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாள்
மன்னோ
(மங்கல வாழ்த்து 22-29)

என்று கோவலனைப் போலவே கண்ணகியை அறிமுகப் படுத்துகிறார் ஆசிரியர் இளங்கோவடிகள்.

'கண்ணகி வழக்குரை' நூலில் பதிகம் போன்று அமைக்கப்பட்டுள்ள வழக்குரைக் காவியத்தில் மதுரேசன் நெற்றிக்கண்ணை மறைக்கவும், சடையினோடு பத்து மணிமுடி தரித்து மதுரை எரிக்கவும் இறையவனால் அருளப்பெற்று அம்மன் கண்ணகையாய்ப் பாண்டிய நாட்டில் தோன்றுவதாகக் காட்டப்படுகிறது. ஆனால் அம்மன் பிறந்த கதையில் பண்புநலன் வாய்ந்த பரராச முனிவரின் மகளைச் (பெயர் காணப்பெறவில்லை) சிவ பெருமான் பூவுலகோர் போற்றும் தெய்வக் கற்பினளாக உலகிடைப் பிறந்து சிறப்புப பெற்றுவர வரங்கொடுத் திருக்கிறார். அக்காலத்துப் பாண்டியன் சிவனைப் போன்றே நெற்றிக்கண்ணுடன் விளங்கிச் சிறப்பு பெற்றி ருந்தான். இதனைப் பொறுக்காத உமை, பாண்டியனின் நெற்றிக்கண் நீங்கச் சிவனை வேண்டினாள். பாண்டிய நாட்டில் புதுமைக்கனி வடிவத்தில் பரராச முனிவரின் மகள் தோன்றினாள். அதனைப் பறிக்க முயன்றோரின் கைக்கு எட்டாமல், பாண்டியனின் கைக்கு அது அகப்படு கிறது. கையில் விழுந்த கனி அக்கினி உருண்டையாகச் சுட்டது. அதனால் கனியை நிலத்தில் விட்டு அந்தக் கையால், நெற்றி வியர்வையைத் துடைக்க நெற்றிக்கண் மறைந்தது. நெருப்புருண்டை பின் கனியானது. மன்னவன் கனியைத் தேவியிடம் கொடுக்க அவள் அதைப் பொற்குடத்தில் இட்டனள். மூன்றாம் நாள் அக்கனி குழந்தையாயிருந்தது. மன்னன் வியப்பும் பயமும் சூழச் சோதிடரை அழைத்துக் கேட்டான்.

துன்று புகழ்க் கூடல் மன்னா
தொல் வினைகள் வரும் இதனால் (அம்மன் பிறந்த காதை 77)

என்றுரைத்த வேதியர்களின் கூற்றின்படி ஒரு பேழையுள் வைத்துக் கடலுள் இட்டான் மன்னவன். காவிரிப்பூம் பட்டினத்துள் உலவிக் கொண்டிருந்த மானாகன் பேழையைக் கண்டு குழந்தையை எடுத்து வளர்த்தான். இது இளங்கோவடிகள் கூறாத செய்தி.

அம்மன் பிறந்த கதை 55 பாடல்களில் விவரிக்கப்படுகிறது. கண்ணகையின் பிறப்பிற்குக் கொடுக்கப்பட்ட முதன்மை வளர்ப்பிற்குக் கொடுக்கப்படவில்லை. மாதவியை அறிமுகப்படுத்துகின்ற அளவிற்குக் கூட கண்ணகையை அறிமுகப்படுத்தவில்லை. ஒரு வேளை அம்மனாகக் கண்ணகையைக் கருதியதால் அவளின் அழகையோ வளர்ப்பையோ கூறுதல் அவசியமில்லை என்று ஆசிரியர் நினைத்திருக்கலாம். மாதவி அவர் உள்ளத்தில் இடம் பெற்ற அளவிற்குக் கண்ணகை இடம் பெறவில்லை. மாதவிக்குச் சாதகம் கணித்த ஆசிரியர் கோவலனார் கண்ணகையார் பிறந்த நாள் நேரத்தைக் கூடக் குறிப்பிடாதது குறிக்கத்தக்கது. கோவலனார் கண்ணகையார் பிறப்பு தெய்வீகத்தோடு இணைக்கப் பட்டதால் பிறப்பிற்கும் சாதகத்திற்கும் முதலிடம் கொடுக்கவில்லை போலும்.

மாணிக்கப்பரல் கதை

கண்ணகி பாண்டியனை வெற்றி பெறுவதற்குத் துணையாக இருந்தது மாணிக்கச் சிலம்புதான். இதைச் சிலப்பதிகாரம்,

> "என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே, எனத்
> தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி
> யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே"
>
> (வழக்குரை. 67–69)

என இரு சிலம்புகளுக்குமிடையே இருந்த வேற்றுமை புலப்படுத்தப்படுகிறது. இந்த ஒரு இடத்தில் மட்டும்தான் இளங்கோ சிலம்புப் பரலைக் காட்டுகிறார்.

கோவலன் கண்ணகி வாழ்வில், சிலம்பு முக்கிய இடத்தை வகிப்பதால் 'சிலப்பதிகாரம்' என்று தன் காவியத்திற்குப் பெயரிட்டார் இளங்கோவடிகள். ஈழக் காவியத்தில், கண்ணகி வழக்குரையை மையமாக வைத்துக் 'கண்ணகி வழக்குரை' என்று பெயரிடப்பட் டுள்ளது. இளங்கோவடிகள் கண்ணகியின் வழக்கிற்குப் பிறகும் வஞ்சிக் காண்டத்தை எடுத்துரைக்க ஈழ, ஆசிரியர் கண்ணகி வழக்கோடு காவியத்தையே முடித்துவிடுகிறார். சிலப்பதிகாரம் வஞ்சிமாநகர் வரையும் நம்மைஅழைத்துச் சென்று அங்கே 'வானவர் போற்ற வானகம் புகுந்த' பத்தினித் தெய்வத்தை நமக்குக் காட்டுகிறது. அங்கு நிகழ்ந்த திருவிழாக் காட்சியில் நம்மை மெய்மறந்து நிற்கச் செய்கிறது. மதுரை மாநகரில் நடந்த அமங்கலக் காட்சியை மங்கலக் காட்சியாக மாற்றியமைக்கிறது. சேர, சோழ நாடுகளுக்கிடையே சமய, சமூக, கலாச்சாரத் தொடர்பினை நிலைநாட்டி வைக்கிறது. வழக்குரை நூலோ மதுரைமாநகருடன் கதையை முடித்துக் கொள் கிறது. வஞ்சிக்காண்டப் பகுதியே இல்லை. சேர நாட் டுடன் தொடர்பும் இல்லை.

'கண்ணகி வழக்குரையில்' சிலம்பின் உள்ளீடு பரலுக்குக் கொடுத்துள்ள முதன்மை வேறு எதற்கும் கொடுத்ததாகத் தெரியவில்லை. மாணிக்கப் பரலுக் காகவே, கப்பல் வைத்த காதையில் மீகாமன் கதை, தூரியோட்டு, கப்பல் வைத்தல் என்னும் பகுதிகளையும் கடலோட்டுக் காதையில் வெடியரசன் போர், வீர நாரணன் கதை, மணிவாங்கின கதை, விளங்குதேவன் போர் முதலிய பகுதிகளும் ஒதுக்கப்படுகின்றன. 2226 பாடல்களில் 643 பாடல்கள் (21 சதவீதம்) சிலம்பின் பரலுக்காக ஒதுக்கப்படுகின்றன. இந்நாகமணி (பரலின்) கதையை வழக்குரை காதையிலும் கண்ணகி பாண்டிய னிடம் எடுத்துரைப்பதாகக் காட்டப்படுகிறது. (வழக் குரை காதை 100-115)

10163 / 224.3 310

மணப்பருவம் உற்ற தன் மகளுக்கு விலையுயர்ந்த அணிகலன்களைச் செய்த மானாகன் மற்றையோரால் பெற முடியாத நாகமணியைக் காற்சிலம்பினுள் இட விரும்புகிறார். (மீகாமன் கதை 22-24) சோழ நாட்டின் தென்பால் உள்ள தீவொன்றில் மணியிருப்பதாகத் தகவல் கிடைக்க, கப்பற்படையொன்று உருவாகிறது. கப்பலுக்கு வேண்டிய மரங்கள் ஈழநாட்டிலிருந்து தருவிக்கப் படுகின்றன. அழகும் வன்மையுமுறக் கப்பல் அமைக்கப்பட்டதை 266 பாடல்களைக் கொண்ட கப்பல் வைத்த காதையால் விளக்கப்படுகிறது. கப்பல்களுடன் ஆற்றல் வாய்ந்த மீகாமன் என்பவன் செல்லுங்கால் வழியில் வெடியரசன் என்பவனுடன் போரிட்டு அவனைச் சிறைப்படுத்து கிறான் நாகமலைக்குச் சென்று, பெருமுயற்சிக்குப் பின் அருமணி பெறுகிறான். மீண்டு வருகையில் வெடியர சனின் தம்பியார் வீரநாரணன், விளங்குதேவன் ஆகிய இருவருடன் போரிட்டு இறுதியில் சமாதானம் அடைந்து மணியை எடுத்து வருகின்றான் இந்நாகமணியின் அருமை யையோ அதைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகளையோ இளங்கோவடிகள் கூறாமை குறிக்கத்தக்கது.

சிலம்பு சோழநாட்டுக் குலமகளைப் பாண்டிய நாட்டில் வீர மகளாக்கிச் சேர நாட்டில் பத்தினித் தெய்வ மாக்குகிறது. வீரத்திருமகளுக்கு உருவச்சிலையமைக்கும் கல்லும் வீரத்தின் சின்னமாக விளங்கவேண்டுமென விழை கிறான் மன்னன். இதனால் கற்கொண்ட செய்தியுடன் தமிழன் இமயம் வரை சென்று பெற்ற வெற்றித் திரு வினையும் பெருமிதத்துடன் விரித்துரைக்கின்றது. சேர நாட்டிலிருந்து கண்ணகி வணக்கம் ஈழ நாட்டுக்கு வந்த வரலாற்றையும் அது தெரிவிக்கிறது. ஆனால் வழக்குரை நூல் சிறிய மணிப்பரல் காரணமாகப் பெரிய போரினை உருவாக்குகிறது. ஈழ நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் நடந்த சண்டையில் தமிழன் தமிழனோடு சமாதானப் பட்டு வாழ்ந்ததாக முடிக்கிறது.

கலியாணம் வைத்த காதை

சிலப்பதிகார மங்கல வாழ்த்துக் காதையில் திருமணச் சடங்கு சுருக்கமாகவே கூறப்படுகிறது.

"சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழிக் காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பென்னை"
(மங்கல வாழ்த்து 51-53)

என்று கோவலன் கண்ணகி திருமணச் சடங்கைக் காட்டுவர் ஆசிரியர். 'வழக்குரை' ஆசிரியர் கோவலனார் கண்ணகை கலியாணத்தை 64 பாடல்களில் கூறுகிறார். நாகமணி பெறுவதற்குப் பாடிய அளவிற்குக் கண்ணகை யார் திருமணத்தைப் பற்றி ஆசிரியர் பாடவில்லை. நாக மணியிட்ட சிலம்பு செய்தலுக்குப் பத்துப் பாடல்களும் (11-19) வேதியர் முகூர்த்தம் குறிக்க ஏழு பாடல்களும் (23-29) மணமேடை அலங்கரிக்க ஆறு பாடல்களும் (34-39) கண்ணகைக்குத் திருமண அலங்காரம் செய்வதை ஏழு பாடல்களும் [41-47] ஆக இவ்வாறு முப்பது பாடல்களில் திருமணச் செய்தி கூறப்படுகிறது. ஆனால் கணிதம் வல்ல இந்நூலாசிரியர் முகூர்த்த நேரத்தையும் நாளையும் குறிக்கவில்லை.

"யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்"
(மங்கல வாழ்த்து 43-41)

என்று கூறுகிறார் இளங்கோவடிகள். கண்ணகி வழக் குரை ஆசிரியரோ வழக்கப்படி, பட்டணத்திலுள்ளவரும் வணிகரும் வெற்றிலை பாக்கு வைத்து வரவழைக்கப்படுவ தாகவும் (48) மணமகனுக்குச செங்கழுநீர் மாலை சூட்டுவ தாகவும் கூறுவது புதுமையுடையது. மற்றவற்றிற்குக் கொடுக்கப்பட்ட சிறப்பு, திருமணச் சடங்கிற்கு ஆசிரியர் கொடுக்காமை கவனிக்கத் தக்கது (54-64).

மங்கலநாண் நகரில் எழுந்தது என்று காட்டும் இளங்கோவடிகள் மங்கலநாண் அணிவித்தலுக்குச் சிறப்பு கொடுக்கவில்லை. மாறாக, கண்ணகியும் கோவலனும் தீவலம் செய்தலுக்குத் தனிச்சிறப்புக் கொடுக்கிறார். கண்ணகி வழக்குரை ஆசிரியரோ "திருப்பூட்டினார் சிறந்து"(59)என்றுமணச்சடங்குக் காட்டுகிறார். இளங்கோவடிகள்,

"காதலர்ப் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறு கென ஏத்திச் சின்மலர் கொடுதூவி
அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை
மங்கல நல்லமளி யேற்றினார்"

(மங்கல வாழ்த்து 61-64)

என்று கூறுகிறார். வழக்குரை ஆசிரியர்,

"கூந்தல் வெளுத்தாலும் கூறுமழகு பணிந்
தேந்துமுலை ஆலிலைமேல் வீழ்ந்தாலும்—
சேர்ந்துடனே
என்னாளுங் கண்ணகையார் ஈடேற இன்பமுற்று
மன்னாக வாழும் மகிழ்ந்து" (64)

என்று மகளிர் கண்ணகையை வாழ்த்துவதாகக் காட்டுகின்றார்.

மாதவி அரங்கேற்றுக் காதை

இளங்கோவடிகள் 175 வரிகளில் மாதவியின் வரலாற்றைக் கூற, வழக்குரை ஆசிரியர் 651 பாடல்களில் மாதவியின் வரலாற்றைக் கூறுகிறார். இளங்கோவடிகள் திருமணமான கண்ணகி கோவலனை மனையறம்படுத்தி, ஆண்டு சில கழிந்த பிறகே மாதவியை அறிமுகப்படுத்துகிறார். வழக்குரையாசிரியர் திருமணச் சடங்கு நடந்து கொண்டிருக்கும் நாலாம் நாளிலேயே கோவலன் கண்ணகியைப் பிரிவதாகக் காட்டுகிறார். கண்ணகையை அம்மனின் அம்சமாகக் காட்டுவதால் உடலுறவுக்கு இட

மில்லாமல் பிரிக்கிறாரோ என்ற எண்ணம் எழினும் ஆயர் பாடியில் கோவலன் கொலைக்கு முன்னால் இருவரும் சில நாள் இன்பவாழ்வு வாழ்ந்ததாக ஆசிரியர் காட்டுவது இக் கருத்துக்கு முரணாக அமைகிறது.

கோவலன் மாதவி உடனுறை வாழ்வை இளங்கோ வடிகள் அரங்கேற்றுக்காதை, அந்திமாலைச் சிறப்பு செய் காதை, இந்திர விழவூரெடுத்த காதை, கடலாடு காதை, கானல்வரி ஆகிய காதைகளிலும், கோவலனின் பிரிவில் மாதவி உறும் துயரத்தை வேனிற்காதையிலும் காட்டுவர். அங்கு மாதவியின் அன்பு வாழ்வும் கலையுணர்வும் காட்டப்படும்.

இளங்கோவடிகள், மாதவியைச் சிறந்த குலமகளாகக் காட்டுவது போன்றே 'கண்ணகி வழக்குரை' ஆசிரியரும் காட்டுகிறார். கோவலன் மாதவி அன்பு வாழ்வை மாதவி அரங்கேற்று காதை, பொன்னுக்கு மறிப்பு காதை ஆகிய வற்றிலும், கோவலனின் பிரிவால் மாதவி உறும் துயரம் இரங்கிய காதல், வயந்தமாலைத் தூது ஆகிய பகுதி களிலும் காட்டப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் கோவலனுக்கு மாதவியின் அன்பில் ஏற்பட்ட ஐயமே பிரிவுக்குக் காரணமாகிறது. வழக்குரை யில்அரைமாப் பொன் குறைவே பிரிவுக்குக் காரணமா கிறது. சிலம்பில் சித்திராபதி பாத்திரப் படைப்பு காணப் படவில்லை. மணிமேகலையிலிருந்துதான் அப்பாத்திரத் தின் தன்மை தெரியவருகிறது. 'கண்ணகி வழக்குரை'யில் சித்திராபதி பொன்னையே நோக்கமாகக் கொண்ட அக் காலப்பரத்தையர் சமுதாயத்தின்பிரதிநிதியாகக் காட்டப் படுகிறாள். அவள்தான் கோவலன் மாதவியின் பிரிவிற்குக் காரணமாகிறாள்.

'வழக்குரை' ஆசிரியர் கண்ணகி—கோவலனிடம் கொண்ட ஈடுபாட்டை விட மாதவியிடம் அதிக ஈடுபாடு கொண்டவராகக் காணப்படுகிறார். அடிகளைப்போன்றே

இவ்வாசிரியரும் முற்பிறவி நிலையை விளக்கமாகக் காட்டு கிறார். (18–21) மாதவி பிறத்தல் (29–32) சோதிடம் பார்த்தல் (33) அவளின் அழகு (34–35, 70-74, 88-95), அவளை வளர்த்தல் (36-41) அவள் 64 கலைகளையும் கற்றல் (42-46) இசைகற்றல் (47–57) நாட்டியம் பயிலல் (58-69, 75-87) பிற கலைஞர்களுடன் வாதம் புரிந்து வெல்லுதல் (96–101) நாட்டிய அரங்கேற்றம் செய்தல் (114–167) மாதவியின் அலங்காரம (184-200) அவள் பல்லக்கில் செல்லுதல் (201-204) ஆகியவை விரிவாகவே காணப்படுகின்றன.

மாதவியின் முற்பிறவி வரலாற்றை, வித்தியாதரன் சோழனுக்குக் கூறிக் குடைக் காம்பாகிய ஜயந்தனையும் மாதவியின் ஆடலரங்கில் கொண்டுவரச் செய்கிறான். (168-180) இந்நிகழ்ச்சி சிலப்பதிகாரத்தில் இல்லை. சிலம்பில் சோழன், மாதவியின் வரலாற்றை அறிந்ததாகக் கூறவில்லை. மாதவிக்கு 1008 பொன் கழஞ்சையும், தலைக்கோல் பட்டம் கொடுப்பதையும் தவிர வேறு எதை யும் செய்யவில்லை. 'வழக்குரையில்' சோழனுக்குச் சிறப்பு கொடுக்கப்படுகிறது. சோழன் நடனஅரங்கத்திற்குக் கால் கோள் செய்வதிலிருந்து இறுதிவரை முன்னின்று நடத்து கிறான். இளங்கோவின் காலத்தில் தேரோடும் வீதியில், நகரின் நடுவில் ஆடலரங்கம் இருந்ததாகத் காட்டப்படு கிறது. 'வழக்குரையில்' மாதவியின் நடனத்திற்காகவே புதிதாக அரங்கம்கட்டப்படுகிறது. 'சிலம்பில்' மாதவியின் நடனம் காணவே தன் மனைவியுடன் வருகிறான் விஞ்சையன். 'வழக்குரை'யில் சோழனிடம் மாதவியின் பிறப்பு வரலாறு கூறத் தனியாகவே வருகிறான் விஞ்சையன்.

சிலம்பில், கோவலன் முழவோசை கேட்டதாகவோ, நடனத்தைக் கண்டதாகவோ, கண்டு காதல் கொண்ட தாகவோ சான்றில்லை. மாலை வாங்குவதால் மாதவியின்

நடனம் கண்டிருக்கலாம் என்ற அளவில் ஊகிக்க முடிகிறது. வழக்குரையில்,

"நலமறையோர் விதிப்படியே நாலாம்நாட் சடங்குதனில்
திலதமிகு மணக்கோலஞ் சிறந்திருக்கும் வேளையத்தே"

(208)

கோவலன் குலவியதோர் ஓசை கேட்கிறான். கேட்டு ஆளை அனுப்பிச் செய்தி அறிந்து மாதவியின் நடனத்தைக் காண்கிறான். நடன அரங்கத்திற்குக் கோவலன் விரைந்து செல்வது கண்டு, மானாகர்,

".....போவது நீ கருமமல்ல
மாதவியார் தண்ணழகும் வரிசைபெறு நாடகமும்
பேதகமும் கண்டூரேற் பிழைத்து வர மாட்டீரே"

என்று தடுக்கிறார்.

(213)

"பிழைத்துவரும் வாறெது பேசிலவள் பிழைகாரி
மழைத்தடங்கண் ராமசரம் வாணுதல் இந்திரசாபம்
புழைத்தடங்கண் மருப்புமிகு புணர்முலைகள்
கரும்பாகும்
அழைப்பனிவள் என்னாணை அடியிரீவீர் என
விரைந்தார்" (214)

என மாதவியின் இயல்பு கூறித் தடுக்க முயல்கிறார். இதைக் கேட்ட கோவலனாரோ,

"கடிகமழும் மலரதனைக் காதலித்த பொறிவண்டு
வடிவுடைய மதுவையுண்டு மயங்கியல்லால்
மீளுவதோ" (215)

என்று பின்னால் நடக்கப்போவதை முன்னமேயே மாமனாரிடம் கூறி, அரங்கு நோக்கி நடக்கிறான்.

"புண்டரிகத் திலதமின்னாள் பொற்கொடியாள்
மாதவியார்
கண்டுமனங் களிகூர்ந்து காதலுற்றுப் பார்த்து
நின்றாள் (217)

"பார்த்தளவில் இருவர் தங்கள் பார்வையுமங்
கொன்றாகியது" (218)

என்று கோவலனார் மாதவியார் காதலை ஆசிரியர் நயமுறக் கூறுகிறார். (217-220)

ஆடலரங்கில் மாதவி பாடி ஆடுதல் (223–289) விரித்துரைக்கப்படுகிறது. மன்னவன் மகிழ்ந்து 1008 பொன் கழஞ்சு மாலையும் மற்றப் பரிசுகளும் கொடுக்கிறான். (29)-294) காதலுற்ற கோவலன் புலம்புகிறான். (295–312) மாதவியே கோவலனை மாலை வாங்கிக் கொள்ளச் சொல்லுகிறாள். (313-315). அரசனும் அவ்வாறே கூறுகிறான். (316) ஐராவதத்தின் மேல் மாலை, வெண்குடை வைத்து நகர்வலம் வரச் செய்கின்றனர். (317-323) அதைக் கண்ட வணிகர்கள் கோவலன் மாலையை வாங்கியது நன்று என்று உளமகிழ்ந்து உரைக்கின்றனர் (322) கோவலன் மாலை வாங்கியதை அறிந்து கண்ணகையும் பெருமைப்படுகிறாள். மாலை, உலாவரும் போது தன் வீட்டுத் தலைவாசலில் நிறைகுடம் வைத்து, கற்பூர விளக் கேற்றி ஆரத்தி ஏந்தி வரவேற்கிறாள். (324-325)

கண்ணகி வழக்குரையில் வருகின்ற மேற்கூறிய பகுதி களை இளங்கோவடிகள் காட்டவில்லை. பரத்தமைச் சமுதாயத்தை வெறுத்த அவர், கலைமகளைக் குலமகளாக் கினார். கலைமகளுக்குக் குழந்தைப் பேற்றையும் அருளினார். அதனால் பரத்தையர் சமுதாயப் பிரதிநிதி யாக இருந்த சித்திராபதியையும் வேண்டுமென்றே அவர் படைக்கவில்லை.

இளங்கோவடிகள் மாதவியிடத்து ஒரு சிறு குறை கூடக் காட்டவில்லை. அவள் ஒரு முறையாவது பொன் னையோ பொருளையோ வேண்டும் என்று கோவலனிடம் கேட்டதாகவோ வறுமையுற்ற கோவலனை வேண்டாம் என்று நீக்கியதாகவோ கூறவில்லை. 'கண்ணகி வழக்குரை' ஆசிரியரும் மாதவியைச் சேற்றில் பிறந்த செந்தாமரை யாகத் தான் காட்டுகிறார். கோவலனிடம் உண்மையான அன்பு கொண்டவளாகவே படைக்கிறார். "பொன்னிலை காண் என்று சொன்னால் போக விடல் பக்குவமோ" (9) என்று மாதவி தன் அன்புடைமையைத் தெளிவாக்குவ தாகக் கூறப்படுகிறது.

"தாரமென வேயெனை வைத்ததகோ வலரைத்
தள்ளிவித் தானும் மொள்ளிதொ வென்றாள்" (12)

என்று மாதவி கோவலனின்றி வாழா நிலைமையும், மனைவியெனவே வாழ்ந்த நிலையும் புலப்படுத்தப்படு கிறது. அதனால் அரைமாப் பொன் குறைந்ததனால் கோவலனை நீக்கும்படிக் கூறிய தாயை நோக்கிப் 'பாவி மாதாவே, இரங்காதோ உன்மனது' என்று கடியும் போக் குக் (46) காணப்படுகிறது. அதே தேரத்தில் தாயின் சொல்லுக்குக் கட்டுப்படுபவளாகவும் மாதவி காட்டப்படு கிறாள். தாயின் சொற்படி கோவலனிடம் பொன் கேட் கிறாள். மாதவி பொன் கேட்டதைத் தோழியின் மூலம் அறிந்த கண்ணகி தன்னிடமிருந்த நகைகளைக் கழற்றிக் கொடுக்கிறாள்.

பொன்னியாறு பெருகிவரும் பொலிவைப் பார்க்கக் கோவலனும் மாதவியும் போகும் போது, அவர்களைப் பார்த்தவர்கள் எல்லாம் நலம் விசாரித்தும், பூப்பறித்துக் கொடுத்தும், பன்னீர்த் தெளித்தும், மங்கல ஆரத்தி எடுத் தும், மகிழ்கின்றனர். மாதவிக்கு எண்ணெய் நீராட்டி அலங்கரிக்கின்றனர். மாதவி கோவலனுடன் புது நீராட்டு பார்க்கிறாள். (52-60)

இப்பகுதி அக்காலப் பரத்தையரின் வாழ்வைப் படம் பிடிப்பதாக உள்ளது. அன்பை விட அரைமாப் பொன் னைப் பெரிதாக நினைக்கும் பரத்தமை இழிவு புலப் படுத்தப் படுகிறது. எல்லோரும் கோவலன் மாதவி உறவைக் கண்டு மகிழ்வதும் உபசரிப்பதும் சமுதாயக் கேட்டின் பிரதிபலிப்பாய் அமைகிறது (52-60). கண்ணகி தன்னிடம் இருக்கும் அணிகலன்களைக் கழற்றிக் கொடுத் தல், பரத்தமைச் சமுதாயத்தில் குலமகளின் நிலையையும் அவள் தன் கணவனை மறுக்கவும் கண்டிக்கவும் உரிமை யற்றிருந்த நிலையையும் எடுத்துக் காட்டுகிறது. (20-27)

கோவலன் மாதவி பிரிவு

கோவலன் மாதவி பிரிவிற்கு ஊழ்வினையை மட்டுமே காரணம் காட்டுகிறார் இளங்கோவடிகள்.

"யாழிசைமேல் வைத்துதன் ஊழ்வினைவந் துருத்த
தாகலின்
உவவுற்றதிங்கள் முகத்தாளைக் கவவுக்கை நெகிழ்ந்
தனனாய்ச்" (கானல் வரி: 55-56)

சென்றதாகக் கூறுகிறார்.

வழக்குரை ஆசிரியர் வேறு விதமாகக் கூறுகிறார். மாதவி கோவலனுக்குப் பொன்னியாற்றின் சிறப்பைக் காட்டும்போது, மலரை வண்டு பிரிதலுக்குப் பொன்னை மிக அற்றவர்கள் போந்த தன்மையை உவமித்துக் கூறு கிறாள். (69) இதைக் கேட்டவுடன் கோவலனும்,

"காடுசெழும் பூவோநீ கூடியவனும் வண்டோநான்
பாகுசெழும் மலரோநீ பகலவனும் வண்டோநான்
வாதுமொழி தனைப்பேசும் மங்கைதனை விட்ட
கன்று
ஏகிப்பறி சாரம்போலவர் பட்டணத்தே
தானடைந்தார்" (73)

என்று மாதவி பிரிவிற்குக் காரணம் காட்டுவர்.

வழக்குரை ஆசிரியரின் மாதவியாரும் இளங்கோவின் மாதவியைப் போன்றே கோவலனின் பிரிவில் வருந்து கிறாள். மாதவியின் துயரம் பொன்னுக்கு மறிப்புக் காதையிலும் (74-151), வழிநடைக் காதையிலும் (12-99, 162-169) காணப்படுகிறது. மாதவி துன்பத்தால் வண்டு துளைத்த மரமாய், குரங்கின் கைப்பட்ட பூமாலையாய் ஆகிறாள். காவிரியைப் பார்த்தும் புலம்புகிறாள் (பொன் னுக்கு மறிப்பு 76-78, 98) என்று கோவலனுடன் இல்லாத மாதவியின் நிலை கூறப்படுகிறது. 'கோவலன் இல்லாது முதுமை யெய்தினாலும் எய்துவேன் லேறொருவரை அணையேன் என்று மாதவியின் உறுதி எடுத்துரைக்கப் படுகிறது. (104-110) கோவலனையின்றி மற்றையரெல் லாம் 'பிதாவெனக்குக் கண்டாயே' என்று தாயிடம் கூறு கிறாள். (112) இடிகுரையில் நின்ற மரத்திற்குத் துயருற்ற மாதவி ஒப்பிடப்படுகிறாள். (113)

வயந்தமாலை தூது

சிலப்பதிகாரத்தைப் போன்றே கண்ணகி வழக்குரை யிலும் வயந்தமாலை தூது காணப்படுகிறது. வயந்த மாலை தூது மட்டும் 170 பாடல்களில் காட்டப்படுகிறது. 'சிலப்பதிகாரம்' வயந்தமாலையை ஒரு முறை மட்டுமே தூது விட்டதாகக் கூற 'கண்ணகி வழக்குரை' அவளை இரு முறை தூது விட்டதாகக் கூறுகிறது. இந்நூலில் மாதவி ஒரே ஒருமடல் வரைகிறாள். (52-67) இதில் கோவலனை "இனிய புத்தகத்தில் இனிய நற்கயிறே" என மாதவி விளித்தல் புதுமையுடையது. (63) "தாயென என்னைத் தந்தருள் புரியும், பேயுரை அதனால்" (55) என்பதனால் மாதவி தன் தாயின் மீது கொண்ட வெறுப்பு புலப்படுத்தப் படுகிறது.

சிலம்பில், கோவலன் மாதவியின் கடிதத்தைத் திறந்து பாரான். வழக்குரை நூலில் கோவலன் மடலைத் திறந்து பார்த்து வயந்தமாலையுடன் வாக்குவாதமும் நிகழ்த்து

கிறான். (வயந்தமாலை தூது 107-161) 'சலம்புணர் கொள்கைச்சலதி' என்று பழிக்கும் இளங்கோவின் கோவலனைப் போலவே இக்கோவலனும் மாதவியைப் பழிக்கிறான்.

"எண்ணரிய கற்புடை கண்ணகையார் இங்கிருக்க
நண்ணுவனோ மாதவிபால் நான்சென்று சேர்வதில்லே
உண்ணநல்ல அமுதிருக்க உவந்துநஞ்சை உண்பார்களோ
வெண்ணெயது தேடுவரோ விரும்பிநெய்தான் இருக்
கையிலே" (152)

என இவ்வாறு கண்ணகியின் உயர்வும் மாதவியின் இழிவும் கோவலனால் உரைக்கப்படுகிறது. 'இரும்புண்ட நீர் வரினும் யானங்கு வாரேன் காண்' (152) என்று முடிவாகக் கூறுகிறான்.

வழி நடைக் காதை

சிலம்பு விற்கும்படி கண்ணகையார் கூறுவதும் கோவலன் மறுப்பதும் இளங்கோவடிகள் கூறாத பகுதியாகும். சிலம்பில் எதிர்வாதம் இல்லாமலிருக்க இங்கு இருவரும் வாதம் புரிகின்றனர். (வழிநடை 171-238) மாதவியை விட்டுக் கோவலன் திரும்பி வந்தவுடனேயே கண்ணகை "பசித்தவர்கள் ஏதுதின்னார், பகைத்தவர்கள் ஏதுதின்னார், பகைத்தவர்கள் ஏது சொல்லார்' என்ற, உலகியலைக் கூறி, விஷத்தரவின் மணிச்சிலம்பை விற்று வரும்படி கூறுகிறாள். (171)

சிலப்பதிகாரக் கண்ணகி, மாதவியின் பெயரைக் கூட எந்த விடத்தும் சுட்டவில்லை. இக்கண்ணகை.

"சொல்லரிய மாதவியின் துவக்கிலக்கியப் பட்டதுபோல்
வல்லியர்குங் குமச்சேற்றில் வளர்ந்தெழுந்த தனபார
மெல்லியரைக் கண்டாற்கால் மதுரைவிட்டு வாரீரோ"
(176)

எனக் கண்ணகை கோவலனாரின் பரத்தமையைக் குறிப்பிடுகிறாள்.

இருவரும் போகும்போது துர்ச்சகுனங்கள் தோன்றுகின்றன. கண்ணகைக்குச் சொன்னால் உலையிலிடு மெழுகெனவே உருகுவாள் என நினைத்துத் தலையெழுத்தின் படி நடக்கட்டும் என்று தார்வணிகன் நடந்ததாக வழக்குரை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

கண்ணகி தன்துயர் காணாப் பெருந்தகையாள். கண்ணகையோ, 'வெயில் மிகுந்து வேர்வரும்பி வெவ்வெரியின் மெழுகானேன்' (190) என்று தன்நிலை கூறி, குயில் செறிந்த சோலையெங்கே எனக் கோவலனிடம் வினவுகிறாள். இருவரும் அரங்கர் திருக்கோயில்(192) திருவாரூர் (193), உறையூர் (207) அழகர்கோயில் (213) மறவாணர் தேசம், கோட்டைநாடு (216) என்னும் பல பகுதிகளைக் கடந்து செல்கையில், வழியில் வைகையாற்றின் சிறப்பினைக் கோவலன் கண்ணகையிடம காட்டுகிறான், அப்போது கண்ணகை,

''பெருமானே உன்னுடைய பெண்ணினல்லார்
மாதவியார்
ஒரு நாளைப் புனலாட ஒழுகு பன்னீர் நீரல்லவோ
மருவாடும் மலரில் வண்டு மருவுதற்கு வரவுகண்டீர்
திருவான வைகை செய்யும் திறம் எனக்குத்
தெரியாதே"
(வழிநடை 224)

எனக் கோவலனிடம் மாதவியின் உறவை நினைவூட்டுகிறாள்.

அடைக்கலக் காதை

இளங்கோவடிகள் கவுந்தி என்னும் புதிய பாத்திரத்தைப் படைத்ததால், அத்துறவி மாதரியிடம் கண்ணகியின் பெருமை கூறி அடைக்கலப்படுத்துவதாகக் காட்டப்படுகிறது. (அடைக்கலக் காதை 120–200) 'கண்ணகி வழக்குரை'யில் கவுந்தி இடம் பெறாததால்

வழியில் செல்லும் இவர்களைக் கண்டு மாதரியே வியந்து பாதுகாக்க உறுதி கொள்கிறாள்.

கோவலனைச் சைவ சமயத்தவனாக இளங்கோ வடிகள் காட்டவில்லை. 'வழக்குரை' ஆசிரியர்,

"தேவாரம் பூசித்துச் சிறிதுநேரஞ் சென்றதற்பின்
நாவார நல்லடிசில் அமுதுசெய்தார் கோவலனார்" (40)

எனக் கோவலனார் தேவாரம் ஓதியதைக் கூறி அவனைச் சைவ சமயத்தவனாகக் குறிப்பிடுவர். (ஆசிரியருக்குத் தேவாரத்தின்பாலுள்ள ஈடுபாடும் இதனால் புலப்படுகிறது) அவன் சிலம்பு விற்கச் சென்ற போதும்,

"நீறுதனை அணியுமரன் நிமலனருள் மறவாதே" (42)

எனச் சிவனை மறவாச் சிந்தையினனாகத் தன் கணவனை இருக்கும்படி கூறுகிறாள் கண்ணகை.

கோவலன் சிலம்பு விற்கச் செல்லும் போது அவனுக்குக் கண்ணகி அறிவுரை கூறியதாக அடிகள் காட்டவில்லை. கண்ணகி வழக்குரையிலோ,

"மட்டவிழும் தார்மாலை வாள்மாறன் மதுரையுள்ளே
விட்டமனை தனைக்கடந்து வேற்றிடத்தே
செல்லாதே
பெட்டென்று முரையாதே பிரதானி தங்கள்முன்னே
கட்டழிய நடவாதே காவலனே யென்கணவா" (43)

என இவ்வாறு பல்வேறு அறிவுரைகளைக் கூறுகிறாள். (42-44). மதுரைநகர் பரத்தையர்களின் நிலையையும் அவள் கூறுகிறாள். காரியம் ஆகும் சகுனங்களையும் (46-49) ஆகாச் சகுனங்களையும் (50-55) எடுத்துரைக்கிறாள். விதியின் தன்மையைக்கூற வருபவள், 'மதிமுகத்து மாதவிக்கு வான் நிதியம் தோற்றவரே' (56) என்று விளித்து மாதவியின் ஆற்றலைக் கூறுகிறாள்.

கண்ணகியைப் பிரியும் கோவலன் அவளை நலம் பாராட்டுவதாகச் சிலம்பு கூறும். கண்ணகி வழக்குரையோ, சிலம்பு விற்கச் செல்லும் கோவலன் மாதரியை, 'பொன்னே' 'மணிவிளக்கே' 'புரூட ராகமே' என விளிக்கிறான்.(66) கண்ணகையைத் திரும்பி வருமளவும் அடைக்கலப்படுத்துகிறான். (66-75) கோவலனைக் கலவையின்றிச் செல்லும்படி மாதரி கூறுகிறாள். (76-84) கோவலன் கண்ணகி நிலை கண்டு வருந்துகிறான். (85-88) இவ்வாறான கோவலன் மாதரி உரையாடல் சிலப்பதிகாரத்தில் இல்லை.

இமிலேறு எதிர்ந்து வரும் சகுனம் அறியாதவனாகச் செல்கிறான் சிலப்பதிகாரக் கோவலன். வழக்குரையில் கோவலனார் போகும்போது, வலப்பல்லி தடுக்கிறது; விறகு சுமை எதிர்வருகிறது; வெறுங்கழுத்தி வருகிறாள். (90) இச்சகுனங்களைக் கண்ட கோவலன் குறி கேட்கிறான். (91-104) சொக்கேசரைத்தொழுது சிலம்பு விற்கச் செல்கிறான். இவை இளங்கோவடிகள கூறாத செய்திகள் ஆகும்.

சிலம்பு விலை கூறல்

இப்பகுதியில், சிலம்பினை விற்கச் செல்லும் கோவலன் வணிகரிடம் காட்டியபோது அவர்கள் சிலம்பிற்கு விலை மதிக்க இயலாது திகைத்தனர். (5–12) காமன் சேவிக்கும் பெண்கள் தெருவில் ஏவற் சிலதியர் சிலம்பு கவர நினைத்து மோகவலை வீசுகின்றனர். (13–68) இவ்விலை கூறல் என்னும் பகுதி இளங்கோவடிகள் கூறாத ஒன்று.

கொலைக்களக் காதை

சிலம்பை விற்க முடியாத கோவலன் சோதிடம் பார்க்கிறான். (70–75) சிலப்பதிகாரத்தில் இருப்பது போன்றே கண்ணகி வழக்குரையில் பொற்கொல்லன் பாத்திரம் அமைகிறது.

சிலப்பதிகாரத்தில் பாண்டியன் கோவலனைக் காணர் மலேயே ''சிலம்பு அக்கள்வன் கையதாகில் கொன்று அச்சிலம்பு கொணர்க" என்று ஆணையிடுகிறான். கண்ணகி வழக்குரையில் பாண்டியனுக்கும் கோவலனுக் கும் உரையாடல் நிகழ்கிறது. (93-97) தட்டான் கோப் பெருந்தேவியிடம் சிலம்பினைக் கொண்டு சென்று, அவளுடையதா என்று வினவுகிறான். இதனால் கோப முற்ற கோப்பெருந்தேவி ''பொய் சொல்லல் ஆகாது" என்று கூறி இச்சிலம்பு தன்னுடையதல்ல என்று உண்மை கூறுகிறாள். (101-109) கோவலன் திருடிய சிலம்பைக் கைப் பற்றி விட்டதால் அவனைக் கொலை செய்தல் தேவை யில்லை; விடுதலை செய்து விடலாம் என்று பாண்டியன் கூறுகிறான். ஆனால் தட்டானோ கள்வனைக் கொல்லாது விடின் நீதியே நிலவாது என்று கூறுகிறான். (125-145) மன்னனும் சம்மதித்து மதயானை முன் இட்டுக் கொல்ல ஆணையிடுகிறான். யானைக்கு மதம் பிடிக்க வைக் கின்றனர். (128-129) கோவலன் முன் நின்ற யானை அவனைக் கொல்லாது நிற்கிறது. பொற்கொல்லன் ''இவன் காவிரிப்பூம்பட்டினத்து மாந்திரிகம் கற்றவன். ஆகவே மழுவால் வெட்டியே கொல்ல வேண்டும்" என்று ஆணை யிடுகிறான். கோவலனைக் கொல்வதற்கு மழுவரசன் மாலகன் என்பவனை ஏற்பாடு செய்கிறான். மழுவரசன் மாலகனுக்குப் பல துர்நிமித்தங்கள் தோன்று கின்றன. (149) அவன் கோவலனைத் தப்பிப் போகுமாறு வேண்டுகிறான். கோவலன் மறுத்துவிட, மழுவரசன் கோவலனைக் கொல்கிறான். (176-178) 'சேற்றிற் கிடந்த தொரு செங்கழுநீர்ப் பூப்போலக் கீறிரண்டாகக் கோவல னார் கிழிபட்டுக் கிடக்கிறார்'' என்று கோவலன் நிலை கூறப்படுகிறது. (183)

ஆயர்பாடியில் கண்ணகி கனவு கண்டதாகச் சிலம்பு கூறவில்லை. கண்ணகி வழக்குரையில் கண்ணகையார் மூன்று முறை கனவு காண்கிறார்.

"முந்தியெந்தன் தலையெழுத்தோ முயன்றதவக்
குறைதானோ
பைந்தொடியார் தனைப்பிரிந்து பரத்தையரைச்
சேர்ந்ததற்கோ
இந்தவிதி வந்ததுளன் றிருந்தழுது வருந்தினரே"
(180)

என்று கண்ணகை அழுதநிலை கூறப்படுகிறது. ஆய்ச்சி யரும் கனவு காண்கின்றனர். (201-203) வீட்டில் வைத்த பூமாலை கருகி விடுதல் முதலிய தீ நிமித்தங்கள் சாட்டப் படுகின்றன. (206-207) கண்ணகை தன்னை ஒம்பிய இடைச்சியை வாழ்த்துகிறாள். (208-210) ஒரு கையில் வேப்பங் குழையும் இன்னொரு கையில் சிலம்பும் கொண்டு வீதியில் செல்லும் கண்ணகை தன் கணவனுக்கும் மாதவிக் கும் உற்ற தொடர்பைக் கூறி, அரற்றிக்கொண்டே செல் கிறாள். (244-245)

"கன்றிய தோர்வேந்தன் றன்னையு மின்று
கருதிய கொன்றதோர் பாண்டியன் றன்னை
மன்றிலே செறுவ ழக்காடிப் பேசி
வன்சிலம் பைமுறித்து மாமணி காட்டி
அன்றரக் கன்பதி தன்னை அநுமான்
அழலாய் எரித்ததுபோ லெரிப்பேன்" (248)

என்று கண்ணகை வஞ்சினம் கூறுகிறாள்.

போகின்றவழியில் பிள்ளைகளின் கூட்டம் வர, அவர் களிடம் கோவலன் வெட்டுண்ட இடம் கேட்கிறாள். பிள்ளை ஒன்று இடம் காட்ட, காட்டிய விரலுக்கு மோதிரம் இடுகிறாள். கண்ணகை (250-253) இச்செய்தியை இளங்கோவடிகள் கூறவில்லை.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி பாண்டியனை வழக்கில் வென்ற பிறகு பாண்டியமாதேவியிடம்,

"மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய் நீயென்னா
விட்டகலா"

என்று வஞ்சினம் சாற்றுகிறாள். (வஞ்சினமாலை 35-38)

'வழக்குரை காதை'யில் கோவலன் வெட்டுண்ட இடத் திற்குச்சென்ற கண்ணகை உடல் கண்டு கதறி அழுகிறாள். (254-284) "நாலிரண்டு நாளில் மாறன் உயிரைக் கவர வில்லையெனில் பரத்தையாவேன்" (279) என்று வஞ்சினம் கூறுகிறாள். சிலப்பதிகாரக் கண்ணகி உடன்பாட்டு நிலையில் வஞ்சினம் கூற, 'வழக்குரை' கண்ணகை எதிர் மறை நிலையில் வஞ்சினம கூறுகிறாள். வஞ்சினம் கூறிய சூழலும் இடமும் காலமும் மாறியுள்ளமை நோக்குதற் குரியது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கொலையுண்ட கோவ லனின் பொன்துஞ்சு மார்பினைத் தழுவிக் கொள்ள, இறந்த கோவலன் உயிருடன் எழுகிறான். "நிறைமதி வாள்முகம் கன்றியது" என்று கண்ணீர் கையால் மாற்று கிறாள். கண்ணகி உடனே அழுது ஏங்கி நிலத்தில் வீழ்ந்து தன் கணவனின் தொழுதகைய திருத்தடியைத் துணை வளைக்கையாற் பற்றுகிறாள். பழுது ஒழிந்து எழுந்திருந்த கோவலன் – பல்லமரர் குழாத்துள்ளானாகிய கோவலன்– எழுதெழில் மலர் உண் கண்ணையுடையவளே இங்கு இருப் பாயாக" என்று கூறிப் போகிறான். இந்நிகழ்ச்சி நம்ப முடியாததாலின் கண்ணகியே

"மாயங்கொல் மற்றென்கொல் மருட்டியதோர்
தெய்வங்கொல்
போயெங்கு நாடுகேன் பொருளுரையோ இதுவன்று"

என்று கூறுகிறாள். உடனே வேகத்தோடு "காய் சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்" என்கிறாள். (ஊர் சூழ்வரி 60–70).

வழக்குரையோ, இருதுண்டுகளாகக் கிடந்த கோவல னாரைக் கண்ணகை ஒருங்கே அணைத்துக் கொண்டு, ஆகாயத்தை நோக்கிக் கைகளை நீட்டியபோது, அழகிய பொன் ஊசியொன்று அவளுடைய கைகளிலே வந்து விழுகிறது. தன் சேலையிலிருந்த ஓர் இழையை எடுத்து ஊசியிற் கோத்து, இரு உடல் துண்டுகளையும் ஒன்று சேர்க்கிறாள். "அன்பனே பசியாயிருப்பாய், இனிய உணவ ருந்துவோம், நீராடுவதற்கு. எழுந்திரும்" என்றும் "நான் பத்தினியாகில் நீர் உடனே உயிர்பெற்று எழுந்திருத்தல் வேண்டும்" என்றும் "இருவேம் ஒத்து விண்புகுவோம் எழுந்திரும்" என்றும் வேண்டுகிறாள். (285-290) எழுந்த கோவலனார் தன் தீவினையை நினைத்துப் புலம்புகிறார். (291–296)

அனைத்தையும் கேட்ட கண்ணகை விதியின் வலிமை நினைந்து நொந்து, கோவலனாரைத் தேவகிரிக்குச்சென்று இருக்கும்படியாகக் கூறுகிறாள். பாண்டியனைப் பழி வாங்கி, மதுரையை எரித்த பிறகே தான் தேவகிரிக்கு வந்து சேர்வதாகக் கூறுகிறாள். அவன் உயிர் பிரிகிறது. (297–299). வருத்தமுற்ற கண்ணகை எழுந்திருந்து,

"இற்றைச் சொல்லிக் கண்ணகையார் ஈசனடி
வாழியென்றார்
கற்றோரும்கேட்டோரும் காசினியில் வாழியென்றார்
உற்றபுகழ்ப் பூம்புகாரில் ஊழிஊழி வாழியென்றார்
வெற்றிபுனை செம்பியனும் மேதினியும் வாழியென்
றார்" (300)

என்று வாழ்த்துகிறாள்.

இப்பகுதி முழுவதும் சிலப்பதிகாரத்தோடு மாறுபடு கிறது. 'கண்ணகி வழக்குரை'யில், அம்மனே கண்ணகை யாக வந்து பிறப்பதால் கை நீட்டியவுடன் ஊசிவருவதும் தைப்பதும் இயல்பாகிறது. கோவலன் உயிர்பெறும் முறை புதுமையாக உள்ளது. கண்ணகை கோவலனாரைத் தேவ கிரிக்குப் போகச் சொல்கிறாள். தான் தேவகிரிக்கு வந்து

கணவனைக் கூடுவதாகக் கூறுகிறாள். ஆனால் கண்ணகை மதுரையை எரித்த பிறகு ஆயர்பாடிக்குச் செல்கிறாள். மனம் குளிர்கிறாள். ஆனால் கணவனைக் கூடியதாகக் காட்டவில்லை. உயிர் பெற்ற கோவலனார் தீவினை நினைந்து புலம்புதல் சிலம்புகூறாதது. கோவலனின் உயிர் மீண்டும் பிரிந்தவுடன் கண்ணகைக்குச் சினமெழுதல் மனித இயல்பாகச் சிலம்பு காட்டுகிறது. 'வழக்குரையில் கண்ணகை மேதினியை வாழ்த்துவதாகக் காட்டுவது இயற்கைக்குப் புறமபானது.

வழக்குரைத்த காதை

சிலப்பதிகாரத்தில் பாண்டிமாதேவி கனவு காண்பது போன்றே வழக்குரையிலும் பாண்டிமாதேவி கனவுகாண் பதாகக் கூறப்படுகிறது. ஆனால் கண்ட கனவு தான் மாறுபடுகிறது.

கண்ணகியைக் கண்டவுடனே ''கூடலான் கூடாயி னான்", "கண்டளவே தோற்றான் உயிர்" என்று சிலப்பதி காரவழக்குரைகாதை வெண்பாத தொடர்கள் பாண்டி யன் நிலையைப் புலப்படுத்துகிறது. 'வழக்குரை'யில் கண்ணகையைக் கண்ட பாண்டியன் "இரவியில்லா வான மாக, தடந்துறந்த நாண்மலராக, தாயிழந்த சிறுமகவாக, கடம் துறநத வாரணமாக, கன்றிழந்த ஆவினமாக,விடந் துறந்த நாகமாக" மீனவனும் பொலிவழிகிறான் (70) என்று பல உவமைகளோடு பாண்டியனுடைய நிலைபுலப் படுத்தப்படுகிறது.

கண்ணகை அவைக்குள் நுழைந்ததும் அங்கிருந்த மறை யவர்க்கும், மன்னவர்க்கும், வணிகருக்கும், காராளருக்கும் அபயமென்கிறாள்(இசசெய்தி சிலப்பதிகாரத்தில் இல்லை) புகாரின் சிறப்பை 16 பாடல்களில் (77–116) கூறுகிறாள். நாகமணியின் பெருமையைக் கூறுகிறாள். (106-114) தன் கணவனைக் கொன்றதைக் கடிகிறாள் (115-123). ''வேலி பயிர்தனை அழித்தால் விளையுமோடா, மன்னவனே?" என மந்திப்புக் குறைவாகக் கேட்கிறாள். இதனால்

வெகுண்ட மன்னவன் தன் பெருமை கூறி "மெல்லியலாள் என்றதால் உனை விட்டேன்" (125-132) என்று கூறுகிறான்.

கண்ணகி தன் கணவன் கள்வனா எனக் காய்கதிர் செல்வனிடம் கேட்கிறாள். (துன்பமாலை 50-53) அவளுக்குக் கதிரவன் மறுமொழி கூறுகிறான். கண்ணகை சிவனிடம் கேட்கிறாள் (134) அவன் மறுமொழி கூறவில்லை.

"கோப்பெருந்தேவி இச்சிலம்பைத் தன்னுடைய தென்று கூறினால் வழக்கில் தோற்றுப்போவேன்.

மானாகர் மகளுமல்லேன் வணிசேகர் குலமுமல்லேன்
யானோபெண் பிறப்பிமல்லேன் எழுந்ததுவு
முலையுமில்லை"
(138)

என வெறுத்துக் கூறுகிறாள். பாண்டியமாதேவியும் பொய் கூற மறுக்கிறாள் (143-167) இச் செய்தி சிலப்பதி காரத்தில் இல்லை.

சிலப்பதிகாரத்தில் பொற்கொல்லன் ஒரு முறை தான் வருகிறான். 'வழக்குரையில்' மறுபடியும் அரசன் அவனை அழைக்கிறான் (181-191) அவன் கண்ணகியைப் பழிக் கிறான். உடனே கண்ணகை

"ஆதிபக வன்மதலை வள்ளுவன் உரைத்த
அருந்தமிழ் படித்ததில்லை யோடாநீ" (187)

என்று வினவுகிறாள்.

திருடப்பட்ட தன் சிலம்பைச் சபைக்குக் கொண்டு வரச் சொல்கிறாள் கண்ணகை. அங்கிருந்த மந்திரிகள் அவளை நோக்கிச் சிலம்பு உன்னுடையதானால் நீயே அதனை அழைக்கலாமே என்கின்றனர். கண்ணகை ஈசனை நினைத்து நான்கு முறை தன் சிலம்பைக் கூவி அழைத்ததுமே,

"ஏழாந் தளந்தனிலே இயல்பெரிய மண்டபத்தே
வாள்மாறன் தன்னுடைய வண்மைசெறி
மாளிகையில்
மாணிக்கப் பெட்டியிலே வைத்திருக்கும் பொற்
சிலம்பு" (200)

கண்ணகையின் முன்னிலையில் வந்து கரத்தில் ஏறுகிறது. இச்செய்தி சிலப்பதிகாரத்தில் இல்லை.

பாண்டிமாதேவி பதைத்து ஓடிவந்து பத்தினி பாதத்திலே மெத்தென விழுந்து (204) கண்ணகையிடம் "மண்ணாளும் பாண்டியன் மடிப்பிச்சை" வேண்டுகிறாள். கண்ணகை வெதுண்டு சிலம்பைத் தூண் ஒன்றில் மோதுகிறாள். (206) மாணிக்கப் பரல்பட்டு மன்னவன் இறக்கிறான்.

குளிர்ச்சிக் காதை

மதுரையை எரித்த பிறகு கண்ணகி சேரநாடு சென்று பத்தினித் தெய்வமானாள் என்று சிலம்பு கூறும். கண்ணகையாரோ மதுரையை எரியூட்டிய பின் இடையர் சேரியில் சேர்ந்தனள். அங்கிருந்த இடைச்சியர் வெண்ணெய் கொண்டு (9) அவளுடைய முலையில் அப்புகின்றனர். பறைச்சியர் சிலர் பஞ்சு கொண்டு அப்புகின்றனர். (7) கண்ணகை இடைச்சேரியிலும் பறைச்சேரியிலும் தீ புகாதொழிக என அருள் புரிகிறாள். இடைச்சியர் அழுது செய்விக்க முயல, அவள் மறுக்கிறாள். (15-22), பறைச்சேரி மக்களுக்குக் கண்ணகை கூறும் அறிவுரை புரட்சிச் சொற்களாகும்.

"மாதுநல்லார் அவர்களுக்கு மாநிலத்தில் நீங்கள் சற்றும்
பேதமில்லை யெங்களுடை பிறவிகள் தாமென்று
சொல்ல
ஏதுமொரு குறையுமில்லை எம்முடனே இருங்கள்" (14)

என்று தீண்டாமையை ஒழிக்க வழிவகுக்கிறாள்.

"மாகங்கள் எங்கு மிருண்டு பரந்துமழை
மாரிவந்து தழைக்க வேணும்" (23)

"பிழைக்கும் படியில் வுலகுள்ளோர் களுக்காகப்
பெருமாரி வந்து பொழியவும் வேணும்" (24)

"தீமிதியென மழைபொழியத் தேசமெல்லாம் மிகத்
தழைக்க
மழைவேணும் என்தாயே மதுரைநகர் தழைக்க
வென்றார்" (26)

என்று இடைக்குல மாதர்கள் மழைகோரிக் கண்ணகையை வேண்டுகின்றனர். மகளிர் வேண்டியதால் மழைபொழிந்ததாகவும் கூறப்படுகிறது. (27, 29, 36) கண்ணகியே பின்னால் மாரியம்மனாக மாறினாள் என்பார் கூற்றுக்கு இப்பகுதி அரண் செய்வதாக அமைகிறது.

கண்ணகி வழக்குரைநூல் ஓர் ஈழ வரலாற்றுக் காவியம்

வழக்குரை நூல் மணிப்பரல் சம்பந்தமாக வேறு பல செய்திகளைத் தொடர்புபடுத்திக் கூறுவதால் தமிழ் மக்களின் நுண்தொழில் வன்மையினையும், அவர்தம் போர்த்தொழில் திறமையினையும் நன்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது. கப்பல் வைத்த காதை கடலோட்டு காதை ஆகிய காதைகள் இதைத் தெளிவு படுத்தும்.

இந்நூலில் வருகின்ற அணிகலன்கள் பலவற்றின் பெயர்கள் மட்டக்களப்போடு தொடர்புள்ளனவாகக் காணப்படுகின்றன. கொப்புவாளி, மேல்வாளி, உட்கட்டு, காறை, கைக்கட்டு, பீலி முதலிய நகைகளை இந்நாட்டுக் கிராமப்புறத்து மக்கள் சிலர் அணிகின்ற வழக்கம் இன்றும் நடைமுறையில் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

மாதவி அரங்கேற்றுக் காதையில் சிலப்பதிகாரம் கூறுகின்ற இசை நாடக இலக்கணங்களினால் மட்டக்களப்பு நாட்டுக் கூத்தின் சாயல் கலந்துரைக்கப்படுகிறது. மட்டக்களப்பு நாட்டில் வழங்கப்படுகின்ற 'வடமோடி' நாடகங்களில் நாடகப் பாத்திரங்கள் கூறுகின்ற தன்மைம் பாட்டுரைகள பல, மாதவியின் பேச்சில் வருவது ஒப்பு நோக்குதற்குரியது. தாளக்கட்டுகள் என்கின்ற நாட்டுக்கூத்துச் சம்பந்தமான நாட்டியக் கலைச்சொல் வரிசைகளும் மாதவி நடனத்தில் இடம்பெறுதல் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

வழக்குரை நூலில் மட்டக்களப்பு பேச்சு வழக்குச் சொற்கள் பல வருகின்றன. எடுத்துக்காட்டாக "விடுப்புப் பண்ணுதல், பணிவிடை, அடசுதல், வாண்டிச்சைப்பட்டிருத்தல், கழிசறை, அடிச்செழுப்பினாற்போல, கிளப்பி விட்டு செம்முதல்" ஆகிய சொற்களைக் கூறலாம்.

மட்டக்களப்பில் கலந்த இராமநாதபுரத்திலிருந்து இடம் பெயர்ந்து சிறப்புச் சொல்லாக மாறிய–மொண்ணையப்பர் என்ற பெயரும் இந்நூலில் வருகிறது.

தமிழக ஈழ உறவு

கண்ணகியின் சிலம்புக்கு நாகமணி தேட, கப்பல் கட்ட வேண்டிய மரம், ஈழத்திலிருந்து கொண்டுவரப்படுகிறது. கப்பல் வைத்தல் (200-296) காதை மானாகன் கொடுத்தனுப்பிய பாகுடங்கள் (அன்பளிப்பு பொருட்கள்) பற்றிக் கூறும்போது "இலகுமணி நாடதனில்" என்று ஈழ நாடு குறிக்கப்படுகிறது. (மீகாமன் 109)

மாதவிக்கு இசைகற்றுக் கொடுக்கப் பல திசைகளிலிருந்து இசை வல்லுநர்களை அழைக்கின்றனர். அப்போது இலங்கையிலிருப்பவர்களையும் அழைப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஈழமறக் கற்றுணர்ந்தோர் இசைகள் வல்லோர்
தமையழைத்தார் (மாதவி அரங்கேற்று: 47)

என இவ்வாறு சோழ நாட்டு உறவு கூறப்படுகிறது. புகாரிலிருந்து ஈழத்திற்குச் செல்லும் வழிகளும் விளக்கமாகக் கூறப்படுகின்றன.

ஆசிரியர் அக்காலத்திலிருந்த பல தீவுகளை அறிந்துள்ளார். மரம் கொண்டு வரச் சென்ற கப்பல்கள் தரங்கம்பாடி, நாகூர், சீனக்குன்று முதலான கடற்கரைத் துறைகளைக் கடந்து இலங்கைக் கரையை அடைந்தன. அங்கே செம்மலை, கொச்சாலை, கொக்கிளாய், யானையாறு, சலுப்பையாறு, கண்டியாறு, புறாமலை, திருக்கோணமலை, மகாவலி, கங்கை, யமுனை, நாச்சிலைப்பத்தை, பன்றித்தீவு, பாலமுனை, பாசிக்குடா, ஏறாவூர், புளியந்துறை, மட்டக்களப்பு, கண்டபாணந்துறை, பாணகை, இராவணன் கோட்டை, தங்கசாலை, வலிகாமம், காலி கொழும்புத்துறை என்பவற்றை முறையே கடந்து அலுத்காமத் துறையினைச் சேர்கின்றன. (மீகாமன் கதை 140-158). மரங்களை எடுத்துக் கொண்டு மீண்டுவரும் கப்பல் மக்கூன், களுத்துறை, உழுத்தவள்ளம், வத்தாலை, நீர்க்கொழும்பு, சிலாபம், குதிரைமலை, காரைத்தீவு, சில்லங்கரை, இராமேசுவரம், மறைக்காடு, பொய்யூர் ஆகிய இடங்களைக் கடந்து நாகப்பட்டணத்தை வந்தடைகின்றன. (மீகாமன் கதை 181-195)

நாகமணி பெற்ற பிறகு கப்பல்கள் கைதல் தீவு, பருத்தித் தீவு, ஊர்காவற்றுறை, கடற்காரைத் தீவு (196-197) முதலிய தீவுகளையும் புதுப்பள்ளி, தாவூர் முதலிய இடங்களையும் கடந்து வந்தன (மீகாமன் கதை 370-371)

இராமாயண மகாபாரத நூல்களின் தாக்கம்

சிலம்பிலும் இராமாயணத் தாக்கம் ஏற்பட்டுள்ளது. கவுந்தியடிகள் கோவலனுக்கு ஆறுதல் கூறுமுகமாக,

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுத்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ"
(சிலம்பு : ஊர்காண் 46-49)

என்று இராமன் கானகம் போந்ததற்கும் கோவலன் மதுரைக்குச் செல்வதற்கும் ஒப்புமைப் படுத்திக் காட்டுவர்.

கண்ணகை வழக்குரையில் அவள் சிலம்பில் பரவலாக இடுவதற்கு நாகமணி கொண்டு வர விரும்புகின்றனர். அதற்கான ஏற்பாடுகளில் ஒரு கப்பற் படையே உருவாகிறது. அக்கப்பற்படைக்குத் தேவையான மரங்கள் கலங்களில் கொண்டு வரப்படுகின்றன. அக்கலங்கள் "சீதையை இராவணன் கவர்ந்து செல்லும் போது "அழுத்தமான சடாயு வந்து போரிட்டு முத்தி பெற்ற உழுத்த பள்ளத்தைக்" கடந்து ஓடியதாம். (துரியோட்டு 183) மேலும் வயந்தமாலை கோவலனிடம் தூதாகச் சென்றமைக்கு அனுமன் சானகியிடம் தூது சென்றமை உவமிக்கப்படுகிறது. (வயந்தமாலை தூது 42). ஊழ்வினையால் கண்ணகையும் கோவலனும் மதுரை சென்றதற்குச் சீதை இராவணனால் சிறை வைக்கப்பட்டமை ஒப்புமைப் படுத்தப்படுகிறது.(வழிநடை 202) கண்ணகை மதுரையை எரித்தலும், அனுமன் இலங்கையை எரித்தலும் பொருத்தமாக்கப்படுகிறது. (உயிர் மீட்பு 248) இராவணன் வேகவதியை மானபங்கம் செய்தபோது அவளிட்ட சாபத்தால் இலங்கையும் அரக்கரும் அழிந்ததுபோல் கண்ணகை சாபத்தால் மன்னவனும் கூடலும் அழியுமே என்று பாண்டிமாதேவி அஞ்சுகிறாள். (வழக்குரை 160) கைகேயி உரையால் இராமன் பிரிந்த சமயத்தில் கலங்கிய தசரதனைப்போலக் கண்ணகை வழக்குரைத்த போது மன்னன் கலங்குகிறான். (வழக்குரை 170). சூர்ப்பணகை வரவு கண்ட இராவணனும் சுற்றமும் பொலிவிழந்தது

போலக் கண்ணனை வரவுகண்ட மன்னனும் சுற்றமும் பொலிவிழந்தனர். இராமாயணம் இந்திய ஈழ நாட்டுடன் தொடர்பு கொண்டது. கண்ணகி வழக்குரை சோழ ஈழ நாட்டுடன் தொடர்பு கொண்டது. 'கண்ணகி வழக்குரை' யில் இராமாயணத் தாக்கம் ஏற்பட்டதற்கு இது ஒரு காரணமாகலாம்.

மகாபாரதத்தின் தாக்கமும் இக்காவியத்தில் காணப் படுகிறது. வயந்தமாலை கோவலனிடம் தூது சென்ற தற்குக் கண்ணன் துரியோதனனிடம் தூது சென்றது உவமிக்கப்படுகிறது. (வயந்த மாலைதூது) கண்ணகையும் கோவலனும் ஊழ்வினையால் மதுரை சென்றதற்குத் திரௌபதி பாண்டவருடன் வெய்ய கானகம் போனது எடுத்துக் காட்டப்படுகிறது. (வழிநடை 202) நூற்று வர்க்கு இடர்விளைத்த சகுனிபோல், பொற்கொல்லன் செய்த பாதகத்தால் வழுதியர்க்கும் கூடலுக்கும் வினை வாய்த்தாகப் பாண்டியமாதேவி புலம்புகிறாள். (வழக் குரை 125) "அசுவத்தாமா" என்று பொய்யும் மெய்யும் கலந்து சொன்னதால் தருமனுக்கு நரகம் கிடைத்தது. அது போலச் சிலம்பு தன்னுடையது என்று பொய் சொன் னால் தனக்கும் நரகம்கிடைக்கும் என்று பாண்டியன்தேவி அஞ்சுகிறாள். (வழக்குரை 160) பாஞ்சாலியைத் துச்சாதனன் துகிலுரித்த போது மன்னர் சபை இருந்தது போல, கோப்பெருந்தேவி "தன் சிலம்பல்ல" என்று சொன்னதைக் கேட்டவுடன் கலங்கிய மன்னனின் ஓலக்கம் இருந்ததாம். (வழக்குரை 170) இறந்த துச்சாதனன் முடிமிதித்து நீண்ட கருங்குழல் முடித்த நீலி பாஞ்சாலியைப் போல் கண்ணகி இருப்பதாகப் பொற் கொல்லன் கூறுகிறான். (வழக்குரை 189) இவ்வாறு மகாபாரதக் கதைகளும் ஆசிரியர் நெஞ்சில் நிலவி, இக் காவியத்தில் ஆங்காங்கு ஆளப்படுகின்றன.

நம்பிக்கைகள்

'கண்ணகி வழக்குரை' எழுந்த காலத்தில் களவு, சகுனம், குறிகேட்டல் ஆகியவற்றில் மக்கள் நம்பிக்கை

கொண்டிருந்தனர். சிலப்பதிகாரத்தில் கண்ணகி பின்னால் நிகழப போவதை அப்படியே கனவு கண்டு தன் தோழி யிடம் கூறுகிறாள். (கனாத்திறம் 45-55) கோவலனும் பின்னால் நிகழப்போவதை அவ்வாறே கனவு கண்டு "கடிதீங்குறுமென" அவனே கூறுகிறான் (அடைக்கலக் காதை 95-106). பாண்டியமாதேவி குறிப்பாகக் கனவு கண்டு, வருவதோர் துன்பமுண்டு மன்னவர்க்கியாம் உரைப்போம்' என்று சொல்கிறாள். (வழக்குரை 1-12) இம்மூவர் வாயிலாகக் கனவு நிலையை இளங்கோவடிகள் விளக்குகிறார்.

ஈழக்காவியத்தில் பெண்கள் மட்டுமே கனவு காண்ப தாகக் காட்டப்படுகிறது. பெண்களின் தகுதிக்கேற்ப அவரவர்கள் பயின்ற பொருட்களே கனவில் வருதல் கவனிக்கத் தக்கது. கண்ணகி, பாண்டியமாதேவி கனவு களில் மட்டும் பின்வரும் நிகழ்ச்சிகள் முன்னதாகவே காட்டப்படுகின்றன. மற்றையோர் கனவுகள் தீங்கு வரும் என்று குறிப்பாகக் காட்டும் நிலையில் அமைக்கப் படுகிறது. அவல உணர்வை எழுப்பவும், விளக்கிக் கூறவும் ஏற்றதொரு உத்தியாகக் கனவுகள் பயன்படுத்தப் படுகின்றன. இளங்கோவடிகளைப் போலவே இவ்வாசிரியரும் ஊழ்வினை வழியே கனவின் பயன் அறிந்த மாந்தரும் செல்வதாகக் காட்டுகின்றார். பின்னால் நிகழப்போகும் நன்மை தீமை இரண்டினை யுமே குறிக்கக் கனவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

மாசாத்துவான் மனைவி இறைவன் பொன்னெழுத் தாணி கொடுத்ததாகக் கனவு காணல் கோவலன் பிறப் பைச் சுட்டுகிறது. (கோவலனார் பிறந்தகாதை 17) கோவலன் பிரிந்தபிறகு, மாதவி கோவலனுடன் தான் பள்ளியறையில் இருந்ததாகக் கனவு கண்டு ஆறுதல் அடைகிறாள். ஆனால் கனவு விளக்கம் கூறப்படவில்லை. (இரங்கிய கதை 137-142)

கொலைக்களக் காதையில் 'அம்மன் கனாக்கண்ட கதை' என்று தலைப்பில் கனவுக்கு முதன்மை

கொடுக்கப்படுகிறது. பல கனவுகள் தீமைக்கு அறிகுறி யாகவே காட்டப்படுகின்றன.

வெடியரசன் மனைவி நீலகேசியின் கனவு, வரப் போகும் தீமையைக் குறிப்பதாகவே அமைகிறது. நட்சத் திரங்கள் உதிர்தல், கல்மழை பொழிதல், சப்த சமுத்திரங் கள் பொங்குதல், அரசியின் பற்கள் உதிர்தல், பட்டத்து யானையின் கொம்பு உதிர்தல், மன்னவன் வாள்முரிதல், (கடலோட்டு 9-21) என இந்நிகழ்ச்சிகள் மூலம் பின்னால் தீமை நேர்வது உணர்த்தப்படுகிறது.

கண்ணகையின் கனவும் பின்வரும் நிகழ்ச்சிகளைக் காட்டுகிறது.

1, வேங்கை மரத்தடியில் கோவலனார் இருகூறாய்க் கிடத்தல், கழுகினங் காத்திருத்தல், ஒரு தட்டான் கள்ள னென்று பிடித்து வெட்டுதல் (அம்மன் கனாக் கண்ட காதை 186.188) ஆகியன கூறப்படுகின்றன.

2. மான் கிளையொடு வருங்கால், வேடன் கணை தொடுத்து ஆண்மான் விழுதல், பெண்மான் புலம்பி விழுதல் (கனாக் 190-293) என்று கனவு கண்ட கண்ணகை "காற்சிலம்பு பறிபோகும், கோவலற்குத் தீங்குவரும் மதுரை அழியும்" என்று பலனும் கூறுகிறாள். (194)

3. சிறப்பாகச் செய்த திருமணத்தில் கட்டியதோர் மாங்கல்யம் கழுத்தை விட்டுத் தெறித்து தானே இடு காட்டுக்குப் போதல், கோவலனாரைக் கொள்ளி வைத்தல் (அம்மன் கனாக் கண்ட காதை 196-200) ஆகிய கனவுகள் புதுமையானவை.

பாண்டியமாதேவியின் கனவில், பின்னால் நிகழப் போகும் நிகழ்ச்சி அப்படியேமுன்னால் காட்டப்படுகிறது. "மதுரை மாநகரில் கிளி மொழியாள் ஒருத்தி விரித்த கூந்தலுடன் கண்ணீர் சொரியக் கையில் ஒற்றைச் சிலம்புடன் உலாவுதல், பட்டத்து யானை வீழ்ந்திறத்தல், வானளாவிய கோபுர மீதில் இடிவிழுதல், தீப்பொறி

பரந்து மதுரை எரிதல் (வழக்குரை 21-23) ஆகியன சுட்டப்படுகின்றன.

ஆய்ச்சியரும் கனவு காண்கின்றனர். பொலி எருது படுதல், ஆடு மாடு அழிதல், பண்டங்கள் அழிதல், வீடு தீப்பிடித்தல், வேளாண்மை அழிதல், சூறாவளியால் கதிர் அழிதல், உறியில் வைத்த நெய்க்குடத்தைப் பூனை தள்ளி உருட்டுதல் (வழக்குரை 201-203) என இவ்வாறு கனவுநிலை இயற்கையாகக் காட்டப்படுகிறது.

சகுனம்

அக்கால மக்கள் சகுனங்களில் கொண்ட நம்பிக்கை புலப்படுகிறது. இளங்கோவடிகள் சகுனங்களைப் பற்றி அதிகமாகக் குறிப்பிடவில்லை. இமிலே றெதிர்ந்ததிழுக் கென அறியானாகக் கோவலன் செல்கின்றான் (கொலைக் களக் காதை 100) கண்ணகி வழக்குரையில் ஒவ்வொரு வரும் சகுனங்களையும் விளையும் பயன்களையும் கூறுகின் றனர்.

கோவலன் கண்ணகையுடன் பாண்டிய நாட்டிற்குப் புறப்படும் போதே தீச்சகுனங்கள் தோன்றுகின்றன. நரி, எருமை, அணில், மரைமான், எறும்பினம், பசுவினம், கீரி, குழியாமை, காகம், செம்போத்து, மயில், நாரை, சிவல் ஆகியன இடம் போதல், முயல், செந்நாய், வானரம் மூஞ்சூறு, உடும்பு, சாரை, வலியான், இராசாளி, பருந்து, ஆந்தை, காடை ஆகியன வலம் போதல் தீங்கு பயக்கும் (வழிநடை 184–197) என்று நினைத்த கோவலன் கண்ண கையிடம் மறைத்ததாகக் கூறப்படுகிறது. கண்ணகி தன் கணவன் சிலம்பு விற்கப் புறப்படுமுன், நல்ல சகுனங்களை யும் தீய சகுனங்களையும் பார்த்து அதன்படி நடக்க வேண்டும் என அறிவுரை கூறல் சிலம்பு கூறாத ஒன்று. (அடைக்கலம்50–55) கண்ணகியின் தோள் துடிக்கிறது. (அம்மன் கனாக் கண்ட கதை 192) சிலம்பு விற்கச் செல்லும் கோவலன், வலப்பல்லிதடுத்திடல், விறகுச் சுமை

எதிர்வருதல், வெறுங்கழுத்தி வருதல் ஆகியவற்றைக் கண்டு வருந்திச் செல்வதாகச் கூறப்படுகிறது.(அடைக்கலம் 93). மழுவரசன் மாலகன் மனைவி மழு எடுக்கும் போது தும்ம, அதனால் அவள் பயந்து அரசனுக்கும் நாட்டுக்கும், படை வீட்டுக்கும் தீமை ஏற்படப்போகிறது என்று பின்னால் வருவதை முன்னாலேயே கூறுவதாகக் காட்டப்படுகிறது. (கொலைக்களக் 149-152) மாலகனும் "கொடி பறந்து இரங்கியழுவது கண்டு" அடுத்த தினம் இப்பதிக்கு அழிவு வரும் என்கிறான். (கொலைக்களக் 153).

விரிச்சி, சோதிடம், குறி கேட்டல்

பின்னால் நிகழபபோவதை முன்னமேயே அறிய குறி, சோதிடம் ஆகியவற்றைக் கேட்பதாக இளங்கோவடிகள் தன் காவியத்தில் குறிக்கவில்லை. ஆனால் ஈழக்காவியத் தில் இவை கையாளப்படுகின்றன. கோவலன் சிலம்பு விற்கச் செல்லுமுன் வழியில் எதிர்படுபவர்களிட மெல்லாம் குறி கேட்கிறான். அவர்களும் பின்னால் நிகழப் போவதைத் தெளிவாக – முன்னதாகக் — கூறு கின்றனர். ஆனாலும் அதைத் தெரிந்தே அவன் விதிக்கு ஆட்படுகிறான். இப்பகுதிகள், சிலப்பதிகாரத்தில் கிடையாது.

விரிச்சி கேட்டல்: செம்மானிடத்துச் சோதிட முடிவு அறிந்து வழிச்செல்க என்று கண்ணகையே கோவலனிடத் தில் கூறுகிறாள். கோவலன் அறுகு, பச்சையரிசி முதலிய வற்றை எடுத்துச் செல்கிறான். செம்மான் அவற்றைக் கையில வாங்கிக் கூரையிலே போட்டுச் சிறந்த மொழி கேட்டு நிற்குமாறு கோவலனை விடுகிறான். இவ்வேளை செம்மானுக்குத் தாகமெடுத்ததால் மனைவியிடம் தண்ணீர் கேட்கிறான். அவள் காலம் தாமதித்ததால் செம்மான் அவளை அடிக்கிறான். அதனால் செம்மாத்தி "என்னை அடித்ததனால் உனக்குக் கேடு உண்டாகும். உன்னுடைய உடலும் இரு துண்டாகும். அரசனும் உன்னைப் பிழை கூறுவான். உன் கையிலுள்ள

பொருளாலே உனக்குத் தீங்கு வரும். ஈயினமும் எறும்பினமும் உன் உடலை அழித்திடும்" (அடைக்கலக் காதை 59-65) என்று சாபமிடுகிறாள். இதைக் கோவலன் கேட்டு வருந்திக் கண்ணகையிடம் மறைப்பதாகக் கூறப் படுகிறது. சங்க இலக்கியத்தில் மகளிர் விரிச்சி கேட்ப தோடு இப்பகுதியை ஒப்பிடலாம்.

குறத்தி குறி கூறல்

சிலம்பு விற்கச்செல்லுமுன் குறத்தியிடம் குறிகேட் கிறான் கோவலன். பணியாரமெல்லாம் வாரி, அவள் கைக்கொடுக்க, நெற்குறியாலும், நிமித்தக் குறியாலும் பல்லி சொன்ன குறியாலும், கணித்துப் பலன் கூறு கிறாள் குறத்தி. 'மகனே, நீ சிலம்பு விற்பதற்கென்று வடக்கிலிருந்து வந்திருக்கிறாய். உன் சிலம்பைத் தட்டான் ஒருவன் கண்டு உன்னைக் கள்வனென்று பாண்டியனிடம் ஒப்புவிப்பான். அதையறிந்து கொடியிடையாள் வந்து பாண்டியனோடு வழக்குரைப்பாள். இதுதான் நெற்குறி. ஆகவே மதுரைக்குச் செல்லாமல் வீடு செல்க, என்று அறிவுரையும், கூறுகிறாள். கோவலனோ குறத்தி குறி பிழையானது என்று எள்ளி உரைக்கிறான். குறத்தி பதிலுக்குத் தானும் நகைத்து "சிவன் பாதம் தொழுது போவாயாக" என்று கூறுவதாகச் சுட்டப் படுகிறது. (அடைக்கலம் 91-104)

சோதிடம் கேட்டல்

கோவலன் சிலம்பு விற்கச் செல்லும் வழியில் வெற்றிலைப் பாக்கு வைத்துச் சோதிடம் கேட்கிறான். சோதிடர் வெற்றிலைப்பாக்கு எடுத்து வகுத்து 'சிங்கராசி உதயமாகையினால் நன்மைப்பலன் இல்லை' யென்கிறார். கோவலன் மனைவியுடன் மதுரைக்குச் சிலம்பு விற்க வந்தமை, அட்டமத்துச் சனிப்பார்வையால் பொருள் களைத் தோற்றமை, தட்டான் ஒருவனால் கொலை யுண்ணப் போவது ஆகியவற்றைக் கூறுகிறார். (கொலைக்களக் 70-75)

சாதகம் கணித்தல்

குழந்தை பிறந்த போதும், நல்ல முகூர்த்த நாளில் செயல் தொடங்கவும் சோதிடம் பார்க்கப்படுகிறது.

பாண்டியன் மகளாகப் பிறந்த கண்ணகையினால் நகருக்குத் தீங்கு வரும் என்று சோதிடர் கூறுகின்றனர். அவளுக்குச் சாதகம கணிக்கவில்லை (அம்மன் பிறந்த கதை 67-69) கோவலனுக்கும் சாதகம் கணிக்கவில்லை. ஆனால் மாதவிக்கு மட்டும் சாதகம் கணிக்கப்படுகிறது. (மாதவி அரங்கேற்று 31, 32) ஏழாம் இடத்தில் வெள்ளி நின்றதால் "வருகணவன் செங்கையினால் உள்ள பொருள் தோற்பான், அவன் தேவி கொங்கையினால் அழியும் கூடல்" என்று பின்னால் வருவதை முன்னமேயே சாதகம் கூறுகிறது. சித்திரை நாளில் பூர்வ பக்கத்துப் பஞ்சமி திதியன்று கன்னி லக்கனமும் பொருந்த வந்து புதன் கிழமையாகிய முகூர்த்த நாளில் நடனம் ஆரம்பமாகிறது. (மாதவி அரங்கேற்று 60) அரங்கு அமைத்தற்குரிய சுபநேரம் வைகாசி மாதம் 10

12	ல சூ. பு.	2	இரா
சனி			4
10			சந்
கே	8	வெ	வி. செ.

ஆம் நாளன்று உரோகிணி நட்சத்திரமும் சப்தமி திதியும் இடபராசியும் கூடிய நல்லவேளை எனக் கணிக்கப் படுகிறது. (மாதவி அரங்கேற்று 34-35). ஆவணி மாதம்

திருவோணம் கூடிய ஒரு வியாழக்கிழமை கன்னி லக்கினத்தில் விழிந்து பத்து நாழிகையுள் (மாதவி அரங்கேற்று 157, 158) நடன அரங்கேற்றம் நடக்கிறது. மாதவிக்கு மட்டும் சோதிடம் கணித்தல் குறிக்கத் தக்கது.

"உற்ற அலகெடுத் துளநா ளறுக்கும்
ஒண்புகார் அந்தண கேசரி சொல்வான்
பற்றுள சித்திரை முப்பதின் மூன்றாம்
பக்கம் வியாழக் கிழமை மகத்தில்
கற்றோருங் கன்னிவி யாழன் கோரையில்
தோன்றும் முகூர்த்த மாகப் பிறந்த
பொற்கொ டிக்குக்கோ ளுதயமா தித்தன்
பொருந்திய மூன்றாம் இடத்திலே யிராகும் (31)

"ஆகிய ஏழா மிடந்தன்னில் வெள்ளி
ஆறா மிடந்தன்னிற் செவ்வாய தாகும்.
ஏகிய சென்மந்த னிற்புத னுடனே
எண்ணும் வியாழன் ஆறாம்இடந் தன்னில்
வாகு படப்பதி னோரா மிடந்தனில்
வந்த சனியினால் வாழ்வுகள் உண்டு
ஆகு மிவள்குல மாணிக்கத் தண்டேறி
ஆயிழை வாழ்நாள் எனவுரைத் தாரே" (32)

என்று மாதவியின் சாதகம் கணிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பலனும் கொடுக்கப்பட்டுள்ளது.

"அரிவையற்கு மேழா மிடந்தனிலே யந்தப்
பெருகுவெள்ளி நின்றதனாற் பின்பு-வருகணவன்
செய்கையினால் உள்ள பொருள் தோற்பன்
அவன்தேவி
கொங்கையினா லழியும் கூடல்" (33)

என்று மாதவியின் சாதகத்தில் அவளுக்குரிய பலன் கூறுவ தோடு அவளுடைய கணவன், அவனுடைய மனைவி

ஆகியோருடைய பலனும் கூறப்படுகிறது. பின்னால் கூடல் அழியப் போவது முன்னமேயே தெரிய வருகிறது மாதவியின் சாதகம் இந்நூலைத் தவிர வேறெந்த நூலிலும் குறிக்கப்படவில்லை.

இளங்கோவடிகள் மதுரை எரியுண்ணும் நாளைக் குறிப்பிடுவார். (கட்டுரை 133-137) கண்ணகி வழக்குரையில் அந்த நாளைக் குறிப்பிடவில்லை.

இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்

சிலப்பதிகாரத்திலும் வெட்டுண்ட கோவலன் எழுந்து பேசுதல், கொங்கையால் மதுரை எரித்தல், மதுரை எரியும் போது தெய்வங்கள் பேசுதல், மதுராபுரித் தெய்வம் பேசுதல், கோவலன் கண்ணகி இந்திர விமானத்தில் போதல் ஆகிய இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

கண்ணகி வழக்குரையிலும், பல இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. அம்மன் பிறந்த கதை முழுவதும் இயற்கை இறந்த நிகழ்ச்சியே. நாகரசனிடம் நாகமணி பெறுதல், (மணி வாங்கிய கதை 162-186) கண்ணகி ஊசி வாங்கித் தன் புடவை நூலை எடுத்துத் தன் கணவன் உடலைத் தைத்தல் (உயிர் மீட்புக்காதை 285-290) ஆகியவற்றைக் குறிக்கலாம்.

கண்ணகை அம்மன் குளுத்திப் பாடல்

கண்ணகி வழக்குரை என்னும் ஈழ நூலில் 'கண்ணகை அம்மன் குளுத்திப் பாடலும்' பிற்சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. கணவன் கொலையுண்டதால் பொங்கியெழுந்து மதுரையை எரித்த கண்ணகியின் கோபத்தை ஆற்றும் முறையில் இது பாடப்படுகிறது.

கண்ணகை அம்மன் சடங்குகால இறுதி நாளில், கடைசி நிகழ்ச்சியாக நடைபெறுவது கண்ணகை அம்மன் குளுத்தி (குளிர்ச்சி) என்னும் பூசனை. அவ்வேளையில் தவறாது படிக்கப்பெறும் தனிசசிறப்பு வாய்ந்த இக் குளுத்திப் பாடல், விநாயகர் துதியுடன் தொடங்குகிறது. 92 பாடல்கள் அடங்கிய இந்நூல் கதைப்போக்கில் செல்கிறது.

இந்நூலில் கண்ணகி காளியின் அவதாரமென்றோ தெய்வப்பிறவியென்றோ குறிப்பிடப்படவில்லை. மேலும் இக்குளுத்திப் பாடலில்,

"ஒருமா பத்தினி வந்தாள்
உலகேழும தழைத்திட வந்தாள்
திருமாமணி தங்கை வந்தாள்
தேசம் தழைத்திட வந்தாள்" (31)

என்று இதனை இயற்றியவர் பாடியிருப்பதும்,

"தேனாரும் செஞ்சொல் சிலப்பதி காரமதை
எந்நாளும் போற்றி இனிதூழி வாழ்வாரே"

என்று இறுதியில் கூறியிருப்பதும், இவர் சிலப்பதிகாரத் தைப் பயின்றவர் எனபதை உறுதிப்படுத்துகிறது.

இந்நூலிலும் கவுந்தியடிகள் கோவலன் கண்ணகி யோடு மதுரை சென்றார் என்று கூறப்பட்டிருப்பதும் கண்ணகியும் கோவலனும் பொன்னின் மணிசசிவிகையில் சென்று இடையர் தெருப் புகுந்தார் (6) என்று கூறியிருப் பதும் குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

"எண்ணமொன் றறியாத கோவலனாரும்
ஏறாவிலை மாற்றஞ் சொன்னவாறே" (8)

என்றும்,

"விற்குஞ் சிலம்புவி லைபெரிதென்று
வேளாளர் கொள்ளாமல் மீண்டபோது
தர்க்கம் பெரியதோர் தட்டானார்க்குத்
தன்கைச் சிலம்பதைக் காட்டினாரே" (9)

என்றும் கூறியிருப்பதிலிருந்து கோவலன் சிலம்பின் மதிப்பை அறியாமையால் தானே ஒரு விலையை நிர்ணயித்து விற்றமையும், வேளாளன் அதிக விலை என்று சொன்னமையால் தட்டானிடம் சிலம்பின் விலையை அறியச் சென்றான் என்றும் கருத இடந்தருகிறது. கோவலன் தட்டானிடம் சென்ற காரணத்தைத் தெளிவாக வேறெந்த நூலும் கூறவில்லை.

கணவன் இறந்ததாகக் கண்ணகி கனவு கண்டவுடனே, "மாவல யஞ்சூ ழுலகறிய, மதுரை, யெரிப்போ மென நினைத்தாரே" (12) என்று கூறுவதாக இந்நூல் கூறியுள்ளது. இதைக் கேட்ட மாதரி "மெல்லி நல்லாள் தம்மை அங்கிருத்தி, தூமொழி யாரே நீர் சொன்ன மாற்றம் தொல்குலத்தோர்க்கு முடியாது" என்று மறுத்துக் கூறினாள். (13) கண்ணகி எவ்வாறு எரித்தாள் என்று இந்நூல் கூறவில்லை. மாதரி தூய நெய் நூறுகுடம் கொங்கையில் அப்பிய பிறகே கண்ணகியின் சினம் ஆறியது. (16) அப்போது அங்குச் சீத்தலைச் சாத்தனார் வந்து 'சினம் ஆறுக' என்று வேண்டினார். "நீ வரும் திங்களைக் கூறுக" என்று கேட்க (17) வைகாசித்திங்களில் வருவேன் என்று கண்ணகி பதில் கூறினாள். (18)[வைகாசி மாதம் பூரணை நாளில் காரைத்தீவு முதலான சில ஊர்களில் கண்ணகை அம்மன் கோயில்களில், வைகாசி மாதப் பூரணையோடு அல்லது பூரணையை அடுத்து வருகின்ற திங்கட்கிழமை என்று கொண்டு அந்நாளிலேயே குளுத்திப் பூசனையை நடத்துவர்]

கண்ணகி கோவலனுடன் சேர்ந்து தேவருலகம் சென்றதாகச் சிலப்பதிகாரம் கூற இந்நூல், மாதரியுடன் சேர்ந்து வானோர் எதிர்கொள்ளக் கண்ணகி சென்ற

தாகக் கூறுகிறது. (19) இத்துடன் நிகழ்ச்சி முடிந்தாலும் கதை தொடர்கிறது. கண்ணகி அம்மானை ஆடியதாக ஒன்பது பாடல்கள் கூறுகின்றன. (21-29) கண்ணகியின் வருகை ஒன்பது பாடல்களில் கூறப்படுகின்றன. (31-39)

"ஏற்ற மிகுந்தேர் பாண்டியன் றன்னை
இழுக்காடி வென்றவள் வந்தாள் வந்தாள்
மாற்ற மிகுந்தேர் மன்னவன் றன்னை
வழக்காடி வென்றவள் வந்தாள் வந்தாள்
(31-39)

என்னும் அமைப்பில் வருகைப் பாடல்கள் அமைந்துள்ளன. அன்னையின் சினம் ஆறும்படியாக அவள் அருளை வேண்டி நிற்கும் முறையில் பாடல்கள் அமைந்துள்ளன.

விழிகளி ரண்டும் அருவிபாய
வேக முடனே மதுரையில்வந்து
வழுதி மதுரை யெரித்தகோபம்
வன்சமர் வேல்விழி யாளே யாராய்" (44)

என்று கண்ணகையின் அருள் வேண்டப்படுகிறது.

கண்ணி வடிவில் அமைந்த இப்பாடல்கள் அன்னை குளிர்ந்து அருள்புரியவேண்டும் முறையில் அமைந்துள்ளன. கண்ணகியைக் கண்ட பாண்டியன் அஞ்சி ஏழு கதவுகளையும் அடைத்துக் கொண்டதாகவும், அன்னையின் படைக்கலம் ஏழு கதவுகளையும் உருவி, மார்பில் தைத்ததாகவும் கூறப்படுகிறது.

"ஓடியோ ரேழுகத வடைத்தான் பாண்டியனும்
ஏழுகத வுருவி மார்புருவத் தைத்துவே" (17)

என்று அன்னையின் ஆற்றல் கூறப்படுகிறது. மதுரையை அழித்தபிறகு கண்ணகியே இடையர் அகம் புகுந்ததாக

வும், அங்கு ஆய்ச்சியர் வெண்ணெய் அப்பியதாகவும் கூறப்படுகிறது.

இந்நூல் ஆசிரியர் பாடினோர், படித்தோர், கேட்டோர், அனைவரும் பிணி நீங்கி எக்காலமும் வாழி (90) என்று வேண்டும் முறை புதுமை யாக உள்ளது. அஃறிணை உயிர்களும் நோய் பிணி நீங்கி வாழ்ந்திட வேண்டுகிறார் ஆசிரியர். இந்நூலைப் படித்தவர்கள் அடையும் பயனையும் ஆசிரியர் கூறுகிறார்.

"ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேருன்றி
மூங்கில்போல் சுற்றம் முசியாது வாழியரே" (86)

"கன்று கிளைக்கக் கறவையின முண்டாக"
இன்றுள்ளோ ரென்று மினிதூழி வாழ்வாரே" (87)

'கற்பதித்த தூண்போற் கலங்காப் பதியனையார்
நெற்பதித்த தூண்போல நீடூழி வாழ்வாரே" (88)

என்று நூற்பயனைக் கூறுமுகத்தான், தெய்வமான கண்ணகியைத் தொழ வேண்டியதின் இன்றியமையாமை யையும் ஆசிரியர் தெளிவுறுத்துகிறார்.

கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியம்

கண்ணகி வழக்குரையைத்தவிர, இலங்கையில் மட்டக் களப்புப் பகுதியில் கண்ணகையம்மன் கோவில்களில் பாடப்படும் வேறு சில பாடல்களும் உள்ளன. அவற்றை யும் கண்ணகி வழக்குரையின் பதிப்பாசிரியர் வி. சி. கந்தையா அவர்கள் தமது நூலில் பிற்சேர்க்கையாக வழங்கியுள்ளார். அவற்றில் 'கண்ணகை அம்மன் ஊர் சுற்றுக் காவியம்' என்ற பாடல் ஒன்றாகும்.

இந்நூல் மட்டக் களப்புப் பகுதியெங்கும், கண்ணகை அம்மன் கடங்கு நடைபெறும் நாட்களிற், பூசனை வேளை தோறும் படிக்கப்படும் சிறப்புடையது. இந்த ஊர் சுற்றுப் பாடல்கள் உடுகுச் சிந்து என்றும் வழங்கப் பெறுகின்றன.

விநாயகர் துதியுடன் ஆரம்பமாகும் இந்நூல் 72 பாடல்களைக் கொண்டது. இந்நூலிலும் காளியே கண்ணகியாக அவதரித்தாள் என்று கூறப்படுகிறது.

"சிவனா ரிடந்தனி லிருந்து விளையாடியே
சிலநாளில் ஒருபொழுது சிந்தையில் நினைந்து
பவமான பிணிதீரப் படிமீதில் வந்து
பாண்டியன் கூடலின் உள்ளே புகுந்து
தவமான மானாகர் மகளான கண்ணகை" (25)

என்று கூறப்படுகிறது. சிலப்பதிகாரக் கதையை உள்ள டக்கியதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

"செட்டிமா னாகர்மக ளாகவந் தாயே
தென்னவன் பதியழிய வேசினந் தாயே
வட்டமுலை யைத்திருகி விட்டெறிந்தாயே
மாசாத்து வார்மகனை நீயுகந் தாயே
பட்டபுல வற்குநற் பயன்உகந் தாயே
பதியில்நீ லாவணைப் பதியில் வந்தாயே
எட்டுவரை யுன்புகழ் விளங்கவந் தாயே
இனியகற் புடையகண் ணகையெனுந் தாயே
(61)

என்ற பாடல் கதைச் சுருக்கமாக அமைந்துள்ளது.

கண்ணகியை வழிபட்டால் என்னென்ன பயன் விளையும் என்றும் ஒரு பாடல் கூறுகிறது.

"மந்தார மானதொரு வெள்ளம் பெரும்புயல்
மைக்கட லுங்கரிய வானிடி முழக்கும்
சந்தாப மாகிய பெரும்படைகள் நோய் பிணி
சகலவினை இடையூறு சண்டை கலகங்கள்
வந்தாறு மூலைப் பதிக்கொன்றும் என்றும்
வாராம லேகாத்து ரெட்சிக்க வேணும்
செந்தாமரைத் திருவே யன்னநடை யாளே
செகதலத் தோர்கள்வினை தீர்த்தமா தாவே. (58)

என்று கண்ணகியின் அருட்செயல் விளக்கப்படுகிறது.

கண்ணகி இலங்கையில் எந்தெந்த ஊரில் குடிகொண்டிருக்கிறாள் என்றும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

"பட்டிநகர் தம்பிலிவில் காரைநகர் வீரமுனை
பவிசுபெறு கல்முனைகல் லாறுமகி ழூரெருவில்
செட்டிபா ளையம்புதுக் குடியிருப்பு மண்முனை
செல்வமுத லைக்குடா சொக்கட்டிச் சோலை
அட்டதிக் கும்புகழ் வந்தாறு மூலை
அன்பான சிற்றுண்டி நகரதனில் உறையும்
வட்டவப் பூங்குழல் மணமுனைக் கண்ணகையை
மனதினில் நினைக்கவினை மாறியோ டிடுமே"(71)

என்று கூறுவதிலிருந்து கண்ணகியின் கோயில்கள் இருக்கும் இடங்கள் தெரிய வருகின்றன.

கோவலனார் கதை

ஈழத்தில் 'கண்ணகி வழக்குரை' என்னும் நூலே 'கோவலனார் கதை' என்னும் பெயரிலும் அச்சாகியுள்ளது. தென் புலோலியூர் மா. சே. சே. செல்லையா என்பவர் இந்நூலைப் பருத்தித்துறை கலாபவன அச்சகத்திற் பதிப்பித்து 1962 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இவர் பதிப்பித்த ஏடு யாழ்ப்பாணத்துப் புலோலியூர் மந்திகை கண்ணகியம்மன் கோயிலிற் பாராயணஞ் செய்யப்பட்டு வருவதாகும்.

கோவலனார் கதையும் கண்ணகி வழக்குரையும் ஒரே கதையைக் கூறுகின்றன. பாடல்களில் மாற்றம் இல்லை. ஆனால் உட்பிரிவுகளின் பெயரமைப்பில் மாற்றம் காணப்படுகிறது.

'கோவலனார் கதை'யின் பதிப்பாசிரியர், "இந்நூலை ஆக்கியவர், முன்குடாரிப்பு என்னும் கிராமத்தில் வசித்து வந்த லெற்றி வேலுச் சட்டம் பியார் என்றும் அவர் போர்த்துகீசியர் இலங்கையை அரசாட்சிசெய்த காலத்திற் பகைவர் சிலரின் தூண்டுதலால் அரசாங்கத்தினரின்

கோபத்துக்காளாகிச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார் என்றும் அவர் சிறைச்சாலையிலிருந்து கொண்டே இதைப் பாடிச் சிறைவிடப் பட்டவரென்றும் ஒரு கதை தொன்று தொட்டு வழங்கி வருகிறது. ஆனால் இந்நூலிற் காங்கேசன் றேவையர்கோன் (அரங்கேற்றுக் கதை 2) என்பவராற் பாடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது என்றும் கூறியுள்ளார் எனவே பதிப்பாசிரியர் கர்ண பரம்பரைக் கதைக்கு நூலின் அகச்சான்று, முரணானசெய்தியைத் தருவதை உணர்ந்தமை புலனாகிறது என்று வித்துவான் எஃப். எக்ஸ். சி. நடராசா என்பவர் ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு என்னும் தன் நூலில் (ப. 55) குறிப்பிடுகிறார். [இக்கதை கோவிலன் கதையை எழுதியதாகக் கருதப்படும் புகழேந்திப்புலவரின் கதையோடு ஒத்துள்ளது.] 'கண்ணகி வழக்குரை' என்னும் நூலின் பதிப்பாசிரியரும் காங்கேயன் என்பவர் இந்நூலை எழுதியதாகக் குறிப்பிடுகிறார். ஆனால் வித்துவான் எஃப். எக்ஸ். சி. நடராசா, ஆரியச் சக்கரவர்த்திகளில் ஒருவரான சுயவீரசிங்கையாரியன் (ஐந்தாம் செகராசசேகரன்) என்பவன் கண்ணகி வழக்குரை என்னும் காவியத்தைப் பாடியதாகக் குறிப்பிடுகிறார். (ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு ப.55) இவ்வாறு இந்நூலின் ஆசிரியரின் பெயரைச் சரியாக அறிய முடியாத நிலையே உள்ளது.

நிறைவுரை

கடல் கடந்து சென்ற பத்தினி வழிபாடு ஈழநாட்டில் சிறந்த காவியம் ஒன்று தோன்ற வழிகோலியது. இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தை மூலக்கதையாகக் கொண்டாலும் இந்நூலில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. கோவிலன் கதையை ஒட்டியும் சில நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. தமிழகத்தில் தோன்றிய கோவிலன் கதை என்ற நூலையொட்டிப் பல நூல்கள் தோன்றியதைப் போன்று, தமிழகத்தில் இந்த ஈழக் காவியத்தையை ஒட்டி நூல்கள் எழ வாய்ப்பில்லை. ஈழ

நாட்டைப்பற்றி மக்கள் அறியமுடியாமை ஒரு காரணமாகலாம். ஈழநாட்டில் கண்ணகியின் கோயில்களில் மட்டுமே வாய்மொழியாகவே இக்காவியம் பாடப்பட்டு வந்திருக்கிறது. பெரு முயற்சிக்குப்பின் அண்மைக் காலத்தில்தான் இவ்வாய்மொழிக்கதை நூல்வடிவம் பெற்றுள்ளது. அதனால் தமிழக மக்கள் இந்நூலை அறிய வாய்ப்பில்லாமல் போய் விட்டது. ஈழ நாட்டில் வழங்கப்படும் வசந்தன் கவிகள் போன்ற நூல்களை இன்றும் படிக்க வாய்ப்பில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூலுக்கென்று தனிச்சிறப்புகள் பல உள்ளன. இந்நூலில் காணப்படும் கோவலன் கண்ணகி பிறப்பு வேறு நூல்களில் காணப்படவில்லை. இந்நூலில் மட்டுமே மாதவியின் ஜாதகம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலில் சிலம்பில் பரலிட, கடல் கடந்து சென்று போரிட்டு, வென்று நாகமணி கொண்டு வரப்படுகிறது. இப்பகுதியில் ஈழநாட்டுச் செய்திகள் கூறப்படுகின்றன. ஈழநாட்டில் வழிபடப்படும் கண்ணகி தெய்வத்திற்கு இந்நூல் மனிதப் பண்புகளை ஏற்றிச் செல்கிறது. இளங்கோவின் சமணக் காவியம் இந்நூலாசிரியரின் மதச்சார்பால் சைவ சமய நூலாக மாற்றம் பெற்றுள்ளது. இதில் சகுனம், கனவு, விரிச்சி முதலியவற்றிற்கு முதன்மை கொடுக்கப் பட்டுள்ளது இந்நூலாசிரியர் தீண்டாமையை ஒழிக்க முயன்றிருக்கின்றார். சிலம்பின் வழிவந்த மற்ற நூல்களை விட இந்நூலில் இராமாயண, மகாபாரதத்தின் தாக்கம் மிகுதியாக உள்ளது. சிலம்பின் பின்வந்த மற்ற நூல்களை விட இந்நூலில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

□

கோவலன் கர்ண்ணகை கதை
(குமரி மாவட்டம்)

'கோவலன் கர்ண்ணகை' கதை குமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் வழங்கி வருகிற நாட்டுப்புறக் கதைப் பாடலாகும்.இப்பாடல் இம்மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டு களுக்கு முன்னர் வில்லுப் பாட்டாக வழங்கி வந்துள்ளது. ஆனால் இன்று வழங்கி வருவதாகத் தெரியவில்லை. ஏட்டுச் சுவடியில் இருந்த இக்கதையை நூல் வடிவில் கொணர்ந்தவர் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறையைச சார்ந்த திரு. தி. நடராசன் ஆவர். ஏட்டுச்சுவடியிலிருந்து இந்நூலின்.பெயரை அறியமுடியாத தால் பதிப்பாசிரியர் கதையிலுள்ள இன்றியமையாத இரு பாத்திரங்களின் பெயரால் இந்நூலுக்குக் 'கோவலன் கர்ண்ணகை கதை' என்று பெயரிட்டுள்ளார்.

இந்நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை. கோவலன் கர்ண்ணகை கதைப்பாடல் மருமக்கள் தாயமுறை மீது மக்களுக்கு வெறுப்புணர்வு ஏற்பட்ட காலத்தில் தோன்றியதாகக் கொள்ள இடமுள்ளது. கர்ண்ணகை, கோவலனிடத்தில் வேளாளர் சமுதாயம் பற்றிக் குறிப்பிடு கையில், அவர்களிடத்தில் பழக்கத்திலிருந்த மருமக்கள் தாய முறையினைச் சாடுவதாக ஒரு குறிப்பு உள்ளது. (1150-1168) இச்செய்தியினைத் துணையாகக் கொண்டு இக்கதைப்பாடல் தோன்றிய காலத்தினை மருமக்கள் தாயமுறை, மக்களால் புறக்கணிக்கப்பட்ட காலமெனக் கொள்ளலாம். அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது இருபதாம் நூற்றாண்டின் தொடக் கதில் இக்கதைப் பாடல் வடிவம் பெற்றிருக்கலாம் என்று

பதிப்பாசிரியர் இந்நூலின் நூன்முகத்தில் குறிப்பிட் டுள்ளார். (இக்கட்டுரையில் குறிக்கப்படும் எண்கள் அடி களைக் குறிக்கும்).

கதைச் சுருக்கம்

பாண்டிய மன்னனின் புகழையும், சக்தியையும் அழிக்க மாயவனார் நன்கு சிந்தித்து, கேந்திரக் காலனைக் கோவலராகவும், துர்க்கையைக் கர்ண்ணகையாகவும் படைத்தார். [இங்குப் பாண்டியனை அழிக்க வேண்டிய காரணம் கூறவில்லை.] படைத்தற் கடவுளாக மாய வனார் குறிப்பிடப்படுகிறார். பத்து, பத்தரை என்பது பொன்னின் எண்ணிக்கையா என்பது புலப்படுத்தப்பட வில்லை. கோவலனை விட, கர்ண்ணகைக்கு ஏற்றம் கொடுக்கப்பட்டுள்ளமை சிந்தித்தற்குரியது.

சிலம்பு செய்தல்:

சிலம்பிற்குக் கொடுக்கப்பட்ட முதன்மை திருமணத் திற்குக் கொடுக்கப்படவில்லை. கர்ண்ணகையாள் பிறந்த வுடன் அவளுடைய தந்தை மானாகன் சிலம்பிலுள்ள பரலிட, நாகமணி கொண்டு வர, நாகமுத்தர் கோட்டைக் குக் கடல் கடந்து செல்கிறான். அங்குச் சென்று நாகமுத்தாளை அழைத்து, கர்ண்ணகையாள் சிலம்பிற்கு நாகமுத்து தர வேண்டும் என்றான். அதைக்கேட்ட நாகமுத்தாள்,

"இந்தநல்ல நாகமுத்து
எல்லோர்க்கும் ஆகாது.
தொக்கல்லவே நாகமணி
தொட்டவர்கள் எரிந்திடுவார்
இட்டிரிந்தால் முடிதெறிக்கும்
இருந்தலம் தீப்பிடிக்கும்
பத்தினிமார்க் கல்லாமல்
பலபைந் தொடிமார்க் காகாது.

கர்ண்ணகையாள்க் கல்லாமல்
வேறொருவர் பூணொண்ணாது
வேறொருவர் பூணவில்லை

என்றாணை யிட்டால் நாகமணி தருவேன் (40–51) என்று நிபந்தனையிட்டது. பத்தினித் தன்மைக்குக் கொடுக்கப்பட்ட முதன்மை இங்கு வெளிப்படுகிறது. மானாகன் ஆணையிட்டவுடன் அஞ்சுதலை நாகம் நாகமணி சுக்கித் தர, மானாகர் அதைக் கொண்டு வந்து தட்டாரை அழைத்துச் சிலம்பு செய்தார்.

கோவலன் கர்ண்ணகை திருமணம்

மானாகன், தேன்மொழியாள் கர்ண்ணகைக்குத் திருமணம் என்று எல்லோரையும் அழைத்தான்; கப்பல் ஏறிச் சென்று பாக்கு வைத்து அழைத்தான்; கன துரைக்கும் உறவினருக்கும் பாக்கு வைத்தான்;நாட்டுக்குச் சீட்டு லிட்டு அழைத்தான். சிலர் மணவறைக்காகப்பந்தல் போட்டனர். ஆயிரங் கால் பந்தலிட்டனர். பச்சைப்பனை பிளந்து ஒன்பது கால் பந்தலிட்டனர். பந்தலிட்ட தூண் களையெல்லாம் பவழத்தால் அலங்கரித்தனர். சாந்தால் தரை மெழுகிச் சந்தனத்தால் கோலம் போட்டனர். பொன் பலகை வைத்தனர். பணத்தால் நிறை நாழியும், முத்தால் நிறை நாழியும் வைத்தனர். கர்ண்ணகையை முழுதும் பட்டால் அலங்கரித்தனர். கொண்டு வந்த நல்முகூர்த்த நேரத்தில் சுண்டு விரல் கைப்பிடித்துச் சுற்றி வந்து மாலையிட்டுப் பூச்சூட்டினர். (தாலிகட்டியதாகக குறிப்பில்லை) மணவறையில் புக்கனர். மூன்றாம் நாள் நீராட்டினர்.

மாதேவியின் அரங்கேற்றம்

உறையூரில் வயந்தமாலையின் மகளாக மாதேவி பிறந் தாள். மூன்று வயதிலிருந்தே கலைகளைப் பயில ஆரம்பித் தாள். பன்னிரண்டாம் வயதில் அரங்கேற்றம் நடந்தது.

அதற்காகப் பொன் கம்பு ஊன்றினர். மாதேவியின் அரங்கேற்றத்தில் அடிக்கும் மத்தள ஓசையைக் கோவலன் கேட்டான். என்ன ஓசை என்று கூட அறியாத கோவலன் தாயைக் கேட்க அவளோ,

"ஏழூரில் கொல்லர் கூடி
ஒரு தலத்தில் வந்திறங்கி
தட்டி கொட்டி இரும்படிக்கும்..." (148-150)

சத்தம் என்று கூறினாள். மீண்டும் மாதேவி எழுப்புகின்ற பெருந்தவில் சத்தத்தைக் கேட்கும் கோவலன் தாயைக் கேட்கிறான்.

"ஏழு ஊரில் கன்னார் கூடி
ஒரு தலத்தில் வந்திறங்கி
தட்டி கொட்டி கலம்சமைக்கும்." (157-159)

சத்தம் என்று தாய் கூற, மறுபடியும் பெருந்தவில் முழுங்குகிறது. அந்தச் சத்தம் என்ன சத்தம் என்று கோவலன் தாயைக் கேட்க,

"ஏழூரில் தட்டார் கூடி
ஒரு தலத்தில் வந்திறங்கி
தட்டி கொட்டி பொன் சமைக்கும்" (164-166)

சத்தம் என்று தாய் ஏமாற்றுகிறாள். தாயிடம் இது வரை என்ன ஓசை என்று அறியாதது போல் கேட்ட கோவலன், இறுதியில் சோழன் திருமுன் மாதேவி அரங்கேற்றத்தில் ஏற்படும் சத்தம் என்று கூறி, அந்த இடத்திற்குத் தான் போவதாகக் கூறினான்.

அக் காலத்தில் திருமணம் நடந்த ஏழு நாள் வரையிலும் கணவன் மனைவியைப் பிரிதல் கூடாது என்ற வழக்கம் இருந்தது போலும். திருமணத்தின் பின்னர் நிகழும் மூன்றாம் நாளிலும், நான்காம் நாளிலும், ஏழாம் நாளிலும் நடைபெறும் நீராட்டுச் சடங்குகளைக் குறிப்

பிட்டு அதைக் கழிப்பதற்குள் கோவலன் வீட்டை விட்டுச் செல்லுதல் கூடாது என்று தாய் தடுத்தாள். கோவலன் செல்வதற்குக் காரணமாக, கர்ண்ணகை தவறேதும் செய்தாளோ என்று கோவலனின் தாய் நினைத்தாள். அதனால் அவள் கர்ண்ணகையைப் பார்த்து,

"கர்ண்ணகய்யெ பத்தினியே
கலகமென்ன உங்களிலெ
கயிக்குவையித்த தண்ணீரிலே
கலகமுண்டொ கர்ண்ணகய்யெ
இட்டு வயித்த சோறதிலெ
கண்ணும் (கல்லும்) மண்ணும் கலந்து
துண்டொ
கொண்டு வயித்த சோறதிலெ
குற்றமுண்டொ கர்ண்ணகய்யெ" (202–209)

என்று கேட்டாள். கோவலன் மாதேவியின் நடன அரங்கேற்றத்தைக் காணச் செல்லவில்லை,

"ஏரணியுங் கூட கூலிலே
ஏந்து கொங்கை மாதேவி
அவள் மாரழகெ காணவெல்லொ
உன் மணவாளன் போறாங்காண்" (212-215)

என்று கர்ண்ணகையிடம் கோவலனின் தாய் கூறினாள். தாய்க்குள ள அச்சம் கர்ண்ணகையிடம் இல்லை. அவளோ,

"போறாரானால் போயி வரட்டெ
போறவெரெ விலக்க வேண்டாம்
வேசையிலே நடந்த பேர்கள்
வீடடங்கி யிருப்பார்களெ
வாது மணம் உண்ணுமென்றால்
மகிள்ந்த பூவை தேடாரொ
போறாரானால் கோவலரே
போக விடை அனுப்பும்." (218-225)

என்று கூறினாள். கோவலனைத் தடுப்பதற்குப் பதிலாக கர்ணனையே அனுப்புயாறு தாயிடம் கூறினாள்.கோவலனின் பரத்தமை உள்ளத்தைத் தெளிவோடு அவள் புலப்படுத்துவதைக் காணலாம். அதைக் கேட்ட தாய் பெண்ணால் அழிந்தவர்களின் பட்டியலையே எடுத்துக் கூறி கோவலனைத் தடுக்க முயல்கிறாள்.

"அன்பான இலங்க நகரவும்
அழிந்தது பெண்ணாலெ யெல்லொ
அம்பலவாணர்(தான்) ஆண்டியானது
பெண்ணாலெயல்லொ
பாண்டவரும் நூறுபேரும் பழிமுடிந்ததும்
பெண்ணாலெயல்லொ
கும்பகர்ணனும் இந்திரசித்தும் அழிந்தது
பெண்ணாலெயல்லொ
பூண்டிருந்த பணிகளன்று போனது
பெண்ணாலெயல்லொ
சூர்பெணகெயும் துரோவதேயின் துயிலாலும்
பத்தினிப்பெண் சிலம்பாலும் பாரப்பெண்
மூக்காலும்
இந்த வகையால் அழிந்த பேர்கள்
பெரியொர்கள் மெத்தெ யுண்டு." (228-237)

என்று கோவலனின் தாயாகிய பெண்ணே மற்ற பெண்களைத் தூற்றுவதைக் காண முடிகிறது. 'ஆவதும் பெண்ணாலே அழிவதும்பெண்ணாலே'என்றபழமொழியின் ஒரு பகுதியே இவ்வளவு விரிவாகக் கூறப்படுகிறது. "பத்தினிப் பெண் சிலம்பாலும்" என்ற தொடர்'இந்நூல் எழுதப்படுவதற்கு முன்னரே 'கர்ண்னைகை கதை' வழங்கி வந்தது என்பதை அறிவுறுத்துகின்றது. [இவ்வாறு நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் தாம் கூறுகின்ற கதையினை மறந்து கதைப்பாடலாசிரியர்கள் அக்கதையினையேஉவமையாகப் பயன்படுத்துவர் என்று இந்நூலின் பதிப்பாசிரியர் குறித்துள்ளார். (ப.10)

பரத்தையர்கள் தங்களிடம் வரும் ஆடவர்களை எப்படியெல்லாம் கொடுமைப் படுத்துவார்கள் என்று அறிவுரை கூறினாள் (238-257) ஆனாலும், கோவலன் கேட்கவில்லை. அதுமட்டுமல்ல; யார் யார் மாதேவியின் நடனம் காணச் செல்கிறார்கள் என்று ஒரு பெரும் பட்டியலையும் அவன் தந்தான். இது அக்காலத்து, பரத்தமைச் சமுதாயத்தின் பெருக்கத்தைச் சுட்டிக்காட்டுகிறது

பட்டறிவு உடைய தாயுள்ளம், மாதேவியின் நடன அரங்கேற்றத்தைக் காணச் செல்லும் கோவலன் அங்கேயே தங்கி விடுவான் என்று நினைத்தது. இது பின்னால் நடக்கப் போவதை முன்னமேயே காட்டுவதாகவும் கொள்ளலாம். தன் இறுதிக் காலத்தில் தன் மகன் அருகில் இருப்பானோ, கொள்ளி போடுவானோ என்றும் தாயின் உள்ளம் வருந்தியது.

"வருமையுடன் கொள்ளி வைக்க
உதகாமல் நீ போனால்
உன்னோடு வளக்கதிட மகனெ" (310-312)

என்று தாய் வருந்தினாள். பரத்தையர்களிடத்துச் செல்லும் ஆடவர்களைத் தடுக்கும் குலமகளிரின் வேதனையும், அவர்கள் கையாளும் உபாயங்களும் தாயின் கூற்றில் வெளிப்படுகிறது.

மாதேவியின் நடனங்களைப் பார்க்கச் செல்வதற்குத் தாயிடம் வெட்கமிலலாமல் பணமும் கேட்டான் கோவலன்,

"அம்மா யெட்டானெ பட்டு வேணும்
ஒரு குட்டியானை பணவும் வேணுட" (383-384)

என்னும் கோவலனின் கூற்று நாடகத்தைப் பார்ப்பதற்காகப் பணம் கேட்பதாகத் தோன்றவில்லை. மாதேவியுடன் தங்குவதற்காகவே பணம் கேட்பது போல் தோன்றுகிறது. இதைக்கேட்டவுடனே கோவலனின் தாய்

கூறும் சொற்கள் மிகச் சிறப்பாகவும் இயற்கையாகவும் உள்ளன. அவள் கோவலனின் தந்தை எவ்வளவு அரும் பாடுபட்டு சிக்கனமாக வாழ்ந்து பணம் சம்பாதித்தார் என்று கூறினாள். இப்பகுதி நகைச்சுவையாகவும் உள்ளது. இந்நூலில் கோவலனுக்குத் தந்தை இருப்பதாகக் காட்டவில்லை. தாய் மட்டுமே உயிருடன் இருப்பதாகக் காட்டப்படுகிறது. அவனுடைய தந்தை சுடுசோறு மிச்சமானால் தூரதேசம் போகிறேன் என்பார். பழைய சோறு மிச்சமானால் உலை வைக்க விடமாட்டார். ஈரக்கால் எண்ணெய் வார்ப்பார். மிளகை எண்ணிக் கொடுப்பார். மஞ்சள் தந்தாலும் கணக்கிலெழுதிக் கொள்வார். கப்பலோடும் வேளையில் சிறிதளவு மிளகு கடலில் விழுந்தாலும் கடல் நீரை இறைத்திடுவார். இவ்வாறு சிக்கனப் படுத்திப் பத்தாயிரம் கப்பல் பணம் சேர்த்துள்ளார். 'இத்தனையும் அழிப்பதற்காகவா நீ ஒரு மகனாகப் பிறந்தாய்? ஒரு நாடகம் பார்ப்பதற்கே ஓராணை பணம் கேட்டால், நான்கு நாடகம் பார்க்க எவ்வளவு பணம் கேட்பாய்?' என்று தாய் தன் மகனுக்கு அறிவுரை கூறியமை அக்காலச் சமுதாயத்தில் வணிகர் குலத்தைப் பற்றிய மதிப்பீடாக உள்ளது.

மாதேவியின் நாடகத்தைப் பார்ப்பதற்கு அனுமதி கொடுத்த தாய், கோவலன் தன் முகத்தழகைக் காட்டக் கூடாது என்றும் அறிவுரை கூறினாள்.

கோவலன், மாதேவியின் கூத்து காணச் செல்லும் கோலம் அழகாகக் கூறப்படுகிறது.

"ஏழெருதும் பொன் பணவும்
லெக்ஷமற்ற சேலைகளும்
ஏழெரு(து) மேல் சுமடும் கெட்டி
குல வணிகென் யின நடந்தான்
இட்டாரிந்தா யீடு செருப்பும்
எண்ணாயிரம பொன் விலை பெறுமே

ஏறி வாற யிண குதிரை
லெக்ஷ'ம் பொன் விலை பெறுமெ
குதிரையின் மேல் கூடெ சூடி
குல வணிகன் யின நடந்தான்" (429-438)

என்று அவன் நிலை கூறப்பட்டுள்ளது.

கோவலன் ஒளிந்திருந்த நிலையை மாதேவியின் தாய் பார்த்து, மகளிடம் சென்று, ''காற்றுள்ள போதே தூற்றிக்கொள், காலம் கடந்தால் செடடிமகன் திரும்பிப் பாரான்" என்று அறிவுரை கூற, மாதேவி பொன்னு நவி நாடகமும் பூவுருவி நாடகமும் ஆடினாள். இந்த நடன வகையைப் பற்றி அறியமுடியவில்லை. கோலலனை மயக்குவதற்கு அவள் கையாண்ட முறைகளை ஆசிரியர் கூறும் விதம் புதுமையாய் உள்ளது.

"மூக்கத்தான் சுளித்துடன் நடன மிட்டாடினாள்
முடுக்கெடி கோவலெரெ
நாக்கத்தான் சுளித்துடன் நடனமிட்டாடினாள்
நடுக்கினாள் கோவலெரெ
பாக்கெத்தான் தின்றுடன் பச்சமஞ்சள் குளித்துடன்
பகட்டினாள் கோவலெரெ" (494-499)

என்று கோவலனை மாதேவி மயக்கிய விதம் கூறப் பட்டுள்ளது. தான் நடனமாடியதற்குக் காரணமும் கூறும் மாதேவி,

''நான் பணத்துக்காடி வந்தனில்லெ
சேலக்காடி வந்தனில்லெ
சேகுவனுக்காக ஆடி வந்தேன்" (522-524)

என்று தன் கருத்தையும் கூறினாள். பின் ஊரவருக்கு மாலையின் தன்மையைக் கூறினாள். எங்குச் சென்று விழுந்தாலும்—மன்னனானாலும்- மரமானாலும் அது தவக்கு மனவாளன் ஆகும்.

என்று நிபந்தனை போட்டு மாலையைச் சுழற்றி வீச, அது கோவலன் கழுத்தில் சென்று விழுந்தது. மாலையிட்டு மதிகெடுத்து, மறக்கவொண்ணா மருந்துமிட்டாள். உறையூருக்கு அழைத்துச் சென்று வாழ்ந்து வந்தாள். ஒன்றிரண்டு குழந்தைகளையும் பெற்று வளர்த்து இணைந்திருந்தாள். கோவலன் தான் கொண்டு சென்ற பொருளனைத்தையும் செலவழித்து விட்டான். மாதேவி குளிப்பதற்கே தினமும் ஏழு மஞ்சாடி பொன் வேண்டுமாம். மாதேவியின் ஆடம்பர வாழ்க்கையால் கோவலனின் பணமெல்லாம் கரைந்தது.

மாதேவியும் கோவலனும் ஒற்றுமையாயிருப்பது அவள் தாய் வயந்த மாலைக்குப் பிடிக்கவில்லை. காவிரியில் மிதந்து செல்லும் பூக்களைப் பார்த்த கோவலன், 'மிதந்து போகிற பூக்களையும், அதைத் தொடர்ந்து போகிற வண்டுகளையும் பார்' என்று மாதேவியிடம் கூறினான். மாதேவியோ கோபமுற்று,

"என்னை ஒரு பூவென்றீர். உம்மையொரு வண்டென்றீர். தன்னை வண்டாகக் கூறிய கணவனோடு நான் வாழ மாட்டேன்." என்று சொல்லிச் சண்டையிடுகிறாள். இந்நூலிலும் காவிரி நீராட்டு ஊடலுக்குக் காரணமாகிறது. காரணம் வேறுபடுகின்றது. மாதேவியின் ஊடலுக்குக் காரணத்தை அறிந்த வயந்தமாலை பொருளில்லாதவனை எதற்காக இங்கு வைத்துள்ளாய். கணக்குப் பார்த்துத் துரத்திவிடு என்று அறிவுரை கூறினாள். மாதேவி கணக்குப் பார்க்க அதில் ஒரு மஞ்சாடிப் பொன் கோவலன் கொடுக்க வேண்டியிருந்தது. அதனால் மாதேவி கோவலனைத் தண்டித்தாள். அவள் தண்டிக்கும் முறை புதுமையானது. அக்காலத் தண்டனை முறையும் தெரிய வருகிறது. கடுமையான வெயிலில் செட்டியார்கள் பலர் போகும் பாதையில் பலரும்காணும்படியாக ஓட்டை மறுப்பில் வைத்தாள். உச்சியில் கல்லை வைத்துக்

கோவலனைப் பார்க்க வைத்தாள். இது அக்காலப் பரத்தமைச் சமுதாயத்தின் அதிகாரப் போக்கைக் காட்டுகிறது. குறைந்த அளவான ஒரு மஞ்சாடி பொன்னுக்கும் தண்டனை கொடுப்பது தெரியவருகிறது. அங்குச்சென்ற ஆடவர்கள் இதற்குக் கட்டுப்பட்டு வருந்துவதும் சிந்திக்கத் தக்கது.

தண்டனைக்குள்ளான கோவலன் தெருவில் பண்டங்களைவிற்கும் செட்டியார்களிடமெல்லாம் ஒரு மஞ்சாடிப் பொன் கடன் தருமாறு கெஞ்ச அவர்களோ "விற்கவே நேரமில்லை; உனக்குப் பொன் கொடுக்க நேரமேது" என்றனர். அந்நேரத்தில் அச்சுதர்(சிவன்) கோவலனுக்கு உதவ எண்ணி ஆண்டி வேடத்துடன் வந்தார்.

"பொக்கணவும் புலித்தோலும்
பொன் பிரம்பும் கய்யுமாக
பண்டார வேஷம் கொண்டு" (708—710)

வந்த பரமசிவனார் கோவலனிடத்தில் காரணம் கேட்க, அவன் முழு வரலாற்றையும் கூறி, கர்ணணகையாள் மனைக்குச் சென்று தெரியப்படுத்த வேண்டினான். அச்சுதனாரே கோவலனிடம் திருநீட்டை (அறிவிப்பு ஓலை) எழுதச் சொல்லிக்கையொப்பம் போடச்சொல்லி வாங்கிச் சென்றார்.

தங்கணவன் மறுப்பிருக்க
தனித்திருந்தும் வாள்வதுண்டோ
உன்கணவன் மறுப்பிருக்க
உயிரிருந்தும் வாள்வதுண்டோ (807–810)

என்று திருநீட்டை அவள் கையில் கொடுக்க, அதைப் படித்த கண்ணகி அழுதாள்,

"அறை துறைந்து பொன்னெடுக்க
ஆறாண்ட காலம் செல்லும்
மூலையில் வாழும் பொன்னெடுக்க
மூவ்வாண்டக் காலம் செல்லும்
முந்தியிலே முடித்திருந்த பொன்னெடுக்க
முப்பது மாசம் சென்றிடுமே" (833-838)

என்று சொல்லி, கர்ண்ணகை கோவலன் முன்பு தரித் திருந்த மணிகள் பதிந்த பதக்க மாலையைக் கழற்றிப் பண்டாரத்திடம் கொடுத்தாள். அதை வாங்கிச் சென்ற பண்டாரம் கோவலன் கையில் கொடுக்க அதை அவன் வாங்கி மாதேவியிடம் ஒரு மஞ்சாடிப்பொன்னுக்கு இரண்டு மஞ்சாடி பொன் கொடுத்து விட்டு கர்ண்ணகை யிடம் மீண்டான்.

கோவலனைக் கண்ட கர்ண்ணகை, தன்னுடைய உயர்வையும் மாதேவியின் இழிவையும் குறிப்பாகக் கூறினாள்.

"நல்க்கரும்பு மிங்கிருக்க
பேயிக் கரும்பெ தொட்டீரொ
நாவிப்பிள்ளை யிங்கிருக்க
மரநாயெ சென்றும் தொட்டீரொ.
சோலைக் கிளிமகள் நானிருக்க
சொறி நாயெ சென்றும் தொட்டீரொ
மாடப்புற இங்கிருக்க
மரநாயெ சென்றும் தொட்டீரே? (899-906)

என்று தனக்கும் மாதேவிக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டிப் பழித்தாள். அதுமட்டுமல்ல; தன்னைத் தீண்டக் கூடாது என்று நிபந்தனையும் இட்டாள். தன்னைத் தீண்டும் உரிமையும், தன் வீட்டிற்கு வரும் உரிமையும் அவன் இழப்பதாக இவள் கூறுவது புரட்சிக் கருத்தாக அமைகிறது. அதுமட்டுமல்ல; அவனுக்குக் கடுமையான

தண்டனையும் கொடுத்தாள். அரிசி, கறிகளைத் தந்து அவனையே சமைத்து உண்ணச் செய்தாள். வெளியில் உறங்க வேண்டும் என்று கூறினாள். கோவலனும் சம்மதித்து, தனியாகத் தானே சமைத்துண்டு வெளிப் பக்கத்தில் உறங்கினான். இது அக்காலத்தில் பரத்தையர் வீட்டிற்குச் சென்று திரும்பியவர்களுக்கு அளிக்கும் கடுமை யான தண்டனையாகக் காணப்படுகிறது. ஒரு வேளை கர்ண்ணகை காளியின் அம்சமாகக் காட்டப்படுதலால் ஆசிரியர் அவ்விருவரையும் பிரிக்கும் உத்தியாக இம் முறையைக் கையாண்டாரோ என்று நினைக்கவும் தோன்றுகிறது.

கோவலனைப் பிரிந்த மாதேவி பிரிவுத்துயரால் வருந்தினாள். தாயின் வார்த்தைகளைக் கேட்டதால் தான் அழும் நிலைக்கு வந்ததையும் கூறிப் புலம்பினாள். தாயினையுமகழிந்தாள்.

"மாலையிட்ட கோவலரெ காணாமல்
காண கண்ங்கள் கொதிக்குதம்மா
கமல திருமுகம் வாடுதம்மா
இங்கவரெ காணாவிட்டால்
இறந்திடுவேன் யென் தாயே" (931–935)

என்றுகூறி அவள் அழுதாள். கோவலனின்பிரிவில் மாதேவி கலங்கித் துடிப்பதாகக் காட்டப்படுகிறாள். ஆனால் கோவலனின்பிரிவில் கர்ண்ணகைவருந்துவதாகக் காட்டப் படவில்லை. மாறாக அவன் திரும்பி வந்ததும் அவனுடன் சண்டையிடும் தன்மையும் அவனை வீட்டில் கூடச் சேர்த்துக் கொள்ளாத போக்கும் அவனுக்குச் சோறு கூட போடாமல், அவனே சோறு சமைத்து சாப்பிட வேண்டும் என்று கூறும் நிலையும் கவனித்தற்குரியது. கூடா ஒழுக்கம் மேற்கொண்ட கணவரை அக்கால

குலமகளிர் சேர்த்துக் கொள்ளாத இந்நிலை சங்ககால சமுதாயத்தையும் (வாயில் மறுத்தல்) நினைவூட்டுகிறது. நாஞ்சில் நாட்டில் இப்பழக்கம் இருந்தது போலும்.

மாதேவியின் துன்பத்தை உணர்ந்த தாய் வயந்த மாலை, சோழ அரசனிடம் சென்று முறையிட்டாள். கோவலனைக் காணாவிட்டால் மாதேவி இறப்பாள் என்று உரைக்க, சோழ மன்னனும் கோவலனிடம் ஆள் விட்டனுப்பினான்.

வந்த தூதனும் கோவலனிடம் நீ அவளுடன் பன்னிரண்டு ஆண்டுக்காலம் வாழ்ந்திருந்தாய். அவள் மனைக்கு நீ தினந்தோறும் செல்லவில்லையென்றாலும் ஒரு நாளாவது போய்வர வேண்டுமென்றான். அவனுக்குப் பதில் கூறும் கோவலனோ,

"மறுப்பில் வயித்த மூதேவியோடெ
மறுத்துமுகம் பார்ப்பதில்லெ
தின்றிட்டதோர் த(ா)ம்பலத்தெ
திரும்பக் கய்யால் யெடுப்பதி(ல்)லெ
சரிந்த தனம் யெழுந்திடிலும்
அவள் மனைக்குப் போவதில்லை
அவள் மெய்யதிலும் தொடுவதில்லை." (974-980)

என்று கூறித் தூதனை அனுப்பினான். இதிலிருந்து கோவலன் மாதேவி மனைக்குச் செல்லாமைக்கு மாதேவி தண்டித்தாள் என்பது மட்டுமின்றி அவளுடைய இளமை மாறியமையும் காரணம் என்பது தெரிய வருகிறது.

தூதன் வாயிலாகக் கோவலனின் மனநிலையை அறிந்த சோழ அரசன், கோவலனுக்குச் செட்டி வரி, நகரி வரி என்னும் வரிகளைப் போட்டு மாதேவியிடம் மீண்டும் செல்லாத கோவலனைத் தண்டித்தான். பரத்தமை ஒழுக்கத்திற்கு ஒரு நாட்டு மன்னனே துணை நிற்பதும் பரத்

தமைமேற்கொண்டு ஒழுகவில்லையென்றால்தண்டிப்பதும் வியப்பாக உள்ளது. இந்தத் தண்டனையே கோவலன் சிலம்பு விற்க மதுரைக்குச் செல்லக் காரணமாகியது. சிலப்பதிகாரத்தில் உலந்த பொருள் ஈட்டுதற்குக் கோவலன் சிலம்பு விற்கிறான். இந்நூலிலோ இரண்டு வரிகளுக்குப் பணம் செலுத்தவே கோவலன் சிலம்பு விற்ப தாக வேறொரு காரணம் காட்டப்படுகிறது. புதிதாக வரி போடுவதின் மூலம் நாட்டு மன்னனின் கொடுங்கோல் போக்கும் தெரிய வருகிறது.

மன்னவன் வரி போட்டதைக் கேட்ட கோவலன் கர்ண்ணகையிடம் "நான் பரதேசம் போகிறேன்; நீ உன் பட்டணத்தில் இரு" என்றான். அதற்குக் கர்ண்ணகை "ஒரு காலிலுள்ள சிலம்பை விற்றால் இரண்டு வரிகளை யும் செலுத்திவிட்டு மீதியுள்ள பணத்தில் வாழ்நாள் முழு வதும் சாப்பிடலாம்" என்று கூறினாள். சிலம்பில் கோவலன் சிலம்பு கேட்காமல், கண்ணகியே சிலம்பைக் கொடுப்பதாகக் கூறியது சிந்திக்கத் தக்கது.

கோவலனுடன் கர்ண்ணகையும் வருகிறேன் என்றதும் கோவலனும் சம்மதித்து இருவரும் செல்கின்றனர். போகின்ற வழியில் பொன்னியாறு குறுக்கிடுகிறது. அந்த ஆற்றைப்பற்றிக் கர்ண்ணகை கேட்க, கோவலன், தானும் மாதவியும் குளித்த ஆறு இந்தக் காவேரி ஆறுதான் என் றான். (1057—1047)

"பலதாரி தொட்ட கெங்கை
பத்தினிநான் தொடுவெனொ
ஒட்டியப்பெண் தொட்டகெங்கே
இந்தச் செட்டியப்பெண் தொடுவேனொ"
(1062—1065)

என்று சொல்லிக் காவிரியை வற்றும்படி சாபம் இட்டாள். காவிரியும் வற்றியது. கால்நடையாக ஆற்றுக்குக் குறுக்கே அவர்கள் நடந்தனர். அதன் பிறகு,

"நானுமொரு தெய்வக் கன்னி
நீயொரு தெய்வ மெங்கே" (1077—1078)

என்று கர்ண்ணகை கூறியவுடன் காவிரி பரந்து பாய் கிறது. கர்ண்ணகையின் பத்தினித் தன்மை இங்குப் புலப் படுத்தப்படுகிறது.

வழியில் கர்ண்ணகை வெயிலில் நடக்க முடியாமல் தவிக்க, கோவலன் "நான் எடுக்கட்டுமா?" என்று கேட் டான். உடனே கர்ண்ணகை தன்னைத் தொடக் கூடாது என்று சொல்லி, வேண்டுமென்றால் ஆலையிலையையும் சுண்டை இலையையும் தூர நின்று வீசச் சொன்னாள். கணவனையும் தீண்டாத பத்தினியாக இருக்கிறாள். திருநீலகண்டன் மனைவியைப் போன்று பரத்தை வீட்டிற்குச் சென்றவனைத் தொடாதவளாக, கர்ண்ணகை இருக்கிறாள். இது அக்காலத்துக் குலமகளிரின் பழக்கம் போலும்.

கோவலன் சிலம்பு விற்கச் சென்ற போது, கர்ண்ணகை தன்னை யார் வீட்டிலாவது அடைக்கலம கொடுத்துவிட்டுப் போகுமாறு கூறினாள். செட்டியார் வீட்டில் அடைக்கலம் வைக்கவா என்று கேட்டபோது, பல ஆயிரம் கப்பல்களுக்கு உரிமையுடையவர்களாக இருந்தாலும் மிகவும் கருமித்தனம் உடையவர்கள் என்று வணிகர்களின் குறைகளைக் கூறுகிறாள். (1130—1145)

வேளாளர் வீட்டில் அடைக்கலம் வைக்கவா என்று கோவலன் கேட்டபோது கர்ண்ணகை வேளாளர் மிகுதி யாக விளைந்தாலும் சாவி பட்டதென்பார். வண்டு துளைத்த மரத்தை வெட்டி மரக்காலைச் செய்து வைப்பார். நிறைநாழியை வீட்டினுள் வைத்துக் கொண்டு குறை நாழியால் நெல்லை அளப்பார்.

"பெற்ற மக்கள் பார்த்திருக்க
மருமக்கள்மார் சேம மெடுப்பார்
அந்த மனை ஆகாது காண்" (1166—1168)

என்றுவேளாளர்களின்குறைகளைக்கூறினாள்.(1152-1168) எவ்வளவு விளைந்தாலும் நிறைவுறாத அவர்களின் மனத்தையும் மற்றவர்களை மோசடி செய்வதையும் குறிப் பிடுகிறாள். (1152—1168) "பெற்ற மக்கள் பார்த்திருக்க மருமக்கள்மார் சேம மெடுப்பார்" என்ற அடியிலிருந்து அக்கால வேளாளப் பெருமக்களின் சொத்துரிமையை அறியமுடிகிறது. இச் செய்தியினைத் துணையாகக் கொண்டு இக்கதைப் பாடல் தோன்றிய காலத்தினை மருமக்கள் தாயமுறை. மக்களால் புறக்கணிக்கப்பட்ட காலமெனக் கொள்ளலாம். அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது இருபதாம் நூற்றாண் டின் தொடக்கத்தில் இக்கதைப் பாடல்வடிவம் பெற்றிருக் கலாம்.

கோவலன் "தட்டான் மனையில் உன்னை வைத்துச் செல்லவா?" என்று கேட்க. உடனே கர்ணனை, தாய், மகள் ஆகியவர்களின் பொன்னிலும் திருடும் தட்டானின் தன்மையைக் கூறி அந்த மனை ஆகாது என்று மறுக் கிறாள். (1174—1180) மறவருடைய வீட்டில் வைத்துச் செல்லவா என்று கோவலன் கேட்க,

"உண்டுறங்க ஒருசாமம்
உறக்கமுற்ற வேளையிலே
உம்மை கொண்டும் வெட்டி வயிப்பார்
என்னை கொண்டு பலதழிப்பார்." (1188-1195)

அந்த மனை ஆகாதென்றாள். இதனால் மறவர் இல்லத் தில் பாதுகாப்பு இன்மை புலப்படுத்தப்படுகிறது. ஒரு ஆயனில்லாத ஆய்ச்சி மனையைப் பார்க்கும்படிக் கர்ணனை கூறிய அந்நேரத்தில் நெய் விற்கும் ஆய்ச்சி

ஒருத்தி வந்தாள். அவளிடத்து கோவலன் ஆயனில்லாத ஆய்ச்சி மனையைப் பற்றிக் கேட்டபோது அவள் தன் வீட்டிற்கே அடையாளம் கூறினாள். (1121-1230)

இருவரும் அங்குச் சென்ற போது, உட்காரக் கட்டில் போட்டாள். கோவலன் அமர, கர்ண்ணகை அமர வில்லை. காரணம் கேட்ட ஆய்ச்சியிடம் கர்ண்ணகை திருமணம் ஆனதிலிருந்து,

"ஒரு தலத்தில் இருந்தறியேன்
ஒரு படுக்கை சரிந்தறியேன்
ஒரு தட்டத்திலை வெற்றிலை தின்றறியேன்."
(1256-1258)

என்று தன் பெருமையை—தங்களுக்கிடையே உள்ள உறவு நிலையை—கூறினாள். இதைக் கேட்ட ஆய்ச்சி 'இவள் தானோ பத்தினி' என்று வியந்து போனாள். [கணவனுடன் வாழாமல் இருப்பது பத்தினித் தன்மை என்று அக் காலத்தில் கருதப்பட்டது போலும்] ஆய்ச்சி பூப்போல சோறும் பொன் போலக் கறியுமாக மூன்று நாள் விருந்தோம்பினாள்.

மூன்றாம் நாள் காலையில் ஆய்ச்சி, "விருந்துகளும் மருந்துகளும் மூன்றுநாட்களுக்குத்தான். அதனால் நீங்கள் உங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள்" என்றுகூற கோவலன் தங்கள் நிலைமையைக் கூறினான். ஆய்ச்சியும் அரிசியும் கறியும் ஆக்கியுண்ண கலங்களையும் தருவதாகவும் கர்ண்ணகையைச் சமைக்கும்படியாகவும் சொன்னாள். அதற்குக் கர்ண்ணகை,

"சூடுபொறுத் தறியேன்
சுட்ட சட்டி பிடித்தறியேன்
பொருந்த நல்ல சுளவெடுத்து
திருந்த நான் கொழித்தறியேன்

முற்றத்திலெ யெறிக்கும் வெயில்
எந்தன் மெய்யதிலும் கொண்டறியேன்
நெல்லு காயிக்கும் மரம்மறியேன்
நீண்டகா பொழி யறியேன்" (1208—1215)

என்று தன் பெருமை கூறியவள் அழுது கொண்டே கணவனுக்குச் சோறு சமைத்தாள். கணவனுக்கு இனிமையாகச் சோறு படைத்த இளங்கோவின் கண்ணகியினின்றும் இவள் மாறுபடுகிறாள்.

அக்காலத்தில் மக்கள் வெளியில் செல்லும் போதோ ஒரு செயலைத் தொடங்கும் போதோ பல்வேறு நன்னிமித்தங்களைப் பார்த்த பிறகே செய்தனர் என்பது தெரியவருகிறது. இப்பழக்க வழக்கங்களும், நன்னிமித்தங்களும் கோவலனுக்குத் தெரியவில்லை. அதனால் கர்ண்ணகை தான் கோவலனுக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

கர்ண்ணகை செம்மான் மனையில் சென்று வாய்ச் சோதனை (விரிச்சி) கேட்கும்படியாகக் கூற, கோவலன் சென்ற போது செம்மான் வெளியில் சென்றிருந்தான். வாய்ச்சொல் அறியவேண்டி, கோவலன் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுங்கள் என்று செமமாத்தியிடம் கேட்டான். கோவலன் கேட்டதை அறியாமல், செம்மான் தான் தண்ணீர் கேட்டான் என்று நினைத்த செம்மாத்தி, 'பாலகன் கையில் இருப்பதால் வரமுடியாது. அதனால் செம்மானே, நீயே எடுத்துக் குடி" என்று கூறினாள். தன்னைச் செம்மான் என்று கூப்பிட்டதற்காக வெகுண்ட கோவலன் அருகிலிருந்த சிற்றுளியை எடுத்து நீர்க் குடத்தை உடைத்து விட்டான். அதனால் தண்ணீர் பரவி 'வீடு முழுவதும் சேறாயிற்று. கோபமுற்ற செம்மாத்தி,

"உன்னெ வெட்டாரொ குத்தாரொ
வெங்கழுகில் போடாரொ
காகினமும் கழுகினமும்
கண்டிருந்தும் பொதியாதோ" (1864-1367)

என்று சாபமிட்டாள். இதைக் கேட்டு வந்த கோவலன் கர்ண்ணகையிடத்தில் நடந்ததைக் கூறவில்லை. கோவலன் புறப்படும் நேரத்தில், கர்ண்ணகை கோவலனை உயிரையிட்டு வாடாப்பூமாலை செய்து தாரும் என்று கேட்டாள் அவ்வாறே செய்து கொடுத்த கோவலனும், வாடாப் பூமாலை வாடும் போது மதுரைக்கு வாவென்று கூறிச் சென்றான்.

மறுபடியும் கோவலனிடம் கர்ண்ணகை சகுனம் பார்த்துப் போகும்படியாகக் கூறினாள். என்னென்ன சகுனம் பார்க்க வேண்டும் என்று நீண்ட பட்டியலும் கொடுக்கிறாள்.

"மண்ணான்மார் யெதிர்வரிலும்
மணிப்புடலை யெதிர்வரிலும்
அந்த வழி போகாதேயும்
அறிவு கெட்ட யெங்கணவ" (1414-1417)

என்று கூறும் போக்கு புதுமையாக இருக்கிறது.

அவள் இருபத்திரண்டு தீச்சகுனங்களையும், ஆறு நற்சகுனங்களையும் கூறினாள். (1412-1497) அதுமட்டு மல்ல, மதுரையைப் பற்றியும் அங்கிருக்கின்ற பரத்தையர் களைப் பற்றியும் தெரிந்தவளாக இருந்தது வியக்கத் தக்கது. தெற்கு வீதியிலிருக்கும் தேன்மொழியாளையும், மேற்கு, வடக்கு வீதிகளில் உள்ள மைக்கண்ணிகளையும், கிழக்கு வீதியிலுள்ள கிளிமொழியாளையும் பற்றிக்கூறி 'அங்குச் செல்லாதீர்கள். தென் மதுரை கூடலிலெ செஞ் சிலம்பு விலைகூறி சீக்கிரம் வருக" என்று அவள் சொல்லி யனுப்பினாள். (1498–1534)

சிலம்பு விற்க வந்த கோவலன் பரத்தையர் வீதிகளுக்கே சென்றான். பரத்தையர்களின் தீயகுணங்களையே உரத்த குரலில் கூறி, அவன் சிலம்பு விற்பது புதுமையாக அமை கிறது.

"பச்சிலை கொண்டு முகத்தை மினுக்கி
பாலகன் கயில் பணத்தை பறித்து
நித்திரை தன்னில் கழுத்தை அறுக்கின்ற
நீலிய பெண்ங்கள் சிலம்பு கொள்வீரே" (1561-1564)

என்றும்,

"கள்ளி பாலுடன் காட்டெரும பாலும்
காளையின் கரோசினை தன்னை சேர்த்து
பேச்சுரைக்காய் விட்டு புழிந்து
பெட்டை கருங்கோழி முட்டயும் கூட்டி
ஆக்கிறாள் மதிக்கிறாள் மருந்தையும் சேர்த்தி
அனியாய கன்னி அரும்பாவி நீலினி
சிலம்பு கொள்வீரோ பெண்ங்கள் சிலம்பு
கொள்வீரோ" (1580–1586)

என்று பரத்தையர்கள் ஆட்களை மயக்க மருந்து செய்வதையும், மயக்குவதையும் கூறிச் சிலம்பு விற்றான். மாதேவியைப் பற்றித் தான் அறிந்ததைக் கோவலன் இவ்வாறு கூறியிருக்கலாம். கோவலனின் கையிலுள்ள சிலம்பைப் பார்த்த அனைவரும்,

"தொக்கல்லவெ யிச்சிலம்பும்
தொட்ட பேர்கள் எரிந்திடுவார்
பத்தினிமார் கால்க்கணிந்தா
மணிச் சிலம்பு யென்றார்கள்
இட்டிருந்தால் முடி தெறிக்கும்
இருந்ததலம் தீப்பிடிக்கும்." (1604-1609)

என்று கூறிச் சிலம்பு வாங்காமல் விட்டனர். சிலம்பின் உயர்லைக் குறிக்கவும், சிலம்பு அணிந்த கர்ண்ணகையின் பத்தினித் தன்மையை நிலை நாட்டவும் ஊரவர் கூற்றாக இப்பகுதி அமைந்துள்ளது எனலாம்.

தட்டான் வருகிறான். கோவலன் சிலம்பை எடுத்துக் காட்ட அவன் இவனைக் கள்வன் எனகிறான். கோவலன் தன் வரலாறு முழுவதும் கூறிவிட்டு,

"சிலம்பு கைக்கு வேணுமொ தான்
சிலம்பெயுமே நீயெடுத்து
தீவினைகள் செய்யாதே
திட்டெனவே விட்டுவிடு" (1684-1687)

என்று வேண்டினான். பாண்டியனிடம் கோவலன் கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டான்.

"உருவுடைய மாதேவிக்கு
உலகறிய நான்கொடுத்த
ஒருநாள் பொன்னுக்குண்டா
உம்மாணை யிச்சிலம்பும்." (1718-1721)

என்று பாண்டிய மன்னனிடம் தான் வாழ்ந்த வாழ்க்கை யைக் கூறினான் கோவலன். தன் பொருள் வளத்தைச் சுட்டிக் காட்டினான். பாண்டியனிடம், "உங்கள்தேவியை வரவழைத்து சிலம்பு இணை பார்க்கச் சொல்லுங்கள், அவள் நடுநிலையுடன் கூறினால் நீங்கள் எதைச் செய்தா லும் பொறுத்துக் கொள்வேன்" என்றான். அரசனும் சம்மதித்துத் தன் மனைவியை அழைத்துச் சிலம்பு அவளுடையதா என்று கேட்டான். சிலம்பைக் கையில் வாங்கி,

"தரிநோட்டம் பார்ப்பாளாம்
நாக மணி உள்ளீடும்
நாராயணா வென்று புலம்பிடுமாம்
நாராயண சிவனே யென்று
நாகமணி தரி புரள" (1749-1753)

நோட்டம் பார்த்தாள். நாகமணி நாராயணா என்றும், சிவனே யென்றும் புலம்புவதாகக் கூறுவது புதுமை யுடைத்து. சிலம்பு தன்னுடையதல்ல என்று கூறவருகின்ற

தேவி, சிலம்பின் பெருமையையும் சிலம்பணிந்தவளின் பெருமையையும் கூறுவது சிறப்பாக அமைகிறது. இச் சிலம்பு அணிந்தவளுக்கு நான் அடியாளும் ஆகமாட்டேன். இச்சிலம்பைத் தொட்டாலே முடி தெறித்துவிடும் பத்தினி அணிந்த சிலம்பை மற்றவர்கள் அணியக் கூடாது. செட்டிப் பெண பூண்ட பணி அரசன் தேவிக்கு ஆகாது. இசசிலம்பு இருக்கும் இடம் தீப்பிடிக்கும். இச்சிலம்பைத் தொட்டவர்கள் எரிந்திடுவர். இச்சிலமபைச் செய்யும் திறனுடைய தட்டார்கள் இவ்வூரிலில்லை. (1757-1771) என்ற அரச மாதேவியின் கூற்று ஆய்தற்கு உரியது. இதில் கர்ணணகையின் உயர்வைக் குறிக்கும் அரசமாதேவி தன்னைத் தாழ்த்திக் கொள்கிறாள். கர்ணணகையைப் பத்தினியாக நினைக்கிறவள் தன்னை ஏன் பத்தினியாக நினைக்கவில்லை? பத்தினி அணிவதால் அணியும் சிலம்பி லும் தெய்வத்தன்மை ஏற்பட்டிருக்குமா? மற்றவர்கள் அணிந்தால் தீமை உண்டாகுமா? இவை போன்ற வினாக் களை எழுப்புவதாக இப்பகுதி அமைகறது. சிலம்பின் சிறப்பைக் கூறியவள் தட்டானையும் கண்டித்தாள். சிலம் பைக் கோவலனிடம் கொடுத்தனுப்புமாறும் கூறினாள்.

தேவி தனக்கு நேராகவே அறிவுரை சொன்னதால் அஞ்சிய தட்டான் தேவியின் மேல் அபாண்டமாகப் பழி கூறினான்.

"கள்ளனுடை வடிவைக் கண்டு
தேவி கண்ணாசை கொண்டாள் மன்ன
வெட்கி அவள் பதுங்க கண்டேன்
விழியாரும் சிரிக்க கண்டேன்
வித்தெயுள்ள கள்ளனிவன்
விட்டுவிட நினையாதெயும்
சற்று நோக்கு சொல்லும்போது
உந்தன் தேவியாரெ தொடுவான்" (1792-1799)

என்று பாண்டிய மாதேவியின் மேல் பழிபோடுவது மட்டுமல்லாமல் பாண்டியனையும் தூண்டிவிட்டான். இப்பழியைக் கேட்ட பிறகும் பாண்டியன் கொல்ல ஆணையிடாமல் அவனைச் சோதிக்க வேண்டுமென்று பல உத்திகளைக் கையாண்டான். கோவலனைக் கொல்ல மதயானையை விட, அது அவனைக் கொல்லாமல், மத்த கத்தில் வைத்து பாண்டியன் முன் வைத்தது. மன்னவன் தட்டானின் யோசனையினால் ஐந்து தலையுள்ள நாகத் தைச் செப்புக்குடத்தில் பிடித்தடைத்து சிலம்பையும் உடன் வைத்துக் கோவலனைச் சிலம்பை எடுக்கச் சொல் கின்றான். அவனும் சிலம்பை எடுத்தான். மற்றச் சிலப்பதிகாரக் கதைபற்றிய வாய்மொழி இலக்கியங்களில் இச்சோதனைகளின்போது கோவலன் கர்ணனகையை நினைப்பதாகவும், அவளுடைய பத்தினித் தன்மையால் சோதனையில் வெல்வதாகவும் காட்டப்படுகிறது. இந் நூலில் பத்தினியை நினைக்காமலேயே சோதனையில் வெற்றி பெறுவதாகக் காட்டப்படுகிறது.

தட்டானும் கூனனாக உருவகிக்கப் படுகிறான். கொடியவர்களைக் கூனனாக உருவகிக்கும் பண்பு அக் காலத்தில் இருந்திருக்கலாமோ என்று எண்ண வேண்டி யுள்ளது. கைகேயியின் கொடிய தோழி கூனியாக இருந்த தால் இவனும் கூனனாகக் கூறப்படுவது ஒப்பு நோக்கத் தக்கது.

ஆடவர்களின் உளவியலை அறிந்தவன் தட்டான். அதனால் பாண்டியனிடம் கோவலன் உன் மனைவியைக் கவர்ந்து விடுவான் என்று அச்சுறுத்தியவுடன் செங்கோல் வேந்தனான பாண்டியன் நிலைமாறிவிட்டான். அதனால்,

"உச்சிமலை பொற்றையிலே
உயர்ந்த வேங்கைமர மூடதிலெ
சிலம்பு கட்ட கள்ளனெத்தான்
வெட்டி வயித்து வாரும்." (1884–1887)

என்று ஆணையிட்டான். கோவலனுடைய வடிவு கண்ட மழுவரசன் வெட்ட விரும்பாமல். அவனை மலை வழியில் சென்று பிழைக்கும்படி கூறினான். தான் மானை வெட்டி இரத்தத்தை மன்னவருக்குக் காட்டுவதாகக் சொன்னான். ஆனால் கோவலன் இவ்வறிவுரையை ஏற்க வில்லை. கள்வன் என்று பெயர் பெற்றதால் வாழ விரும்ப வில்லை என்று கூறினான். ஒரே வெட்டாக வெட்டும்படி வேண்டினான். மேலும் கர்ணனை வரும் வரைக்கும் நாய், நரி, ஈ, எறும்பு, காகம், கழுகு இனங்கள தீண்டா திருக்குமபடியும் ஈசுவரன் மேல் ஆணையிட்டான். மழுவரசன் முந்தி தனைப் பிடித்து முகததைத் துடைக்கச் சொன்னான். கோவலனும் அவ்வாறே செய்தான் சீதேவிதான் மாறிடவே மூதேவி குடி கொள்ள, உடனே மழுவரசன் இரண்டு துண்டாக வெட்டி விட்டான். இது எந்தச் சிலப்பதிகார நூலும் கூறாத புதுமையான நிகழ்ச்சியாகும்.

கர்ணனை நடந்த நிகழ்ச்சி அனைத்தையும் கனவு கண்டாள். கர்ணனையின் தாலியை ஒரு பெண் பறித்து எறிவதும், மாங்கலியம் இழை அறுந்து மடிமேலே தரித்திடவும், அடிச்சிலம்பு முறிந்திடவும் கொங்கையின் மேல் வாள விழுந்து குறைபடுவதும், பல் விழுவதும் கனவாகக் கர்ணனை கண்டு அழுதாள். ஆய்ச்சி பல வாறு தேற்றினாள். அந்நேரத்தில் குறத்தி ஒருத்தி வர குறிபார்த்தனர். கோவலன் கர்ணனை பிறந்தது முதல் பாண்டியன் முன்னே செல்வது வரை அவள் கூறினாள். வணணமுலை இழபபாள் என்றும் கூறினாள். ஆனால் மதுரை எரிப்பாள என்று கூறாமை குறிப்பிடத்தக்கது. கர்ணனை உடனே கணவனைக்காண்பேன் என்று புறப் பட்டாள். தானும் உடன் வருவதாக ஆய்ச்சிகூற கர்ணனை ஆய்ச்சியைத் தழுவி, பாதம்வரை முகர்ந்து பின் பிரிந்தாள். ஆய்ச்சியைத் தழுவுதல சிலபபு பற்றிய எந்த நூலிலும் காணாத செய்தியாகும். குமரி மாவட்டத்

தில் பெண்கள் பிரிந்து செல்லுகிற பொழுது ஒருவரை யொருவர் ஆரத் தழுவி முகர்ந்து கொள்ளும் பழக்கம் இன்னும் சில நாட்டுப் புறங்களில் காணப்படுகிறது என்று டாக்டர் தி.நடராசன் இந்நூலில் குறிப்பிடுகிறார். (அடிக் குறிப்பு ப.79)

கர்ண்ணகை கணவனைத் தேடி, தனியாக வந்தாள். முல்லமலர் நகர், மறவர் கொற்றநாடு, அய்யனார்குளம் ஆகிய பகுதிகளைக் கடந்தாள். அதன்பின் எந்தவழி செல்வது என்று அறியாளாய் மயங்க, அந்நேரத்தில் அங்கு இடைச்சி யொருத்தி துணையாக வந்தாள். கர்ண்ணகையைப் பற்றி செய்தி கேட்ட ஆய்ச்சிக்குத் தான் வந்த காரணம் கூறினாள். மதுரை நகர் வரைக்தம் ஆய்ச்சி துணையாக வந்தாள்.

மதுரை நகருக்குள் தனியாகச் சென்ற கர்ண்ணகை தனியாளர் தெரு, வாசெல் தெரு, கோவலர் தெரு, முதலிய இடங்களில் சென்று கோவலனைப் பற்றிக் கேட்டாள். கூடல் மாநகருக்குள் அந்தணர், வணிகர் முதலியோர் வாழும் இடங்களுக்குச் சென்று தேடினாள்.

"பக்கம் பளுத்திருப்பார்
பால் பாண்டியனெனப் போலிருப்பார்
சுத்தச் சிகப்பிருப்பார்
சூரியனெப் போலிருப்பார்" (2361-2364)

என்று கோவலனின் அடையாளமும் கூறினாள். ஒருவரும் கோவலனைக் கண்டதாகச் சொல்லவில்லை. பின்னர் கர்ண்ணகை மாடு மேய்க்கும் சிறுவர்களிடத்தில் சென்று விசாரித்தாள். அவர்கள் பதில் கூறாமல் கர்ண்ணகையைக் கேலிசெய்தனர். கர்ண்ணகை கோபமுற்று அவர்களை இறக்கும் படி சாபமிட்டாள். கர்ண்ணகை அடுத்த தெருவிற்கு வந்த போது அங்கு நின்ற பள்ளிச் சிறுவர்களிடத்தில் விசாரித்தாள். பள்ளிச் சிறுவர்கள் கோவலனைத் தாம் கண்டதாகக் கூறி, அவனுக்கு உற்ற தீங்கினையும்

எடுத்துச் சொல்லி, கோவலனைக் கொன்ற இடத்தையும் காண்பித்தனர். கர்ணணகை கோவலனைச் சுற்றி விலங் கினமும், பறவையினமும் சூழ்ந்திருக்கக் கண்டாள். தன் கணவனைக் கண்டவுடன் கர்ணணகை, பள்ளிச் சிறுவர் களுக்கு வாழ்த்துரை கூறிப் பரிசுகளையும் கொடுத்து அனுப்பினாள். பள்ளிச் சிறுவர்கள் சென்ற பிறகு பறவை யினங்கள் அகன்றிருக்க வேண்டினாள். கோவலனைக் கண்டு அழுது புலம்பினாள் நாட்டுப் புறப் பாடல்களில் அமைக்கப்படுகின்ற ஒப்பாரி இந்நூலில் சிறப்பாக அமை கிறது. (2537-2598)

''அரவமணி சிலம்பு விக்கா வந்தீரேயென்கணவ
உயிரழகும் விற்றீரே யென்கணவ கோவலெரெ
என்றுரைத்தாள்
தவிராத நித்திரெயும் என்தனிமெ கண்டு
முளித்தில்லெயெ
பொன்னரிய திருமேனி புழுதிபட சரிந்தீரே"
(2517-2551)

என்று கணவன் நிலை கண்டு கர்ணணகை புலம்பினாள்.

சிவனுடைய திருவிளையாடல்களையெல்லாம் சொல் லிச் சொல்லிக் கர்ணணகை தன் கணவன் உயிரை எழுப் பும்படி சிவனாரை வேண்டினாள். இதைக் கேட்ட உமையவள் சிவனிடம் கற்புடையாள் கர்ணணகையென்று சொல்லி உயிர்தரும்படி வேண்ட, சிவனாரும் அருள் புரிந்தார். இறையவன் கொடுத்த மாயப்பொன் மொந்தை யில் நீர் வாங்கினாள். ஊடுருவும் (ஊசி) வாங்கி நூலில் கோத்து, கோவலனின் உடலை நன்றாகத் தைத்தாள். ''எழுந்திரும் என் கணவ" என்று கூறக் கோவலன் எழுந் திருந்தான். எழுந்த கோவலனோ,

''மறக்க வொண்ணா மருந்தெயிட்டா
மாதேவி வந்தெளா
அடக்கமாயி வைத்திருந்த
கர்ண்ணகையாள் வந்தாளோ" (2713-2716)

என்று கேட்டான். இறந்த பின்னும் மாதேவிபால் கொண்ட அன்பு மாறாதவனாகவே கோவலன் காட்டப் பட்டுள்ளான். கோவலன், தான் சிலம்பு விற்க கர்ண்ண கையைப் பிரிந்தது முதல் இறப்பு வரை நிகழ்ந்ததைக் கூறி னான். "கர்ண்ணகை, நீ இன்னமும் வாழ்ந்திருக்க வேண்டும்" என்று வேண்டினான். கொடுமை செய்த பாண்டியனையும், அவன் நாடாகிய மதுரையினையும் கர்ண்ணகை அழிக்க வேண்டும் என்றான். பின்னர் கர்ண்ணகை கோவலனை இறைவனடி சேர்வதற்காக எழுந்திருக்கச் சொன்னாள். மேலும், தன் கடமைகளை முடித்து விட்டு கணவனை வந்து சேர்வதாகவும் கூறி னாள். கோவலனுடைய உயிர் பிரிந்தது. விலங்கினங் களும், பறவையினங்களும் கோவலனுடைய உடலைச் சுவைத்தன. கர்ண்ணகை அழுது அரற்றிக் கொண்டு பாண்டியனின் அரண்மனை நோக்கி நடந்தாள். கர்ண் ணகை மதுரைச் சொக்கரையும் அங்கயற் கண்ணியையும் நினைத்து வருந்தினாள். மதுரையின் பல தெருக்களையும் கடந்து வந்தாள். பாண்டியனின் அரண்மனை வாயிலில் வந்து, காவலாளியிடத்தில் வாயிலைத் திறக்கச் சொன் னாள். காவலன் பாண்டியனிடத்தில் ஓடிச் சென்று கர்ண்ணகையின் வரவைக் கூறினான். பாண்டியனும் காவலனிடத்தில் கர்ண்ணகையை வரச் சொன்னான்.

பாண்டியனுடைய அரண்மனையில், பாண்டியமா தேவி தன் கணவனிடத்தில் தான் கண்ட தீக்கனாவைக் கூறினாள். கோபுரங்கள் நகர்தல், மன்னவனின் உடை வாள் முறிதல், பன்றியை வெட்டி அறுத்தல், கோபுரம் போல் ஒருத்தி வந்து எல்லாரையும் பிடித்து நிணல் சோர அறுத்திடுதல், படைவீட்டை வேற்றரசர் ஆளுதல் ஆகிய வற்றைக் கனவில் கண்டாள் (3405-3014)

"சூர்ப்பணிகதன் மூக்காலும் துர்வத்தன் துயிலாலும்
பார்ப்பனிபெண் நாக்காலும் பத்தினிக் காவ்
சிலம்பாலும்" (3415–16)

அழிவு நேர்ந்தது என்றும் கூறினாள். நகரங்கள் சில அழிந்தமைக்குக் காரணங்களையும் சுட்டிக் காட்டினாள். மதுரை அழியப் போகிறது; துன்பம் வரப் போகிறது என்றெல்லாம் எடுத்துச் சொல்ல, பாண்டியனும் அவளைத் தேற்றினான்.

கர்ண்ணகை கடுஞ்சீற்றத்துடன் அரண்மனை உள்ளே வந்து பாண்டியனைக் கண்டாள். பாண்டியன் கர்ண்ணகையின் அழகைப் பார்த்தவுடனே மையல் கொண்டான்.

"கண்டதிற்பின் பாண்டியனார் களிபுகுந்து
யென்றிசையும் நடந்தாலும் இப்படி பெண்
ணுண்டோமொ
வண்டிரிக்கும் குழலாரெ வந்தவகை சொல்லு
மென்றன்
குலம்சிறந்த வேல்விழியாள் கொந்தளற்வாயி
குழலாளும்
குலம்சிறந்த நல்லழகும் செங்கனி வாயி கிஞ்சுகவும்
மலர் சிறந்த கலமுலயாள் வஞ்சியெற்கு இடையழகும்
மால்லழந்தப் போல்வழுதி வழுதிமய்யல்
கொண்டானே." (3447-3453)

என்று பாண்டியன் கர்ண்ணகையின் அழகில் மையல் கொண்டமை இந்நூலில் மட்டுமே கூறப்படுகிறது.

பாண்டியன் கர்ண்ணகையினிடத்தில் வந்த காரணத்தை வினவினான். கர்ண்ணகை, "ஒற்றைச் சிலம்பு கொண்டு உங்கள் நாட்டில் விற்க வந்தவரைத் தேடி வந்தேன். நான் ஒரு செட்டியப் பெண்; அச்சிலம்பு கொண்டு விற்க வந்த வணிகன் இங்கு வந்தாரோ?" என்று மந்திரிகளிடத்தில் கேட்க அவர்கள் பழித்தனர். அதனால் கர்ண்ணகை அவர்கள்மீது கோபிக்க, அங்கிருந்த வாயிற் காவலன் "கடுமொழிகளை உதிக்காதே" என்று கர்ண்ணகையை எச்சரித்தான். கர்ண்ணகை பலவிதமான

குற்றங்களைப் பாண்டியன்மீது சுமத்தினாள். ஒருவன் தவறு செய்தால் அவன் தவற்றினை நிரூபிக்கும்வரை பொறுக்க வேண்டாமோ? குற்றவாளியை உடனே கொல்வது நியாயமோ? காற்சிலம்பு விற்க வந்த கணவனைக் கள்வன் என்று தட்டான் பிடித்துக் கட்டினான். மன்னவனும் ஆராயாமல் கொன்றுவிட்டானே என்று கர்ணணகை பாண்டியனிடம் கூறினாள். கர்ணணகையின் குற்றச்சாட்டைக் கேட்ட மன்னவன் சிற்றழற்று கர்ணணகையையும் கொல்வதாகக் கூறினான். கர்ணணகை அஞ்சாதவளாக, "என் கணவர் கொண்டு வந்த சிலமபின் இணைச்சிலம்பை நான் கொண்டு வந்துள்ளேன்" என்று சிலம்பினைக் காட்டினாள். சிலம்பினைக் கண்ட பாண்டியன், தன் தவறுணர்ந்து வருந்தினான். கர்ணணகையிடத்தில் தான் செய்த தவற்றைப் பொறுத்தருள வேண்டினான். பாண்டியன் கர்ணணகையிடத்தில் "நீ கோபப்பட்டு பயனில்லை. உன் கணவன் இறுதிவரை உண்மையைச் சொல்லவில்லை. அதனால்தான் வெட்டுண்டு மாண்டான்," என்று கூறினான். பாண்டியனுக்கும் கர்ணணகைக்கும் கடுமையான விவாதம் நடந்தது. பாண்டியன் தன்மீது மையல் கொண்டமையை அறிந்த கர்ணணகை பெண்ணாசையால் அழிந்த துரியோதனனையும் இராவணனையும் சான்றாகக் காட்டி அறிவுரை கூறினாள். (3600—3615) பாண்டியன் கர்ணணகையின் ஊர் குலமெல்லாம் சொல்லும்படி கேட்க, கர்ணணகை தன் ஊராகிய காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பினையும் அங்கு வாழும் சுற்புடைப் பெண்டிரைப் பற்றியும், அந்நாட்டினை ஆண்ட மன்னரின் பெருமையைப் பற்றியும் எடுத்துக் கூறினாள். (3625—3750) அதைக் கேட்ட மன்னவன் காமம் தீராணாகி, தன் முகம் நோக்கி மெள்ள ஒரு சிரிப்பு சிரிக்கும்படியாகக் கேட்க, கர்ணணகையும் ஆயிரம் பொன்கொடுத்தால் 'பெண்டாக' (மனைவியாக) இருபபதாகவும் பொன் சமைக்கத் தட்டானை அழைக்கும்

படியாகவும் வேண்டினாள். (தட்டானை வரவழைப்பதற் காகவே அவள் பாண்டியனுக்கு மனைவியாகச் சம்மதிப்ப தாகக் காட்டப்படுகிறது. சிலப்பதிகார வழிவந்த எந்த நூலிலும் இவ்வாறு கூறுவதாக அமையவில்லை. இந் நூலில் மட்டுமே பாண்டியன் கர்ண்ணகையின் அழகில் கட்டுண்டு காமுகனாக மாறுவதும், கர்ண்ணகையும் மனைவியாகச் சம்மதிப்பதும் புதுமையாக அமைந் துள்ளது) கர்ண்ணகை மனைவியாகச் சம்மதித்ததைக் கண்ட பாண்டியன் சினத்தை அடக்கி, செட்டியையும் மறந்தால் தன் தனத்தையெல்லாம் தருவதாகக்கூறினான். கர்ண்ணகை தன் சினத்தை அடக்கிச்சிரித்தாள். "கொற்ற வரில் உன்னைப் போன்று காணவில்லை. இனி நானும் ஊரறியாமல் இருப்பேன். உனக்குப் பெண்டாக இருப் பேன்" என்று கூறக்கேட்ட கொற்றவன் மனமகிழ்ந்து பொற்கொல்லனை அழைத்து வர ஆள் அனுப்பினான். தூதுவனிடம் பொற்கொல்லன் தன்னை அழைத்ததன் காரணத்தைக் கேட்க,

"மன்னவெர்க்கு தேவியராய் வந்தாளொ
இன்னொருத்தி
கன்னல் நெடுங்குழலாரும் கள்ளனுட பெண்ங்
கொடியாம்
பன்னுத்தமுள் பாண்டியெனும் பருவட்டம்
கொடுப்பதுக்கு
மன்னவெனார் வரவழைத்தார் மடியாமல்
வாருமென்றான்." (3802--3805)

என்று விடையிறுத்தான்.

தூதுவன் பொற்கொல்லனை வரவழைத்ததற்கான காரணத்தைக் கூறியதோடு அமையாது, கர்ண்ணகையின் பேரழகையும் கூறினான்.

"அம்மயிலே பார்த்திருக்க ஆயிரங்கண் போதாது
கோத மயிலொரும் கொற்றவற்கு தக்கவள் தான்"
(3811-3812)

என்று கூறக்கேட்ட தட்டான், "அழகிருந்தால் பல னுண்டா? திருடனுடைய மனைவியை விலங்குபோட்டு மாட்டாமல் திரவியங்கள் போடுவதா? வழுதியர்க்கு இப்படி மதி சொன்னவர் யார்?" என்று வெகுண்டு கேட்டான். அவன் புறப்படும் நேரத்தில் மனைவி, தான் தீக்கனாக் கண்டதாகக் கூறித் தடுத்தாள். அவளுடைய கனவில் சொக்கருடைய செண்பகப்பூங்கா அழிகிறது; வாழைக்குலை சிதறுகிறது; செம்பியன் நாட்டிலிருந்து வந்து ஒருத்தி மதயானையின் கழுத்தை அறுக்கிறாள்; பூ மரங்களின் கிளைகள் முறிந்து கீழே விழுகின்றன; பாண்டியன் இறக்கிறான்; படித்துறையிலிருந்த மரம் நடு இரவில் எரிகிறது; அந்த மரம் சிதறி மதுரை எங்கும் அமளி உண்டாகிறது; அடுப்புக்கல்லு உடைகிறது; அடுக்குச் சட்டி உடைகிறது; தட்டான் அணிவித்த தாலியை ஒரு பெண் பறித்து எறிந்தாள். (3821-3833) என்று தட்டானின் மனைவி கூற, அவளுக்கு ஆறுதல் கூறிப் புறப்பட்டான் தட்டான். தீக்கனாக் கூறி, செல்லும் கணவனைத்தடுக்கும்முறை எல்லாக்கதைப்பாடல்களிலும் காணப்படுகிறது. பாண்டியனை அடைந்து வணங்கிய அவனைப்பார்த்து உண்மைநிலை கூறுமாறு பாண்டியன் கேட்க, தட்டானோ பாண்டியனுக்குப் பதிலுரைக்காமல் கர்ண்ணகைக்குத் தண்டனை கொடுக்கும்படி கூறினான். தட்டானைக் கண்டதும் கர்ண்ணகையின் சினம் மூண் டெழுந்தது கண்கள் சிவந்தன. சிலம்பு புலம்பியது.

"பஞ்சவர்தன் பாரி துயில் (துகில்) பறித்தெறிந்த
பாதகன்போல்
யென்சிலம்பெயும் பறித்து ஈடழிக்க இருந்தீரோ."
(3880—3881)

என்று சினத்துடன் கேட்டாள். பாஞ்சாலியின் துகிலுரிந்த பாதகன் போல், தட்டான் இவள் சிலம்பைப் பறித்ததாக கூறினாள். தட்டான் தன் வீட்டிற்குச் சென்று கண்டறிவ தாகக் கூறினான். கர்ண்ணகை அவனைப் போகவிடாமல் "சிலம்பினுள் நீதானே பரல் அடைத்தாய். உண்மை கூறு என்றதும் 'புதுமுத்து' உள்ளே இருப்பதாகக் கூறி னான். ஜானகியைச் சிறையில் வைத்த சண்டாளனைப் போன்று பாண்டியனும் தன் கருவூலத்திலிருக்கும்சிலம்பை கொண்டுவரச் சொன்னான். சென்றவர்கள் கர்ண்ணகை யின் சிலம்பைக் கொண்டு வராமல் வேறு சிலம்பைக் கொண்டு வந்தனர். கர்ண்ணகை இது தன் சிலம்பு அல்ல வென்றும், பாண்டியமாதேவி அணிந்திருந்த சிலம்பைக் கொண்டு வந்து உடைக்கும்படியாகவும் சொன்னாள். அதை உடைத்தபோது நாகமணிகள் தெறிக்க, பாண்டியன் கண்கலங்கினான். இதைக்கண்ட தட்டான் கர்ண்ணகையைக் கள்ளி என்று கூற, கர்ண்ணகை வெகுண்டு,

"பத்தினியெ கள்ளியென்று யெரிகதிரோன்
நடுவாகில்
எரித்திடுவேன் உம்மையென்றாள் கள்ளியிவள்
பத்தினியோ" (3964-3965)

என்று சூரியன் சாட்சியாக எரிப்பதாகக் கூறினாள். அதைக் கேட்ட தட்டானோ, கர்ண்ணகை பாண்டியன் மேல் ஆசைப்பட்டாள் என்று பழி கூறினான். அதைக் கேட்டு கர்ண்ணகை வெகுண்டு தூற்றினாள். இந்திரன் ஆரத்தைக் கழுத்தில் பூணல்; பூதத்தை ஏவல் கொள்ளல், புரவியை நரியாக்கல்; திருநீறும் அஞ்செழுத்தும் மாற்றி வைத்தல், அவுணர்களைஓட்டுதல் போன்ற சோம சுந்தர கடவுளின் திருவிளையாடல்களை அரசன் மீது ஏற்றிக் கூறினாள். கோபத்துடன் தன் சிலம்பைக்கையில் எடுத்து உடைத்தாள். தெறித்து விழுந்த நாகமணி, மதுரை முழு வதும் அழியுமென்று கூறி மறைந்தது. கர்ண்ணகையும்,

"வாரி மெள்ள குளை பிடித்தாள் வலித்திறுக்கீ
வெயுருத்தாள்
சூரியன் தன்னொளி வதானாள் துக்கமென்னும்
வடிவதானாள்" (4078-4079)

என்பதிலிருந்து கர்ண்ணகை துர்க்கை வடிவம் எடுத்தலை தெரியவருகிறது. சங்கரனை வேண்டி வரம் பெற்றாள். தன் கைவாளால் தன் முலையை அறுத்து, பாண்டியனை நோக்கித் தீப்பற்றுமாறு எறிந்தாள். பாண்டியன் ஆசைப் பட்ட கொங்கை இதுதான் என்று கூறி, அதனை அறுத்து அவன் முகத்தில் எறிந்தாள். இதைக் கண்ட இடைச்சி மோரைக் கொண்டு அப்பியதால் முலையானது மீண்டும் வளர்கிறது. இதைப் பார்த்து மகிழ்ந்த கர்ண்ணகை "எச்சேரி வெந்தாலும் இடச்சேரி வேகாது" (4157) என்று கூறிவரமளித்தாள்.அரசவையில் இருந்தஆயிரம் தட்டான் களின் தலைகளையும் அறுத்தாள். மழுரைசனையும் தேவி யையும் வாழ்த்தினாள். இவ்வளவு துன்பத்திற்கும் காரண மான தட்டானை இருபத்தைந்து நாழிகை அளவும் சதையை அறுத்தெறிந்தாள். பத்தினியாள் கர்ண்ணகை யாள் சிரித்திடவே பாண்டியனின் மதுரையைச் சுற்றித் தீப்பிடித்தது. என்னென்ன பொருள்கள் எரிந்தன என்பது இந்நூலில் மட்டும் தான் விரிவாகக் கூறப்படுகின்றன. (4160-4220)

"பொன்னும் கொடிமரம் யெரிவது பாராம்
பித்தளத் தூணுகள் யெரிவது பாராம்
வெள்ளிக் கொடிமரம் யெரிவது பாராம்
(4178–4180)

என்று எரியும் பகுதிகளை ஆசிரியர் அழகாக விளக்கு கிறார்.

"தள்ளி விழுந்த கிழவனேயும் போட்டு
சந்தி மாரேயும் தூக்கிக் கொண்டோடினார்.
சுட்டப் பணியாரம் சட்டியிலிருக்கவே
துலுக்க ஸ்திரீகளும் அவயம்யிட்டோடினார்.

பெட்டி யெடுத்துக்கோ பேளை யெடுத்துக்கோ
பிறமெ வா றவெரெ கைய்யெப் பிடித்திக்கோ
சா லுக்குள்ளே நின்று தண்ணீர் யிறைப்போர்க்கும்
தற்கமிட்டு சிலரோடி ஒளிக்கவெ
கெஞ்சி அழுதாரெ மதிரயிலுள்ள பேர்கள்
இடத்தெரு வாற்கு அடக்கலம் யெண்ம்பாராம்"
(4191—4200)

என்று நெருப்பினால் சூழப்பெற்று மக்கள் அலமந்து நிற்றலையும் கூறியுள்ளார். நன்மந்திரிகள் மூவர் வாழும் இடத்திலும், இடைச்சியர் தெருவிலும் அக்கினியை வராமல் நிறுத்தி மற்றெல்லா இடங்களிலும் பத்தினி யாள் அனல் கொண்டு விளையாடினாள். பாண்டியன் சென்ற இடங்களில் எல்லாம் தீயும் சென்றதைக் கதைப் பாடல் அமைப்பில் அழகுற விளக்கப்படுகிறது.

"தெக்கெ கோட்ட வாசல் தனீலெ
ஓடியொளிக்கவெ பாண்டியனாரும்
அங்கே சென்றல் லொ அக்கினிபகவான்
அனலும் கொளுத்தியே கொடுப்பது பாராம்"
(4212—4215)

என்று பாண்டியன் அலமந்த நிலை கூறப்பட்டுள்ளது. பாண்டியன் எல்லாத் திக்குகளிலும் ஓடி ஒளிந்து, இறுதி யில் கல்லறப் புரயிலெ (கருவூல அறை) ஓடி ஒளிவதைக் கண்ட கர்ணனைக நாகமணி சிலம்பெடுத்துக் கல்லோடு மோத, கருவூல அறை எரிந்தது. அதனால்,

"காலொடு கண்ணொடு கரமது வேக
முட்டொடு முதுவுகள் யெரிவது பாராம்
தோளொரு துதிகரம் யெரிவது பாராம்
கல்லறவரபுரயிலே பாண்டியனாரும்
கருவுலமீதிலெ பட்டிறந்தாரெ." (4245-4244)

என்று பாண்டியனின் பரிதாபமான இறப்புக் கூறப்படு கிறது. தான், தோன்றியதன் பயன் முடிந்து விட்டதால்

கர்ண்ணகை கயிலாயத்திற்குச் சென்றதாகக் கூறப் பட்டுள்ளது.

"பதினாறு மணிச் சூலத்தோடே
பயிந் தொடியாளம்மை வந்து பிறந்தாள்
மாயப் பொன்னும் கயிலாய புரத்திலை
வந்தடி தொழுதவள் வரமது கேட்டாள்"
(4261—4264)

என்று ஆசிரியர் கர்ண்ணகையின் முடிவைக் கூறியுள்ளார்.

இந்நூலின் தனிச் சிறப்புகள்

1. இந்நூலுக்கெனத் தனிச்சிறப்புகள் பல உள்ளன. இந்நூல் கர்ண்ணகையின் பிறப்பிலிருந்து தொடங்குகிறது. கதை மாந்தர்களின் தோற்றம் புராணச் சார்புடையதாக உள்ளது. பாண்டிய மன்னனின் புகழையும் சக்தியும் அழிப்பதற்காகவே மாயவனார் நன்கு சிந்தித்து, கேந்திரக் காலரைக், கோவலராகப் பத்து மாற்றிலும் துர்க்கையைக் கர்ண்ணகையாகப் பத்தரை மாற்றிலும் படைக்கிறார். படைப்பிலேயே கோவலனைவிடக் கர்ணகைக்கு ஏற்றம் அளிக்கப்படுகிறது. மற்ற நூல்களில் கூறப்படுவது போல பாண்டியனைப் பழிதீர்ப்பதற்கல்லாமல் அவனுடைய புகழையும் சக்தியையும் அழிப்பதற்காக என்று படைப்பின் நோக்கம் புலப்படுத்தப்படுகிறது. இதன்காரணம் தெளிவாகவில்லை. படைத்தற்கடவுளாக, இந்நூலில் மாயவனார் குறிக்கப்படுகிறார். (5-12)

2. சிலப்பதிகாரத்தில் திருமணத்திற்குக் கொடுக்கப் படும் முதன்மை சிலம்பிற்குக் கொடுக்கப்படவில்லை. இந்நூலில் சிலம்பின் பரலுக்குக் கொடுக்கப்படும் முதன்மை திருமணத்திற்குக் கொடுக்கப்படவில்லை. மானாகன் கர்ண்ணகை பிறந்தவுடனேயே, அவளுடைய சிலம்பில், பரலிடும் நாகமணிக்காகக் கடல் கடந்து நாக முத்தர் கோட்டைக்குச் சென்று அதைக் கொண்டு வரு

கிறான். கோவலன் கள்வனல்லன் என்பதை முடிவு செய்யவும் பாண்டியன் தவறிழைத்ததைச் சுட்டவும் நாக மணி பயன்படுவதால் அதற்குச் சிறப்பிடம் கொடுக்கப் பட்டது போலும். கர்ணகை பத்தினி என்று சான்றி தழும் நாகமுத்தாளால் கொடுக்கப்படுகிறது. நாகமணி இட்ட சிலம்பைப் பத்தினிக் கர்ணகைதான் அணிய வேண்டும். பிறர் அணியக்கூடாது என்று சத்தியம் செய்த பிறகே நாகமணி கக்கிக் கொடுக்கப்படுகிறது. இந்நூலில் துர்க்கையே கர்ணகையாகப் படைக்கப் படுவதால் பத்தினித் தன்மை இயல் பாக்கப் படுகிறது. (16-65)

3. சிலம்பு செய்யும்முறை இந்நூலில் கூறப்படுகிறது. தங்கத்தை நிறுத்து, உலையில் வைத்து, நெருப்பிலிட்டு ஊதினர். உலையினின்று எடுத்து. அடித்து, தகடு தட்டி, வளை கோடடி, நாகமணியை அடைத்தார் என்று சிலம்பு செய்முறையும் கூறப்படுகிறது. (64-83)

4. கோவலன் கர்ணகை திருமணம் காவிரிப்பூம் பட்டினத்தில் நடந்ததாகக் காட்டப் படினும் திருமண முறை, குமரி மாவட்டத்தில் நாட்டுப் புறங்களில் நடை பெறும் திருமண நிகழ்ச்சியினை விளக்குவதாக உள்ளது. பந்தலிடுதல் சிறப்பிக்கப்பட்டுள்ளது. முகூர்த்த வேளை யில் சுண்டு விரல் பிடித்து மணவறையைச் சுற்றி வந்து மாலையிட்டு, பூச்சூட்டி, மணவறைக்குள் புகுதல் கூறப் படுகிறது. 'தாலி அணிவித்தல்' சடங்கை இந்நூல் குறிப் பிடவில்லை. திருமணத்திற்குப் பின் மூன்று, நான்கு, ஏழாம் நாட்களில் நடைபெறும் சடங்குகள் குறிப்பாகக் கூறப்படுகின்றன. ஏழு நாள் வரைக்கும் மணமகன் மணமகளை விட்டுப் பிரிதல் கூடாது என்ற வரன்முறை யும் இருந்துள்ளது. இன்றைக்கும் குமரி மாவட்டத்தில் திருமணத்தின் பின்னர் ஏழாம் நாள் சடங்கு சிறப்பாகச் செய்யப்படுகிறது. (187–200)

5 மாதவியின் நடனத்தைக் கோவலன் கண்டதாகச் சிலப்பதிகாரத்தில் குறிப்பில்லை. இந்நூலில் 'மாதேவி' அரங்கேற்றத்திற்காகப் பொன் கம்பம் ஊன்றப்படுகிறது. கோவலனை நடனம் பார்க்க விடாமல் தாய் தடுக்கிறாள். நடன அரங்கினின்று வரும் மத்தள ஓசையையும் தாயிடம் கேட்பவனாகக் கோவலன் காட்டப்படுகிறான். தாய் கூறும் பொய்களைக் கேட்ட பிறகு, கோவலன் மாதேவியின் நடன அரங்கேற்றத்தின் திமில் சத்தம் என்று தாய்க்குக் கூறுகிறான். (142—182)

6. கோவலன் மாதேவியின் நடனம் காண்பதற்கு முன்னமேயே, அவன் மாதேவியிடம் தங்கி விடுவான் என்று உறுதியாகக் கோவலனின் தாய் நம்புகிறாள். (தாயின் பெயர் கூறவில்லை. கோவலனின் தந்தை பற்றிய ஒரு சிறு குறிப்பும் காணப்படவில்லை. வேறு எந்தச் சிலம்பு நூல்களிலும் கோவலனின் தாயைப் பற்றி இந்த அளவிற்கு விரிவாகக் கூறவில்லை) அதனால் தன் மகன் பரத்தையன் கூட்டுறவால் அழிந்து விடக் கூடாது என்று அறிவுரை கூறுகிறாள். பெண்ணால் அழிந்தவர்களின் பட்டியலைத் தருகிறாள்; பரத்தையர்களின் கொடுமை களைக் கூறுகிறாள்; ஒரு மகனாகப் பிறந்தும் கொள்ளி வைக்காமல் போக நேரிடுமே என்ற தன் தாய்மை உள்ளத்தை வெளிப்படுத்தித் தடுக்கிறாள். தன் மகன் அழியாமல் தடுக்கும் தாயின் முயற்சி இந்த நூலுக்கே உரிய சிறப்பாகும். (185-260; 308—375, 416—426)

7. இந்நூலில் கர்ணகையின் பாத்திரப்படைப்பு மிகவும் புதுமையான முறையில் அமைந்துள்ளது. கோவலனின் பரத்தமையால் பாதிக்கப்படுபவள் கர்ணகைதான். ஆனால் அவளோ கோவிலனை அனுப்பு மாறு கூறுவதிலிருந்து கர்ணகையின் மனத்தை அறிய முடிகிறது. கோவலனைப் போகவிடாமல் தடுக்கும் தாயை

யும் தடுத்துக் கோவலனையும் போகுமாறு செய்யும் கர்ண்ணகையின் இச்செயல் வேறு நூலில் காண முடியாமை குறிப்பிடத் தக்கது. சிலப்பதிகாரத்தில் கோவலன் மாதவியிடம் சென்றதைப் பற்றிய கண்ணகி யின் கருத்து நமக்குத் தெளிவாகவில்லை. கண்ணகியின் பிரிவுத் துன்பம் மட்டும் புலப்படுத்தப்படுகிறது. இந்நூலில் கர்ண்ணகை கொண்ட எரிச்சலும் சினமும் இயல்பாகப் பளிச்சிடுகிறது. கோவலனும் 'கண்ணகியும் சில ஆண்டுகள் மனையறம் புரிந்த பிறகே, பிரிந்ததாகக் காவியம் கூறுகிறது, கதைப்பாடலோ திருமணமான மணமக்கள் பிரியவே கூடாது என்று கூறப்படும் ஏழு நாட்களுக்குள் கோவலன் பிரிந்ததாகக் காட்டுகிறது. (218-225. 302—304)

8. கோவலன், மாதேவியின் நடனத்தைப் பார்க்க அவனுடைய தாய் அனுமதிக்கவில்லை கோவலனோ ஊரிலுள்ள மற்ற செட்டிகளின் மகன்கள் போகும்போது தான் போகாமல் இருப்பது மதிப்புக்குறைவு என்கிறான் பிச்சென் செட்டி, பிழபொறுத்தான் செட்டி, சொக்கன் செட்டி, சொறியன் செட்டி, சீக்கன் செட்டி, சிரங்கன் செட்டி, தக்கன் செட்டி, தலவாளன் செட்டி, கறுப்பன் செட்டி, இரப்பன் செட்டி, பரப்பன் செட்டி ஆகியோரின் மகன்கள்எல்லாம்போகும்போது- அவரவர் தரத்துச் செட்டி யார்கள் எல்லாரும் போகும்போது—பொன் மணிகள் விற்கும் செட்டிமகனான தான் போகாமலிருப்பதா என்று கேள்வி கேட்கிறான். இதிலிருந்து அக்காலத்தில் செட்டி யார்களின் நிலையும், பரத்தமைப் பெருக்கமும் தெரிய வருகிறது. கோவலன் மாதவியின் கூத்தைப் பார்க்கத், தாயிடமே பணம் கேட்கிறான். அவன் கேட்கும் பணத்தின் மிதுதியைப் பார்க்கும் போது மாதவியுடன் அவன்வாழும் நோக்கத்தில்செல்வதாகத்தெரிகிறது!'எட்டு யானை பட்டும் ஒரு குட்டி யானை பணமும் வேணும்' என்று கேட்கிறான் கோவலன். மாதேவியின் நடனம்

பார்க்கத் தாயிடம் அனுமதி வேண்டுவதும் பணம் கேட்பதும் இந்நூலில் மட்டுமே காணப்படுகிறது. (262-281 377-384);

9 கோவலன் பணம் கேட்டவுடன், அவனுடைய தந்தை பணம் சேர்த்த விதத்தைத் தாய் கூறுகிறாள். செட்டியார்களின் சிக்கன வாழ்க்கையை, இப்பகுதி படம் பிடிக்கிறது. (386-415) இப்பணத்தைத் தாயிடம் பெற்று அவன் போவதும் விளக்கமாகக் கூறப்படுகிறது. (429-444)

10. கோவலன் தன் தாயின் சொற்படி, மாதேவியின் நடனத்தை மறைந்திருந்து பார்ப்பதை மாதேவியின் தாய் கண்டறிந்து மகளுக்கு உணர்த்துகிறாள். மாதேவி கோவலனுக்கு முன்னால் வந்து அவன் பார்ப்பதற்கென்றே தனி வகை நடனம் ஆடுகிறாள். (465-519) சிலப்பதிகாரத்திற்குப் பின் வந்த நூல்களில் கோவலனின் திருமணத்தில் மாதவி நடனமாட வருவதாகவும், மாலையை வீசி எறிவதாகவும் மாலை கோவலன் கழுத்தில் விழுவதாகவும் கூறப்படுகிறது. இந்த மாதேவியின் அரங்கேற்றத்தில் அவள் மாலையெடுத்து வீசுகிறாள். கோவலனின் கழுத்தில் மாலை விழுகிறது என்று கூறப்படுகிறது. காவிரிப்பூம் பட்டினத்தில் மாதவி வாழ்ந்ததாகச் சிலப்பதிகாரம் கூற, மாதேவி கோவலனுடன் உறையூரில் வாழ்ந்ததாக இந்நூல் கூறகிறது.

11. கோவலனிடம் பணம் குறைந்ததால் மாதேவி கணக்குப் பார்த்து ஒரு மஞ்சாடி பொன் குறைவதைக் கண்டு, கோவலனைத் தண்டிக்கிறாள். கடும் வெயிலில் செட்டியார்கள் பலர் போகிற வழியில் உச்சியில் கல்லை வைத்துக் கோவலனைப் பார்க்க வைக்கிறாள். நெற்றியில் கையை வைத்து நேர் முதுகில் கல்லை வைக்கிறாள். தோள்புயத்தில் கையை வைத்துச் சூரியனைப் பார்க்க வைக்கிறாள் என்று மாதேவி கோவலனுக்கு விதித்த தண்டனை முறை கூறப்படுகிறது. பலர் அவ்வழியில் போனாலும் ஏன் என்று அவனைக் கேட்க வில்லை.

போகிறவர்களிடம் கோவலன், ஒரு மஞ்சாடி பொன் கடன் கேட்டும், அவர்கள் கொடுக்காமல் "பண்டம் விற்கலே நேரமில்லை. உறவாட நேரமெங்கே?" என்று சொல்லிப் போய் விடுகின்றனர். (605-702) இப்பகுதி பொருளுக்காக எதையும் செய்யும் பரத்தையர்களின் புன்மையை உணர்த்துகிறது. அக்காலப் பரத்தமைச் சமுதாயத்தின் உரிமையை நிலை நாட்டுவதாக உள்ளது. வாணிகம் செய்யாமல் பரத்தையிடத்தில் தங்கும் பரத்தர்களை அக்காலச் சமுதாயம் புறக்கணித்ததையும் அறிய முடிகிறது. கோவலனைப் பலரும் அறிய தண்டிக்கும் இம்முறை வேறெந்த நூலிலும் காண முடியவில்லை.

12. மாதேவியின் வீட்டில் கோவலன் தவித்துக் கொண்டிருந்தபோது பரமசிவனார் ஆண்டி வேடம் பூண்டு வருகிறார். தன்டனையிலிருக்கும் கோவலனைக் காரணம் கேட்க, கோவலன் ஆதியோடந்தமாக அனைத்தையும் கூறுகிறான். காவிரிப்பூம பட்டினத்திலிருக்கும் கர்ணனைக்குத் தூது அனுப்புகிறான். கர்ணனைக்கு திருநீட்டை (கடிதம்) எழுதக் கொடுக்கிறான். திரு நீட்டைக் கொண்டு சென்று அச்சுதனார் கர்ணனை யிடம் கொடுத்தபோது, பொன்னெடுக்க இயலாது. என்று சொல்லி அவள அணிந்திருந்த பதக்கமாலையைக் கழற்றிக் கொடுக்கிறாள். அதைக் கொண்டு சென்ற ஈசனார் கோவலனிடம் கொடுக்க, அவன் அதை விற்று ஒரு மஞ்சாடி பொன்னுக்கு இரண்டு மஞ்சாடி பொன்னாகக் கொடுத்துவிட்டு, மிச்சப் பொன்னை வற்று, வழியில் கண்ட பண்டாரங்களுக்கெல்லாம் உணவிட்டு, கர்ணனையின் மனை வந்து சேர்கிறார். இப்பகுதி திக்கற்றவர்க்குத் தெய்வம துணை என்னும் கருத்திற்கு அரண் செய்கிறது. இந்நிகழ்ச்சி சுந்தரருக் காகப் பரவை நாச்சியாரிடத்தல் தூது சென்ற இறைவனை நினைவூட்டுவது போல் அமைகிறது. கோவலனின் தண்டனை நீங்கத் துணை நின்று, கோவலன்

கர்ண்ணைகையை இணைத்து வைக்கும் சிவபெருமானின் செயல் சிலம்பின் வழிவந்த எந்த நூலிலும் காணப்பட வில்லை.

13 கோவலன் திரும்பி வந்தவுடன், "நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச் சிலம்புள கொண்ம்" என்ற சிலப்பதி காரக் கண்ணகியிடமிருந்து இந்நூலின் கர்ண்ணகை மாறு படுகிறாள். கோவலன் கர்ண்ணகையிடம் வந்தவுடனேயே அவனை இடித்துரைக்கிறாள். (899–906) தனக்கும் மாதே விக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறாள்; நல்கரும்பு, நாவிப்பிள்ளை சோலைக்கிளி, மாடப்புறா எனத் தன்னுயர்வையும், பேய்க்கரும்பு, மரநாய், சொறிநாய் என மாதவியின் இழிவையும் சொல்வது இயல்பாகவும் புதுமையாகவும் உள்ளது.

"வாழவேண்டும் பிராயத்திலே
வாழாமல் போனீரே" (907-908)

என்று தன் ஏக்கத்தையும் புலப்படுத்துகிறாள். பரத்தையின் வீடு சென்ற கோவலனுக்கு ஏற்ற தண்டனையையும் கொடுக்கிறாள். தன்னைத் தொடக் கூடாது என்றும். ஆக்கியுண்ண கலந்தருவேன், உருளை யிலே பொங்கியுண்டு வெளியில் படுத்துறங்கு என்றும் கூறுகிறாள். (909-916) இக்கூற்றிலிருந்து அக்காலச் சமு தாய வழக்கம் புலப்படுகிறது. பரதத்தையர்களிடம் சென்று வந்தவர்களைக் குலமகளிர் சேர்த்துக் கொள்ளாத நிலை யும் தெரிய வருகிறது. (இப்பகுதி பெரிய புராணத்தில் திருநீலகண்ட நாயனாரின் மனைவி கூறிய கூற்றுடன் ஒப்பு நோக்கத்தக்கது.)

14 சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கண்ணகி, மாதவி ஆகிய இருவரின் பிரிவுத்துன்பத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறார். இந்நூலில் மாதேவியின் பிரிவுத் துன்பம் காட்டுமளவிற்குக் கர்ண்ணகையின் பிரிவுத்

துன்பம் காட்டப்படவில்லை. மாதேவி, கோவலனின் பிரிவுத் துயரைத் தாங்கமுடியாமல் தாயிடம் தன் வேதனையைக் கூறுகிறாள். வயந்த மாலை (932-935) சோழ அரசனிடம் சென்று இச்செய்தியைக் கூறுகிறாள். அவன் ஒரு தூதுவனைக் கோவலனிடம் அனுப்புகிறான். அவன் கோவலனிடம் "நீ பன்னிரண்டாண்டு காலம் அவள் மனையில் வாழ்ந்தாய். தினம் செல்லவில்லை யென்றாலும் ஒருநாளாவது போய்வா" என்று அறிவுரை கூறுகிறான். இதைக் கேட்ட கோவலன் மறுத்துக் கூறுவதைக் கேட்ட சோழ மன்னன் வெகுண்டு, செட்டிவரி நகரிவரி இரண்டையும் அவனுக்குப் போட்டால், கோவலன் வரிகட்ட வருவான் என்று நினைத்தான். வரியிறுக்க முதலில்லாமல் பரதேசம் போகவேண்டுமென்று கோவலன் விரும்புகிறான். கர்ண்ணகையோ, ஒரு காலின் சிலம்பை விற்றால் வரியிரண்டும் கட்டி, மிச்சமுள்ள பணத்தில் காலம் பூராவும் வயிறு நிறைய உண்ணலாம் என்கிறாள. வரியிரண்டும் நெருக்குவதால் கோவலன் மதுரைக்குச் சென்று சிலம்பு விற்றுவருவதாகக் கூற, கர்ண்ணகையும் உடன் வருவதாகக் கூறுகிறாள். இருவரும் மதுரை நோக்கிச் செல்கின்றனர். சிலப்பதிகாரத்தில் இழந்த பொருளை ஈட்டுதல் காரணமாகவும், ஊழ்வினை துரத்துவதாலும் இருவரும் மதுரை நோக்கிச் சென்றதாக இளங்கோ வடிகள் கூறுகிறார். 'கோவிலன் கதையில்' மாதவியின் கடனை அடைப்பதற்காக இருவரும் மதுரை நோக்கிச் செல்கின்றனர். இந்நூலில் மட்டும்தான் வயந்த மாலையின் சொற்கேட்டு சோழன் போட்ட வரிப்பணத்தை ஈடுகட்டவே இருவரும் மதுரை நோக்கிச் செல்வதாகப் புதிய காரணம் காட்டப்படுகிறது.

15. இருவரும் மதுரை நோக்கிச் செல்லும் போது பொன்னியாறு குறுக்கிடுகிறது. பொன்னியாற்றைக் கண்டவுடன் கோவலனுக்கு மாதேவியுடன் வாழ்ந்த

வாழ்க்கை நினைவுக்கு வர, 'நானும் மாதேவியும் கலம் படவே குளித்த ஆறு இதுதான்' என்று கூறுகி றான். இதைக் கேட்ட கர்ண்ணகை வெகுண்டு காவிரியை வற்றும்படியாகச் சாபம் இடுகிறாள். காவிரியும் வற்றுகிறது. கால் நடையாக நடந்து இருவரும் ஆற்றைக் கடக்கின்றனர். ஆற்றைக் கடந்த பிறகு மீண்டும் பொங்கப் பாயச் சாபம் இடுகிறாள். இந்நிகழ்ச்சி சிலம்பின் வழிவந்த வேறெந்த நூலிலும் காண முடிய வில்லை. இந்நிகழ்ச்சியால் கர்ண்ணகையின் பத்தினித் தன்மையை அறிய வாய்ப்பேற்படுகிறது.

16. மதுரை நோக்கிச் செல்லும் வழியில் கர்ண்ணகை நடக்க முடியாமல் கால் சோர்ந்தாள். அதனால் "நான் உன்னை எடுக்கிறேன்" என்று கோவலன் கூறுகிறான். அதைக்கேட்ட கர்ண்ணகை மறுத்து, அகலமான ஆலிலை களையும் சுண்டை இலைகளையும் பறித்து வீசுமபடி யாகக் கூறுகிறாள். கோவலனும் அவ்வாறே வீசுகிறான். இந்நிகழ்ச்சி சிலம்பின்வழிவந்தவேறுநூல்களில் இல்லாமை குறிப்பிடத்தக்கது. கர்ண்ணகை காளியின் அவதாரமா தலால் கோவலனுடன் உடலுறவு இல்லாமையைக் குறிக்க இந்நிகழ்ச்சி படைக்கப்பட்டது போலும்.

17. சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள்தாம் நன்குஅறிந்த மாதரியிடத்துக்கண்ணகியை அடைக்கலம் கொடுக்கிறார். இந்நூலில் கர்ண்ணகை தன்னை அடைக்கலமாக இருத்தி விட்டுக் கோவலனைச் சிலம்பு விற்கப் போகச் சொல்லு கிறாள். செட்டியார், வேளாளர், தட்டார் வீடுகளில் அடைக்கலம் வைக்கவா என்று கேட்டபோது மறுக்கும் கர்ண்ணகை, அதற்குக் காரணமும் கூறுகிறாள். (1121–1196) ஆயனில்லாத ஆய்ச்சிமனை இருந்தால் அடைக் கலம் வைக்கும்படி கேட்டதால் கோவலன் ஆயனில்லா ஆய்ச்சி மனை தேடிச் செல்கிறான். ஒருத்தி அத்தகைய மனையை அடையாளம் காட்டுகிறாள். (1222–1231)

இந்நூலில் கோவலனைவிடக் கர்ண்ணகை அறிவு நிரம்பியவளாகப் படைக்கப்படுகிறாள். சாதி வேறுபாடு நிரம்பிய காலகட்டத்தில் படைக்கப்பட்ட இந்நூல் ஒவ்வொரு சாதியின் குறைகளையும் சுட்டிக் காட்டுகிறது. செட்டி, வேளாளர், மறவர் ஆகிய சாதிகளின் குறைகளைக் கூறியவள் ஆயர்களின் குறை, நிறையைச் சுட்டவில்லை. மாறாக ஆயனில்லா ஆய்ச்சி என்கிறாள். பிற சாதியார் களில் கணவனில்லாப் பெண்டிர்களை ஏன் குறிப்பிட வில்லை என்பது தெரியவில்லை.

18 சிலப்பதிகாரக் கொலைக்களக்காதையில், அடைக் கலமாகக் கொண்ட கண்ணகியை, மாதரி விருந்தோம்பு தலை ஆசிரியர் சிறப்பாகக்கூறுகிறார். இந்நூலிலும் ஆய்ச்சி விருந்தோம்புதல் கூறப்படுகிறது. ஆனால் அது இயற்கை யாக உலகியலோடு இயைந்து நிற்கிறது. இதைக் கேட்ட கோவலன் தாங்கள் விருந்துக்காகவோ மருந்துக்காகவோ வரவில்லை. என்றும் செட்டிவரி, நகரிவரி கட்டுவதற் காக, மதுரையில் சிலம்புவிற்க வந்ததாகவும் கூறுகின்றனர். அதைக்கேட்ட ஆய்ச்சி அரிசி, கறி, ஆக்கி உண்ணக் கலங் கள் தருவதாகவும் கண்ணகியைச் சமைத்து உண்ணும் படியும் கூறுகிறாள் இதைக்கேட்ட கர்ண்ணகை, தனக்குச் சமைக்கத் தெரியாத நிலையைக் கூறுகிறாள். (1305-1312) ஆனாலும் அழுது கொண்டே சமைக்கிறாள்.

19. கோவலன் சிலம்பு விற்கச்செல்கின்றபோது ஏதேனும் தீங்கு வந்தால் "நான் அறியும் பொருட்டு உம்முடைய உயிரைவிட்டு வாடாத மாலை சமைத்துத் தாரும்" என் கிறாள். (1394-1397) இப்பகுதி புதுமையாகவும் வியப்பாக வும் அமைகிறது.

20. கர்ண்ணகை கோவலனுக்கு, மதுரையிலுள்ள பெண் களைப் பற்றிக் கூறி அங்குச் செல்லாதீர் என்றும் கூறு கிறாள். மதுரையின் தெற்குத் தெருவிலிருக்கும் தேன் மொழியாள் மேற்கு, வடக்கு தெருக்களில் இருக்கும் மைக்கண்ணிகள், கிழக்குத் தெருவில் இருக்கும் கிளிமொழி

யான் ஆகியோரின் வீட்டிற்குச் செல்ல வேண்டாம் என்று கூறும் பகுதி ஆய்தற்குரியது. இப்பகுதி மதுரைநகரத்தைப் பற்றிக் கர்ண்ணகை அறிந்திருந்தமையைத் தெரிவிக்கிறது. கோவலன் போகாமல் கர்ண்ணகை மட்டும் மதுரைக்குச் செல்லவாய்ப்பில்லை.கேள்வி மூலம் அறிந்தாளாஎன்பதும் புலப்படவில்லை. கோவலனை விடக் கர்ண்ணகையை அறிவுடையவளாகக் காட்ட இப்பகுதி அமைக்கப்பட்டது போல் தோன்றுகிறது. கோவலனின் பரத்தமையைத் தடுக்கும் முயற்சியாகவும் தோன்றுகிறது. (1498-1534)

21. கர்ண்ணகை அறிவுறுத்தியும் கோவலன் பல பெண்கள் வாழும் வீதிகளில் செல்கிறான். (1561-1564; 1580-1586)பரத்தையரின்புன்மைகூறிஅவன்சிலம்பு விற்றல் புதுமையானது. இச் சிலம்பைக் கண்ட மகளிர் பத்தினியார் காலுக்கல்லாது மற்றவர்க்காகாது; இட்டால் முடி தெறிக்கும்; இருந்த தலம் தீப்பிடிக்கும் என்று கூறுவதும் புதுமையானது. இப்பகுதி சிலம்பின் சிறப்பையும் கண்ணகியின் சிறப்பையும் சொல்வதற்காகவே படைக்கப் பட்டது போல் காணப்படுகிறது.

22. சிலம்பை விற்க முடியாமல் அத்தி மரத்தடியில் அமர்ந்தபோது அரசனின் தட்டான் வருகிறான். அவனால் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டு அரசவையில் நிறுத்தப்படும் போது பாண்டிய மாதேவியை அழைக்கின்றனர். பாண்டிய மாதேவி, சிலம்பினைத் தரி நோட்டம் பார்க்கிறான். அப்போது அவள் சிலம்பின் தெய்விகத் தன்மை கூறப்படுகிறது.

"என்காலின் சிலம்புமல்ல; இச்சிலம்பு
அணிவார்க்கு
நான் அடியாளும் ஆகமாட்டேன். பத்தினிமார்
பூண்ட பணி பல ஸ்திரிகளுக்கும் ஆகாது."

என்று கூறித் தட்டானிடம் கோவலரைக் கொல்லாதே என்கிறாள். சிலப்பதிகாரத்தில் கோவலன் விசாரிக்கப்

படாததால் பாண்டியமாதேவி கோவலனைப் பார்க்கும் வாய்ப்பேற்படவில்லை. சிலப்பதிகாரத்தில் பாண்டிய மாதேவி தலைக்கற்பினளாகக் காட்டப்படுகிறாள். இந்நூலில் பொற்கொல்லன். பாண்டிய மாதேவியின் மேல் பழி போடுகிறான், (1792–1797) பாண்டிய மாதேவியும் தன்னைப் பத்தினியாகக் கருதவில்லை. இதைக் கேட்ட பாண்டியன் தட்டான் மீதோ பாண்டிய மாதேவி மீதோ கோபமுறாமல் கோவலன் மீது சினம் கொள்கிறான். இவ்வாறு பாண்டியன் தேவி சாட்சி கூறுதலும், தன்னை விடக் கர்ணணகையைப் பத்தினி எனக் கூறுதலும், சிலம்பின் சிறப்புக் கூறுதலும் சிலம்பின் வழி வந்த நூல்களில் காணல் அரிது. தட்டான் தான் தப்பித்துக் கொள்ள பாண்டியன் தேவி என்றும்பாராமல்அவள்கோவலன்மேல் மையல் கொண்டாள் எனப்பழிபோடுதல் புதுமையானது. சிலம்பைக் கவர்ந்த கள்வன் என்பதைவிட, பாண்டியன் தேவி கோவலனைக் காமுற்றதாகக் கருதியமையே கோவலனைக் கொல்வதற்குக் காரணமாகிறது.

23. கர்ணணகை வரும் வரைக்கும் வெட்டுண்ட கோவலனைக் காத்திருந்த பறவைகளை வாழ்த்தி, அகலுமாறு வேண்டுகிறாள். (2517–2535) கோவலன் பேசாமை கண்டு சிவனுடைய திருவிளையாடல்களைக் கூறி மனமருகி வேண்டுகிறாள். கர்ணணகையின் துன்பத்தைக் கண்டு உமையவள் இறைவனிடம் வேண்ட இறைவன் அருள் புரிகிறான். அதனால் மாயப் பொன்பாத்திரத்தில் நீரும் ஊசியும் வர, மழு வெட்டிய இடங்களையெல்லாம் கர்ணணகை தைக்கிறாள். உறக்கத்திலிருந்து விழிப்பது போல் கோவலன் எழுகிறான். சிலம்பின் வழி வந்த பிற நூல்களிலும் இது காணப்பட்டாலும் கர்ணணகை இறைவனிடம் ஊசியும் நூலும் பெறும் முறை வேறுபடுகிறது. (2599-2712)

24. கோவலன் இறந்தபோது ஆய்ச்சியின் வீட்டிற்கு வந்த குறத்தி கர்ண்ணைக்கு நடந்த, நடக்கின்றநிகழ்ச்சி களைக் குறி சொல்வது இந்நூலிலும் காண முடிகிறது (2077-2116)

25. கர்ண்ணைகையின் அழகினைக் கண்டு பாண்டியன் மையல் கொள்கிறான். அதனைத் தெரிந்து கொண்ட கர்ண்ணைக, பெண்ணால் அழிந்துவிட்ட பல மனிதர் களின் வரலாறுகளையெல்லாம் பாண்டியனுக்கு எடுத் துரைக்கிறாள். ஆனாலும் பாண்டியன் மனைவியாகச் சம்மதிக்கிறாள். தனக்கு நகைகளைச் செய்யத் தட்டானை அழைக்கும்படி கூறுகிறாள். தட்டான் மூலமாக உள்ளீடு பரல் முத்து என்பதை அறிந்து பாண்டியனை வெல் கிறாள். சிவனை வேண்டி வாள் பெற்ற கர்ண்ணைக தன் இடது மார்பினை "நீ விரும்பிய மார்பு இந்த" என்றுகூறிப்பாண்டியனைநோக்கிஎறிகிறாள்.கர்ண்ணைக அழகினைக் கண்டு பாண்டியன் மையல் கொள்வதும், தட்டானை வரவழைக்கக் கர்ண்ணைக முயல்வதும் இந்நூலில் மட்டுமே அமைந்த நிகழ்ச்சியாகும். மார்பை அறுத்து எறிந்து மதுரையை அழிப்பதை விட, அதை விரும்பிய பாண்டியனை நோக்கி எறிவது இயல்பாக உள்ளது. (3530-4104)

26. சிலப்பதிகாரத்தில் பாண்டியனிடம் வழக்காடும் கண்ணகி தான் பிறந்து வாழ்ந்த நகரமான பூம்புகாரைச் சிறப்பித்துக் கூறுகிறாள். சிலம்பின் வழி வந்த நூல்களில் கண்ணகி பாண்டியனிடம் தன் ஊர்ப் பெருமையைக் கூறு வதில்லை. ஆனால் இந்நூலில் மட்டும் கர்ண்ணைக சிலப் பதிகாரக் கண்ணகியைப் போன்று காவெரிப்பூம் பட்டணச் சிறப்புரைக்கிறாள் (3625-3694)

27. மதுரை நகர் எரிகின்ற காட்சிகளையும், தீக்குப் பயந்து ஓடுகிறவர்களின் செயல்களையும் இந்நூலில் மட்டுமே காண முடிகிறது. (4160-4200)

28. பாண்டியன் கர்ண்ணகைக்குப் பயந்து பல இடங்களில் ஓடி ஒளிவதும், கருவூல அறையில் ஒளியும் போது சிலம்பினை எறிய, பாண்டியனும் கருவூலங்களும் பற்றி எரிவதும் இந்நூலில் மட்டுமே காணமுடிகிறது. (4201-4249)

29. பாண்டியன் இறந்தவுடன், கர்ண்ணகை மஞ்சாடி மணிக்கலயத்தில் குதித்து, பதினான்கு மணிச்சூலத்தோடு தோன்றி, சிவனார் வாழும் கயிலாயபுரத்தில் நின்று வரம் வேண்டுவதும் மீண்டும் தெய்வமாவதும் இந்நூலில் மட்டுமே காணக்கூடிய செய்திகளாகும். (4250—4264)

இந்நூல் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத் துடனும், புகழேந்திப் புலவர் எழுதியதாகக் கூறப்படும் கோவலன் கதையுடனும், ஒத்துச் செல்வதாக இருப் பினும், ஆசிரியரின் கருத்திற்கேற்ப இது பல மாற்றங் களையும் பெற்றுள்ளது.

ஒருவன் கள்வனா அல்லவா என்பதறிய, பல சோதனைகள் செய்யப்பட்டன. மதயானையைக் கள்வன் மீது ஏவி விடுதல், நாகமுள்ள குடத்தில் சிலம்பிட்டு எடுத்தல், கையில் மழுவேந்துதல் முதலிய சோதனைகள் கோவலனுக்குச் செய்யப்பட்டதை இந்நூலிலிருந்து அறிய முடிகிறது. (1814-1864)

குமரி மாவட்டத்து மக்கள் வாய்ச்சோதனை, விரிச்சி, நிமித்தங்கள், குறி கேட்டல் முதலியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர். கோவலன் செம்மானிடத்தில் விரிச்சி கேட்டுக் கொண்டு சிலம்பு விற்கச் செல்வதாகக் கூறப்படு கிறது. (1323-1373) இந்நூலில் கோவலன் சிலம்பு விற்கப் புறப்படுமுன் நல்ல சகுனங்களையும் தீய சகுனங்களை யும் பார்த்து அதன்படி நடக்க வேண்டும் என்று கர்ண்ணகை விரிவாகவே அறிவுரை கூறுகிறாள். (1412-1497) மணிப்புடவை, சுண்ணாம்பு, சுடு பரலன் (சுண்ணாம்பு சூளை வைத்துச் சுடுபவன்) தேங்காய்ச்

சவுரி, மொட்டை பிராமணத்தி, தாலியில்லா மடவார்கள், சுட்ட சட்டி, பிணம், கலப்பை, காளை மாடு, மறவர், மரம் வெட்டும் ஆசாரியின் மழு, அரிசி கொண்டு வரும் வேதியர், எருமை மாடு, இள மகளிர், கரு வாடும் சும்மை யும் கொண்டு வரும் மகளிர் ஆகியோர் எதிர் வருதலும், பட்ட மரத்திலிருந்து பல்லி குறி கூறுதலும், வால் நீண்ட கருஞ்சாரைப் பாம்பு வலப்புறத்திலிருந்து இடப்புறம் திற்குப் பாய்தலும் வால் நீண்ட கருங்குருவி வலமிருந்து இடம் பாய்தலும் ஆகியவை தீச்சகுனங்களாகக் கருதப் பட்டன. (1412—1567: 1481—1486) பால்மாடு எதிர் வருதல், பால் குடங்கள் எதிர் வருதல், தலைப்பிள்ளையும் தாயுமாக தண்ணீர்க் குடம் கொண்டு வருதல், தாலியுள்ள ஆம்ச்சியர்கள் தயிர் கொண்டு வருதல் முதலியவை நற்சகுனங்களாகக் கருதப்பட்டுள்ளன. (1468—1474, 1487—1495.)

முகத்தை மாறித் துடைத்தால் தேவி மாறி மூதேவி குடிபுகுவாள் என்ற நம்பிக்கையும் இருந்துள்ளது (1938—1944).

பின்னால் நிகழும் நிகழ்ச்சிகளைக் கனவு முன் கூட்டியே காட்டிவிடும் என்ற நம்பிக்கை இருந்துள்ளது. கர்ண்ணகையின் கனவு (1949—1970) பின்னால் அவர்கள் வாழ்வில் நிகழப் போவதை அப்படியே முன்னால் காட்டுகிறது. "வாடாப்பூ அழிக்கின்றது; மன்னர் முகம் கும்புகிறது. கோவலன் சிலம்பு விற்க கள்வனென்று பிடித்தல்; மழுவரசன் அவனை வெட்டிவிட்டு வேந்தன் முன் செல்லுதல்; காமனைப் போல் வடிவுடைய கோலலன் கட்டிய பொற்றாலியை பார்ப்பனத்தி பறித்து எறிந்து விடுதல், மங்கலியம் அழிந்து மடிமேல் விழுதல்; அடிச்சிலம்பு முறிதல், கொங்கையின் மேல் வாள்விழுந்து குறைப்பட்டு அழுதல், வாயிலுள்ள பல் விழுதல் முதலிய வற்றைக் கர்ண்ணகை கனவில் கண்டு அழுகிறாள்

(1949-1961, 2004-2022) என இவ்வாறு கர்ண்ணகையின் கனவு நிலை உரைக்கப்படுகிறது.

பாண்டியமாதேவியின் கனவில் கோபுரங்கள் நகர்தல் பாண்டியன் பிடித்த உடைவாள் முறிதல், பன்றி வெட்டி அறுக்கப் படுதல், கோபுரம் போல் ஒருத்தி வந்து பாண்டியனைப் பிடித்து நிணல்சோர அறுத்தல், படை வீட்டை வேறொருவர் ஆளுதல் (3101-3412) முதலிய வற்றைக் கண்டதாகக் கூறுகிறாள்.

தட்டானின் மனைவியும் தன் கனவு நிலை கூறித் தட்டானைப்போகவிடாமல் தடுக்கிறாள். சொக்கருடைய செண்பகப் பூங்கா அழிதல், வாழைக்குலை சிதறுதல், சோழ நாட்டிலிருந்து சேயிழை ஒருத்தி வந்து யானையின் கழுத்தறுத்தல், பூண்டு எரிய, குலை முறிந்து பூ மரங்கள் சாய்தல், கண்டவர்கள் மீன் பிடித்து கறி சமைக்க அறுத்தல், தார்வழுதி இறத்தல் எனக் கனவு நிலையைக் கூறித் தட்டானின் மனைவி தன் கணவனைத் தடுக் கிறாள். (3820—3833)

குறத்தியிடம் குறி கேட்கும் வழக்கமும் அக்காலத்தில் இருந்துள்ளது. ஆய்ச்சி கர்ண்ணகைக்குக் குறி கூறுமாறு குறமகளிடம் கூறுகிறாள். நெல்லரிசி தருவதாகவும் ஆணையிடுகிறாள். அவள் கர்ண்ணகையின் பிறப்பு, திருமணம் ஆகியவற்றைக் கூறி வருங்காலத்தையும் கூறு கிறாள். அணிந்திருக்கும் திருத்தாலி அறுத்திருக்க விதி உண்டு என்று கோவலன் இறப்பைக் குறிப்பிடுகிறாள. இறந்த கோவலன் மீண்டும் எழுந்து கர்ண்ணகையுடன் பேசுதல், வண்ணமுலை ஒன்று இழத்தல், மன்னன் முன் சென்று பழி தீர்த்தல், புதுமை ஒன்று வருதல் என வருவ துரைக்கிறாள். (2077—2116) இவ்வாறு அக்காலப் பழக்க வழக்கங்களை இந்நூலிலிருந்து அறிய முடிகிறது.

பரத்தமைச் சமுதாயம்

சிலப்பதிகாரக் கதையையொட்டி எழுந்த நூல்கள் அனைத்துமே பரத்தையர் இழிவைப் புலப்படுத்துவதையும் பரத்தையர்களிடம் செல்பவர்கள் படும்பாட்டை அறிவுறுத்துவதையுமே நோக்கமாகக் கொண்டுள்ளன. அதனால் பரதத்தையர்களின் வாழ்க்கை முறை விளக்கமாகவே கூறப்படுகிறது. மாதவியின் நாட்டியத்தைக் காண அனுமதி வேண்டும் கோவலனுக்கு அவனுடைய தாய், பரத்தையரின் இழிகுணங்களைக் கூறுகிறாள். பரத்தையர்களிடம் செலபவர்களின் பொருளை முடிந்த வரை எடுத்துக் கொண்டு க்காசிலலாதபோது தன் மெய்யையும் வீடுவாசலையும் தீண்டக் கூடாது என்று துரத்துவாள்; தீக்கொள்ளி மினுங்கும் ஒளியில் சோறு போடுவாள்; கோட்டானைப் போலக் கூப்பிடுவாள்; கதவைத் தள்ளி அடைப்பாள்; தாழ்பபாளை உள்ளிடுவாள்; மழைக்காலத்தில் மிவள்யில் பிடித்துத் தள்ளிவிடுவாள்; கணடபோது ஒன்றும் காணாதபோது வேறொன்றுமாகக் கூறுவாள் என்று பரத்தையின் இழிகுணங்கள் கூறப்படுகின்றன.

ஆடவர்கள் பலர் பரத்தையர்களிடம் தொடர்பு கொளலதைப் பழக்கமாக்கிக் கொண்டமையும், அப்படித் தொடர்பு கொளளாமலிருப்பதைச் சமுதாயம் மதிப்புக் குறைவாக நினைத்தமையும் கோவலன் கூற்றிலிருந்து புலனாகிறது. (262-281) பரத்தையர்கள் ஆடவர்களை மயக்கும் வாதத்தைக் கோவலனுடைய தாயின் கூற்றும் மாதேவியினுடைய தாயின் கூற்றும் உறுதிப்படுத்துகின்றன. (310–517) மருந்து கொடுத்து ஆடவர்களை வசப்படுத்துவதும் கூறப்படுகிறது. (555-556; 1580–1685)

பரத்தையர்கள் அரங்கேற்றத்தின் போது மாலை எறிந்து மணவாளனைத தேர்ந்தெடுக்கும் முறை தெரிய வருகிறது. (526—554) கோவலன் மாதேவிக்குக் கொடுத்த பொருட்களின் பட்டியலைத் தெரிவிப்பதால் பரத்தை

யர்களின் புன்மைக்குணம் புலப்படுத்தப்படுகிறது. (668-680; 656—663) பணம் கொடுக்க முடியாதவர் களைத் தண்டிக்கும் உரிமையையும் அவர்கள் பெற்றிருந் தனர். கடும் வெயிலில், அவர்களின் இனத்தவர் பலர் செல்லும் வழியில் அச்சமில்லாமல் தண்டித்தனர். (665—675) என்று கூறுவதிலிருந்து அக்காலப் பரத்தமைச் சமுதாயத்தின் ஆதிக்கம் தெரிய வருகிறது.

பரத்தையர்களின் வீட்டில் தங்கிவிட்டு வந்த ஆடவர் களைக் குலமகளிர் சேர்க்காத நிலையையும் கண்ணகியின் வாழ்விலிருந்து அறிய முடிகிறது. அவள், கணவன் வந்த வுடன் அவனே சமைத்து உண்டு வெளியில் படுக்க வேண்டும் என்ற நிபந்தனை இடுவதும், கோவலன் சம்ம திப்பதும் குலமகளிரின் உரிமையை நிலை நிறுத்துகிறது. (909—921)

பரத்தமை வாழ்விற்குச் சோழனும் உடந்தையா யிருப்பது வியப்பைத் தருகிறது. மாதேவியின் தாய் கோவலன் பிரிந்து சென்றதைப்பற்றிப்புகார்செய்தவுடன் அவன் தூதுவனை அனுப்பி மாதேவியின் வீட்டிற்குக் கோவலன் செல்ல வேண்டும் என்கிறான். கோவலன் மறுத்த போது அவனுக்குச் செட்டிவரி, நகரிவரி என்னும் வரிகளை விதிக்கிறான். இவ்வரிகளைச் செலுத்துவதற் காகத்தான் கோவலனும் கண்ணகியும் சிலம்பு விற்க மதுரை செல்கின்றனர். இதிலிருந்து பரத்தமைச் சமுதா யத்திற்கு மன்னவனும் உடந்தையாயிருந்தமையை உணர முடிகிறது.

இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்

மற்ற சிலம்பு நூல்களை ஒப்பிடும் போது இந்நூலில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் மிகக்குறைவாகவே அமைந் துள்ளன. கதையின் தலைமை மாந்தர்களைச் சிறப்பிக்கும் பொருட்டும், கதைகேட்போரின் ஆர்வ எண்ணத்தைத்

தூண்டும் பொருட்டும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் கதைப் பாடல்களில் இடம்பெறுகின்றன.

மாயவனார் கோவலன் கர்ணனகையை முறையே பத்து மாற்றுத் தங்கத்திலும் பத்தரை மாற்றுத் தங்கத்திலும் பிறப்பித்தார். மானாகன் கர்ணனகையின் சிலம்பிற் காகக் கடல்கடந்து சென்று நாக முத்தாளிடம் நாகமுத்து பெற்று வருகிறான். மாதேவியின் வீடடிலிருக்கும் கோவலனுக்கு அச்சுதனார் ஆண்டிவேடம் பூண்டு உதவி செய்கிறார். கோவலனுடன் கர்ணனகை கடந்து செல்ல வேண்டி, காவிரி ஆறு வற்றி மீண்டும் ஓடுகிறது. கோவலன் சிலம்பு விற்கச் செல்லும்போது தன்னுடைய உயிரினை இட்டு வாடாப்பூ மாலை சமைத்துக் கர்ணனகையிடம் கொடுக்கிறான். கோவலன் மத யானையை அடக்குகிறான். நாகமுள்ள குடத்தில் சிலம்பிட்டு எடுக்கிறான். கையில் காய்ச்சிய மழுவேந்துகிறான். கோவலன் வெட்டுண்டபோது வாடாப்பூ மாலை வாடுகிறது. தன்னைக் கேலி செய்த ஆயர் சிறுவர்களையெல்லாம் கர்ணனக சபிக்க அவர்கள் இறக்கின்றனர். வெட்டுண்டு இறந்த கோவலனைப் பறவை விலங்கினங்கள் உண்ணாமலிருக்கின்றன. கர்ணனகை இறையவனிடம் வாங்கிய ஊசியால் தைத்தவுடன் வெட்டுண்ட கோவலன் உயிர்த்தெழுந்து பேசுகிறான். கர்ணனகை இறைவனை வேண்டி வரம் பெறுகிறாள். மதுரையைத் தீக்கிரையாக்குகிறாள். மஞ்சாடி மணிக் கயத்தில் விழுந்து தெய்வ வடிவம் பெற்றுக் கயிலாயம் சேர்கிறாள். இவ்வாறு இந்நூலில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் கர்ணனகையின் பத்தினித் தன்மையை உணர்த்தவே பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பேச்சு வழக்குச் சொற்கள்

இந்நூலில் செய்யுள் வழக்குச் சொற்களை விட பேச்சு வழக்குச் சொற்களே அதிகமாயுள்ளன. அப்பேச்சு வழக்குச் சொற்களும் மாற்றம் பெற்றுள்ளன என்பது

குறிப்பிடத்தக்கது. வைக (வைகை) நெரிப்பு (நெருப்பு), விரவு (விரைவு), துறந்து (திறந்து), காி (கை), பனெ (பனை), புரமன் (பிரமன்), பேப்புத்தி (பேய்ப் புத்தி), தாப்பாள் (தாழ்ப்பாள்), பிழ (பிழை), உருமெ (உரிமை) கப் (ஙக) முளகு (மிளகு), களரி (கழனி) (நாடகக் கொட்டகை), சேல (சேலை) மஞ்செ (மஞ்சள்) இடெ (எடை) பேயி (பேய்) மதிரெ (மதுரை), கருதுழக்கு (கதிருழக்கு) இளெ (இழை) ஆச்சி (ஆய்ச்சி) மேக்கு (மேற்கு), தெக்கு (தெற்கு), சுளவு (சுளகு), கொறமகள் (குறமகள்), விறவு (விறகு), செறு (சிறு), கரோசினெ (கோரோசனை), ராவு (இரவு), குல (ஙகாலை), கினாவு (கனவு) நாசகன் (நாயகன்), தெரள் (திரள்), மரதகம் (மரகதம்) துசரம் (துயரம்) துட (தொடை) இருள் (இருள்) செறு (சிறு) ராகு (ஓரவு) சியல் (செயல்), சுமக்கலி (சுமங்கலி) கோவுரம் (கோபுரம்), திரிசோதினன் (துரியோதனன்) புரமராசன் (பிரம்மராயன்) அரயாண்ட (அரசாண்ட) ஆகிய பேச்சு வழக்குச் சொற்கள் சிதைந்திருப்பதைக் காணலாம்.

குமரி மாவட்டம் மலையாளப் பகுதியையொட்டி அமைந்திருப்பதால் மலையாளச் சொறகளும் விரவி வந்துள்ளன. ஒந்நுரண்டு (ஒன்று இரண்டு), இவ்விட (இங்கு), போயி வரட்டெ (போய்விட்டு வரட்டுமே), ஆடின்றி (ஆடுகின்ற), உள்ளி (ஙெங்காயம), அந்நு (அன்று), தோந்நாதே (தோன்றாதே), அந்நக்கல்லொ (அன்றைக்கலலோ), பறைந்த (சொன்ன), இப்போள் (இப்பொழுது) ஆகிய சொற்களைக் குறிப்பிடலாம்.

இந்நூல் குமரி மாவட்டத்தைச் சேர்ந்ததாதலின் சில வட்டாரச் சொற்களும் கலந்துள்ளன. ஆனால் அவை மிக அருகியே காணபபடுகின்றன. அந்நாயிந்நா (அந்தா யிந்தா) பிற்றாம் நாள (மறுநாள்), விறுதால் (ஙெறு மனே) ஆகிய சொற்களைக் குறிப்பிடலாம்.

நிறைவுரை

குமரி மாவட்டத்தைச் சார்ந்த இந்நூல் பல்வேறு சிறப்புகளைக் கொண்டுள்ளது. மற்ற நூல்களை ஒப்பிடும் போது இந்நூலில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் மிகக் குறைவாகவே உள்ளன. திரிந்த பேச்சு வழக்குச் சொற்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. சிலம்பின் வழிவந்த பிற நூற்களில் காண முடியாத பல புதுமையான நிகழ்ச்சிகள் இந்நூலில் காணப்படுகின்றன. ஈழநாட்டில் வழங்கப் படுகின்ற 'கண்ணகி வழக்குரை' என்னும் நூலுடன் இந்நூலின் சில பகுதிகள் ஒத்துள்ளன. ஈழக்காவியத்தைப் போலவே சிலம்பின் பரலுக்கு முதன்மை கொடுக்கப் பட்டுள்ளது. சிலம்புப்பரலுக்காகக் கடல் கடந்து சென்று நாகமுத்தர் கோட்டைக்குச் சென்று நாகமுத்தாளிடமிருந்து நாகமணி கொண்டு வரப்படுகிறது. செம்மானிடம் வாய்க் கேட்டல் இவ்விரு நூல்களில் மட்டுமே காணப்படுகிறது. சதனம், விரிச்சி கேட்டல், கனவுநிலை உரைத்தல், ஆகியன இருநூல்களிலும் அதிகமாயுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் தென் கோடியில் வாழ்ந்த—சில நம்பிக்கைகளில் ஊறியிருந்த—மக்களிலிருந்து சென்ற ஒருவர் ஈழக் கதையை எழுதியிருக்கலாம் என்று கொள்வதற்கு இந்நூலும் துணை நிற்கிறது.

★

கோவலன் கதை (கேரளம்)

கோவலன் கதை என்ற பெயரில், கேரளச் சுவடிக் காப்பகத்தில் சுவடி ஒன்று காணப்படுகிறது. இக்கதைப் பாடலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இவ்வாசிரியர் சிறந்த சைவர் என்பதும், மதுரையைச் சேர்ந்தவராகலாம் என்பதும் கதைவழிப் புலப்படுகிறது. அவர் மாசிவீதியை அடிக்கடி குறிப்பிடுவதால் மாசிவீதியைச் சேர்ந்தவராக லாம். சொக்கர்மீது அவர் ஆணை வைக்கும் வழக்கம் காரணமாக, சொக்கரையும் மீனாட்சியையும், வழிபடும் தெய்வமாகக் கொண்டிருக்கலாம். இச்சுவடியில் கி பி. 1872 இல் எழுதப்பட்டதாகக் குறிப்பு உள்ளது. சுவடியின் முதலில் ஹரி ஓம் நரசிங்கமூர்த்தி சகாயம் என்றும் இறுதி யில் நரசிங்கமூர்த்தி துணை என்றும் எழுதப்பட்டுள்ளது. இது ஏடு பெயர்த்து எழுதியவரின் சமயமாக இருக்கலாம். ஆசிரியர் கோவலன் கதை பாடுவதற்காக விநாயகர், மாரியம்மா, சரசுவதி ஆகிய கடவுளரையும் வேண்டு கிறார்.

கதையமைப்பு

அளகாபுரிப் பட்டினத்தை அரசாண்ட சோழபிரான் காவிரியில் கொள்ளிடத்துக்குக் குறுக்கே அணைபோட விரும்பினான். மாசாத்தான் செட்டியிடத்து, திரவி யத்தைக் கொடுத்தும், வெள்ளம் பெருக்கெடுப்பதால் அணை கட்ட முடியவில்லை. சோழனின் மனைவி சுந்தரி கற்புடையவளாதலால், அவளால் வெள்ளத்தை நிறுத்த முடியும் என்று நினைத்த சோழன் அவளை அழைக்க அவள்,

"நான் பத்தினியே யாமாகில் சோளன் பத்தாவும்
ஆமாகில்
உத்தமியே கெங்கையரே ஊத்துநீ ரடையும்"

என்று சொல்லிக் கொண்டே வெள்ளத்தில் குதித்து உயிர் துறந்தாள். அதைக் கண்டு வியந்த காவிரி ஊற்று நீரடைக்க அணை கட்டப்பட்டது.

சோழனுக்குத் துணையாக இருந்த மாசாத்துவான் மனைவியருடன் உறங்கும் நேரத்தில் கள்வர் சிலர் கருவூல நகையெல்லாம் திருடிச்செல்ல, மாசாத்துவான் அங்கு ஓரத்தில் படுத்திருந்த சூரனைக் கள்வனென்று நினைத்து அடித்ததுமல்லாமல் நிரபராதியான அவனைக் கொன்றும் விட்டான். சூரனைக் கொன்ற பாவம் நீங்க ஆயிரம் பார்ப்பனருக்கு அழது, உடை, அணிகலன் ஆகியவற்றைத் தானம் செய்தான். மாசாத்துவானின் மனைவி வண்ண மாலை கருவுற்று ஆண் குழந்தை பெற்றாள். அக் குழந்தைக்குக் கோவலன் என்று பெயரிட்டு, பல வித்தைகளையும் பயிற்றுவிக்கின்றனர். அக்காலத்தில்பாண்டியன்

"பாப்பாற்கு அன்னமிடாப் பாவியல்லோ
பாண்டியர்கள்
பரதேசிக் கன்னமிடா பரபாவிப் பாண்டியர்கள்
பாவதவஞ் செய்யார்கள் பளிகாரப் பாண்டியர்கள்"

என்று பழிக்கப்படுகின்றனர். பாண்டியனின் மனைவி கொப்புலிங்கி பத்து மாதஞ் சுமந்து காளியாகிய கன்னகையைப்—பத்தினியைப்—பெற்றாள். வேதியர்கள் வந்து பஞ்சாங்கம் பார்த்து மங்கையினைப் பெற்றெடுக்கும் மாதாவிற்கு ஆகாதென்றனர்.

"ஒரு காலில் வீரதண்டை ஒரு காலில் வீரமணி
கூடப் பிறந்ததய்யோ—கொப்புலிங்கி மகளாக
பஞ்சாங்கம் சொன்னதெல்லாம் பலிக்குமே
பாண்டியனே

10963 / 226330

பெண்பிறந்தா லாவதென்ன பொன்மதுரை
யாள்வதுண்டோ
ஆண்பிறந்தால் நம்முடைய அரசாளும்
பாண்டியனே!"

என்று வேதியர்கள் கூறினர். அதனால் அக்குழந்தையைப் பொற்பேழையில் வைத்து மூடி வையையாற்றில் தள்ளி விட்டனர். அப்பெட்டி திருச்சிராபுரத்திலிருக்கும் நாகேந்திரன் செட்டிமகன் வண்ணமாலை செட்டியாருக்குக் கிடைத்தது. பெட்டியிலிருந்து குழந்தையை எடுத்து கன்னத்தோடு வைத்து முத்தமிடும் போது குழந்தை சிரித்ததனால் கன்னகை என்று அதற்குப் பெயரிட்டார்.

"அஞ்சுநல்ல வயசானாள் அரையளவு பெண்ணானாள்
சித்திரம்போல் வடிவானாள் வச்சிரம்போல்
மேனியுள்ளாள்
அன்னம்போல் நடையதை அளகுள்ள கன்னகையும்
பத்துநல்ல வயதானாள் பத்தினியாள் கன்னகையும்"

என்று அவளுடைய அழகும் வளர்ச்சியும் கூறப்படுகிறது.

கோவலனுக்கும் கன்னகைக்கும் திருமணம் செய்ய முடிவு செய்து பந்தலிட்டனர்.

"மாணிக்க கால்நாட்டி வயிரவளை தான்பரப்பி
அட்டகோணக் கால்நாட்டி ஆகாசம் பந்தலிட்டு
பவளநல்ல கால்நாட்டி பந்தலிட்டான் மாசாத்தான்
வயிரசல்லி பவளசல்லி மணவறையில் அலங்கரித்து
முத்துநல்ல சல்லிகொண்டு முகப்பிலேதான்
கட்டலுற்றான்
அளகுபிச்சி கொழுந்தாலே யலங்கரித்தான்
பந்தலிலே"

என்று வண்ணமாலைசெட்டியின் செல்வ வளமும் பந்தலழகும் படம் பிடிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் திருமணச்சடங்கு விளக்கமாகக் கூறப்படுகிறது. பந்தலில் நாலூறு பார்ப்பனர் கூடி மந்திரம் ஓதினர். அரசாணி கட்டினர். ஆயிரம் விளக்குகள் அக்கினியாள் (கண்ணகி) முன் எரிந்தன. முப்போது முக்கோடி தேவர்களும் சாட்சியாக, வேதியர்கள் மாங்கல்யம் எடுத்துக்கொடுக்க, கோவலன் கன்னகைக்குக் கட்டினான். கன்னகை அம்மி மிதித்தாள். (அருந்ததி பார்க்கும் சடங்கு குறிக்கப்படவில்லை.) மங்கிலியச் செப்பதில் மல்லிகைப் பூவை வைத்து, கோவலனுக்குத் தீங்கு வந்தால் மல்லிகைப் பூ வாடும் என்று சொல்லிக் கன்னகையின் கையில் கொடுத்தனர். ஏழு நாட்கள் சடங்கு நடந்தன. இருவரும் நகர் வலம் வந்து, வாழ்ந்திருந்தனர்.

திருக்கடவூரிலிருக்கும் மாதேவி என்பவள் குழந்தைப் பேறு இல்லாமல் மகாதேவனை நோக்கி அழுது வேண்ட, மகாதேவர் அறிக்கை செய்தார். அந்நேரத்தில் சன்னதி விளக்கு, கொழுந்து விட்டெறிந்தது. கோயிலை விட்டு வந்ததும் அவள்கருதரித்தாள்.பத்தாம் மாதத்தில் குழந்தை பிறந்தது. மகாதேவர் வரத்தால் பிறந்ததால் அபபெண் குழந்தைக்கு மாதேவி எனறு பெயரிடப்பட்டது. மாதேவி பிறக்கும் போதே மாலையுடன் பிறந்தாள். இந்த மாலை கழுத்தில் இருப்பது யாருக்கும் தெரியாதாம்.

'பெற்றவளுக்குத் தெரியாது பெற்றான் பொன்மாலை
வளர்த்தவர்க்குத் தெரியாது மாயனுட பொன்மாலை
ஆற்குந் தெரியாது அரசனுடைய மாலையிப்போ"

என்று மாலை மறைந்திருப்பது கூறப்பட்டுள்ளது. (கன்னகை காலில் தண்டை சிலம்புடன் பிறந்தது போல் மாதேவி கழுத்தில் மாலையுடன் பிறக்கிறாள். இரண்டும் தெய்வத்தொடர்புடையதாகக் காட்டப்படுகிறது.)

கன்னகையின் பிறப்பு, வளர்ப்பு, படிப்பைவிட மாதேவியின் சிறப்புகள் பலபட விரிக்கப்பட்டுள்ளன.

அவள் ஐந்து வயதிலிருந்து நடனம் கற்றவகை சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

''ஏழுநல்ல வயதானாள் யிருந்து செயிதாள்
நாட்டியங்கள்
எட்டுநல்ல வயதானாள் கட்டாரி லாகை செயிதாள்
கத்திகட்டி லாகுசெயிதாள் கட்டளகி மாதேவி
பத்து நல்ல வயதிலே பாதனங்க ளாடையிலே
தெய்வலோகக் கன்னியுமே திசையவள் தப்பி
வந்தனளோ
பரமசிவன் நாட்டியத்தை பாத்திருந்தே வந்தாளோ
சிதம்பரத்து நாட்டியத்தை சேத்துக்கட்டி
படித்தாளோ
மாதேவி யாடையிலே மண்டலத்தில் மயங்குவார்
வெகுகோடி
மாதேவி நாட்டியம்போல் மண்டலத்திலாருமில்லை."

என்று அவளுடைய நடனப் பயிற்சியும் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. மாதேவி வித்தையில் விநாயகரோ என்று சொல்லும்படியாக நடனமாடினாள்.

மாதேவி பூப்படைந்த போது செய்யப்பட்ட சடங்கும் விளக்கப்பட்டுள்ளது. நாளும், முகூர்த்தமும், லக்கினமும் பார்த்தனர். பந்தலிட்டு சடங்கு செய்தனர்; வேதியர்கள் ஓமம் வளர்த்து, மந்திரம் ஓதினர்; மாதேவிக்குத் தலையில் தண்ணீர் வார்த்தனர்; மகாதேவர் சன்னதியில் மாவிளக்கு பார்த்தனர்; வேதியர்க்குத் தானம் கொடுத்தனர்; அண்ணாவி, நட்டுவனார்க்கு ஆடை, ஆபரணம் கொடுத்தனர்; இந்திரனைப் பெட்டியில் வைத்து அடைத்தது போன்று அவளை வீட்டுக்குள் அடைத்து வைத்தனர். இச்சடங்குமுறை பிற நூல்களில் காணப்படவில்லை. ஆனால் கன்னகைக்குச் செய்த பூப்புச் சடங்கின் விளக்கம் காணப்படவில்லை. சடங்கு செய்தார்கள் என்ற குறிப்பு மட்டுமே உள்ளது.

பூப்பெய்த மாதேவியிடம் தாயார்,

"வித்தைநல்ல படிக்கவல்லோ நகையெலா (நகை)
வித்துவிட்டேன்
என்கணவன்மார் வரவுமில்லை யென்கையிலொரு
காசுமில்லை
திரண்டிருந்தாள் தேவதாசி தேடிவைப்பாள்
திரவியத்தை"

என்று கூற, மாதேவியும்

"அளகுள்ள மன்னவர்கள் ஆருமில்லை வையகத்தில்
எனக்கேற்ற கணவரிடம் யிருந்தல்லவோ உன்தனக்கே
வேணதெல்லாம வரவளைத்து மிகத்தாரேன்
திரவியத்தை
வீடெல்லாம் திரவியத்தை விரைத்து வைக்கேன்
தாயாரே"

என்று பதில் கூறினாள். தாயும் மகிழ்ந்தாள்.

சிறப்பு மிகுந்த காவேரிப்பூம்பட்டணத்தில் மாதேவி நடனமாடினாள்.

"களைஎடுத்தே வாறார்கள் காவேரிப்பூம்
பட்டணத்தில்
கருந்தாளைப் பூச்சொரியுங் காவேரிப்பூம்
பட்டணத்தில்
காசுகொண்டே மடையடைக்கும் காவேரிப்பூம்
பட்டணத்தில்'

மாதேவி நடனமாடினாள். தமுக்கடிக்கும் சத்தம் கேட்டு சோழன் வந்து, மாதேவியின் நடனம் கண்டு, விரும்பிய திரவியம் கொடுத்தான். இங்கு மாதேவி கழைக்கூத்து ஆடியதாகக் கூறப்பட்டுள்ளது.

"நாலுதிக்கும் பார்த்தல்லவோ நமஷ்கரித்தாள்
மாதேவி
உருக்குவடம் மேறியல்லோ ஓடிவந்தா ளாகையிலே
அடுக்குவடம் பாய்ந்தல்லவோ ஆடிவந்தாள்
களைமேலே
பறவையைப்போல் தத்தியல்லோ பாய்ந்துநின்றாள்
களைமேலே (கழை)
ஆகாசக் களையேறி யாடிநின்றாள் தூலியின்மேல்
கண்டசரப் பொன்மாலை கையிலேதான்
வைத்தல்லவோ
மாதேவி களைமேலே மனமகிழ்ந்தே நிற்கிறாள்"

என்று மாதேவியின் கழைக்கூத்தாட்டம் கூறப் பட்டுள்ளது.

கண்ணகி காளியின் அம்சமாதலால் அவளுக்கும் கோவலனுக்கும் உடலுறவு இருந்ததாகப் பின்னால் வந்த சிலப்பதிகார நூல்கள் கூறவில்லை. இந்தச் சுவடியில் உடல் உறவு இல்லாமை விளக்கமாக, தெளிவாகவே கூறப்படுகிறது.

"சடங்குசெய்த னாள்முதலாய் தானறியான்
கோவலனை
படுக்கப்பாய் போட்டறியாள் பத்தினியாள்
கன்னகியும்
தூத்துப்பாய் போட்டறியாள் சுகமறியான்
கோவலனும்
கண்ணிலே கண்டதில்லை கன்னகெயெ வணிகேசன்"

என்று கன்னகையும் கோவலனும் வாழ்ந்த வாழ்க்கை நிலை கூறப்பட்டுள்ளது. ஆனால் உடலுறவு இல்லாமைக் குரிய காரணம் விளக்கப்படவில்லை.

செட்டிமக்கள் மாதேவியின் கழைக்கூத்தைப் பார்க்கச் செல்வதைக் கண்ட கோவலனும் தானும் போக விரும்பி, தாயிடம் அனுமதி வேண்டினான். தாயோ,

"உன்னைப்போல் அளகனல்லோ உலகத்தில்
கண்டதில்லை
ராசதிட்டிப் பொல்லாது நல்ல மகனாரே
கண்ணீறு பொல்லாது கட்டளகா கோவலவா"

அதனால் போகாதே மகனேயென்று வண்ணமாலை புத்தி சொன்னாள். இங்குத் தாயுள்ளம் புலப்படுத்தப்படுகிறது. ஆனாலும் கோவலன் கேட்காமல் வணிகேசன் மக்களுடன் புறப்பட்டான். அவன் வீட்டுக்குள் இருந்தமை சந்திரனைப் பெட்டிக்குள் அடைத்தது போலிருந்ததாம். சபையில் அவன் சந்திரனைப் போல், சூரியனைப் போல் வீற்றிருக்க, கழையின் மேல் நின்ற மாதேவி அவனைப் பார்த்தாள். உடனே நாராயணனையும் சிவனையும் நினைத்து மாலையைக் கழற்றிக் கையிலெடுத்து விட்டெறிந்தாள்.

சேரன், சோளன், பாண்டியன், மந்திரிமார், காரியக்காரர், காவேரிப்பூம்பட்டினத்திலுள்ள மக்கள் எல்லாம் தங்கள் கழுத்தில் மாலை விழாதா என்று ஏங்கிக் கொண்டிருக்க, அந்த மாலையோ, கட்டழகன் கோவலன் கழுத்தில் விழுந்தது. உடனே மாதேவி கழையை விட்டிறங்கி கணவரிடம் வந்து, முக்காலுஞ் சுத்தி வந்து முடிவணங்கி நமஸ்கரித்தாள். மாதேவியும் கோவலனும் சேர்ந்து நிற்பது சந்திரனும் சூரியனும் சேர்ந்து நிற்பது போலிருந்தது. மாதேவி கோவலனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று வணங்கியவுடன், மாதேவியின் தாய்,

"தெக்கித்துக் கப்பலல்லோ சேர்ந்துதடி மகளே
என்றாள்
வடகத்திக் கப்பலல்லோ வந்துதடி மகளை என்றாள்
தேடிவைத்த திரவியமுந் சேர்ந்ததடி பொட்டகத்தில்
கும்பிட்ட தெய்வமல்லலோ கொண்டுவந்து விட்டது"

என்று மகிழ்ந்து கூறினாள். பரத்தமைச் சமுதாயத்திற் கேற்ப அவள் திரவியத்தையே உவமையாகக் கூறுதல்

பொருத்தமாக உள்ளது. மாதேவி கோவலனை உபசரிக்கும் விதமும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

''தானபானம் பண்ணலுற்றான் தனிப்பூசை
செய்யலுற்றான்
ஏலச்சம்பா அரிசிகொண்டே எடுத்துமங்கை
சமைக்கலுற்றாள்
வற்க்கவகை(லர்க்க) கரி (சுறி) சமைத்தாள்
மன்னவனார் கோவலற்கே
வாளை(வாழை)நல்ல யிலைபோட்டு மயிலினம்போ
லமுதுமிட்டாள்

என்று மாதேவியின் அன்புணர்ச்சியும் குடும்பப் பாங்கும் கூறப்படுகின்றன. மன்மதனும் இரதியும் போல, கோவலனும் மாதேவியும் மகிழ்ந்துவாழ்ந்தனர்.கோவலனின் தாய் தந்தையர் இறந்தபோது,அவன் ஈமக்கடன்களைச் செய்து விட்டு மீண்டும் மாதேவியிடம் சென்றபோது, மாதேவி தன் அத்தையை அருகிருந்து அனுப்பாததை நினைத்து அழுதாள். பின் கோவலனை உபசரித்து மாதேவி மகிழ்வித்தாள்.

மாசாத்துவானின் இறப்பிற்குப் பிறகு அவனுடைய நவரத்தினக் கப்பல்கள் கோவலனுக்கு உரிமையாக அவற்றை அவன் மாதேவிக்குக் கொடுத்துவிட்டான். அவன் என்னென்ன வாங்கிக் கொடுத்தான் என்பதைப் பட்டியலாக ஆசிரியர் கூறியுள்ளார். மாதேவிக்காக மாட மாளிகை, கூடகோபுரம், முன்சாவடி, பின்சாவடி, பூசை சாவடி முதலியவற்றையும் சிலவீடுகளையும் கட்டினான்.

''வெள்ளிக்கப்பல் பணத்தை எல்லாம் வெத்திலைக்கே
தான்கொடுத்தான்
பொன்னின் கப்பல் பணத்தையெல்லாம் புகையிலைக்கே
தான்கொடுத்தான்
கப்பலையும் வித்தல்லவோ கண்ணாடிப் பட்டம்வாங்கி
மாதேவி மெத்தைவீட்டில் வைத்திருந்தான்"

என்று கோவலன் மாதேவிக்காகச் செலவு செய்தமை அழகாகக் கூறிப்பிடப்படுகிறது தந்தைக்குப்பின் அவருடைய சொத்தை முதலாக வைத்து வாணிகம் செய்யாமல் மாதேவிக்காக அனைத்தையும் செலவழிக்கும் போக்கும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு நாள் தாய்க்கிழவி "எடுத்த வைத்த பொன்னெல்லாம் சிலவாச்சு, குடுத்து வைத்த திரவியங்கள் குறைஞ்சிப் போச்சு அதனால் அடுத்த நாள் சிலவுக்கு இல்லை" என்று கூற, அதைக் கேட்ட மாதேவி கோவலனிடம் பேசும் முறை அதிர்ச்சியூட்டுவதாய் உள்ளது. கோவலனுடன் அன்போடிருந்த மாதேவி அக்காலப் பரத்தையர் சமூகத்திற் கேற்ற தன்மையுடையவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். அவள் கோவலனிடம் கேட்கும் பொருட்கள் உரைநடையில் அமைந்துள்ளன. "மன்னவரே, கோவலரே, நித்தம் ஆயிரத்தெண் களஞ்சி (கழஞ்சு) பொன்னு மொரு நாளைக் கஞ்ஞூறு சேலைகளும், தாய் தந்தை உறமுறைக்கு தலைக்கெண்ணெயும் படிச்சிலவும் கொண்டு வந்தீரானால், கோவலரே லாருமென்றாள். இல்லையென்றால் போமென்றாள்" என்ற மாதேவியின் உரை கேட்ட கோவலன் முகம் வாடியது. உடனே மாதேவி வருந்தி அவன் துன்பத்தை மாற்றினாள். மறுபடியும் கோவலன் மாதேவியிடம் இருப்பதைத் தாய்க்கிழவி பழிக்க, மாதேவி கோபமுற்றுத் தாயைத் துரத்தினாள். பின் மனம் மாறி சேர்த்துக் கொண்டாள்.

கோவலனையும் மாதவியையும் பிரிக்க நினைக்கும் தாய்க்கிழவி ஒரு மருந்து செய்தாள். இது மலையாள மாந்திரிக முறையாக உள்ளது.

மருந்து செய்யும் முறை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. படிக்கும் போதே அச்சமூட்டுவதாக உள்ள இப்பகுதி வேறெந்த நூலிலும் இல்லை. பச்சிலை, தலை மண்டைப் பித்து, சாரைப்பாம்பு, நல்லபாம்பு ஆகிய

வற்றின் கரு, நரி, கழுகு என்றவற்றின் வலது தொடை, கட்டெறும்பு மூட்டு, பச்சைப் பாம்பின் தலை, வால் புறாமுட்டை, நாவிக்கொட்டை, பாசாணம், பல்லி முட்டை, நாரையின் வலது கண், கலையின் தலைமூளை, காட்டெருமைச் சவ்வு, நாயுருவி, சந்தட்டி, செந்தட்டி இவற்றின் வேர், செவ்வந்திக் கிழங்கு முதலியவற்றை தாய்க்கிழவி சேகரித்தாள். 'அத்தரிசி' வேளையில் மூல மந்திரம், கால வடமந்திரம், காட்டேரி மந்திரம், மோகினி யாள் மந்திரம், ஆகியவற்றை 300 முறை ஓதினாள். அட்ட கோணச் சக்கரம் அமைத்தாள். மாதேவியைக் கண்டவர்கள் மயங்கும்படியாக அந்த மருந்தைச் செய் தாள். (இச்சுவடி மலையாளப் பகுதியில் வாழ்ந்தவரால் எழுதப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.)

மாதேவிக்குத் தெரியாமல் தாய் வெற்றிலையுடன் மருந்தைக் கலந்து கொடுத்தாள். அதன் வேகத்தால் கோவலனிடம் அன்பாக இருந்த மாதேவி அவனைப் பழித் தாள். அவனைக் கண்டவுடன் சீறினாள். (இளங்கோவடி களைப் போலவே இந்நூலாசிரியரும் மாதேவியைக் குற்ற மற்றவளாக—அன்புடையவளாக— பரத்தைத் தன்மை யற்றவளாகக் காட்டுகிறார். மணிமேகலையில் வரும் சித்திராபதியைப் போலவே இந்நூலாசிரியரும் மாதேவி யின் தாயைக் கொடுமையானவளாகக் காட்டுகிறார். மாதேவி இயற்கையாக அன்புடையவளாக இருந்தாள் என்றும் தாயின் மருந்தால்தான் அன்பு திரிந்தாள் என்றும் அறிவிக்கிறார். மருந்தினால் மனம் மாறிய மாதேவி நிரவி யம் இல்லையென்றால் அவனைவெளியேபோகும்படியாகக் கட்டளையிடுகிறாள். ஆனால் மனம் பொறாத கோவலன் தன் மனைவியின் இல்லத்திற்குச் செல்லாமல் பல இடங் களிலும் மூன்று நாட்கள் திரிந்து, இறுதியில் பசி பொறுக்க முடியாமல் மாதேவியின் வீட்டிற்கே வந்தான். அவனை மாதேவி அன்போடு அழைத்து வெந்நீர் தந்து, விபூதிஅணி வித்து, அன்னமிட்டு இளைப்பாறச் செய்தாள்.

இருவரும் மகிழ்ந்திருப்பதைக் கண்டு பொறுக்காத தாய்க்கிழவி மறுபடியும் தாதியர்களை விட்டுக் கணக்குப் பார்க்கச் செய்து, அவன் கலமரக்கால் பொன் தர வேண்டும் என்றாள். அவள் சொற்படியே நடக்கும் மாதேவியும் கோவலனிடம் "ஆடை ஆபரணங்களைக் கழற்றிக் கீழே வை" என்றாள். அவன் கடுக்கன், கண்ட சரம், காலாளி (காலாழி) கணையாளி, கைக்கடகம் நெளிவு, வட்டை, அரக்கொடி, சரப்பளி, வயிர நல் முருகு முதலிய அணிகலன்களை மாதேவியின் முன் கழற்றி வைத்தான். தான் அணிந்திருந்த தலைப்பாகு, சந்திரகாளி உறுமால் முதலிய உடைகளையும் கழற்றிக் கொடுத்தான். (அக்காலத்தில் ஆடவர் அணிந்த ஆடை அணிகலன்களை இதனால் அறிய முடிகிறது.)

தாய்க்கிழவி மறுபடியும் மருந்தைத் தெளிக்க, அந்த வாடைபட்டவுடன் மாதேவி தாதியர்களிடம் கோவலனைக் கட்டி வைத்து சவுக்கால் அடிக்கச் சொன்னாள். அடிபட்ட கோவலனோ, "கையிலொரு காசில்லை, கடன் கொடுப்பார் யாருமில்லை" என்று சொல்லி அழுதான். அப்போது மாதேவி, ஒரு மத்தாளப் பணமும் ஒரு மரக்கால்பணமும் ஒரு வருஷத்தில்—ஆறு மாதத்தில்—கொடுப்பதாகச் சொக்கர் மேல் ஆணை வை" எனச் சொன்னாள். கோவலன் ஆணையிட்டவுடன் தாதியரால் துரத்தப்பட்ட அவன் பல இடங்களிலும் திரிந்தான்.

மாதேவி காவேரி கரை புரண்டு ஓடிவரும் பதினெட்டாம் பெருக்குத் திருநாளில் தீர்த்தமாடி சிவபூசை செய்வதற்கு ஆற்றங்கரை ஓரத்தில் ஆசனமும் போட்டு பூசை செய்தாள். கோவலன் வந்து பக்கத்தில் நிற்பதைப்பார்த்த மாதேவி, தாதியரிடத்தில் அவனை ஆற்றில் பிடித்துத் தள்ளும்படி ஏவினாள். ஆற்றில் அடித்துச் சென்ற போது, கோவலன் பத்தினியாள் கன்னகையை நினைத்ததால் அத்தி மரப் பலகை ஒன்று மிதந்து வந்தது. அதைப் பிடித்துக் கரையேறிய கோவலனைக் கண்டு மாதேவி மாபாவஞ் செய்தேனென்று மனம் வருந்தினாள்.

கோவலன் ஆற்றில் இறந்தான் என்று நினைத்த தாய்க்கிழவி மாதேவியிடம் 'உனக்கேற்ற மன்னர்கள் வருவார்கள்' என்று தேற்றினாள். ஆனால் மாதேவி மனம் வருந்தி,

'ஓதேவி யான்செட்டி செத்திறந்து போனாலும்
மறுத்தொறுவ ராசையில்லை மாதாவே"

என்று சொன்னாள். அவள் கோவலனின் கணையாழியை வைத்துப் பூசை செய்து வந்தாள்.

கரையேறிய கோவலன் புத்தி தெளிந்தவனாக, கன்னகையை நினைத்தும், மாதேவிக்காகப் பணம் செல வழித்ததை நினைத்தும் மனங்கலங்கினான். தன் தவறுணர்ந்து இரங்கினான். ஆற்றங்கரையில் ஆடை யில்லாமல் இருந்த கோவலனைக் கண்ட தாதியர்கள் கன்னகையிடம் சென்று அவன் நிலையைக் கூறினர். அவள் சோமன்கொடுத்தனுப்பினாள். அதை உடுத்திய கோவலன் கன்னகையிடம் சென்றான். கன்னகை ஏலச்சம்பா அரிசிச் சோற்றை வடித்துத் தலை வாழை இலையில் அவனுக்குப் போட்டாள். அவன் உண்டு இளைப்பாறிய நேரத்தில் மாதேவிக்காகச் சொக்கரின்மேல் ஆணை வைத்ததைப் பற்றிக் கன்னகையிடம் கூற, அதைக் கேட்டு அவள் அழுதாள். கன்னகையின் உள்ளத்தைப் படம் பிடிக்கும் இப்பாடல் ஒப்பாரி பாடல் போல் அமைந் துள்ளது.

"மன்னவனெ கோவலவா வைத்திருந்த திரவியமும்
பொக்கிசத்து திரவியத்தை போச்சுதென்று நானிருந்
தேன்
யின்னமுந்தான் மாதேவிக்கு ஏத்து வந்தீர் கடனாக
கையிலொரு காசுமில்லை கடன் கொடுப்பார்
யாருமில்லை.

கடன்கொடுப்பாருமில்லை யிந்தக் காவேரிப்பூம்
பட்டணத்தே
கைப்பிடித்த னாள்முதலாய் உன்னைக் கண்ட
துண்டோ கோவலவா
திருப்பூத்த நாள்முதலாய் உன்னுடன் சேர்ந்த
துண்டோ
கன்னகை நான் சேந்திருந்து ஒருகாய்காத்தே
தில்லை ஐயோ
மன்னவரே கூடியல்லோ ஒருமதளைமொளி
கண்டனில்லை
பள்ளி நல்ல குடந்தனிலே படித்து வரப் பிள்ளை
யில்லை
கொள்ளி வைக்கப் பிள்ளையில்லை அந்தக்
கோவலவா"

என்று கன்னகையாள் குழந்தையில்லையென்றும் ஏங்கி அழுதாள் தன் கணவனையும் ஒரு மாதம் பத்து நாள் கவனமாகக் காத்து வந்தாள். மாதேவியின் கடன் தீர்க்கத் தன் காற்சிலம்பைக் கொடுத்தாள். காவேரிப் பூம் பட்டணத்தே இருந்த கனத்த செட்டி ஒருவனிடம் காட்ட அவன் அதை வாங்கி மதிப்பிட முடியாமல் திருப்பிக் கொடுத்ததால், மதுரை செல்லக் கோவலன் முடிவு செய் தான். கோவலனின் மதுரைப் பயணத்தைக் கேட்ட கன்னகை அழுது, தானும் வருவதாகக் கூறினாள். காட்டு வழியில் கன்னகையுடன் சென்றால் நாட்டு மக்கள் நகைப் பார்கள் என்று மறுத்தும் கேட்காமல் கன்னகை புறப் பட்டாள். தன் தாதியரைப் பார்த்து, தான் வருமட்டும் மாடமாளிகை, கூட கோபுரம், முன்சாவடி, பின்சாவடி, தொட்டிக் கட்டு ஆகியவற்றைப் பெருக்கித், தீபம் ஏற்றி வைத்துச் சுகமாக இருக்கச் சொன்னாள். 'வழிப் பயணத் திற்கென்று கட்டுச் சோறும், வழிக்கு அரிசியும், சிலவுக்குச் சிறிது ரொக்கமும் கொண்டு' இருவரும் மதுரை நோக்கிச் சென்றனர்.

அவர்கள் காவேரிப்பூம்பட்டினம், திருச்சிராபுரம் தாண்டி மதுரை அருகே வந்தனர் 'காட்டோரி யச்சம்பட்டி' என்னுமிடத்தில், ஒரு வலையனின் வீட்டில் தங்கினர். அந்நேரத்தில ஓர் ஆச்சியம்மை வரவே, அவளைப் பற்றிக்கோவலன் விசாரித்தான். அவள், தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள். இருவரும் ஆய்ச்சியின் வீட்டில் தங்கினர். கோவலன், தான் மதுரையில் சிலம்பு விற்க வந்ததைக் கூறினான். ஆய்ச்சியோ பாண்டியர்களின் கொடுமையைக் கூறிப் போகாமல் தடுத்தாள். (பாண்டியனின் செங்கோல் கூறி வழி நடத்தும் சிலப்பதிகாரக் காட்சி இங்கு மாறுபடுகிறது.)

"பேச்சிட்டே வளக்கிடுவார் பெரும்பாவி
பாண்டியர்கள்
கொம்படித்தே வளக்கிடுவார் கொடும்பாவி
பாண்டியர்கள்
பாம்படித்தே வளக்கிடுவார் பளிகாரப் பாண்டியர்கள்
மாபாவி மதுரையிலே வாணிபமே செய்யலிலே
தீபாவி செட்டிமக்கள் செபபிடுவார் பாண்டியர்கே
கள்ளனென்ற கட்டச் சொல்வார் கனமதுரை
பாண்டியர்கள்
கொல்லச் சொல்வான் பாண்டியனுங்
கோவலவா யிப்போது"

என்று ஆசசி பின்னால் வருவதைத் தெரிவித்துப் போகாமல் தடுத்தாள். இதைக் கேட்டு, கண்ணகி அழுதாலும் கோவலன் பயணத்தை நிறுத்தவில்லை. வழியில் பல தீசசகுனங்கள் தோன்றின. காகம் இடம் பாய்தல், நூனை குறுக்காக ஓடுதல், ஒற்றைப் பார்ப்பான் எதிர் வருதல், தலையில் எணணெயுடன் வாணியன் வருதல் முதலிய தீசசகுனங்களைக் கண்ட பிறகும் கோவலன் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

கோவலன் வந்து நிற்பதைக் கண்ட சொக்கர் மீனாட்சியிடம் கோவலனை கொலையுண்ணப் போவதை

யும் மதுரை அழியப் போவதையும் கூறி 'நாம் இனி மதுரையில் இருக்கக்கூடாது' என்று கிளம்பினர். கூடைப் பெட்டியையும் கஞ்சிப் பானையும் தலையில் வைத்துக் கொண்டு காசிக்குப் போகலாம் என்று சொக்கர் கூறுவது விபப்பையும் நகைப்பையும் தருகிறது. சொக்கர் ஆண்டியைப் போல் வடிவெடுத்து, கோவல னுக்கு அறிவுரை கூறப் புறப்பட்டார். "பளிகுடுக்க போகாதே பாண்டியனார் மதுரையிலே வந்த வளிப் (வழி) போய்ப்பிளைநீ வணிகேசர் கோவலவா" என்று கூறுகிறார். இதைக் கேட்டகோவலனுக்கோ கண்கள் இரண்டும் சிவந்தன .

"ஆண்டிகம்பை பிடுங்கலுற்றான் அடிக்கலுற்றான் கோவலன்
கமண்டலமுஞ் சுரைக்குடுக்கை கஞ்சா குடுக்கை யெல்லாம்
கம்பாலே அடித்துடைத்தான் கட்டளகன் கோவலன்
அளகான குடுக்கையெல்லாம் அடித்துடைத்தான் வணிகேசன்
கம்புகொண்டே அடிக்கலுற்றான் காட்டுடே ஓடலுற்றார்
அடிபட்ட ஆண்டிச்சொக்கர் அலறியல்லோ ஓட லுற்றார்"

என்று கோவலனுக்கு அறிவுரை கூறி அவதியுற்ற சொக்கர் நிலை கூறப்பட்டுள்ளது. இதில் சொக்கர் கஞ்சா குடிக்கும் கேலிக்குரிய பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளார்.

மீனாட்சியும் கோவலனுக்கு அறிவுரை கூற விரும்பி குறத்தி உருவில் வந்தாள். அவன் முகம் பார்த்து பின்னால் நிகழப் போவதைச் சொன்னாள். "கள்ளன் என்று பிடிப்பார்கள்...வந்த வளி போய் பிளை" என்று அவள் சொன்னதும் கோபங்கொண்ட கோவலன் கண சிவந்து,

''குறக்கூடை பிடிங்கியல்லோ கூன்முதுகில் தானடித்
தாள்
வற்னக்கூடை பிடிங்கியல்லோ மாறலுற்றான்
கோவலன்
அடிபொறுக்க மாட்டாமல் அலறிவந்தாள்
குறத்தியுமே
ஓடிவந்தாள் குறத்தியுமே உள்கோவில் தான்புகுந்
தாள்.''

என்று விதிவழி மதி சென்ற கோவலனின் செயலையும், அறிவுரை சொல்லச் சென்ற மீனாட்சியின் வேதனையையும ஆசிரியர் படம் பிடித்துளளார்.

கோலலன் சிலம்பெடுத்து வணிகர், ஆயர், வேசியர் வேதியர், துலுக்கர், சோனகர், பணிக்கமார் முதலியாரின் தெருக்களில் சுற்றிலந்தான். சிலம்பை விற்கமுடியவில்லை. பசி பொறுக்க இயலாத கோவலன் மாசித் தெருவில் உள்ள வாத்தியார் மனைக்கு வந்தான். வாத்தியாரிடம் தான் வந்த செய்தியைக் கூறினான். பின் தானம் செய்து சாப்பிட்டு இளைப்பாறினான். சிலம்பை எடுத்துக் காட்டினான். அதைப் பார்த்த அண்ணாவியும் பாண்டியர்களின் கொடுங்கோலைச் சொல்லி அறிவுரை வழங்கினான் ஆனால் கோவலன் அதைக் கேட்கவில்லை.

அரசமாதேவி கொப்புலிங்கிக்கு நகை கொண்டுவரும் தட்டான் அரசியின் சிலம்பை விளக்கமிட்டுக் காயவைத்தான். அவன் வீட்டு வாசலில் வண்ணிய மரத்திலிருந்த கருடனின் குஞ்சை முன்பு பொற்கொல்லனின் பிள்ளைகள் கொன்று விட்டதால், பழி வாங்கக் கருதிய கருடன் அச் சிலம்பைக் கவர்ந்தது. தேவருக்கும் தெரியாமல் நாக மலைச் சாரலில் உள்ள புற்றில் வைத்தது. தட்டான் சிலம்பு காணாமல் வாடி நின்ற நேரத்தில் அவன் மகன் ஓடிவந்து, வாத்தியார் கையில் கோவலன் சிலம்பு கொடுத்ததைக் கூறினான். வண்ணித்தட்டான் அங்குச் சென்று காயவைத்த கொப்புலிங்கியின் பொற்சிலம்பைக்

கோவலன் கவர்ந்தான் என்று கூறி அவனைப்பிடித்து அடித்தான். பாண்டியனின் அரண்மனைக்கு இழுத்துச் சென்று, சிலம்பு திருடியதாகப் புகார் செய்தான். அதைக் கேட்ட கோவலன்,

"வன்னித்தட்டான் முகமறியேன் மனையறியேன்
பாண்டியனே
அறலேறி விளவுமில்லை வன்னித்தட்டான் ஆட்டை
மாட்டைப் பிடிக்கவுமில்லை
பூட்டை முறிக்கவில்லை பொய்க்களவு செய்யவில்லை
பொக்கிசத்துத் திரவியத்தைப் போயங்கே நிருட
வில்லை."

என்று சொல்லி அழுதான். பாண்டியன், கோவலனைக் கொப்புலிங்கியிடம் அழைத்துச் சென்று சிலம்பைக் காட்டச் சொன்னான். வன்னித்தட்டானோ கோவலனை ஒரு கருங்கல் தூணில் கட்டிவிட்டு, சிலம்பைக் கொண்டு சென்று கொப்புலிங்கியிடம் காட்டினான். அச்சிலம்பைப் பார்த்த அரசி அது தன் மகளின் சிலம்பென்பதைப் புரிந்து கொண்டு அழுதாள்.

கோவலனை அழைத்து வருமாறு கூற, தட்டான் அவனை அழைத்து வந்தான். கோலலன் தன் துயரக் கதையைக் கொப்புலிங்கியிடம் கூறினான். தன் மகளின் மணவாளன் என்பதைப் புரிந்து கொண்ட கொப்புலிங்கி, அவனைக் கொல்ல வேண்டாம் என்று சொல்லித் தாதியரைவிட்டு, அவனுக்குச் சாதமிட்டாள். தாதியருடன் அரண்மனைக்கு அனுப்பி வைத்து, படிச்சிலவாய் அஞ்ஞூறு பொன்னும், கொடுத்து அனுப்பினாள். பாண்டியன் கொல்லாமல் விடுவான் என்று பயந்த தட்டான் மன்னன் மனம் திரிய கொப்புலிங்கி மேல் பழி போட்டான்.

"தும்பிடுகிறேன் பாண்டியனே குத்தமென்று
யெண்ணாதே

கோவலன் முகம்பார்த்தாள் கொப்புலிங்கிவேறானாள்.

என்று கோவிலிங்கி கோவலனிடம் மயங்கியதாகக் கூறினான். கோவலன் அவளை மந்திரத்தால் மயக்கினான் என்றும் கூறினான்.

பாண்டியனோ "மதுரையிலே பளிகள் (பழி) செய்யக் கூடாது. நீயே வேண்டியதைச் செய்திடு" என்று தட்டானிடம் சொன்னான். கோவலனையும் பாம்புக் குடுவையில் சத்தியம் செய்யப் பணித்தான். வன்னித்தட்டான் குசவேளான் மனைக்குச் சென்று பாம்படைக்க குடம் ஒன்று செய்து தரும்படியாகக் கூறினான். குசவேளானும், கையிட்டால்வாங்காத கனத்தகுடம் செய்துகொடுத்தான். அவன் பாம்புப் பிடாரனின் மனைக்கு வந்து, பாம்பு கேட்டான். பிடாரனும் நாகமலைச் சாரலுக்குச் சென்று நல்ல பாம்புப் புற்றிலிருந்து, கடித்தால் விஷம் திரும்பாத கருநாகப் பாம்பையும், செத்தால் விஷம் திரும்பாத சென்னாகப் பாம்பையும், தெளிப்பாம்பு, மணிப்பாம்பு, ஆகியவற்றையும் பிடித்துத் தட்டானின் குடத்திலிட்டுக் கொடுத்தான். பாண்டியனிடம் வந்த தட்டான் மூன்று உலோக உருண்டைகளைப் பாம்புக் குடத்தில் போட்டான். 'இந்தமூன்றையும் எடுத்தால் போகச்சொல்லுங்கள்' என்றான். கோவலன்கன்னகையைநினைத்தான். சென்னாகப் பாம்பு செங்கழுநீர் பூவாகவும் கருநாகப் பாம்பு கட்டி மலையாகவும் மாறியது. இதைக் கண்ட பாண்டியன் கோவலனை விட்டு விடும்படிக் கூறினான். அதைக் கண்ட தட்டான் கோவலன் மந்திரக்காரன்; அரசின் வாய்க்கட்டியவன், அரசன் வாய்கட்டமாட்டானா? என்று கூறினான். கோவலனைக் காய்ச்சிய மழுவையும் பிடிக்கச் சொன்னான். தீப்பொறி பறக்கும் மழுவைப் பார்த்து அஞ்சிய கோலவன், தன்னைப் பெற்ற தற்காகத் தாய் தந்தையரை நொந்தான். மீனாட்சியிடம்

என்ன செய்வேன் என்றழுதான். பின்னர் கன்னகையை நினைக்க அக்கினி குறைந்தது. மாதுளம்பூப்போல் ஆகியது. இதைக் கண்ட அரசன் கோவலனை உடனே விட்டுவிடும்படிக் கூறினான். தட்டானோ வேங்கைச் சத்தியம் செய்யச் சொன்னான். வேட்டைக்காரனிடம் சென்று ஒரு வேங்கையைக் கேட்டான். அவன் பதினாறடி வேங்கையைக் கொண்டு வந்தான். கோவலனைக் கயிற்றால் கட்டி வேங்கை முன் விட்டான். கோவலன் உடனே கன்னகையை நினைக்க, வேங்கை கோவலனின் கயிற்றை அறுத்து ஒன்றும் செய்யாமல் அனுப்பியது. பாண்டியன் கோவலனை அனுப்புமாறு தட்டானிடம் கூறினான். தட்டானோ,

"புத்திகெட்ட பாண்டியனே நீங்கள்புவியாளப்
போறயளோ.....
வெட்டச்சொல்லும் பாண்டியனே வீரமுள்ள
மனுவாலே"

என்று சொன்னான். மீண்டும் ஆனைச் சத்தியம் செய்யச் சொன்னான். தட்டான் ராவுத்தனிடமும் ஆசை காட்டினான். ராவுத்தனும் சம்மதித்து, யானைக்கு மத மூட்டினான்.

ஒரு குழி தோண்டி அதில் கோவலனை நிறுத்தி யானையை எத்திக் கொல்லத் தட்டான் நினைத்தான். அந்நேரத்தில் கோவலன் கன்னகையை நினைக்க, மத யானை தன் ஞானக்கண்ணால் வணிகேசனைப் பழி வாங்க வன்னிதட்டான் தன்னை வரவழைத்தான் என்று உணர்ந்தது. அதை அறிந்த தட்டான் அஞ்சி அரண்மனை யிலே புகுந்து, கோட்டை அகழியிலே போய் விழுந்தான். மதயானை கோவலன் முன்னே வந்து மண்ணைப் பறித்து வெளியாக்கிக் கோவலனை மத்தகத்தின் மேல் வைத்தது. இதைக் கேள்வியுற்ற அரசன் மகிழ்ந்து நாலு தெருவிலும் நன்றாகச் சுற்றிவரச் சொன்னான். மாசித் தெருவில் வரும் போது பெண்களெல்லாம் கூட்டமிட்டுக் கோவலனைப் புகழ்ந்தனர்.

"ஆளனுக்கே சோறிடாமல் அல்லேறிப் பார்ப்பாரும்
மன்னவற்கே சோறிடாமல் வணிகேசன்முகம்
பார்ப்பாரும்
மைந்தனுக்கே பால்கெடாமல் மச்சாவி யென்ம
மாரும்"

என்று கோவலன் அழகில் கட்டுண்ட பெண்களின் நிலை கூறப்பட்டுள்ளது.

அழகான மதுரைக்கு அழிவுவந்து நேர்ந்ததென்று கொப்புளிங்கி அழ, அதை வன்னித்தட்டான் தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டான். கோவலன் இறந்தான் என்று கொப்புளிங்கி அழுகிறாள் என்று பொய்யாகத் திரித்துக் கூறி அரசன் மனதை மாற்றினான். தட்டான் பழி என்று கூறியதால் மனம் திரிந்த பாண்டியன் தலையாரியிடம் "சிக்கந்தர் மலைச்சாரலில் நாலுதிக்கும் வன்னிமரமும் நடுவில் வேங்கை மரமும் இருக்கும். அதனடியில் கோவலனை வெட்டு" என ஆணையிட்டான்.

மாசித்தெருவைக் கடந்து கோவலன் வந்தபோது கம்பிளிக் கயிறு எடுத்து அவனைக் கட்டினர். இவன் வெட்டபட இருப்பது அறிந்து ஊரினரும்—சிறப்பாகச் செட்டி மக்களும்—அழுதனர். அவர்களிடம் கோவலன் "செட்டி மக்களே! என் கன்னகைக்குச் சாட்சி சொல்லுங்கள்" என்று வேண்டினான். சொக்கர் மேல் ஆணை வைத்தான். மீனாட்சி கோயிலுக்குச் சென்றான். அவளிடமும் தான் வெட்டப்படப் போவதைக் கூறினான். எல்லோரும் கோவலனின் தலைவிதியை நினைத்து அழுதனர். பெண்களெல்லாரும் நீர், பால், சோறு உண்ண அவனிடம் வேண்டினர்.

அந்நேரத்தில் மழவரசனின் மனைவி தீக்கனா ஒன்று கண்டு துடித்தழுதாள். கண்ட கனவையும் கணவனிடம்

கூறினாள். வடக்குக் கோட்டை வாயிலின் வழியாக வந்த ஒருத்தி ஒன்பது பேரைப் பழிவாங்குவதாகக் கூறினாள்.

"நான் கனவுகண்டு சொன்னதெல்லாம் பாண்டியர்க்கே சொல்லுங்கள்" என்று மனைவி சொன்னதை மழுவரசன் அரசனிடம் கூறினான். பாண்டியனும் தன் மனைவியின் கனவைக் கூறினான். அங்கிருந்த பாவி தட்டான், மன்னன் மனத்தை மாற்ற, தலையாரியும் கள்வனும் மனம் கலந்தனர் என்றான். இதைக் கேட்ட பாண்டியனோ, மழுவரசனை நோக்கி "கோவலனை வெட்டிவா அல்லது உன் தலையை அறுப்பேன்" என்றான். மழுவரசனின் மனைவி மழுவை வைத்துப்பூசைசெய்தாள். கணவனிடம் கோவலரைக் கொல்ல மாட்டேன் என்று ஆணையிட்டுத் தரச் சொன்னாள். அவன் கோவலனை அழைத்துச் சென்றான்.

கொல்ல வந்த மழுவரசனிடம் கோவலன் தனக்குத் தாக மெடுப்பதாகக் கூற மழுவரசன் நீர் குடித்து வர அவனை அனுமதித்தான். எங்கும் நீர் கிடைக்கவில்லை. இதைச் சொக்கர் கண்டு மீனாட்சியிடம் பசியாற்றிவரச் சொன்னார். அவள் வைகை நதியைத் திருப்பிவிட்டாள். "கிட்கிந்தர் என்று அழைக்கப்படும் இந்நதியில் தானம் செய்தால் பாவமெல்லாம் தொலையும்என்றும் கூறினாள். கோவலன் இந்நதியில் தலைமுழுகிப் பசியாறினான். மழுவரசனிடம் சென்றான். மழுவரசனோ கோவலனைப் பார்த்து 'நீ ஓடி விடுவாய் என்று நினைத்தேன். மறுபடியும் வந்தாயே' என்று சொல்லிக் வருந்தினான்.

மழுவரசன் தன் மனைவியிடம் சொன்ன சத்தியத்தைக் காப்பாற்ற மழுவால் வெட்ட மாட்டேன் என்று கூற, கோவலனை வெட்டும்படி பாண்டியன் கூறினான். அதனால் மழுவரசன் சொக்கனையும் மீனாட்சியையும் நோக்கி, தன் சத்தியத்தைக் காக்குமாறு வேண்டினான். கோவலனின் கண்களைக் கட்டி விட்டு இரு கூறாகப் பிளந்ததாக

பாண்டியனிடம் அறிவித்தான். அங்கிருந்த தட்டான் கோவலனை வெட்டியது பற்றி ஊரில் யாரும் பேசக் கூடாது என்று தமுக்கடிக்கச் சொன்னான்.

ஆய்ச்சியின் வீட்டில் கன்னகை தீக்கனா கண்டு ஆய்ச்சியிடம் கூறினாள். முற்றத்தில் நிற்கும் முருங்கை மரமும் வன்னி மரமும் சாய்தல், ஏரிக்கரை இடிதல், மாங்கலியம் தெறித்து விழுதல் என இவ்வாறு அவள் தீக்கனா கண்டாள்.திருமணக் காலத்தில் நடந்த நிகழ்ச்சி யையும் கூறினாள். மங்கிலியச் செப்பில் வைத்த மல்லிகைப் பூ வாடியதைச் சொன்னாள்.

கோவலன் இறந்தனத மல்லிகைப்பூ மூலம் அறிந்த கண் ணகிஅழுதாள். அப்போது ஆய்ச்சியம்மாள "நான்போய் பார்த்து வருகிறேன்" என்று ஆறுதல் கூறிச் சென்றாள். மாசித் தெரு பெண்ணொருத்தி பாண்டியன் கோவலனை வெட்டியதை அவளிடம் சொன்னாள். மாடு மேய்க்கும் தம்பியர்கள் மூலமாகக்கோவலன் வெட்டுண்டஇடத்தைத் தெரிந்து கொண்டு, நேரில் சென்று பார்த்துவிட்டு, கன்னகையிடம் கோவலன் வெட்டுண்ட செய்தியை அவள் தெரிவித்தாள்.

கணவனை இழந்த கன்னகை தன்நிலை கூறி மிகவும் வருந்தினாள். அவள் நெஞ்சத் துடிப்பை,

"நான் ஒத்தை நல்ல மரமானேன் ஒரு மரத்தின்
கொப்பானேன்
பட்டநல்ல மரமானே னடிம்மாப் பாழுச் சேக்
காணேன்
பிஞ்சிலே மாலையிட்டேன் ஒரு மைந்தன் முளைக்
கண்டனில்லை,
அஞ்சாதே யென்பாரில்லை யாருமில்லை வையகத்தே
யெருதுகொண்டேன் கன்னகைநான் உளுது
கொண்டாள் மாதேவி

பசுக்கொண்டேன் கன்னகைநான் பால்குடித்தாள்
மாதேவி
தோட்டம்போட்டேன் கன்னகைநான் பூமுடித்தாள்
மாதேவி"

என்ற வரிகள் தெரிவிக்கின்றன. நாட்டுப் புறப் பெண்களின்ஒப்பாரியாக இப்பகுதி அமைந்துள்ளது. இதில் மிக இனிய எளிய உவமைகள் கையாளப்பட்டுள்ளன.

கன்னகை கோவலனைக் காணச் சென்றபோது கருடன் அழுத கண்ணீருடன் பறந்து வந்து, கொப்புலிங்கியின் சிலம்பை ஒளித்த காரணத்தையும் ஒளித்த முறையையும் கூறி, கன்னகை விரும்பும் போது அதைக்கொண்டு வந்து தருவதாகவும் கூறிச் சென்றது.

வைகைக் கரையிலே சந்தி பண்ணி நிற்கும் (சந்தியாவந்தனம்) பார்ப்பான் ஒருவன் 'என் கணவா கோவலவா' என்றழுத குரலைக் கேட்டு ஓடிவந்து பாண்டியனிடம் கூறினான். அதைக் கேட்டுத் திகைத்த பாண்டியனிடம், 'நான்கு வாசலையும் நன்றாய் அடைத்து, நாலாயிரம் காவலர்களைக் காவலுக்கு நிறுத்த வேண்டும். நுழையவரும் கன்னகையைப்பார்த்து, பாண்டியற்கு நீ தங்கையா? தாரமா?' என்று காவலர்கள் கேட்க வேண்டும். தாரம் என்று சொன்னால்தான் உள்ளே விடுவேன் என்று அவளிடம் சொல்ல வேண்டும். அது கேட்டு கற்புடைய அவள் திரும்பிச் சென்றிடுவாள்" என்று வன்னிதட்டான் யோசனை கூறினான். அவ்வாறே நிகழ, கன்னகை சிவனை நினைத்துக் காளியானாள். உடனே, வாசல் கதவு மண்ணில் சாய்ந்து விழுந்தது. வடக்குக் கோட்டை வாசலில் இருந்த காவலர்களும் மந்திரியும் மாண்டனர். எல்லோரையும் அழித்து மதுரை நகர் புகுந்து, மாசிவீதியிலே வந்தபோது, கோவலன் கேட்டுக் கொண்ட வண்ணம், மதுரை நகர் பெண்களும் செட்டிமாரும் சாட்சி சொன்னார்கள். சினம் கொண்ட கன்னகை

மதுரையிலே "இடி விளாதோ" என்று கூற உடனே தெற்குக் கோட்டை வாசலிலே இடி வீழ்ந்தது.

கன்னகை கத்தி முனையில் கால் வைத்து தவம் செய்தாள். அக்கினியை நினைத்தாள். சொக்கனுடைய மேனி தீயாயெரிய, மீனாட்சிக்கு ஒன்றும் ஆகவில்லை. மீனாட்சி வெளியில் வந்து கன்னகையைப் பார்த்தாள்.

"தந்தையடி பெண்ணாளே தவசு விட்டிறங்கு" என்று சொல்ல, அதற்குக் கன்னகை,

''வணிகேசன் மன்னவனை மாபாவி வெட்டிவிட
பாத்திருந்தாய் கோவிலிலே யடிபளிகாளி மீனாட்சி
யென்கழுத்து மிகுந்தாப்போ லுன்கழுத்து
மிராதோ மீனாட்சி
யென்கணவன் மாண்டாப்போ உன்கணவன்
மாளாரோ
மன்னவனார் கணவனைத்தான், வரவளை நீ
கோவலனை

அல்லவென்றால் மீனாட்சி யக்கினியா யெரிப்பேன்" என்று மறுமொழி கூறினாள். கடவுளை விடக் கற்புடை மகளிர் சிறந்தவர் என்பதைக் காட்டுவதாக இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது. தானும் சொக்கரும் கோவலனுக்கு அறிவுரை சொன்னதையும் மீனாட்சி கன்னகைக்கு எடுத்துரைத்தாள். சொக்கரிடம் வரம் வாங்கி வந்து மூன்றே முக்கால் நாழிகைக்குக் கோவலனை உயிரோடிருக்கச் செய்வதாக, உறுதி மொழிந்தாள். பொன்னூசி, பொற்சரடு, பொற்பிரம்பு, கமண்டல நீர் ஆகியவற்றை மீனாட்சி கன்னகையின் கையில் கொடுத்தாள். அதை எடுத்துக் கொண்டு கன்னகை வருகின்ற நேரத்தில் கோவலன் அருகில் கொக்கினங்கள் குடை பிடித்தன; கழுகினங்கள் விசிறின; காகமும் நரியும் ஓரியும் காத்திருந்தன; கன்னகை கோவலனைக் கண்டவுடன் அவன் மேல் விழுந்தழுதாள். கூந்தலைப் பிய்த்தாள். இருபிள

வாய்க் கிடந்த கோவலனை, புழுதியெல்லாம் துடைத்தாள். பொத்தி விட்டாள். பொன்னூசி பொற்சரடு பூட்டி விட்டாள். மேனியெல்லாம், கமண்டலத்து நீரெடுத்துக் கோவலன் மேல் தெளித்தாள். பொற்பிரம்பு நெஞ்சின் மேல் வைத்தாள். வேங்கை மரம் பின்னால் போய் மறைந்தாள். எழுந்த கோவலன், ''மாதேவியோ கண்ணகையோ யார் வந்தது?'' என்று கேட்க, வேங்கை மரத்தின் பின் மறைந்து நின்ற கண்ணகை வெளியே வந்தாள்.

'சீர்தவி கண்ணகையைச் செட்டி யென்னை
மாலையிட்டீர்
மாதேவி யாசையின்ன மறக்கலையோ கோவலவா''

என்று சொல்லி அழுதாள். 'பிரமனே சாக வேண்டும்' என்று நொந்துரைத்தாள். கோவலன் அதுவரை நடந்த செய்திகளைக் கண்ணகையிடம் சொன்னதோடு ''வேசை மகள் மாதேவிக்கே வெட்டுக்கவம் சொல்லிவிட்டு'' என்றான் கோவலன். கண்ணகை அவனுடைய கையில் பாங்கியம் கொடுத்து ''ஆதிசிலன் பாதத்தை அடைவாயாக'' என்றாள். ஊசியிலே உள்ள நூலை உருவி விட்டாள். சொக்கரின் மேல் ஆணையிட்டு. ஓலை ஒன்று எழுதிக் காகத்திடம் கொடுத்தாள். ஓலையைக் கண்டவுடன் மாதேவி, விழுந்து அழுதாள். அணிமணிகளைத் துறந்தாள். தாசிக் குலத்தில் பிறந்தும் தான் கற்புடன் இருப்பதையும் உறுதிப் படுத்தினாள்.

''வேசையல்லோ மன்னவரே, வேறுமுகம் பார்த்
தறியேன்.
தாசியல்லோ மாதேவி தானறியேன் மன்னவரை''

என்று புலம்பினாள்.

அவள் கோவலன் இருந்த இடத்தை அடைந்தாள். கணவனுக்கருகில் சக்களத்தி (சகக்கழுத்தி) போராட்டம் ஏற்பட்டது. கோவலனின் சாவுக்குக் காரணம் மாதேவி,

மாலையிட்டதுதான் என்று கன்னகையும், கன்னகையின் கால் சிலம்பு தான் என்று மாதேவியும் வாதாடினர். அங்கு வந்த மாமுனிவர்ஒருவர் இருவருடைய வழக்கையும்கேட்டு, 'உங்கள் இருவராலும் தான் அவன் மாண்டான்; எடுத்து அடக்கம் செய்யுங்கள்" என்று இருவருக்கும் அறிவுரை கூறிச் சென்றார். இருவரும் ஒன்றுபட்டு காட்டில் உள்ள விறகுகளை எடுத்து அடுக்கினர். 'மதுரைப் பாண்டியனைப் பழிவாங்க நீ உயிர் வாழ வேண்டும். நான் கோவலன் கூட எரிவேன்' என்று மாதேவி கூறினாள். இதைக் கேட்டு கன்னகை கண்ணீர் சொரிந்தாள். கன்னகையே கொள்ளி வைத்தாள். சுத்தி வந்து குடம் உடைத்தாள்; தீ, கோவலன் மாதேவியைச் சாம்பலாக்கியது. கன்னகை முந்தானையை விரித்து அதில் அஸ்தியை எடுத்துக்கொண்டு வந்து வைகையில் கரைத்தாள். தானம் பானம் செய்து,

"மஞ்சநல்ல பாவாடை மடித்துடுத்தா ளன்னேரம்
மஞ்சரவிக்கை யிட்டாள் மங்கைநல்லாள்
கன்னகையாள்
சிவனை நினைந்தாளே திருநீறணிந்தாள்
தேகமெல்லாம்

கையிலே வேப்பங்குளை கக்கத்திலே தானிடுக்கி
வாறாளே கன்னகையாள் மாசித்தெரு வீதிவந்தாள்
தலையை விரித்தாளே தானழுதாள் கன்னகையும்"

என்று அவள் பாண்டியனைப் பழி வாங்கும் முன் செய்து கொண்ட கோலம் கூறப்பட்டுள்ளது.

பாண்டியனைப் பார்த்துக் கன்னகை,

"களவாண்ட கள்ளனுக்கே ஒருகால்விலங்கு
பஞ்சமோடா

செட்டிமகன் களவாண்டால் ஒருசெவ்விலங்கு
பஞ்சமோடா

கள்ளனென்றாய் திரவியத்தை கட்டியல்லோ
வைப்பேனடா
வன்குலையள் செய்தாயே மாபாவி பாண்டியனே"

என்று சொல்லி அழுதாள். பாண்டியன் வன்னித் தட்டானை அழைத்துவரச் சொல்ல, தட்டானோ, சீமையிலே பாதி திரவியமும், ஆனை குதிரைகளையும் பாண்டியன் தருவதாகச் சொல்லி விடுத்தான். அதைக் கேட்டு கன்னகை கூறும் பதில் சிறப்பாகவும் சிந்திப்பதாகவும் அமைந்துள்ளது.

"சீமைதந்தால் யென்கணவன் சீமையாளவுந்தான்
வருவானோ
திரவியமோ தந்தாலும் செட்டிமகன் வருவானோ
ஆனைதந்தால் என்கணவன் ஆளையிங்கே
வருவானோ
குதிரைதந்தால் என்கணவன் கோவலன் வருவானோ
பளிவாங்கிப் போவேனடா பாண்டியனே
யிப்போது"

என்று அறிவையும் சிந்தனையையும் தூண்டுகிற முறையில் வாதம் செய்தாள். இதைக் கேட்ட பாண்டியன் 'செத்தவன் வருவதுண்டா? அதனால் நீயே மதுரையை ஆண்டிரு' என்ற ஆசையூட்டினான். இதைக் கேட்டவுடனே வெகுண்டெழுந்த கன்னகை, தான் பழிவாங்குவதையே நோக்கமாகக் கொண்டதை உரைத்தாள். பாண்டியன் தான் சிக்கந்தர் மலைக் காட்டில் கோவலனைக் கொன்ற காரணத்தை விளக்கினான்.

கன்னகை களவு போன சிலம்பைக் கருடனிடமிருந்து வரவழைத்தாள். தன் கால் சிலம்பையும் கழற்றி இரண்டு சிலம்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கச் சொன்னாள். பாண்டியன் இரண்டு சிலம்பும் ஒரு சுவடுதான் என்று சொன்னான். கன்னகை கொப்புலிங்கியின் கால்சிலம்பைக் கொண்டு வருமாறு கூறி ஒத்துப் பார்த்தாள். இரண்டும்

இணையில்லாமல் இருந்ததைக் கண்ட பாண்டியன் வன்னியத்தட்டானைக்கோபித்தான். அந்நேரத்தில் அங்கு வந்த கொப்புலிங்கியிடம் பாண்டியன் நிலைமையைச் சொல்ல அவள் பாண்டியனைத் திட்டினாள். கன்னகையை நோக்கி,

"முந்திபிச்சை போடனுமே முந்தியங்கை
மீயந்தலுற்றாள்
மங்கிலியப் பிச்சையல்லோ மங்கையரே
போடுமென்றாள்"

என்று பாண்டியமாதேவி தன் கணவனுக்காக உயிர்ப் பிச்சை கேட்டாள்; தாங்கள் கன்னகைக்குத் தாய் தந்தையர் என்பதையும் எடுத்துக் கூறினாள்.

வன்னித்தட்டான் பாண்டியனிடம் வஞ்சனையாய்த் தன்னைப் பற்றிக் கூறியதைக் கேட்டவுடனே கன்னகை தாடகை போல உருவங் கொண்டாள். தெற்கே முகம் பார்த்தாள். சிவசங்கரனைத் தாள் தொழுதாள். பொற் சிலம்பைத் தூக்கியெறிந்தாள். அது சிங்காதனம் மீது பட்டு உடைந்தது. சிங்காதனம் எரிந்தது. அவள் எல்லோரையும் பழி வாங்கினாள். பாண்டியனின் மார்பைப் பிளந்து, குடலைப் பிடுங்கி மாலையிட்டாள். வன்னித்தட்டான், அவன்மகன், கொல்லன், குயவன், ராவுத்தன், மழுவரசன் பாம்புச்சித்தன், வேட்டைக்காரன் ஆகியோரையும் அழித் தாள். வலது நகில் திருகி மதுரையை எரித்தாள். அந்த நேரத்தில் இடைக்குலத்துப் பெண்கள் ஓடி வந்து வெண்ணெயைத்திரட்டி அவள் மார்பு மேலே எறிந்தனர். அதனால் குளிர்ந்த கன்னகை,

"பட்டிதளைத் திடுங்கோ பால்பானை பொங்கிடுங்கோ
ஆரும்மனை வெந்தாலும் ஆயர்மனை வேகாமல்"

இருக்க வேண்டும் என்று தன்னைக் காத்தோம்பிய ஆயர் மகளை வாழ்த்தினாள். சொக்கர் வாசலில் சென்று 'நிற்க நிலை தருக' என வேண்டினாள். அப்போது சொக்கர், 'நீ

தான் நிற்க இடமில்லாமல் மதுரையை எரித்து விட்டாயே. அதனால் இனிமேல் நீ,

"மலையாள தேசமெல்லாம் பகவதியாய்
போயிரென்றார்
பாக்காடிச் சீமையெல்லாம் பாராண்டு நீயிரடி"

என்று வரங் கொடுத்தார். மதுரை தெற்குக் கோட்டை வாசல் விட்டு, சிக்கந்தர் மலைகடந்து, சாத்தூர், சங்கரநயினார் கோயில், குத்தாலம் ஆகிய இடங்களைக் கடந்து ஆரியங்காவை அடைந்தாள். அங்கு வந்தடைந்த ஐயரைத் தெண்டனிட்டாள். சொக்கர் சொன்ன உத்தரவை ஐயருக்கும் கூறினாள.

பாலக்காடு தேசமுதல் பாராண்டு கொள்ளச்சொன்ன ஐயரும் பலவரங்களைக் கன்னகைக்குக் கொடுத்தார். அங்கிருந்து மலையாளம் வந்த கன்னகை மாகாளியின் சுருபங் (உருவம)கொண்டு மனிதரைப் பிடிக்கலுற்றாள். ஆட்டையும் மாட்டையும் அழித்தாள். அதைக்கண்ட அரசனும் மந்திரிகளும் ஆலோசித்துகாளியுடையகோயிலுக்கு,"காளியூட்டு நடத்தச் சொன்னார்; சுற்றிலுமுள்ள தேவதைக்கு ஊட்டுப் போட்டுக் கொடுக்கச் சொன்னார்; பட்டிகளில் பொங்கல் இடச் சொன்னார்." அதைச் செய்த பிறகு,

"ஆல்போல் தான்தழைத்து அருகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல னன்னசுற்றம் முசியாமல்
வாழ்ந்திருந்தார்"

என்று இக்கதை மங்கலத்தில் முடிகிறது.

இந்நூலின் சிறப்புகள்

வேறெந்த நூலிலும் காணமுடியாத சில புதிய நிகழ்ச்சிகள் இச்சுவடியில் மட்டுமே உள்ளன.

1. சிலப்பதிகாரக் கண்ணகி இக்கதையில் கன்னகை என்று வழங்கப்படுகிறாள். இப் பெயருக்குரிய காரணமும்

குறிக்கப்படுகிறது. வண்ணமாலைச் செட்டி இந்தப் பெண் பிள்ளையைக் கன்னத்தாடும் வைத்து முத்திக் கொள்ளுகிறபோது இந்தப் பிள்ளை சிரித்தபடியினால் கன்னகை என்று பெயரிட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

2. மாதவி இக்கதையில் 'மாதேவி' என்று குறிப் பிடப்படுகிறாள். மாதவியின் தாயின் பெயரும் 'மாதேவி' என்றே காணப்படுகிறது. மாதேவியின் பிறப்பு இறைமைத் தன்மையோடு தொடர்புடையதாகக் காட்டப்படுகிறது.

3. சோழன் காவிரியில் அணை கட்டிய போது, வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த, சோழனின் மனைவி 'சுந்தரி' உயிர்த் தியாகம் செய்கிறாள். இந்நிகழ்ச்சி கதைக்குத் தொடர்பில்லை. காவிரியில் அணைகட்டுதல் சோழனின் மிகச் சிறப்பான நிகழ்ச்சியாக இருந்ததால் இப்புதிய நிகழ்ச்சி சேர்க்கப்பட்டது போலும். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்னும் இளங் கோவைப் போலவே இக்கதை ஆசிரியரும் சுற்பின் தன்மையை வலியுறுத்த இந்நிகழ்ச்சியைச் சேர்த்திருக் கலாம். யாராலும் செய்ய முடியாத அநஞ்செயலையும் கற்புடைய மகளிரால் செய்ய முடியும் என்ற அக்கால நம்பிக்கையையும் இந்நிகழ்ச்சி தெளிவுறுத்துகிறது.

4. இக்கதையில்கண்ணகியின் பூப்புச்சடங்து விளக்கப் படவில்லை. ஆனால் மாதவியின் பூப்புச் சடங்கு விளக்க மாகக் கூறப்படுகிறது. பெண்களின் திருமணத்திற்த விளம்பரமாக இருக்கும். இப்பூப்புச் சடங்த மாதவியின் வாழ்வில் அமைத்துக் காட்டியிருத்தல் பொருத்த முடையதாக உள்ளது

5. கோவலனையும் மாதவியையும் பிரிக்க நினைக்கும் தாய்க்கிழவி ஒரு மந்திரம் செய்கிறாள். மந்திரம் செய்யும் விதம் 29 வரிகளில் அச்சமூட்டுவதாக விவரிக்கப்படுகிறது.

இது வேறெந்த நூலிலும் இல்லை. இப்பகுதி மலையாளி களின் மந்திர முறைகளைக் கூறும் காலக் கண்ணாடியாக விளங்குகிறது.

6. இளங்கோவடிகளைப் போலவே இந்நூலாசிரி யரும் மாதேவியைக் குற்றமற்றவளாக—கோவலனிடம் அன்பு காட்டுபவளாக—பரத்தைத் தன்மை அற்ற வளாகக் காட்டுகிறார். அதனால் மாதேவிக்குத் தெரியாமல் தாயானவள் வெற்றிலையுடன் மருந்தைக் கலந்து கொடுக்கிறாள். தண்ணீரில் கலந்து தெளித்தாலும் மனம் வேறுபடும் வேகம் கொண்டதாக அம்மருந்து இருக் கிறது. அதனால் கோவலனிடம் அன்பாக இருந்த மாதேவி மனம் வேறுபடுகிறாள். மாதேவியின் தாய் சித்திராபதியைப் போலவே இந்நூலாசிரியரும் மாதேவி யின் தாயை மிகக் கொடுமையானவளாகக் காட்டு கிறார்.

6. ஆய்ச்சியின் வீட்டில் கோவலனும் கண்ணகையும் தங்கியிருந்தபோது, அவன் சிலம்பு விற்கச் செல்வதாகக் கூறுகிறான். அதனைக் கேட்ட ஆய்ச்சி பாண்டியனின் கொடுமைகளைக் கூறுவதும். பின்னால் நிகழப் போகும் நிகழ்ச்சிகளைக் கூறித் தடுக்க முயலுவதும் வேறு எந்த நூலிலும் இல்லை. இக்கதையில் பாண்டியன் பழிக்கப் படும் நிலையிலேயே உள்ளான்.

8. இக்கதையில் சொக்கரும் மீனாட்சியும் புதிய பாத் திரப் படைப்புகளாக இடம் பெறுகின்றனர். கோவலன் மதுரைக்கு வந்ததைக் கண்டவுடனேயே சொக்கர், மீனாட்சியிடம் கோவலன் கொலையுண்ணப் போவதை யும் மதுரை அழியப் போவதையும் கூறுகிறார். அதனால் நாம் இனி இங்கிருக்கக் கூடாது, புறப்படுவோம் என்று மீனாட்சியிடம் சொல்கிறார்.இது சிந்திக்கத்தக்கது. அழிவு வரும் வேளையில் நகரத்தைக் காக்க வேண்டிய கடவுளர் தங்களைக் காத்துக்கொள்ள முதலில் புறப்படுகின்றனர். நகரத்தைக் காக்கத் தவறுகின்றனர். சிலப்பதிகாரத்திலும் நகரழிவிற்கு முன் கடவுளர் புறப்பட்டு விடுகின்றனர்.

கோவலனுக்கு அறிவுரை கூறும் சொக்கநாதர், தன்னை அந்நாள் வரை காத்துவரும் பாண்டியனுக்கு அறிவுரை கூறவில்லை காக்கும் முயற்சியையும் மேற்கொள்ள வில்லை. ஆண்டிவேடம் பூண்டு கோவலனுக்கு அறிவுரை கூறச்சென்ற சொக்கர் அடிபட்டு அலறி ஓடுவதும், குறத்திவேடம் பூண்டு கோவலனுக்கு அறிவுரை கூறச் சென்ற மீனாட்சி அடிபட்டுச் செல்வதும் கடவுளரின் தெய்வத்தன்மையையும், உயர்வையும் குறைப்பதாக அமைகிறது. சாகும் தறுவாயில், மீனாட்சி கிட்கிந்தர் நதியைத் தோற்றுவித்துக் கோவலனின் தாகத்தைத் தீர்க் கிறாள். கோவலன் இறந்த பிறகு கண்ணகை தலம் செய்ய சொக்கேசரின் உடல் தகிக்கிறது. மீனாட்சி கண்ணகை யிடம் தவம் நீக்கவேண்டுகிறாள். கோவலன் சிறிது நேரம் உயிர் பிழைக்க, பொற்பிரம்பு, ஊசி, நூல், கரகத்தில் நீர் ஆகியவற்றை சொக்கரிடம் வாங்கிக் கண்ணகையிடம் கொடுக்கிறாள். மதுரை நகரை எரித்த பிறகு கண்ணகை சொக்கர் வாசலில் நின்று 'நான் நிற்க நிலை தருக' என வேண்டுகிறாள். அப்போது சொக்கர் ''நீதான் நிறக இடமில்லாமல் மதுரையை எரித்து விட்டாயே. இனிமேல் நீ மலையாள தேசத்திற்குச் சென்று அங்குப் பகவதி என்ற பெயருடன் வாழ்க'' என்று கூறுகிறார். இவ்வாறு சொக்கநம் மீனாட்சியும் இக்கதையில பாத்திரங்களாக மாறிக் கதை யோட்டத்திற்குத துணைபுரிகின்றனர்.

9. கண்ணகையின் சிலம்பைப் பார்த்த பாண்டியனின் மனைவி கொப்புலிங்கி, சிலமபைக் கொண்டு வந்த கோவலன் தன் மருமகன் என்பதறிந்து தாதியரை விட்டுக் கோவலனுக்குச் சாதம் போட்டு பணமும் கொடுக் கிறாள். இந்நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே வண்ணித்தட்டான் கொப்புலிங்கியைக் கோவலன் மயக்கிய தாகத் திரித்துக் கூறுகிறான்.

10. கோவலன் வெட்டப்படும் நேரத்தில் அவன் தாகத்தைத் தீர்க்க, மீனாட்சி வைகை நதியைத் திருப்பித்

கிட்கிந்தர் நதியெனப் பெயரிடுகிறாள். இந்த நதியில் முழுகித் தானம் செய்தால் பாவம் தொலையும் என்று கூறுகிறாள். கோவலனும் அந்நதியில் தலை மூழ்கித்தாகம் நீங்குகிறான். பாவம் தீர்ந்ததா என்பது தெரியவில்லை. சொக்கநாதரின் அருள் உள்ளத்தைக் காட்ட இக்கதை நிகழ்ச்சி சேர்க்கப்பட்டிருக்கலாம். கிட்கிந்தர் நதி என்பது எந்த நதி எனத் தெரியவில்லை இராமாயணத்தில் வரும் கிட்கிந்த மலையுடன் தொடர்புடையதா என்பது தெளிவாகவில்லை.

11. திருமணத்தின் போது ஐயர் ஒரு குடத்தில் மல்லிகைப்பூவை இட்டு இந்தப்பூ வாடினால் கோவலனுக்கு இடையூறு உண்டாகும் என்று கூறி மல்லிகைப்பூச் செப்பு கொடுத்தார். இந்நிகழ்ச்சி அக்காலத்தில் திருமணத்தில் நடந்த சடங்கு ஒன்றைக் குறிக்கிறதா என்பதும் ஆய்தற்குரியது. அக்காலத்து நம்பிக்கையைப் புலப்படுத்துவதாகவும் இந்நிகழ்ச்சி அமையலாம். இம் மணவினையை ஆய்ச்சியிடம் கூறும் கண்ணகை மல்லிகைப்பூ வாடுவதாகவும் குறிப்பிடுகிறாள்.

12. கண்ணகை கத்தி முனையிலே காலை வைத்து, தவம் செய்கிறாள். அக்கினியை நினைக்கிறாள். சொக்கனுடைய மேனியெல்லாம் பற்றி எரிகிறது. மீனாட்சிக்கு ஒன்றும் ஆகவில்லை. சுற்புக்கனல் முன் கடவுளும் நிற்க முடியா நிலையை இதுசுட்டுகிறது. மீனாட்சி கோயிலுக்கு வெளியே வந்து 'தந்தையடி பெண்ணாளே, தவசு விட்டிறங்கு" என்று மீனாட்சி சொல்கிறாள். அதற்குக் கண்ணகை "என் கணவன் மாண்டதைப்போல் உன் கணவன் மாள வேண்டும். கோவலனை நீ வரவழை. இல்லையென்றால் அக்கினியால் எரிப்பேன்" என்று கூறுகிறாள். அன்னை மீனாட்சியையே எதிர்க்கும் மானுடத்தின் சுற்பாற்றல் இங்குக் காட்டப்படுகிறது. இறைவனையே எதிர்க்கும் சுற்புக் கனலின் வீரம் இங்கு உணர்த்தப்படுகிறது.

13. கன்னகையால் உயிருட்டப் பெற்ற கோவலன், மாதவியோ கன்னகையோ யார் வந்தது என்று கேட்கிறான். வேங்கை மரத்தின் பின் மறைந்து நின்ற கன்னகை வெளியே வருகிறாள். "மாதேவி யாசையின்ன மறக்கலையோ கோவலவா" என்று சொல்லி அழுகிறாள். இது அக்காலத்துச் சக்களத்தி போராட்டத்தையே குறிக்கிறது. கணவனருகிலும் கன்னகையும் மாதேவியும் போராடுகின்றனர். மாதேவி மாலையிட்டதால்தான் மாண்டதாகக் கன்னகையும், சிலம்பால் தான் மாண்டதாக மாதேவியும் பழிக்கின்றனர். இறக்கும் நிலையில்உள்ள கோவலனிடம் கன்னகைமாங்கல்யத்தைக் கழற்றிக் கொடுக்கும் முறையும், மாதேவி கோவலனுடன் உடன் கட்டையேறுவதும் அக்காலவழக்கத்தையே சுட்டிக் காட்டுகிறது.

14. கோவலன் மாதேவியின் அஸ்தியைக் கரைத்த பிறகு கன்னகை கொண்ட கோலம் மாரியம்மன் தோற்றத்தை நினைவூட்டுகிறது. மஞ்சள் பாவாடையும், ரவிக்கையும் அணிந்து,சிவனை நினைந்து, தேக மெல்லாம் திருநீறணிந்து, கையில் வேப்பங்குழை பெடித்து, மாசித் தெருவிற்கு வரும் அவள் தெய்வக் கோலம் வேறெந்த நூலிலும் இல்லை.

15. கன்னகை பாண்டியனைப் பழி வாங்க வரும் போது, கொப்புலிங்கி மடிப்பிச்சை—மாங்கலியப் பிச்சை—கேட்கிறாள். தாம் அவளைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் என்று எடுத்துச் சொல்கிறாள். மதுரையை ஆளுமாறு ஆசையூட்டுகிறாள். பிரமன் விதி தப்பாது என்று அறிவுரை நவில்கிறாள். இவ்வாறு கோவிலிங்கி கூறும் முறை வேறெந்த நூலிலும் இல்லை.

16. சொக்கரின் ஆணையையேற்ற கன்னகை மதுரை தெற்குக் கோட்டை வாசல் நீங்கிச் சிக்கந்தர்மலை கடந்து சாத்தூர், சங்கரநயினார் கோயில், குத்தாலம், கடந்து ஆரியங்காவை அடைகிறாள். அங்கிருந்த ஐயரைப்பார்த்து

தெண்டனிடுகிறான். சொக்கர் அங்குத் தங்குமாறு சொன்ன உத்தரவை ஐயருக்குச் சொல்ல அவரும் சம்மதிக் கிறார். இப்பகுதி வேறெந்த நூலிலும் இல்லை. இன்றும் கண்ணகி, கேரளத்தில் பகவதியாக வழிபடப்படுகிறாள் என்னும் கருத்திற்கு இந்நிகழ்ச்சி அரண் செய்கிறது.

இவ்வாறு வேறெந்த நூலிலும் காண முடியாத செய்திகளை இந்நூலிலிருந்து அறிய முடிகிறது.

சில மாற்றங்கள்

சிலப்பதிகாரக் கதையுடன் தொடர்புடையதாக ஆனால் சில மாற்றங்களுடையதாகச் சில நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.

1. மாநாய்கன் இக்கதையில் வண்ணமாலைச் செட்டி என்றழைக்கப்படுகிறான். குழந்தையைக் கண் டெடுப்பதோடு அந்தப் பாத்திரம் முடிந்து விடுகிறது. கன்னகையின் திருமணத்தில் கூட அவன் இடம்பெற வில்லை.

2. கோவலனின் தந்தை மாசாத்துவான் தான் முதன் முதலில் அறிமுகப் படுத்தப்படுகிறான். அவன் காவிரியில் அணை கட்ட மன்னனுக்கே பெரும் பொருள் தரும் செல்வச் சிறப்பினன். கோவலன் மாதேவியின் வீட்டிலிருக்கும் போது மாசாத்துவானும் அவன் மனைவி யும் இறக்கின்றனர். சிலம்பில் மாசாத்துவானின் மனைவிக்குப் பெயர் குறிப்பிடப்படவில்லை. கோவலன் கதையில் மாசாத்துவானின் மனைவி வண்ணமாலை என்றழைக்கப்படுகிறாள்.

3. சிலப்பதிகாரத்திலுள்ள கோவலனின் பழம் பிறப்புக் கதையை ஒத்த ஒரு நிகழ்ச்சி இங்கு மாற்றம் பெறுகிறது. சோழனின் உற்ற நண்பனாக — பெரும் பதவியை வகிப்பவனாக—மாசாத்துவான் இருக்கிறான். ஒரு நாள் மாசாத்துவானும் அவன் மனைவியும் உறங்கும்

போது கள்வர்கள் வந்து கன்னமிட்டு கருவூல நகைகளைத் திருடிச் செல்கின்றனர். வாயிலுக்கு வெளியில் படுத்திருந்த சூரன் என்பவனை மாசாத்துவான் கொன்று விடுகிறான். சூரன் தான் கோவலனாக வந்து பிறந்தானா என்பது தெளிவாகவில்லை. சூரன் கள்வன் என்று பழி சுமத்தப் பட்டுக் கொல்லப்படுவது போலவே கோவலனும் பழி சுமத்தப்பட்டுக் கொல்லப்படுவது கவனிக்கத் தக்கது.

4. மாதவியின் பதினோரு ஆடல் வகைகளைக் கடலாடு காதையில் சிறப்பித்துக் கூறுகிறார். இளங் கோவடிகள். சிலப்பதிகாரத்தில் கூறாத கழைக்கூத்தை மாதேவி ஆடுவதாக இந்நூலாசிரியர் கூறுகிறார். கழைக் கூத்தைச் சிறப்பாகக் கருதிய காலச்சூழ்நிலையில் மாதேவி கழைக்கூத்து ஆடுவதாக மாற்றம் ஏற்பட்டிருக் கலாம்.

5. சிலப்பதிகாரத்தில் மாதவியின் நடனத்தைக் கோவலன் கண்டதாகக் குறிப்பு இல்லை. மாதேவியின் நடனம் காணக் கோவலன் விரும்புவதும், அவனுடைய தாய் தடுப்பதும் சிலப்பதிகார வழி நூல்களில் காண முடி கிறது. இந்நூலில் கோவலனின் அழகுக்குத் திருட்டி தோடம் படுமோ என்ற அச்சத்தால் அவனைத் தடுப்ப தாக மாற்றம் பெறுகிறது. அக்காலச் சமுதாய நம்பிக்கை யையும் இது குறிப்பதாக அமைகிறது.

6. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதையில் மாதவியின் பரிசப் பொருளாக நாளொன்றுக்கு ஆயிரத் தெண் கழஞ்சுப் பொன் என்று விதிக்கப்படுகிறது. இக் கதையில் மாதேவியே கோவலன் தனக்குக கொடுக்க வேண்டிய பொருள்களைப் பற்றிய பட்டியல் கொடுக் கிறாள். "இவற்றைக் கொண்டு வந்தீரானால் கோவலரே வாருமென்றாள். இல்லையென்றால் போமென்றாள்" என்னும் பகுதி அக்காலப் பரத்தமைச் சமுதாயத்தின் போக்கையே காட்டுகிறது.

7. சிலப்பதிகாரத்தில் மாதவியும் கோவலனும் சேர்ந்தே கடலாடப் போயினர். கடற்கரையில் மாதவி பாடிய கானல் வரிப் பாட்டால் மனம் மாறி கோவலன் பிரிகிறான். இந்நூலில் 'வீரமுள்ள மாதேவி' காவேரியைப் பார்க்க விரும்புகிறாள். காவேரி கரைபுரண்டு ஓடுகிறது. அங்குக் கோவலன் வர தாய்க் கிழவி கொடுத்த மருந்து வேகத்தால் அவனை ஆற்றில் பிடித்துத் தள்ளுகிறாள் மாதேவி.

8. கோவலன் இறந்ததைக் கேட்டதும் துறவு பூணுகிறாள் இளங்கோவின் மாதவி. இக்கதையில் மணிமேகலையைப் பற்றிக் குறிப்பிடாததால் கோவலனுடன் சேர்ந்தே மாதேவி உடன்கட்டை யேறுகிறாள். கோவலனைப் பிரிந்த போதும் அவனுடைய கணையாழியை முன் வைத்து தினமும் பூசை செய்கிறாள்.

9. சிலம்பில் கண்ணகி ஒருநகில் அறுத்து மதுரையை எரிக்கிறாள். இக்கதையிலும் கன்னகை ஒரு நகிலை அறுத்து எறிந்து மதுரையை எரியூட்டுகிறாள். இன்னொரு நகிலையும் அறுத்து எறிகின்றாள்.

10. சிலம்பில் கோவலன் தான் இழந்த பொருளை ஈட்டுவதற்காகவே சிலம்பை விற்கப் போவதாகக் கூறுகிறான். இக்கதையில் மாதேவியின் கடனை அடைப்பதற்காகவே அவன் சிலம்பு விற்கச் செல்வதாகக் கூறப்படுகிறது. காவேரிப் பூம்பட்டினத்தில் சிலம்பை மதிப்பிட முடியாததால் மதுரை நோக்கிச் செல்வதாகப் புதிய காரணம் கூறப்படுகிறது.

11. சிலப்பதிகாரத்தில் தம் சமண சமயக் கருத்துகளைப் பரப்ப இளங்கோவடிகள் கவுந்தியென்னும் பாத்திரத்தைப் படைத்தார். இத்துறவியே மாதரியின் பெருமைகளையும் கூறுகிறார். இக் 'கோவலன் கதை'யில் கவுந்தி இல்லாததால் மாதரியே தன் குலப் பெருமையைக் கூறுகிறாள். தான் வாழும் பாண்டிய நாட்டு அரசனையே பழித்துப் பேசுகிறாள். கோவலனுக்குப் பின்னால்

நடக்கப் போவதையும் கூறுகிறாள். இவ்வாறு சிலப்பதி காரமும் கோவலன் கதையும் பல இடங்களில் மாறுபடு வதைக் காணமுடிகிறது.

கோவலன் கதையும் புகழேந்தியின் கோவிலன் கதையும்

புகழேந்திப் புலவர் எழுதியதாகக் கருதப்பெறும் ''கோவிலன் கதையை'',''கோவலன் கதை'' ஆசிரியர் அறிந் திருப்பார் போலும். பல இடங்களில் இருவரின் கதை நிகழ்ச்சிகளும் ஒத்துப் போகின்றன. பாண்டியன் மனைவி கொப்புலிங்கியின் வயிற்றில் கன்னகை பிறப்பதாகக் காட்டுதல், கருடன் தட்டானைப் பழிவாங்கச் சிலம்பு கவர்ந்து சென்று புற்றிலிடுதல், கோவலனைக் கண்டு கொப்புலிங்கி மயங்கியதாகத் தட்டான் கூறுதல், கள்வன் என்பதைக் கண்டுபிடிக்கப் பாம்புக் குடத்தில் கைவிடுதல், உலையில் கொதித்த மழுவைக்கையிலெடுத்தல்,யானையை மிதிக்க விடுதல்,மழுவரசனின் மனைவி தீக்கனாகாணுதல், கன்னகை பொன்னூசி, பொன்சரடு கொண்டு கோவலன் உடலைத் தைத்து எழுப்புதல், கோவலனுடன் மாதேவி உடன்கட்டை ஏறுதல், இருவருக்கும் கன்னகை கொள்ளி வைத்துக் குடம்உடைத்தல்,கன்னகை கருடனை நினைக்கக் கருடன் சிலம்பைக் கொண்டு வந்து போடுதல், கன்னகை யின் சினம் தணிய ஆய்ச்சியர் நகிலில் வெண்ணெயை அப்புதல், சினம் ஆறிய கன்னகை அவர்களை வாழ்த்து தல் ஆகிய பகுதிகளைக் குறிக்கலாம்.

சமுதாயக் கண்ணாடி

அக்காலச் சமுதாயத்தை அறியும் கண்ணாடியாக இக் ''கோவலன் கதை'' அமைந்துள்ளது. பார்ப்பன ஆதிக்கத்தை இக்கதை படம்பிடித்துக் காட்டுகிறது. பார்ப்பனர்கள் 'தெய்வப் பிராமணர்கள்' என்று அழைக் கப்படுகின்றனர். பார்ப்பனர்களுக்கு அன்னம், உடை, தங்கம் ஆகியவற்றைத் தானமாகக் கொடுத்தால் பாவங் கள் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை இருந்தது. சூரனைக் கொன்ற மாசாத்துவான் அப்பாவம் தீர ஆயிரம் பார்ப்

பாருக்கு அன்னம், உடை, தங்கம் ஆகியவற்றைத் தான மாகக் கொடுத்ததிலிருந்து இதை அறியலாம். பார்ப் பார்க்கு அன்னமிடாதவர்களைப் பாவியாகப் பழிக்கும் நிலையும் காணப்படுகிறது. "பாப்பாற்கு அன்னமிடாப் பாலியல்லோ பாண்டியர்கள்" என்று பழிப்பதற்குக் காரணம் கூறப்படுகிறது.

வேதியர்கள் வந்து பஞ்சாங்கம் பார்த்துக் கூறும் பழக்கம் உள்ளது. நானூறு பார்ப்பனர்கள் கோவலனின் திருமணநாள் குறிக்கின்றனர். முந்நூறு பார்ப் பனர்கள் பந்தலிலே இருந்து சடங்கு செய்கின்றனர். அவர்கள் திருமணச் சடங்கு செய்த முறைமை விரிவாகக் கூறப்படுகிறது. அவர்கள் மந்திரம் ஓதி ஓமகுண்டம் வளர்த்து, முளைப்பாலிகை வைத்து அம்மியிட்டு, அரசாணி கட்டி, சாஸ்திரங்கள் ஓதுகின்றனர். மங்கிலியச் செப்பெடுத்து வேதியர்கள் வாழ்த்தினர். அதில் மல்லிகைப் பூ வைத்து, கோவலர்க்குத் தீங்கு வந்தால் இந்த மல்லிகைப்பூ வாடும் என்று கூறி, கண்ணகையின் கையில், கொடுக்கின்றனர். காப்பறுத்துச் சடங்கு செய்கின்றனர். இவ்வாறு ஏழு நாட்கள் வேதியர்கள் இருந்து சடங்கு செய்கின்றனர்.

பூப்புச் சடங்கையும் வேதியர்களே செய்கின்றனர். திருக் கடையூர் மாதேவி, மனைதனிலே திரண்டிருந்தாள். வேதி யர்கள் முகூர்த்த நாளும் லக்கினமும் பார்க்க, பந்தலிட்டுச் சடங்கு செய்கின்றனர். ஓமஞ் செய்து வேதியர்கள் மந்திரத்தை ஓதுகின்றனர். தானங்கள் மிகுதியாகப் பெறுகின்றனர்.

பரத்தமைச் சமுதாயம்

இக்கதையில் பரத்தையர்களின் பிரதிநிதியாக மாதேவி படைக்கப்படுகிறாள். மாதேவியின் கழுத்து மாலைதன் கழுத்தில் விழாதா என்று அரசன் முதல்அனை வரும் ஏங்குகிற நிலையில் பரத்தமை மிக்கிருந்தது. பரத்தையர்கள் பல்வேறு கலைகளை—அதிலும் சிறப்பாக, ஆடற்கலையைக்—கற்றல்இன்றியமையாததாய் இருந்தது.

இந்நூலாசிரியரின் காலத்தில் கழைக்கூத்து மிகவும் சிறப் பாக இருந்தது போலும். மாதேவி கழைக்கூத்தில் சிறந்த வளாகக் காட்டப்படுகிறாள்.

மாதேவிக்காக கோவலன் வாங்கித் தந்த பொருட் களைப் பார்க்கும் போது, அக்காலப்பரத்தமைச் சமுதாயத் தில் ஆடவர்கள் பரத்தையரின் அன்பைப் பெறப்பொருள் களைவாங்கிக் கொடுத்த நிலை தெரிகிறது. மாதேவிகோவ லனிடம் கேட்கும் பொருள்களின் பட்டியல் அக்காலச் சமுதாயப் போக்கைச் சுட்டுவதாக அமைகிறது. மாதேவி யின் கூற்று பரத்தையர்களின் சுரண்டல் உள்ளத்தையும் அவர்களிடத்து அடிமைப்பட்டுக்கிடந்த ஆடவரின் பேதைமையையும் தெளிவுறுத்துவதாக உள்ளது.

பரத்தையர்கள் ஆடவரை வசியப்படுத்த மருந்து கள் உபயோகிப்பதுண்டு. ஆனால் இக்கதையில் அன்பு டைய மாதேவியின் உள்ளத்தைப் பழுதுபடுத்தி, கோவலன்பால் கொண்ட அன்பை வேறுபடுத்த, தாய்க் கிழவி மருந்து பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

பரத்தையர் வாழ்வில் பொருளிழந்த ஆடவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். கோவலன் கலமரக்கால் பொன் தரமுடியா நிலையில் அதற்கு ஈடாக அவனுடைய ஆடை, அணிகலன்களைக் கழற்றிக் கொள்ளலும் சவுக் கால் அடித்தலும், கரைபுரண்டு ஓடும் காவிரியில் பிடித் துத் தள்ளுதலும் செய்கின்றனர்.

கற்புடைய மகளிர்

கற்புடைய மகளிரின் பிரதிநிதியாகக் கண்ணகை படைக்கப்பட்டுள்ளாள். யாராலும் செய்ய முடியாத செயலையும் பத்தினிப் பெண்ணால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்துள்ளது. காவிரின் ஊற்று நீரை அடைக்க முடியாத நிலையில் சோழன் தன் மனைவியும் கற்புடையவளுமான சுந்தரியை அழைக்கிறான். "சூரியனை நானறியேன், சந்திரனை நானறியேன்" என்னும் சோழமாதேவியின் கூற்றில் அவள் கற்புடைமை

புலனாகிறது. சூரிய சந்திரர்களைக்கூட பார்க்காத பெண்ணடிமை நிலை கற்பின் விளக்கமாகப் போற்றப்படுகிறது. பத்தினியால்தான் செயற்கரிய செயல்கள்— அற்புதச் செயல்கள்— செய்ய முடியும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் நிலவியிருக்கிறது.

பரத்தையர்களின் வீடு சென்று, உள்ள பொருளை இழந்து திரும்பி வரினும் முகங்கோணாது அழைத்து ஓம்புதல் பத்தினித் தன்மையாகக் கருதப்பட்டுள்ளது. கணவன், தனக்குத் துன்பம் நேர்ந்தபோது, மனைவியை நினைத்துத் துன்பம் நீக்கிக் கொள்ளல் இயல்பாயுள்ளது. துன்பத்தை நீக்கும் அற்புதச் செயல்கள் பத்தினித் தன்மைக்குச் சான்றாக அமைகின்றன. மற்ற நேரங்களில் ஆடவர்கள் மனைவியரை நினைப்பதில்லை. மாதேவி கோவலனை ஆற்றில் பிடித்துத் தள்ளியபோது கோவலன் கன்னகையை நினைக்கிறான். உடனே அத்திமரப் பலகை ஒன்று புணையாகக் கிடைக்கிறது. கோவலன் கள்வனா என்பதறிய, பல்வேறு சோதனைகள் நிகழ்த்தப் பெறுகின்றன. பாம்புக் குடத்தில் கோவலன் கைவிடுகையில் கன்னகையை நினைக்க, கருநாகமும் செந்நாகமும் அடங்கி விடுகின்றன. கருமலையாகவும், செந்நீர்ப் பூவாகவும் மாறுகின்றன. காய்ச்சிய மழுவைப் பிடிக்கும்போது கன்னகையை நினைத்ததால் மழு மாதுளம் பூப்போல் மாறி விடுகிறது. வேங்கையிடம் தள்ளும் போது அவன் கன்னகையை நினைக்க, அது கோவலனின் கயிற்றை அறுத்து ஒன்றும் செய்யாமல் அனுப்புகிறது. மதயானையை விட்டு இடறவைக்கும்போது கன்னகையை நினைக்க, மதயானை அவன் முன் வந்து மண்ணைப் பறித்து வெளியே கொணர்ந்து அவனை மத்தகத்தின் மேல் வைத்து உலா வருகிறது.

பத்தினியின் கற்பு கடவுளையும் ஊரையும் எரிக்கும் ஆற்றல் வாய்ந்ததாகக் காட்டப்படுகிறது. கத்தி முனையிலே காலை வைத்து தவம் செய்கிறாள் கன்னகை.

அக்கினியை நினைக்க, சொக்கனுடைய மேனியெல்லாம் தீயாயெரிகிறது. மீனாட்சிக்கு ஒன்றும் ஆகவில்லை, கன்னகையின் கற்பு, கற்புடைய மீனாட்சியை எரிக்க வில்லை. சொக்கரைத்தான் எரிக்கிறது. மதுரையையும் எரிக்கிறது. மாதேவியும் வெட்டுண்ட கோவலனுக்கருகில் விழுந்து அரற்றும்போது, தன் கற்புடைமையைச் சொல்லி அழுகிறாள். கோவலன் இறந்தவுடன் அவன் சிதையில் இவளும் படுத்து உயிர் துறக்கிறாள். கணவன் இறந்த வுடன் மனைவியும் உடன்கட்டை ஏற வேண்டும் என்ற நியதி அண்மைக்காலம் வரை இருந்தமை அனைவரும் அறிந்ததே.

சகக்கழுத்திப் போராட்டம்

ஓர் ஆடவன் இரு மனைவியரைக் கொள்வதால் ஏற்படும் சகக்கழுத்திப்போராட்டம் இந்நூலில் அழகாகச் சித்திரிக்கப்படுகிறது. கோவலன் இறந்த போது விழுந்து அழுகின்ற கன்னகை,மாதேவி கோவலனை நுகர்ந்ததையும் அவனைத் தான் அடைய முடியாமையையும் சொல்லிப் புலம்புகிறாள். இறந்த கோவலன் கன்னகையால் மீண்டும் எழுந்தபோதும்,'மாதேவியோ கன்னகையோ யார்வந்தது என்று கேட்கிறான். வேங்கை மரத்தின் பின் மறைந்து நின்ற கன்னகை வெளியில் வந்து, 'தேவி கன்னகையை மாலையிட்டீர். மாதேவி ஆசையின்னும் மறக்கலையோ கோவலா' என்று சொல்லி அழுவதில் அக்காலச் சகக்கழுத் திப்போராட்டம் தெரிய வருகிறது.

இறந்த கோவலனுக்கருகிலும் போராட்டம் நடக்கி றது. கன்னகையின் காற்சிலம்பால்தான் கோவலன் மாண்டான் என்று மாதேவியும் மாதேவியின் மாலையால் தான் மாண்டான் என்று கன்னகையும் ஒருவரை யொருவர் பழிக்கின்றனர். ஒரு முனிவர் உங்கள் இருவ ராலும் தான் மாண்டான் என்று கூறிச் சமாதானம் செய்கிறார். இவ்வாறு கோவலன் கதை அக்காலச் சமுதாயத்தை அறியப் பயன்படுகிறது.

நாட்டுப்புறப் பாடலமைப்பு

இச்கதை கூத்தாக நடிக்கப்பட்டிருக்கலாம். சில இடங்களில் வசனங்களும் 'வேறு' என்னும் பகுதிகளும் விரவி வருகின்றன. இது நாட்டுப்புறப் பாடல் அமைப்பி லேயே உளளது. பாடல் முழுவதும் பேச்சு வழக்கிலேயே இருக்கிறது. வட்டாரப் பிழைகள் மலிந்துள்ளன. ளகர, ழகர வேறுபாடுகள அதிகமாக உள்ளன. 'இனிக் கேழும்' 'கண்ட கனா கேழுமென்றாள்' என இவ்வாறு ளகரத்திற் குப் பதில் ழகரம் பயின்றுவருகிறது. 'கொல்லனுட மனை' 'பெத்தெடுத்த' முதலிய வழக்குச் சொற்கள் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.

சில சொற்கள் காரணமில்லாமல்—பொருத்தமில்லா மல்—பயின்று வருகின்றன. 'நல்ல' என்ற சொல்லானது 'செட்டி நல்ல பெண்ணாள்' 'வேசியர் நல்ல தெருத் தனிலே' 'தண்ணி நல்ல தாக மல்லோ,' என இவ்வாறு 'நல்ல' என்பது அசைச்சொல் போல பயின்று வருகிறது. ''வீரமுளை பொற்சிலம்பை", 'வீரமுள்ள தட்டானை 'வீரமுள்ள மழுவால்',என்று 'வீரமுள்ள' என்ற சொல்லும் பயின்றுவருகிறது. 'சில்லென்று பூத்ததொரு செடியோ வனங்கடந்தான்' என்ற தொடரும் பயின்றுவரும் பகுதியாகும்.

நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் பரவலாகக் காணப்படும் பந்தலிடுதல், திருமணம் செய்தல், ஒப்பாரி பாடுதல் முதலிய பகுதிகள் இநநூலிலும் அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது.

நிறைவுரை

ஏட்டுச் சுவடியில் உள்ள இக்கதையானது சிலப்பதி காரக் கதையைத் தழுவியதாயினும் பல வேறு மாற்றங் களைப் பெற்றுளளது. இவ்வாசிரியர் புகழேந்திப் புலவர் எழுதியதாகக் கருதப் பெறுகின்ற கோவலன் கதையிலிருந் தும் நிகழ்ச்சிகளை எடுத்தாண்டுள்ளார். சிலம்பின் வழி

வந்த பிற நூல்களில் இல்லாத பல நிகழ்ச்சிகள் இக் கதையில் காணப்படுகின்றன. இக்கதை சமுதாயத்தைப் படம் பிடிக்கும் காலக்கண்ணாடியாக விளங்குகிறது. வட்டார வழக்குச் சொற்களைக் கொண்டு மொழிநூல் ஆய்வுக்குப் பயன்படுவதாகவும் உள்ளது. இவ்வாறு இக்கதை பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

கேரளத்தில் வழங்கப்படும் பிற கதைகள்

கேரளத்தில் வழங்கும் நாட்டுப் பாடல்கள் பலவற்றி லும் கண்ணகியின் கதை பல்வேறு மாறுபட்ட வடிவங் களிலும் கூறப்படுகின்றன. இவை குறித்து மங்களூர் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராக இருக் கும் கே.கே.என். குரூப் 'கேரள நாட்டார் பாடல்களில் கண்ணகி மரபு" என்ற கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். (ஆராய்ச்சி இதழ் ஏப்ரல் 1983) இதில் அவர் "கேரளாவில் ஸ்ரீகுரும்பா, பத்திரகாளி, நல்லம்மா, மணிமங்காபோன்ற பெண் தெய்வங்களைத் தொழுவதற்காகப் பாடப்பட்ட பல நாட்டார் பாடல்களில் கண்ணகி புராணத்தின் செல் வாக்கு உள்ளது. ஸ்தல வேறுபாடுகளுடன் கூடிய இந்த வெவ்வேறு பெண் தெய்வங்கள் இந்தப் பகுதியில் காளி அல்லது சக்தி வழிபாட்டு முறையுடன் ஒன்று கலந் துள்ளன" என்று எழுதி விட்டு, இந்த மரபுகளைப் பற்றிக் கூற வரும்போது, அத்தகைய பாடல்களில் கண்ணகி கதை வெவ்வேறு வடிவில் இடம் பெற்றிருப்பதையும் ஆங் காங்கே சொல்லிச் செல்கிறார். கொல்லத்துக்குத் தெற்கே வழக்கிலுள்ள தோட்டப் பாட்டு என்ற நாட்டார் பாடலின் இரண்டாம் பகுதியில் கண்ணகியின் கதை காணப்படுகிறது.

வடகேரளப் பகுதியில் பகவதி, துர்க்கை, மாரியம்மா, நாககாளி போன்ற தெய்வங்களின் கோயில்களில் பாடப் படும் ஒரு பாட்டின் ஒரு பகுதி 'சிலம்பு கதா' (சிலம்பின் கதை) எனக் கூறப்படுகின்றது. இக்கதையில் சிலம்பு கூறப்

படவில்லை. காளியாக அவதரித்த கண்ணகி கொலை யுண்ட கணவனைத் தேடிச் சென்று, அவனுடைய இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து அவனோடு பேசினாள் என்று கோவலன் கதையில் கூறப்படும கதையின் சாயல் இதிலும் இருப்பதைக் காண முடிகிறது.

வடகேரளத்திலும் தீயர் சமூகத்திடையே குரும்பாளன்ற தெய்வம (பெரியம்மைக்குரிய தெய்வம்) பற்றி வழங்கி வரும் பாடல்கள் ஒன்றில், கோவலன் கண்ணகி என்ற பெயர் குறிப்பிடாவிட்டாலும் இக்கதை வேறொரு வடிவில் வழங்கி வருகிறது. இப்பாடலில் கண்ணகியே கோவலனிடம் சிலம்பு விற்று வருமாறு கூறுகிறாள். கோவலன் சிலம்பு விற்க மறுப்பதும் பின் உடைகளைக் கேட்பதும் புதுமையானது. பாண்டியனின் மனைவி கோவலனை விரும்பினாள் எனல் பொருந்தாது என நினைத்ததால் மனைவிக்குப் பதிலாக இளவரசியாக மாற்றப்பட்டுள்ளான். அவளைஅரசன் கிணற்றில் தள்ளுவதும் புதுமையானது. கண்ணகி இறந்த கணவனைஉயிர்ப்பித்து இறுதிவரை அவனுடன் மகிழ்ச்சியாக வாழ்வதாகக் காட்டுதல் இந்நூலில மட்டுமே காண முடிகிறது. இந் நூலில் மதுரை எரிக்கப்படவில்லை என்பதும் குறிக்கத் தக்கது. கோவலன் மழுவால் வெட்டப்படாமல் தூக்கில் போடப்படுதலும் தூக்கு மரத்தைச் செய்த தச்சனைக் கண்ணகி பழி வாங்குதலும் வேறு கதைகளில் காண முடியாதது.

இவ்வாறு பாடப்படும் இன்னொரு பாடலிலும் கோவலன் கண்ணகி கதையின் சாயல் தென்படுகிறது. தன் நண்பனுக்காக உதவ விரும்பும் பெண் தெய்வத்தின் கணவன் ஒருவன்சூதாட்டக்காரிகளின் வீட்டில்பொருளை இழக்கிறான். அப்பெண் தெய்வம் பிச்சைக்காரியின் வேடம்தரித்து அப்பெண் வீட்டிற்குச் சென்று சூதாடி வெற்றி பெறுகிறாள். பணத்தையும் நகைகளை யும் மீண்டும் பெறுகிறாள். அந்தக் குடும்பத்தை அழிக்

கிறாள். இக்கதை கோவலன் கண்ணகி கதையுடன் முற்றி லும் மாறுபட்டுள்ளது என்பது குறிப்பிடத் தகுந்தது. (திரு ரகுநாதன், இளங்கோவடிகள் யார்? ப.189 –196)

அச்சில் வெளிவந்துள்ள கோவலன் கண்ணகி கதை களைத் தவிர, வாய்மொழி வழக்காகவும் அவர்களது கதை தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் பலவாறு வழங்கப் பட்டு வருகிறது. எடுத்துக் காட்டாக, கனடா நாட்டில் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் மனித இயல் மற்றும சமூக இயல் பிரிவில் துணைப் பேராசிரியையாக இருக்கும் டாக்டர் குமாரி பிரெண்டா இ பெ பெக். என் பவர் சிலப்பதிகாரம், கோவலன் கதை ஆகியவற்றோடு கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஓலைப்பாளையம் என்ற ஊரில் சவரத் தொழிலாளியான இராமசாமி என்பவ ரிடம் சுமார் எட்டு மணி நேரம் வாய்மொழியாகக் கேட்டு ஒலிப்பதிவு செய்த "கோவலன் கதையையும்" சேர்த்து ஒப்பு நோக்கியுள்ளார். (The Story of a Tamil Epic. (Severel) Versions of Silappadikaram compared— Brenda. E F. Beck. Journal of Tamil sutdies September 1972 P.23 –38) இந்தக் கதையிலும் கோவலனுடைய முற் பிறப்புக் கதை, கோவிலன் கதையில் கூறப்பட்டுள்ளதை ஒத்தே உள்ளது.

இக்கதையில் பொற்கொல்லன் கோவலனைத் திருடன் என்று கூறியதை அரசன் நம்ப மறுத்தபோது, அவன் கோவலன் அரசியையே காதலிக்க முற்பட்டான். என வேறொரு பொய்யைக் கூறுகிறான். இது அர சனுக்குப் பெருங்கோபத்தை மூட்டுகிறது. இதனாலேயே அவன், கோவலனுக்கு மரண தண்டனை வழங்குகிறான் இந்தக் கதையில் மாதவியே கோவலனுக்குச் சிதைத்தீயை மூட்டி அதில் அவளும் குதித்து உடன்கட்டை ஏறுகிறாள். கண்ணகி அவர்களின் அஸ்தியை வைகையில் கரைக் கிறாள். இந்தக் கதையில் கண்ணகி தன் கணவனுக்கு ஈமச்

சடங்குகளைச் செய்து முடிப்பதோடு கதை முடிகிறது. அவள் தெய்வமாக மாறி எல்லோராலும் வணங்கப்பட்டதாகக் கதையில் கூறப்படவில்லை. இந்தக் கதையைச் சொன்னவரின் மூதாதையர்களுக்குக் கண்ணகியே தனது கதையைக் கூறியதாகவும் கூறப்பட்டுளளது. (மேற்கோள், சி.ரகுநாதன் இளங்கோவடிகள்யார்? ப.182—186)

கேரளாவில் செட்டியார்கள் என்ற சாதியினர் உள்ளனர். மாகி என்ற ஊருக்கு அருகிலும், நெல்லிச்சேரியிலும் இவர்கள் உள்ளனர். இவர்கள் மலையாளமே பேசுகின்றனர். இவர்களுக்குத்தமிழோ பிறமொழிகளோ தெரியாது. தமிழ் சிறிதும் தெரியாத இந்தச் செட்டியார்கள் மலையாள எழுத்தில் தமிழ் மந்திரத்தை எழுதி வைத்து அதை விஷாரிகாவு உற்சவ ஊர்வலத்தில் சொல்லுகின்றனர். இந்த மந்திரப் பாட்டில் கண்ணகியின் கதை வழங்குவது மிகவும் வியப்புக்குரிய செய்தியாகும். இப் பாடல்களில் பிழையிருப்பினும் புரியும்படியாகவே அமைந்துள்ளன. இப்பாடலில் கண்ணகியைக் கண்ணகி அம்மன் என்று குறிக்கப்பட்டுள்ளது. பாண்டியன்நெடுஞ்செழியன் நீதியரசன் எனப்படுகிறான். இப்பாட்டில் பகவதியாக கண்ணகியின் கோயில் இருக்கும் முக்கிய ஊர்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இந்தப் பாடலில் கண்ணகியின் வருணனை காணப்படுகிறது. கண்ணகி கதையைக் கூறும் இந்தப்பாட்டு இன்றும் மந்திரமாகச் செட்டியார்களால் பாடப்படுவதாக பி.எல்.சாமி அவர்கள் "தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு" என்னும் நூலில் குறிப்பிடுகிறார் (ப. 104—109)

கேரளச் செட்டியார்களிடையே கண்ணகியின் கதையொன்று வழங்குவதாகவும் பி.எல்.சாமி குறிப்பிடுகிறார். இக்கதை பெருமளவு தமிழ் நாட்டில் வழங்கப்படும் வட்டபுரியம்மன் கதையில் கூறப்படும் 'கோவிலன் கதை' யாகவே இருக்கிறது. இதில் கோவலன் விஷாரியாகக் (பாம்புப்பிடாரன்) கூறப்படுகிறான். பாண்டியமாதேவி

யின் சிலம்பைக் கருடன் தூக்கிச் செல்கிறது. ஆனால் வஞ்சிப்பத்தன் திருடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (பி.எல். சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு) (ப. 109—112).

சோழநாட்டில் பிறந்த கண்ணகி, பாண்டிய நாட்டிற்குச் சென்று கணவனைப் பறிகொடுத்து, சேர நாடு சென்று பத்தினித் தெய்வமானாள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. கேரளர்கள் சிறப்பாக வழிபடும் கண்ணகிக் கோட்டம் கேரள நாட்டைச் சேர்ந்ததா, தமிழ்நாட்டைச் சேர்ந்ததா என்ற போராட்டம் தொடர்ந்து நடந்து வருகிறது. ஆனால் கண்ணகி எல்லா நாக்கும் உரியவள் என்பதை நாம் கேரள நாட்டில் வழங்கப்படும் கண்ணகி கதைகளால் உணரலாம்.

வைசிய புராணம்
(சூடாமணிப் புலவர்)

திரு சிதம்பர ரகுநாத அவர்களுடைய இளங்கோ வடிகள் யார் என்னும் நூலில் வைசிய புராணச் சுருக்கம் கொடுக்கப்பட்டுள்ளது (பக். 159—165) கோ. இராஜகோபாலப்பிள்ளை அவர்கள் பதிப்பித்த வைசிய புராணத்தையொட்டி இக்கதைச் சுருக்கம் கூறப்படுகிறது. இதை இயற்றிய சூடாமணிப் புலவர் தமது பாயிரத்தில் வைசிய புராணம் காசியப்ப முனிவரால் வடமொழியில் இயற்றப்பட்டது எனவும் அதனைத் தான் தமிழில் இயற்றித் தருவதாகவும் கூறுகிறார். இந்நூலில் புகழ்பெற்ற 38 வைசியர்களைப் பற்றிய கதைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் 32-வது சருக்கமாக இடம் பெற்றுள்ள "மாசாத்து வாணிபன் சிலபபதிகாரப பெற்ற சருக்கம்" என்ற தலைப்பில், 51 விருத்தங்களில் கண்ணகியின் கதை கூறப்பட்டுள்ளது. இக்கதையின் நூலாசிரியர் சிலப்பதிகாரத்தையும் புகழேந்திப புலவரின் கோவிலன் கதையையும் படித்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. அதனால்

தான் இந்நூலின் கருத்துகள் சிலப்பதிகாரத்தோடு பெரிதும் ஒத்தும், சிறிதளவு கோவிலன் கதையுடன் இயைந்தும் காணப்படுகின்றன.

வைசிய புராணம் (வேறொரு கதை)

வைசிய புராணம் என்ற பெயரில் வேறொரு கதையும் வழங்கப்படுகிறது. இந்நூலின் ஆசிரியரும் சூடாமணிப் புலவரே. இந்நூல் கோளூர் கண்ணாயிர செட்டியார் குமாரர் முத்துச் செட்டியார் கேட்டுக் கொண்டபடி விச்சூர் வித்வான் தாமோதர முதலியாரால் கையேட்டுப் பிரதிகளைக் கொண்டு சுத்த பாடமாக்கித் தரப்பட்டு அவருடைய சிட்சியராகிய தஞ்சைமாநகரம் அநுளப்ப முதலியாரால் கல்விக்கூட அச்சுக்கூடத்தில் பதிக்கப் பட்டது' என்ற குறிப்பு காணப்படுகிறது.

இந்நூலில் விநாயகர், பராபரவஸ்து, சுப்பிரமணியன் பரமசிவன், நெடுமால், உமையவள், இலக்குமி, காளியம்மன், சரஸ்வதி ஆகியோர்க்கு வணக்கம் கூறப் படுகிறது. இதில் மாசாத்து வாணிபன் சிலப்பதிகாரம் பெற்ற சருக்கம் என்ற பகுதியில் கோவலனின் கதை ஓரளவு கூறப்படுகிறது.

"வாராழி சூழுலகெண் மாசாத்து வாணிபனார்
பேராரர் பெருங்குடியில் வாணிபன் றன்பெய் வளையைச்
சீரான நூனெறிய திருப்பூட்டிச் செங்கையெனுங்
வாராற் கொடையானற் கண்ணகையைக்
கைப்பிடித்தான்."

என்று இந்நூலில் கண்ணகையின் திருமணத்திலிருந்து கதை தொடங்கப்படுகிறது. இந்நூலில் கோவலன் என்ற பெயர் சுட்டப்பெற வில்லை. மாசாத்து வாணிபன் என்றே அழைக்கப் பெறுகிறான். இந்நூலிலும் மாதவி கிளிபோல் வந்து நடனமிடுகிறாள். அவளுடன் மாசாத்து வாணிபன் பதினான்கு ஆண்டுகள், மனைவியிடன் வாழ் வது போலவே வாழ்கிறான். செல்வம் தீர்ந்தபின் அவள்

அவனை (பூடி நீத்தாள்) நீக்கினாள். அவன் கண்ணகை யிடத்தில் செல்ல, அலள் 'அற்றை நாள் வரவில்லை; இற்றை நாள் வந்ததேனோ?' என்று கேட்டாள். மாதவி தன்னிடம் நடித்ததாகவும் அவன் கூறினான். அதனால் இருவரும் அழகிய சொக்கர் மேவும் மதுரைக்குச் சென்றனர். எங்கும் பெறற்கரிய நூபுரத்தை விற்கக் கோவலன் போனான். அவனிடம் கண்ணகியே ஒரு சிலம்பினைக் கொடுத்து விற்கச் சொன்னாள். அவரவர் கூறும் விலையைக் கண்டு அஞ்சி ஏங்கி, பொற்கொல்லன் இருப்பிடத்திற்கு அவன் சென்றான். பொற்கொல்லன் அச்சிலம்பைப் பற்றி மன்னவனுக்கு அறிவிக்க, அவன் அச் சிலம்பைத் தேவியிடம் கொடுக்கும்படி பணித்து "இன்ன தோர் சிலம்பு வந்த நெறி எனக்கு இயம்புக" என்று கோவலனிடம் கேட்டான்.

இதில் பாண்டியன் கோவலனை விசாரித்த பிறகே தண்டனை வழங்கியதாகக் கூறப்படுகிறது. வழுவலோன் கோவலனைக் கொன்று பாண்டியனிடம் சொல்கிறான். இவ்வாறு இக்கதை முடிகிறது.

"கொற்றவன் தமிழ் வேந்தே—கோவலன்
வரலாறெல்லாஞ்
சற்று நீருரைப்பி னென்னாச்—சங்கமூடிருந்து சாத்தன்
குற்றமொன்றற்ற செஞ்சொற் கூலவாணிபனுமின்னே
ருற்ற நாண்முதலாக—வுரைத்தனனுளவாறெல்லாம்" (34)

என்னும் இபபாடலிலிருந்து சாத்தன் இக்கதையைக் கூறியதாகவும் தெரிகிறது.

மணிமேகலைக்குப் பெயரிடுதலைப் பற்றி இந்நூலில் புதிய செய்தி கூறப்படுகிறது. மாதவி மயிலனையதன் மகவிற்கு என்ன பெயரிடுவது என்று கோவலனிடம் கேட்க அதற்குக் கோவலன்,

"பொது மடந்தையர்–மகவினுக்கொருவர் பேர் புகலி
லது மொழிந்தவர் - கேட்டவர் நகைசெய்வதனா
லித மதன்று நின்—மனமதற்கிசைந்த பேரிடெனாக்
கதமிகுந்த வெங்கனலென வினையெனக் கழலும்". (39)

என்று கூறுகிறான். அற்றைநாள் இரவில் குலத்தெய்வ மான மணிமேகலாதெய்வம் கனவில் தோன்றி, தன் பெயரிடுமாறு கூற அவ்வாறே அக்குழந்தைக்கு மணிமேகலை என்று பெயரிட்டு வளர்த்து வருகின்றனர்.

கோவலன் இறந்ததைக் கேட்ட மாதவி வருந்தினாள்.

"வந்துளோரிந்த வாய்மை-வழங்க மாதவி நொந்
தேங்கி
லெந்தநீள் புரியதென்னா மிகவுளந்தளர்ந்து வீழ்மி
யெந்த நாயக நீயன்றே யிருந்து நான்
வருந்துமல்லாற்
சிந்தையா லொருவர் மேனி தீண்டிலேனென்னைச்
சொன்னாள்" (47)

என்றுமாதவியின் உள்ளம் சிறப்பாகக் காட்டப்படுகிறது.

இந்திர விழாவில் மாதவி ஆடவில்லையென்று சித்திராபதி பழிகிறாள். இதனால் மனம்நொந்த மாதவி நாம் இனிமேல் துறவு பூண்டாக வேண்டும் என்று முடி வெடுக்கிறாள்.

"மிக்கதோர் வேடம்பூண்டு—விளங்க வெண்ணீறு
பூசித்
தக்கதோர் கிண்ணமூடு தவள வெண்ணீறு மேந்த
மைக்கனார் வீதிதோறு—மருவவே வளவன்
முன்போய்த்
திக்கெலா முனக்கா கென்றே யளித்தன
டிருவெண்ணீறு (53)

என்று மாதவியின் துறவுக் கோலம் கூறப்படுகிறது. இளங்கோவடிகள், மாதவி சமணமதம் சேர்ந்ததாகக் காட்டுவர். சூடாமணிப் புலவரோ மாதவி சைவ சமயத்

துறவியானதாகக் குறிப்பிடுவது நோக்குதற்குரியது. செட்டியார்கள் பெரிதும் சைவசமயத்தைச் சார்ந்தவர் ஆதலால் இம்மதமாற்றத்தை இவ்வாசிரியர் ஏற்படுத்தினார் எனலாம். மன்னவன் இத்துறவியைப் பாராட்டி நிலமும் பொருளும் கொடுக்கிறான். மணிமேகலை தன் தகயின் நிலை கண்டு கண்ணீருகுக்கிறாள் அதனால் மாதவி சுதமதியை அழைத்துப் பூக்கொய்ய அனுப்புகிறாள். சித்ராபதியின் தூண்டுதலால் சோழனின் மைந்தன் மணிமேகலையின் அழகில் கட்டுண்டான். அதனால் பூக்கொய்யும் போது அவனும் தொடர்கிறான். அப்போது மணிமேகலா தெய்வம் அவளை ஓரிடத்திற்குக் கூட்டிச் சென்று அமுத சுரபி என்னும் பாத்திரத்தை அளிக்கிறது. அப்பாத்திரத்தின் தன்மையையும், ஆபுத்திரனின் வரலாற்றையும் கூறுகிறது. மாதவியிடம் மணிமேகலையைக் கொண்டு சேர்க்கிறது. கற்புக்கரசியிடம் பிச்சை பெற வேண்டும் என்று கூறுகிறது. மணிமேகலை இட்ட உணவால் காயசண்டிகை என்னும் தீராப்பசிக்காரி பசிதீர்கிறாள். அவள் கணவன் மாருதவேகனால் இளவரசன் கொல்லப்படுகிறான். அவன் உடலை மன்னவன் எரியூட்டி மணிமேகலையைச் சிறை வைக்கிறான். அங்கு வந்த அறவணவடிகள் மணிமேகலையின் பழம்பிறப்பைப் பற்றிக் கூறுகிறார். மன்னவன் இதைக் கேட்டு மனைவியிடம் கூற அவள் சிறைவீடு செய்து அனுப்புகிறாள் என்று முடிக்கிறார் ஆசிரியர்.

இந்நூலில் கோவலன் கண்ணகி கதை 34 பாடல்களில் முடிந்து விடுகிறது. பின்னால் (35—104) மணிமேகலையின் கதையே கூறப்படுகிறது.

இந்நூல் சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இரு காவியங்களின் கலவையாக அமைந்துள்ளது எனலாம்.

கண்ணகி புரட்சிக் காப்பியம்
(பாரதிதாசன்)

"கண்ணகி புரட்சிக் காப்பியம்" என்னும் நூலை பாவேந்தர் பாரதிதாசனார் எழுதியுள்ளார். சுயமரியாதை இயக்கத்தின் விளைவாகத்தான் இவருடைய நூல்கள் எழுந்தன. இவ்வியக்கம் கடவுள் மறுப்பும் பிராமண எதிர்ப்பும், வடமொழி எதிர்ப்பும் கொண்டது.

புதிதாகப்படைத்தல் மட்டுமின்றித் தன் கொள்கைக்கு ஏற்ற வண்ணம் பல மாற்றங்களையும் செய்கிறார் பாரதிதாசன். இந்த நோக்கத்தில் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் கண்ணகி புரட்சிக்காப்பியமாக உரு மாறியது. தமிழகத்தில் எத்தனையோ காப்பியங்கள் இருக்க ஏன் இதை எழுதினார் என்று ஆயும்போது பாவேந்தரின் உள்ளம் புலப்படுகிறது. சிலப்பதிகாரக் காவியத்தில் தான் செங்குட்டுவனாகிய தமிழன் வடவர் களாகிய கனகவிசயர்களை வெற்றி கொண்டான். இத்தமிழரின் வெற்றி பாவேந்தரை மகிழச் செய்தது. அதன் விளைவே கண்ணகி புரட்சிக் காப்பியமாக மலர்ந்தது. இளங்கோவின் காவியக் கதையை மாற்றவிலலை, ஆனால் இவருடைய கருத்திற்கேற்ப ,பல புதிய இயல்கள் தோன்றின. பல இயல்கள் நீக்கப்பட்டன.

இந்நூலில் 95 இயல்கள் (281 பாடல்கள்) உள்ளன. ஒவ்வொரு இயலுக்கும் முன்னுரையும் பாடல்களுக்குப் விளக்கவுரையும், குறிப்புரையும், தரபபட்டுள்ளன.

இனி, கதையமைப்பின் வழியே இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திற்கும், இந்நூலுகும் இடையே காணப் படும் வேற்றுமைகள் சுட்டிக காட்டப்படுகின்றன. (இதில்

குறிக்கப்பட்டுள்ள முதல் எண் இயலையும் இரண்டாவது எண் பாடலையும் குறிக்கும்.)

கதையமைப்பு

இளங்கோவடிகள் புகாரில் கண்ணகியின் திருமணத்தில் சிலபபதிகாரக் கதையைத் தொடங்குகிறார். பாரதிதாசனார் வஞ்சியில் கண்ணகியின் இறப்பிலிருந்து கதையைத் தொடங்குகிறார். கணவனை இழந்த கண்ணகி தன் கண்ணீர்க் கதையைக் குறவர்களிடம் கூறுவதிலிருந்து கதை தொடங்குகிறது. மூன்று இயல்வரை பதிகத்தைக் கூறும் ஆசிரியர் நான்காம் இயலில்தான் புகார்க்காண்டத்தையே தொடங்குகிறார்.

இளங்கோவின் கண்ணகி, மாதவியைப் பற்றி ஓர் இடத்தில் கூட தெளிவாகக் குறிக்கவில்லை. பாவேந்தரின் கண்ணகி மாதவியிடம் காழ்ப்புணர்ச்சி கொண்டவளாக இருக்கிறாள். அதனால்,

> "முலை தோன்றி முற்றாமுன் தொட்டுச்சென்றோன்
> முறையில்லாளிடம் இருந்தான்" (1:2)

என்று தன் கருத்தை இயல்பாய் வெளிப்படுத்துகிறாள்.

> "...என் காதல் நோய் மருந்தை
> இருதுண்டாய்க் கண்டவள் நான் வாழேன்" (1:3)

என்று கோவலன் இறப்பையும் தன் வேதனையையும் வெளிப்படுத்துகிறாள்.

இளங்கோவடிகள், இந்திரவிமானத்தில் தேவர்கள் வந்து கண்ணகியை அழைத்துச் சென்றதாகக் காட்டுகிறார். அறிவுக்கொவ்வாத இந்நிகழ்ச்சியைப் பாவேந்தர் மாற்றியமைக்கிறார். கண்ணகி தன் கதையைக் குன்ற வாணர்களுக்குக் கூறியவுடன் இளங்கொடி கொழுகொம்பு அற்று வீழுவதைப் போல் வீழ்ந்து இறக்கிறாள். கண்ணகியின் உடலைப் புதைத்தலாகிய அறத்தைக் குன்றவாணர்களே செய்கின்றனர். குன்றக் குறவர்கள்

அரசனை வாழ்த்துவதோடு 'என்றைக்கும் தமிழ்வாழ்க' என்றும் வாழ்த்துகின்றார்.

ஆசிரியர் கோவலன்கண்ணகியின் திருமணத்தைக்கூறுகிறார். தமிழ் உணர்வை — தமிழ்ப்பற்றை —உணர்த்துவதற்கென்றே சேந்தனார் என்ற ஒரு புதிய பாத்திரத்தை ஆசிரியர் அமைக்கிறார். சிலப்பதிகாரத்தில் கண்ணகி கோவலன் திருமணம் களவின் வழிவந்த கற்பா, இல்லையா என்பது விவாதத்துக்குரிய ஒன்றாக அமைந்துள்ளது. பாவேந்தரின் நூலில் மணமக்களின் தந்தையர் இருவரும் மணம் பேசும் போது சேந்தனார் என்னும் ஊர்ப் பெருமக்களில் ஒருவர் எழுந்து, களவின் வழிவந்த கற்பு மணத்தைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

பாவேந்தர், தன்னையே சேந்தனார் என்ற பாத்திரமாக அமைத்தாரோ என்று கூறும்படியாக அமைந்துள்ளது. இத்திருமணத்திற்குக் காரணமான ஆரியன் நடுநடுங்கி வாய்திறந்து தமிழ்குலைக்கத் தொடங்குகிறான். அவனுடைய கூற்றைப் பாவேந்தர் உரைப்பது நகைச் சுவையைத் தருகிறது. ஆரியர் பால் ஆசிரியர்க்கு உள்ள வெறுப்புணர்வையும் காட்டுகிறது.

சிலப்பதிகாரம் ஆரியர் மணவினையைக் குறிக்கிறது. ஆரியரையும் அவர்தம் மணவினையையும் எதிர்க்கும் பாவேந்தர் சேந்தன், வாயிலாக, அரிய மண எதிர்ப்பைக் குறிப்பிடுகிறார். இப்பகுதியில் ஆரியரைக் கடுமையாகத் தாக்குகிறார் கவிஞர். ஆரியர்களின் தேவையில்லாச் சடங்கு முறைகளையும், அலை காலத்திற்கேற்ற முறையில் மாறுவதையும் குறிப்பிடுகிறார். (5 : 15) இவ்வாறு பாவேந்தர் புரோகிதர்களின் போலித்தனத்தை அம்பலப் படுத்துகிறார்.

கண்ணகி கோவலனின் திருமணத்தில் மக்கள் பழந் தமிழ்ப் பண்ணைப் பாடிக் கொண்டே செல்கின்றனர்.

"மணிக்குவியல் மீதிலொரு மலர்முகத்தில்
வந்துவந்து வழுக்கிவிழும் இரண்டுகண்கள்" (6:18)

என்று கண்ணகி கோவலனின் காதல் உள்ளம் புலப் படுத்தப்படுகிறது.

பாவேந்தர் எட்டாம் இயல் முழுவதும் திருமணத் திற்கு வந்தவர்களின் பட்டியலைக் குறிக்கிறார். வந்த வர்கள் அனைவரையும் தமிழ்ப் பெயர்களின் மூலம் தமிழர்களாகக் காட்டுகிறார். மண விருந்தை இரண்டு இயல்களால் விவரிக்கிறார். (9, 10) இளங்கோவடிகள் திருமண விருந்தைக் குறிப்பாகக் கூட கூறவில்லை. சுவை யுணவில் விருப்பம்மிக்க பாவேந்தர் தன் ஆசைதீர விருந் துணவை விவரித்துள்ளார் எனலாம்.

> "பாங்கெல்லாம் புதுப் பாங்கென் பான்ஒருத்தன்
> வடையினிலே நெய் ஒழுகிற் றென்றான் திண்ணன்
> நெய்யினிலே வடை ஒழுகிற் றென்றான் வேங்கை
> குடத்தளவு முக்கனியா என்றான் முத்தன்
> குண்டான் தேனா அதற்கே என்றான் எட்டி" (10:28)

என்று விருந்தினர்களின் வாயிலாக விருந்தின் பெருமையைப் புலப்படுத்துகிறார்.

இளங்கோவடிகள் மனையறம் படுத்த காதையிலும்- விருந்தின் புறந்தருஉம் பெருந்தண் வாழ்க்கையைக் கூறும் போது விருந்தோம்பும் திறனைக் குறிக்கவில்லை தமிழர் களின் விருந்தோம்பற் சிறப்பை விளக்குவதற்காகவே பாவேந்தர் இயல் 12ஐ படைத்திருக்கிறார்.

கண்ணகி நகைமுகம் இழந்ததற்கு வருந்தும் மாமன் மாமியைக் காட்டுகிறார் இளங்கோவடிகள். மனையறம் படுத்த காதையில் கண்ணகியின் சமையல் திறனைக் காட்டாத அடிகளார், கொலைக் களக் காதையில் அவளுடைய கடைசி உணவு சமைத்தலை விளக்கமாகக் கூறுகிறார். அவள் விருந்தோம்பும் திறனையும் கூற வில்லை. "விருந்து எதிர் கோடலும் இழந்த என்னை" என்று கண்ணகி வருந்துவதாகக் காட்டப்படுகிறது.

இந்நூலிலோ கோவலனின் பாட்டைக் கூடக் கேட்காமல் கண்ணகி பாகற்காய் கூட்டுமுறைசெய்கிறாள் கோவலன் "என்பாட்டைக் கேட்டலிலும் விருந்திற்குக் கூட்டுச் செய்தல் இனியதோ? கிளத்து" என்றான், கண்ணகியோ,

"பாட்டினுக்கும். நம் காதல் கூட்டினுக்கும்
பாகற்காய் கூட்டுமுறை இனிதே என்கிறாள். (12,34)

நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு உணவு சமைக்கிறாள் கண்ணகி. விருந்தினரில் ஒரு முதியோள் கால் நோய் என்றவுடன் ஓடிப்போய் கால் பிடிக்கிறாள். மாமியார் என்பதையும் அறியாமல் விருந்தினராகவே உபசாரம் செய்கிறாள். மாமியாருக்கும் தெரியாத உணவு வகைகளை இவள் செய்தமையைப் பாராட்டுகிறாள் மாமியார்.

"தோல் பிடித்தும் விதை முதிராப் பயற்றங் காயைத்
துவட்டு முறை எவன் கற்றாய்! தாயூட் டிட்ட
பால் பிடித்த கறைமாறா இதழி னாளே!
பாங்கடி நின் மனை யறந்தான் மகிழ்ச்சி" (13:37)

என மாமியார் மெச்சும் மருமகளைக் காட்டுகிறார். நாடக உத்திக் கேற்ற முறையில் ஆசிரியர் இப்பகுதியில் அமைத்திருக்கிறார். கண்ணகி கோவலனுடன் மாமியார் சென்று வணங்கியவுடன், அவர்

தென்னகத்துப் பண்பாட்டுப் பொன் விளக்கைக்
குன்றிலிட்டீர்! நன்றாக வாழ்க நீவீர்" (13:34)

என்று வாழ்த்துகிறார்.

14 ஆம் இயலில் தான் முதன் முதலாக ஆசிரியர் மாதவியை அறிமுகப்படுத்துகிறார்.

பாலிரித்த இலக்கணமோ குழலோ யாழோ
பைந்தமிழோ நன்னிலவோ யாதோ" (14:40)

என்று கண்டவர். விரிக்கும் படியாக மாதவி ஆடுகிறாள். மன்னவனும்,

"வையத்துக் கொரு புதுமை ஆகும் என்று
பிழைபாட்டு வடவர்களும் பேச லானார்" (14:41)

என்றும்

"அயலார்பால் கண்டவெலாம் சுண்டைக் காய்கள்
அரிவையால் பெற்றது தேன் வாழையாகும்."
(15:43)

என்றும் புகழ்கிறான்.

இளங்கோவடிகள், மாதவியின் அரங்கேற்றத்தில் கோவலன் வந்ததாகக் காட்டவில்லை. கடைத் தெருவில் பச்சை மாலை வாங்குவதாக அவன் காட்டப்படுகிறான். இந்நூலிலோ மாதவியின் நடனம் கண்டு அவள் பின்னாலேயே செல்கிறான்; கடைக்கண் பிச்சை ஈவாளா எனக் கிடந்தான், ஈந்தாள்; ஏற்றான்; இரண்டுள்ளத் திறப்பு விழா இதுவாம் என்று பாவேந்தரே மகிழ்ந்து கூறுகிறார். இருவரும் காதலில் கட்டுண்டதை,

"கண்ணைக்கண் மனத்தைமனம் கன்னம் வைக்கும்
கதை முடிந்து போனவுடன்." (17:50)

என்று குறிக்கிறார் ஆசிரியர். அவர்களுடைய வாழ்க்கை

"காதற்பாட் டேயன்றிப் பிறபாட் டில்லை
கட்டிலிலே உண்பதன்றி இறங்கல் இல்லை
மோதல்வரக் காரணமே இருந்த தில்லை
முந்துநகை இதழுக்குள் மறைந்த தில்லை
ஈதலில்லை ஏற்றலில்லை இன்பப் பொய்கை
இறங்கினோர் கரையேறும் நினைப்பே இல்லை"
(19:55)

என்று படம் பிடிக்கப்படுகிறது.

கோவலனின் பிரிவில் கண்ணகியோ, "தன் பாற்பொங்கலை யிழந்த உழவனைப் போல்" தளர்வுறுகிறாள். "செந்தமிழ் தான், மாப்புலவர் இழப்பின் உயர்விழத்தல் போலே" இருக்கிறாள்.

இளங்கோவடிகள் இந்திர விழாச் சிறப்பை இந்திர விழவூரெடுத்த காதையில கூற, பாவேந்தர் ஆறு இயல் களில (20-25) இந்திர விழாச் சிறப்பினை எடுத்துக் கூறுகிறார். "காளைக்கு நாளெண்ணிக் காத்திருக்கும் காதலி போல், இனிப்பான பதநீர் தென்னம்பாளைக்குக் காத்திருக்கும் ஊரார் போல்" ஆவலோடு மக்கள் எதிர் பார்க்கும் இந்திரவிழா வருகிறது. 'நாளங்காடியைக் கால் நடையாகக் கண்டுவர ஓராண்டாகும் மகளிர் சிறப்பான ஆடை அணிகலனைப் பூணடு, வேந்தனை மனமார வாழ்த்திப் பின்னர் விருந்தாடு உண்கின்றனர்.

கண்ணகியின் வீட்டில் தேவந்தி என்னும் பார்ப் பனதி, கண்ணகிக்கு இன்னலின் மேல் இன்னல் விளைக் கும்படியாக, சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகியவற்றில் மூழ்கும்படியாகச் சொல்கிறாள். 'பீடன்று' என ஒரே வார்த்தையில் மறுமொழி கூறும் இளங்கோவடிகளின் கண்ணகியினின்றும் பாவேந்தரின் கண்ணகி மாறுபடு கிறாள். தேவந்தியின் சொற்கேட்டு (கொதித்தெழும் பாவேந்தரைப போல்) கண்ணகியும் கொதித்தெழுகிறாள்.

> "தெய்வமெனில் நலஞ்செய்யும் என்கின்றாய் நீ
> தெய்வத்தைத் தொழவேண்டும் என்கின் றாய் நீ
> தெய்வமென நீசொல்லும் பொருள்எங் கேயோ
> திரைமறைவில் இருப்பதெனச் சொல்லு கின்றாய்
> மெய்வைத்த தமிழர்களின் ஒழுக லாற்றை
> மிகச்சிறிதும் அறிகிலாய் ஆரி யர்தம்
> பொய்வைத்த வாழ்க்கையினை நன்றே என்று
> புளுகுவார் புளுகல்லால் ஏதும் காணாய்" (28 : 83)

என ஆரியர்களின் தெய்வ நம்பிக்கையைப் பழிக்கிறாள். (28:84) கோவல் மனப்பார்ப்பனத்தியைப் பழித்துரைக் கிறாள் கண்ணகி. (28:84) வடவருக்கும் ஆரியருக்கும் இடையே உள்ள வேறுபாடும் இங்கு வெளிப்படுகிறது.

கானல்வரிப்பாட்டில் மாதவியிடம் மனம் வேறுபட்ட கோவலன் கண்ணகியிடம் திரும்பி வருகிறான். இருவரும்

மதுரை நோக்கிச் செல்கின்றனர். தமிழ்ச் சான்றோர் தமைக் கண்டு செம்மைநெறி இன்னதெனக் கேட்டுப் போகின்றனர். (இயல் 30)

மாங்காட்டு மறையோன் மதுரைக்குச் செல்லும் மூன்று வழியைக் கூறியபோது கவுந்தியடிகள் எதிர் மறுத்துரைக்கிறார். இளங்கோவடிகள் வைதிக நெறியை மறுக்கும் சமண நெறியைக் காட்டுகிறார். பகுத்தறிவு சார்பினராகிய பாவேந்தர் தன் கதைத் தலைவன் கோவலனைப் பகுத்தறிவு நிலையில் மாங்காட்டு மறையவனின் கூற்றினை மறுப்பதாகக் காட்டுகிறார்.

"படிவதனால் பொய்கையிலே ஐந்திரத்தைப்
படித்தநிலை வந்திடுமோ! ஆரியத்தைப்
படிப்பதனால் ஆவதென்ன? பழம் பிறப்புப்
படுபொய்யோ உண்மையோ முடிவார் கண்டார்
முடிவில் ஒன்றால் விரும்புவது கிடைக்குமென்றால்
முழுப்பொய்யை நம்புவார் உள்ளார் போலும்
நடப்பார்ப்பான் ஆரியத்தைப் பிறர் உள்ளத்தில்."
(31:94)

என்று கூறுகின்றான். மூவரும் நடந்து சென்று

"ஒழுக்கமிலாப் பார்ப்பனர் வாழ்புறத்தே" (32:95)

சேர்கின்றனர்.

சிலப்பதிகார மாதவியின் இரண்டாம் மடலைப் பாவேந்தர் காலத்திற்கேற்ற முறையில் மாற்றியமைக் கிறார்.

"பெற்றவர்கள் தம்முயிரைப் பிரிந்து போகப்
பெற்றவர்கள் ஆனார்கள் மற்றுமுள்ள
உற்றவர்கள் தாம் பெற்ற செல்வம் ஏகல்
உற்றவர்கள் ஆனார்கள் நாட்டிலுள்ள

கற்றவர்கள் எல்லாரும் அழுது பாடக்
கற்றவர்கள் ஆனார்கள் துறவு கொண்ட
நற்றவர்கள் உமைத்துறக்க ஆற்றுகில்லார்
நங்கையுடன் சென்றீரே எனைப்பிரிந்து" (33:99)

என மாதவியின் மடலைப் புதுமையாக்குகிறார்.

கோவலன், மாடலன்-கவுந்தி ஆகியோரிடம் தான் கண்ட தீக்கனாவைக் கூறுகிறான்.

"அறங்காணாப் பார்ப்பனர்கள் ஊர்ந்த ஊரில்
குடிபுகுந்தீர் அச்சத்தில் குடிபு குந்தீர்
கொள்நினைவே கனவாகும." (36:109)

என்று கூறுகின்றார் கவுந்தியடிகள்.

இளங்கோவடிகள் பாண்டியமாதேவியின் சிலம்புகள் பழுதுபார்ப்பதற்காகப் பொற்கொல்லனிடம் கொடுகக் பட்டதாகக் காரணம் காட்டுகிறார். பாவேந்தர் காலத் திற்கேற்ற முறையில் புதியமாற்றம் ஒன்றைச்செய்கிறார். கணவருடன் புணருங்கால் சிலம்பு உறுத்தும் என்று நினைத்து அதை அரசி சுழற்றிப் பெட்டியில் வைத்தாள், (39:116) என்று சிலம்பு களவாடுலதற்கான சூழ்நிலை விளக்கப்படுகிறது.

மறுநாள், கருங்கை என்னும் பொற்கொல்லனைக் காதல்த்த வஞ்சி என்ற பெயருடைய பாண்டியமாதேவி யின் பணிப்பெண், பள்ளியினில் துயிலெழுப்பும் போதில் சிலம்பு இரண்டினில் ஒன்றைக் கவர்ந்து கருங்கையிடம் கொடுக்கிறாள். பாவேந்தர் பொற்கொல்லனைக் கள்வ னாகக் காட்டவில்லை. கருங்கை, களவை மறைக்கும்படி வஞ்சிக்கு அறிவுரை கூறும் தீயவனாகக் காட்டப் படுகிறான். சிலம்பினைத் திருப்பிக் கொடுத்துவிட அவன் உள்ளம் விரும்புகிறது. ஆனால் சிலம்பு அவன் வறுமை யைப் போக்கும் என்னும் நினைப்பும் தோன்றுகிறது. இந்நூலில் அவனுடைய உள்ளப் போராட்டம் புதுமை யாகக் காட்டப்படுகிறது. வேலங்காட்டில் சிலம்பைப்

புதைத்துவிட்டு அவன் அஞ்சி அஞ்சி வாழ்கிறான். இவ்வாறு பொற்கொல்லன் பாத்திரப் படைப்பில் மாற்றம் செய்கிறார் பாவேந்தர்.

பாண்டியன் தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் பாடல் ஒன்று புறநானூற்றில் காணப்படுகிறது. இளங்கோவடிகள் பாண்டியனின் கவிதை உள்ளத்தை ஓரிடத்தில் கூடக் குறிக்கவில்லை. இக்குறையைப் பாவேந்தர் நீக்குவதோடு, பாண்டிய மாதேவியின் ஊடலுக்கும் காரணமாக்குகிறார்.

"பாட்டொன்று பாடினேன் அவைக்கண் இன்று
பாங்கிருந்தார் தம்மிலொரு பாவாணர் தாம
கேட்டொன்று நன்றென்று விரைவிற் சென்று
கிளியொன்று மொழியார்போல் கிளத்த லானார்
போட்டொன்று கொன்றாளே என்னை மன்னி"
(43:130)

என்று ஊடலுக்கு வேறு காரணம் கூறுகிறார். பாண்டியனின் கற்பின்மையை மறுப்பதோடு அவனைக் கவிஞனாகவும் காட்டிப் பாத்திரப் படைப்பை உயர்த்தி விடுகிறார் பாவேந்தர். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பாண்டியனைக் குறையுடையவனாகப் பாவேந்தரின் தமிழ் உள்ளம் காட்ட விரும்பவில்லை.

கோவலன் இறந்த பின்னும், ஊரவர்கள் பாண்டியனைப் பழிப்பதாக இளங்கோவடிகள் காட்டவில்லை. இதற்கு முடியாட்சியும் காரணமாகலாம். தமிழகத்தில் குடியாட்சி நிலவும் காலகட்டத்தில் சிலப்பதிகாரம் எழுதியவர் பாவேந்தர். அதனால், குடி மக்கள் முடி மன்னனைத் தூற்றுவதாக அமைக்கிறார்.

"வல்லான் வகுத்ததெலாம் வாய்க்கால் போலும்
வாய்மையினைக் கொன்றிடவும் வல்லான் போலும்
நல்லான் தான் என்றிருந்தோம் வேந்தன் தன்னை
நானாதான் நடுவுநிலை கோணு தற்கே!

தொல்லாண்மை இழந்தானை மதுரை அன்னை
சுமப்பாளோ பழிமூட்டை சுமப்பா ளோதான்!
இல்லான்தான் கோவலனே எனினும் அன்னோன்
இருப்பான்தான் இவ்வாட்சி தொலைத்த பின்னும்,"
(45:136)

என்று மக்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கின்றனர்.

காய் கதிர்ச் செல்வனிடம் இளங்கோவின் கண்ணகி தன் கணவன் கள்வனா என்று வினவ, அவனும் விடையளிக்கிறான்.பாவேந்தரின் கண்ணகியும் வானே! காற்றே! செங்கதிரே! என்று விளித்து, கேள்வி கேட்கிறாள். பதில் கிடைக்கவில்லை. தானே மாதரி, ஐயை ஆகியோரிடம் அழிப்பதாகக் கூறிவிட்டுச் செல்கிறாள். கண்ணகி தெருக்கள் தோறும் அழுது கொண்டே செல்கிறாள்.

"செஞ்சிலம்பே ஒன்றோடி ரண்டு கண்ணின்
முந்நீர் போய் நானிலமே செறியக் கண்டோர்
அஞ்சுவான் ஆறுபார்த் தெழுவ கைத்தாய்
எட்டுகைத் தொண்டுவளர் திசைகள் பத்தும்
பஞ்சாக்கும் வெஞ்சினத்து நுதல் நெறிப்பின்
பறக்கும் எரி யொடு மதுரைத் தெருக்கள் தோறும்"
(49:146)

கண்ணகி சென்றதாக ஆசிரியர் கூறுகிறாள். இங்குப் பாவேந்தர் சொல்சிலம்பம் விளையாடுகிறார்.

கண்ணகி கோவலன் உடலைக் கண்டு புரண்டு அழுவதாகக் காட்டுகிறார், இளங்கோவடிகள். கோவலனின் வெட்டுண்ட உடலைக் கண்டு மதுரை மாநகர மக்கள் தங்களுக்குத் தோன்றிய வண்ணம் பேசுவதைக் காட்டுவர் பாவேந்தர். பொங்குகடல் மக்களிடையே உள்ள ஒரு புலவன்,

"மண்ணகத்தின் தமிழரசன் பாண்டி யன்தான்
மதிகேடன்; கொடுங்கோலன்" (50:149)

என்பதை மக்களுச்சுக் காட்டுமொரு திண்ணிய நெஞ் சினன். இந்நாட்டில் எவனுமிலலை என்று எண்ணிச் செத்தாய் என்றான். "பாதியுடல் கண்ணகிக்கும், பாதி யுடல் மாதவிக்கும் ஆக்கினாய் என்றால் இந்நாட்டில புகுந்த சாதியை ஒழிப்பவன் வேண்டுமென்று அதற்காகத் தவங் கிடக்கும் தமிழகத்தின் குறை நீக்கச் செத்தாய் நீ என்றான்." (இயல். 50) என இவ்வாறு குடிமக்களின் கருத்துகளுக்கு மதிப்பு தருகிறார் பாவேந்தர்.

கண்ணகி பற்றி இளங்கோவின் பாண்டிய மன்னனுக் குத் தெரியாது. பாவேந்தரின் பாண்டியனோ, "கண்ணகி பெருகி வரும் கடல் போன்ற சேனையுடன் வருகிறாள். அவளை மட்டும் வரவிடு' என்று கூறுகிறான். (இயல் 54) மன்னவன் அரண்மனைக்குள நுழைந்ததும் ஒரு வழக்கறிஞரின் வாதத் திறமைதோடு,

> "கல்வனை நீர் கண்டீரோ, விற்க வந்தேன் கைச்சிலம்பை ஆய்ந்தீரோ மாசிலாதோன் விளிவனைத்தும் கேட்டீரோ ஒரு தீயான்தான் வண்டதனை ஆராயாமல் கொல்வீர் என்று விள்வதுவும் தக்கதென எண்ணிட்டீரோ."
>
> (55: 165)

என்று வாதத் திறமையோடு கண்ணகி பாண்டியனிடம் கூறுகிறாள். சிலம்பையும கொணரும்படி கண்ணகியே கூறுகிறாள் தன் சிலம்பைக் கண்டவுடன் கண்ணகியின் மனம் கொதிக்கிறது. தன்னைப் பிரிந்தது; துணைவன் கையில் சென்றது; மதுரைத் தெருவில் உலவியது; துணை யின் உயிரைப் போக்கியது; ஊரான்வோன் அரண்மனை யில் இருந்தது; மனபபுயலை எழுப்பியது; மன்னன் மாட்சி யில் வடு தோன்றச் செய்தது (56:157) என்று சிலம்பைப் பார்த்துப் பேசுகிறாள். இப்பகுதி சிலபபதிகாரத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இளங்கோவடிகள அரண்மனையிலிருந்து கொண்டு வரபபட்ட ஒரே ஒரு

சிலம்பை உடைப்பதாகக் காட்டுகிறார். பாலேந்தரோ, தன்னுடைய இரு சிலம்புகள், மன்னனின் ஒரு சிலம்பு ஆகிய மூன்றையும் உடைப்பதாகக்காட்டுகிறார்.(இயல்56)

மன்னவன் இறந்ததும் பொதுமக்களைப் பார்த்துப் கண்ணகி பேசுவது புதுமையாகும். இவ்வியல் சிலப்பதி காரத்தில் இல்லை. அரசனின் செயல் நீதியற்றது என்று அவள் வாதிடுகிறாள். அரசனுக்குத் துணை நிற்கும் அமைச்சர், படைத் தலைவர் ஆகியோரையும் அவள் கடுமையாகச் சாடுகிறாள். கூட்டத்தைப் பற்றியும் திறனாய்வு செய்கிறாள்.

"சமயப்பற் றோதிய சாதிப் பற்றோ
தந்நலப்பற் றோமற்றும் எந்தப் பற்றும்
உமியளவும் இல்லாத தமிழ்ச் சான்றோர்கள்
உதவியது சட்டம்! அதில்உள்ள வாறே
அமையும்வகை ஒருழுத்தும் தவறா வாறே
ஆட்சியினை நடத்துவோன் அரசன் ஐயோ
தமியேனின் அருந்துணையைக் கொன்று போட்டான்
சட்டம் எங்கே? சட்டநெறி நின்றதெங்கே?"

என்று பாலேந்தரின் கண்ணகி சட்டத்தையும் இடித் துரைக்கத் தவறவில்லை. (58:175)

இளங்கோவடிகள் மதுரை மாநகரத்தை அங்கியங் கடவுள் அழிப்பதாகக் காட்டுகிறார். ஆனால் இந் நூலில் தெய்வம் அழிக்கவில்லை. கண்ணகியின் புரட்சிச் சொற்கள்தான் மதுரையை அழிக்கின்றன. கண்ணகி மதுரை மாநகர மக்களை எரியூட்ட ஆவேசத்துடன் பேசு கிறாள். அதனால், இளங்கோவடிகளின் கண்ணகி பேதுற்று அவலத்தில் மூழ்குவது போன்று பாலேந்தரின் கண்ணகி அவலம் மட்டுமே உறாமல் ஆவேசமும் அடை கிறாள்.

"அரசனது விளையாட்டே சட்ட மானால்
அச்சட்ட மேநாட்டை ஆளு மானால்
அரசனவன் அதிகாரம் பரவல் ஆனால்
அந்தோ அந் தோஎன்றாள்" (59:176)

என்று அரசனின் அதிகாரத்தை இடித்துரைக்கிறாள். பார்ப்பவர்களிடத்தும் சினம் எழுப்பும் வண்ணம்,

"பெருமக்காள் என்துணைவர் பட்டதிங்கே
பெறவேண்டும்! அவரன்பு மனைவி மாரே!
இருக்கின்றீர் என்போலும் மங்கலத்தை
இழப்பீரோ! காதலின்பம் இழக்க லாமோ." (59:176)

என்று மதுரை மாநகரப் பெண்டிரின் உணர்வையும் தூண்டுகிறாள்; பூமாலையைக் களைந்தெறிகிறாள்.

இளங்கோவடிகள், இடக் கொங்கையைக் கண்ணகி பிய்த்தெறிந்ததும் தீ மூண்டதாகக் கூறுகிறார். பாலேந்தரின் கண்ணகி,

"வலது கையால் முதல் ஏந்தும் இடது கொங்கை
விம்மல் ஏன் என அதனைப் புய்த் தெறிந்தாள்."
(59:178)

இக்காட்சிகளைக் கண்ட மதுரை மாநகர மக்கள் மதுரை தான் ஏன்? வெம்மை சேர் அரண்மனை ஏன்? படை ஏன்? வீடேன்? அமைச்சகத்தின் தேவை ஏன்? என்றெழுந்து எல்லா இடங்களையும் அழிக்கின்றார். முன்னின்ற கண்ணகி புரட்சிக்காரர் என்கிறார். இதனால் தான் புரட்சிக்காரர் பாவேந்தர் சிலப்பதிகாரம் என்று இளங்கோவடிகள் அமைத்த பெயரைக் 'கண்ணகி புரட்சிக் காப்பியம்' என மாற்றியமைத்தார்.

கண்ணகி தன்தாய் வீடிருக்கும் பூம்புகாருக்கும் செல்லாமல், மதுரையிலும் தங்காமல் வஞ்சிக்குச் சென்ற தேன் என்ற ஐயம் எழுதல் இயல்பே. இதற்கு விடையளிக் கிறார் பாவேந்தர்,

"வஞ்சிக்கே செல்வேன் அன்பன்
திருப்புகழில் எனக்கும் இடம் தேடிக் கொள்வேன்
எரியுண்ட மதுரையிலே வாயில் இல்லை." (61:180)

என்று கூறுகிறாள். மதுரை எரியுண்டபோது மக்கள் புகலிடம் காணாமல் அலமந்த நிலையையும் கூறுகிறார் பாவேந்தர்.

கண்ணகி சேரநாடு சென்று, அங்கே இறந்து பட்டமையைக் குன்றக் குறவர்கள் வாயிலாக அறிந்த செங்குட்டுவன் தன் தேவியிடம் 'உன்மனதிற் பட்டதைக் கூறுக' என்கிறான். அப்போது தேவியானவள் கணவனிடம் பெறத்தக்க இனியவாழ்வைப்பெறாத கண்ணகி, தன் கணவன் ஒரே நாளில் இறந்தான் என்றாலும், கள்வனென்ற பழிச்சொல்லை, பாண்டியனைச் 'சிலம்பால் வென்று நீக்கிய திருநாளை, வாழ்த்தாமல் இருந்த நாளைத்தான் சிறுநாளாக—தீயநாளாகக்—கருதப்படும். (64:190) என்று கண்ணகியின் பெருமையைக் கூறுகிறாள். அவளுக்குச் சிலையமைக்க வேண்டியதன் காரணத்தையும் கூறுகிறாள்.

".....கண்ணகியின் அரிய செய்கை
பிழைகண்ட பிறநாட்டு மகளிர் காணத்
தெற்கண்டை வஞ்சியிலே வஞ்சியாளின்
திருவுருவக் கல்நாட்டல் நன்றே என்றாள்" (64:191)

என்று சேரமாதேவி கூறுவதிலிருந்து கண்ணகியின் சற்பு வாழ்வு மற்றவருக்குப் படிப்பினையாக அமைவது உணர்த்தப் படுகிறது.

சேரன் செங்குட்டுவன் பாத்திரத்தின் வாயிலாக ஆசிரியர் தன் கருத்தையே தெளிவுறுத்துகிறார். தேவியின் சொற்கேட்ட சேரன் நீண்டதொரு சொற்பொழிவாற்றுகிறான். கண்ணகியின் வாழ்வையும் மற்ற பெண்டிரின் வாழ்வையும் ஒப்பீட்டு முறையில் காண்கிறான்.

பாவேந்தர் நல்ல மகளிருக்கும் தீயமகளிருக்கும் இலக்கணம் வகுக்கிறார்.

''தனை அயலான் நெருங்காமல் தனைம ணந்தான்
தனைத்தீமை நெருங்காமல் தன்கு டிச்சீர்
தனைக் கெடுப்பான் நெருங்காமல் காப்பாள்
இல்லாள் (66:199)

என்று கண்ணகியை ஒத்த உயர்ந்த மகளிரின் இலக்கணம் கூறுகிறார்.

இக்கால மகளிர் சிலரின் குறைகளையும் ஆசிரியர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

''கொண்ட வன்தன் கைப்பிள்ளை பாலில்லாத
குறைதாங்க முடியாமல் செத்தான் என்றால்
கொண்டவள் தன்மார் படிச்துத் தலைவிரித்துக்
கூத்தாடிப் பாட்டொன்று நளப் பாடி
அண்டை அயல் மாதர்களை வரவேற்றுத்தன்
அல்லல் விரித் திருப்பாள்பால் இல்லாப் பிள்ளை
தொண்டைவறண் டொழிய வைப்பாள்
மன இருட்குத்
தோகையவள் கண்ணகி ஓர் சுடர்விளக்கே''
(67:198)

என்று மற்ற மகளிருக்கும் கண்ணகிக்கும் உள்ள வேறு பாட்டைப் புலப்படுத்துகிறான் சேரன்.

''புனை ஆடை அணிகுவதும் கூத்து பார்க்கப்
போவதுமே கடமை என எண்ணுகின்ற.'' (67:199)

இழிமகளிரையும் படம் பிடித்துக் காட்டுகிறார் பாவேந்தர்.

இளங்கோவடிகள் சேரனின் படைகள் சென்ற நிலையை விவரிக்கவில்லை. பாவேந்தரோ சேரர்களின் படைகள் செல்லும் நிலையை மூன்று இயல்களில் விரித்துச் செல்கிறார். (70,71,72) விருந்தோம்பலிலும், விருந்துண்ணு

வதிலும் விருப்பமுடைய பாவேந்தர், அரசரோடு போர் மறவர் எல்லோரும் சேர்ந்து விருந்துண்ணும் காட்சியை யும் காட்டத் தவறவில்லை. (இயல்-72)

கண்ணகிக்குச் சிலை வடிக்கும் சிற்பியின் திறத்தை இரு இயல்களில் படம்பிடிக்கிறார். (83,84) இப்பகுதி இளங்கோவடிகள் கூறாததாகும். தெருவில் ஒருத்தி சென்று கொண்டிருக்கிறாள். அவளை அரசி வேண் மாளும் மன்னவனும் தம் உருவை மறைத்தபடி பின் தொடர்கிறார்கள். அவர்கள் இருவரும் கண்ணகிச் சிலை வடிக்கும் சிற்பச்சாலைக்குச் செல்கின்றனர். கண்ணகியின் சிலை வடிக்கும் சிற்பியின் எதிரில், தெருவில் சென்ற மயிலனையாள் சென்றும், சிற்பி கருமமே கண்ணாக இருக்கிறான். அவன் தன் மனைவியை விடக் கலையை விரும்புவதையும் குறிக்கிறான். கலையை விரும்பும் ஆசிரியர் இப்புதிய காட்சியைப் படைக்கிறார். சிற்பியின் கைத்திறனைக் காணச் செங்குட்டுவனும் வேண்மாளும் மாறுவேடத்தில் செல்வதும் குறிக்கத்தக்கது.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுப்பதை இளங்கோவடிகளும் கூறுகிறார். ஆனால் விழாவினைச் சிறப்பிக்கும் நாட்டு மக்களின் உணர்வினை இளங்கோ வடிகள் காட்டவில்லை. மக்கள் விழாவிற்கு ஏற்பாடு செய்வதும், விருந்திற்குச் செய்யும் ஆயத்தங்களும் புதுமை யாகக் காட்டப்படுகிறது. கண்ணகி விழாவில் கலந்து கொள்ளும் அயல் விருந்தினர் தங்க, தனி ஏற்பாடும் நடக் கிறது. கண்ணகி பெருவிழாவில் கண்ணகியின் தெய்வத் தோற்றம் (சிலை) கவிதை நயத்துடன் கூறப்படுகிறது.

"பேசிக் கொண்டே யிருக்கும் இரண்டி தழ்கள்
பீறிட்டுக் கொண்டிருக்கும் அருளைக் கண்கள்
வீசிக்கொண் டேயிருக்கும் நகை மகிழ்வைக்
கூசிக்கொண் டேயிருக்கும மகளிர்க்கெல்லாம்
கொடுத்துக் கொணடே யிருக்கும் புருவம் வீரம்

ஏசிக்கொண் டேயிருக்கும் ஆரி யர்க்கே
இயம்புவது தமிழறத்தை முழுமைத் தோற்றம்."
(91:267)

என்று கண்ணகியின் தோற்றச் சிறப்புக் கூறப்படுகிறது. விழா முடிந்த பின்னும், விழாவிற்கு வந்தவர்கள் நிலையையும் ஆசிரியர் கூறத்தவறவில்லை(92).

சிலப்பதிகாரக் கதை முடிந்த பிறகும் ஆசிரியர் தம் கொள்கைக் கேற்ப சில காட்சிகளைப் படைத்துள்ளார். ஆரியர் தமிழர் போராட்டம் இங்குப் புலப்படுத்தப் படுகிறது. ஆரியர் அனைவரும் சேர்ந்து தம்முள் கூறுவ தாக ஆசிரியர் படைத்துக் காட்டுகிறார்.

கண்ணகியின் புகழை ஒழிக்கவேண்டும் என்று நினைக்கின்றனர் ஆரியர்கள். (94:278) அவர்கள் தமிழ் நூல்களை-தமிழின் சிறப்பை—அழிக்கக் கையாளும் உத்திகள் கவிஞரால் கூறப்படுகின்றன. (94:279)

ஆரியர்கள் தமிழை அழிக்கச் செய்கின்ற செயல்கள் எல்லாம் கண்ணகி வழிபாட்டால் அழிந்தனவே என்று அவர்கள் கவலைப்படுவதாகக் கூறுகிறார் ஆசிரியர். (94 ; 280)

பாவேந்தர் நிறைவுக் காட்சியை வாழ்த்துடன் நிறைவு படுத்தியுள்ளார்.

வாழியகண் ணகிகற்பு! வையமெல்லாம்
வாழிய செந் தமிழ்மாண்பு! தமிழகந்தான்
வாழிய! வாழியர் தமிழர்! யாண்டும் நன்று
வாழுகின்ற தமிழரெல்லாம் தமிழர் ஆட்சி
ஆழகடல் சூழ் தமிழ் நிலத்தில் நிலவச் செய்தல்
அறம் என்று திறங்காட்டும் தோள்கள் வெல்க!
வாழியவே புல்கயல் வில் ஒருங் கியன்ற
மணிக்கொடிதான்! வாழ்க அறம் வாழ்க நன்றே!

என்று பாவேந்தர் கண்ணகியின் சுற்புத் திறம், செந்தமிழ் மாண்பு, தமிழியக்கம், தமிழர், தமிழர் ஆட்சி, தமிழ்க் கொடி, அறம், ஆகிய அனைத்தையும் வாழ்த்தி முடிக் கிறார்.

பாவேந்தரின் தமிழ்ப் பற்று

இளங்கோவடிகள் அரசியல் பிழையாமலிருக்கவும், பத்தினியை உயர்ந்தோர் ஏத்தவும், ஊழ்வினையின் ஆற்றலை விளக்கவும் காவியத்தை எழுதியதாகக் கூற, பாவேந்தரோ,

"..... அந்தச்
சிலப்பதிகா ரப்பெருநூல் எனைஅ ழைத்துத்
தனித்தமிழில் சிலபாட்டால் அடிகள் உள்ளம்
கலப்பற்ற பசுப்பாலே யாக மக்கள்
கவிந்துண்ணத் தருக எனச் சொன்ன தாலே
சொலப்புகுந்தேன் என்தமிழர் இருந்து கேட்பார்
தூய தமிழ்ச் சுவைகண்டு வாழ்வார் நன்றே".

(இயல் 3:9)

என்று கூறுகிறார். தமிழர்களுக்காக—தமிழ்ச் சுவைகண்டு வாழ்வதற்காக—தனித்தமிழில் பாடியதாகக் கூறுகிறார் பாவேந்தர். கண்ணகியின் திருமணத்தில் பழந்தமிழ்ப் பண்தான் பாடப்படுகிறது. (இயல் 6:17) திருமணத்தில் அவையோர் தமிழில் வாழ்த்துதல் நன்று என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. வீட்டிற்கு வந்தவர்கள் செந்தமிழ் நூல் இன்பம் துய்த்து மகிழ்கின்றனர். (12:32) கோவலன் மாதவி பிரிந்ததினால் இழப்பு மற்றவருக்கல்ல; தமிழுக்கே என்று கூறப்படுகிறது. (26:78)

செங்குட்டுவன் தமிழ்ப்பற்றும், தமிழினப்பற்றும் மிகுந்தவனாகக் காட்டப்படுகிறான். குட்டுவன் பாசறை யில் இருக்கும்போது வடக்கில் வாழும் பைந்தமிழ்ப் பெரியாரை—தமிழ்மட்டும் துறவாத் துறவியரை—வர வேற்றுப் பேசுகிறான். தமிழின் வெற்றி கூறுகிறான். ஆரியரின் சிறுமையை எடுத்துக் கூறுகிறான்.

"வீசுதலை ஏழும்போதும் தமிழர் நாக்கு
வெல்க தமிழ் எனவேண்டும் எனவுணர்த்தி
ஆசையுடன் வருகின்ற ஊர்வலத்தை
அருங்கோடி வரவேற்று வாழ்க என்றான்."
(76:227)

சேரன் கனக விசயரை வென்ற வெற்றியைத் தமிழர்களின் வெற்றியாகவே கூறப்படுகிறது.

கனக விசயர்களிடத்து சேரன் செங்குட்டுவன் தமிழின் நிலைத்த தன்மையைப் பெருமையுடன் கூறுகிறான்.

"மலைஇருந்த இடமெல்லாம் கடலும் ஆகும்
பொந்து நின்ற இடமெல்லாம் மலையும் ஆகும்;
பொழில் நின்ற இடமெல்லாம் பாலை ஆகும்;
வெந்துநின்ற இடமெல்லாம் நகரம் ஆகும்;
விரிந்துநின்ற இடஞ்சுருங்கல் ஆகும் ஆனால்
செந்தமிழின் உண்மைநிலை எந்த நாளும்
சிறிதேனும் மாறாது நினைவில் வைக்க (81:240)

என்று சேரன் தமிழின் சிறப்பை ஆரிய அரசனுக்கு நினைவுறுத்துகிறான். குன்றத்துக் குறவர்கள் செங்குட்டுவனை வாழ்த்தும் போதும் 'என்றைக்கும் தமிழ் வாழ்க' என்றே வாழ்த்துகின்றனர். (4:3) இவ்வாறு ஆசிரியர் தன் தமிழ்ப் பற்றை ஆங்காங்கே கூறிச் செல்கிறார்.

ஆரியர் தமிழர் போராட்டம்

பாவேந்தருக்கு ஆரியர்பால் உள்ள வெறுப்பு இந்நூலில் நேராகவே உணர்த்தப்படுகிறது. கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள், சேரன் செங்குட்டுவன் ஆகிய அனைவருமே ஆரிய எதிர்ப்பாளர்களாகவே உள்ளனர். கனக விசயர்களை நோக்கிச் செங்குட்டுவன் பேசும் முகமாக ஆரிய எதிர்ப்புக்குக் காரணம் கூறப்படுகிறது.

"தேவரென்றும் உலப்பென்றும் ஆடுவெட்டும்
சிறுசெயலைத்தமிழ ரெல்லாம் வெறுக்கின்றார்கள்
ஆவதுற்றே ஒருமகளைப் பலர்ம ணத்தல்
அறம் என்னும் தியாரை உமிழ்கின் றார்கள்
யாவருமே பிறப்பினிலே நிகர் என் பாரை
எதிர்ப்பாரைத் தமிழரெலாம் எதிர்க்கின்றார்கள்
காவாத கொலைஞனுக்கும் கழுவாய் பேசும்
கயவர்களைக் கழுவேற்றச் சொல்வார் என்றான்"
(81.241)

என்ற செந்தூடுவனின் கூற்றில் ஆரியர்களின் புன்செயல் கள் உரைக்கப்படுகின்றன.

புகார் என்ற பெயருக்கு, இளங்கோவடிகள்,

"பதிமுழு வறியாப் பழங்குடி கெழீஇயப்
பொதுவறு சிறப்பின் புகாரே" (மங்கலவாழ்த்து 15:16)

என்று காரணம் காட்டுகிறார். பகைவர் இங்குப் புகார் என்றும், இந்நாட்டில் வாழ்பவர் பிழைப்பு நோக்கி வேறிடத்துப் புகார் என்றும் பொருள்பட அமைக்கிறார். பாவேந்தரோ,

"புண்பட்டுச் சாவஅஞ்சும் ஆரி யர்கள்
புகார் என்னும் பூம்புகார் அரசை வாழ்த்தி" (23:69)

என்று ஆரியர்கள் புகார் என்பதால் புகாராயிற்று என்று கூறுகிறார்.

கண்ணகியின் தோழி தேவந்தி இருகுண்டலங்களில் மூழ்கு என்பதால் அவள் "கோணல் மனப் பார்ப்பனத்தி" (29 : 84) என்றழைக்கப்படுகிறாள். அவளுடைய வார்த்தை களைப்

"பொய் வைத்த வாழ்க்கையினை நன்றே என்றே
புளுத்துவார் புளுகலால் ஏதும் காணோம்!" (28:83)

என்று பொய்யாகவே கூறப்படுகின்றன.

இளங்கோவடிகள் பின்னால் நேரப்போகும் நிகழ்ச்சி களை முன்னதாகவே கனவு காணல் மூலம் காட்டுகிறார். பாவேந்தர், கோவலன் கனவு காண்பதாகக் கூறுகிறாரே தவிர விளக்கம் கூறவில்லை. அதைக் கேட்ட கவுந்தி யடிகள்,

"அறங்காணாப் பார்ப்பனர்கள் ஊர்ந்த ஊரில்
குடிபுகுந்தீர் அச்சத்தில் குடிபு குந்தீர்". (36 : 109)

என்று கனவுக்குக் காரணம் காட்டுகிறார். அதனால்

"கொள் நினைவே கனவாகும் ஆத லாலே
நொடியில் இவ் விடம்விட்டு மதுரை செல்க."

(36 :109)

என்று அறிவியல் நோக்கில் காரணம் கூறி அவ்விடம் விட்டு அகலச் சொல்கிறார். தமிழ் துறவாத் துறவிகள் சேரன் செங்குட்டுவன் வடநாட்டிற்குச் செல்லுங்கால் தமிழர்களின் குறைகளைக் கேட்க வேண்டும் என்று வேண்டும்போது செங்குட்டுவன்,

"பன்றியுண்பார் கண்காணத் தமிழர் கட்குப்
பரிவொன்று காட்டுவது கடமை" (73 : 218)

என்று கூறி ஆரியர்கள்பால் தனக்கிருந்த வெறுப்பைக் புலப்படுத்துகிறான்.

மதுரை மாநகரைக் கண்ணகி எரித்த போது, அங்கிருந்தோர் சிலர் பல்வேறு இடங்களுக்குச் செல்கின் றனர். அவர்களில் ஒரு சிலர்,

"மிதித்தகிளை பிடித்தகிளை அற்றார் ஆகி
வீழ்ந்தார்கள் விலகிவாழ் ஆரி யர்பால்" (62 : 183)

சேர்கின்றனர். சிலரோ,

"குன்றேறி வாழ்ந்திடலாம் என்று சொன்னோர்
குறுக்கினிலே திரும்பினார் தீயொ ழுக்கம்
ஒன்றேறும் நாகரிவர் என்று கண்டே". (62 : 183)

உயிர் போனாலும் பரவாயில்லை என்று திரும்பி விடு கின்றனராம். அவர்கள் மற்றவரை விட்டு விலகி இருந்த தற்குக் காரணம் தீயொழுக்கமே என்று வேறு காரணம் காட்டுகிறார் ஆசிரியர். 'ஒழுக்கமிலாப் பார்ப்பனர் வாழ் புறம்' என்றது பார்ப்பனர் ஒழுக்கமற்றவர் ஆதலின் அவர்களை ஊரின்புறபபகுதியில் ஒதுங்கி வாழ்ந்த நிலையை விளக்கியபடி, (இயல் (32 : 95) என்று விளக்கமும் கொடுக் கிறார் பாவேந்தர்.

ஆரியர் எதிர்ப்பு உணர்ச்சியை ஆசிரியர் பல நிலை களில் இந்நூலில் அமைத்துள்ளார்.

1. ஆரியர்கள் உண்டாக்கிய கடவுளரையும் புராணக் கருத்துகளையும் எதிர்த்தல்.
2. இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் பகுத்தறிவிற்கு ஒவ்வாதிருப்பதாலும், அவை ஆரியத்தோடு தொடர்புடையதாதலாலும் அவற்றை அறவே நீக்குதல்.
3. ஆரியர்கள் தாங்கள் வாழ்வதற்கு ஏற்படுத்திக் கொண்ட புரோகிதச் சடங்குகளை எதிர்த்தல், எள்ளுதல்.
4. தமிழர் ஆரியர் முரண்பாட்டைக் காட்டுதல்.
5. ஆரியர்களின் சூழ்ச்சிகளை எடுத்துக் காட்டல்.
6. ஆரியர்களின் புன்மையை வெளிப்படுத்துதல்.
7. ஆரியர்களின் புன்மை வெளிப்படும் வகையில் தமிழர்களின் சிறப்பை விளக்குதல்.
8. தமிழர் வெற்றியை எடுத்துரைத்தல்.

இவ்வாறு பல நிலைகளில் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப் புலப்படுத்துகிறார் பாவேந்தர்.

ஆரியர்கள் இந்நாட்டில் நிலைபெற்றதற்கே காரணம் பல கடவுளரையும், புராணக்கதைகளையும் தமிழர் களிடையே புகுத்தியமையே என்பதனால் பாவேந்தர்

இந்நூலில் தமிழர்களிடையே விழிப்புணர்ச்சி உண்டாக வழியமைக்கிறார். சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியை நலம் பாராட்டுவது புராணச் சார்புடைய தாகக் காணப்படுகிறது. (மனை-38-52) பாவேந்தரோ,

"அழகுக்கோர் இலக்கணம் நீயோ கண்ணே!
அன்புசெய வாய்ந்தஇலக் கியமோ! என்றன்
அழல்நீக்கும் குளிர் நிழலே! இன்பப் பாவாய்!
அனைத்தும்பெற் றேனுன்னைப் பெற்ற தாலே!
தென்தமிழின் நறுஞ்சாறாய்த் தித்திப் போளே." (32)

என்று கோவலன் கண்ணகியைப் பாராட்டுவதாக அமைக் கிறார்.

இளங்கோவின் கண்ணகி பாண்டியனிடம் வழக் குரைக்கும் போது சிபிச்சக்கரவர்த்தி, மனுநீதிச் சோழன் ஆகியோர் வரலாறுகளை எடுத்துக்கூறுகிறார். பாவேந்தர் இப்புராண வரலாறுகளை நீக்கி விடுகிறார்.

இயற்கை இறந்த நிகழ்ச்சிகளை—நம்பத்தகாத நிகழ்ச்சிகளை—கூறுவதன் மூலம் ஆரியர்கள் தமிழர்களின் அறிவை மழுங்க வைத்ததை உணர்ந்த பாவேந்தர்—தந்தை பெரியாரின் பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்த பாவேந்தர்—இயற்கை இறந்த நிகழ்ச்சிகளை அறவே நீக்குகிறார். ஆதலால் இளங்கோவடிகள் கூறிய கானுறை தெய்வம் (வனசாரணி) வயந்தமாலை வடிவில் கோவலன் முன் தோன்றுதல், கவுந்தியடிகள் சாபமிட்டு வம்பப் பரத்தையரை முதுநரியாக்குதல், கண்ணகி காய்கதிர்ச் செல்வனிடம "என் கணவன் கள்வனா?" எனக் கேட்க அவன் பதிலுரைத்தல், வெட்டுண்ட கோவலன் உயிர் பெறல், கண்ணகியிடம் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறி மீண்டும் இறத்தல் கண்ணகி முலையைத் திருகி எறிந்து ஊரைத் தீப்பற்ற வைத்தல், நால்வருணப் பூதங்கள் நகரை விட்டுச் செல்லுதல், மதுராபதித் தெய்வம் முற் பிறவிக் கதை கூறல், கண்ணகி கோவலனுடன் இந்திர

விமானத்தில் ஏறிச் செல்லுதல், கண்ணகி சேரன் செங்குட்டுவனுக்குத் தெய்வக் காட்சி நல்கி வரம் தந்தருளல், தெய்வக்கண்ணகி இளங்கோவடிகளின் துறவுக்கதை கூறல் ஆகிய இயற்கை இறந்த நிகழ்ச்சி களை, அறிவுக்கொவ்வாததால், பாவேந்தர் நீக்கி விடு கிறார்.

ஆரியர்கள் தாங்கள் வாழ ஏற்படுத்திக் கொண்ட புரோகிதச் சடங்குகளை அம்பலப்படுத்துவதன் மூலம் தமிழர் வாழ்வில் விழிப்புணர்ச்சியை உண்டாக்குகிறார். அதனால் பகுத்தறிவுக் கொள்கைகளை ஆசிரியர் செங்குட்டுவனின் கூற்றில் வைக்கிறார்.

"இறந்தானுக் குதவினெனல் இருந்த போதில்
இருந்தபொதுக் குறைநீக்கல் ஆகும்; அன்றி
இறந்தானின் உடலுக்குத் தேரும் தாரும்
ஏற்பாடு செய்வதும வேறி டத்தில்
சிறந்தான்என் றெண்ணுவதும் அங்கே அன்னோன்
சீரடைய இங்குள்ள பார்ப்ப னர்க்கு
முறங்காணும் அரிசி முதல் செருப் பீறாக
முடிதாழ்த்துக் கொடுப்பதும் மடமை என்றான்."
(67: 200)

என்னும் கூற்றில் செத்த பின் செய்கின்ற வைதீகச் சடங்குகள் எள்ளப்படுகின்றன. இதன் மூலம் தமிழர் களின் செல்வம் மறைமுகமாக ஆரியர்களால் கொள்ளை யடிக்கப் படுவதும் உணர்த்தப் படுகிறது.

புரோகிதச் சடங்குகளை நீக்கச் சேந்தனார் என்னும் புதிய பாத்திரத்தைப் படைத்து திருமணச் சடங்கு முறையின் இழிவைப் புலப்படுத்துகிறார். புரோகிதனின் கூற்றின் மூலம் தமிழ்க் கொலையும் புலப்படுத்தப்படுகிறது. சடங்குகளின் புன்மை, சேந்த னார் கூற்றின் மூலம் புலப்படுத்தப் படுகிறது. புரோகிதர் களின் தில்லு முல்லுகளும் அம்பலப்படுத்தப்படுகின்றன.

இளங்கோவடிகள் சமணராதலின் கவுந்தியடிகளைச் சமணராகப் படைத்தார். கோவலனையும் சாவகநோன்பி யாகப் படைத்தார். தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் உருவாகிய பாவேந்தர் தன் பாத்திரங்களைப் பகுத்தறிவு வாதிகளாகவே படைத்துள்ளார்.

மதுரை மாநகர வழியைக் கூறும் மாங்காட்டு மறை யோனைக் கவுந்திபடிகள் மறுத்துக் கூறுவதாக இளங்கோ வடிகள் காட்டப் பாவேந்தரோ,

"மதியுடைய கோவலனும் நகைத்தா னாகி
வழுத்துவான் பார்ப்பானும் விழித்தா னானான்."
(31 : 93)

என்றும்,

"படிவதனால் பொய்கையிலே ஐந்தி ரத்தைப்
படித்தநிலை வந்திடுமோ! ஆரி யத்தைப்
படிப்பதனால் ஆவதென்ன? பழம்பி றப்புப்
படுபொய்யோ உண்மையோ முடிவார் கண்டார்?
முடிவில் ஒன்றலே விரும்புவது கிடைக்கு மென்றால்
முழுப் பொய்யை நம்புவார் உளார் போலும்!
நடப்பார்ப்பான் ஆரியத்தைப் பிறர்உள்ள ளத்தில்
நாம் நடப்போம் நடுவழியே என்றார் ஆங்கே"
(31 : 94)

என்று கோவலன் ஆரியர்களின் பொய்ம்மையை எதிர்ப்ப தாகக் காட்டுகிறார்.

தமிழர் ஆரியர் வேற்றுமை காட்டப்பட்டு ஆரியர் களின் புன்மையையும் தமிழர்களின், உயர்வையும் காட்டு கிறார் ஆசிரியர். தமிழர்களின் மணமக்களின் உளம் ஒத்த திருமண முறையும் ஆரியர்களின் அப்பன்மார் ஒப்பு தலுடன் நடக்கும் திருமண அழிவும் சுட்டப்படுகிறது. சேந்தனார், படைக்கப்பட்ட புதிய படைப்பாகும். அவர் கூற்று (4 : 11) தமிழ் ஆரிய மணச சிறப்பைப் புலப்படுத் தும். தேவந்தி கண்ணகியின் இன்னல் தீர இரு குண்டங்

களின் மூழ்கித் தெய்வம் தொழலேண்டும் என்ற போது, பாவேந்தரின் பகுத்தறிவுக் கண்ணகி இளங்கோவின் கண்ணகியைப் போல் 'பீடன்று' என்று கூறி முடிக்க வில்லை. மாறாக,

''செந்தமிழ்ச் செல்வியரின் ஒழுக லாற்றில்
தெய்வத்தை நீகண்ட துண்டு போலும்
முந்துநாள் முதல்இந்த நாள்வ ரைக்கும்
மொய்குழலார் தமக்கெல்லாம் எல்லா மாகி
வந்தோர்கள் வருகின்றோர் வருவோர் யாவர்?
வாழ்தந்தை தாயரல்லர் கணவர் ஆவார்!
நொந்துள்ள நிலைகண்டுன் தீயொ முக்கம்
நுழைப்பதுண்டோ என்னுளத்தில் இவ்வா
றென்றாள்," (28: 84)

தமிழர்களின் சிறப்பை எடுத்துக் கூறி அவர்களின் நிலையைப் புரிய வைக்கிறார் பாவேந்தர். இளங்கோவடி கள் மனையறம் படுத்த காதையில் கண்ணகி குடும்பம் நடத்தும் பாங்கைக் கூறவில்லை. கொலைக்களக் காதை யில்தான் கூறுகிறார். பாவேந்தர் மனையறம் படுத்த காதையிலேயே அச் சிறப்பைக் கூறுவது இயற்கையாக அமைந்துள்ளது. அவள் பல்வேறு கறிகளுடன் விருந்தினர் களை உண்பிப்பதும், மாமியார் என்று தெரியாதிருந்தும் முதியவளின் கால் நோய் தீரக் கால் பிடிப்பதும் ஆசிரியர் படைத்த மனையறச் சிறப்புகள். இவளின் சமையற் கலையை,

''சோற்றுக்கும் சாற்றுக்கும் கறிக்கும் எண்ணத்
தூய்மைக்கும் தாய்மைக்கும் வியந்தார் உண்டார்."
(12:35)

என்று உண்டவர் புகழும்படியாகவும்,

''பாங்கடி நின் மனையறந்தான் மகிழ்ச்சி" (13:37)

என மாமியார் மெச்சும் மருமகளாகவும், காலத்திற்கேற்ற கண்ணகியாகவும் மாற்றுகிறார் ஆசிரியர்.

தமிழர்களின் சிறப்பான — தனிப்பண்பான—விருந் தோம்பற் சிறப்பை விளக்கவே பலகாட்சிகளை உருவாக்கு கிறார் கவிஞர். அதனால்தான் திருமணத்திற்கு வந்தவர்கள் விருந்தைப் புகழ்வதை நயம்படக் குறிப் பிடுகிறார். இந்திர விழாவின் சிறப்பினைக் கூறவந்தவர் விருந்தோம்பலின் சிறப்பினைக் கூறுகின்றார். (23) போர் வீரர்களுக்குச் செங்குட்டுவன் விருந்தளித்த சிறப்பும், அவரால் கூறப்படுகிறது. (72) கண்ணகிக்கு விழாவெடுக் கும் போது வெளியூரிலிருந்து வருகின்றவர்களுக்கு வஞ்சி நகரத்தவர் அளித்த விருந்தோம்பலின் சிறப்பும் விளக்கப் படுகிறது. (86,87) இவ்வாறு ஆசிரியர் பல இடங்களில் தமிழரின் பெருமையைக் காட்ட விருந்தோம்பற் சிறப்பை கூறுகிறார்.

செங்குட்டுவனின் வடநாட்டு வெற்றியைக் குறிப்பிட வந்த ஆசிரியர் அவனுடைய படை வீரர்கள் தமிழரின் வெற்றியையும், தமிழரின் சிறப்பையும் பாடுவதாகக் கூறுகிறார்.

"தமிழர்க்குப் பகையானோர் வாழ்வு தெங்கே
தலையற்றுக் குவியாதோ ஊது சங்கே
எமைநத்திப் பிழையாதார் போவ தெங்கே?
இடருற்றுக் கெடுவாரே ஊது சங்கே!
குமிழொத்துத் திரிவாரே வாழ்வும் ஒன்றோ?
தமிழ்வெற்றித் திருநாளே வாழ்க என்றே
திசைஎட்டப் படிமீதே ஊது சங்கே." (74:220)

என்று தமிழரின்—தமிழின—வெற்றியைச் சங்கூதுவதின் மூலம் கூறுகிறார். தமிழர்களின் சிறப்பினை அறிந்து தமிழன் வீறு கொண்டு எழ வேண்டுமென்பது ஆசிரியரின் எண்ணமாகிறது.

ஆரியர்களின் சூழ்ச்சிகளைக் கூறித் தமிழர் கவனத் துடன் நடந்து கொள்ள வழிவகுக்கிறார்.

"தமிழ் ஒழுக்க வோர் இருக்கும் வரை தமிழ்ச்சீர்
தடங்கினையும் அடிமரமும் இருக்கும்; இந்நாள்
தமிழ் ஒழுக்க வேரழிந்தால் தமிழர் வாழ்வு
தலை சுவிழும் எனும் முயற்சி கைகூடுங்கால்
அமைவுடைய நெடுஞ்செழியன் நான்கு சாதி
அறம் என்றான்; நாட்டோடும் அழியச் செய்தாள்
தமிழரசி கண்ணகியைத் தொலைப்ப தெந்நாள்
தமிழ் கூடி ஆரியர் இவ் வாறு ரைத்தார்." (94 279)

என்று ஆரியர்கள் தமிழ் நூல்களை—தமிழ்ச் சிறப்பை—அழிக்கக் கையாளும் உத்திகள் கூறப்படுகின்றன. ஆரியர்கள் எவ்வாறு சூழ்ச்சி செய்து தமிழர்களின் பண்பாட்டையும், சிறப்பையும் அழித்தனர் என்பதை ஆசிரியர் அழகாகக் காட்டுகிறார். (94:278, 94:280)

தமிழர் ஆரியர் போராட்டத்தை ஆசிரியர் விளக்கிக் காட்டினாலும் இறுதியில் வெற்றி தமிழருக்கே என நிலை நாட்டுகிறார். செங்குட்டுவன் வட ஆரியரை எதிர்த்து வெற்றி கொண்டு தமிழாற்றலைப் புலப்படுத்தியமையே ஆசிரியரின் உள்ளத்தைக் கவர்ந்தது. அதனால்தான் ஆசிரியர் பழங்காவியத்தைப் புதுமைப் போக்கில் எழுதத் துணிந்தார் எனலாம். கண்ணகி கல்லுருவத்தின் முழுத்தோற்றமே ஆரியர்களுக்கு, ஒருவனுக்கு ஒருத்தியே என்னும் தமிழரின் அறத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும் என்கிறார். (90:267)

கண்ணகிக்கு உருவம் சமைக்க, கல் எடுக்க நினைத்த செங்குட்டுவனின் கூற்று சிந்திக்கத் தக்கது.

"தெற்குமலைக் கல்லைப்போல் முதிர்ச்சியில்லை
வடக்குமலை யிற்காணும் கல்லில்! ஆனால்
தெற்குமலை நம்முடைமை அதனைக் காப்போர்
செந்தமிழர் நமையிகழும் பகைவர் அல்லர்

தெற்குடைய தமிழிகழ்ந்த வடக்கர் தம்மால்
திறங்காட்டி.க் கொள்ளும்கல் சிறப்பிற் றென்றான்
மற்றுமுள்ளோர் பல்யானை இடையாட்டுக்கும்
வால்குழைக்கும் வரிப்புலியே வெல்க என்றார்
(68:202)

என்று செங்குட்டுவன் அவையிலிருந்த தமிழ்ச் சான்றோ ரின் கூற்றாகவும் கூறுகிறார். கனக விசயர் என்னும் ஆரியர்கள் தமிழைப் பழித்த போதும்,

"செந்தமிழர் திறங்காட்டா திருந்தோ மானால்
அங்கிருக்கும் தமிழ்ச் சான்றோர் நெஞ்சம் என் ஆம்
அனைத்துலகில் தமிழன்சீர் என்ஆம் என்றான்
யாங்குள்ளான் தமிழ்பழித்தான் ஆங்குச் சென்றே
அழித்துயர்க." (68;203)

என்று செங்குட்டுவன், அவையில் இருந்தோரின் கூற்றாக, கூறுவதில் தமிழரின் வெற்றித்திறன் புலப்படுத்தப் படுகிறது.

இவ்வாறு பாவேந்தர் தமிழர் ஆரியர் காழ்ப்புணர்ச் சியை ஆங்காங்கே விளக்கிச் செல்கிறார்

குடியாட்சி மலர்தல்

பாவேந்தர் முடியாட்சியை எதிர்க்கும் போக்கினர். நாட்டில் குடியாட்சி மலரும் விருப்பினர். அதனால்தான் அவர்தம் காப்பியமான புரட்சிக் கவியில் உதாரன் என்ற கவிஞனின் மூலமாக, முடியாட்சியை எதிர்த்து, குடியாட்சியை நிலை நிறுத்துகிறார். ஊழ்வினையில் நம்பிக்கை கொண்டவர் இளங்கோவடிகள். பொற் கொல்லனின் வீட்டிலிருக்கும் கோவலனை,

"தீவினை முதிர்வலைச் சென்று பட்டிருந்த
கோவலன் தன்னை" (கொலை:156-157)

என்று கூறி ஊழ்வினையின் ஆற்றலைக் கூறுகிறார். பாவேந்தர் விதியின் மேல் பழியைப்போடவில்லை. மாறாக, கோவலனைக் கண்டவன் ஒருவனின் வாயிலாக,

வல்லான் வகுத்ததெல்லாம் வாய்க்கால் போலும் என்று கூற வைக்கிறார்.

இளங்கோவின் கண்ணகி, பாண்டியன் அவைக்குச் சென்று சிபிச்சக்கரவர்த்தியையும், மனுநீதிச் சோழனையும் புகழ்ந்து தன் ஊரின் பெருமையையும் கூறுகிறாள். பின்னரே சிலம்பை உடைக்கிறாள். பாவேந்தரின் கண்ணகியோ பாண்டியனைக் கண்டவுடன் சிலம்பைக் கொணரச் செய்து உடைக்கிறாள். உடனே நீண்டதொரு சொற்பொழிவாற்றுகிறாள் இங்கே ஆசிரியர் பாவேந்தரே கண்ணகியாக மாறுகிறார். தன் கருத்துகளை வலியுறுத்தவே அவர் வழக்குரை காதை படைத்திருப்பதாகத் தெரிகிறது. நல்லதொரு வழக்கறிஞராகக் கண்ணகியைப் படைக்கிறார்.

"அரசனவன் பொதுச் சொத்தை இழக்க வில்லை
அரசனவன் தன்பொருளை இழந்திருந்தான்
அரசனவன் அந்நிலையில் அரசன் அல்லன்
அரசனவன் வழக்காளி; தனியாள்! என்றால்
ஒரு தனியாள் தன் வழக்கைத் தானே தன்பால்
உரைத்துக்கொள் வதும்தீர்ப்பும் தானே கூறி
அருந்துணையைக் கொல்வதும் முறையோ தீய
அரசன்விளை யாட்டெல்லாம் சட்டம்தானோ!"
(58:173)

என்று வினா விடுக்கிறாள்.

இந்த நாட்டு அரசனுக்கு அறங்கூறாத அமைச்சர் அவையையும் எள்ளுகிறாள்.

"அமைச்சர்கள் அவையத்தார் படைத் தலைவர்
அரசனுக்கே ஆட்களென்றால் அறம் என்னாகும்
அமைச்சர்களை அவையினரைப் படை மேலோரை
ஆதரிப்ப தும்பணமா அவன் கைக் காசா?

அமைச்சர்களால் அவையினரால் படைமே லோரால்
அழிவுக்கே துணைபோக முடியும் என்றால்
அமைச்சர் ஏன்? அவையினர் ஏன்? படைமே லோர்
ஏன்?
அரசனொடு பொறுக்கித்தின் பதுவா நோக்கம்?"
(58:174)

என்று கண்ணகி சாடுவது போல் வேறு யாரும் சாடியிருக்க முடியாது. சட்டத்தை யார் இயற்றியது, அது எவ்வாறு மன்னவனால் அமைய வேண்டும் என்ற விதி முறைகளையும் கூறுகிறாள் கண்ணகி. அரசனுக்குரிய தகுதியையும் நிர்ணயிக்கிறாள். (58:175)

இவ்வாறு முடியாட்சிக் காலத்தில் தோன்றிய காவியத்தைக் குடியாட்சியில் வாழும் தன்காலத்திற் கேற்பப் பாவேந்தர் மாற்றியமைக்கிறார்.

சில மாற்றங்கள்

பாவேந்தர் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரக் கதையை ஒட்டியே தன் புரட்சிக் காப்பியத்தையும் அமைத்துள்ளார். ஆயினும் தன் கொள்கைக்கேற்பவும், சிலப்பதிகாரத்தில் உள்ள ஐயங்களைக் களையும் முயற்சியாகவும் சில மாற்றங்களைச் செய்துள்ளார். தன் கருத்துக்கு ஏலாதவற்றை விடுத்துள்ளார். ஆக்கம் சேர்க்கும் சில புதிய நிகழ்ச்சிகளையும், கருத்துகளையும் சேர்த்துள்ளார். இளங்கோவடிகளின் கருத்துக்கும் விளக்கம் தந்துள்ளார்.

1. பாவேந்தர் தன் தமிழுணர்ச்சிக்கு ஏற்பவும், பகுத்தறிவுச் சிந்தனைக்கு ஏற்பவும் சில மாற்றங்களைச் செய்துள்ளார். இளங்கோவடிகள் தான் காவியத்தை எழுதியதன் நோக்கமாக முப்பெரும் உண்மைகளைக் கூறுகிறார். பாவேந்தரோ, தனித்தமிழால்-சிலபாட்டால்-அடிகள் உள்ளம் கலப்பற்ற பசுப்பாலேயாக மக்கள் கலிந்துண்ண (1:9) இந்நூலை எழுதியதாகக் காரணம் காட்டுகிறார்,

2 மாமுது பார்ப்பான்மறைவழிகாட்ட கண்ணகியின் திருமணம் நடந்ததாக அடிகள் குறிக்க, பாவேந்தர் ஆரிய மணத்தை நீக்கித் தமிழர் மணமாகக் காட்டுகிறார். (இயல் 5)

3, திருமணத்தில் ஆரியரின் வாழ்த்துதல் அமையா மல், செந்தமிழில் அவையத்தார் வாழ்த்துவதாக இருக்க வேண்டும் என்று கூறுவதற்காகச் சேந்தனார் படைப்பு அமைந்துள்ளது. (இயல் 4, 5)

4. திராவிட இயக்கத்தின் விளைவாக குழந்தை களுக்குத் தமிழ்ப் பெயர்களை வைக்கும் நிலை தோன்றி யது. இதை வலியுறுத்தும் நோக்கத்துடன் தமிழர்களாகிய கோவலன்-கண்ணகி திருமணத்திற்கு வரும் அனைவரின் பெயரையும் தமிழ்ப் பெயருடையவர்களாகப் படைத்துள் ளார். தமிழர்களின் தனிச் சிறப்பான விருந்தோம்பும் திறத்தையும் படைத்துள்ளார். (இயல் 8)

5. இளங்கோவின் கண்ணகி ஊடல் உணர்வு இல்லாதவளாகவும் அதிகம் பேசாதவளாகவும் காட்டப் படுகிறாள். பாவேந்தரின் கண்ணகியோ கணவனிடம் ஊடல் உணர்வுடையவளாகவும் அவனிடம் பேசும் உரிமை உடையவளாகவும் காட்டப்படுகிறாள். (12: 23)

6. கணவனைப் பிரிந்த மகளிர் இரு குண்டங்களில் முழுகிக் காம வேளைத் தொழ வேண்டும் என்று தோழி தேவந்தி கூறிய போது கண்ணகி 'பீடன்று' என ஒரே சொல்லால் விடை கூறுகிறாள். பாவேந்தரின் கண்ணகி ஆரியரின் பொய் வைத்த வாழ்க்கையினை இழித்துக் கூறுகிறாள். தமிழர்களின் வழக்கத்தை விரிவாகச் சிறப் பித்துக் கூறுகிறாள். (28 : 83, 84.)

7. சிலப்பதிகாரத்தில் கோவலன் பல ஆண்டுகள் மாதவியிடம் வாழ்ந்த நிலையில் கண்ணகி மாதவியைப் பற்றி நினைத்த எண்ணம் என்ன என்பது புலப்படுத்தப்

படவில்லை. ஆனால் இந்நூலில் உளவியலை ஒட்டி, கண்ணகியின் உணர்வு வெளிப்படுத்தப்படுகிறது.

"முறையில்லா ளிடம் கிடந்தான், இறுதியாய்என்
தலைவாயி லிற்கண்டேன் தாவலானேன்"

என்று இறக்கும் தறுவாயில் குறவர்களிடம் கூறும் கண்ணகியின் கூற்றில் அவளுடைய காழ்ப்புணர்ச்சி தெரிய வருகிறது.

8. பாண்டிய மாதேவின் ஊடலுக்குக் காரணம், பாண்டியனின் உள்ளம் ஆடல்மகள் மேல் சென்றதாக மொழிகிறார் அடிகள். பாவேந்தரோ,

"பாட்டொன்று பாடினேன் அவைக்கண் இன்று
பாங்கிருந்தார் தம்மிலோடு பாவாணர் தாம்
கேட்டொன்று நன்றென்று விரைவிற்சென்று
கிளிஒன்று மொழியார் பால் கிளைத்த லானார்
போட்டொன்று கொன்றாளோ என்னைமன்னி
புல்லொன்று மலையாகச் செய்கின்றாளோ" (43:130)

என்ற பாடலைக் காரணம் காட்டுகின்றார்.

9. பாண்டியமாதேவியின் சிலம்பைப் பொற் கொல்லன் திருடிய காரணமும் சூழ்நிலையும் சிலப்பதி காரத்தினின்றும் அறிய முடியவில்லை. பாவேந்தர்,

"புலம் புரிய மணவாளன், பஞ்ச ணைக்கண்
புணருங்கால் பட்டுறுத்தும் என்று பூண்ட
சிலம்பிரண்டை யும்கழற்றி அணிந்திருந்த
திருப்பள்ளிப் பெட்டகத்தின் மீது வைத்தாள்"
(39 : 116)

என்று தகுந்த சூழலை உருவாக்கி அமைத்துள்ளார்.

பொற்கொல்லன் பாத்திரப் படைப்பிலும் புதுமை செய்கிறார் பாவேந்தர். பெற்கொல்லனின் பெயர் கருங்கை எனக் காரணத்துடன் கூறுகிறார். அரசனிடம்

வேலை செய்யும் அவன் மனைவி கட்டிலினருகில் வைத்த சிலம்பைக் கவர்ந்து ஒளித்துச் சென்றதாகவும், கருங்கை அதை மறைத்து வைப்பதாகவும் காட்டுகிறார். பொற் கொல்லனின் உளவியல் போராட்டமும் அவரால் விளக்கப்படுகிறது. (இயல் 40, 41, 42, 43.)

கோவலன் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகி பெண்டிரை, சான்றோரை, தெய்வங்களை விளித்துப் பேசுகிறாள். கைம்மை நோயின் கொடுமையைச் சுட்டிக் காட்டி அலமந்தொண்டு அழியவோ என ஏங்குகிறாள். விதவை மறுமணத்தை ஆதரிக்கும் —வற்புறுத்தும் — பாவேந்தர் இங்கு மாற்றம் செய்கிறார். சொற்சிலம்பம் ஆடுகிறார். (51 : 146).

பெண்ணடிமை நீக்கப் பாடி வந்த நிலவான பாவேந்தர், பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு வாளாவிருக்கக் கூடாது. பொங்கி எழவேண்டும் என்ற எண்ணம் உடையவர். அதனால், கண்ணகியைப் பாரதி படைத்த புதுமைப் பெண்ணாக மாற்றுகிறார். எனவே புராணம் பேசும் பெண்ணாக இல்லாமல் புரட்சிக்காரியாகப் படைக் கிறார். (இயல் 69:170) கண்ணகியைப் புரட்சிக்காரியாக வும், சிறந்த வழக்கறிஞராகவும் கவிஞர் படைக்கிறார். அமைச்சரின் தன்மையை எடுத்துக் கூறுவதோடு, அரசனையும் சட்டத்திற்கு உட்பட்டவன் என்று கூறு கிறாள். (இயல் 18)

13. இளங்கோவடிகளின் காவியத்தில் கண்ணகியின் ஒரே ஒரு சிலம்பு மட்டும்தான் உடைக்கப்படுகிறது. பாவேந்தரின் காப்பியத்தில் மூன்று சிலம்புகள் (கண்ணகி யின் இரு சிலம்புகள், பாண்டிய மாதேவியின் ஒரு சிலம்பு) உடைக்கப்படுகின்றன. "முதலில் தன் சிலம்பை உடைத்த வள் பின்னும் அரண்மனைச் சிலம்பை உடைப்பானேன்? அரண்மனைச் சிலம்பு முத்துடையதே என்பதை அவை யோர்க்கும் அரசனுக்கும் காட்டுதற் பொருட்டேயாம்.

அவ்வாறு காட்டாவிட்டால் அரண்மனைச் சிலம்பு மாணிக்கப் பரல் உள்ளதுதான். அரசன் மறதியாக முத்துச் சிலம்பு என்று சொல்லிவிட்டான் என்றும் பிறகு சொல்லக் கூடுமன்றோ? அன்றியும் அரண்மனைச் சிலம்பு முத்துச்சிலம்பு என்பதைக் கண்ணகியும் தெரிந்து கொள்ள வேண்டுமன்றோ? இனி அரண்மனைச் சிலம்பையும் ஆராய்ந்தாயிற்று. மற்றும் தன் கைச்சிலம்பை உடைப் பானேன்? மாணிக்கச் சிலம்பு எனது என்றவள் தன்னுடையதல்லாததைத் தன்னுடையது என்று சொன்னாள் என்று அவையத்தாரும் மன்னவனும் நினைக்கக் கூடுமல்லவா?" (பாடல் 168) என்று விளக்கம் தருகிறார்.

14. கண்ணகி தன் நகிலைத் திருகி விட்டெறிந்த வுடன் மதுரை மாநகரம் எரிந்ததாகக் காட்டுவார் இளங்கோவடிகள். பாவேந்தரோ, கணவன் இறந்தபிறகு,

"என் இளமை ஏன் என்றாள் விரிந்த கூந்தலி
இழுத்திழுத்துப் பிய்த்துப் பிய்த் தேதெறிந்தாள்."

என்றும்

".....என் கண்ணாளன்
வலது கையால் முதல் ஏந்தும் இடது கொங்கை
வ்ம்மல் ஏன் எனஅதனைப் புய்த்தெறிந்தாள்."
(59:178)

என்ற கூறுவது இயற்கையாக அமைந்துள்ளது. காரைக் காலம்மையார் மனிதஉரு ஒழித்து பேயுருவம் தர இறை வனிடம் வேண்டியதாகக் கூறும் செய்தி இதனோடு ஒப்பிடத் தகுந்தது. நகிலால் கண்ணகி மதுரையை எரித்தாள் என்ற கருத்தும் இங்கு மாற்றம் பெறுகிறது.

"வீறுகொண்ட மக்கள்எலாம் மதுரை
தான் ஏன்?
வெம்மைசேர் அரண்மனைஏன் படைஏன் வீடேன்
அமைச்சகத்தின் தேவையேன் என்றெழுந்தார்."
(59:178)

வேலை செய்யும் அவன் மனைவி கட்டிலினருகில் வைத்த சிலம்பைக் கவர்ந்து ஒளித்துச் சென்றதாகவும், கருங்கை அதை மறைத்து வைப்பதாகவும் காட்டுகிறார். பொற் கொல்லனின் உளவியல் போராட்டமும் அலரால் விளக்கப்படுகிறது. (இயல் 40, 41, 42, 43.)

கோவலன் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகி பெண்டிரை, சான்றோரை, தெய்வங்களை விளித்துப் பேசுகிறாள். கைம்மை நோயின் கொடுமையைச் சுட்டிக் காட்டி அவலங்கொண்டு அழியவோ என ஏங்குகிறாள். விதவை மறுமணத்தை ஆதரிக்கும் —வற்புறுத்தும் — பாவேந்தர் இங்கு மாற்றம் செய்கிறார். சொற்சிலம்பம் ஆடுகிறார். (51 : 146).

பெண்ணடிமை நீக்கப் பாடி வந்த நிலவான பாவேந்தர், பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு வாளாவிருக்கக் கூடாது. பொங்கி எழவேண்டும் என்ற எண்ணம் உடையவர். அதனால், கண்ணகியைப் பாரதி படைத்த புதுமைப் பெண்ணாக மாற்றுகிறார். எனவே புராணம் பேசும் பெண்ணாக இல்லாமல் புரட்சிக்காரியாகப் படைக் கிறார். (இயல் 69:170) கண்ணகியைப் புரட்சிக்காரியாக வும், சிறந்த வழக்கறிஞராகவும் கவிஞர் படைக்கிறார். அமைச்சரின் தன்மையை எடுத்துக் கூறுவதோடு, அரசனையும் சட்டத்திற்கு உட்பட்டவன் என்று கூறு கிறாள். (இயல் 18)

13. இளங்கோவடிகளின் காவியத்தில் கண்ணகியின் ஒரே ஒரு சிலம்பு மட்டும்தான் உடைக்கப்படுகிறது. பாவேந்தரின் காப்பியத்தில் மூன்று சிலம்புகள் (கண்ணகி யின் இரு சிலம்புகள், பாண்டிய மாதேவியின் ஒரு சிலம்பு) உடைக்கப்படுகின்றன. "முதலில் தன் சிலம்பை உடைத்த வள் பின்னும் அரண்மனைச் சிலம்பை உடைப்பானேன்? அரண்மனைச் சிலம்பு முத்துடையதே என்பதை அவை யோர்க்கும் அரசனுக்கும் காட்டுதற் பொருட்டேயாம்.

அவ்வாறு காட்டாவிட்டால் அரண்மனைச் சிலம்பு மாணிக்கப் பரல் உள்ளதுதான். அரசன் மறதியாக முத்துச் சிலம்பு என்று சொல்லிவிட்டான் என்றும் பிறகு சொல்லக் கூடுமன்றோ? அன்றியும் அரண்மனைச் சிலம்பு முத்துச்சிலம்பு என்பதைக் கண்ணகியும் தெரிந்து கொள்ள வேண்டுமன்றோ? இனி அரண்மனைச் சிலம்பையும் ஆராய்ந்தாயிற்று. மற்றும் தன் கைச்சிலம்பை உடைப் பானேன்? மாணிக்கச் சிலம்பு எனது என்றவள் தன்னுடையதல்லாததைத் தன்னுடையது என்று சொன்னாள் என்று அவையத்தாரும் மன்னவனும் நினைக்கக் கூடுமல்லவா?" (பாடல் 168) என்று விளக்கம் தருகிறார்.

14. கண்ணகி தன் நகிலைத் திருகி விட்டெறிந்த வுடன் மதுரை மாநகரம் எரிந்ததாகக் காட்டுவார் இளங்கோவடிகள். பாலேந்தரோ, கணவன் இறந்தபிறகு,

"என் இளமை ஏன் என்றாள் விரிந்த கூந்தலி
இழுத்திழுத்துப் பிய்த்துப் பிய்த் தேளறிந்தாள்."

என்றும்

".....என் கண்ணாளன்
வலது கையால் முதல் ஏந்தும் இடது கொங்கை
விம்மல் ஏன் எனஅதனைப் புய்த்தெறிந்தாள்."
(59:178)

என்ற கூறுவது இயற்கையாக அமைந்துள்ளது. காரைக் காலம்மையார் மனிதஉரு ஒழித்து பேயுருவம் தர இறை வனிடம் வேண்டியதாகக் கூறும் செய்தி இதனோடு ஒப்பிடத் தகுந்தது. நகிலால் கண்ணகி மதுரையை எரித்தாள் என்ற கருத்தும் இங்கு மாற்றம் பெறுகிறது.

"வீறுகொண்ட மக்கள்எலாம் மதுரை
தான் ஏன்?
வெம்மைசேர் அரண்மனைஏன் படைஏன் வீடேன்
அமைச்சகத்தின் தேவையேன் என்றெழுந்தார்."
(59:178)

எனக் கூறுவதன் மூலம் புரட்சித் தலைவியாகச் செயலாற்றும் கண்ணகி புரட்சிக்காரருக்கெல்லாம் முன்னோடியாகவும் திகழ்கிறாள்.

15. குடியாட்சியில் வாழ்ந்த பாவேந்தர், நாட்டின் தலைவன் தவறு செய்யின் அவனுடைய குறையைச் சுட்டிக் கூறும் உரிமை குடிமக்களுக்கு உண்டு, என்பதை உணர்ந்தவர். அதனால் தன் நூலில் பாண்டியன் கோவலனைக் கொன்று தவறிழைத்தபோது மதுரை மாநகர மக்கள் பாண்டியனைப் பழித்துரைப்பதாகப் படைத்துள்ளார். (இயல் 45:46) பேதுற்ற நிலையில் கண்ணகி சிலம்பிடம் பேசுவதாகப் பாவேந்தர் படைத்திருப்பது இயல்பாக அமைந்துள்ளது. (இயல் 56)

16. கண்ணகி மதுரையை எரித்தபோது மதுரை மாநகர மக்கள் புகலிடம் தேடுவதைக் குறிக்கும் முகமாக, தமிழர்களின் பெருமையையும் ஆரியர்களின் புன்மையையும் வெளிப்படுத்துகிறாள். (இயல் 62)

17. மதுரை மாநகரை அழித்து வஞ்சி நோக்கிச் செல்லும்போது தன்னிலைக்காக இரங்காமல் தமிழர்தம் தரங்கெட்டு நிற்பதறிந்து வேதனைப் படுகிறாள். (இயல் 61, 62)

18. சிலப்பதிகாரத்தில் மதுரை நகரை எரித்த கண்ணகி சேரநாடு நோக்கி ஏன் சென்றாள் என்ற வினா எழுதல் இயல்பே. இவ்வினாவிற்குப் புதுமையான விடை இந்நூலில் கிடைக்கிறது.

சோழநாட்டில் பெருமகிழ்ச்சி இல்லை; மதுரையில் வாயில் இல்லை; அதனால் வஞ்சிக்குச் செல்கிறேன் என்கிறாள் கண்ணகி (62 : 183)

19. சிலப்பதிகாரத்தில்,

"...நம் அகல்நாடு அடைந்த இப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"

(சிலம்பு காட்சி : 113-114)

என்று கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக்கி, வழிபட வேண்டும் என்று அரசமாதேவி கூறுகிறாள். ஆனால் பாவேந்தரின் அரசமாதேவி, வள்ளுவர் காட்டும் மனை விளக்காகக் கண்ணகி திகழ்வதால் விழா எடுக்க வேண்டும் எனக் கூறுகிறாள். பெண்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்ததால்தான் அவள் கடவுளாகத்தொழத் தகுந்தவளாய் மாறுவதாகக் காட்டப்படுகிறது. சேரன் செங்குட்டுவன் இக்கால மகளிர் தன்மையைக் கூறி அவர்களிடமிருந்து கண்ணகி எவ்வாறு வேறுபட்டாள். அதனால் மற்றவரால் தொழத்தகும் பெருமையை எப்படிப் பெற்றாள் என்று கூறுகிறான். (67 : 198)

> "புனைஆடை அணிகுவதும் கூத்துப் பார்க்கப்
> போவதுமே கடமைஎன எண்ணுகின்ற
> மனக்கப்பல் துயர்க்கடலைத் தாண்டிச் சேர
> மங்கைஒரு கலங்கரை விளக்க மன்றோ?" (67 : 199)

என்று மற்றப் பெண்களினின்றும் வேறுபடுவதால் இவள் கலங்கரை விளக்கமாகக் கூறப்படுகிறாள்.

20. கலையின் உயர்வையும், கண்ணகியின் தெய்வத் தன்மையையும் காட்ட, சிற்பியொருவன் கண்ணகியைச் சிலையாக வடிக்கும் பாங்கினை விளக்குகிறார். (இயல் 84, 85)

21. கண்ணகி வழிபாட்டிற்கு வந்த ஆரியர்கள் ஒன்றாகக் கூடிப் பேசுகிறார்கள். 'கண்ணகிக்குச் செங்குட்டுவன் சிலையெடுத்ததன் மூலமாக ஆரியர்களின் பொய்ம்மைக் கற்கோட்டை தூளாயிற்று' என்று பாவேந்தர் குறிப்பிடுவது தமிழர்களின் வெற்றியையும் ஆரியர்களின் தில்லுமுல்லுகளையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது. (இயல் 94)

இவ்வாறு பாவேந்தர் தம் கொள்கைக்கேற்றபடி பல மாற்றங்களைத் தம் நூலில் செய்துள்ளார்.

எனக் கூறுவதன் மூலம் புரட்சித் தலைவியாகச் செயலாற்றும் கண்ணகி புரட்சிக்காரருக்கெல்லாம் முன்னோடியாகவும் திகழ்கிறாள்.

15. குடியாட்சியில் வாழ்ந்த பாவேந்தர், நாட்டின் தலைவன் தவறு செய்யின் அவனுடைய குறையைச் சுட்டிக் கூறும் உரிமை குடிமக்களுக்கு உண்டு, என்பதை உணர்ந்தவர். அதனால் தன் நூலில் பாண்டியன் கோவலனைக் கொன்று தவறிழைத்தபோது மதுரை மாநகர மக்கள் பாண்டியனைப் பழித்துரைப்பதாகப் படைத்துள்ளார். (இயல் 45:46) பேதுற்ற நிலையில் கண்ணகி சிலம்பிடம் பேசுவதாகப் பாவேந்தர் படைத்திருப்பது இயல்பாக அமைந்துள்ளது. (இயல் 56)

16. கண்ணகி மதுரையை எரித்தபோது மதுரை மாநகர மக்கள் புகலிடம் தேடுவதைக் குறிக்கும் முகமாக, தமிழர்களின் பெருமையையும் ஆரியர்களின் புன்மையையும் வெளிப்படுத்துகிறாள். (இயல் 62)

17. மதுரை மாநகரை அழித்து வஞ்சி நோக்கிச் செல்லும்போது தன்னிலைக்காக இரங்காமல் தமிழர்தம் தரங்கெட்டு நிற்பதறிந்து வேதனைப் படுகிறாள். (இயல் 61, 62)

18. சிலப்பதிகாரத்தில் மதுரை நகரை எரித்த கண்ணகி சேரநாடு நோக்கி ஏன் சென்றாள் என்ற வினா எழுதல் இயல்பே. இவ்வினாவிற்குப் புதுமையான விடை இந்நூலில் கிடைக்கிறது.

சோழநாட்டில் பெருமகிழ்ச்சி இல்லை; மதுரையில் வாயில் இல்லை; அதனால் வஞ்சிக்குச் செல்கிறேன் என்கிறாள் கண்ணகி (62 : 183)

19. சிலப்பதிகாரத்தில்,

"...நம் அகல்நாடு அடைந்த இப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"

(சிலம்பு காட்சி : 113–114)

என்று கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக்கி, வழிபட வேண்டும் என்று அரசமாதேவி கூறுகிறாள். ஆனால் பாவேந்தரின் அரசமாதேவி, வள்ளுவர் காட்டும் மனை விளக்காகக் கண்ணகி திகழ்வதால் விழா எடுக்க வேண்டும் எனக் கூறுகிறாள். பெண்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்ததால்தான் அவள் கடவுளாகத்தொழத் தகுந்தவளாய் மாறுவதாகக் காட்டப்படுகிறது. சேரன் செங்குட்டுவன் இக்கால மகளிர் தன்மையைக் கூறி அவர்களிடமிருந்து கண்ணகி எவ்வாறு வேறுபட்டாள். அதனால் மற்றவரால் தொழத்தகும் பெருமையை எப்படிப் பெற்றாள் என்று கூறுகிறான். (67 : 198)

"புனைஆடை அணிகுவதும் கூத்துப் பார்க்கப்
போவதுமே கடமைஎன எண்ணுகின்ற
மனக்கப்பல் துயர்க்கடலைத் தாண்டிச் சேர
மங்கைஒரு கலங்கரை விளக்க மன்றோ?" (67 : 199)

என்று மற்றப் பெண்களினின்றும் வேறுபடுவதால் இவள் கலங்கரை விளக்கமாகக் கூறப்படுகிறாள்.

20. கலையின் உயர்வையும், கண்ணகியின் தெய்வத் தன்மையையும் காட்ட, சிற்பியொருவன் கண்ணகியைச் சிலையாக வடிக்கும் பாங்கினை விளக்குகிறார். (இயல் 84, 85)

21. கண்ணகி வழிபாட்டிற்கு வந்த ஆரியர்கள் ஒன்றாகக் கூடிப் பேசுகிறார்கள். 'கண்ணகிக்குச் செங்குட்டுவன் சிலையெடுத்ததன் மூலமாக ஆரியர்களின் பொய்ம்மைக் கற்கோட்டை தூளாயிற்று' என்று பாவேந்தர் குறிப்பிடுவது தமிழர்களின் வெற்றியையும் ஆரியர்களின் தில்லுமுல்லுகளையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது. (இயல் 94)

இவ்வாறு பாவேந்தர் தம் கொள்கைக்கேற்றபடி பல மாற்றங்களைத் தம் நூலில் செய்துள்ளார்.

நிறைவுரை

புரட்சிக் கவிஞர் அடிப்படைக் கதைக் கருவை மாற்றாமல் ஆங்காங்கே சிலமாற்றங்களைத் தம் கொள்கைக் கேற்ப மாற்றம் செய்வது குறிப்பிடத்தக்க தாகும். தமிழனின் பெருமையைத் தமிழனுக்குப் புரிய வைப்பதோடு, ஆரியனின்புன்மையைத்தமிழனின் நெஞ்சில் உறைக்கும்படியாக விளக்கிக் காட்டுகிறார். பின்வந்தோர் சிலம்பில் எழுப்பிய ஐயங்களைத் தெளிவாக்குகிறார்.

கதையைக் கண்ணகியின் திருமணத்திலிருந்து ஆரம் பிக்காமல் நாடக உலகிற்கேற்ப, பின்னோக்கு உத்தியின் மூலம் ஆரம்பிப்பது சிறப்பாகவே உள்ளது. மங்கலத்தை விட்டு அமங்கலத்தில் (துன்பியல்) கதையைத் தொடங்கு வது இவருடைய பகுத்தறிவுக் கொள்கையை உறுதிப் படுத்துகிறது.

ஒவ்வொரு இயலுக்கும் அறிமுகப் படுத்தும் நிலையில் பொழிப்புரை கொடுக்கிறார். பதவுரை, விளக்கவுரை, சிறப்புரை இவற்றைத் தருவதோடு, சில இடங்களில் இலக்கணக் குறிப்பும் தருகிறார். இவை காவிய ஓட்டத் திற்குத் தடையாக இருப்பது போல் தோன்றினும் ஆசிரியரின் புலமைக்கும், வாசகர்களின் நன்மைக்கும் துணைநிற்பனவாக உள்ளன.

கண்ணகி

[ச. து. சுத்தானந்தயோகி]

தமிழ்க் குமரி என்னும் நூலில் ச. து. சுத்தானந்த யோகி 'கண்ணகி' என்னும் தலைப்பில் பன்னிரு விருத்தங் களால் கண்ணகியின் பெருமையைக் கூறியுள்ளார். கோவலன் இறந்தான் என்று கேட்ட கண்ணகியின்

உளநிலையையும் செயல்களையும் ஆசிரியர் இந்நூலில் குறிப்பிடுகிறார். பாண்டியன் அவைக்குச் செல்வதற்கு முன் இருந்த கண்ணகியின்நிலை இதில் கூறப்பட்டுள்ளது. இளங்கோவின் கண்ணகி, கணவன் இறப்பைக் கேட்டவுடன் அவலத்தில் தோய்கிறாள் காய்கதிர்ச் செல்வன் 'நின் கணவன் கள்வனல்லன்' என்று கூறிய பிறகே கண்ணகிக்குச் சீற்றம் எழுகிறது. அவன் கள்வன் அல்லன் என்று நிரூபிக்க, பாண்டியன் அவைக்குச் செல்கிறாள்.

யோகியாரின் கண்ணகியோ, அவல உணர்வோடு புரட்சி வேகமும் கொள்கிறாள்.

''கேட்டனள் எழுந்தாள் துன்பக்
கிளர்ச்சியின் பொருமலோடு
வாள்தடம் கண்ணீர் சோர
மார்பகம் புடைத்து விம்ம,
நாட்டுள வேந்தன் செய்கை
நன்றிது நன்றிது என்னாக்
கோட்டிய புருவத் தோடு
குதித்தனள், குமுறு கின்றாள்." (17)

என்று அவலத்தை விடச் சினம் மிஞ்சிய வீரக்கண்ணகியைக் காட்டுகிறார்.

அவளுடைய சினத்தை யோகியார் மிக அழகாகக் காட்டுகிறார்.

''கங்குலின் நெருப்புப் போல்வாள்
கற்பெனும் கனலி நின்றாள்
மங்கையாள் சீற்றம் கண்டார்
கானவர் மறுக்கம் கொண்டார்'' (2)

என்றும்

''மின்னிசை மெல்லிய லாளின்
மேனியின் ரோமம் எல்லாம்
புல்நுனி வானானாற் போல்
பொங்கிய புகைந்த மாதோ" (3)

என்றும் கண்ணகியின் வீரத்தோற்றம் கூறப்படுகிறது. மதுரை வீதியில் நடக்கும் கண்ணகியின் அவல நிலை, படம் பிடிக்கப்படுகிறது. கையில் சிலம்பும், காலில் சூறையும், மெய்யில் நெருப்பும், விழியில் தீக்கணையும் தாங்கிக் கண்ணகி செல்கிறாள். அவள் தனியளாய்போதல் நோக்கி அறததேவதையும் கணணீர் விட்டு அழுகிறாள் என்று கண்ணகியின் அவல நிலை கூறப்படுகிறது.

மென்மையில் வன்மையும் தோன்றும். மெல்லியலாள் கண்ணகி வன்மையளாக மாற்றம் பெறுவதை ஆசிரியர் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகிறார். அவளுடைய சீற்றத்தின் முதிர்வு, தேவர்களும் அஞ்சும் நிலை அடைந்ததாம்.

"ஊழியோ! ஊழித் தீயின்
உறுமலோ! உறுமி நிற்கும்
ஆழியோ! ஆழி தூர்க்க
அலைத்திடும் சூறைக் காற்றோ!
சூழியப் பேய்கள் சுற்றும்
சூரியோ! என்றென்று அஞ்ச
ஏழினோடு ஏழாக அண்டம்
யாவையும் கலக்கும் சீற்றம்" (6)

என்று சீற்றத்தின் தன்மையைக் குறிக்கிறார். சீற்றத்தின் வெளிப்பாடாம் செயலையும் ஆசிரியர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. கண்ணகி வெகுளியின் அடிப்படையில் பிறந்த மெய்ப்பாட்டுணர்வோடு விளங்குவதும் கூறப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் பெண்மை அடங்கி அழுது கொண்டு இருக்கக்கூடாது. பொங்கி எழ வேண்டும் என்ற எண்ணமுடையவர் யோகியார். அதனால் சிலப்பதிகாரக் காலத்தில், கண்ணகி அடங்கியிருந்த கோலத்தைக் காட்டாமல் பொங்கி எழுந்த கோலத்தை மட்டுமே காட்டுகிறார். சாது மிரண்டால் காடுகொள்ளாது என்ற பழ

மொழிக்கேற்ப அடக்கத்தின் உருவாய்—தென்றலின் அமைதியாய் இருந்த கண்ணகி பூகம்பமாய்—புயலாய் மாறிய விந்தைக் காட்சியை மட்டுமே மையப்பொருளாகக் கொண்டு அழகாகப் படைத்துள்ளார். பெண்கள் வீறு கொண்டு எழுந்துவிட்டால் ஆண்கள் மட்டுமல்ல, தேவர் களும் அஞ்சுவர் என்று அவர் அறிவிக்கிறார்.

கோவல வெண்பா
(ஸ்ரீநிவாஸாசாரியார்)

1900-இல் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் புன்னை. மாடபூசி. ஸ்ரீநிவாஸாசாரியரால் இயற்றப்பட்ட இவ்வெண்பா நூல் இளங்கோவடிகளின் காவியத்தை ஒட்டியே இயல்கிறது.

இந்நூலைச் சிறப்புறச் செய்ய விரும்பிய ஆசிரியர் ஒவ்வொரு காண்டத்திலும் தன் சமயத்திற்கேற்ப வைணவக் கடவுள்களான திருமால், இராமன், நம்மாழ் வார் ஆகியோரைப் போற்றுகிறார். இவர் புகார்க் காண்டத்தை 60 வெண்பாக்களிலும், மதுரைக் காண்டத்தை 170 வெண்பாக்களிலும் வஞ்சிக்காண்டத்தை 60 வெண்பாக்களிலும அமைத்துப் பாடுகிறார்.

இவர் சோழனைக் 'கரிகாலன்' என்று பெயர் சுட்டிக் செல்கிறார்.

கற்புக்கரசி கண்ணகியோடு கோவலன் இல்லறம் நடத்தி வருவதைக் கண்டு அவனுடைய தாய் அவனைத் தான் பெற்ற காலத்திலும் மகிழ்ச்சி கூர்ந்ததாகக் கூறு கிறார். (பாடல் 6)

தன் கணவன் இறந்தது அறிந்து கண்ணகி அழுதல் 'விண்ணெங்கும் பஃறுளியாறு மேவியது போல் இருந்தது. என்னும் உவமையால் கூறியிருப்பது புதுமையாய் அமைகிறது.

பூம்புகார்ப் பத்தினி
(க. சம்பந்தம் பிள்ளை)

தஞ்சை மாவட்டத்தில் வேலங்குடி என்னும் சிற்றூரில் 1897-ஆம் ஆண்டில் தோன்றிய க. சம்பந்தம்பிளளை அவர்களால் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது. கல்வித் துறையில் பணியாற்றிய இப்பெருமகனார் மறைந்த பின்னரே இந்நூல் வெளி வந்துள்ளது. இவர் பூம்புகார்ப் பத்தினி என்னும் கவிதை நூலைப் புகார் நகரம், கண்ணகியின் இளமையும் திருமணமும், கோவலன் மாதவியை அடைதல், கோவலன் மாதவியர் வாழ்க்கை, மதுரைப் பயணம், கோவலன் கொலையுண்டது, கற்பு ஒளிர் கண்ணகி என ஏழு பிரிவுகளாகப் பிரித்து, 1558 அடிகளில் எழுதியுள்ளார்.

தோற்றுவாய் எனனும் பகுதியில் ஆசிரியரின் நாட்டுப் பற்றும் விடுதலை வேட்கையும் தெரிய வருகிறது.

"நேர்மையுடன் நாரியர்கள் நற்குடிமை நலங்கண்டு
பொற்பொழுக்கம் போற்றுதற்குப் பூம்புகார்ப்
பத்தினியாம்
கற்பொழுக்கக் கண்ணகியின் கனநெறியைக் கடைப்
பிடிக்க"

இந்நூலை எழுதியதாக ஆசிரியர் கூறியுள்ளார்.

சிலப்பதிகார நூலைத் தழுவியே செல்வதாயினும் இந்நூலாசிரியர் தன் கொள்கைகளுக்கேற்ப, சில இடங்களில் மாற்றங்களைச் செய்துள்ளார்.

1. நகரைப் பற்றிச் சொல்லும் ஆசிரியர், அழிவு தந்த அலைகடலைப் பற்றி நினைக்கும் போது, நெஞ்சம் எரிகிறார்,

"குமரித்திரு நாட்டில் குலத்தமிழர் வாழ்ந்தனரே
பெருங்குடித் தமிழரவர் பெருவீரத் தமிழரவர்
முருகுடைய தமிழரவர் பொருளுடைய தமிழரவர்
அறநெறித் தமிழரவர் அன்பிலுறை தமிழரவர்"

வாழ்ந்து வந்த திருநாட்டைத் தன் வயிற்றில் கொண்டு விட்டாய் என்று குமுறுகிறார். அதனால் பாவியுநீ, பாதகனீ, பாமரனீ என்று பழிக்கிறார். (1:23–55)

2. கண்ணகியின் இளமைப் பண்பை இவர் கூறும் முறை சிறப்பாயுள்ளது.

"தாயுடைய தனியன்பில் தோய்ந்திருந்த தன்மை
யினால்
தாயருகு அகன்றெங்குந் தனித்துச் சென்றறிபாளே
புதியநகை புத்தாடை தான்தரித்துத் தந்தையிடம்
அதிலேக மாயோடி அவைகாட்டி மகிழ்ந்திடுவாள்
தந்தைதரும் பிடிச்சோறு தான்களிக்கப் பெற்றிடு
வாள்
பிச்சையெனக் கேட்டவர்க்குப் பிடிப்பிடியாக்
கொடுத்திடுவாள்
உச்சிப்பொழு தாயினும் ஒருவருக்கு மில்லை
யென்னாள்

என்று கவிஞர் கண்ணகியின் குழந்தைமைப் பண்பைக் கூறுகிறார். வருவிருந்தோம்பும் பணபுச் சிறப்பு இளமையிலிருந்தே அவளிடத்தில் வளர்ந்தமையையும் கூறுகிறார். (2:20-30)

3. மற்றவர் செய்யும் குற்றங்களைப் பொறுக்கும் இயல்பும் அவளிடம் இருந்ததைக்காட்ட ஆசிரியர் புதுமை ஒன்றைப் படைக்கிறார். தேவந்தி பாத்திரத்தில் பால் கொண்டு வந்த போது கால் தடுக்கி விழ, பால் தரையில் சிந்திப் பாத்திரம் சிதைந்து விட்டது தன் தாயிடம் கண்ணகி, தான்தான் பால்கொட்டியதாகப்பழியைத் தன்

மேவிடுகிறாள். (2:45-55) இப்பண்புநலன் பின்னால் கோவலன், கண்ணகிக்குத் தவறிழைக்கும்போதும் மன்னிப்பதற்கு வழி வகுத்தது.

4. இந்நூலாசிரியர் முருகபக்தர் போலும். மாசாத்தான், மாநாய்கன், கண்ணகி ஆகியோர் முருகனின் பக்தர்களாகக் காட்டப்படுகின்றனர். முருகனின் அருட்டிறத்தைக் காட்ட ஒரு நிகழ்ச்சியை அறிவிக்கிறார். முருகனின் அருளால்தான் மாசாத்துவானின் கப்பல் புயலிலும் கவிழாத நிலை ஏற்பட்டதாகவும் அவரால் கூறப்படுகிறது. முருகனின் கோயிலில்தான் கோவலன் கண்ணகியின் திருமணம் நிச்சயிக்கப்படுவதாகவும் நூலாசிரியர் காட்டுகிறார்.

"மனத்திலே கர்வமெழ மனத்திலே கருணையற
தனக்குநே ரில்லையெனத் தற்பெருமை நீகொண்
டாய்
அகங்காரத் தால்துன்பம் அண்டியது துன்பத்தால்
அகங்காரஞ் சிதறியது அகங்குழைந்து சரண
டைந்தாய்"(2:100-103)

என்று அறிவுரை கூறுவதாகவும் ஆசிரியர் அமைத்துள்ளார்.

5. கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் முடிந்த பிறகு ஒரு சோலையில் உலவி வந்து அமர்ந்தனர். கண்ணகியின் தலையில் பொத்தென்று அணிற்பிள்ளை விழ அவள் அலறினாள். அதைக்கண்ட கோவலன் "கிளை தாண்டிக் கால் தவறி விழுந்தது" என்று கூறும் கூற்றில் உள்ளுறை பொதிந்துள்ளது. கண்ணகியை விட்டு மாதவியிடம் தாவும் கோவலன் தன்மையையே இந்நிகழ்ச்சியின் மூலம் பெற வைக்கிறார் ஆசிரியர். (3:36-53)

6. கண்ணகியும் கோவலனும் காவிரியில் நீராடுங்கால் குரங்குக் குட்டியொன்று கோவலனின் தோள் மீது விழுந்தது. அதைக்கண்ட அவன் அஞ்சிக்குட்டியுடன் நீரில் மூழ்கினான். இதைக்கண்ட அருள் உள்ளம் கொண்ட

கண்ணகியோ அக்குட்டியை நீரிலிருந்து காப்பாற்றி அதை வளர்க்கப் போவதாகவும் கூறுகிறாள். இந்நிகழ்ச்சி கோவலனின் அருளற்ற, அழிக்கும் உள்ளத்தையும், கண்ணகியின் அருளுடைய, ஆக்கும் உள்ளத்தையும் காட்டுகிறது இருவரின் முரண்பட்ட பண்பு நிலையையும் சுட்டிக் காட்டுகிறது. (3:49—72)

7. கோவலன் மாதவியைச் சந்திக்கும் சூழல் வேறுபடுகிறது. சோலையிலிருந்து கண்ணகியைத் தேவந்தியுடன் அனுப்பி விட்டு வாணிகத் தொடர்பாக நடந்து சென்றவன் கூனியின் கையிலிருந்த மாலையை வாங்கி மாதவியின் இல்லத்தை அடைகிறான். மாதவியின் நடனம் அரங்கேறியதாகவோ அதைக் கோவலன் கண்டதாகவோ கவிஞர் காட்டவில்லை. (3:91-123)

8. மாதவியை அடைந்த கோவலன் திரும்பி வரும் வரையில் கண்ணகி, ஒரு பொழுதே உண்டு தவமிருக்கப் போவதாகத் தோழி தேவந்தியிடம் கூறுகிறாள். (3:186—192)

9. மாதவியின் வீட்டிலிருந்து திரும்பி வந்த கோவலன் மாதவியால் கைப்பொருளை யிழந்ததாகக் கூறவில்லை. தன்னுடைய தொழில் தந்த இலாபத்தைத் தொலைத்ததாகக் கூறுகிறான். இம்மாற்றம் மாதவியிடம் நூலாசிரியர் கொண்ட நன்மதிப்பைக் காட்டுகிறது. (5:39-40)

10. ஒரு நகிலைத் திருகி எறிந்து மதுரையை எரித்ததாக இளங்கோவடிகள் கூறுகிறார். நூலாசிரியரோ,

"பத்தினியேன் உண்மையெனில், பதியைக்கொலை
புரிந்திட்ட
பாண்டிகுலத் தரசருடன் பாண்டிமாதேவியுடன்
பாண்டிநகர் மாமதுரை பட்டழிந்து மறைந்திடுக"

என்று சாபமிடுகிறாள். மதுரை எரித்ததாகக் காட்டவில்லை (7 : 166—170)

இவ்வாறு ஆசிரியர் தன் கொள்கைக் கேற்ப நயமாகப் பல மாற்றங்கள் செய்துள்ளார்.

சிலப்பதிகாரச் செம்பொருட் காவியம்
(எ. வெ. முனிசாமி)

கன்னட மாநிலத்தில் தமிழ்த்தொண்டும் சைவத் தொண்டும் சிறப்புறச்செய்துகவிநயமழைமொழிப் புலவர் எ. வெ. முனிசாமி அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார்.

அகவற்பாவால் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தை இவர் 1321 விருத்தப்பாக்களால் சிலப்பதிகாரச் செம்பொருட் காவியமாக்கியுள்ளார். சிலப்பதிகாரத்தையொட்டியே இந்நூலாசிரியர் எழுதியுள்ளதால் மாற்றங்கள் மிகச் சிலவாகவே உள்ளன.

1. கற்பின் சிறப்பை விளக்க எழுந்த இந்நூல் சிறப்புற அமைய வேண்டி ஆசிரியர் கற்புக்கடவுளுக்கே வணக்கம் செலுத்துகிறார்.

2. கண்ணகி கோவலன் திருமணத்திற்கு வந்தவர்கள் மணமக்களுக்கு வாழ்த்து கூறும் பகுதி இக்காலத்தில் மணமக்களை வாழ்த்துவது போலுள்ளது. கண்கள் இரண்டான போதும் காணும் திறம்மட்டும் ஒன்றாகுமா போல இருவரும் மனம் ஒத்துப்போதல் வேண்டுமென்றும் ஊசிக்குப் பின் நூல் செல்லுதல் போல் கணவன் வழி மனைவி நிற்றல் வேண்டும் என்றும கூறும் வாழ்த்துகள் சிறப்பாயுள்ளன. (1:60-61).

3. மணமக்களைத் தனி வீட்டில் குடியமைக்கும் தந்தை,கோவலனை அழைத்துஅறிவுரை கூறல் இயல்பாக உள்ளது. (2 : 15—18)

4. இளங்கோவடிகள் மாதவியின் நடன நிகழ்ச்சியைக் கூறினார். அவையோரின் நிலையைக் கூறவில்லை. ஆசிரியர் இன்று திரைப்படங்களில் காட்டுவது போல், மாதவியின் நடனத்தைக் காட்டுகிறார். ஆட்டத்தில் இலயிக்கும் அவையோரின் நிலையையும் உரைக்கிறார். சிலர் ஆணைனும் நிலையை மறந்து அபிநயம் பிடித்துக் காட்டுவது இயல்பாய் அமைகிறது. (3 : 38—44)

5 துன்பம் அதிகமாயுள்ளபோது,மாந்தன் தனக்குத் தானே பேசிக் கொள்ளுதல் இயல்பு. கோவலனைப் பிரிந்த கண்ணகி தனக்குத்தானே பேசிக் கொள்ளல் உளவியலின் அடிப்படையில் சிறப்பாயமைந்துள்ளது. (4 : 9—12)

இவ்வாறு ஆசிரியர் இக்காலத்திற்கேற்ற முறையிலும், உளவியலின் அடிப்படையிலும் பல காட்சிகளை உருவாக்கியுள்ளார்.

கண்ணகி வெண்பா

(மு. ரா. கந்தசாமிக் கவிராயர்)

'கண்ணகி வெண்பா என்னும் இந்நூலை வித்துவான் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் எழுதியுள்ளார். இவர் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியில் தேர்வுநிலைத் தமிழாசிரியராகவும் அம்பைக் கலைக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

சிலப்பதிகாரத்தின்கண் தனித்து நிற்கும் சுவை மிகுந்த வெண்பாக்கள் பதினான்கும்தான் இவரைக் கண்ணகி வெண்பாவை எழுதத் தூண்டியது. மண்ணக

மாந்தர்க்கு அணியாகப் பூம்புகாரில் அவதரித்த கண்ணகி மதுரையில் தன் கணவனை இழந்து மதுரையைக் கற்பால் எரித்து, வஞ்சிக்குச் சென்று விண்ணக மாதர்க்கு விருந்தானாள். அதனால் சேரன் அப்பத்தினி தெய்வத்துக்குக் கோயில் எடுத்துக் கொண்டாடினான். எனவே அக்கற்புத் தெய்வமான கண்ணகியின் பெயரிலேயே இந்நூல் அமைதல் வேண்டும் எனக் கருதிக் 'கண்ணகி வெண்பா' என்ற பெயரை ஆசிரியர் இந்நூலுக்கு வைத்துள்ளார்.

இந்நூல் 30 காதைகளையுடையது. ஒவ்வொரு காதையிலும் 10 வெண்பாக்களாக 300 வெண்பாக்கள் இதில் உள்ளன. சிலப்பதிகாரத்தை ஒட்டியே கதை நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. பா அமைப்பைத் தவிர வேறு எந்த மாற்றமும் இந்நூலில் கிடையாது. இவர் இயற்றிய வெண்பாக்களுக்கிடையே சிலப்பதிகாரத்தில் வந்துள்ள வெண்பாக்களும்கலந்து அமைந்துள்ளன. மூலக்காப்பியத்திலுள்ள கருத்துகளேயன்றி அதிலுள்ள சொற்றொடர்களையும் சில இடங்களில் இவர் அப்படியே ஆண்டுள்ளார்.

சிலப்பதிகாரத்தைச சுருக்கி வழிநூலாக அமைக்க வேண்டும் என்னும் கொள்கையின் அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

"பெண்மையினம் என்றதற்குப் பேராள்
கலைச்செல்வி
வண்மைநலம் தாராளோ வந்து"

எனக்கலைமகளை இவர்வேண்டுகிறார். ஒரு பெண்ணைப் பாட இன்னொரு பெண்ணை வேண்டுதல் சிறப்பாக உள்ளது. தனக்குக் கண் போன்று விளங்கிய இராயகிரி மு. அருணாசலம் பிள்ளையையும், மோகனூர்க் கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளையையும் வாழ்த்தி அவர்களின் துணையால் தான் வெண்பாவை இயற்றியதாகக் கூறுகிறார் ஆசிரியர். (பாயிரம் 5)

10963 / 224330

"திண்மைநிலை கற்புடனே செய்யபொறை நல்வீரம்
கண்ணகியின் வாழ்க்கையுறக் கண்டமையால் எண்ணுமவை
பெண்ணுயர்வு பேசப் பெருந்துணையாம் என்றிசைத்தேன்
கண்ணகி வெண்பாவைக் கனிந்து." (8)

என்று நூல் இயற்றியதின் நோக்கத்தையும் புலப்படுத்து கிறார் ஆசிரியர். இதில் 'பெண்ணுயர்வு பேசுதல் பெருந் துணையாம்" என்று நூலாசிரியர் கூறுதல் சிறப்புடைத்து. கண்ணகியை அறிமுகப்படுத்தும் போதும்,

"பெண்ணரசி கண்ணகியாம் பேராள் பெருந்தகையாள்
எண்ணுமீ ராறகவை எய்தினாள்—விண்வடமீன்
கற்பினாள் தான்வளர்ந்து கண்கவரும் பொன்னனைய
பொற்பினாள் ஆனாள் புவி" (வளம்பாடுதிறம் 5)

என்று கண்ணகியைப் புகழ்கிறார். சிலப்பதிகாரக் கதையைச் சுருக்கித்தரவேண்டும் என்னும் முயற்சியினடிப் படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

கண்ணகி கதை (வில்லுப்பாட்டு)
(அ. க. நவநீத கிருஷ்ணன்)

1953—இல் அ. க. நவநீத கிருஷ்ணனால் இயற்றப் பட்ட 'கண்ணகி கதை' தான் வில்லுப்பாட்டு உருவில் அமைந்துள்ளது. பாடலும் உரையுமாக இந்நூல் விரவிச் செல்கிறது.

"வள்ளல் இளங் கோவளித்த வற்றாத தேனூற்றாம்
சிலப்பதி காரமெனும் செந்தமிழின் நன்னிதியை
உலப்பில் புகழ்படைத்த உயர்வுடை ய பெருங்
கதையை
மா தரசி கண்ணகியாள் தீதில்லா நற்கதையை
பூதலத்துப் பாவையர்க்குப் பொற்புடைய
வழிகாட்டும்
பெண்ணணங்கின் வாழ்வாகும் புண்ணியநற்
சரிதமதைப்
பண்ணான இன்தமிழில் பாடவருள் பண்ண
வேண்டும்

என்று தான் இளங்கோவடிகளின் கதையைத் தேர்ந் தெடுத்தமைக்கான காரணத்தை ஆசிரியர் விளக்கு கிறார். மேலும், "இந்தச் சமயத்திலே நாம் செந்தமிழ்த் தாய்மார்களுக்கு தனித்ததொரு வணக்கம் செலுத்து கின்றோம். ஏன் என்று கேட்டீர்களோ? பெண்ணரசி கண்ணகியின் பண்ணமைந்த நற்கதையைப் பாடப் போகிறோம் அல்லவா? அதற்காகத்தான். இங்குள்ள மங்கையர்க்கரசியர் எல்லோரும், கற்பரசி கண்ணகியின் புண்ணிய சரித்திரத்தை, எண்ணத்தைச் சிதறவிடாது ஒரு முகப்படுத்தி உள்ளத்தோடு கேட்க வேண்டும். கண்ணகியின் கதையைக் கேட்டால், உங்கள் வீட்டிற்கு நன்மை, உங்கள் வாழ்விற்கு இன்பம்; இந்த நாட்டிற்கே நன்மை" என்ற முன்னுரையுடன் ஆசிரியர் ஆரம்பிக் கிறார். கண்ணகியின் கதையை உணர்ந்து பெண்கள் அவ்வழி நிற்கவேண்டும் என்ற கொள்கைக்காகவே இக்கதையைக் கூறுவதாக ஆசிரியர் சொல்கிறார். கேட் பவர்கள் உள்ளத்தில் பதியும் வண்ணம் சந்தப் பாடல் களால் கண்ணகியின் கதையை ஆசிரியர் கூறுதல் குறிக்கத் தக்கது.

நாடு, மலை, ஊர் முதலியவற்றின் புகழ்பாடத் தொடங்கும் இவ்வில்லுப் பாட்டில், சிறப்பு காரணமாக

கண்ணகியே முதலில் அறிமுகப்படுத்தப்படுகிறாள். அதன் பிறகே, கோவலன் அறிமுகப்படுத்தப்படுகிறான்.

கோவலன் கண்ணகியின் மணவினையைக் கண்ட தாய் தந்தையரின் மன நிலையை இளங்கோவடிகள் கூற வில்லை. ஆனால் இவ்வாசிரியரோ,

"கண்ணகி யைப்பெற்ற புண்ணியத்தாய்
கண்டதன் மருமகனாம் கோவலனைக்
கண்ணிமை கொட்டாது பார்த்துநின்றாள்
கட்டழ கன்இவன் தெய்வமென்றாள்" (பக்:15)

என்று பாடலைக் கூறி இதனையே பெண்களுக்குப் புரியும் வண்ணம் வசனமாகவும் கூறுகிறார்.

சோழன் கரிகாலன், மாதவியின் அரங்கேற்றம் காண அழைப்பு அனுப்பியவர்களில் கோவலனும் ஒருவன்.

"அரங்கேற்ற அழைப்பிதழும்
அரசனவன் அனுப்பிவிட்டான்—அனுப்பிவிட்டான்
விரைந்து சபை அடைந்து விட்டான்—அடைந்து
விட்டான்

மேலான கோவலனும்—கோவலனும்
கரிகாலன் சபையடைந்த—சபையடைந்த
கலைவள்ளல் கோவலனும்—கோவலனும்
அருகிருந்த ஆசனத்தில்—ஆசனத்தில்
அமர்ந்து மகிழ்ந்து இருந்தானய்யா—இருந்தானய்யா
(பக் 20)

என்று கோவலன் அவையில் அமர்ந்திருந்த தோற்றம் அழகாகக் கூறப்படுகிறது. இதில் சந்த நயமும் சிறப்பாக அமைந்துள்ளது.

கோவலனின் பிரிவில் கண்ணகி வாடுகிறாள். அவளுடைய வாட்டம் கண்ட தோழி தேவந்தி இருகுளம் நீராடவேண்டும் என்று கூறுகிறாள். இளங்கோவின் கண்ணகி 'பீடன்று' என்று மறுக்கிறாள். இவருடைய

கண்ணகி தமிழரின், தமிழ்ப் பெண்டிரின் பெருமையையும் சேர்த்துக் கூறுகிறாள்.

"அன்புநிறை தேவந்தியே!
அரிய தமிழ் நாட்டியல்பை
இன்பமொடு கேட்டிடுவாய்
இனியவழி காட்டிடுவாய்
பயன்கருதித் தீர்த்தமாடார்
பழையதமிழ் நாட்டுமாதர்
நயனுடைய கணவரன்றி
நற்றெய்வம் கண்டறியார்
கொழுநனே தெய்வமென்று
கொண்டுவணங் கிடுவரம்மா!
பழுதாகும் உன்மொழிகள்
பைந்தமிழர் போற்றாரம்மா!"

என்று அறிவார்ந்த நிலையில் கூறுகிறாள்.

கோவலன் வெட்டுண்டு இறந்ததை ஆசிரியர் அவலச் சுவையுடன் விவரிக்கிறார்.

"தங்கமா மேனியெல்லாம்
தவிடுபொடி யாச்சுதையோ
பொங்கிய குருதிவெள்ளம்
பூமியை நனைத்ததையோ
ஊழ்வினை சூழ்ந்ததையோ
உயர்நீதி ஆழ்ந்ததையோ
பாழ்வினை வந்ததாலே
பாதகம் நடந்ததையோ
உண்டவர் செய்திகேட்டே
உண்ணாமல் எழுந்துவிட்டார்"

என்று ஆசிரியர் அவலச் சுவையைச் சித்தரித்துள்ளார்.

இந்நூலிற்கு ஏற்ற முறையில் வாழ்த்துடன் நிறைவு படுத்துகிறார் ஆசிரியர்.

"சிலப்பதிகாரமது செந்தமிழ்க்கு மணியாரம்
உலப்பிலா னந்தமையா உயர்ந்ததெள்ளமு தமையா
வாழியவே! தமிழ்நாடு, வாழியவே! புலவரெல்லாம்
வாழியவே! இளங்கோவும் வாழியவே! அவர் நூலும்
வாழியவே! கண்ணகி பேர் வாழியவே!
கற்புடையோர்
வாழியவே! இக்கதையைக் கேட்டவர்கள் வாழியவே!
கற்பரசி நற்கதையைக் கற்றவர்கள் வாழியவே!
பொற்புடைய கண்ணகியைப் போற்றியவர்
வாழியவே!
விற்பனர் இளங்கோவை விரும்பியவர் வாழியவே!
அற்புதச் சரிதமிதை ஆய்ந்தவர்கள் வாழியவே!

என்ற ஆசிரியரின் வாழ்த்தில் இளங்கோவின் நூலை ஆய்பவர்களையும் வாழ்த்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

கண்ணகிக் கும்மி
(கரூர் மாவட்டம்)

கரூர் மாவட்டத்தில் கண்ணகியின் வரலாறு கும்மிப் பாடலாகப் பாடப்படுகிறது. இப்பாடலின் கதை புகழேந்திப் புலவர் எழுதியதாகக் கருதப் பெறுகின்ற கோவலன் கதையோடு ஒத்துச் செல்கிறது. இப்பாடல் முற்றுப் பெறா நிலையில் கிடைத்துள்ளது. கண்ணகியின் திருமணம், மாதவி கோவலனோடு வாழ்தல் மாதவியிட மிருந்து கோவலன் பிரிதல் ஆகிய செய்திகள் மட்டுமே காணப்படுகின்றன.

"கைதட்டிக் கும்மி அடியுங்கம்மா—நல்ல
கண்ணகி பாரதம் கேளுமம்மா
மாச்சோட்டான் செட்டியார் பெற்றதோர்
மைந்தனும்
மாபெரு வீரனாம் கோவலனாம்
சீரும் சிறப்புமாய் வாழ்ந்தான் அவன்

செல்லிக் கலியாணம் செய்து கொண்டான்
அய்ந்து வயதான கண்ணகியை—அவன்
அன்புடனே மணம் செய்து கொண்டான்"

என்று அது தொடங்குகிறது.

திருமணத்தின் போது மாதவி நடனமாட வந்தாள். அவள் "நான் மாலையைச் சுழட்டி வீசிடுவேன் அது யார் கழுத்தில் விழுகிறதோ அவரைக் கட்டிச் செல்வேன்" என்று அப்போது சொன்னாள். அவள் வீசிய மாலை கோவலன் கழுத்தில் விழுந்தது. அவனை அவள் அழைத்தாள். அவன் வர மறுத்தான். 'மாலையைக் கழட்டியே தந்திடுங்கள். நான் வந்த வழி நோக்கிப்போறேன்' என்று மாதவி அறிவித்தாள். ஆனால் யாராலும் அம்மாலையைக் கழற்ற முடியவில்லை.

மாதவி தாம்பூலம் தந்து, தாழ்மையாய்ப் பேசினாள். கோவலன் அவள் பின்னால் போனான். பின்பு,

"உண்டானதெல்லாம் பறிகொடுத்தான்—அவன்
ஒண்டியாகவே ஆகிவிட்டான்
காசு பணத்தையும் கொடுத்தான்—அவன்
கண்ணகி தன்னையும் மறந்துவிட்டான்."

கண்ணாடியில் முகம் பார்த்த கண்ணகி, தன் கழுத்தில் மாங்கல்யம் இருப்பது கண்டு, தோழிகளிடம் கேட்டாள். அவர்கள் நடந்தவற்றைக் கூறினார்கள். கணவனை வரவழைப்பதற்காக,

"சர்ப்பங்கள் தீண்டி இறந்து விட்டாள் என்று
தந்திபோல் தபாலும் போட்டுவிட்டாள்."

கண்ணகியின் தபாலைக் கண்டதும் கோவலன், தானாய்ப் புரண்டு அழுதான். மனைவியைப் பார்ப்பதற்கு மாதவியிடம் விடைகேட்டான்.

"உங்களைப் போலவே பதுமை ஒன்றுமே
உண்டாக்கி வைத்துமே போங்கள் என்றாள்
காசுபணம் கொடுத்து விட்டு நீங்கள்
கண்ணகி தானிடம் போங்கள் என்றாள்"

"மாதவி நான் போய்விட்டு வந்து தாரேன்" என்று பொறுமையாய் அவளிடம் பேசிவிட்டு கோவலன், மனைவியை அடைந்தான். மீதமுள்ள பகுதிகள் கிடைக்க வில்லை.

'தந்தி' 'தபால்' என்று இதில் வரும் சொற்களினால், இது ஆங்கிலேயர் வருகைக்குப் பின் எழுந்த நூல் என்று சொல்லலாம். இதில் நடைமாற்றம் மட்டுமே உள்ளது, கதை மாற்றம் இல்லை.

சிறுவர் சிலம்பு
(ர. அய்யாசாமி)

இதை ரேடியோ அண்ணாவாக இருந்த திரு. ர. அய்யாசாமி இயற்றினார். 1967-ஆம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 24-ஆம் நாள் உதயமான சிறுவர் சிலம்பு-- பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை சென்னை வானொலி யில் ஒலித்த சிறுவர் சிலம்பு— ஜைன சமயத்தின் நான்கா வது தீர்த்தங்கரரான பகவான் மகாவீரர் வீடுபேறடைந்த 2500-ஆம் ஆண்டான 1974-இல் விழாக்குழுவினரின் வெளி யீடாக மலர்ந்தது. குழந்தைகளின் உள்ளத்தில் பதியும் வண்ணம் ஆசிரியர் கதைக்கேற்ற முறையில் பாடல்களை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குழந்தைகள் இளம் உள்ளத்தில் தமிழ்ப் பயிர் விளைய வேண்டி ஆசிரியர் ஆங்காங்கே கவிதை நாற்றுகளை நட்டுள்ளார். காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைக் கூற வந்த ஆசிரியர்,

"பழந்தமிழர் பெருவாழ்வும்
பண்பாடும் எடுத்துரைக்க
எழுந்த உயிர் ஓவியமாய்
எழில்நகரம் ஒங்கியதாம்" (ப.1)

என்று தமிழர் பண்பாட்டையும் எடுத்துரைக்கிறார்.

கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகியின் துயரக் கோலத்தை,

"ஒட்டிய மையும் பூவும்
திலகமும் நகையும் நீங்கி
ஒடுங்கினாள் மனையில் ஓயாக்
கவலையாம் இருளில் நைந்தாள்"

என்று படம் பிடித்துள்ளார். கோவலன் இறந்த போதும்

"ஓங்கிய செங்கோல் வளைந்தது; பகையை
ஒடுக்கிய முரசம் அழுததே;
தாங்கிய நீதி தளர்ந்தது; சங்கம்
தழுவிய தமிழும் அழுததே." (ப.53)

என்று இதயம் தோய்ந்து எழுதியுள்ளார்.

கண்ணகியின் திருமணம் முதல் கற்பெனும் இமயம் வரை பன்னிரண்டு பகுதிகளில் சிலப்பதிகாரக் கதையை ஆசிரியர் முடித்துள்ளார். கண்ணகி கோவலனுடன் வான ஊர்தியில் ஏறிக் 'கைதொழும் உலகம் காணக் கற்பெனும் இமயம் ஆனாள்' என்பதோடு ஆசிரியர் முடித்துள்ளார். வஞ்சிக்காண்ட நிகழ்ச்சிகளை ஆசிரியர் விடுத்துள்ளார். எளிய நடையில் எழுதியுள்ள ஆசிரியர் கதைபோக்கில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை.

சிலப்பதிகாரம்

(வி: ஞானமணி)

இது, வி. ஞானமணி அவர்கள் குழந்தைகளுக்காகவே அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டில் (1979) வெளியிட்ட சிறு நூலாகும். "எதிர்காலத்தில் இத்தகு சிறப்புடைய காப்பியம் முழுவதையும் படித்துப் பார்க்க வேண்டும் என்னும் ஆர்வத்தை, இளமையிலே சிறுவர்

நெஞ்சத்தில் விதைக்க வேண்டும் என்னும் ஆசையில் படைக்கப்பட்டிருக்கிறது இச்சிறு கவிதை நூல்" என்று ஆசிரியர் முன்னுரையில் கூறுவதன் மூலம் இந்நூலை எழுதிய தன் நோக்கத்தைப் புலப்படுத்துகிறார். காதையின் உடபொருளை அடக்கி காதைக்கு ஒரு பாடலாக ஆசிரியர் அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் அமைத்துள்ளார்.

''தேரா மன்னா" என்றாள்
திகைத்தான் சற்று மேந்தன்
''பாராயிச் சிலம்பை" என்று
பழியை உடைத்தாள் போட்டு!
ஆராயா துசெய்தோம் என்(று)
ஆவிநீங்க வீழ்ந்தான்! தேவி
தீராப் பழியால் ஆங்கே
திடுமென மயங்கி வீழ்ந்தாள்!" (வழக்கு)

இவ்வாறு மிக எளிய இனிய முறையில் குழந்தைகளுத்துப் புரியக் கூடிய நிலையில் இதில் பாடல்கள் உள்ளன.

விதியோ வீணையோ
(தமிழொளி)

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில தமிழுக்கு ஒளிஊட்ட, கவிஞர் ஒருவர் தோன்றினார். ஆமாம்; அந்த நினைப்பில்தான் அவர் தமிழ் ஒளி என்று தன் பெயரில் ஒளியை இணைத்துக் கொண்டார்.

தமிழுக்கு ஒளி ஊட்ட வந்த அந்தப் பெருங் கவிஞரைத் தமிழுலகம் இருட்டடிப்புச் செய்தது. தமிழின் ஒளியாக வந்த அவரை வறுமை இருள் சூழ்ந்தது. அதன் விளைவு? தமிழ் சுவைத்த அவர் உயிரை—உடம்பை—உள்ளத்தை—காசநோய் சுவைத்தது.

இந்தத் தமிழ்ஒளியின் படைப்புகள், கவிதை, நாடகம், சிறு கதை, உரைநடை, ஆய்வு எனப் பல நிலை

களில் தமிழுலகின் வளம் புதுப்பித்தன, அவருடைய கவிதைக் கீற்றுகள் 'நிலைபெற்ற சிலை,' 'வீராயி' 'கவிஞனின் காதல்' 'நீ எந்தக் கட்சியில்' 'விதியோ வீணையோ' 'கோசலைக் குமரி' எனக் குறுங்காவியங் களாய் ஒளிவீசின. அவருடையசிந்தனை மேதினமே வருக' என்று புரட்சிக் கீதம் பாடியது; கண்ணப்பன் கிளி களாய்ச் சோகக் கீதம் இசைத்தது; 'பாடு பாப்பா' எனக் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்தது. தமிழ் ஒளியின் கவிதைகளாய் சில கவிதை நெஞ்சங்களில் ஒலித்தன.

இவருடைய 'கவிஞர் விழா' 'ஓரங்க நாடகங்களாக மலர்ந்தன; 'சிலப்பதிகாரம் காவியமா நாடகமா', திருக் குறளும் கடவுளும்', 'தமிழும் சமஸ்கிருதமும்', 'தமிழர் சமுதாயம்' என்னும் ஆய்வுப் பேரொளிகள் தமிழின் இருட்டை நீங்கச் செய்தன. 'அறிவூட்டும் நூறு அற்புதக் கதைகளும்' 'குருவிப் பட்டியும்' தமிழுள்ளங்களில் கதை களாய் ஒளி வீசின.

தூய தமிழ் நெஞ்சங்களில் ஒளியாய்த் திகழ்ந்த இவருடைய உள்ளம் சிலப்பதிகாரத்தில் கட்டுண்டது; சிலப்பதிகார மாந்தர்களிலும் மாதவியே இவருடைய உள்ள அரங்கில் அரங்கேறி ஆட்கொண்டாள்; பரத் தையர் குலத்தில் தோன்றிய அந்தக் கற்புத்தாமரையை அவருடைய இதயத் தடாகம் விரும்பியது. சித்திராபதிச் சிப்பியில் தோன்றிய ஒளி முத்தை தமிழ் ஒளி ஏந்தியது. அதன் விளைவாக 'மாதவி காவியம்' தோன்றியது. அந்தக் காவியப் பேரொளியின் சிறு பகுதியே விதியோ வீணையோ என்னும் கவிதைக் கீற்று. தமிழரின் கண்கள், அந்தப் பேரொளியைக் காணும் நாள் எந்நாளோ? தெரியவில்லை. (கவிஞரின் மாதவி காவியம் என்னும் நூல் இன்னும் அச்சாகவில்லை.)

நூல் அமைப்பு

தமிழ் ஒளி என்னும் புனைபெயர் கொண்ட இக் கவிஞர் சிலப்பதிகாரக் கதையில் உள்ள கானல் வரி,

வேனிற் கதை ஆகிய காதைகளில் நிகழ்ந்த கதை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இனிய பாகுகளில நூலாக அமைத்துத் தந்துள்ளார்.

"பண்டைய தமிழ் 'ஆப்பெராக்'களுக்கு ஒருமாதிரியே சிலப்பதிகாரம். அதனை மேலும் வளப்படுத்துவது நமது பழைய கலைக்குப் புத்துயிர் தருவதாகும்!" என்று ஆசிரியரே தம் கருத்தைக் கூறியுள்ளார். (ப 13) மேலும் பிற நாட்டு நாகரிகங்களின் மோதுதலால் அலசகணுற்ற தமிழ் மொழி. இழந்த தனது செல்வத்தை மீண்டும் பெறுவது அதனது தொன்மைக்கும் பெருமைக்கும் சான்றாக மிளிரும. உலக அரங்கில் அதன் புகழ் ஒளிரும் என்று கருதி நான் இம்முயற்சியில் இறங்கியுள்ளேன்" என்று தம் நூலின் முன்னுரையில் கூறிய கருத்து, அவர் சிறப்பாகச் சிலப்பதிகாரத்தை எழுதப்புகுந்ததின்நோக்கத் தைத் தெளிவுறுத்துகிறது.

"விதியை உடைத்திட ஓடி
வீணை உடைத்திடு கின்றாள்;
சதியை உடைத்திட எணணித்
தலையை உடைத்திடு கின்றாள். (ப. 85)

என்னும் வரிகள் இந்நூலின் தலைப்புப் பொருத்தத்தை அறிவிக்கின்றன.

மாதவியின் துன்பத்தையே ஆசிரியர் எடுத்துக் கூற விழைந்ததால் கடற்கரையில் கோவலனும் மாதவியும பாடிய நிலையை விளக்கிக் கூறவில்லை. காதலர் பிரியப் போவதை நினைத்துக் கடற்கரையில் நின்ற புன்னையும் வேதனையால் மலரை உதிர்க்கிறதாம்.

"தீவலம் வந்தவள் வீட்டினை—அவன்
தேடி நடந்திட இங்கொரு
தீவலம் வந்தனள் மாதவி—உயிர்
தீய்ந்தது காமத் தழலினில்! (ப. 30)

என்று கோவலன் பிரிவில் தீயும் மாதவியின் துயரத்தை எடுத்துக் கூறுகிறார்.

கோவலனைப் பிரிந்த மாதவியின் துன்பத்தை மிகுவிக்க வேனில் பருவம் வந்தது. கோவலனின் கூடலில் அவளை இன்புறுத்திய இயற்கை இப்போது பிரிவில் துன்புறுத்தியது. அதனால் "மன்மதனே அம்பு விடாதே; குயிலே பாடாதே; தென்றலே வீசாதே; மலரே வீழாதே; மாலையே வாராதே; நிலவே போ" என்று கூறி, கற்பின் மாதவி மனம் வருந்தினாள்.

அவளுடைய தலைவிதியை மாற்றிய வீணையை,

விதிபோல் எழுந்து
வினையாய் வளைந்து
விளையாடுகின்ற வீணை! (ப. 43)

என்று மாதவியின் துன்பத்திற்குக் காரணமான வீணையைப் பற்றிக் கூறியுள்ளார். வீணையை எடுத்து,

"வாடப் பிறந்த இசை
பாடப் பிறந்த இசை
ஊடப் பிறந்த இசையோ?—அவர்
ஓடப் பிறந்த இசையோ"

மாதவி பாட,

"போனார் உனைப் பிரிந்து
கானா றெனக் கூடந்து
மானார் மொழி வெறுக்க
லானார்—இரை
ஆனார் வழிதொடர்ந்து
கூனார் கொடும் விதிக்கு
நானார் எனைவெறுக்க
லானார்" (ப. 49)

என்று யாழ் பதிலிறுத்தது. வானில் செல்லும் முகிலினங்களைக் கண்டு தூது செல்லாயோ என அவள் வேண்டினாள்,

"மடலில்கிறுக்க
மலராம் பித்திகைக்குச்
சினமுற்ற முகையில்
செம்பஞ்சு பெய்து
சிற்பம் செதுக்குகின்றாள்" (ப.58)

என்று அவள் மடல் எழுதும் அழகு கூறப்பட்டுள்ளது. குருக்கத்திச் செடிக்கு மாதவி என்றபெயருண்டு. அதனால் தன்னைக் குருக்கத்தியாக உருவகப்படுத்தி, மடல் எழுதினாள் மாதவி.

"கற்களும் சுற்களுமாய்க்
கட்டிய கல்லணைபோல்
சொற்களும் சொற்களுமாய்ச்
சொற்றொடர் தீட்டினளே" (ப 66)

என்று அவள் மடலெழுதும் சிறப்பு தீட்டப்பட்டுள்ளது.

மாதவி தான் எழுதிய மடலை வசந்தமாலையிடம் கொடுத்தனுப்பினாள்; கோவலனிடம் சென்ற வசந்த மாலை,

"சரஞ்சரமாய்க் காமன்
சரம்விட்டா ராதலினால்
சுரஞ் சுரமாய் வந்து
துடிக்கின்றாள் மாதவியாள்!" (ப. 71)

என்று மாதவியின் துடிப்பை எடுத்துக் கூறினாள். இதைக் கேட்ட கோவலனோ,

"தாழை மலரினில்
நாக மிருக்குது!
தலையை நீட்டுதம்மா—அது
தலையை நீட்டுதம்மா!
ஏழை மனிதனை இவ்விதம் கொன்றிட
எவ்விதம் கற்று வந்தீர்—கனல
எவ்விடம் கற்று வந்தீர்? (ப. 72)

என்று வசந்தமாலையிடம் கூற, வசந்த மாலையும்

"உள்ளத்திலே ஒரு
நாகம் வளர்ந்திட
ஊட்டி வளர்த்திடுவீர்—பால்
ஊட்டி வளர்த்திடுவீர்!
வெள்ளை மலர்விட
நாகமென வெறும்
விந்தை புரிந்திடுவீர்—வெறும்
விந்தை புரிந்திடுவீர் (ப. 72)

என்று பதில் கொடுத்தாள். ஆனாலும் வசந்தமாலை தோல்வியோடு மடலைக் கொண்டு வந்தாள்.

"கண்களிற் கொட்டிடும்
நீரொடு நின்றவள்
கட்டுரை கூறவில்லை"

என்று மாதவியைக் கண்ட வசந்தமாலையின் நிலையும்,

"பெண்களில் அன்பிற்
சிறந்தவள் மாதவி
பேச நினைக்கவில்லை" (ப. 75)

என்று வசந்த மாலையைக் கண்ட மாதவியின் நிலையும் கலிஞரால் ஓவியமாக்கப்பட்டுள்ளன.

விண்ணில் எழுந்தது வெண்ணிலா. அதைக் கண்ட மாதவி,

"கடல் மூழ்கின்ற
கலமாக நீயும்
உடல் ஜோதிகுன்றி
உருண்டோடி யொழிக!" (ப 77)

எனச் சாபமிட்டாள்.

ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்று கூறும் சமுதாய நியாயத்தை—அநியாயத்தை—நினைத்துப் பார்த்தாள். அப்போது பாடல் வழுக்கிய வீணையை—

நாவு வழுக்கிய வீணையை—காதல் வழுக்கிய வீணையை —கேண்மை வழுக்கியவீணையை முற்றும் வழுக்கிய வீணை உடைந்திட வேண்டும். வெற்றி அடைந்திட வேண்டும். என்ற குரல் ஒன்று ஒலித்தது. யாழைத் தரையில் எடுத்து உருட்டினாள். யாழோ,

"புனலிற் குமிழ்போல் உடைந்தது!
புயலிற் படகாய் உடைந்தது!
கனவிற் கனவாய் உடைந்தது!
கண்மணி வீணை உடைந்தது!" (ப.85)

என்று கூறும் முறையில் அவலத்தின் எதிரொலியாய் வீணை உடைந்தது. உடைந்த வீணையோ,

"மோகம் என்பது வேடிக்கை
மூடர்தம் கடைவாடிக்கை!
தேகம் என்பது சேலைக்கே!
சிந்திப்பாய் இதை இன்றைக்கே" (ப.87)

என்று மாதவிக்கு அறிவுரை கூறி ஒய்ந்தது. புத்தரின் போதமெனும் பொன்மணி நாதத்தால் சித்தம் திருந்தித் திடம் கொண்டாள் அவள்.

"அறமே நெறியாய்
அதுவே தறியாய்
அன்பெனும் உடைநெய்தால்
பிறவிக் குளிரைப்
பெரிதும் போக்கும்!
பிணிவர முடியாது" (89)

என்று உறுதி கொண்டாள். அன்றிலிருந்து காலமெனும் பொன் மேடையில், காதலெனும் பொன் வீணையில் ஓலமிடுங்குரல் அவள் குரலாயிற்று.

இக்கதைக்குப்பின் மணிமேகலை சரிதத்தைக் கூத்து நிகழ்ச்சியாய்க் கூறும் கதையை ஆசிரியர் இயற்றுல

தாகக் கூறியுள்ளார். விதியின் கொடுமையால் அது முடியாமல் போயிற்று.

சில மாற்றங்கள்

1. ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என்று பேசுவது உலக நீதி. ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதியா என்று பொங்கி எழுவது கவிஞனின் நீதி! அந்த நீதிக்குரல்தான் கவிஞர் தமிழொளியை மாதவியிடம் இரக்கம் கொள்ளச் செய்தது. அவளுக்காக வாதாடியது. உலகத்திறகு ஒரு சிறு காவியத்தையே படைத்துக் கொடுத்தது. இது இந்நூலின் சிறப்பாகும்.

2. கோவலனைப் பிரிந்த மாதவியைப் பற்றிக் கூறுவ தால் அவளுடைய அவலம் மட்டுமே இந்நூலில் கூறப் பட்டுள்ளது. அதனால் பிரிந்த காதலியை வருத்தும் இயற்கைப் பொருட்களின் வருணனைகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன.

3. குயில், குருக்கத்தி, மேகம் ஆகியவற்றிடம் மாதவி தன் நிலை கூறி வருந்துவது நயமானது. மாதவி யாழிசை யுடனும் நிலவிடமும் பேசுவதும் அவை பதில் கூறுவதும் புதுமையானது.

4. வசந்தமாலை—கோவலன் விவாதம் புதுமை நிலை உடையது.

5. சிலப்பதிகாரத்தில் வேனிற் காதைப் பகுதியில் மாதவியின் உள்ளம் ஏன் இப்படி இருக்கக் கூடாது? என்ற ஒரு கற்பனை வினாவினைத் தனக்குத் தானே எழுப்பி அதற்கு ஆசிரியர் கண்ட விடைதான் 'விதியோ வீணையோ' எனும் காவியமாகும். ஒரு கலைஞனுக்காக வாழ்ந்த கலையரசி மாதவி தன் கலையுடைமையை—தன்னோடு ஒட்டி உறவாடி யாழை—உடைத்தல் இந் நூலில் ஆசிரியர் செய்த பெருமாற்றமாகும். ''கண்ணகி சிலம்பை உடைத்தாள் என்றால், மாதவி தன் யாழை

உடைக்கட்டுமே" என்று என் மனம் எதிரொலித்ததே இதற்குக் காரணம் என்று கவிஞர் தமிழொளியே இம் மாற்றத்திற்குக் காரணமும் கூறியுள்ளார். (முன்னுரை) உடைந்த வீணையின் குரல், தனக்காக வாழாமல் மன்பதைக்காகவே வாழ்ந்த கவிஞர் தமிழொளியின் பொதுவுடைமை உள்ளத்தின் எதிரொலியே என்றும் கூறலாம். வீணையை உடைத்ததின் மூலம் மாதவி தோற்கவில்லை. வெற்றியே பெற்றாள். அவள் தனி வாழ்க்கையைப் பொது வாழ்க்கையாக்கியதன் மூலம் வெற்றியே பெற்றாள் என்பது ஆசிரியரின் முடிந்த முடிவாக அமைந்துள்ளது.

மாதவி காவியம்
(பொன்னி வளவன்)

மாதவி காவியம் என்னும் கவிதை நூலினை எட்டே நாளில் மிகச் சிறப்பாக உருவாக்கியவர் கவிஞர் பொன்னி வளவன். "பொன்னி என்னும் பெயருக்கேற்ப, பொன்னி நதியின் பெருக்கு போலக்கவிதை வெள்ளத்தை வரவழைத் திருக்கிறார். பல்வகைப் பாக்கள் பின்னிவர— பல்சுவை விருந்து மின்னிவர இந்த மாதவி காவியத்தை உருவாக்கி யிருக்கிறார் பொன்னிப்புலவர்" என்று கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அணிந்துரை வழங்கியிருக் கிறார்.

மாதவியின் பெருமையைக் கூறும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடி கள் தன்னுடைய கண்ணகிக்கு ஈடாக மாதவியைப் பெருமைப் படுத்திக் கூறுகிறார். பின்னால் வந்த நூல் களில் மாதவி அக்காலச் சமுதாயத்தில் பொன்னைப்போல

விரும்பும் பரத்தமைச் சமுதாயத்தின் பிரதிநிதியாகவே சித்திரிக்கப்படுகிறாள். இருபதாம் நூற்றாண்டில் கலைஞர், இளங்கோவின் வாரிசான மாதவிக்கும் ஏற்றம் தருகிறார். பொன்னி வளவன் இன்னும் ஒரு படி விஞ்சிக் கண்ணகியை விட மாதவிக்கே ஏற்றம் தரும் வகையில் அவளுக்கென்று தனி காவியத்தையே எழுதியுள்ளார். தலைப்புக் கேற்ற வகையில் மாதவியைக் குறித்த செயல்களே இந்தக் காவியத்தில் அதிகம் இடம் பெற்றுள்ளன. 27 பகுதிகள் கொண்ட இக்காவியத்தில் ஏறக் குறைய 19 பகுதிகளில் மாதவி வருகிறாள் என்பதிலிருந்தே இது மாதவி காவியம் என்பது வலியுறுத்தப் படுகிறது.

இளங்கோவடிகள் அக்காலப் பரத்தமைச் சேற்றின் பிரதிநிதியாக இருந்த சித்திராபதியின் பெயரைக் குறிப்பிடவில்லை. இந்நூலாசிரியரோ சித்திராபதியின் புன் தொழிலை விரிவாக— சிருங்காரச் சுவையோடு— வருணிக்கிறார்.

"சித்திரா பதி! அவள் செல்வப் பொதுமகள்!
நித்திரை நீக்கி நேசிப் பவர்வாய்
முத்திரை எச்சிலால் முகமெலாம் நனைபவள்!
பத்தரை மாற்றுப் பசும்பொன் மேனியால்
சொத்துடை யார்வரின் சுகம்தர இனைபவள்!
எத்திறத் தோரும் இரவிலே படுக்கும்
சத்திரம் போல் பொதுச் சரித்திரம் படைப்பவள்!
பத்திரம் கற்பெனப் பதிவுசெய் யாத
பத்திரம் அவளோ பதறிட மாட்டாள்! (ப.1)

என்று சித்திராபதியின் இயல்பு கூறி மறைமுகமாக மாதவியின் பண்பை உயர்த்துகிறார் கவிஞர்.

"சேற்றில் பிறந்து சிறந்தசெந் தாமரை!
ஆற்றல் நிறைந்த அன்னை தா லாட்டில்
ஆராரோ! எனும் அன்றே இவளிடம்
யாராரோ" எனது ஆசையாய் நினைத்தாள். (ப. 2)

மாதவியின் தன்மையையும் அவள் வளர்ப்பு முறையையும் நயம்படக் கூறுகிறார் அவர்.

சித்திராபதி தூணின் மறைவிலிருந்து தூயவன் பால் பேசும் முகமாக மாதவியின் பண்பு நலன்கள் வெளிப் படுத்தப்படுகின்றன.

"வாடையென்றால் சூடும்பூ வாடையன்றி இன்னும்
ஆண்
வாடை அறியாமல் வளர்ந்துள்ள இளம் பிள்ளை
ஆடத் தெரிந்தவள்தான், ஆனாலும் மாப்பிள்ளை
தேடத் தெரிந்தவளா? தெரியாத வெகுளிப்பெண்!
பாடத் தெரிந்தவள்தான்; பணக்காரர் மேலேகண்
போடத் தெரியாத புரியாத அப்பாவி!" (17)

என்று மாதவியின் கற்புடைமையைத் தெளிவாக்குகிறாள் சித்திராபதி.

கோவலனைப் பற்றி மாதவி என்ன நினைத்தாள் என்பதை இளங்கோவடிகள் கூறவில்லை. 'மாதவி மகிழ்ந்தாள்' என்ற பகுதியில் கோவலனைப் பற்றிய மாதவியின் எண்ணங்களை ஆசிரியர் கூறுகிறார்.

"சூடியபூ வாடிவிடில் தூக்கிஎறி கின்றார்.
சொத்துகரைந் திட்டவுடன் ஆள்மாற்றுகின்றார்
வாடிக்கை! கணிகையரின் வாடிக்கை! என்று
வழிவழியாய்ச் சொல்லுமிந்த உலகத்தில் அன்பர்
வாடிக் கைதாழ்ந்தாலும் விட்டுவிட மாட்டேன்"
(ப. 23)

என்று மாதவி நினைக்கும் பகுதிகள் அவளுடைய உயர்ந்த உள்ளத்தை—கற்பு உள்ளத்தை—சித்திரிக்கும்.

வேறு ஆள் மாற்று என்று தாய், மாதவியிடம் கூற மாதவி தன் கற்பைப் புலப்படுத்துகிறாள்.

"வாயும் வயிறும் காய்ந்தால் கூட
வஞ்சியர் கற்பைக் காப்பர்!
போயும் போயும் உனது வயிற்றில்
பிறந்தே னேநான் அம்மா?" (ப.28)

என்று வேதனைப்படுகிறாள் மாதவி.

மாதவியில் முதல்கடிதம் வாங்கிப் படிக்காமலே பழிக்கிறான் இளங்கோவின் கோவலன். பொன்னி வளவனின் கோவலன் படித்து விட்டுப் பழிக்கிறான். மாதவியின் இரண்டாவது மடல் படித்த கோவலனின் உள்ளக் கருத்து வெளிப்படுத்தப்படுகிறது.

"பத்தினித் தன்மை தன்னில்
பாங்கான கண்ண கிக்கே
ஒத்தவள் அவளி டத்தில்
ஊடல்நான் கொண்டு விட்டேன்!
எத்திடும் மங்கை யென்றால்
இத்தனை வருந்து வாளா?
மொத்தத்தில் கெட்ட நேரம்!" (ப. 51)

என்று கெட்ட நேரத்தின் மேல் பழிபோடுகிறான் கோவலன். (கடித வாசகம் படித்த கோவலனின் மன நிலையைக் காட்டிய பிறகு மடல் வாசகம் காட்டுவது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது.)

மதுரை எரிப்புக்கு வேறு காரணம் கூறப்படுகிறது. "பாவிகள் போட்ட பழியால் மதுரை பற்றி எரிந்ததுவே" என்று புதிய காரணம் கூறப்படுகிறது. கண்ணகி வழக் குரைப்பதும் மதுரையை எரிப்பதும் இந்நூலில் காட்டப் படவில்லை.

மாதவி துறவியானாள் என்னும் பகுதியில் ஆசிரியர் மாதவியின் தூய உள்ளத்தைக் காட்டுகிறார். கோவலன் இறந்தவுடன் கண்ணகி இறப்பதுபோல், மாதவு கற்புடை யவளாயின் ஏன் அவனுடன் இறக்கவில்லை என்ற வினா விற்கு விடை இந்நூலில் கிடைக்கிறது.

"கண்ணகிபோல் உம்முடன்நான் கலந்துவரக்
கூடாமல்
மின்னிடையாள் நல்லமணி மேகலையைத் தந்தீரே?
ஒப்படைத்த பாரத்தை உருப்படியாய் நான்
சுமந்தேன்;
எப்போது வந்துமகள் எங்கென்று கேட்பீரோ?" (56)

என்ற மாதவியின் கூற்றில் அவளுடைய உள்ளம் புலப் படுத்தப்படுகிறது.

மாதவி தான் துறவியாவதற்குரிய காரணங்களைக் கூறுகிறாள்.

"உன்னோடு குலத்தொழிலும் ஓய்வடைந்து
விட்டதம்மா!
எந்நாளும் பத்தினியாய் இருந்துவரு கின்றேன்நான்
மணிமேக லைஎனக்கு மகளாக பிறந்தவளைக்
கணிகை யென நீயாக்கிக் களங்கமுறச் செய்யாதே
நெய்போட்டு என்கூந்தல் நீவிய ஆள் இனிஇல்லை!
மைதீட்டி வைத்த கண்ணும் மலரஇனி வழிஇல்லை!
வளைக்கும்கை வளைக்கஇசை வழங்கியந்த
என்னிருகை
வளைக்குமினி வாயில்லை; வாழ்தற்கும்
வாய்ப்பில்லை!
எல்லாம் முடிந்ததம்மா என்னுடைய வாழ்க்கையிலே"
(57)

என்று தாயிடம் புலம்புகிறாள்.

"இப்போது துறவி! அவள்எப்போதும் துறவி! இனி
ஒப்பேது அவளுக்கு உலகத்துப் பெண்களிலே?" (58)

என்று துறவி மாதவியை உலகத்துப் பெண்களிலே சிறந்தவளாகக் கூறுகிறார் பொன்னி வளவன்.

இளங்கோவடிகள் கண்ணகிக்கு ஏற்றம் கொடுக்க, இவ்வாசிரியர் மாதவிக்கு ஏற்றம் தருகிறார். அதனால் மாதவி காவியம் என்று தன் நூலுக்கும் பெயர் தருகிறார்.

அடிகள், கண்ணகிக் காப்பியத்தில் மாதவிக்கு ஏற்றம் தந்து ஒரு பகுதியை வழங்குகிறார். பொன்னிலவன் மாதவியின் பெருமைக்காகவே முழுநூலையும் படைக்கின் றார். சேற்றில் பிறந்தாலும் செந்தாமரை என்றும் உயர்வுடையதுதான் என்பதை வலியுறுத்துகிறார். கண்ணகி பெற்ற தெய்வநிலையை அடைய முடியாமைக் குக் காரணமும் காட்டி, உலகத்துப் பெண்களில் அவளுக்கு ஒப்பில்லை என்று தீர்ப்பும் கூறிவிடுகிறார்.

சிலம்பின் சிறுநகை
(சாலை இளந்திரையன்)

முனைவர் சாலை இளந்திரையன் இந்தி மொழியில் உருவாகி வளர்ந்துள்ள 'சுண்ட காவியம்' என்னும் உத்தி முறையைப் பின்பற்றி, தமிழில் 'சிலம்பின் சிறுநகை' என்னும் கவிதை நூலை எழுதியுள்ளார். பழைய காவியத்தின் ஒரு பாததிரத்திற்கு முதன்மை கொடுத்து அப்பாததிரத்தின் மூலமே காவியக் கதையைச் சுருக்கிச் சொல்லுவது இப்புதிய இலக்கிய வகை. இவ்வுத்தியைத் தமிழில் கொண்டு வரவேண்டும் என்ற ஆசிரியரின் ஆசையே இவ்விலக்கியமாக மலர்ந்துள்ளது.

முழுச்சுவை அமைந்த காவியம் தந்த இளங்கோவிற்கு மதிப்பளிக்கும் முறையிலும், சிலப்பதிகாரக் கதையோடு எந்த வகையிலும முரண்படாமலும் இக்கவிஞர் நிகழ்சசிகளைப் படைத்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் சிறந்த பாத்திரங்கள் பல இருப்பினும் சாலை இளந்திரையன் அவர்களின் நெஞ்சம், பொற்கொல்லன் மீதே ஆழப் பதிந்துள்ளது. "சிலப்பதி காரம் நீண்ட கதையாக இருந்தும், ஆசிரியர் இளங்கோ அடிசல் டொற்கொல்லனைப் பற்றி விரிவாகச் சொல்ல

வில்லை. செய்யத்தகாத ஒரு குற்றத்தை அவன் செய்தி தற்குக் காரணம் எதையும் அடிகள் விளக்கவில்லை. அந்த இடத்தை எடுத்துக் கொண்டால் எனது கற்பனைக்குச் சற்று அதிக இடம் கிடைக்கும் என்ற எண்ணத்தாலும், அதன் மூலம் சாதாரண மனிதன் ஒருவன் சூழ்நிலையின் தூண்டுதலால் தவறு செய்து அதன் விளைவைக் கண்டு மனங்கசிந்து அழும் எதார்த்த நிலையை விளக்க ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்ற நினைவாலும் பொற்கொல் லனைப் பற்றியே ஒரு கவிதை பாடுவது என்று முடிவு செய்தேன்" என்ற ஆசிரியரின் குறிப்பு இந்த நூல் உருவான காரணத்தைக் குறிக்கிறது.

பொற்கொல்லர்களின் வாழ்வைப் பாதிக்கக் கூடிய சட்டம் ஒன்று இயற்றப் பட்டது. அதனால் பொற் கொல்லர்களின் உள்ளத்தைப் புண்படுத்த விரும்பாத ஆசிரியர் பொற்கொல்லனின் உளவியல் நோக்கில் கவிதை எழுதப் புகுந்தார் போலும். இதற்குரிய வித்து இவருக் குப்பாவேந்தரின் புரட்சிப்பாடலிலிருந்து கிடைத்துள்ளது எனலாம். பாவேந்தரின காப்பியத்தில் பொற்கொல்லன் களவு செய்த பிறகு அவன் மனத்தில் ஏற்படும் போராட்டம் விவரிக்கப்படுகிறது. சிலம்பின் சிறு நகையில் சிலம்பு களவாடுவதற்கு முன்னும் பின்னும் நேர்ந்த உள்ளப் போராட்டத்தை உளவியல் கண்ணோட் டத்தோடு ஆராய்கிறார் ஆசிரியர். எனவே திருமணத்திற் குரிய பொருள் இல்லாததால் பொற்கொல்லன் களவு செய்ய நேரிட்டது என்று இந்நூலில் புதிய காரணம் கூறப்படுகிறது.

இளங்கோவடிகளின் கதையைத் திருமணத்திலிருந்து தொடங்காமல், (பின்னோக்கு உத்தி முறையினால்) நடுவிலிருந்து தொடங்குகிறார் ஆசிரியர். கதையின் இறுதிக்கட்டமான மதுரைமாநகர அழிவிலிருந்து கதையைத் தொடங்குகிறார். தீயினுக்கு அஞ்சி ஓடுகின்ற பொற்கொல்லன் நடுவழியில்,

"மங்காத மாமதியம்
மங்கி இருளடைந்தே
மெல்லத் தளர் நடந்து
மேதினியில் வந்ததுபோல்,
எல்லா அழகும்
இருந்தும் இருகரத்தால்
ஓடாச் கடியாரம
போலே" (ப 11)

சோகப் பாலை கண்ணகி வருவதைக் காண்கிறான்.

"செல்லச் சிலம்பிழந்த
சீறடிகள் ஓரிரண்டும்
சொல்லி நடந்த
துயர்க்கதையே கேட்கின்றான்" (ப.12)

இதற்குக் காரணம் தான்தானே, என்று புலம்புகிறான் பொற்கொல்லன்.

"சிலப்பதிகாரத்தில் காணாத ஒரு பொற்கொல்லனை இங்கே காண்பீர்கள். அவன் காலத்தால் செத்துப்போகும் வில்லன அல்லன்; சூழ்நிலைக்கு அடிமைப் பட்டுப் பிறகு அல்லல்படும் ஒரு எதார்த்த மனிதன் அவன்" என்று ஆசிரியரே தன் நூலின் முன்னுரையில் எழுதியுள்ளார்.

"என்மனைவி மக்கள்
எடுப்பாக வாழ்ந்ததனால்
என்நிலைமை மீறி
இறுக்கியது என்வறுமை" (ப.46)

என்றும்,

"நின்ற வறுமை
நெருக்க, உயரறத்தைக்
கொன்றதற்குக் காவு
கொடுக்கத் துணிந்து விட்டேன்" (ப. 47)

என்றும் பொற்கொல்லன் சிலம்பு எடுத்ததற்கான காரணத்தைக் கூறுகிறான். பொற்கொல்லன், பொருள் வேட்கையினாலோ, பேராசையினாலோ சிலம்பு கவர வில்லையென்றும் வறுமையினால் தான் சிலம்பு கவர்ந்த தாகவும் காரணம் கூறுகிறான். இவ்வறுமைக்குக்காரணம மனைவி மக்களின ஆடம்பர வாழ்க்கைதான் என்று புதிய காரணம் காட்டுகிறான்.

"கல்லா தவள்முறைமை
காணா தவளையுமே
நல்லாளாய் ஆக்கும்
நயத்தினனே நாயகனாம்" (ப. 48)

என்று தன் குறையையும் உணர்கிறான்.

கோவலன் மேல் பழி கூறக் காரணமாயிருந்த சூழ் நிலையும் இந்நூலில் கூறப்படுகிறது. பொற்கொல்லனின் மனைவியும் எதிர்வீட்டுக்காரியும் சண்டையிடும் போது,

"மாளிகைத் தங்கம்
மடியில் குடிபுகுந்தால்
கோழியும் கொஞ்சம்
குரலெடுத்துக் கூவுந்தான்" (ப. 50)

என்றாளாம் அந்த எதிர்வீட்டுப் பாவிமகள். அதனால் கவல்கிறான் பொற்கொல்லன். அந்த நேரத்தில் தான் தீயில் முழுக வரும் விட்டில் போல் கோவலன் வரப் பொற்கொல்லனின் பேய் நெஞ்சம் எழுகிறது.

"சண்டையைச் சண்டையால்
சாந்தமுறச் செய்வதுண்டோ?
கொண்டலும் கொண்டலும்
கூடி நிலவாமோ?

என்று தான் தவறு செய்ததை நினைத்துக் குமைகிறான்.

ஒவ்வொரு இலக்கியமும் ஏதேனும் ஒரு பயனைக் கொண்டிருத்தல் வேண்டும். அம்முறையில் சிலம்பின் சிறு

நகையும் சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற நோக்கில் எழுதியதாக அமைகிறது. இதை நூலாசிரியரே தெளிவு படுத்துகிறார்." இன்றைய தமிழகத்தில் பொற் கொல்லர் அல்லாதவர்கள் — ஆனால் நான் படைத்துள்ள பொற்கொல்லன் போன்றவர்கள் — நிறைய இருந்து வருவதாகக் கேள்விப் படுகிறேன். அவர்களின் வழியில் செல்லத் துடிப்பவர்களையாவது சிலம்பின் சிறுநகை தடுத்து நிறுத்தும் என நம்புகிறேன். அவர்கள் நின்றால் தானே சமுதாயம் நேரான வழியில் செல்ல முடியும்?" என்று ஆசிரியரே தன் நூலின் முன்னுரையில் கூறுகிறார்.

பொற்கொல்லன் தன் வாழ்வில் பெற்ற பட்டறிவால் உலக மக்களுக்கு அறிவுரை கூறுகிறான்.

"பெண்மையாள் தன் கடமை
பேணத் தவறுகையில்
வீட்டுக் கணவன்
விரகறிந்த வைத்தியன்போல்
மீட்டு வரவேண்டும்
மேலறத்தின் பண்புகளை" (ப. 47)

என்ற பொற்கொல்லனின் கூற்றில் நூலாசிரியரின் அனுபவச் சுவட்டைக் காணமுடிகிறது.

பொய்யர்க்கு ஒரு சொல் என்னும் தலைப்பில் இக் கவிஞர் அறக்கருத்துகளை அறிவிக்கிறார். கதைத் தொடர்பை நிறுத்தி விட்டு அறக்கருத்துகளைச் சொல்லும் இப்போக்கானது நூலாசிரியர் நூல் எழுதியதன் நோக்கத்தைத் தெளிவாக்குகிறது.

"பொய்யிலே வாழப்
புறப்படுவோர் உண்டென்றால்
கையினென் வாழ்க்கை
கதறலைக் கேட்டிடுவீர்;

ஒற்றைப் பொய் தானே
ஒழியட்டும் என்று சொன்னால்
மற்றப் பொய் பத்துப்பொய்
சொல்ல வழிதிறக்கும்!" (ப.58)

என்ற பொற்கொல்லனின் கூற்று நூலின் பயனை அறிவிக்கிறது.

குற்றம் செய்தவர்கள் தண்டனை பெற்றேயாக வேண்டும் என்பது ஆசிரியரின் தீர்ப்பு. குற்றம் செய்தவர் கள் சமுதாயத்தின் பார்வையிலிருந்து தப்பித்தாலும் அவன் மனசாட்சிக்கு அஞ்சியே தீரவேண்டும். அரசன் கொல்லவில்லை யென்றாலும் தன் மனமே தன்னைக் கொல்லுகிறது என்பது பொற்கொல்லன் பாத்திரப் படைப்பு காட்டும் உண்மையாகும். பொற்கொல்லன் தன் தண்டனைக்கேற்ற தீர்ப்பைத் தானே வழங்கி, தானே தண்டனை அனுபவிக்கிறான். அதனால்,

"சில்லென்று பூத்த
செழுந்தீச் சுடருள்ளே
முங்கியே வீழ்ந்து
முறிந்து பொடியாகும்
வெங்காடுமைக் காட்சி
விழிகாண வில்லையோ?
அவ்வனலின் நேரே
அடிபெயர்த்துச் செல்கின்றான்." (ப 79-80)

என்று ஆசிரியர் பொற்கொல்லனின் முடிவைக் குறிப்பாக உணர்த்துகிறார்.

மனிதன் எவனும் குற்றவாளியாகப் பிறப்பதில்லை. சூழ்நிலைதான் அவனைக் குற்றவாளியாக்குகிறது என்னும் பேருண்மையைப் பொற்கொல்லன் நமக்கு உணர்த்துகிறான். சிப்பதிகாரத்தில் பல்வேறு பாத்திரங் கள் இருப்பினும் உலகமக்களுக்கு நீதி உணர்த்துதற்

பொருட்டு கவிஞர் பொற்கொல்லன் படைப்பைத் தேர்ந்தெடுத்து நூலின் பயனைப் பெறும்படி செய்கிறார்.

கோவலன் சரித்திரம்
(டி. டி. சங்கரதாஸ் சுவாமிகள்)

"தமிழ் நாடக மறுமலர்ச்சிக்கு உதவிய மேதைகளில் தலையாயவர் சங்கரதாஸ். சுவாமிகள் தேனினும் இனிய தெள்ளுதமிழ் வசனங்களாலும் தீஞ்சுவைப் பாடல்களாலும் தமிழர் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டவர். அவரால் நாடகத்தமிழ் வளர்ந்தது; செழித்தது; அவரால் பயிற்றுவிக்கப்பட்ட பலர் நாடறிந்த கலைஞர்களாயினர்" என்று கலைஞர் மு. கருணாநிதியால் சங்கரதாஸ் சுவாமிகள் போற்றபபட்டுள்ளார்.

சுவாமிகள் சிறந்த நடிகராக, நாடக ஆசிரியராக, நாடக இயக்குநராக வெற்றி பெற்றவர். பண்டிதர் முதல் பாமர மக்கள் வரை பலரும் கண்டு மகிழும் வண்ணம் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் தமிழ் நாடகங்களை மேடை ஏற்றியவர். தெலுங்கு இசையும், வடமொழி இசையும் தமிழ் நாடக உலகைக் கைப்பற்றியிருந்த காலத்தில் தமிழ் இசையை நாடக மேடைகளில் முழங்கச் செய்தவர்.

சுவாமிகள் எழுதிய இந்நாடகத்தை நாடக மேடைக்குக் கொண்டு வந்து நடித்தவர்கள் ஆலந்தூர் ஒரிஜினல் நாடகக் கம்பெனியாராவர். இவர்கள் இந்நாடகத்தை இரண்டு பாகமாக இரண்டு இரவுகள் நடத்தியிருக்கிறார்கள். அல்லி பரமேசுவர ஐயர் சுவாமிகள் இருந்தபோது கோவலன் நாடகம் ஒரே இரவில் நடிக்கும் முறையில் புதிதாக எழுதப்பெற்றது. விலைமாதர் கூட்டுறவால்

அல்லற்படும் இளைஞர்களுக்கு நீதி புகட்ட ஒரு புதிய கதையை எழுதுவதைவிட, நாடு நன்கறிந்த கோவலன் கதையை எழுதுவது நல்ல பயனைத்தரும் என்பது சுவாமி களின் நோக்கமாயிருந்திருக்க வேண்டும். முதலில் கோவலனாக நடித்த சூரியநாராயண பாகவதர் அவர்கள் சிறந்த பாடகராக இருந்ததால், அவருக்கென்றே பெரும் பாலும் வசனங்கள் தேவையிலலாத முறையில், எளிய நடையில் முழுதும் பாடல்களாகவே சுவாமிகள் எழுதிக் கொடுத்தார். அதன் பிறகு பி.எஸ். வேலுநாயர் அவர்கள் கோவலனாக நடித்தபோதுதான் சில வசனங்களும் எழுதப் பெற்றன என்று கோவலன் சரித்திரத்தில் நடித்த வர்களைப் பற்றி, தி. க.. சண்முகம் அவர்கள் கூறியுள் ளார்.

சுவாமிகள் ''ஒரு கதையின் வரலாற்றைத் திரை, உடை, நடை பாவனையாலும், இனிய கீதத்தாலும் இடத்திற்குத் தக்கபடி வசனத்துடன் இயற்கையாக நடத்தப்படுவதே நாடகம்'' என்று நாடகத்திற்கு இலக் கணம் கூறுகிறார். என்னால் வரையப் பெற்ற ஒவ்வொரு சரித்திரமும் இடத்திற்குத் தகுந்தபடி பல வர்ண மெட்டு களைத் தேர்ந்தெடுத்து இராக தாளத்துடனும் அநேக முதுமொழிகளைக் காட்டி சொற் சாதுரியத்துடனும் நீண்ட அனுபவத்துடனும் வரையப் பெற்றவை என்று நான் சொல்லாமலே நன்குவிளங்கும்'' என்று சுவாமிகளே தன் நாடகங்களைப் பற்றி மதிப்பீடு செய்கிறார்.

முதன் முதலில் சிலப்பதிகாரம் நாடகமாக இவரால் தான் அமைக்கப் பெற்றதுஎன்பதும் இவருடைய கூற்றால் தெரிய வருகிறது ''சிலப்பதிகாரத்திலுள்ள இக் கோவலன் சரிதையை நாடகமாக நடத்தி ஆனந்திக்குமாறு நாலாவித மான வர்ணமெட்டுகளில் பாட்டுகள் அமைத்து இராகம், தாளம் இவைகளைச் சுட்டிக் காண்பித்து என்னாற்றான் முதன் முதலில் நாடகமாக நடத்திக் காண்பிக்கப் பெற்ற தென்பதைச் சொல்லாமலே எல்லோரும் அறிந்தவிஷயம்''

என்றும் ஆசிரியர் தம் நாடகத்தின் முன்னுரையில் கூறு கிறார்.

'கோவலன் சரித்திரம்' என்னும் இந்நாடகமானது 'கோவலன் கதை' எனப்படும் நாட்டுப்புறக் கதையின் நாடக வடிவமாகும். இவருடைய நூலிலிருந்து இளங்கோ வடிகளின் சிலப்பதிகாரத்தினை இவர் படித்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. எனினும் அக்கால மக்களின் நாட்டுப்புறக் கதையார்வத்தை உணர்ந்து அதற்கேற்ற முறையில் நாடகத்தை மாற்றியுரைத்துள்ளார்.

இந்நூலில் கோவலன், கோவலன் செட்டியாராகவும், மாநாய்கன், மாணாக்கன் செட்டியாராகவும், மாசாத்து வான், மாச்சோட்டான் செட்டியாராகவும் பெயர் மாற்றம் பெறுகின்றனர். கண்ணகி கண்ணகையாக மாற்றம் பெறுகிறாள். பொற்கொல்லன் 'வஞ்சிப்பத்தன்' என்றும் பாண்டியமாதேவி தீக்கநாக்கள் என்றும் பெயரிடப் பெறுகின்றனர். நன்மதி, துன்மதி என்று பாண்டியனின் இரு மந்திரிகள் காரணப் பெயரோடு அறிமுகப்படுத்தப்படுத்துகின்றனர்.

எண்பது பக்கங்களில் உள்ள இந்நாடகம் கணபதி துதியுடன் தொடங்குகிறது. இருபது ''சீன்களாகப் பகுக்கப்பட்டு காலம், இடம், பாத்திரங்கள் ஆகியவை அறிமுகப்படுத்தப்படுகின்றன. தலைப்புகளும் கொடுக்கப் பட்டுள்ளன நாடகத்தில் பாடல்களுக்கு முதன்மை கொடுக்கப்பட்ட காலக்கட்டத்தில் இந்நூல் இயற்றப் பட்டது என்பது நினைவு கூரத்தக்கது. அதனால் வசனத்தை விடப் பாடல்களே அதிகமாக வந்துள்ளன. எழுபத்திநான்கு பாடல்களும், பன்னிரண்டு விருத்தங் களும், 12 கலித்துறைகளும் ஒரு வெண்பாவும் இதில் இடம் பெற்றுள்ளன. 'தக்க பாராங்கல்லைத் தூக்கி' 'சம்மனது உங்கள் பாதம்' முதலான முப்பத்தொன்பது மெட்டுகளில் பாடல்கள் அமைந்துள்ளன. இராகமும், தாளமும் குறிப்பிட

பட்டுள்ளன. இரு பாத்திரங்களின் உரையாடல்கள் பெரும்பாலும் பாடலாகவே அமைகின்றன.

இவருடைய காலத்தில் வழங்கப்பட்ட பேச்சு வழக்கும் அறிந்து கொள்ள முடிகிறது. சான்றாக சதுரு, இட்டுகினு, சமாச்சாரம், கடுதாசி, பரிசம், துகை, நிக்கி ராங்களாம், லிகிதம், கும்பலாக, முணுக்கு, கும்பிடறே னுங்க, குந்துங்க, இஷ்டம், சகபாடிகள் ஆகிய பேச்சு வழக்குகளைக் குறிப்பிடலாம்.

கதையமைப்பு

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகத்தில் பாடல்களின் மூலமே கதை தொடர்கிறது. பாட்டு முடிந்ததும் பார்ப்பவர்களுக்குப் புரிய வேண்டி வசனமும உடனே வருகிறது.

கோவலன் கண்ணகை திருமணத்தைப் பற்றி அவர்களின் தந்தையர் மச்சோட்டான் செட்டியும், மாணாக்கன் செட்டியும் பேசுகின்றனர். இவர்களின் உரையாடலிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி யில் நடைபெற்ற திருமண முறையை அறியமுடிகிறது. ''நம்ம ஜாதியிலே பெண் சிறிசு பெருசு என்று ஏது? பணம் நிறையயிருந்தா சரி ''(பக்.5) என்னும்மாணாக்கன்செட்டி யின் கூற்றிலிருந்து செட்டியார் சாதியில் நடைமுறையி லிருந்த இளமைத் திருமணத்தையும், எல்லாவற்றையும் விட பணத்திற்குக் கொடுக்கப்பட்ட முதன்மையையும் உணர முடிகிறது. நம்ம வீட்டில்தான் கல்யாணம்செய்ய வேண்டும். ஆயிரம் ரூபாய் பரிசம், நகை 2000 ரூபாய். சின்ன மேளம் மாத்திரம் உங்கள் பக்கம்! மற்றச் செலவு எங்கள் பக்கம்" (ப. 6) என்று மாச்சோட்டான் செட்டி கூறுவதால் திருமணச் செலவு, பரிசம் போடுதல், நகை அளித்தல் முதலிய செலவுகள் மணமகன் வீட்டா ருடையது என்பதை அறிய முடிகிறது. இரு வீட்டாருமே மாதவியின் சதிர்க்கச்சேரி வைக்க வேண்டும் என்பதில் ஒன்றுபடுகின்றனர்.

கோவலனின் திருமண நாளில் நடந்த சதிர்க்கச்சேரியில் நடனம் ஆடவந்த மாதவி, தான் கழற்றி வீசும் மாலை யார் கழுத்தில் விழுகிறதோ அவர்களை மணவாளனாகக் கொள்வாள் என்று நிபந்தனை கூறினாள். (ப.9)

அவள் 'ஏமி மாயம்' என்னும் மெட்டில்,

"கந்த நாதா—விந்த பாதா
வந்த ருள் தா தா" (ப.10)

என்று நடனம் ஆடிக்கொண்டே மாலையைச் கழற்றி வீச, அது மணவறையில் இருந்த கோவலன் கழுத்தில் விழுந்தது. மாலை தன் கழுத்தில் விழுந்ததைக் கோவலன் அறியவில்லை. சபையில் இருந்த அனைவரின் கழுத்தையும் மாதவி சோதித்தாள். அம்மாலை கோவலனின் கழுத்தில் இருப்பதைக் கண்டவுடன் நட்டுவனாரை அழைத்து, கோவலனை நாயகனாக அடைந்ததைப் பற்றி மகிழ்ந்து கூறினாள். (இந்நூலில் மாதவியின் தாயார் குறிப்பிடப் படாததால் தாயாரின் செயலை நட்டுவனாரே செய்கிறார்.) மாலையைக் கழற்றித் தாருங்கள் என்று மாதவி கேட்க, கோவலனால் மாலையைக் கழற்றித் தர முடியவில்லை. பல ஆயுதங்களால் சேதித்து எடுக்க முயன்றும் வெற்றி கிட்டவில்லை. கத்தி ஒடிகிறது; இரும்பம் பொடியாகிறது; கல்யாணம் செய்து கொள்ளும் போதே இவ்வித வில்லங்கம் நேருமானால் இல்லறம் நடத்தும் போது என்ன அனர்த்தம் நேருமோ என்று கோவலன் எண்ணினான். மாலைக்குப் பதிலாக வேறு எதையாவது கேள் என்று கோவலன் கூறினான். உடனே மாதவி,

"என்னுடன் வருவதற்த இடமில்லையோ உம்மைநா
னிங்குவிட்டுப் போகமாட்டேன்பார்பார்பார்!"(ப.15)

எனப் பல்லவியில் தன் கருத்தைக் கூறினாள். அதைக் கேட்ட கோவலன்,

"சொன்னமொழி கேட்கமனம் புண்ணாகுது
எந்தனை நீ
தொந்தரவு செய்யாமலே போ போ போ" (ப 15)

என்று அனுபல்லவியில் மறுப்புக் கூறினான்.

(சும்சும் பியாரி மெட்டு—தேசிக தோடி இராகம்-
ஆதிதாளம்)

இந்நாடகத்தில் வெற்றிலை போடுதல் ஒரு கலை யாகவே அமைந்துள்ளது. மாதவி 'ஆணில் அழகா அர்ச்சுனனே' என்ற மெட்டில் பைரவி இராகத்தில் பாடி ஆடிக்கொண்டே கோவலனுக்கு வெற்றிலை கிழித்துக் கொடுத்தாள்.

வெற்றிலையைச் சுவைத்ததும் கோவலன் தன்நிலை மாறினான். (மாதவி வெற்றிலையில் வசிய மருந்தைக் கலந்து கொடுத்ததை ஆசிரியர் நேராகக் கூறவில்லை) வெற்றிலை கொடுத்தமாதவி கோவலனைஅழைக்காமலே, "போய் வருவேன் போய்வருவேன் சபையோரே நான்" என்று கூற, கோவலன் "போகலாமோ என்னை விட்டுப் பூவையே நீதான்" என்று வாதாடினான். பின் இருவரும் சேர்ந்து செல்ல, சுற்றத்தினர் கோவலனைப் பிடித்துக் கட்டினர்.

"உதைப்பேனுங்களை ஓடிடுவீர்
உங்களுங்கள் வீடு தேடிடுவீர்
சிதைப்பேன் கிட்டிடில் நிச்சயமாய்
தெரிவீரிதனை இச்சமயம்—இந்தத்
தேவியே தந்தைதா
யாகுவாள் கண்டீர்" (ப.18)

என்று மனம் மாறிய கோவலல் வில் வளைத்திடுவேன்' என்ற மெட்டில் பாடினான். சுற்றத்தார் யாவரும் சேர்ந்து கோவலனை ஓர் அறையில் போட்டுப் பூட்டினர். காமம் தன்னை வருத்துவதாகக் கூறும் கோவலன்

ஓட்டைப் பிரித்து, சுவரேறி குதித்து ஓடினான். உறவினர் காவலிலிருந்து தப்பிய கோவலன் 'திருக்கடையூரில் சித்திரத் தேரோடும் வீதியில்' என்று மாதவி சொன்ன அடையாளத்தை நினைவில் வைத்து அலைந்தான். 'பருவகாலத்தை வீணாய்' என்ற மெட்டில் புலம்பிக் கொண்டே திரிந்தான். எதிரே வந்த மாதவியின் நட்டுவனார் அவனைக் கண்டு அழைத்துச் சென்றார். மாதவியைக் கண்ட கோவலன், கருணை கூர்ந்து ஒரு முத்தம் தரும்படி வேண்டினான். அவளோ, பெரிய குடும்பத்தைச் சேர்ந்த கோவலனின் அன்பு என்றும் மாறாதிருக்கும் பொருட்டு 'பஞ்சபூத சாட்சியாக, சத்தியம் செய்யச் சொல்ல, அவனும் அவ்வாறே செய்தான்.

அக்காலப் பரத்தையர்களின் சாகசம மாதவியின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. அவள் கவலையோடு இருப்பதாக நடித்தாள். அதற்குக் காரணம் கேட்க, தன் தாய் நட்டுவனாரிடம் கோவலன் குடும்ப விஷயங்களைப் பற்றிக் கவனிக்காமலிருப்பதாகக் குறை சொல்லக் கேட்டு, தான் வருந்துவதாக மாதவி கூறினாள். உடனே அவன் தன் தந்தைக்கு லிகிதம் (கடிதம்)ஒன்றுஎழுதிக் கோவலன், திருக்கடையூர் என்று கையொப்பமிட்டு அனுப்பினான்.

காவிரிப்பூம் பட்டினத்திலிருக்கும் கண்ணகை தன் தோழி தேவந்தியிடம்,

"கழுத்தில் மாங்கல்ய மிருக்குதடி எனக்குக்
கணவனெங்கே காண்பதற்கு" (ப.24)

என்றும்,

"பழுத்திருக்கும் கனிபோல பருவம் வந்து நிறைந்தும்
பார்த்தாலை நாளதுவரை பார்க்கவில்லையே
யிசைந்தும்" (ப.24)

என்று கேட்க, தேவந்தி, கண்ணகையின் ஐந்தாம் வயதில் திருமணம் நடந்த அன்று மாதவியிடம் சென்றதையும் பன்னிரண்டாண்டு கழிந்து அவன் திரும்பி வராததையும் கூறினாள். அதைக் கேட்டவுடன் கண்ணகை தாலியைப் பற்றி நீண்டதொரு சொற்பொழிவு செய்தாள். "அடி என்னாருயிர்ப் பாங்கி! என்கழுத்தில் கட்டிய இம்மாங் கல்ய மானது, விளையாட்டுக்காகக் கட்டியதல்ல, இகபர சாதனத்தை அடைவற்கு ஏதுவாகிய, மேலேறிச் செல்லக் கூடிய நூலேணியாகும். இன்னும் சதிபதியாகிய இருவரும் எக்காலமும் விலகாதிருக்கும்படி பூட்டிய தளையாகும். தவிர, பெண்களுக்கு அணிகலமாகிய கற்பென்னும் பூஷணத்தைக் காவல் செய்யும் வேலியாகும். இத்தனை பெருமை வாய்ந்த தாலியானது, என்னைப் பந்தப்படுத்தி மணவாளனை பரநாரிடன் செல்லச் செய்தது என்பதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாகத் தோன்றுகிறது. சாதாரண மாய் ஒருவன் ஒரு நிலத்தை வாங்கினால் அதனை எத்தனைப் பக்குவத்துடன் பாதுகாத்து வருகிறான். இந் நிலமோ அவ்வாறல்ல.

"வெம்பூ விளையும் விளைநிலத்திற் றேன்சொரியும்
ஐம்பூ விளையும் அமிர்தநிலம்—தம்பதியைக்
காக்குநில மின்பதுன்பங் கண்டன்பு கொண்டுகதி
சேர்க்குநில முப்போகச் செய்" (ப.16)

உற்றார் பெற்றார் உறவின் முறையார் சாட்சியாக அவர்கள் முன்னிலையில் ஒப்புக் கொண்ட நிலமாகிய என்னை மறந்து கல்லும் முள்ளும் நிறைந்த உவர் நிலமும் பல பேருக்குச் சொந்தமான சுடுகாட்டையொத்த ஒரு தாசியைப் பெரிதாக எண்ணி, மாப்பிள்ளைக் கோலம் மாறா முன்னம் போய்விட்டார் என்பதை நினைக்க! நினைக்க!, என்வயிறு பகீரென்கிறதே! ஐயோ! தாசிகள் மகா மோசக்காரிகளாச்சுதே! உத்தமராகிய காதலரை என்ன துன்பம் செய்கிறார்களோ! தெரியேனே! என்னை அடியோடு மறக்கடிக்கச் செய்திருப்பார்கள்! (ப.26)

என்று புலம்பினாள் கண்ணகை. இந்நூலில் கண்ணகை பேரறிவு வாய்ந்தவளாக—தாலியின் பெருமையை அறிந்த வளாக—குலமகளிர்க்கும் பரத்தைக்குமிடையே உள்ள வேறுபாடு தெரிந்தவளாகக் காட்டப்பட்டுள்ளாள்.

கண்ணகை தேவந்தியிடம் கோவலனை வரவழைக்க வகைமுறை கேட்க அவள் கடிதம் எழுதச்சொல்லி அதன் மூலையில் தீதுகாட்ட சுட்டுவிடு என்று சொன்னாள். தோழியின் அறிவுரைப்படி கண்ணகை (ஆசிரிய விருத்தத்தில்) கடிதம் எழுதினாள். கண்ணகை கொதிசுரத்தால் வாடுவதாகவும், கோவலனைக் காண் பதற்காகவே உயிர் நிலைத்திருக்கிற தென்றும் தன் கடிதத்தில் குறிப்பிட்டாள். இறுதியில் 'கண்ணகை' என்று கையொப்பமிட்டும் அனுப்பினாள். அந்தக் கடிதத்தைக் கண்டு கோவலன் விம்மி விம்மி அழுதான். கண்ணகி யைக் காண, மாதவியிடம் அனுமதி கேட்டான். உடனே மாதவி, "அவளென்ன? என்னைப் பார்க்கிலும் எந்த வகையில் மேன்மையுடையவள்? தாங்கள் என்மீது கொண்ட அன்பிற்கு மாறாக நானிது வரையில் நடந்த துண்டா! ஏதோ அவளுக்கு விதி முடிந்தது. சனியன் தொலைந்தது என்று சந்தோஷமாயிருப்பதை விட்டு ஏங்கி, ஏங்கி, மனத்துயரப் படுகிறீர்களே" (ப.31) என்று கூறினாள். கோவலனோ கண்ணகையை இழந்ததற்கு வருந்தவில்லை. ஆனால்எந்தன் சாதியார்கள் வந்திருப்பார்கள். நான் போக வில்லையென்றால் அவளுக்குக் கொள்ளி வைக்க மகனில்லை. அதனால் நான்தான் கருமம் செய்ய வேண்டும். அதனால் உத்தரவு தரவேண்டும்டி" என்று வேண்டினான். உடனே மாதவி, ஆசைமறந்திடுவானோ என்று வருந்த அவன் ஆறுதல் கூறுகிறான். மாதவி" கோவலனைப்போல் பேசும், சிரிக்கும் பதுமை, ஒன்று பொன்னால் செய்து தரவேண்டும் என்று ஆணையிட் டாள். அதைக் கேட்ட கோவலன் ஒரு பதுமையைப் பெற்று,

"பாங்கான பெண் மயிலே
பாவையே யானால் பதுமை உயிர் பெற்றுப்
பகரவும் வேணுமடி" (ப.34)

என்று வேண்ட, உடனே பதுமை வாய் திறந்து, 'ஏ மாதவ், கோவலன் செட்டியாரை அனுப்பாவிட்டால் துடைப்பத்தால் அடிப்பேனென்று மிரட்டியது. அவள் கோவலனைப் போகவிட்டாள்.

கண்ணகை வெற்றிலையில் மைதடவி அனுமார் மந்திரம் ஓதினாள். அதன் மூலமாக மணவாளன் நிலை தெரிந்தது. தங்கப் பதுமையுடன் மாதவி பேசுவதும் மகிழ்வதும் தெரிந்தது. உடனே சிலனிடம் பதுமை எரிய வேண்டினாள்.

பதுமை எரிந்து சாம்பலானதைக் கண்டு கோவலன் மோசம் செய்து விட்டான்; அவன் மந்திரம் கற்றவன் போலும் என்று மாதவி எண்ணினாள். அவனை ஏமாற்ற விரும்பி, பாம்பு தீண்டித் துடிப்பதாகக் கடிதம் ஒன்று எழுதி நட்டுவனாரிடம் கொடுத்தனுப்பினாள்.

திருக்கடையூரின் அண்மையிலுள்ள காட்டின் வழியாகக் கோவலன் போகும்போது, நட்டுவனார் அவனைச் சந்தித்துக் கடிதம் கொடுத்தார். செய்தியைப் படித்த கோவலன் 'பிடித்த கொம்பையும் மிதித்த கொம்பையும் விட்டவன்போலானேனே' என்றுவருந்தினான். கண்ணகை இறந்து விட்டாள். மாதவியோ இறக்கும் தறுவாயிலிருக்கிறாள். தாலிகட்டிய தையாளைவிட நித்தம் இன்பந் தந்த நேரிழையாள் சிறந்தவள் என்று நினைத்த கோவலன் மீண்டும் மாதவியிடம் திரும்பினான்.

திரும்பிய கோவலன் மாதவி உயிரோடு இருப்பதைக் கண்டு கோபித்தான். பாலை எரிந்து கிடப்பதைக் காட்டிய மாதவி, கோவலன் தன்னை ஏமாற்றியதாகப் பழித்தாள். கோவலன் கண்ணகையின் வீட்டிற்குச் சென்று திரும்பி வந்தவுடன் பாலை செய்து தருவதாகக்

கூறினான். உடனே மாதவி கடுக்கன், மோதிரம், காப்பு முதலாபரணமெல்லாம் கழற்றிக் கொடுத்தால் அனுப்புவதாகக் கூறினாள். மேலும் தாடை (முடி) களைந்து தரச் சொன்னாள். அதற்குப பிறகும் பத்து லட்சம் பொன் கொடுக்க வேண்டுமென்றாள். ''கண்ணகையின் வீட்டிற்குப போனால்தானே பொன் கொண்டு வரமுடியும்" என்று கோவலன் கூறினான். மாதவி கோவலனிடம் ஈசுவரன் மேல் ஆணையிட்டால்தான் நம்ப முடியும் எனறு கூற, கோவலனும் ஈசன் மீது ஆணையிட்டு, கண்ணகையன் இல்லம் திரும்பினான்.

மாதவியைப் பாம்பு கடிக்கவில்லை என்பதை அறிந்து வெகுண்ட கோவலன் இறக்காத கண்ணகையைக் கண்டு சினம் கொள்ளவில்லை. மாறாக, 'கல்யாண் காதலி' என்று வாழ்த்தினான். கோவலனைப் பார்த்தவுடனே கண்ணகை 'வழிவிடப் போன அத்திரி என்ற மெட்டில் பாடினாள்.

வேசியாசை நீங்கியென் வீடுதேடி வரவும்
விருப்ப மின்றுதான் வந்ததோ?

அனுபல்லவி

காசுதுணிமணிகள் கைப்பொருள்களையெல்லாம்
காதகியான அந்த மாதவியாள்பொருந்தக்
கழற்றிவிடுக்க வருத்தமிகுந்து
மனைக்குள்ளிருக்க மனத்தில்நினைந்து (வேசி)

சரணம்

கப்பல் கப்பலாய்ச் செல்வம்கணக்கில்லாமல்
கொடுத்தீர்
காலாழி பீலி மிஞ்சி மேலாம்நகை கொடுத்தீர்
குப்பல் குப்பலாய்நல ரத்னம்கொட்டிக் கொடுத்தீர்
(வேசி) (ப. 42)

என்று பழித்தாள். மேலும், ''பிராணபதி! இப்பொழுதாவது அடியாள் மீது கருணைகூர்ந்து வந்து சேர்ந்

தீர்களே! இதுவும் நான் செய்த பாக்கியம் தான்" என்றாள்.

கோவலன், 'மாய வஞ்சகி மருந்து வைத்தாளோ? மறக்க மாட்டாமல் அநேகம் காசைச் செலவழித்தேன்' என்று மாதவியை நிந்தித்தான். கண்ணகியும்,

"வேசியர் தங்களுக்கே காணவே நேசம்
வேறையவர்கட்கேது உண்மையன்புகால்வீசம்
மோசம் செய்வதற்கென்றே முளைத்த அவரை நம்பி
முன்னே எண்ணிப் பாராமல் இந்நாளில் மனம்
வெம்பி" (ப. 44)

என்ன பயன் என்று கேட்டாள். மாதவி செய்த கொடுமைகளைக் கோவலன்பால் அறிந்த கண்ணகை கோபமுற்று மாதவியைச் சபிப்பதாகக் கூற, கோவலன் பொறுக்கும் படி வேண்டினான். உணவு உண்ணச் சென்ற கோவலன் மாதவிக்குச் செய்து கொடுத்த சத்தியத்தைக் கருதி இலையினின்றும் எழுந்து விட்டான். அவனுக்கு ஆறுதல் கூறப் புகுந்த கண்ணகை, "மோசஞ் செய்வோர், சூது விளையாடுவோர், கண்ணமிடுவோர், பொய் சொல்லுவோர், கட்குடிப்போர், தாசியர் முதலானவர்களிடத்தில் செய்யும் சத்தியத்துக்கு விரோதமாக தோஷத்தைத் தராது" என்று கூறிக் கோவலனை உணவுண்ண அழைத்தும் கோவலன் மறுத்து விட்டான். மாதேவியின் கடனை அடைக்கக் கண்ணகியின் சிலம்பொன்றே போதும் என்று சிலம்பைக் கேட்டான். உடனே கண்ணகை, 'ஐயோ! நாதா! என் மனத்தைச் சோதிக்கின்றீர்களா என்ன? இச்சிலம்பானது நான் பிறக்கும்போதே என் பாதத்திலிருந்ததாகத் தெரிகிறது. இதை எவ்விதம் சுழற்றுவதென்று தெரியவில்லையே!' என்று கூறினாள். மேலும்,

"கூடப் பிறந்த தெருமீகாலமுள்ளபொற்சிலம்பு
கன்னானறிந்ததில்லை கடைத்தெருவில்போன
தில்லை
செட்டியறிந்ததில்லை தராசில்வைத்துநிறுத்ததில்லை

ஒட்டாணி தானுமில்லை ஒருபச்சமும் குற்றமில்லை
திருகாணி தானுமில்லை தில்யமுளபொற்சிலம்பை
எப்படிக்குநான்கழற்றி யவர்கையிலேகொடுப்பேன்
கூத்தியாள் கடனுக்காக கொண்டவள்சிலம்பை விற்க
பார்த்து வருந்துகிறார் பலையினி யேது சொல்வேன்
என்பர்த்தாயிந்தவேளையிலே பசிதீரவேணுமையா
கர்த்தனே கைலைவாசா கழற்றவழி தாருமையனே"
(ப. 51)

என்று ஈஸ்வரனை வேண்டியவுடன் சிலம்பு சுழல, கழற்றித் தந்தாள்.

கோவலன் சிலம்பை "மதுரைக்குச் சென்று விற்கிறேன்" என்று கூறியபோது, அசரீரி ஒன்று எழுந்தது. "இந்தச் சிலம்பை உன் நாயகன் எடுத்துக் கொண்டுபோய் மதுரையில் விற்காமல் வேறு எந்த நகரத்திற்காவது போகச் சொல்" என்ற அசரீரியைக் கேட்ட கண்ணகை கோவலனைத் தடுக்க விரும்பினாள். மாயவரம், கும்பகோணம், தஞ்சாவூரில் சிலம்பு வாங்குவோர் இல்லையா என்று கண்ணகை கேட்க, தன்னைத் தெரிந்தவர்கள் அநேகம் பேர் அவ்வூர்களில் இருப்பதாகக் கோவலன் கூறினான். "மாமதுரை சென்றால் நீர் மடிவீர்" (ப. 52) என்று அசரீரி கூறுகிறதே என்று கேட்டபோது "வந்திடத்தக்க விதியிருந்தாலது மாறுமோ நம் மதியால்" என்று கோவலன் கூறினான். உடனே மதிநுட்ப முடைய கண்ணகை, (ப. 52) "விதியால் வெல்லலாம் என்றீர். சும்மா இரும். இதை விற்க ஏன் போகவேணும்?" என்று கேட்டாள். கோவலன் "விஸ்தாரமெல்லாம் பேசி என்னைத் தடுக்காதே" (ப. 53) என்று கூறினான். தன்னை உடனழைத்துச் செல்லக் கண்ணகை வேண்டிய போதும் கோவலன் மறுத்தான். கண்ணகையின் பிடிவாதம் தாங்க முடியாமல் ஒருவழியாக ஒத்துக் கொண்ட கோவலன் அவளை ஏமாற்ற வேண்டிக் கட்டுச்சோறு மூட்டை கொண்டுவரச் சொன்னான். சோற்று மூட்டையுடன்

வந்த கண்ணகை, கோவலன் தன்னை ஏமாற்றிச் சென்றதை அறிந்தாள். உடனே கண்ணகை சிவனை நினைத்துக் கோவலன் போகும் வழியில் மாதவியை போல் ஒரு கற்சிலை உண்டாக்கினாள். அதைக்கண்ட கோவலன் 'பாதி உச்சி வேளையில் மேனி பாடும் படியாக ஏன் நிற் கிறாய்' என்று கூறி முத்தம் ஒன்று கொடுக்க, அது கல்லாகத் தெரிந்தது அதற்குள் கண்ணகை அவனைச் சேர்ந்து விட்டாள்.

சிறிது தூரம் சென்றதும் தாகம் எடுத்ததால் கோவலன் நீர் கொண்டு வரச் சென்றான். அந்நேரத்தில் அங்கு வந்த கள்வர் கூட்டத்திற்குத் தன் அணிகலன்களைக் கழற்றிக் கொடுத்தாள். கண்ணகை கள்வர்களில் ஒருவன் மாங்கல்யத்தையும் கேட்டதால் சிவனை நினைத்து அவர் களைக் கல்லாகவும் வெளவாலாகவும் மாற்றினாள். கோவலன் நீர் கொண்டு வந்ததும் இரங்கி விமோசனம் கொடுக்குமாறு வேண்டினான். மீண்டும் கண்ணகை சிவனை வேண்டி அவர்களை முன் போலாக்கினாள்.

மாதரி தயிர், மோர், பால் ஆகியவற்றை விற்றுக் கொண்டு சென்ற போது, தன் குலப் பெருமையை, 'மீனலோச்சனி உன்பாதமே கெதி' என்றமெட்டில் பாடிக் கொண்டே சென்றாள்.

பாலின் பெருமையைக் கூறிக்கொண்டே விற்ற அந்த யாதவப் பெண்மணி கோவலன் கண்ணகையின் வாடிய முகங்கண்டு மோர் தந்தாள். அவள் கோவலனைப் பார்த்து 'எந்தக் குலத்தில் உதித்தவர்கள்?' என்று கேட்க, அவன் தன் வரலாறு முழுவதும் கூறினான். கண்ணகையை யும் அவளிடம் அடைக்கலமாக வைத்தான்.

சிலம்பு விற்றுவர விரும்பிய கோவலன் கண்ணகியைப் பார்த்து "நீ நல்வாக்கு கொடடி" என்று கேட்டபோது, கண்ணகை ஏரடையாளம் வைத்துப் போகுமாறு கூறி னாள். ஒரு தேங்காய், ஒரு மாங்காய், கொஞ்சம் சந்தனம்,

மலர், ஒரு செம்பில் நீர், இவற்றை வைக்கும் பெட்டி, திரு விளக்கு ஆகியவற்றைக் கொண்டு வரச் சொன்னான். கோவலனின் இறப்பில் அவை மாறும் நிலையையும் கூறினான். (பக் 64—65)

மதுரை நகர வீதியில் கோவலன் சிலம்பு விற்று வரும் போது எதிரில் வஞ்சிப்பத்தன் வந்தான். தான் சிலம்பு விற்றுத் தருவதாகவும் பத்துலட்சம் பொன்னுக்கு மேல் கிடைத்தால் தனக்கு ஏதாவது கொடுக்க வேணடும். பிள்ளைக்குட்டிக்காரன் என்றும் சொன்னான். கோவலன் "எனக்கு வேண்டியது பத்துலட்சம் பொன். அதற்கு மேல் எவ்வளவு கிடைத்தாலும் தாங்களே எடுத்துக் கொள்ளலாம். அதற்குத் தடையில்லை" என்று மகிழ்ச்சியுடன் கூறினான்.

பாண்டியனிடம் வஞ்சிப்பத்தன்கோவலன் சிலம்பைத் திருடிய கள்வன் என்று அழைத்துச் சென்றான். பாண்டியன் இருவரையும் விசாரித்தான். பாண்டிய மாதேவியிடமும் கேட்டான். அவள் சிலம்பு தன்னுடையதல்ல என்று சொன்னதோடு அதைக் காலில் போட்டால் எரிவதாகவும் கூறினாள்.

பாண்டியன் கோவலனைக் கள்வனல்ல என்று நிருபிக்க, சத்தியம் செய்யும்படியாகக் கூறினான். அவன் கண்ணகையை நினைத்து பாம்பின் தலையிலிருந்து சிலம்பை எடுத்துக் கொடுத்தல், நெருப்பிலிருந்து சிலம்பை எடுத்தல், யானையின் துதிக்கையிலிருந்து சிலம்பை எடுத்தல் ஆகிய சோதனைகளில் வெற்றி பெற்றான். வஞ்சிப்பத்தன் பாண்டியன் முன்னிலையில் கோவலனைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆனால் அவையிலிருந்த நன்மந்திரி கோவலனுக்குச் சாதகமாகவும் தன்மந்திரி வஞ்சிப்பத்தனுக்குச் சாதகமாகவும் பேசினர். மன்னவன் சிந்திக்காமல் தன்மந்திரியின் வார்த்தைகளைக் கேட்டு கோவலனுக்குக் கொலைத் தண்டனை விதித்தான்.

கோவலனைப் பாறையின் மீது நிறுத்தி, தன் கையிலிருந்த வாளால் வெட்ட, வாள் முனை மழுங்கித் துண்டு துண்டாய் முறிந்தது. கோவலன் காவலர்களை நோக்கி, "உங்களால் என்னை வெட்டமுடியாது. நானே வெட்டிக் கொள்வேன். நீங்கள் போய் அரசனிடம் கூறுங்கள்" என்று சொல்லி அனுப்பி விட்டான். அவர்கள் சென்றவுடன் சோமசுந்தரக் கடவுளை வேண்டினான். மதுரையை அடைந்தவர்கள் பாவிகளாக இருந்தாலும் பாவம் நீங்கப் பெறுவர். மன்னவன் தவறு செய்யும் போதும் அசரீரி கனவு ஆகியவற்றின் மூலம் உண்மையை உணர்த்துவான். ஆனால் தன்னை மட்டும் காப்பாற்றாமல் போய் விட்டானே 'கண்ணில்லாத் தெய்வம் என்று சிவனைப் பழிப்பார்களே' என்று துன்பமடைந்தான். கண்ணகையின் கற்புச் சிறப்பைப் பற்றியெல்லாம தான் அறிந்தமையையும் கூறினான், 'கண்ணகையின் கற்பென்னும் போர்வை' அவன் உடலை விட்டு நீங்கத் திருவருள் புரியக் கேட்டுக் கொண்டான். மாதவியின் கடனை வரவு வைத்துக் கொள்ளச் சொன்னான். (ஸீன் 16) முடிவில் கோவலன் தன்னுயிரை மாய்த்துக் கொண்டான்.

கோவலன் வைத்த அடையாளங்களால் கோவலன் இறந்துபட்டிருக்கலாமோ என ஐயுற்ற கண்ணகை மாதிரியைப் பார்த்து வரச் சொன்னாள. மாதரியோ உண்மையறிந்து லந்தும் நன்னெஞ்சத்தால் பொய் கூறினாள். வெகுண்ட கண்ணகை,

"ஏ சண்டாளி, என்னிடமா பொய்யுரைத்தாய்? பார் இப்பொழுதே உன்வீடு தீப்பற்றி எரியச் செய்கிறேன்" என்று கூறியவுடன் மாதரி அஞ்சி உண்மையைச் சொன்னாள். கண்ணகையோ, "அப்படியா தீர்ப்புச் செய்தான் மகாச் சண்டாளன்! மகா கெருவ! இதோ சென்று பழிக்குப் பழி வாங்குகிறேன். ஹா! இதோ செல்லுகிறேன்!" என்று கூறிச் சினத்துடன் சென்றாள். (ப.78)

கண்ணகை, கோவலன் இறந்து கிடந்த கொலைக் களம் சென்று வெட்டுண்டு கிடந்த உடலை ஒன்றாய்ப் பொருத்திச் சொக்கநாதரை நினைக்க, பிளவுபட்ட தேகம் ஒன்றாய்ப் பொருந்திக் கோவலன் எழுந்து நின்று பாட ஆம்ரபித்தான்.

"வந்தவளோ மணந்தவளோ வந்தவளாரடி
வந்தவளானால் மடிமேல்வா மணந்தவளானால்
ஓடிப்போ"

என்று கோவலன் கூற கண்ணகை,

"கட்டி நின்றவள் கண்ணகையாள் கட்டி
யணைத்தவள் மாதவியாள்
கட்டிநின்றவளிங்கு வந்தேன் கட்டியணைத்தவளேன்
வருவாள்"

என்று திருப்பி வினவினாள். மீண்டும் கோவலன்,

"விலைமகளா மணமகளா மேவி நீ வந்தவளார்
விலைமகளானால் விரும்பியேவா மணமகளானால்
விலகிப்போ"

என்று கூற, கண்ணகையோ,

"விலைமகளானவள் மாதவியாள் விரும்பியிங்கேன்
வந்திடுவாள்
குலமகளாத்திரம் கொண்டதினால் கூசிடாதிங்நன்
வந்து நின்றேன்" (ப. 76)

என்று கூறினாள். [இதிலிருந்து மாதவிபால் கோவலன் கொண்ட பிணிப்பு தெரிய வருகிறது. சகக்குழுத்திப் போராட்டம் கண்ணகையின் கூற்றிலிருந்து அறிய முடிகிறது] உயிர் பெற்றெழுந்த கோவலனிடம் கண்ணகை நடந்த செய்தியைக் கேட்டாள். நடந்த தனைத்தையும் கூறிய கோவலன் நெடுஞ்செழியன், வஞ்சிப் பத்தன், கோவிலிங்கி, துன் மந்திரி ஆகியோரை வதை புரிந்திடுமாறு கண்ணகையிடம் கூறினான். (நன்மை

செய்த கோவிலிங்கியையும் வதை புரியுமாறு கூறியது வியப்புக் குரியது. உடனே, கண்ணகை காளியின் வடிவம் எடுத்தாள்.

"பாண்டியனே வாடா பாதகஞ் செய்தாயடா
பாவையென்னாயகன் ஆவியைப் போக்கிட
ஆக்கினைசெய்தா யடா (பாண்)
ஈரேழுலகத்திலும் நீளங்து சென்றாலும் விடேன்
இகபரணமே உன்னை தக்கபடி சிகைஷ
இயற்றிவதைத் திடுவேன் (பாண்)" (ப. 78)

என்று கூறிப் பாண்டியனைப் பழிவாங்குவதாகக் கூறினாள்.

காளி கருடனை நினைத்து,

'செங்கருடா செங்கருடா' இங்குநீ வாராய்
இங்கிருந்து எடுத்துச்சென்ற சிலம்புடன்நேராய்
வேகமாய் நாடியே
இங்கு தேடியே
விரும்பிநொந்தென் சிலம்பிற்காக உயிரால் வாடியே"

என்றுபாடியவுடன் கருடன் சிலம்புடன் வந்தான். (ப. 79)

(கருடன் சிலம்பு கொண்டு சென்றகாரணம் கூறப்பட வில்லை.) கண்ணகையாகிய காளி பாண்டியன், வஞ்சிப் பத்தன், துன்மந்திரி இவர்களின் குடலைப் பிடுங்கி மாலை போட்டுக் கொண்டு கொலைக்களத்திற்குச் சென்றாள்.

அவள் அங்கு வந்த மாதவியிடம், "ஏ மாதவி, உன் கணவன் இறந்து விட்டான். நீ இவனோடு உடன்கட்டை ஏறுகிறாயா அல்லது உன் ஊருக்குச் செல்கிறாயா?" என்று கேட்க, மாதவி கோவலனுடன் உடன்கட்டை ஏறுவதாகக் கூறினாள். காளி உருவமாய் வந்த கண்ணகை கோவலனையும் மாதவியையும் தகனம் செய்துவிட்டு நகருக்குள் பிரவேசித்தாள். "இந்நகருக்குள் வசிக்கும் வைதிக தருமம் வழுவாத பெரியோர்களும், கற்புநிலை

தவறாத உத்தம ஸ்திரீகளும் குழந்தைகளும், அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த மகான்களும் எனக்கு உதவி புரிந்த ஆயர் குலத்தினரும், ஏழை பரதேசிகளும், பறவை முதலியனவும் தவிர மற்றெல்லாம் எரிந்து சாம்பலாகக் கடவது" (ஸீன். 20) என்று கூறித் தன் மார்பிலொன்றைத் திருகி வீசினாள். உடனே பெரும்பாலான உயிர்களும் பொருள்களும் எரிந்து சாம்பலாயின. நகர மக்கள் வந்து கண்ணகையை வேண்ட, அவர்களுக்குச் சமாதானம் தெரிவித்துத் தன் இருப்பிடம் சேர்ந்தாள். இவ்வாறு தலத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் கோவலன் சரித்திரத்தை எழுதியுள்ளார்.

ஆசிரியரின் நோக்கம்

இளங்கோவடிகள் தமிழகத்தில் ஊடுருவியிருந்த பரத்தமையைப் போக்க விரும்பினார். அதனால் பரத்தமைச் சமுதாயத்தின் பிரதிநிதியாக இருந்த சித்திராபதியைப் படைக்கவில்லை. அவளுடைய மகளை விலைமகளாகப் படைக்காமல், குலமகளாகப் படைத்தார். மகளைத் துறவியாக்கினார். ஆடவர்களும் கற்புடன் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தவே, கற்பற்ற கோவலன் படும்பாட்டை—இறக்கும் நிலையை—கூறினார். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு புதிய சமயத்தையே உருவாக்கினார். வீட்டை விட்டுச் சென்றறியாத சாதாரண பெண்ணொருத்தி கற்பாற்றலால் ஒரு நாட்டு மன்னவனையே எதிர்க்கும் ஆற்றல் பெற்றவளாக—ஒரு நகரத்தையே எரிக்கும் புரட்சி மங்கையாக—உலக மக்கள் தொழும் ஏற்றம் பெறும் பத்தினிக் கடவுளாக மாற்றம் பெறுவதை இளங்கோவடிகள் கூறினார். சிலப்பதிகாரத்தின் இம் மையக்கருத்து பின்னால் சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற விழைவு கொண்ட நன்னெஞ்சங்களின் உள்ளங்களைக்

கவர்ந்ததால் காலந்தோறும் சிலப்பதிகாரக்கதை நூல்கள் பல தோன்றின.

கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் தோன்றிய இக்கதைக்கரு 20 ஆம் நூற்றாண்டிற்கும் பொருந்துவதாகவே அமைந்தது. அதனால்தான் தமிழக மக்களை மாற்ற விரும்பிய தவத்திரு. டி. டி. சங்கரதாஸ் சுவாமிகள் கோவலன் சரித்திரத்தை உருவாக்கினார்.

இருபது "ஸீன்களைக் (காட்சிகளை) கொண்ட இந்நாடகம் கண்ணகியின் கற்பாற்றலையும் மாதவியின் கொடுமையையும் விளக்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனால் இவ்விரு பண்புகள் மட்டுமே நாடகம் முழுவதும் வலியுறுத்தப்பட்டுள்ளன. சக்தி வழிபாட்டைப் பரப்பவும், எக்குற்றம் செய்தாலும் தெய்வக் குற்றம் செய்யக் கூடாது என்று மக்களுக்கு உணர்த்தவும் மாணுடக் கண்ணகியைக் காளியின் அம்சமாக ஆசிரியர் மாற்றியுள்ளார். அதனால் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

பதுமை தோன்றுதல், பேசுதல், எரிதல், மாதவியின் சிலை தோன்றுதல், திருடர்கள் கல்லாக, வெளவாலாக மாறுதல, கண்ணகையை நினைத்ததும் பாம்பின் தலையிலிருந்தும் நெருப்பிலிருந்தும், யானையின் துதிக்கையிலிருந்தும் சிலம்பைக் கோவலன் எடுத்தல் ,கோவலனின் பிளந்த உடல் ஒன்றாகிப் பேசுதல், கண்ணகை காளியின் உருவெடுத்து மதுரையையும் பாண்டியனையும் அழித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் அனைத்தும் கண்ணகியின் பத்தினித் தன்மையை நாடகம் பார்க்கும் பெண்களுக்கு அறிவுறுத்தவே அமைக்கப்பட்டன.

மாதவி கோவலனின் கழுத்தில் மாலையை வீசி யெறிந்து தன்னுடன் அழைத்துச் செல்லுதல், வெற்றிலையில் வசிய மருந்தைத் தடவிக் கொடுத்தல், கோவலன் வீட்டின் ஓட்டைப் பிரித்து தன்வீடு தேடிவருமாறு வசியப்

படுத்துதல், கோவலனின் பொருள் முழுவதையும் பறித்துக் கொள்ளுதல், கண்ணகையைப் பார்க்க அனுமதி வேண்டும் அவனைப் போக விடாமல் தடுத்தல், அதற்காகப் பொற் பதுமை செய்துதர வேண்டுமெனல், அப்பதுமை பேச வேண்டுமெனல், கண்ணகையின் வீட்டிற்குச் சென்ற வனைப் பாம்பு கடித்தது என்று பொய் கூறி மீண்டும் அழைத்து வரச் செய்தல், பத்துலட்சம் பொன் கொண்டு வரும்படியாகச் செய்தல் போன்ற செயல்கள் பரத்தைய ரினத்தின் பொருள் நாட்டத்தைக் காட்டப் படைக்கப் பட்ட நிகழ்ச்சிகளாகும். பரத்தையர்களின் இழிவையும் பண நாட்டத்தையும் அறிவிக்கவும், ஆடவர்களிடையே ஒழுக்கத்தை உயர்த்தவும், கண்ணகியின் பத்தினித் தன்மையையும் அதனால் ஏற்பட்ட ஆற்றலையும் கூறு வதன் மூலம் பெண்களிடையே கற்பின் உறுதியை நிலை நாட்டவும் சுவாமிகள் விரும்பியதால் கோவலன் சரித் திரத்தை நாடகமாக எழுதினார். இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தையும், புகழேந்திப் புலவர் எழுதியதாகக் கருதப்படும் கோவிலன் கதையையும் மூலநூல்களாகக் கொண்டு அதை அமைத்தார்.

கோவலன் கண்ணகிக்குத் திருமணம் நடத்தல், அவன் மாதவியை நாடுதல், வறியவனாக மனைவி இல்லத்திற்குத் திரும்புதல், இருவரும் மதுரைக்குச் சிலம்பு விற்கச் செல்லுதல். மாதரியின் வீட்டில் தங்குதல், பொற்கொல்ல னால் கோவலன் இறத்தல், கண்ணகி பாண்டியன் அவைக்குச் சென்று வழக்காடுதல், சிலம்பின் மூலம் வெற்றி பெறுதல், மதுரை மாநகரை அழித்தல் ஆகிய நிகழ்ச்சிகளைச் சிலப்பதிகாரத்திலிருந்து ஆசிரியர் எடுத் துள்ளார்.

புகழேந்திப் புலவரின் கோவிலன் கதையை ஆசிரியர் பெரிதும் பின்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மாதவி நடனக் கச்சேரியில் மாலையை வீசிக் கோவலனை மணவாளனாக்கிக் கொள்ளுதல், அவனிடமிருந்து பல்வி

ரண்டு கப்பல் பணத்தையும் ஆடை ஆபரணங்களையும் பிடுங்கிக் கொள்ளுதல், பேசும் பொற்பதுமையைக் கோவலனிடம் மாதவி கேட்டுப் பெறுதல், அப்பதுமை கண்ணகையின் சாபத்தால் எரிதல், அவள் சிலம்பு அவள் பிறந்த போதே தோன்றியதாகக் கூறப்படுதல், கோவலன் மாதவியை விட்டுச் செல்லுதல், வழியில் கண்ணகையின் ஆற்றலால் மாதவியின் உருவம் தோன்றுதல், அதனால் அவனுடைய பயணம் தடைப் படுதல், கண்ணகையின் மாங்கல்யம் கேட்ட திருடர்கள் கல்லாக வெளவாலாக மாறுதல், கோவலன் சிலம்பு விற்கச் செல்லும் போது சில அடையாளங்களை வைத்துச் செல்லுதல், கண்ணகையை நினைத்தவுடன் பாம்பின் தலையிலிருந்தும், நெருப்பிலிருந்தும்யானையின் துதிக்கை யிலிருந்தும் சிலம்பைக் கோவலன் எடுத்தல், கோவலனின் பிளந்த உடல் ஒன்றாகிப் பேசுதல், கோவலனுடன் மாதவி உடன்கட்டையேறுதல், கண்ணகை அவர்களைத் தகனம் செய்தல். கண்ணகை காளியின் உருவெடுத்து, பாண்டியனுடன் வழக்காடுதல், அவனையும் அவனுடைய நகரையும் அழித்தல், ஆகிய நிகழ்ச்சிகள் கோவிலன் கதையோடு ஒத்துச் செல்கின்றன.

கோவிலன் கதையில் வரும் கண்ணகை, கோவிலிங்கி, வஞ்சிப்பத்தன் ஆகிய பெயர்கள் இந்நூலிலும் ஆளப் பட்டுள்ளன.

இந்நாடகத்தில் சில மாற்றங்கள்

சிலப்பதிகாரக் கதை பின்னால் எழுந்த நூல்களில் காலம் தோறும் மாற்றம் பெற்றுள்ளது நிகழ்ச்சிகளின் காரணங்கள் காலத்திற்கேற்ப, சமுதாயச் சூழ்நிலைக் கேற்ப, மக்களின் பழக்க வழக்கங்களுக்கேற்ப, நூலாசிரி யரின் மனநிலைக்கேற்ப மாற்றம் பெற்றுள்ளன. இம் முறையில் சுவாமிகளும் தன் நூலில் சில மாற்றங்களைச் செய்துள்ளார்.

1. சிலம்பின் வழிவந்த கதைப்பாடல்களிலும் சில நாடகங்களிலும் வஞ்சிக் காண்டம் இல்லை. கண்ணகி கோவலன் ஆகியோரின் பிறப்பு முதல் இறப்பு வரை கதைப்போக்கு அமைகிறது. பாண்டியனைப் பழிவாங்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நாடகத்திலும் வஞ்சிக் காண்டம் இடம் பெறவில்லை.

2. செட்டியார் குலத்தில் பணத்தின் அடிப்படையில் திருமணம் நடந்ததை இந்நாடகம் அறிவிக்கிறது. ''பெண் சிறிசு பெரிது என்று ஏது? பணம் நிறைய இருந்தா சரி'' என்று மாணாக்கன் செட்டி கூறுவதும், ''ஆயிரம் ரூபாய் பரிசம்! நகை இரண்டாயிரம் ரூபாய். சின்ன மேளம் மாத்திரம் உங்கள் பக்கம். பெரியமேளம் எங்களுடையது'' என்று மாச்சோட்டான் செட்டி கூறுவதும் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது. (ஸீன்.1)

3. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இளமைத் திருமணம் பெருவழக்காக இருந்ததால் கண்ணகையின் திருமணம் மாங்கனியைக் கையில் கொடுத்துத் தாலி கட்டிய குழந்தைத் திருமணமாகக்கூறப்படுகிறது. (ஸீன்2)

4. வெற்றிலையில் அஞ்சனம் தடவி ஆடவரை மயக்கும் பரத்தமைச் சமுதாய வழக்கம் தெரியவருகிறது. 'ஆணில் அழகா அர்ச்சுனனே' என்ற மெட்டில் பைரவி இராகத்தில் வெற்றிலை கிழித்துக் கொடுக்கும் காட்சி மக்கள் சுவைப்பதற்கேற்ற முறையில் பாடலோடு கொடுக்கப்படுகிறது. மக்கள் வெற்றிலையை அதிகமாகப் பயன்படுத்தியமையும் தெரியவருகிறது. மாதவியின் வசிய மருந்தால்தான் கோவலன் சென்றான் என்றும் அவனே விரும்பிச் செல்லவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது. (ஸீன்.2)

5. இளங்கோவடிகள் மாதவியின் தாயை (சித்திராபதியைப்) படைக்க விரும்பவில்லை. மாதவி, தன் தாய் வசந்தவல்லியால்தான் மனம் மாறுவதாகவும், அவளுடைய அறிவுரையின்படி பொருளைக் கோவலனிடமிருந்து வாங்குவதாகவும் புகழ்ந்திப்புலவர் குறிப்பிடு

கிறார். சிலம்பின் வழிவந்த நூலாசிரியர்கள் மாதவியைக் கொடுமையானவளாகவே காட்டுகின்றனர். சிலப்பதிகாரத்தைப் படித்ததால், சுவாமிகளின் உள்ளம் நாடகத்தில் மாதவியைக் கொடுமையானவளாகக் காட்ட விரும்பவில்லை.சங்கரதாஸ்சுவாமிகள்மாதவியின் அன்பை மாற்றுபவராக நட்டுவனாரைத்தான் படைக்கிறார். இன்று 'புரோக்கர்' என்றும் 'மாமா' என்றும் பழித்துரைக்கப் படும் நிலையில் அவர் அமைகிறார், பெண் நடிகைகள் இல்லாத காலத்தில் புதிய பெண் பாத்திரத்தை ஆசிரியர் படைக்கவில்லை போலும். (ஸீன் 3)

6 சுவாமிகளின் கண்ணகை, கடிதம் எழுதத்தெரிந்தவளாக, உலக அனுபவம் உடையவளாக இருக்கிறாள். தன் தோழி தேவந்தியின் மூலம் திருமணம் ஆனதை அறிந்த கண்ணகை தாலியைப்பற்றி நீண்ட சொற் பொழிவாற்றுகிறாள் கண்ணகை கோவலன் தானே வருவான் என்று காத்திருக்காமல் தனக்குக் கூளிர் ஜுரம் என்று மடல் எழுதி அவனை வரவழைக்கிறாள். (ஸீன் 9) சங்கரதாஸ் சுவாமிகளின் காலத்தில்தான் தந்தை பெரியார் அவர்களும் சுயமரியாதை திருமணங்கள் நடத்தினார். தாலி தேவையில்லை என்று நினைத்த பெரியாரின் கொள்கைக்கெதிராக இப்பகுதி அமைந்திருக்கலாம்.

7. சிலம்பின் வழிவந்த நூல்களில் தேவந்தி அறிமுகப்படுத்தப்பட.வில்லை. இந்நூலில் மட்டுமே அவளைக் காட்டுவது சுவாமிகள், சிலப்பதிகாரத்தைப் படித்திருக்கிறார் என்பதற்குச் சான்றாக அமைகிறது. (ஸீன் 4)

8. இளங்கோவடிகள் சமணராதலின் தன் சமயத்திற் கேற்ப கதைத்தலைவனையும் சமணனாகவே படைத்தார். சங்கரதாஸ் சுவாமிகள் சைவ சமயத்தைச் சார்ந்தவராதலின் கதைத் தலைவர்களைச் சிவனை வழிபடுபவர்களாகப் படைத்தார். கோவலன் இறக்கும் போது

சொக்கநாதரிடம் முறையிடுகிறான். நீண்ட சொற்பொழி வாற்றுகிறான். கண்ணகையும் சிவபெருமானை வேண்டியே பொற்பதுமையை எரியும்படியாகச் செய்கிறாள். சிவனை வேண்டியே கோவலனை உயிர்ப்பிக்கிறாள்.

9. கண்ணகை, வெற்றிலையில் மைதடவி, அனுமார் மந்திரம் கூறி, மாதவி பொற்பதுமை பெற்றதை அறிகிறாள். மந்திரங்களில் நம்பிக்கை கொண்ட சமுதாயச் சூழ்நிலையை இது காட்டுகிறது. கோவலன் கண்ணகையை நினைத்ததும் செயற்கரிய செயல்கள் நிகழ்கின்றன. ஆனால், கண்ணகை 'நான் பத்தினியே யாமாகில்' என்று கூறி அற்புதங்களை நிகழ்த்தவில்லை. சிவனை வேண்டியே அற்புதச் செயல்களைச் செய்கிறாள். கோவலன் சிவனுடைய ஆற்றலை விட தன் மனைவியின் ஆற்றலைப் பெரிதாகப் நினைக்கிறான். கண்ணகை தன் ஆற்றலைவிட, இறைவனுடைய-சிவனுடைய-ஆற்றலைப் பெரிதாக நினைக்கிறாள்.

10. இந்நாடகத்தில் மாதரி தானே பால் விற்றுக் கொண்டு வருவது இயல்பாக அமைகிறது. சிலப்பதிகாரத்தில் மாதரியின் பெருமையைக் கவுந்தியடிகள் கூறுகிறார். இந்நாடகத்தில் கவுந்தியடிகள் இல்லாததால் மாதரி தானே குலப்பெருமையைப் பாடிக் கொண்டு வருகிறாள்.

"பித்த சூட்டையுந் தணிக்கும்
பிணிமூப்பையுந் தடுக்கும்
ரத்த விர்த்தியைக் கொடுக்கும்
நீண்ட ஆயுளைப் பெருக்கும்"

என்று தான் விற்கும் பாலின் பெருமையைக் கூறுகிறாள்.

"பாலிலேதண் ணீரைக் கலப்பார்கள் சிலபோர்
பச்சை நீரில் பாலைக் கலப்பார்கள் சிலபோர்
பார்த்து வாங்கு வீர்களாகில் நேர்த்தி
தருமா தலினால்"

என்று கலப்படப் பாலை அவள் அம்பலப் படுத்துகிறாள். 'லண்டன் ஊரிலிருந்து ராஜன் குண்டு போடும்' சூழ்நிலையையும் கூறுகிறாள். (ஸீன் 12)

கோவலன் மாதவிக்குத் தர வேண்டிய பத்துலட்சம் பொன் கொடுப்பதற்காகவே சிலம்பு விற்க மதுரை செல்வதாகக் காட்டப்படுகிறது. மதுரையில் கோவலன் உரத்த குரலில் சிலம்பு விற்று வருவது நாடகத்திற்கு இயல்பாக அமைகிறது. அங்குப் பொற்கொல்லன் வஞ்சிப்பத்தல் வருகிறான். ''நான் சிலம்பு விற்றுத் தருகிறேன். பத்து லட்சம் பொன்னுக்கு மேல் கிடைத்தால் எனக்கு ஏதாவது கொடுக்க வேண்டும். பிள்ளை குட்டிக்காரன்'' என்று கேட்கிறான். தரகுக்காரர்கள்செய்யும் வேலையைப்பொற் கொல்லன் செய்கிறான். பாண்டியன் முன்னிலையிலும் பொற்கொல்லன் ஒன்றும் பேசவில்லை. ஒரு குறிப்பிட்ட சாதியினரைச் சாட விரும்பாத ஆசிரியரின் நோக்கம் இங்குப் புலப்படுகிறது. பொற்கொல்லனைத் தீயவனாகக் காட்ட விரும்பாதஆசிரியர் நன்மந்திரி, தன்மந்திரி என்று இரு மந்திரிகளைப் படைத்து அவர்களின் வாயிலாக மந்திரிகளின் தன்மையைக் கூறுகிறார். மன்னவன் சிந்திக் காமல் தன்மந்திரியின் சொற்களைக் கேட்டுக் கொலைத் தண்டனை விதிக்கிறான். (ஸீன் 14, 15)

12. காலத்திற்கேற்ற முறையில் சகுக்கழுத்திப் போராட்டமும் கூறப்படுகிறது. இறந்த கோவலன் கண்ணகையால் மீண்டும் எழுந்தபோது,

''வந்தவளோ மணந்தவளோ வந்தவளாரடி
வந்தவளானால் மடிமேல்வா மணந்தவளானால்
ஓடிப்போ''

என்று கூறுகிறான். அதற்குக் கண்ணகை,

''கட்டி நின்றவள் கண்ணகையாள் கட்டியணைத்
தவள் மாதவியாள்
கட்டி நின்றவளிங்கு வந்தேன் கட்டியணைத்தவளேன்
வருவாள்?

என்று கேட்கிறாள். காளிதேவியேயானாலும் சகக்கழுத்தியிடம் காழ்ப்பும் பொறாமையும் கொள்வது பெண்ணியல்பைக் காட்டுகிறது. மனைவியின் கடனமையையும் உணர்த்துகிறது. மனைவிக்கும், பரத்தைக்கும் உள்ள வேறுபாட்டையும் புலப்படுத்துகிறது. (ஸீன். 18)

13. இளங்கோவடிகள் சமணராதலின் கோவலன் இறந்தபிறகு மாதவியையும் மணிமேகலையையும் துறவிகளாக்குகிறார். சங்கரதாஸ் சுவாமிகள் மாதவிக்கு மணிமேகலை பிறந்ததாகக் காட்டவில்லை. சைவ சமயத்தில் பெண்கள் துறவு மேற்கொள்வதில்லை. கணவனுடன் உடன்கட்டை ஏறினால், அவனுடன் சேர்ந்தே இறையடி சேர்வதாக நம்பப்பட்டது. அதனால் முற்பிறவியில் கோவலனின் மனைவியான மாதவி இப் பிறவியில் பரத்தையர் குலத்தில் பிறந்தும் மனைவியாகவே வாழ்கிறாள். ஆனால் அவளுக்கு மகள் பிறக்கவில்லை அவள்மனைவியாகவே உடன்கட்டைஏறுகிறாள். காளிதேவி, பாண்டியனைப் பழிவாங்கும் நோக்கத்தால் கோவலனின் மனைவியாகத் தோன்றினாலும் அவள் அவனுக்குத் தாயாகிறாள். மகப்பேறு இல்லாததால் அவளே அவ்வீருவரையும் தகனமும்செய்கிறாள்.(ஸீன்20)

14. நாடகத்தில் கோவலன் சிறந்தவனாகக்காட்டப் பெறவில்லை. அவன்பரத்தமையுடையவனாக, கண்ணகையிடம் அன்பற்றவனாகவே உள்ளான். தனக்குக் காரியம் ஆகும்போது மட்டும் கண்ணகையின்பத்தினித்தன்மையை நினைக்கிறான். மற்ற நேரங்களில் மனைவியை நினைப்பதில்லை. இறக்கும் தறுவாயிலும் கண்ணகையின் கற்புத்தன்மை தன்னுயிரை நீக்க வேண்டினாலும்,மாதவியையே அதிகமாக நினைக்கிறான். மாதவியின் கடனைத் தீர்க்காததால் தனக்கு மறுபிறவி உண்டாகுமே என்று அஞ்சுகிறான். அதனால் மாதவி, தன் கடனை மீண்டும் பெற்றுக் கொண்டதாக வரவு வைக்கச் சொல்வது ஏமாற்றுத் தனமாகக் காணப்படுகிறது.

(ஸீன்.16

இவ்வாறு சுவாமிகள் தன் கைவண்ணத்தால் பாத்திரங்களின் பண்பு நலன்களை மாற்றியுள்ளார்; சில நிகழ்ச்சிகளை உருவாக்கியுள்ளார்; சில நிகழ்ச்சிகளில் காலத்திற்கேற்ப மாற்றம் செய்துள்ளார். தம் கொள்கைக் கேற்ப முன்னோர் நூல்களிலிருந்து கொள்வன கொண்டு தள்ளுவன தள்ளியிருக்கிறார்.

வட்டப் பாறையில் வதைப்பட்ட கோவலன் கன்னகி நாடகம்
(வீரபத்திரன்)

இந்நாடகத்தை வீரபத்திரன் என்பவர் எழுதியதாக அகச்சான்று உள்ளது. ("வன்னிய குமரன் சேயாய் வந்திடும் வீரபத்திரன், நன்னயத் தமிழாலே நாடகம் செய்த தாமே") புகழேந்திப் புலவரின் கோவிலன் கதையையொட்டி இந்நாடகம் இயற்றப்பட்டதாக ஆசிரியர் கூறியுள்ளார். இந்நூலில் ஆசிரியர் கவி, தரு, பொதுவசனம் என்ற அமைப்பின்வழி நாடகத்தை நடத்திச் செல்கிறார். விநாயகர், சிவன், விஷ்ணு ஆகிய பல கடவுளரின் துதியோடு நாடகம் தொடங்குகிறது.

கதையமைப்பு

பாண்டியனின் வாயிலில் காவல் காக்கின்ற கட்டியங் காரன் பாண்டியனின் வருகையை அவையோருக்குக் கூறுகிறான். அவன் வருகின்ற காட்சி,

"படபடவெடிசத்த மோங்கிடவே
பீரங்கியோடுபால வேலிருபக்கம் தாங்கிடவே
தடதடவெனமுர சடித்திடவே
யெக்காள மூதி சாடுலோர்பலபோர் துடித்திடவே"
(ப. 8)

வருவதாகக் கூறப்படுகிறது. (பாண்டியனின் காலத்தில் பீரங்கி இருந்ததாகக் கூறப்படுகிறது) தனக்குப் புத்திரர் தரும்படி பிரார்த்தனை செய்திருந்தும் மகனை வழங்காத காளிகா தேவிக்குப் பூசை நடத்தக் கூடாது என்றும் கோயிலில் யாரும் திருவிளக்கு ஏத்தலாகாது என்றும் பாண்டியன் பறையடிக்க ஆணையிட்டான்.

அந்நகரில் வாழ்ந்த மணியரசன் ஈன்ற பிள்ளைகளில் வறுமையுற்ற இளையவன் தன் பாகத்து எண்ணெயை விற்று வந்தான்.

"நல்லெண்ணெ ரொம்ப நலமாயிருக்குது
சில்லென்று கண்மாசி திடமாயிருக்குது (ப.11)

என்று எண்ணெயின் தன்மையை விலை கூறி விற்றான், காளியிடம் எண்ணெய் விலையானால் ஆயிரம் விளக்கேத்தி வைப்பதாக அவன் வேண்டினான், எண்ணெய் விலையானதால் அவன் மூடியிருந்த காளிகோலின் கதவையும் உடைத்து ஆயிரம் எண்ணெய் விளக்குகள் ஏற்றினான். இதைக கண்ட பாண்டியன் கோபத்துடன், ஆக்கினை மீறி விளக்கேற்றிய போக்கிரிப்பயலைத் தேடித் தூக்கி வருமாறு கூறினான். சேவகர்கள் அவனைக் கண்டு பிடித்து மன்னவனிடம் கொண்டு வந்தனர். எத்திசையும் அறிய பறையறிந்தும் நான் அறிவேன் என்று சொல்லுகின்ற கெருவியை,

"குத்திமயிர் பிடித்திழுத்து நீலிமுன்னே
கொல்லுவீர் கொன்றுபதில் சொல்லுவீரே (ப. 16)

என்று பாண்டியன் ஆணையிட்டான். இதைக் கேட்ட வாணியன், காளியைப் பார்த்து,

"எந்தனுயிரொழிக்க அந்தவிளக்குவைத்தேன்
இது சரி தானோ சூர சங்கரியே
சொந்தயென் மனைவியாள் தோகைவணிகமாது
துடிப்பாளே கேட்டவுடன் சங்கரியே" (ப. 19)

என்று வாணிகன் ஒப்பாரி வைத்துப் புலம்பினான். சேவகமார் வணிகனுடைய சிரசைத் துணிக்க அது துள்ளி அம்மன் மடி மீதில் போய் விழுந்தது. கோவலன் இறந்ததை அறிந்த வணிகமாது புலம்பிக் கொண்டே வந்தாள், கணவனின் வெண்டுண்ட தலையைக் கண்டு காளியிடத்து முறையிட்டு அழுதாள்;

> என்னமதி நீ கொடுத்தாய் சூலிபரே —சென்னி
> ஏந்திமதி மீதெடுத்தாய் நீலிபரே
> மன்னவனுயிர் பறிக்க சூலிபரே—என்னை நீலியரே
> மர்மமெண்ணிக் கொன்றாயடி (ப. 20)

என்று தன் கணவனின் உயிரைக் காளி பறிக்க வந்தாளை என்று கோபித்தாள். கணவன் இழந்த பிறகு தான் உயிர் வாழ்ந்து என்ன பயன் என்று நொந்து அழுதாள். கொன்றவர்களைப் பழிதீர்க்கமேண்டுமென்று துடித்தாள் வணிகன் மனைவியின் நிலை கண்ட காளி தேவி, மனம் தாளாமல் நடந்த சேதியை ஆதியோடந்தமாய்த் தெரிவிக்க, வணிகமாது முன்பாகத் தோன்றினாள். காளிதேவியின் உருவம் படிப்போரின், கேட்போரின் கண்முன் தோன்றுவது போல் பாடலமைப்பு அழகுற அமைந்துள்ளது. 'செட்டி பட்டியில் வாழுமவன்னியன் கோமான் சேய் வீரபத்திரன்' என ஆசிரியர் தன்னைப் பற்றியும் அப்பாடலில சேர்த்துச சொல்கிறார்.

தன்முன் தோன்றிய காளியைப் பார்த்து "ஏழைகளுக்கு வரம் பாலிகும் தயாபரி என் புருஷன் சிரம் துணிக்க எத்தனை நாள் மனதில் எண்ணி முடித்தாய்? உன்னைப்போல் நானும் ஒரு பெண்ணானதால் நான் இருந்து என்ன செய்யப்போகிறேன் என்னையும் என் கணவனுடன் சேர்த்துக் கொளுதிவிடு" (ப. 22) என்று வேண்டினாள்.

காளிதேவி, பாண்டியன் தன்னைப் பழி வாங்கக் கோயில் கதவு அடைத்ததையும், எண்ணெய் ஊற்றிய கணவனைக் கொன்றதையும் கூறினாள். ''மறுபிறவியில் வாணிகன் காவேரிப்பட்டணத்தில் மாணாக்கனின் மகனாகப் பிறந்து கோவலனென்ற பெயருடன் விளங்குவான். நீ திருக்கடையூர் பட்டணத்தில் வசந்தமாலையென்னும் கணிகையின் வயிற்றில் பிறந்து மாதகியென்ற பெயருடன் விளங்குவாய். நான் கோவிலிங்கி வயிற்றில் கன்னகியாய் பிறப்பேன்'' (ப. 23) என்று கூறினாள். அடுத்த பிறவியில் நிகழப் போவதையும் எடுத்துச் சொன்னாள். பாண்டியனைக் காளிதேவி எவ்வாறு அழிப்பான் என்பதையும் விவரமாகக் கூறினாள்.

பாண்டியனின் மனைவி கோவிலிங்கி காளியைக் கருவில் தாங்கினாள். அவளுடைய அணியலங்காரம் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. கோவிலிங்கி தன் தாதியர்களை அழைத்து ''எனக்கு வயிறு நோவதால் நீங்கள் எங்கும் போகாதீர்கள்'' என வேண்டினாள். தன் இடுப்பு வேதனையைக் கோவிலிங்கி விளக்குவது வேறெந்த நூலிலும் காணாத புதுமையான செய்தியாகும். பெண்களே உணர முடியாத—எழுத முடியாத—இடுப்பு வலியை ஆசிரியர் மிகச் சிறப்பாக எழுதியிருப்பது வியக்கத்தக்கது. பிரசவ வேதனையால் துடிக்கும் கோவிலிங்கி, தாதியரிடம் மருத்துவ மாதை அழைக்கச் சொன்னாள். மருத்துவக் கிழவியை அழைப்பதும், அவளுடைய பேச்சும் எந்தச் சிலப்பதிகார நூலிலும் காணாத புதுமையாகும். தாதியர் மொழியைக் கேட்டு, மருத்துவக் கிழவி (27) தள்ளாடிக் கொண்டு தடியையூன்றி சேதிகள் அறிவோமென்று வந்தாள்.

''உட்கார்ந்திருக்க உளைக்குது முதுகை
நிற்கவோவென்றால் நெடுமூச்செறியுது
நடப்போம்மென்றால் நாவது வரளுது
படுப்போமென்றால் பாம்பாய்ப்புரளுது

கத்தரிக்கோலால் சுத்தரிப்பதுபோல
முற்றிலுமார்பை முறிக்குதென்னடி
அடிவயிறு தன்னில் அளந்திடும் புண்ணாய்
முடியவோநொந்து முட்டுதென் செய்வேன் (ப. 28)

என்று தன் மெய்ப்பாட்டுணர்வுகளையெல்லாம் கோவிலிங்கி விளக்கினாள். அவள் சொற்களைக் கேட்ட அக்கிழவி "குலதெய்வத்தை நினைத்து கோரிக்கொள். வாதையில்லாமல் குழந்தை பிறக்கும். நிறைவாழி வைத்து பிரார்த்தனை செய்" என்று கூறினாள். இது பிரசவ நேரத்தில் செய்கிற வழக்கத்தைக் குறிப்பதாயமைந்துள்ளது.

காளிதேவி குழந்தையாகப் பிறந்தாள் அவளுடைய தோற்றம்,

"திருந்தியமாலை பூண்டு செஞ்சிலம்பதுவுங்கூட
இருந்திடி மனைவோர்காண யிதுகைசெப்பேடந்தி
பொருந்தியவடிவோடிந்த புத்திரிபிறந்ததம்மா" (ப.350)

என்று கூறப்படுகிறது. குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டு மன்னவன், ஏழை. பரதேசி கவிபாடுவோர் அனைவருக்கும் பொருள்களை வழங்கினான். மகளுடைய சாதகத்தைக் கணிக்க வேதியரை அழைத்தான். சோதிடர் வருகை வேறெந்த நூலிலும் இந்த அளவிற்கு விளக்கமாகக் கூறப்படவில்லை.

"ராம கோவிந்தரங்கா நாராயணாவாடா
தாமதம் செய்யாதேயென்றுமே பஞ்சாங்கியோர்கள்
சல்தியாய் நடந்து வாராரே" (ப.32)

என்று அந்தணர்களின் வருகை, நடப்பியல் முறையில் அமைந்துள்ளது. அவர்களை நோக்கி மன்னவன் ஜாதகம் கணிக்கச் சொன்னான். உடனே அவர்கள்,

"சாஸ்திரம் பார்த்து சந்தேகம் தோணுது
ஆஸ்திகளெல்லாம் அழிந்திடக்காணுது
காலில்செஞ்சிலம்பு கையில் செப்பம்படுடன்
நீலியுதிக்கவே சேர்ந்தது கேடுடன்" (ப.32)

என்று சாஸ்திரம் கூறினர். இதைக் கேட்டு வருந்திய பாண்டியனிடம் அக்குழந்தையைப் பேழையில் வைத்துக் காவிரியில் விட்டால் தோஷம் நிவர்த்தியாகும் என்று கூறினர். (33) பாண்டியன் கோவிலிங்கியிடம் குழந்தை யைக் கேட்க, அவள் ஒப்பாரி வைத்து அழுதாள். இப்பகுதி புதுமையானது. தான் பெற்ற மகனைப் பிரியும் தாயின் புலம்பல் இயற்கையாகவே அமைந்துள்ளது.

"செஞ்சிலம்பழகென்ன செப்போடொலிவுமென்ன
திலர்த பொட்டழகென்ன என்மகளே
கொஞ்சி விளையாடாமல் நெஞ்சில் கபடம் வைத்து
கோதைஏகலாமோ என்மகளே
தூங்கு மஞ்சமும் ஊஞ்சல் பாங்கியர்கள் கொஞ்சல்
தொலைத்துப் பேழைதனிலே என்மகளே
பாங்குடன் படுத்து தேங்கிடவேவிடுத்து
பாவி நீ ஏகலாமோ என்மகனே (ப.35)

என்று புலம்பிக் கொண்டே குழந்தையை எடுத்துக் கொடுத்தாள். கோவிலிங்கி குழந்தையை மாணிக்கப் பேழையில் வைத்து வைகையில் விட அது காவேரிப்பூம் பட்டினத்திற்கு வந்தது.

காவேரிப்பூம் பட்டணத்தில் மாமனும் மைத்துனனு மாகிய இருவரும் கூட்டாக அனுப்பிய கப்பலானது இன்னும் வராததால் அதை அறியும்பொருட்டு அவர்கள் ரேவு துறைக்கு (துறைமுகம்) வந்தனர். அவர்கள் ஆற்றில் அடித்து வந்த பெட்டியைக் கண்டனர். பெட்டி தனக்கு என்று மாணாக்கனும் உள்ளிருப்பது தனக்கென்று மாச் சோட்டானும் கூறினார். மாச்சோட்டான் 'கோடி சூரியப் பிராகாசம் போல்' பெண்குழந்தை இருக்கக் கண்டு ஆசையுடன் எடுத்து முத்தமிட்டுப் புகழ்ந்தார்.

மாச்சோட்டான் தன் மனைவியிடத்து குழந்தை கிடைத்த செய்தியையும் கன்னகி என்று அதன் பெயரை

யும் கூறினான். (பெயர் எப்படி அவனுக்குத் தெரிந்தது என்பது புலப்படவில்லை.) வணிகமாது (பெயரில்லை) குழந்தையை முத்தமிட்டு, அணைக்கப் பால் பெருகிய அவள்,

"ஆராரோ ஆரிரோ செட்டியெனு மாச்சோட்டார்
சீரான காவேரி செட்டியெனு மாச்சோட்டார்
பேராளோன் தன்மகளே பெண்மயிலே நித்திரைபோ
ஆராரோ

பஞ்சவர்ணக் கிள்ளையுனை பார்த்தவுடன்
தெண்டனிடும்
செஞ்சொல்மொழி கன்னகியே தேம்பாமல்
நித்திரைபோ ஆராரோ" (ப.43)

என்று தாலாட்டுப் பாடி, தூங்க வைத்தாள். (சில ஆண்டுகளுக்குப் பிறகு) மாச்சோட்டான் பிராமணர்களை அழைக்கச் சொன்னார். பிராமணர்கள் வருகின்ற நிலை விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இது அக்காலப் பிராமணர் ஆதிக்கத்தைக் காட்டுவதாக அமைகிறது. அவர்களை எள்ளுவதாகவும் இப்பகுதி அமைந்துள்ளது.

அந்தணர் வந்தவுடன் கன்னகி—கோவலனுக்குத் திருமணம் முடிக்க நாள் பார்க்கச் சொல்ல, அவர்கள் இன்றைக்கே முகூர்த்தம் நடத்தலாம் என்றனர். உடனே மாச்சோட்டான், மாணாக்கன் மகன் கோவலனை அழைத்தான். கோவலன் வாலிபனாகக் காட்டப்பட்டுள்ளான். வடிவில் மன்மதனும், பிரகாசத்தில் சூரியனும் ஜெபதபத்தில் முனிவனும், தருமத்தில் கர்ணனும் சொல்லில் அரிச்சந்திரனும், ஒப்பிட முடியாதவனாகக் கோவலன் இருந்தான். அவன் கனவிலும் பொய் பேசி அறியாதவன் நினைவிலும் அரனை மறவாதவன். அவன் அங்கி நிஜாரணிந்து அம்புலிகுடையேந்தி வந்தான். மாச்சோட்டான் கன்னகியைத்திருமணம் புரிய சம்மதமா என மாணாக்கனிடம் கேட்காமல் கோவலனிடம் கேட்டான்.

அதற்குக் கோவலன், ''கண்ணை நிமை காப்பதுபோல் காத்தீர். உனது மனதுப்படி நடத்தத் தடையில்லை" என்றான். (மாணாக்கன் வளர்த்ததாக அவனும் கூற வில்லை. கன்னகி வளர்ந்த நிலையும் அறிவிக்கப்பட வில்லை)

கன்னகியை வருமாறு மாச்சோட்டான் அழைக் கிறான். அவள் வரும் நிலை சிறப்பாகக் கூறப்படுகிறது. அவளிடமும் மாச்சோட்டான் கோவலனை மணக்கச் சம்மதமா எனக் கேட்டான். (அக்காலத்தில் பெண்களுக்கு இருந்த மணவுரிமை தெரிகிறது. அவள் ''வளர்த்தெடுத்த தாய் தந்தைக்கு மறுமொழி சொல்வார்க்கு நரக கதியென் பார். பெரியோர் சொல்லும் பழமொழியைத் தடுக்க வொண்ணாது. ஆதலால் தேவரீர் மனத்தின்படி நடப் பேன்" (ப. 49) என்று கூறினாள்.

உடனே மணவறைப் பந்தல் ஜோடிக்கப்படுகிறது. (இது நொண்டிச் சிந்தில் அமைகிறது) திருமணமும் உடனே நடக்கிறது.

''சோபனம்சோபனமே செயசுப
சோபனம்சோபனமே சோபனமே
கலியாணம் கலியாணமே கோவலர்க்கும்
கன்னகியாளுக்கும் கலியாணம்
எல்லோரும்தாமறிய பேரிகை
எங்கும் பறைசாத்தி தெரியவைத்தார் (ப. 49)

என்று பந்தல் அலங்காரமும் திருமணத்தில் வைக்க வேண்டிய பொருட்களும் கூறப்படுகின்றன. திருமணச் சடங்கும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது (ப. 49)

திருக்கடையூரில் இருந்த மாதவி என்னும் கணிகை திருமணப் பந்தலில் நடனமாட வந்தாள். அவளுடைய நடனதைக் கண்ட கோவலன் சிந்தையும் கலங்கி அவள் எதிரில் வந்து,

"தாசியரேகிட்டவாரும் என்னுடன்பேசி
சந்தோஷமாநீயொரு முத்தம்தாரும்
காசினியோர்நத்துமயிலே யென்னை
கண்டுவாடி பேசுங்குயிலே
சித்தங்களிப்புடனே யிருவருமாக
சித்திரம்பேசநல்ல காலமிதுவே"

என்று அவளை மையலுடன் அழைத்தான். அவளோ,

"கிட்டவாயென்றென்னை கூவுறீர் பல்லை
கெஞ்சியேகையினால் தாவுறீர்
செட்டியாருன்தந்தை யேசிடுவார்—கொண்ட
தேவியெனைஏசிப் பேசிடுவாள்
சேதியை நீக்கி மறுவார்த்தை கூறுவாய்
செப்பினேன்இப்போது சேர்ந்திடலாகாது" (ப. 52)

என்று மறுத்துரைத்தாள்.

கோவலன் நகைகளைத் தருவதாகவும், கப்பல் பணம் தருவதாகவும் ஆசை யூட்டினான். மாதவியோ, "தன்னிடம் உண்மையான அன்பு இருக்குமானால் என்னிருப்பிடத்திற்கு வாரும். அச்சம் இருக்குமானால் இங்கேயே நில்லும். ஆடிடும் வேளையில் தடுப்பது நியாயமோ" என்று கூறினாள். கோவலனோ "சந்திர சூரியர் ஆறிய இப்போதே வருகிறேன்" என்றான்.

மாதவி உடன்பட இருவரும் விரைவாகத் திருக்கடையூருக்கு நடந்தனர். வழியிலிருந்த கோவிலில், கோவலன் ஈசன்பாதம் தொழுது மாதவியையும் தொழுமாறு கூறினான். அப்போது, "உயிர் பிரியுமளவும் என்னை விட்டு நீர் பிரிகிறது இலஃலயென்று இந்தப் பலிபீடத்தின் தலையில் அடித்து சத்தியம் செய்து கொடும் வணிகனாரே" (ப. 55) என்று மாதவி சொன்னாள் கோவலனும் "இன்று முதல் உன்னுயிர் போகுமளவும் என்னைவிட்டுப் பிரிகிறதில்லையென்று உன் முந்தாணியைப் போட்டு,

அமிர்தலிங்கேசர் மீதில் சத்தியம் சொல்லித் தாண்டி சத்தியம் செய்துகொடு பெண்ணே மாதவி" என்று கூறினான். மாதவியின் மனை புகுந்த கோவலன் அவளை நுகர்ந்த பின், அவள் தனக்கு வேண்டியவற்றை ஒரு பெரிய பட்டியலாகத் தந்தாள்.

பன்னிரண்டு வேலி நஞ்சை நிலம், ஏழடுக்கு உப்பரிகை, ஈசனுக்குப் பூசை செய்யும் மண்டபம் ஆகிய இவற்றை அமைத்துத் தரவேண்டும். காலக் கடைக் கொள்ள (காலையில் கடை பொருள் வாங்க) கால் மரக் கால் பொன், (உச்சிக்கடையில் பொருள் வாங்க மரக்கால் பொன்) அந்திக்கடையில் பொருள் வாங்க மரக்கால் பொன், பாக்கு வாங்க பத்து லட்சம் பொன், வெற்றிலை வாங்க ஆயிரம் பொன், புகையிலைக்கு ஒரு கப்பல் பொன், சுண்ணாம்புக்கு ஆயிரம் பொன், படுக்கைக்காக ஆயிரம் பொன், பஞ்சணைக்காகப் பத்து லட்சம், நட்டுவனார்க்கு ஆயிரம் பொன், சுத்திகாரனுக்கு ஆயிரம் பொன் ஆகிய வற்றைக் கோவலன் தரவேண்டும். குருத்தினி ரவிக்கை, சேலை, குசும்பா, ஜடைபில்லை, குச்சுக்கிளி, கொப்பு, கோர்வைமணி, சுல்லிழைத்த கம்மல், முத்திழைத்த மூக்குத்தி, ஜொலிக்கும் மோதிரம், புஷ்பராக வங்கி, ஆகிய ஆடை அணிகலன்களை வாங்கித் தரவேண்டும் என்று பெரும் பட்டியலை நயமாகக் கூறிய மாதவி,

"கொஞ்சம் கொஞ்சம் கேட்டாளென்று கோபிக்க வேண்டாம்"என்றும் கோவலனிடம் கூறினாள். (ப.57-59) இதைக் கேட்ட கோவலன் பன்னிரண்டு கப்பல் பணம் தருமாறு தன் தந்தைக்கு ஓலை அனுப்பினான். வந்த பணத்தை மாதவியிடம் கொடுத்தது பன்னிரண்டு ஆண்டுகள்வரை கோவலன் மகிழ்ந்தான்.

கோவலனைப் பிரிந்த கண்ணகி தாதியர்களிடம் தன் துயரைக் கூறி வருந்தினாள். திருமண விழா முடிவதற்குள் கோவலன் பிரிந்து விட்டானே என்று பலவாறு புலம்பி

னாள்; காளி என்று நினைத்துக் கைவிட்டாரோ என்று கன்னகி குறிப்பிட்டாள். (இது கவனிக்கத்தக்கது.) 12 ஆண்டுகள் சென்றதும் மடல் ஒன்று எழுதினாள் கன்னகி. அதில் கோவலன் தன்னைப் பிரிந்து சென்றதால் ஆவி துடிக்கிறது. பண்டிதர் வந்து பரிகாரம் செய்தும், உற்றார் பெற்றார் ஓடியே வந்து பொன்னிழைத்து வாயில் ஊற்றியும் ஆவி போகவில்லை. கோவலனைக் கண்டால் தன்னுயிர் காலன் ஊர் ஏகும். வாராதிருந்தால் உயிர் போகாது. நேராக வந்து பார்த்து விட்டுச் செல்லவும் என்று எழுதி இடதுகைநாட்டு வைத்தாள்.

இக்கடிதம் கண்ட கோவலன் அழுது புலம்பி மாதவியிடம் போவதற்கு உத்தரவு கேட்டான். அதைக் கேட்ட மாதவி,

> ''கொண்டவள் மாண்டாளென்று அண்டையில் வந்து
> கூறுகிறாயென் முன் நின்று
> சண்டாளா நானிருக்க தையலிறந்தா லென்னா
> கண்டபேர் நகையாரோ கதையைக் கேட்டாலே மன்னா (ப.65)

என்று வெகுண்டு கூறினாள். இறுதியில் பேசும் பொற் பதுமையை வைத்து விட்டுப் போகுமாறு கூறினாள். கன்னகியை நினைத்துக் கோவலன் பொற்பதுமை செய்து கொடுத்தான். மாதவி கோவலனுக்கு ஒப்புதல் கொடுத்து அனுப்பினாள். பதுமை பேசாமை கண்டு, மடலெழுதிக் கோவலனை வரவழைத்தாள். ''கன்னகி இட்ட சாபத்தால் இவ்வாறு நேர்ந்தது. அதனால் திருப்பி அனுப்பு'' என்று கோவலன் கூறினான். பதுமை எரிந்து போனதால் அவனுடைய ஆடை அணிகலன்களைக் கழற்றித் தருமாறு கூறினாள். கோவலனும் தலைப்பாகை, முத்து மாணிக்கம் கடுக்கன், தங்கச் சரிகை உருமாலை, பட்டு அங்கவஸ்திரம், கால் தண்டை, மிஞ்சி ஆகியவற்றைத் தந்தான்; மீசையை

யும் குடுமியையும் கொய்து கொடுத்தான்: வாழைப் பட்டையை எடுத்து இடுப்பில் கட்டிய பின் சிலை, அருணாக்கயர் (அரைஞாண் கயிறு) ஆகியவற்றைக் கொடுத்தான். பல்லைத் திறந்து காட்டி காவி செதுக்கிக் கொள்ளும்படியாகக் கூறினான். மாதவி கோவலனை எண்ணெய் முழுக்காட்டுவதாகக் கூறி ஆற்றில் தள்ளி விட்டாள்; கன்னகியைக் கோவலன் நினைத்ததால் அவன் ஆற்றின் ஒரு புறத்தில் ஒதுக்கப்பட்டான். கன்னகியின் தோழியர் இவன் நிலையைக் கண்டு கூற, கன்னகி ஆடை கொடுத்தனுப்பினாள்.கோவலன் பசி என்று கேட்டவுடன் கன்னகி அப்பளம், போளி, லட்டு, அதிரசம், வடை, பாயாசம், முப்பழம், தயிர், நெய், பாலுடன் சாதம் போட்டாள். சாப்பிடும்போது,

"பெண்ணே யுன்னினைவாலே பிசைந்த சாதமும்
வாயில்
போகாமல் அகட்டுதே மாதவியே
கண்ணேயிப்போகதலி கனியெடுத்துண்போ
மென்றால்
கசக்கு தென் வாய்களெல்லாம் மாதவியே (ப-71)

என்று மாதவியை நினைத்து வருந்தினான். தன்னைப் பிரிந்த அவளும் தன்னை நினைந்து வருந்துவாள் என்று நினைத்தான். இதைக் கேட்டு வெகுண்ட கன்னகி,

"கொண்டவளிட்ட சாதம் மன்னவரே— உமக்கு
கொமட்டியெடுக்கலாச்சே மன்னவரே
கண்டவளிட்ட சாதம் மன்னவரே -- அது
களிப்பாயிருந்ததோ தான் மன்னவரே (ப.71)

என்று கன்னகி இடித்துரைத்தாள். உடனே கோவலன் மாதவிக்கு மரக்கால் பொன் கொடுக்க வேண்டும் என்ற கூற கன்னகி தன்னிடம் சிலம்பைத்தவிர வேறொன்று மில்லையென்றும். அதைக் கழற்றும் போது மதுரைக்குச்

சென்றால் மான்வீர் என்று கூறியதாகவும் (ஆனாலும் கோவலன் கண்ணகியுடன் சிலம்பு விற்கச் சென்றான்,)

வழியில், தடுத்த சகுனங்களைக் கன்னகி கூறுதலும் கோவலன் அதை மறுத்தலும் இந்நூலுக்கே உரிய புதுமை யாகும்.

"செல்லுமென்றேநடக்கும் செட்டியாரே குறுக்காய்
செங்கருடனு மோடுதே சீறியும் ஆந்தை
வங்கைபோலது நாடுதே"

என்று கன்னகி தீச்சகுனம் கூற, கோவலனோ

"நாடுங்கெருடனாந்தை நற்கீரிவந்ததென்றாய்
நலமாச்சே பத்தினியே ஏகும்வழி
பலமாச்சே உத்தமியே (ப. 75)

என்று பதிலிறுத்தான். இவ்வாறு கன்னகி, வானரம் பாய்தல், வலியன் பூனை குறுக்கே வருதல், அரவம் வலமாக வருதல், விசுளி காகம் போதல், பெண் விறகு எடுத்து வரல், நரி ஓடுதல், கோட்டான் கூவுதல், புதுப் பானை வருதல், பின்னால் நெருப்பு புகையெழும்பி வருதல், வாணிபன் எண்ணெய் கொண்டு வருதல், செமபோத்து, கிள்ளை, காட்டோணான், கொக்கு, முசல் (முயல்) ஆகியன காணுதல் முதலான பல தீச்சகுனங் களைக் கூறினான். கோவலன் ஒவ்வொன்றுக்கும் மறுப்பு தெரிவித்தான். (ப. 5-577)

கோவலனும் கன்னகியும் வழியைப் பற்றிப் பேசிக் கொண்டே செல்லுவதும் வேறு எந்த நூலிலும் இல்லாதது. அவர்கள் மதுரையைச் சேர்ந்தனர்.

"சாரை சூரை கிளாவனம் கள்ளியிதுவே—வெகு
நபரைக் கொன்ற வேங்கையுண்டு பேசாய் மெதுவே

என்று கோவலன் கூற கன்னகி,

"வேங்கை வனம் தாண்டியாச்சு வேந்தனேபாரு மிப்போ
ஏங்குது மனம் மதுரை கண்டு யிங்கேயுட்காரும்,"

என்று கூற கோவலன்,

"எங்கேயோ மதுரை நகரென்றிடுமானே—யிதோ
சங்கையில்லாமல் பாரும் சன்னதி தானே"

என்று கோவலன் மதுரையை அடைந்ததைக் கூறினான். (ப. 77)

"சன்னதியைக்கண்டேனெந்தன் சஞ்சலம்
தீர்ந்தேனிப்போ
மன்னவா பசியாயுந்தன் மனையாளும் நலிந்தேன்"

என்று தான் பசியால் வாடுவதைக் குறிப்பிட்டான்.

கோவலன், நேராக யாதவாள் வீட்டிற்குச் சென்று 'யாரம்மா' என்று அழைத்து மோர் கேட்டான். இச்சத்தம் கேட்ட யாதவாள்; (பெயர் குறிப்பிடப்பட வில்லை) சேலையிடை நழுவி தெத்தி யிழுத்து வர காலைப் பின்டைவு கண்டிட ஓடி வந்து மோர் கொடுத்துப் பணிந்தாள். அவளிடம் கோவலன் தங்களைக் 'காவேரிச் சனங்கள்' என்று அறிமுகம் செய்து கன்னகியை அடைக் கலம் வைத்தான். இடைக்குல மாதோ, மகிழ்ச்சியோடு கோவலனை அனுப்பி வைத்தாள்.

"அடைக்கலமாய்வைத்துயென்னை மதுரைக் கேகி
அவசகுனமானபடி மாண்டீராகில்
இடையர் அகத்தினிலிருக்கு மனையாட்சேதி
எப்படி நான்காண்பேன் வழிசொல்மன்னா" (ப. 79)

என்று கன்னகி புறப்படும் கோவலனிடம். அவனுடைய இறப்பைப்பற்றிக் கேட்பது புதுமையாயுள்ளது. அபச குனங்கள் தோன்றினால் நிச்சயம் இறப்பான் என்று நம்புவது அக்கால நம்பிக்கையைப் புலப்படுத்துகிறது. கோவலனும் திருவிளக்கு, மாங்கனி, தேங்கனி, ஜாதிமல்லி ஆகியவற்றை வைத்து விளக்கவியும்; புஷ்பம் வாடும்; தேங்காய் பாதியாய் உடையும்; பழமும் மாறும் என்று அடையாளம் கூறினான்.

கோவலன் சிலம்பு விற்கச் சென்றான். தன் சிலம்பு உடைந்ததால் பழுது பார்க்க விரும்பிய பாண்டிய மன்னனின் தேவி கோவிலிங்கி பொற்கொல்லன் வஞ்சிப் பத்தனை அழைத்தாள். அவன் வருகின்ற விதம் கூத்து முறைக்கு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

"வஞ்சிப் பதனும்நானே பணிகள் செய்து
மாறும்யெத்தனும் நானே
தங்கைமங்கில்யத்திலும் தரிப்பனான்துண்டாமே
யெங்கை என்றால் நாளைக் கென்றுரைக்கும்
வழக்கமே (ப.81)

என்று அவன் தன் பண்புகளைத் தானே சொல்கிறான். இப்பொற்கொல்லன் பாத்திரப்படைப்பு இவ்வளவு சிறப் பாக வேறெந்த நூலிலும் இல்லை. இப்பகுதியால் அக் காலத்தட்டாரின் நிலையும் புலப்படுகிறது. மன்னவனோ வந்த வஞ்சிப்பத்தனிடத்தில் "நாளைக்குள் சிலம்பைச் சரிப்படுத்தித் தர வேண்டும். இல்லையென்றால் மஞ்சு போலுந்தன் சென்னி பறக்கடித்திடுவேனானே" என்று கூறுவது பாண்டியனுடைய தன்மையைப் புலப்படுத்துவ தாக உள்ளது.

பழுது பார்க்க வந்த சிலம்பைக் கருடன் கவர்ந்ததால் வஞ்சிப்பத்தன் கலங்கிய நேரத்தில் கோவலன் சிலம்பை விற்றுக் கொண்டே அங்கு வந்தான். வழியில் தடுத்த ஸ்ரீரங்க வாத்தியாரின் அறிவுரைகளையும் கேளாமல் விலைகூறிவிற்றான், வஞ்சிப்பத்தன் அவனைக் கண்டான், கோவலனை, காணாமல் போன தன் அண்ணன் மகன் என்றுகூறி நடித்தான். ஆனால், சிலம்பைக் கவர்ந்தவுடன் அவனும் அவனிரு பிள்ளைகளும் கோவலனை மாறிமாறி அடித்தனர்.

"கம்பனி கயிறெடுத்தார் புயங்களில்
கட்டியிறுக்கியெட்டி காலாலுதைத்தார்
வம்புடன்நடவுமென்று மண்டையில்
வரட்டுலக்கையெடுத்து மாறியடித்தார்" (ப. 88)

என்று கோவலனை வஞ்சிப்பத்தன் அடித்த நிலை கூறப் படடுளளது. உதிரம பெருக, கோவலனை மன்னவன் முன் அழைத்துச் செலல அவனும் காளி தேவிக்குப் பலி கொடுத்துக் கையில் இரத்தம் கொண்டு வரச் சொன்னான். அங்கிருந்த சேவகர்கள் மன்னனை நோக்கி "நீ செய்வது தகாது" எனறு கூறியதுமல்லாமல் எவ்வாறு நீதி கூற வேண்டும் என்றும் சொன்னார்கள்.

அவர்கள் சொல் கேட்டு மன்னவன் கோவலனை விசாரித்தான். கோவலன் பாண்டியனிடம்,

"என்னென்றுரைப்பேனையோ யீசனளித்தவயது
இன்றோடேமுடிந்ததையோ பாண்டியரே" (ப. 89)

என்று ஒப்பாரியாகத் தொடங்கி நடந்ததைக் கூறினான். இதைக் கேட்ட பாண்டியனே,

''கள்ளன்மொழிகூறுவதும் குடுமிமீசை
காணாமலிருப்பதையும் பாரும்நீங்கள்
உள்ளபடி கூத்தியாருக் களிக்கவென்று
உலகினிலே திருடி பங்கமானதாகும்" (ப. 90)

என்று கோவலன் திருடியதற்கான காரணத்தைக் கூறினான். அதைக்கேட்ட சேவகர்கள் கோவலனைப் பலியிட்டனர்.

கன்னகி புருஷன் கொடுத்த அடையாளங்களைப் பார்த்து மாதரியிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டாள்.

''கல்லொடிகால்களெல்லாம் கசிந்துரத்தம்
காணுதையோ
கொல்லுதே துரட்டு முள்ளுங் கூந்தலைப்
பிடித்திழுத்து
சேலையைச் செடிகள்பற்ற சின்னபின்னஞ்செய்யு
தையோ" (ப. 92)

என்று கன்னகி கணவனைத் தேடும்போது ஏற்படும் வேதனையைக் கூறினாள். அன்னம், கருங்குயில், கொக்கு,

குருவி, மதயானைகள், ஏனம், சிங்கம், கரடி ஆகிய வற்றைக் கேட்டாள். இறுதியில் யாதவர்கள் கோவல னிருப்பிடத்தைக் கூறினார்கள். கன்னகி கோவலனைக் கண்டு தலையையும் உடலையும் ஒட்டியபோது கோவலன் எழுந்து,

"என்னைத்தேடியேன் யிங்குவந்தாய்
கன்னகி பாண்டியனுங் கழுத்தறிவானே." (ப. 94)

என்று அஞ்சினான். தனக்கு உதவி செய்தவர்களையும் செய்யாதவர்களையும் எடுத்துக் கூறினான். அவனிடம் கன்னகி பாண்டியனின் ஈரலை எடுத்து உதிரங் குடிப்ப தாக வஞ்சினம் கூறினாள். பாண்டியன் அரண்மனைக்குச் சென்று கதவை உதைத்துத் தள்ளினாள். காவலன் முகத்தில் மோதினாள். அஞ்சிய காவலன் பாண்டியனிடம் கூற, பாண்டியன்,

"ஆரடி கோட்டைக்குள்ளே அச்சமில்லாமல் வந்தாய்
கூறடிபேருமென்ன கோதையுன்னூருமென்ன
பாரடிநவிலாவிட்டால் பதைத்திடப்பாணத்தாலே
சூரனான் சிரசை ரெண்டாய் துணிப்பேனுரை
செய்வாயே!"

என்று கூறினான். உடனே கன்னகி,

"விழியாதேயென்கணவன் உந்தனிட
வீட்டில்திருடினாரோ
திருடியநகைகளுக்கு முண்டமேபோ
சேர்விலங்காகாதோ
கருவுடனேயழிய உன்னாலையோ
காலங்கள் நேர்ந்ததடா" (ப. 98)

என்று கூறினாள். "நீ துள்ளிக்குதிக்கிறாய்; குதித்திடாதே சபை காணச் சிலம்பை அழை" என்று பாண்டியன் கூறினான். அப்போது கன்னகி 'என்னுடன் கூடப் பிறந்து கூட்டுப் பாலுண்டது மெய்யாகில் என் கரத்தில் வர வேணும்' என, பாண்டியன் பேழையில் வைத்திருந்த

சிலம்பு கணீரென்ற சத்தத்துடன் பெட்டியையுடைத்து மேலே யெழுபபிக் கன்னகி சரத்தில் நின்றது. மறுபடியும் பாண்டியன் 'என் சிலம்பை அழைத்திடுக என்று கூறிய வுடன் கன்னகி 'அப்படி நான் உன சிலம்பை அழைத்துத் தந்தால் நீ என்ன தருவாய்?" என்று கேட்க, அதற்குப் பாண்டியன் "சொந்தயென்குலத்தோ ரெல்லாம் தோகையே பழி தாரோமே" (ப. 100) என்று கூறினான். கன்னகி நினைக்க, கருடன் சிலம்பைக் கொணடு வந்தது. சிலம்பைப் பார்த்தவுடன் பாண்டியன் அஞ்சி, தன்னைக் காக்குமாறு வேண்டினான். அப்போது,

"காப்பதுன்கடமையென சொல்லக்கேட்டு
கண்ணகிதன்னுருவமதை ஏகச்செய்து
நாற்பதுயோசனைநிகளம சிங்கம் தொங்க
நடனமிடும் திரிசூலியா நின்று
ஆர்ப்பரித்தெண்டின், சயதனை முடிப்பேனென்று
அம்புகெதைவாள்சூலம் கையிலேந்தி
பார்ப்பவர்கள் பணிந்திடவே பாண்டியன்
முன்னே
பழிக்குப்பழிவாங்கிடவே வருகின்றாளே"

என்று கன்னகியின் கோலம் கூறப்பட்டுள்ளது.

அவள் பாண்டியனின் சென்னியை வெட்டி உதிரத்தைக் குடித்தாள். தொங்கும் ஈரலைப் பல்லால் கடித்தாள். "வரும் துரைகளை நெஞ்சினில் அடித்தாள்" என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது வியக்கத்தக்கது. ஆசிரியருக்குத் வெள்ளையர்களின் மேல் இருந்த வெறுப்பும் இதனால் புலனாகிறது!

பாண்டியனை அழித்த காளி, கோவிலிங்கியின் வயிற்றைப் பிளந்தாள்; குடலைப் பிடுங்கி முழமளந் தாள்; கூடியழுபவரைப் பிடித்தாள்; அவன் குலத்தை வேரறுத்து முடித்தாள்; அங்கிருந்த கூடம், மேடை ஆகியவற்றை உடைத்தாள்; வஞ்சிப்பத்தன் கூக்குரலிட்டு

அழ வதைத்தாள். அவனுடைய மனைவியையும் கையால் குத்தினாள். அவளுடைய குடலைப் பிடுங்கி மண்ணி லிழுத்து மொத்தினாள் என்று கன்னகி பழிதீர்த்தமை கூறப்படுகிறது. இதைக் கண்ட கருடன் மகிழ்ந்து நகைத்தார். அந்த நேரத்தில் காளியு நவைக் கண்டு திகைத்தார்.

கன்னகி கோவலனுக்கு நன்மை செய்த வாத்தியையும், இடைச்சியையும் அழைத்து மதுரையை விட்டுப போகு மாறு கூறினாள். பாலைக் கறந்து மதுரையில் இறைத் தாள். பால் பட்டவுடன் மதுரை மாநகரம எரிந்தது. அப்போது வானுலகிலிருந்து பூமாரி பொழிந்தது. திருமாலின் தங்கையான இக்காளி சொல்லியனுப்பியதால் மாதவியாள் மயிர் குலைய ஓடி வந்தாள். தன்னையும் கோவலனுடன் எரிக்கும்படியாகக் கூறினாள். உடன் கட்டை யேறிப் படுத்தாள். கன்னகி, கொள்ளி மூட்டினாள். அஸ்தியைக் கடியில கரைத்தாள். அவள் மலையாளத்திற்குச் சென்றாள் பின்புதிநவொற்றியூ நக்கு வந்து தியாகரை நோக்கி நீர் கேடடாள். "கிணற்றில் இறங்கு. தருகிறேன்"என்றார் அவர். அவள் இறங்கியதும் பாறையால் மூடி மறைத்தார் என்று ஆசிரியர் கன்னகியின் கதையை முடித்துள்ளார்.

இந்நூலின் சிறப்பியல்புகள்

வீரபத்திரன் அவர்கள கூத்து வடிவில் நடிப்பதற் கேற்ற முறையில் இந்நூலை எழுதியுள்ளார். பாடலும் உரைநடையும கலந்து அமைந்துளள இந்நாடகம் புகழேந்திப் புலவர் எழுதியதாகக் கருதப் பெறும் கோவிலன் நாடகத்தை யொட்டியே அமைந்துள்ளது. ஆனாலும் ஆசிரியர் தம் கருத்திற்கேற்பச் சில இடங்களில் மாற்றம் செய்துளளார்.

1. பாண்டிய அரசன் தன் மந்திரியிடம் நாட்டு நடப்பு நிலையை விசாரிக்கும் முறையில் நாடகம்

தொடங்குகிறது. அரசன் தன் மந்திரிகளிடம் திருவிழா நடக்கிறதா, அந்தணர்கள் செய்யும் பூசைகள் நடக் கிறதா, பயிர்கள் விளைகிறதா, உத்தமிகள் புத்தி கலை யாமல் இருக்கிறார்களா என்று விசாரணை நடத்து கிறான். மந்திரி சொல்லி முடித்தவுடனேயே, தனக்குக் குழந்தைப் பேறில்லாமையால் காளி கோயிலை அடைக்கும்படியாகக் கூறுவது நாடகப் போக்குக்கு முரணாக அமைகிறது.

2. எண்ணெய் வாணிகன் இறந்தபோது அவனு டைய மனைவி துடித்து அழுகிறாள். காளியிடம் முறை யிடுகிறாள். அவள் முன் காளி தோன்றுகிறாள். தான் மறுபிறவி எடுத்துப் பாண்டியனைப் பழிவாங்கப் போவ தாகக் கூறுகிறாள். வாணிகன், அவனுடைய மனைவி ஆகியோரின் மறுபிறப்பைப் பற்றியும் கூறுகிறாள். தான் கன்னகியாகப் பிறக்கப் போவதாகவும் கூறுகிறாள். இப் பகுதி சிலம்பின் வழிவந்த வேறெந்த நூலிலும் காண இயவில்லை.

3. கருதரித்த பாண்டியனின் மனைவி கோவிலிங்கி தன் பிரசவ வேதனையைத் தாதியர்களிடமும், மருத்துவக் கிழவியிடமும் கூறுகிறாள். மருத்துவக்கிழவி குலதெய் வத்தை வேண்டிக்கொள்ளுமாறு கூறுகிறாள். இப்பகுதி யும் பிற நூல்களில் இல்லை.

4. பாண்டியனுக்குக் குழந்தை பிறந்ததைக் கேட்ட வேதியர்கள் சாதகம் கணிக்க வரும் காட்சி வேறெந்த நூலிலும் வரவில்லை.

5. குழந்தையை வைகையில் விடுவதற்காகப் பாண்டி யன் கோவிலிங்கியிடம் குழந்தையைக் கேட்கும்போது அவள், ஒப்பாரி வைத்து அழுவதாக எந்த நூலிலும் இல்லை.

6. மாணாக்கனும் மாச்சோட்டானும் பூணூல் அணிந்திருப்பதாகவும சந்தியாவந்தனம் செய்வதாகவும் காட்டப்படுகிறது.

7. கண்ணகி இந்நூலில் 'கன்னகி' என்று குறிக்கப் பட்டுள்ளான். கன்னகியை வளர்ப்புத்தாய் (பெயரில்லை) தாலாட்டித் தூங்க வைப்பதை இந்நூலில்தான் காண முடிகிறது.

8. கோவலனுக்கும் கன்னகிக்கும் திருமணம் நடத்தி வரும் அந்தணர்களின் வருகை விரிவாகக் கூறப்படுகிறது.

9. கோவலன் திருமணத்திற்கு அங்கி நிஜாரணிந்து வருகிறான். அவன் அரனை மறவாதவனாகக் கூறப்படு கிறான். அவனிடம் கன்னகியை மணக்கச் சம்மதமா என்று கேட்கப்படுகிறது.

10. மணமகள் அலங்காரத்துடன் காட்சியளிக்கும் கன்னகியின் நிலை இந்த நூலில் மட்டும்தான் காணப்படு கிறது. அவளிடமும் கோவலனை மணக்கச் சம்மதமா என்று கேட்கபபடுகிறது.

11. பந்தல் அலங்காரத்தில் குளோப்பு. லாந்தர்கள் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மணமேடையில் கன்னகியும் கோவலனும் அனைவருக்கும் வணக்கம் சொன்ன பிறகு உட்காருகின்றனர்.

12. கோவலனின் திருமணத்தில் மாதவி நடனமாட வருகிறாள். அவளுடைய நடனத்தைக் கண்ட கோவலன் சிந்தை கலங்கி, மையலுடன் அவளை அழைக்கிறான். மாதவியோ மறுகிறாள். ரொக்கப்பணமும் நகைகளும் தருவதாக ஆசையூட்டுகிறான் கோவலன். மாதவியோ "என்னிடம் உண்மையான அன்பிருக்குமானால் என்னிருப்பிடத்திற்கு வாரும்; அசைவ இருக்குமானால் இங்கேயே நில்லும். ஆடும வேளையில் தடுப்பது நியாய மல்ல" எனறு கூறுகிறாள். இந்நூலில மாதவி மாலை யெறிய வில்லை. வசிய மருந்தை வைத்து வெற்றிலை கொடுக்கவில்லை.கோவலன் மாதவியிடம் மயங்குகிறான். ஆனால் மாதவி கோவலனிடம் அன்பு கொண்டதாகத் தெரியவிலலை.

13. கோவலனை வரவழைக்க, கண்ணகி கடிதம் எழுதிக் கைநாட்டு வைக்கிறாள். கடிதம் எழுதத் தெரிந்த கண்ணகிக்குக் கையெழுத்து போடத் தெரியாமலிருப்பது முரணாக உள்ளது.

11. கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிச் செல்லும் வழியைப் பற்றிப் பேசிக் கொண்டு போவது வேறு எந்த நூலிலும் இல்லை.

15. கூத்துக்கு ஏற்ற முறையில் வஞ்சிப்பத்தன் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வதும், தன் ஏமாற்று வித்தைகளைத் தானே எடுத்துக் கூறுவதும் புதுமை யானது.

16. கோவலன் குடுமி, மீசை இல்லாதிருப்பதைக் காட்டி, மாதவிக்குக் கொடுப்பதற்காகவே சிலம்பைத் திருடினான் என்று பாண்டியனே கோவலன் மீது குற்றம் சுமத்துகிறான்.

17. கண்ணகி கோவலனைத் தேடும்போது ஏற்படும் வேதனை இந்நூலில் மட்டும்தான் கூறப்படுகிறது.

18. கண்ணகி பாலைக் கறந்து மதுரையில் இறைத் தாள். பால்பட்டவுடன் மதுரை மாநகரம் எரிந்தது என்று அவள் மதுரையை எரிக்கும் முறை இந்நூலில் மட்டும்தான் வேறுபட்டுள்ளது.

19. இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் இந்நூலில் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

நிறைவுரை

இந்நூல் கூத்தாக நடிக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. நூலாசிரியர் வீரபத்திரன், சிலப்பதி காரம், கோவிலன் கதை ஆகிய நூல்களிலிருந்து கதை நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டிருந்தாலும் காலத்திற் கேற்ப, தன் விருப்பத்திற்கேற்ப, பல புதிய நிகழ்ச்சிகளை உருவாக்கியுள்ளார்; பல மாற்றங்களைச் செய்துள்ளார்,

கோவலன் சரித்திரம்

(ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்)

இந்நாடகத்தை உடுமலை ஸ்ரீ சரபகவி மாணவரும் சென்னை ஸ்ரீபால விநோத நாடக சபாவின் உபாத்தியாயருமான பரத சாஸ்திர சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சரபம் நாடகாசிரியர் ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் எழுதியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கே. சீனிவாசப்பிள்ளை கம்பெனியார், ஆலந்தூர் கம்பெனியார், ஸ்ரீபால வினோத நாடக சபையார் முதலிய சகல நாடகக் கம்பெனியார்களும் இந்நாடகத்தை நடித்து வந்துள்ளனர். இது எழுதப்பட்ட காலத்தில் மிகச் சிறந்த நடிகர்களாகக் கருதப்பட்ட பி. எஸ். வேலுநாயர், கே. எஸ். அனந்த நாராயண அய்யர், எஸ். ஜி. கிட்டப்பா, கே. பி. சுந்தராம்பாள், எஸ். வி. சுப்பைய பாகவதர் ஆகியோர் இந்நாடகத்தில் பங்கேற்றனர். இந்நாடகம் இருபது சீன்களால் அமைக்கப்பட்டுள்ளது.

கதையமைப்பு

மாச்சோட்டான் செட்டி தன் மகன் கோவலனுக்கு, மாணாக்கன் செட்டியாரின் மகள் கண்ணகையை மணம் பேசினார். (ஆதியில் ஆற்றிலிருந்து பெட்டியை எடுத்த போது கோவலனுக்குக் கண்ணகையைத் தருவதாக வாக்கு கொடுக்கப்பட்டுள்ளது.) ஆனால், மாணாக்கன் செட்டியார் பெண் கொடுக்க பிறகு மறுத்ததனால் மாச்சோட்டான் செட்டியார் நாட்டாண்மைக்காரிடம் முறையிட்டார். நாட்டாண்மைக்காரர் திருவுளச்சீட்டுப் போட்ட போது கோவலன் பெயர் வந்ததால் பெண் கொடுப்பதாக அவர் ஒத்துக் கொண்டார்.

சாதியாசாரப்படி திருமணத்தை இருவீட்டாரும் கலந்து செய்ய விரும்பினர். பணக்கார வீட்டுக் கலியாண

மாதலால் பலகாரப் பட்சணங்களுக்கும், ஊர்வலம் வாண வேடிக்கைகளுக்கும் குறைவிலலை, ஆனால் இந்தக் கலியாணத்தில் சதுர்க்கச்சேரி நடத்தியே தீரவேண்டும் என்று கூறப்பட்டது.

தாசியைப்பற்றி வெளிப்படையாகப் பேசப்படுகிறது. 'திருக்கடையூரில் மாதவி என்கிறாரு தாசிப் பெண் இருக் கிறாள். அடடா, என்ன ஆட்டம்! என்ன பாட்டு! இது வரை அவள் ஒரு வீட்டுக்கும் போனதில்லை. சிவப்புத் தோல்தான்' (ப. 10) என்று மாதவியின் அழகும் பண்பும் விமரிசனம் செய்யப்படுகிறது. மண வீட்டார்கள் செய்த முடிவின்படி கோவலனின் திருமணத்தன்று மாதவியின் சதுர்க் கச்சேரி நடந்தது. அவள்,

''மீனலோசனி நல்ல
மிருதுபாஷிநீ அம்பா'' (மீனு)

என்று தொடங்கும் பாடலைப் பாடி ஆடினாள். பின்பு அவள எறிந்த மாலை கோவலன் கழுத்தில் விழுந்தது. அவள் கோவலனை வீட்டிற்கு அழைத்தாள். அவன் மறுத்தான். மாதவி மாலையைக் கழற்றித் தரச் சொன் னாள். அவனால் மாலையைக் கழற்ற முடியவில்லை. எவராலும் மாலையைக் கழற்ற முடியவில்லை. சிலர் மாலையை அறுத்தனர். ஆனால கத்தியும் ரம்பமும் வாளும் முனை மழுங்கின.

அதனால், கலங்கிய கோவலன், ''ஆசாரக் குறைவாக இவ்வேசியின் இல்லத்தில் போய் நான் வாழ்வதோ?'' என்று வேதனைப் பட்டான். மாதவி தாம்பூலத்தில் மைதடவிக் கொடுத்து தரித்துக் கொள்ளச் சொன்னாள். கோவலன் தாம்பூலம் தரித்தான். மாதவி, ''போய் வரு கிறன்'' என்று கூற கோவலனோ, ''என்னை விட்டு நீ போவதா?'' என்றான். பிறகு மாதவியும் கோவலனும் ஓட முயல, அங்கிருந்தோர் அவர்களைப் பிடித்தனர். திருக்கடையூர் தேரோடும வீதி'' என்று மாதவ கூறி விட்டு, தனியாகச் சென்றாள்.

உறவினர்களிடமிருந்து தப்பித்த கோவலன் கால் நடையாகவே கல்லிலும் முள்ளிலும் நடந்து திருக்கடையூரில் வந்து மாதவியின் வீட்டைத் தேடினான்.

மாதவியின் வீட்டைக் கண்டுபிடித்து நுழைந்தான். அவன் வந்தான் என்று மகிழ்வதைவிட அவன் கைவிட்டு விடுவானோ என்று தான் மாதவி அஞ்சினாள். உமையொரு பாகன் சாட்சியாக உன்னைப் பிரியேன் என்று சத்தியஞ் செய்தான் கோவலன்,

"குயிலே கோபமோ திரும்பாய் பக்கமே
கோக்கோ கத்தின்லீலைக் குன்டோ லெட்கமே"
(ப.21)

என்று புதுமையாகக் கொஞ்சினான். மாதவியின் நட்டுவனாராகிய மாமன் அவள் மனத்தைக் கலைப்பவனாக இருந்தான். இந்த நாடகத்தில் மாதவியின் தாயைக் காட்டவில்லை. நட்டுவனார்தான் செயல் படுகிறார்.

மாதவி மாமாவின் போதனையால் பிறகு மனம் மாறினாள். கோவலன் வரும்போது கோபத்தோடு பேசாமல் இருந்தாள். கோவலன் காரணம் கேட்க, அவள் பதிலிறுக்கும் முறை பெண்மைக்கேற்ப மிக இயல்பாக கூறப்பட்டுள்ளது. "செல்வச் சீமானாகிய தங்களை நான் பர்த்தாவாகப் பெற்றும் என் போன்ற தாசிகள் சகலரும் ஏளனம் செய்ய உடம்பெடுத்தேன். இதைத் தங்களிடம் சொல்லிப் பயனென்ன? அடுத்த வீட்டு அன்னபூரணி என்னைவிட அழகில் சிறந்தவளா? அவள் இருப்பதைப பாருங்கள்! மெத்தை மேடைகளென்ன, நந்தவனங்களென்ன! வண்டி வாகனமென்ன! அணிபணி ஆபரணமென்ன? உலகம் அப்படியிருக்கிறது நான் பெண் ணாய்ப் பிறந்த பலன் இப்படியிருக்கிறது. தங்களை நொந்து பயனென்ன; என்னைப் படைத்த ஈசனையே நோக வேண்டும்" (ப. 24) என்று கூறுகிறாள். கோவலன் "கவி முத்துசாமிசங்கரலிங்கன் சாட்சியாக' அனைத்தையும்

வாங்கித் தருவதாகக் கூறுகிறான். [இந்நூலில் உள்ள பாடல்களைக் 'கவி முத்துசாமி சங்கரலிங்கன்' என்பவர் இயற்றியுள்ளார் என்பது தெரிய வருகிறது. பல இடங்களில் இவருடைய பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கடவுள் மீது சத்தியம் செய்வது போன்று கவி முத்துசாமி சங்கரலிங்கன் மீது சத்தியம் செய்வது புதுமையுடையது.] மாதவி ஒரு பெரிய நகைப்பட்டியலே கொடுத்து விடுகிறாள். வயிரக்கல், மாட்சி, பேசர், ஒட்டியாணம், சரடு, அட்டிகை, புஷ்பராகக் கடயம், சிவப்புக் கல் வங்கி ஆகியவற்றைக் கேட்கிறாள். தன் தந்தைக்குக் கடிதம் எழுதி பணம் தருமாறு வேண்டினான் கோவலன்.

ஒருநாள், கண்ணகையின் முகம் ஒருவித மாறுபாடு அடைந்திருக்கிறது என்பதனால் அவள் கண்ணாடியில் பார்க்கிறாள். அப்போதுதான் கழுத்தில் தாலியிருப்பதே அவளுக்குத் தெரிகிறது. விவாகம் எப்போது நடந்தது? மாலையிட்ட மன்னவன் எங்கே இருக்கிறார்? ஆகிய வினாக்களைத் தோழியிடம் வினவுகிறாள். தோழி மாதவியைப் பற்றிக் கூறியவுடனே, தனக்கு ஜன்னி கண்டதாகக் கோவலனுக்குக் ஒரு கடிதம் எழுதி அனுப்பினாள். இளங்கோவின் கண்ணகையைப் போல் கற்பென்ற போர்வையைப் போர்த்துக் கொண்டு குமைந்திருக்காமல், பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்ப் பொங்கி எழுந்து, கடிதம் கொடுத்து கணவனை வரவழைக்க முயன்றாள். கோவலனும் கண்ணகையின் கடிதம் கண்டு "ஐந்து வயது பிராயத்தில் மாங்கனியைக் கையில் கொடுத்து அக்கினி சாட்சியாக விவாகம் செய்தேன்" என்று சொல்லிப் புலம்பினான். இதிலிருந்து கண்ணகைக்கு நடந்த இளமைத் திருமணத்தையும் அது நடந்த முறையையும் அறிய முடிகிறது. கோவலனின் புலம்பலைக் கேட்டு மாதவி, அவனைப் போக வேண்டாம் என்று கூறினாள்.

கோவலனின் பதிலில் அவனுடைய தன்னலமும், கண்ணகியிடத்து அன்பில்லாத தன்மையும் புலப்படுகிறது.

'காதலி, பிறப்பும் இறப்பும் யாவருக்கும் நிச்சயம். அதற்காக நான் வருந்தவில்லை. கன்னிப் பருவத்தில் அவள் கையைப்பிடித்து சுகதுக்கத்துக்கு ஈடுபடாமலிருந்து விட்டேனே என்ற துக்கம் என்னை அழச் செய்தது" (ப. 31) என்று காரணம் கூறினான்.

மாதவி கோவலனைப் போல் பேசக் கூடிய பொற் பதுமையைக் கேட்டாள். கோவலனும் கண்ணகையை நினைத்து, பொற்பதுமையை வரவழைத்துக் கொடுத்து விட்டுக் கண்ணகையைக் காணப் புறப்பட்டான்.

தான் கடிதம் எழுதியும் கணவன் உடனே வராததைக் கண்ட கண்ணகை தன் ஞானக் கண்ணால் காரணம் காண முயன்றாள். அவளுக்குக் காரணம் புரிந்தது. உடனே அந்தப் பதுமை எரிந்து போகும்படிச் சபித்தாள். பதுமை எரிந்ததைக் கண்ட மாதவி தன்னைப் பாம்பு கடித்து விட்டதாகக் கடிதம் எழுதி மாமாவிடம் கொடுத் தாள். அதைக் கண்டு திரும்பி வந்த கோவலன் மாதவி தன்னை ஏமாற்றியதை அறிந்து கோபித்தான். மாதவியோ அவனிடமிருந்து ஆடை, அணிகலன்களைக் கவர்ந்தாள். பத்து லட்சம் பொன் தரவேண்டும் என்று கோவலனிடமிருந்து சத்தியமும் பெற்றாள். 'எத்தனை வருடமானாலும் சரி; எத்தனை மாதமானாலும் சரி; எத்தனை நாளானாலும் உனக்குச் சேர வேண்டிய பொன்னைக் கொடுத்த பிறகே போசனம் செய்கிறேன். இது சத்தியம்' (ப. 39)என்று கூறி மாதவியை விட்டு நீங்கி னான் கோவலன்.

கண்ணகை கோவலனைக் கண்டதும் எழுந்து வணங் கினாள். பொய்க் கடிதம் கண்டு கோபித்த கோவலனிடம் மன்னிப்பும் கேட்டாள். கோவலன் மாதா பிதாவைப் பார்த்து விட்டு வருகிறேன் என்றபோது, கண்ணகை குளித்து உணவு உண்டு விட்டுப் போகுமாறு கூறினாள். உணவு உண்ணாமலே எழுந்தவனைப் பார்த்து கண்ணகை காரணம் கேட்டபோது,

"சாதமேனடி தாசிகடன்தீராமல்
சதிகாரனென் மதியால்வந்த
சதியாமிது கண்ணகா" (ப. 41)

என்றான்.

தாசி கடனைத் தீர்க்க, கண்ணகையிடத்திலேயே உபாயம் கேட்டான். இது சமுதாயத்தில் ஆடவர்களால் பெண்களுக்கிழைக்கப்பட்ட கொடுமையையே சுட்டுகிறது. தாய் தந்தையர் இவனுக்காகவே செலவு செய்து ஏழையானதால் அவர்களைக் கேட்க முடியாது என்று சொல்லி "நீதான் அதற்கு வழி சொல்ல வேண்டும்" என்றும் கூறினான். கோவலனே கண்ணகையிடம், "ஆடையாபரணங்களில் ஒன்றைக் கொடுத்தால் அதை விற்றுக் கடனைத் தீர்க்கிறேன்" என்று கேட்டான். (நாணுடைய சிலப்பதிகாரக் கோவலனின்றும் இக்கோவலன் மாறுபடுகிறான்.) அப்படி ஒரு நகையில்லையே என்று கண்ணகையும் கூறினாள். காற்சிலம்பைக் கொடு என்று அவனே கேட்டான். நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டி 'சிலம்புள கொண்ம்' என்று கொடுத்த சிலப்பதிகாரக் கண்ணகையிடமிருந்து இந் நாடகக் கண்ணகை மாறுபடுகிறாள்.

"சிலம்பைப் கழற்றுவதற்குத் திருகாணி இல்லையே அது என்னுடன் பிறந்ததாயிற்றே, அதை எப்படிக் கழற்றுவது" என்றும் அவள் கேட்டாள். கோவலனோ, "சர்வேசுவரனைத் தியானம் செய்து கழற்றுவாய்; எல்லாம் இஷ்டம் போல் நடந்தேறும் என்று கூறினான். கண்ணகை சிலம்பைக் கழற்றும் சமயம் ஆகாயவாணி தடுத்து "ஆபத்து விளையும்" என்று கூறியது. சிலம்பைத் தென்மதுரைக்குக் கொண்டு போய் விற்க வேண்டாம்— என்று கூறித்தடுத்தது. எனவே மாயவரம், கும்பகோணம், தஞ்சாவூர் முதலிய இடங்களில் சென்று சிலம்பை விற்குமாறு கூறினாள் கண்ணகை. அதற்குக் கோவலன் நம் குலத்தார்கள் கண்டு நகைப்பார்கள் என்றான்" "அப்படியென்றால் வடக்கே செல்லலாம்" என்றாள். "அங்குச்

சென்றால் நாளாகும்" என்றான் அவன். "அப்படியானால் நானும் உடன் வருவேன்" என்றாள் அவள். பிடிவாதம பிடிக்கும் கண்ணகையைத் தடுத்து நிறுத்த கோவலன் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு வரச் சொன்னான். அவள் வருவதற்குள் அவன் புறப்பட்டு விட்டான். தான் ஏமாற்றப்பட்டதைக் கண்டு கண்ணகை நடுவழியில் கல் லொன்று மாதவி உருவில் அமைய வேண்டும் என்று நினைத்தாள். அதைக் கண்ட கோவலன்,

"எந்தன் மேலே தேனுங்கோபமா கடன் கொடுக்க
இல்லையென்ற மனஸ்தாபமா
சுந்தரியே உந்தனுக்காய் செல்கிறேன்
சிலம்பு விற்க" (ப. 46)

என்று கூறி முத்தமிடப் போனான். அதற்குள் கண்ணகை வந்து விட்டாள்.

செல்லும் வழியில் கண்ணகையின் மாங்கல்யம் கேட்ட கள்வர்களைக் கல்லாக, வெளவாலாக மாற்றினான். மறு படியும் கோவலன் இரங்கி சாபவிமோசனம் செய்யச் சொன்னதினால் மீண்டும் மனிதஉருபெற்றனர். (சிலப்பதி காரத்தில் கவுந்தியடிகள் முதுநரியாகுமாறு சாபமிட்ட தோடு ஓரளவு இப்பகுதி ஒத்துள்ளது.) மன்னிப்பு வேண்டும் கள்வரிடத்தில் "இனி திருடாதீர்கள். திருடி னாலும் தியாரிடத்தில் திருடிப் பிழைக்க வேணும்" என்று கண்ணகை கூறுவது புதுமையான கருத்தாகும்.

கோவலன் மதுரையில் சிலம்பு விற்கும் வரை கண்ணகையை யாரிடத்தில் அடைக்கலப்படுத்துவது என்று தெரியாமல், ஒவ்வொரு குலமாகக்கண்ணகையிடம் கேட்டான். சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகளே அங்கு வந்த ஆய்ச்சி மாதவியிடத்தில் அடைக்கலப்படுத்து கிறாள். இங்குக் கோவலனுக்கு அந்தப் பொறுப்பு சேர்ந்தது. கோவலன், க்ஷத்திரியர், வேதியர் வீட்டில் தங்கச் சொன்னான்.

கண்ணகையே, "யாதவாள் வீட்டிலிருக்க யாதொரு தடையுமில்லை. அதோ ஓரம்மை தயிர் விலை கூறி வருகின்றாள். அவளிடம் என்னை விட்டுச் சென்று வாரும்" என்றாள். இடைச்சி பால் விலை கூறி வருவது புதுமையானது.

"பால் வாங்கலையோ பசும்
பால் வாங்கலையோ உங்கள்
பாலருக்குணவே கொடுத்திட
காலையில் காபி டீ குடித்திட (பால்)" (ப. 50)

என்று விற்று வரும் அந்த ஆய்ச்சி, கோவலன் கண்ணகையிடம் தன் துன்பத்தைக் கூறினாள். "என் மாமி மகா கொடுமைக்காரி; புருஷனும் ஆத்தாள் வார்த்தையைக் கேட்பவர். என்னமோ என் தலைவிதி இப்படி அலைய நேரிட்டது" என்றாள். (இந் நாடகத்தில் மட்டும் தான் இடைக்குலப் பெண்ணுக்கு கணவனும் மாமியாரும் இருப்பதாகக் காட்டப்படுகிறது. மாமியாரின் கொடுமையைக் குறிக்கவே இப்பகுதி அமைக்கப்பட்டிருக்கலாம்.)

ஆய்ச்சியின் வீட்டில் அடைக்கலப்படுத்திய கோவலன் சிலம்புவிற்க கண்ணகையிடம் விடைதர வேண்டினாள். கண்ணகை தடுத்தாள்.

அவளைத் தேற்றிச் செல்லும் கோவலன் சில அடையாளங்களை வைத்தான். தேங்காய் உடைந்து விடும்; திருவிளக்கு நின்று விடும்; மாங்காய் அழுகிவிடும்; மல்லிகைப்பூ வாடிவிடும்; சந்தனம் உலர்ந்து விடும்; பூசும் ஜவ்வாது நாற்றம் தரும். (ப. 53) என்று அடையாளம் கூறினான்.

கோவலன் ஆய்ச்சியிடத்தில் கண்ணகையை அடைக்கலம் வைக்கும் விதம் சிறப்பாக இருக்கிறது. "அம்மா குபேர சம்பத்துடைய கோட்டீசுவரனின் குமாரி; மகா மேதாவியான மாச்சோட்டான் செட்டியின் மருமகள்; காவிரிப்பூம்பட்டினம் செய்த புண்ணிய வசத்தால் அவ்வூரில் அவதரித்தவுவை; கொடியவனான என்னைமணந்து

இன்பம்பெறாத இளங்கொடி;செயல்முறை மாறாத நல்ல குணவதி; அண்டை வீடும் அயலாரும் தெரியாத ஆரணங்கு" (ப. 54) என்று கூறி 'என் அன்பிற்குரிய கண்ணகை உன் அடைக்கலமே' என்றான். மேலும், நான் சென்று வருமளவும் என் மனோரஞ்சித வஞ்சி யான மனைவி கண்ணகா உன் அடைக்கலமே' (ப.54) என்று கூறி அவளை அடைக்கலப்படுத்தினான் கோவலன். இளங்கோவின் கண்ணகையைப் போலவே அவளைக் கடைசி முறையாகப் பாராட்டினான்.

பொற்கொல்லன் பாண்டியன் தன்னிடம் பழுது பார்க்கக் கொடுத்த சிலம்பு காணாமற் போனதால் மீனாட்சியிடம் வேண்டினான். அந்நேரத்தில் கோவலன் உரத்த குரலில் சிலம்பு விற்றுக் கொண்டு வர, வஞ்சிப் பத்தன் அவனை அழைத்துச் சென்றான்.

பாண்டியன் அரசவையைக் கூட்டினான். தன் குலப் பெருமையைக் கூறிச் சபையை ஆரம்பிக்கலாமா? என்று கேட்டான். பாண்டியன் வினா தொடுக்க மந்திரிகள் நாட்டு நடப்புகளைக் கூறினர்.

"எட்டுநாளில் சிலம்பைக்கொடுப்பதாகக்கூறிச்சென்ற வஞ்சிப்பத்தன் காணவில்லையே?" (ப.50-57) என்று கேட்கும் நேரத்தில் வஞ்சிப்பத்தன் வருவதாகக் காட்டுவது நல்ல நாடக உத்தியாகப் பயன்படுகிறது.

அரசவையில் நன்மந்திரி, தீமந்திரி என்று இரு மந்திரிகளைப் படைத்துள்ளார் ஆசிரியர். வஞ்சிப்பத்தன் தீமந்திரியிடம் உண்மையைக் கூறி, "எவ்விதத்திலும் அவ்வியாபாரியைக் கள்வனென்று ருசுப்படுத்தி என்னைக் காத்தால் தக்க பரிசு கொடுக்கத் தடையில்லை" (ப.58) என்று மறைவாகக் கூறினான். அதேபோன்று பாண்டியன் "சிலம்பைக் கொண்டுபோய் அந்தப்புரத்தில் கொடுத்து விசாரித்து வா" என்னும் போதும், காவலனுக்குப் பின் னால், வஞ்சிபத்தன் சென்று "மகாராணியிடம் இதைக் காட்டாமல் அவர்கள் இதை நம்முடையதென்று ஒப்புக்

கொண்டதாகவே சொல்லிவிடும். உமக்குத் தக்க இனாம் தருகிறேன்" என்று கூறுவது காலத்திற்கேற்ற சிறந்த மாற்றமாகும். நாட்டு நடப்பு நிலையை, இலஞ்ச ஊழலை விளக்கமாக எடுத்துக்காட்டும் இப்பகுதி சிறப்பாக அமைகிறது.

கோவலன் கள்வன் அல்லன் என்று சத்தியம் செய்ய நெய்க்கொப்பரையில் சிலம்பிட்டு எடுத்தல், பாம்புப் புற்றில் சிலம்பு வைத்து எடுத்தல, புலிக் கூண்டில். சிலம்பு வைத்து எடுத்தல என்னும் மூன்று முறைகள் கையாளப் பட்டன. கண்ணகையை நினைத்து இந்த மூன்றிலும் வெற்றி பெற்றான் கோவலன். நன்மந்திரி அறவுரை பல கூறியும் பாண்டியன் கோவலனைக் கொலை செய்ய ஆணையிடுவதாகக் காட்டப்பட்டுள்ளது.

கொலையாளிகள் கத்தியை ஓச்சும்போது அவர் களுக்குக் கை வலித்தது. அதனால் கோவலன் "உங்களுக் கேன் வருத்தம். நானே வெட்டிக் கொள்வேன். கத்தி யைக் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்" என்றான். கோவலன் நீண்ட சொற்பொழிவாற்றினான். [கோவல னின் இந்த நீண்ட சொற்பொழிவு சிலம்பின் வழிவந்த நூல்களில இல்லை.] சுந்தரப் பாண்டியன் தடாதகைப் பிராட்டியை மணந்த கதை, பொற்கைப் பாண்டியன் பிரம்மஹத்தி தோஷம் பிடித்த கதை, வரகுணபாண்டியன் கதை போன்ற பல கதைகளைக் கூறி இந்தப பாண்டிய வமிசத்தில் இந்த மன்னன் தோன்றினானே என்று அங்கலாய்த்தான். துன்மந்திரி, வஞ்சிப்பத்தன் ஆகி யோரைத் தூற்றினான். இவர்களைத தூற்றி என்ன பயன் என்று தன்னையே நொந்தான். தன்னைப் பெற்ற தந்தையின் பெருமையையும் தாயின் பெருமையையும் விளக்கமாகக் கூறினான்.

அவன் கண்ணகையைப் பற்றியும் நினைத்துப் புலம்பி, தான் இத்தனை நாளாக அவளைப் பிரிந்தமைக் காக மனம் வருந்தினான்.

"கண்ணகா! என்னை ஆதியிலே கண்டித்திருக்கப் படாதா? இவ்விஷயத்தில் உனக்கு அவ்வளவு சுதந்திரம் இல்லையா? ஒரு வேளை கணவனுடைய ஆசையைக் கெடுக்கப்படாது. எவ்வளவு காலந்தான் இப்படி நடக்கப் போகிறார் மலையிலே விளைந்த நெல்லானாலும் உரலிலே தானே வந்து மசிய வேண்டும் என்றபடி ஓர் நாளையில் நம்மை வந்துசேருவார் என்ற எண்ணத்துடன் என்னையொன்றும் கேட்காது இருந்தனையோ?" என்று கண்ணகையை நினைத்துப் புலம்பினான். உடலை விட்டு ஆவி போக வேண்டுமென்று நினைத்தான் மாதவியின் கடனைத் தீர்க்க முடியாவிட்டால் தான் பிறவி தோறும் அழிகின்ற நிலைமை ஏற்படும். அதனால் தன் கடனைத் தீர்த்து விட்டதாக, பத்துலட்சம் பொன்னை யும் அவள் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் பிராணன் வெந்து சாம்பலாகும் என்றும் கூறித் தானே வெட்டிக் கொண்டு கீழே விழுந்தான். (ப. 70–71)

கோவலன் வராததைக் கண்ட கண்ணகை வருந் தினாள். வைத்த அடையாளங்கள் மாறி விட்டன. இடைச்சியைப் பார்த்து வரும்படி அனுப்பினாள். இடைச்சி பார்த்து வந்து பொய் கூறினாள். அதனால் கோபங் கொண்ட கண்ணகை இடைச்சி வீடு தீப்பற்றி எரியச் சாபமிட்டாள். இடைச்சி உண்மையைக் கூறிய தால் வீடு முன்பு போல ஆகுமாறு செய்தாள். கண்ணகி கோவலனைக் காணப் புறப்பட்டாள். அவட்டுண்ட கோவலன் மேல் விழுந்து புலம்பினாள். "நாதா, இனி எப்பிறப்பில் தங்களை நாதாவென்றழைப்பேன். ஐயோ! அசரீரி வார்த்தையைத் தடுத்து,வந்த பலனை அனுபவிக்க நேர்ந்ததே? காதலா, இதற்காகவா என்னைச் சிறு வயதிலேயே திருமணம் முடித்தீர். கண்ணாளா! அழகமைந்த மாதவியைத் தழுவி அணைந்த கரமாயிது! மாதவி கொடுத்த மையிட்ட தாம்பூலம் வாங்கிய மகராயிது? அன்போடு மாதவிக்குப் பன்னிரண்டு கப்பல்

தங்க நாணயம் அனுப்பக் கடிதம் எழுதிய கரமாயிது? மாதவி கடனுக்காகக் கண்ணகை என் காற்சிலம்பை வாங்கிய கரமாயிது? மதுரைமாநகர் இடைச்சியிடம் அடியாள் என்னை அபயதானமாகப் பிடித்துக் கொடுத்த கரமாயிது?" என்று புலம்பினாள். (ப. 74)

கண்ணகைக்குப் பூர்வஜன்ம யோசனை வருகிறது. பழிக்குப் பழி வாங்கிக் குலசேகர பாண்டியனுக்குப்பட்டங் கட்டி விடடு தனது எதாஸ்தானம் போக வேண்டும் என்று கூறினாள். (பாண்டிய அரசன் இங்குக் குலசேகரப் பாண்டியனாகப் பெயர் பெற்றுள்ளான். கொலை செய்த பாண்டியனின் பெயர் குறிபபிடப்பட விலலை.) கோவலனைத் தடவிக் கொடுத்தவுடன் அவன் எழுந்து உட்கார்ந்தான்.

"மாதவியோ கண்ணகியோ
வந்தவ ளாரடி
மாதவியானால் மடிமேல்வா
கண்ணகியானால் கடியப்போ"

என்று கோவலன் கூற

"தோட்டங்கொண்டாள் கண்ணகியாள்
பூமுடித்தாள் மாதவியாள்
தோட்டங் கொண்டவ ளிங்குவந்தேன்
பூமுடித்தவ ளென்வருவாள்"

என்று எதிர்வினா விடுத்தாள் கண்ணகி. (ப. 75)

கண்ணகையின் கூற்றிலிருந்து சகக்கழுத்தில் போராட்டம் தெரியவருகிறது. கோவலன் இறந்த பிறகும் அவன் நினைவு மாதவியிடத்திலேயே இருப்பதும் தெரிய வருகிறது.

"வஞ்சிப்பத்தன், மகன், மனைவி, பாண்டியன், துன்மந்திரி ஆகியோரின் குடலைப் பிடுங்கித் என் தேகத் தின் மேல் போட்டால்தான் சுவர்க்கம் புகுவேன்" (ப. 76)

என்று கோவலன் கண்ணகையிடம் கூறினான். "அப்படியே செய்வேன் "தாங்கள் முன்போலாகக் கடவது" (ப. 76) என்று கூறிக் கோவலனைத் தடவிக் கொடுக்க அவன் இறந்தவனைப் போலானான். கண்ணகை காளி ரூபம் எடுத்தாள். பாண்டியனுடைய சிலம்பைக் கருடன் கவர்ந்ததைக் கூறினாள். கருடனை நோக்கி

"அண்டபிண்ட நலகண்டம் பறந்திடுங் கருடா
புகழ் அண்டும் சிலம்பினைக் கொண்டுவருவாய்
கருடா"

என்று கூறக் கருடனும் சிலம்பைத் தூக்கி வந்து போடுகிறது.

கண்ணகை ஓலென்ற சப்தத்துடன் விஸ்வரூபமெடுத்து பாண்டியன், துன்மந்திரி, வஞ்சிப்பத்தன் முதலியோரைக் கொன்று குடலைப் பிடுங்கி மாலை சூடினாள். மதுராபுரி தகனம் நடை பெற்றது. குடிகள் தோத்திரம் செய்தனர். காளி குடிகளை வாழ்த்தினாள். "குடிகாள்! ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரரின் கட்டளைப்படி நான் கண்ணகையாய்ப் பிறந்து பாண்டியனைக் கொன்று பழிக்குப் பழி வாங்கி விட்டேன். குலசேகரனுக்குப் பட்டம் கட்டி விட்டு எனது எதாஸ்தானம் போகிறேன். நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டாம். அம்பிகை அருளால் இம்மதுரை மாநகர் முன் போலவே செழிப்புற்றிருக்கும். உங்களுக்கும் யாதொரு குறைவும் நேராது. எல்லோரும் உத்தமராக குலசேகரன் பாண்டியன் வார்த்தைக் கடங்கி சுகஜீவிகளாக வாழ்ந்திருங்கள்" ப. 79 என்று வாழ்த்துவதாடு கதை நிறைவுகிறது.

சில மாற்றங்கள்

1. மாணாக்கன் செட்டியார் கோவலனுக்குக் கண்ணகையை மணம் செய்து கொடுக்க மறுக்கிறார் நாட்டாண்மைக்காரரின் விருப்பப்படி திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்க்க, கோவலன் பெயர் வந்ததால் திருமணம் நடக்கிறது. (ப. 10)

2. ஆய்ச்சி பாலின் சிறப்பு கூறி விற்றல் சிறப்பாகவே உள்ளது. ஆய்ச்சியின் மாமனாரும் மாமியாரும் அவளைக் கொடுமை செய்வதாகவும் கூறப்படுகிறது. (50) ஆய்ச்சியிடம் கோவலன் கண்ணகையின் உயர் பண்புகளைக் கூறி அடைக்கலப்படுத்துதல் சிறப்பாக அமைந்துள்ளது. (ப. 54)

3. பாண்டிய அரசன் தேச விசாரணை செய்வதும், விசாரணை முடிவில் வஞ்சிப்பத்தனைக் காணவில்லையே என்று கூறுவதும் நாடக பூரணாக அமைந்து இருக்கிறது. (ப. 57)

4. காவலனுக்கும், துன்மந்திரிக்கும் இலஞ்சம் கொடுப்பதும் தன் பக்கத்தில் சாதமாக இருக்க வேண்டுமென்று கூறுதலும் நாட்டு நடப்பு நிலையைக் கூறுகிறது. (ப. 58)

5. கோவலன் தான் கள்வனல்லன் என்று சத்தியம்செய்ய கையாளப்படும் மூன்று முறைகள் புதுமையானவை. நெய்க் கொப்பரையில் சிலம்பிட்டு எடுத்தல், பாம்புப் புற்றில் சிலம்பு வைத்து எடுத்தல், புலிக்கூண்டில் சிலம்பு வைத்து எடுத்தல் ஆகியன புதியனவாம். (ப. 60–61)

6. கொலையாளிகள் கத்தியை ஒச்சும்போது அவர்களுக்குக் கை வலித்தது. நானே வெட்டிக் கொள்கிறேன் என்று சொல்லி, கோவலன் கத்தியை வாங்கிக் கொண்டு நீண்ட சொற்பொழிவாற்றுகிறான். இந் நீண்ட சொற் பொழிவு இந்நூலுக்கே உரிய சிறப்புப் பகுதியாகும். (ப. 68-69)

7. கண்ணகை, கோவலனின் கரத்தைப் பிடித்துக் கொண்டு புலம்புதல் சிறப்பாயுள்ளது. (ப. 74)

8. சகக்கழுத்திப் போராட்டம் இந் நூலிலும் காணப்படுகிறது. (ப. 75)

9. கண்ணகை கருடனை நோக்கிச் சிலம்பு எடுத்து வரச் சொல்லுகிறாள். (ப. 79)

10. குடிமக்களைக் கண்ணகை வாழ்த்துகிறாள். குலசேகரன் பாண்டியனுக்கு அடங்கி நடக்கும்படியாகக் கூறுகிறாள் (ப. 79)

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் நடைபெற்ற இக்கூத்து இங்ஙனம் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுள்ளது.

சிலப்பதிகாரம் நாடகம்

(மு. கருணாநிதி)

பல்துறை இலக்கியங்களைப் படைத்துவரும் கலைஞர், நாடகத்துறையில் கொண்டுள்ள நாட்டம் காரணமாக, பதினெட்டு நாடகங்கள் எழுதியுள்ளார் இவற்றுள் பழங் கதைகளை நாடகமாக்கும் முயற்சியில் முகிழ்த்தவை பராசக்தி, பராயணம், சிலப்பதிகாரம் – நாடகக் காப்பியம், சேரன் செங்குட்டுவன் என்னும் மூன்று நாடகங்கள் ஆகும். அவற்றுள் கோவலன கண்ணகி கதையை முழுமையாக உரைக்கும் முறையில், சிலப்பதிகார நாடகக் காப்பியம் எழுந்துள்ளது.

கலைஞர் சிலப்பதிகாரக் கதையை முப்பத்தெட்டு காட்சிகளில விளக்கிச் சொல்கிறார். ஒவ்வொரு காட்சிக்கும் கவிதைநயம் பொருந்திய தலைப்பையும் கொடுத்துச் செல்கிறார்.

இளங்கோவடிகள் பூம்புகாரில் கண்ணகியின் மணநாள் விழாவில் தம் காவியத்தைத் தொடங்குகிறார். கலைஞர் வஞ்சிச் சேரனின் பிறந்த நாள் விழாவில் தம் நாடகத்தைத் தொடங்குகிறார்.

சேர நாட்டுத் தலைநகரான வஞ்சி மூதூரில் இளவரசன் செங்குட்டுவனுக்குப் பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. அவ்விழாவில் வீற்றிருந்த நிமித்தகன் இளங்கோதான் சேர மண்டலம் ஆள்வான் என்று கூறினான். நிமித்திகன் வாக்கு பொய்க்காது என்று கூறி தந்தையிடம், இளங்கோ, 'பொய்க்காது

படைத்தவர்களுக்கு நிமித்திகர் வாக்குப் பொய்க்காது இது உண்மைக் காது. அவர் ஆருடங் கேட்டுக் கலங் காது" என்று பெருமிதத்துடன் கூறினான். வேந்தனாக வேண்டுமென்னும் விதியைத் துறவு பூணல் என்னும் மதியால் வென்றான். 'விதியையே எதிர்க்கிறேன்' என்று பெருமிதத்துடன் கூறினான். (ப. 20)

பேரியாற்றங்கரையில் வீற்றிருந்த சேரன் செங்குட்டுவனிடம் குன்றக் குறவர்கள், கண்ணகி தன் கணவனுக்காக வேங்கை மரத்தடியில் காத்திருந்ததையும் அவள் ஒரு நாள் காணாமல் போனதையும் கூறினர். இதைக் கேட்ட சாத்தனார் அங்கிருப்பவர்களுக்குக் கண்ணகியின் கதையைக் கூறுவதாகக் காட்சிகளை அமைத்துள்ளார். நாடகத்தின் உத்திக்கேற்ற முறையில் கண்ணகியின் கதையை நேராகத் தொடங்காமல் பின்னோக்கு உத்தி முறையில் (Flash Back) கதையைத் தொடங்கியுள்ளார். கண்ணகியின் திருமணக் காட்சியை ஆசிரியர் நீக்கியுள்ளார். கோவலன் வாணிகத் தொடர்பாகக் கிரேக்க நாடுசென்று பொருள் திரட்டிவர அவனுக்காகக் கரையில் காத்திருந்த பூம்புகார்ப் பொற்றொடி அவனை நோக்கி ஓடினாள். அவளைப் பார்த்த கிரேக்கக் கிழவன் 'எங்கள் கிரேக்க நாடு இதுவரை இப்படியொரு அழகியைப் படைக்கவே இல்லை' (ப.26) என்று பாராட்டினான்.

இந்திரவிழாவின் சிறப்பு அம்சமாக மாதவியின் நடனம் நடைபெற்றது. கோவலனுடன் கண்ணகியும் கிரேக்கக் கிழவனும் நடனத்தைக் கண்டனர். நடனத்தின் முடிவில் மன்னவன் கொடுத்த பச்சை மாலையைக் கிரேக்கக் கிழவன் வாங்க நினைத்ததைக் கண்ட மாதவி அழுதாள். அதைக் கண்டு கோவலன் இரங்கி, கிரேக்கக் கிழவனைத் திருப்பி அழைத்துச் செல்ல விரும்பினான். கிரேக்கக் கிழவன், 'ஆயிரத்தெட்டு பொன் தரக்கூடிய தகுதி வேறு யாருக்குமில்லை இங்கு' என்று கூறியவுடன், ''என்ன சொன்னீர்? தமிழகத்தின் தகுதி பற்றி இழித்துரைத்த முதல் மனிதனே நீர்தான். இதோ இதுபோல

நூறுமாலைகளை வாங்கக்கூடிய ஆற்றலும் செல்வமும் தமிழருக்கு உண்டு என்பதை மெய்ப்பிக்கிறேன்" (ப 7) என்று கூறி, மாலைக்கு ஈடாகத் தன் கழுத்திலிருந்த முத்தாரத்தைக் கழற்றித் தந்தான். கண்ணகியுடன் தன் இல்லம் சென்றான்.

கோவலன், கண்ணகி ஆகியோரின் பெற்றோர் அவன் மாதவியிடம் சென்றுவிட்டான் என்றறிந்துகோபத் துடன் வந்தனர். வீட்டில் கோவலன் இருப்பதறிந்து மன நிறைவுடன் திரும்பிச் சென்றனர்.

மாதவியின் தோழி வயந்தமாலை வந்து கோவலனை அழைக்க, அவன் வர மறுத்தான். நேரில் சென்று மணக்க முடியாது என்று கூறிவிட்டு வருமாறு, கண்ணகியே கோவலனை அனுப்பினாள். மாதவியின் வீட்டிற் குச் சென்ற கோவலனை மிகச் சிறப்பாக வரவேற்ற மாதவி, நடனம் ஆடிக்கொண்டே மயங்கி வீழ்ந்தாள். நடனத்தில் மயங்கிய கோவலன், அவள் மயக்கத்தைத் தெளிவித்து ஆறுதல் கூறினான். இறுதியில் கலையரசி அவனை வெற்றிகொண்டாள். கற்பரசி கலங்கினாள். மாதவியின் தங்கநிற ஒளிகாட்டும் மேனியில் தவழ்கின்ற பேரழகில் கட்டுண்டான் கோவலன். அன்பு மாமனும் மாமியும் வந்த போது கண்ணகி தன் துன்பத்தை மறைத்தாள். தன் வீட் டிற்கு வந்த தாய்தந்தையர் மாதவியைப் பழித்த போதும் "மாதவியை இகழாதீர்கள். அவள் என்னைவிட உயர்ந் தவள். அழகில் மட்டுமல்ல. அன்பிலுங்கூட. அவரைப் பிரிந்து நான் உயிரோடு இருக்கிறேன். அவள் அவரைப் பிரிந்தால் அரைக்கணமும் உயிர் தரிக்கமாட்டாள்" என்று குணக்குன்றாம் கண்ணகி அவளைப் புகழ்ந்தாள். (ப. 45)

மாதவி கருவுற்றாள். அதனால் 'மாதாவி' என்று மகிழ்ச்சியுடன் கோவலன் காரணப் பெயராக்கினான். கிரிப்பிள்ளையைக் கொன்ற பிராமண மாதைப் பிராமண னுடன், கோவலன் சேர்த்து வைத்த காட்சியைக் கண்ட மாதவியின் உள்ளம் உருகியது. கணவனில்லாமல்

கண்ணகியும் இப்படித்தானே துடிப்பாள் என்று நினைத்து வருந்தியது. அதனால் கண்ணகியின் வீட்டிற் குச செல்லுமாறு கோவலனை வற்புறுத்தினாள்.

மாதவியின் வற்புறுத்தலால் கண்ணகியின்வீட்டிற்குக் கோவலன் சென்றபோது, கதவருகில் வந்து உள்ளே நுழையப் பார்த்த சேவலைக் கண்ணகி விரட்டி விட்டுக் கதவைத் தடால் என்று சாத்தினாள். இந்நிகழ்ச்சி கோவலன் மனத்தைப் பெரிதும் பாதித்ததால் அவன் திரும்பிவிட்டான். கண்ணகியோ கோவலன் திருவுருவப் படத்தின் அருகில் சென்று துன்பம் தாங்காமல் அழுதாள்.

மாதவியின் வீட்டில் குழந்தைக்கு நன்னீராட்டு விழா நடந்தது. குழந்தைக்குப் பெயரிடும்படி மாதவி கோவலனை வேண்டினாள். "மங்கையர் இனத்துக்கு நீயோர் மணி! உன்காலசைவு கையசைவு எல்லாமே கலை! எல்லாம் மேகலை! மேகலை! மேலான கலை! அதனால் நீ மணிமேகலை" (ப.51) என்று கோவலன் தன் மகளைப் பாராட்டிப் பெயர் சூட்டினான். அவ்விழாவிற்கு வந்த மறையவனை மதயானையிடமிருந்து காப்பாற்றினான். இந்நிகழ்ச்சியைத் தேவந்தி மூலம் கேட்ட மாசறு பொன்னாம் கண்ணகி மனம் மகிழ்ந்தாள்.

காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கண்ணகி துன்பந் தாங்காமல் கோவலனைப் பார்த்தே தீருவது என்ற முடிவுடன் ஓடினாள். அவளுடைய தோழி தேவந்தி இடைமறித்து ஆறுதல் கூறி அழைத்து வந்தாள்.

கடற்கரையில் கோவலனுடன் இருந்த மாதவி யாழ் மீட்டிக் கானல்வரிப் பாடலைப் பாடினாள். பாடலின் பொருளால் தாக்குண்ட கோவலன் மனம் வேறுபட்டான், அங்கே இருந்த வீரனின் சிலையைப் பார்த்து மாதவி காதல் மொழி பேசினாள். இதைக் கண்ட கோவலன்

சினந்து மாதவியைப் பிரிந்து கண்ணகியை அடைந்தான். மதுரைக்குத் தானும் வருவதாகக் கண்ணகி கூறியபோது, இளிச் சாகும் வரையில் அணுப்பொழுதும் உன்னைப் பிரியேன்" என்றுகூற, இருவரும் புறப்பட்டுச் சென்றனர்.

கோவலன் மதுரை சென்றதை யறிந்த மாதவி தன் குழந்தையை வைத்துக் கொண்டு புலம்பினாள். கூனியும் சித்திராபதியும் தனக்கும் கோவலனுக்கும் தெரியாமல் கண்ணகியிடமிருந்து பொருளை வாங்கியதை அறிந்து, துடித்து, அவர்களைப் பழித்தாள்.

கண்ணகி மாதவி இருவரும் கவுந்தியடிகளின் துணை யுடன் மதுரை நோக்கிச் சென்றபோது, நடுவழியில் கோசிகமாணி மாதவியின் கடிதத்தைக் கொடுக்க அதை மாசாத்துவானுக்குக் கோவலன் அனுப்பினான். கடிதத் தைப் படித்துக் கலங்கிய மாசாத்துவானிடம் மாதவி பொற்குவியலைக் கொண்டுவந்து தந்தாள். மாசாத்து வான் அவளைத்தன் அன்பு மருமகளாகக் கூறி மகிழ்ந்தார்.

பாண்டியன் அவைக்கு வழக்கு ஒன்று வந்தது. மலைவாணர், அருளாளர் இருவரும காவியம் ஒன்றைத் தன்னுடையது என்றனர். காவியத்தைக் கொளுத்துவ தாகப பாண்டியன் கூற அருளாளர் துடித்தார். இதைக் கொண்டு உண்மைப் புலவரைக் கனடு பிடித்த பாண்டியன் ஐயாயிரம் கழஞ்சு பொன்னையும் பரிசாகக் கொடுத்தான்.

பாண்டியமாதேவி கொலுமண்டபத்திலிருந்து நடந்து சென்ற போது காலில் இருந்த சிலம்பு ஒன்று விழுந்து பழுதுபட்டது. இரண்டையும் சேர்த்துக் கொடுக்குமாறு பாண்டியன் கூற, தேவி காலில் சிலம் பில்லாமல் இருப்பதா என்று சொல்லி ஒன்றை மட்டுமே கொடுத்தாள். அதிகாரி ஒருவன் சிலம்பைப் பொற் கொல்லனிடம் கொடுக்கச் சென்றான். பொற்கொல்லன்

சிலம்பைப் பெட்டியில் வைத்துவிட்டு அப்பால் சென்ற போது அவன் அதைத் திருடினான்.

பாண்டியன் புறப்பாடல் ஒன்றை எழுதும் நேரத்தில் கோப்பெருந்தேவி வந்து ஊடினாள். அந்நேரத்தில் பொற்கொல்லன் வந்து சிலம்பு களவு போனதைக் கூறினான்.

கோவலன் ஐம்பதாயிரம் பொன்கழஞ்சு கொடுத்து மணநாள் பரிசமாக வாங்கிய சிலம்பில் ஒன்றைக் கழற்றிக் கொடுத்தாள். இன்னொன்று காலில் இருக்கட்டும் என்று கோவலன் கூறினான். "அந்த ஒற்றைச் சிலம்பு ஒலி எழுப்பும் போதெல்லாம் உத்தமியாம கண்ணகிக்குக் கேடு நினைத்த கோவலனின் உள்ளத்தில் ஆயிரமாயிரம் சம்மட்டியடிகள் விழுந்துகொண்டே இருக்கட்டும்" (ப.76) என்று ஒற்றைச் சிலம்பிற்குக் காரணம் கற்பிக்கப் படுகிறது. கோவலன் பிரியும் போது, மாதரி பூ, மாங்காய், பழம் உள்ள தட்டு ஒன்றைக் கண்ணகியிடம் தந்தாள். மல்லிகைப்பூ வாடுவதற்குள் கோவலனைத் திரும்பி வரும் படியாகக் கண்ணகி கூற, மாங்காய் அழுகுவதற்குள் வந்து விடுவதாகக் கோவலன் கூறினான்.

கோவலன் பல இடங்களில் ஒற்றைச் சிலம்பை விற்க முயன்றும் பெற்றிபெற வில்லை. அங்கிருந்த சிலர் அரண்மனைப் பொற்கொல்லனைப் பார்க்கச் சொன்னார்கள். சிலம்பைப் பறிகொடுத்திருந்த பொற்கொல்லனோ சிலம்பைத் திருடிய கள்வன் என்று கோவலன் மீது பழி போட்டான். பாண்டியன் புறப்பாடல் ஒன்றை எழுதுவதைக் கண்டு பாண்டியமாதேவி ஊடினாள். சிலம்பில்லாமல் தான் அரசவைக்கு வரமுடியாதென்று மறுத்து விட்டாள். இதனால் மனம் குழப்பமுற்றிருந்த மன்னவன், 'பாண்டிய நாட்டில் கள்வனா...ம்...? உடனே அவனைக் கொன்று வருக!' என்று ஆணையிட்டான். (ப. 79) பொற்கொல்லனும் அதிகாரியும் வந்து கோவலனைக் கள்வனென்று பழித்தனர். அதைக் கேட்டு துடித்த கோவலன்

தான் கள்வனல்லன் என்று கூறிமறுத்தான். சிலம்புதிருடிய அதிகாரி அவசரமாக அவனைக் கொன்றான். மதுரை மண்ணில் கோவலனின் குருதி ஓடியது.

மாதரியின் வீட்டில் அடைக்கலப்படுத்தப்பட்ட கண்ணகி, கோவலன் கொலையுண்டதை அறிந்து அலறி ஓடினாள். அவ்விடத்தில் எரிந்து கொண்டிருந்த குத்து விளக்கு சாய்ந்ததையும் அறியாமல் அவள் ஓடினாள். குடிசையில் பற்றிய தீ பல இடங்களிலும் பரவியது.

கொலைக்களத்திற்குச் சென்ற கண்ணகி கோவலனைக் கண்டு பழிக்குப் பழி வாங்குவதாகக் கூறினாள். வெட்டுண்ட கோவலன் மீது வடிந்துள்ள இரத்தத்தை எடுத்துத் திலகமிட்டாள். மற்றொரு சிலம்பைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்டு சினங் கொண்ட வேங்கைபோல் பாண்டியன் அரண்மனை நோக்கிஓடினாள். பாண்டியனை நோக்கி, "முத்து விளை கின்ற மூன்றுகடல் சூழ்ந்திருக்கும் தென்னகத்தில் மும்முரசு கொட்டி, முச்சங்கம் வளர்த்து, முக்கொடியின் நிழலிலே, முத்தமிழைக் காப்பாற்றும் மூவேந்தர் பெருமைகள் மூளியாக, முடிபுனைந்த மன்னவனே!" (ப 84) என்று சினத்துடன் விளித்தாள்.

பாண்டியன் முன் நீதிகேட்டு வழக்குரைத்தாள். "உயிர் போனதால் தொங்கிவிட்ட என் அத்தானின் தலைபோல உங்கள் தலைகளையும் தொங்க வைக்கிறேன். உங்கள் மானம் போனதால்.....உங்கள் நேர்மை போன தால்...உங்கள் நீதி அழிந்ததால்...இதோ உங்கள் தலை களையும் தரை நோக்கித் தொங்க வைக்கிறேன்" (ப.86) என்று வஞ்சினம் கூறினாள்.

கண்ணகி பாண்டியன் முன் மூன்று சிலம்புகளை உடைத்தாள். முதலில் பாண்டியமாதேவியின் சிலம்பி லிருந்த முத்துக்கள் தெறிந்தன. இரண்டாவதாகதன்கையி லிருந்த மாணிக்கச்சிலம்பையும், மூன்றாவதாகப்பாண்டிய

மாதேவி காலில் அணிந்த மாணிக்கச் சிலம்பையும் உடைத்தாள். மன்னவன் தன் தவறுணர்ந்து வீழ்ந்தான். தேவியும் உடன் வீழ்ந்தாள்.

பொற்கொல்லனின் வீடு எரிந்தது. தன்னால் அன்றொ பாண்டியன் நீதி கவிழ்ந்தது. அதனால் நெருப் புக்கு நானே இரையாகிறேன் என்று பொற்கொல்லன் விழுந்து எரிந்தான். அரண்மனையின் இடிபாடுகளில் அதிகாரி சிக்கி அழிந்தான்.

''பரவட்டும்...தீ பரவட்டும்! என் மனம் எரிவதுபோல் மதுரை எரியட்டும். என் நெஞ்சிலே மூண்ட நெருப்பே! அழித்துவிடு மதுரையை! என் கணவனைப் பலிகொண்ட மதுரை அழியட்டும். அழியட்டும்! கோவலரைக் கொன்ற போது வாய்மூடிக் கிடந்த கூடல் நகரத்தாரே! இப்போது கூறுங்கள்! அழிவைக் கண்டு அலறுங்கள்! கதறுங்கள்! அலறுங்கள்! காற்றே வீசு! கனலே கிளம்பு! அழிவே புறப் படு! பழிக்குப் பழி வாங்கு! பழிக்குப்பழி! பழிக்குப் பழி!" (ப. 88) என்று கூறி நெருப்பிடையே கண்ணகி பெருஞ் சிரிப்புச் சிரித்தாள்.

வஞ்சி மூதூரில் சேரன் செங்குட்டுவன் தன் வீரர்க ளிடையே வீரம் பொங்கப் பேசினான். சோழனுக்கும் சேரனுக்கும் இல்லாத ஆத்திரம் தங்களுக்கு ஏன் மன்னவா? என்று புரோகிதர் கூறினார். அதைக்கேட்ட செங்குட்டுவன் "தமிழன் என்பதால்! தன்மான உணர்ச்சி குன்றாததால்! சோழனோ பாண்டியனோ என்னுடைய பகைவனாக இருக்கலாம். அதற்காகப் பிறநாட்டார் வாலாட்ட விடமாட்டேன் என் உயிருள்ள வரையில்! என் தமிழையல்லவா இகழ்ந்தார்கள்!" (ப. 89) என்று தான் படையெடுத்ததிற்கான காரணத்தைக் கூறினான். தன் வீரர்களிடம், உங்கள் தலைகள் பறிபோகலாம், ஆனால்

கனல் கக்கும் கண்களோடு அவை கொய்யப்படட்டும். தசைகள் கிழித்தெறியப் படலாம்...ஆனால் சுயமரியாதை ரத்தத்தின் சூடு தணியாமல் அவை கிழிக்கப்படட்டும். முரசு தட்டுங்கள்! இமயத்தை முட்டுங்கள்" (ப. 90) என்று வீரமொழிகள் பேசினான். கனக விசயர்களை வென்று கல்லை அவர்கள் தலையில் ஏற்றி வந்தான். கண்ணகிக்குச் சிலை நாட்டினான். மாதவி துறவுக் கோலத்தில், கண்களில் நீர்வழிய, குழந்தை மணிமேகலையைக் கொண்டு வந்து சிலையின் காலடியில் வைப்பதுடன் கலைஞர் இந்த நாடகத்தை முடித்துள்ளார்.

காவியமும், நாடகமும் எழுந்ததன் காரணங்கள்

இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் எழுதத் தூண்டுகோலாக அமைந்த காரணங்கள் மூன்று. அவை கலைஞர்க்கு உடன்பாடல்ல. அவர் தன்னூல் எழுந்ததற்கான காரணத்தை வேறாகக் காட்டுகிறார்.

1. சிலப்பதிகாரத்தின் இலக்கிய நயம் — கலை அம்சம் — வரலாற்றுச் செழுமை — பாத்திரங்களீண் மாண்பு — இவைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டுத் தமிழகத்து நாடக மேடைகளில்—திரையரங்குகளில் முரண்பட்ட வகையில் சிலப்பதிகாரத்தை உருவாக்கி நடித்து வந்தனர்.

இந்நிலையை மாற்ற விரும்புகின்ற கலைஞர் மூல ஆசிரியரின் கருத்துக்கு மாறுபடாமல் காலத்திற்கேறப, சில மாறுதல்களைச் செய்கிறார்.

"கண்ணகி—கர்ணகி ஆனாள்
மாதவி—மாதகி ஆனாள்; ஏன்
பாதகியும் ஆனாள்
கோவலன் கோவிலன் ஆனான்
மாசாத்துவான்—மாச்சோட்டான் செட்டியென்றும்
மாநாய்கன் மாணாக்கன் செட்டியென்றும்
(பிறரால்) மாற்றப்பட்டனர். அதைக் கண்டு

மாதேவி காலில் அணிந்த மாணிக்கச் சிலம்பையும் உடைத்தாள். மன்னவன் தன் தவறுணர்ந்து வீழ்ந்தான். தேவியும் உடன் வீழ்ந்தாள்.

பொற்கொல்லனின் வீடு எரிந்தது. தன்னால் அன்றொ பாண்டியன் நீதி கவிழ்ந்தது. அதனால் நெருப்புக்கு நானே இரையாகிறேன் என்று பொற்கொல்லன் விழுந்து எரிந்தான். அரண்மனையின் இடிபாடுகளில் அதிகாரி சிக்கி அழிந்தான்.

''பரவட்டும்...தீ பரவட்டும்! என் மனம் எரிவதுபோல் மதுரை எரியட்டும். என் நெஞ்சிலே மூண்ட நெருப்பே! அழித்துவிடு மதுரையை! எல் கணவனைப் பலிகொண்ட மதுரை அழியட்டும். அழியட்டும்! கோவலரைக் கொன்ற போது வாய்மூடிக் கிடந்த கூடல் நகரத்தாரே! இப்போது கூறுங்கள்! அழிவைக் கண்டு அலறுங்கள்! கதறுங்கள்! அலறுங்கள்! காற்றே வீசு! கனலே கிளம்பு! அழிவே புறப்படு! பழிக்குப் பழி வாங்கு! பழிக்குப்பழி! பழிக்குப் பழி!'' (ப. 88) என்று கூறி நெருப்பிடையே கண்ணகி பெருஞ் சிரிப்புச் சிரித்தாள்.

வஞ்சி மூதூரில் சேரன் செங்குட்டுவன் தன் வீரர்களிடையே வீரம் பொங்கப் பேசினான். சோழனுக்கும் சேரனுக்கும் இல்லாத ஆத்திரம் தங்களுக்கு ஏன் மன்னவா? என்று புரோகிதர் கூறினார். அதைக்கேட்ட செங்குட்டுவன் ''தமிழன் என்பதால்! தன்மான உணர்ச்சி குன்றாததால்! சோழனோ பாண்டியனோ என்னுடைய பகைவனாக இருக்கலாம். அதற்காகப் பிறநாட்டார் வாலாட்ட விடமாட்டேன் என் உயிருள்ள வரையில்! என் தமிழையல்லவா இகழ்ந்தார்கள்!'' (ப. 89) என்று தான் படையெடுத்ததிற்கான காரணத்தைக் கூறினான். தன் வீரர்களிடம், உங்கள் தலைகள் பறிபோகலாம், ஆனால்

கனல் கக்கும் கண்களோடு அவை கொய்யப்படட்டும். தசைகள் கிழித்தெறியப் படலாம்...ஆனால் சுயமரியாதை ரத்தத்தின் சூடு தணியாமல் அவை கிழிக்கப்படட்டும். முரசு தட்டுங்கள்! இமயத்தை முட்டுங்கள்" (ப. 90) என்று வீரமொழிகள் பேசினான். கனக விசயர்களை வென்று கல்லை அவர்கள் தலையில் ஏற்றி வந்தான். கண்ணகிக்குச் சிலை நாட்டினான். மாதவி துறவுக் கோலத்தில், கண்களில் நீர்வழிய, குழந்தை மணிமேகலையைக் கொண்டு வந்து சிலையின் காலடியில் வைப்பதுடன் கலைஞர் இந்த நாடகத்தை முடித்துள்ளார்.

காவியமும், நாடகமும் எழுந்ததன் காரணங்கள்

இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் எழுதத் தூண்டுகோலாக அமைந்த காரணங்கள் மூன்று. அவை கலைஞர்க்கு உடன்பாடல்ல. அவர் தன்னூல் எழுந்ததற்கான காரணத்தை வேறாகக் காட்டுகிறார்.

1. சிலப்பதிகாரத்தின் இலக்கிய நயம் — கலை அம்சம் — வரலாற்றுச் செழுமை — பாத்திரங்களின் மாண்பு — இவைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டுத் தமிழகத்து நாடக மேடைகளில்—திரையரங்குகளில் முரண்பட்ட வகையில் சிலப்பதிகாரத்தை உருவாக்கி நடித்து வந்தனர்.

இந்நிலையை மாற்ற விரும்புகின்ற கலைஞர் மூல ஆசிரியரின் கருத்துக்கு மாறுபடாமல் காலத்திற்கேறப, சில மாறுதல்களைச் செய்கிறார்.

"கண்ணகி—கர்ணகி ஆனாள்
மாதவி—மாதகி ஆனாள்; ஏன்
பாதகியும் ஆனாள்
கோவலன் கோவிலன் ஆனான்
மாசாத்துவான்—மாச்சோட்டான் செட்டியென்றும்
மாநாய்கன் மாணாக்கன் செட்டியென்றும்
(பிறரால்) மாற்றப்பட்டனர். அதைக் கண்டு

சிலப்பதிகாரம் உணர்ந்தோர் புழுங்கித் துடித்தனர். மூலக்கதையின் ஆசிரியர் கொண்ட கருத்துக்கு மேலும் வலுவூட்டுவது போன்ற மாற்றங்களும் அவரால் படைக்கப்பட்ட பாத்திரங்களின் பண்பு கெடாமல் தரப்படுகிற உருவகமும் மறுக்கத் தக்கன அல்ல. காலத்திற்கேற்ற சில மாற்றங்களைக் கதையின் நோக்கம் கெடாதவாறு அமைப்பதும் தவறல்ல. மூலக் கதை ஆசிரியர் விட்ட கருத்துகளையோ, காட்டத் தவறிய காரணங்களையோ, அடிப்படைக்குக் குந்தகமின்றி புகுத்துவதும் குற்றமல்ல. இந்த நோக்கத்துடன் நான் மாறுதல்களை, சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியமாக்கும் இந்த முயற்சியில் கையாண்டிருக்கிறேன்'' என்று ஆசிரியர் அவர்களே இந்நூலின் முன்னுரையில் காரணங்களை விளக்கியுள்ளார். (ப. 15)

2. "தமிழ்த் துறவி இளங்கோவடிகள் சித்திரித்த கண்ணகியும் கோவலனும், கனிமொழியாள் மாதவியும், நீதிக்கு உயிர் தந்த நெடுஞ்செழியப் பாண்டியனும், இமயம் சென்று கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கல் கொணர்ந்த வீரச் செங்குட்டுவனும் நம்மைப் பார்த்துத் தமிழரின் புகழை எத்தனை முறை பாடினாலும் தெவிட்டாது என உரைக்கிறார்கள். அந்த உணர்வே இந்த நாடகக் காப்பியம்!" என்று கலைஞர் அவர்களே தம் முன்னுரையில் கூறுகிறார். அதனால் இளங்கோவடிகளின் பாத்திரப் படைப்பில் கலைஞரின் உள்ளம் ஈடுபட்டமையும் ஒரு காரணமாகிறது. (ப.12)

3. "தமிழரின் மீதுள்ள அன்பால்—பற்றால்—பாசத்தால்—தமிழ்காத்துத் தமிழரின் நலம் காக்கும் தொண்டர்க்குத் தொண்டனாகிய நான்,

"மணங்கமழும் தமிழே!
மனங்கவரும் தாயே!
இன்ப மொழியே
அன்பு விழியே

உயிரான தமிழே! உலகில்
உயர்வான மொழியே!
உன்னைப் போற்றிப்புகழ்வதன்றி
வேறுபணி எனக்கில்லையே"

என்ற ஆசிரியர் கூற்று, தமிழின் புகழ்பாட அவர் சிலப்பதிகாரத்தைக் கருவியாக்கிக் கொண்டமையைத் தெளிவாக்குகிறது.

காப்பியத்திலும் நாடகத்திலும் அடிப்படையிலேயே முரண்பாடு ஏற்படுவதால், நாடகம் முழுவதிலும் மாற்றம் ஏற்படுவது இயல்பாகிறது. இளங்கோவடிகளின் முப்பெரும் உண்மைகளில் மாற்றம், அவர் உருவாக்கிய பாத்திரப் படைப்புகளில் மாற்றம், காலச் சூழ்நிலைக்கேற்ப அமைந்த கொள்கை வழி மாற்றம் என்ற முப்பெரும் நிலைகளில், இரு நூல்களையும் ஒப்பிட்டு ஆயும் முறையில் இவ்வியல் அமைகிறது. (கலைஞர் அவர்களின் நாடகத்தைக் குறிக்கப் பயன்படும் எண்கள் பக்க எண்களைக் குறிப்பனவாக அமைகிறது.)

முப்பெரும் உண்மைகளில் மாற்றம்

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற உண்மையைப் பாண்டியன் வாயிலாக அடிகள் அறிவுறுத்துகிறார். மன்னவனின் முடிவிற்கு அறம் காரணமாகிறது. அறம் ஒறுக்கும் என்னாது, மக்கள் ஒறுப்பர் என்று கலைஞர் மாற்றம் செய்கிறார். கண்ணகியின் சிலம்பை நம்ப முடியாது என்று கூறிய பாண்டியனிடம். "நீ யார் நம்புவதற்கு! உன்னை யார் நம்பச் சொன்னார்கள்? உன் மீது வழக்குரைக்க வந்தவள் நான்! குற்றவாளி நீ! அதனால் தீர்ப்பளிக்கும் உரிமை உன் கையில் இல்லை! இதோ இருக்கிறார்கள்— பெருங் கேண்மைப் பெரியோர்கள்! அவர்களே இப்போது நீதிபதிகள்! அவர்கள் உரைக்கட்டும் நல்ல தீர்ப்பு" (பக். 85)

என்று இன்றைய வழக்குரைஞரின் சட்ட நீதியோடு எடுத்துரைக்கிறாள்.

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பது இளங்கோ கண்ட இரண்டாவது உண்மை. மாளுடப் பெண்ணைப் படிப்படியாக வானுலகத தெய்வமாக்கு வார் இளங்கோவடிகள். கலைஞர் அவர்களோ, முதலி லிருந்து முடிவு வரை உயர்ந்த உள்ளம் கொண்ட மானுடப் பெண்ணாகவே கண்ணகியைக் காட்டுகிறார். புகாரில் வாழ்ந்த பெண்ணொருத்தி பாண்டியன் அவை யில் வழக்குரைஞராக மாறிச் செஞ்சிலம்பால் வென் றாளே, அதற்காகக் கண்ணகியைப போற்றுகிறார். கணவன் இறந்தவுடன் அக்கால வழக்கிற்கேற்ப உயிர் வாழ்தலோ, உயிர் துறத்தலோ செய்யாமல், "மன்னவனே ஆனாலும் அவன் இழைத்த அநீதியை உலகுக்கு அறிவிப்பேன், என் கணவன் பழியைத் துடைப் பேன், என் கணவனுக்காக இந்த உலகத்தையே பேச வைப்பேன்" (ப. 83) என்று புரடசிப் பெண்ணாய்ப் பொங்கி எழுந்தாளே அந்தப் பெண்மைப் புரட்சிக்காகத் தான் கலைஞரின் நாடகமே எழுந்தது.

'ஊழிற் பெருவலி யாவுள' என்ற கொள்கை வழி நிற்பவர் இளங்கோவடிகள். அதனால் காவியம் முழுவதும் ஊழ்வினையே முதுகெலும்பாக ஊடுருவிச் செலகிறது. ஆசிரியர் அவர்களோ, இருபதாம் நூற்றாண்டின் அணு யுகத்தில் வாழ்கின்றவர்! 'கடவுள் இல்லை, இல்லை, இல்லவே இல்லை' என்ற தந்தை பெரியாரின் வழி வந்தவர். அதனால் அவருடைய நாடகத்திலும் ஊழ் வினைக்கு இடமே இல்லை. கதை நிகழ்ச்சிகள் அனைத்துமே, மக்கள் செயல்களை ஒட்டி நடப்பனவே என்று உணர்ந்த கலைஞர் நாடகச் சுவையை மிகுதிப் படுத்தவும் மூடத்தனத்தின் மூடைநாற்றத்தை அகற்றவும் மக்களிடத்து ஊழ்வினையின்பால் உள்ள நம்பிக்கையைப் போக்கித் தன்னம்பிக்கை உண்டாக்கவும், சமுதாயத்தில் சிறந்த மக்களை உருவாக்கவும், ஊழ்வினையை அறவே

நீக்குகிறார். அதனால்தான் கோவலன், கண்ணகி, தேவந்தி ஆகியோரின் பழம் பிறப்புகளும் மாதரி கோவலனின் தாய், கண்ணகியின் தாய் ஆகியோரின் மறுபிறப்புகளும் இவர் நாடகத்தில் இடம் பெறவில்லை.

புகார், மதுரை, வஞ்சி என்று காவிய ஆசிரியரின் காண்ட முறையினையே மாற்றி அமைத்து வஞ்சிக் காண்டத்திலிருந்து நாடகத்தை ஆரம்பிக்கிறார். இளங்கோவடிகளின் துறவு நிலை நாடகத்தின் பின் னோக்கு உத்தியாக அமைவதாயினும், ஊழையும் உப் பக்கம் காணும் முயற்சியாலே சிறப்புப்பெறுகிறது. ஊழ், நிமித்தம், ஆகியவை பொய்மையைச் சரக்கு என மக்களுக்கு அறிவுறுத்த இளங்கோவின் துறவுக் கதையைத் தொடக் கத்தில் கூறுகிறார். விதியையும் மதியால் வெல்லலாம் என்பதே ஆசிரியர் அவர்கள் இந்நாடகத்தின் வாயிலாக வலியுறுத்தும் ஓர் உண்மையாகும்.

நாடக மாந்தர்களின் வழி மாற்றம்

கோவலன், கண்ணகி, மாதவி, நெடுஞ்செழியன், கவுந்தியடிகள் ஆகியோர் இளங்கோவடிகள் படைத்த மாந்தர்கள். யவனக்கிழவன், அதிகாரி, சித்திராபதி, கூனி ஆகியோர் கலைஞரின் புதிய பாத்திரப் படைப்புகள். பண்டைத் தமிழகத்தின் மேன்மையை அறிவுறுத்தும் அரிய பல உண்மைகளை மக்களுக்கு அறிவுறுத்தவும், விதியின் பெயரால் மக்களை முடங்கி விடாமல், சமயத்தின் பெயரால் பரப்பப்படும் மூட நம்பிக்கைகளால் சீர் குலைந்து போகாமல் இருக்கவும் ஆங்காங்கே மாற்றங் களை அவர் செய்கிறார். இளங்கோவடிகளின் காவியத் தில் தெளிவுபடாத இடங்களை இவர் தெளிவுபடுத்து கிறார்.

கோவலன்

காவியக் கோவலனிடத்தில் உள்ளனவாக ஆய்வாளர் களால், சுட்டப்படுகின்ற சில குறைகளைக் கலைஞர்

நீக்குகிறார். கோவலன் மாதவியை அடைவதற்கும், அவன் வீழ்ச்சி உருவாவதற்கும் காரணம், அவனுடைய கலை யுணர்வே என்று சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர், (அ சிதம்பரநாதன், 'இளங்கோவின்' இன்கவி' ப. 47-43) இ. மாணிக்கவாசகம், 'செந்தமிழ்ப்பாவை! 'ப.54' கோவலனுடைய அலவத்திற்குக் காரணம் அவனுடைய காம உணர்வே என்றும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர் (எஸ். ஆர். மார்க்கபந்து சர்மா; 'சிலம்பில் ரசனை" ப.54) இக்கூற்றுகளை ஆசிரியர் உள்ளம் ஏற்கவில்லை. அதனால் அவர் வேறு சில காரணங்களைக் கூறுகின்றார். 'மாலையை வாங்கிய கோவலன் மாதவி வீட்டுக்குப்போய் வடுகிறான் என்பது சிலப்பதிகாரம். அவன் கண்ணகிபால் கொண்ட அன்பு அவ்வளவு விரைவிலும் எளிதிலும் திடீரென முறிந்து வடக் கூடியதாகத் தோன்றவில்லை. "மலையிடைப் பிறவா மணியே! அலையிடைப் பிறவா அமிழ்தே!" என்றெல்லாம் கண்ணகியிடம் காதல் காவியம் பாடியவன் அவ்வளவு எளிதில் அவளை மறப்பது இயலுமோ? என்ற கேள்விக்கணை தாக்கிற்று: அதனால் ஆசிரியரே இம்மாற்றம் செய்வதாகநூலின் முன்னுரையில் கூறுகிறார். (ப.15) யவனக்கிழவன் 1008 கழஞ்சு பொன் கொடுத்து மாலை கொள்வது கண்டு மாதவி அழுகிறாள். அதைக் கண்டு இரங்கிய கண்ணகி அவளைக் காப்பாற்றக் கோவலனை, தன் இரக்க உணர்வால் அனுப்புவதாக மாற்றப்படுகிறது. (ப.31) 1008 கழஞ்சு பொன்தரக்கூடிய தகுதி யாருக்குமில்லை என்று நடன அரங்கில் கூறிய யவனக கிழவனுக்கு மாற்று தேடும் முறையில், தமிழினப் பெருமையை நிலை நாட்டும் வகையில் தன் முத்து மாலையைக் கொடுத்து மாதவியின் மாலையைக் கோவலன் வாங்குவதாகக் காட்டப்படுகிறது. மாலை வாங்குபவர் மாதவியுடன் வாழவேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ளாமலே மாலை வாங்குவது குறித்தற் குரியது. (ப. 35).

கோவலன் மேல் கூறப்படுகின்ற இன்னொரு குற்றம், வணிகன் கோவலன், தன் குலத்திறதுரிய வாணிகத்தைச் செய்யவில்லை என்பது. இக்குறையைப் போக்கவே, கலைஞர் கோவலனின் வணிகச் சிறப்பை அவனை அறிமுகப்படுத்தும்போதே கூறுகிறார். (காட்சி-4) புகாருக்கு வந்த உடனேயே அகஸ்டஸ் சீமானின் அரண்மனைக்குத் தேவையான ஐம்பதாயிரம் முத்துக்களை ஏற்றிச் செல்ல வேண்டும் என்கிறான். "புனல் கடந்து ஒளிமுத்து விற்று வந்தால், மடைதிறந்த வெள்ளம போல் பொற்காசு குவியும, தமிழர் வளத்தை தரணி அறியும்" (ப 36) எனக் கோவலனின் பிரிவைத் தாங்காது துடிக்கும் கண்ணகிக்கு ஆறுதல் கூறுகிறான்.

ஆசிரியரின் கலையுணர்வையும் தமிழ் உணர்வையும் வெளிப்படுத்துகின்ற படைப்பாகவே கோவலன்பாத்திரம் அமைகிறது. அதனால்தான் தமிழரின் மானத்தைக் காப்பதற்கான மாலை வாங்கபபடுவதாகக் காட்டப் படுகிறது. இறக்கும் போது தமிழரின் உணர்வைப் பேசு கிறான். தமிழ் வீரத்தை நிலை நாட்ட முதியவனை யானையிடமிருந்து காக்கிறான் (ப 52)தமிழர் மறைந்த பழக்கத்தால் அறத்தைக் கூறிக்கீரியைக் கொன்ற பார்ப் பனத்தியைக் காக்கிறான் (ப.48)

இளங்கோவின் கோவலனைப் போன்று, இவனும் தந்தையின் குன்றனைய செல்வத்தைத் தொலைபபதாகக் காட்டப்படுகிறது. பிறர் பொருளில் வாழாதவனாகவும் கோவலன் காட்டப் படுகிறான். மாமன் கைபார்த்துப் பிழைக்கிறான் என்று ஊரார் கூறுவர் என்று அஞ்சு கிறான். தனியாக வாழ்வதற்குத் தகுதியுண்டு என எண்ணித் தந்தை பொருள் கொடுக்க அதைத் தொலைத் துப் புதுத் தொல்லை கொடுப்பதற்கும் மனம் இல்லை. கண்ணகியின் தாய் வீட்டு நகைகளைக் கொடுத்திருந்

தாலும் அவன் சம்மதித்திருக்க மாட்டான். அவன் திருமணப் பரிசமாகப் போட்ட சிலம்பைக் குறை மனத் தோடு பெற விரும்புகிறான்.

இளங்கோவின் கோவலன் மீது கூறப்படுகின்ற இன்னொரு குற்றம், அவன் கள்வன் என்று பழி கூறப் பட்ட போது கூட, ஒன்றும் பேசாமலிருந்தான் என்பது. இதையும் கலைஞர் மாற்றுகிறார்! கொலைக்களத்தில், "தமிழ் படித்த நெஞ்சமிது – தமிழ்த்தாயின் வயிற்றினிலே கருவாகி உருவாகித் திரு நாட்டின் மடிமீது தவழ்ந்தவன் நான்" (ப. 80) என்று அவன் கூறுகிறான். இவ்வாறு கோவலனின் குற்றங்களை ஆய்ந்து ஆய்ந்து அவற்றை மாற்றுபவராக ஆசிரியர் விளங்குகிறார்.

கண்ணகி

கோவலனின் கலையார்வத்தில் பங்து கொள்ளும் உணர்வு கண்ணகிக்கு இல்லாததால் அவன் மாதவியின் மனை புகுந்தான் என்பது ஆய்வாளர்கள் கண்ணகியிடம் காட்டும் குற்றசசாட்டு (ம. பொ. சிவஞானம், 'கோவலன் குற்றவாளியா' ப. 29 அ. சிதம்பரநாதன், 'இளங்கோவின் இன்கவி'. ப. 48) கலைஞரின் கண்ணகி ஆடல், பாடல், தெரியாதவளாயிலும், கலை ஆர்வமும், உணர்வும் உடையவள்; அவள்தான் மாதவியின் நடனத்தைப் பற்றிக் கோவலனிடம் கூறுகிறாள். (ப. 26) கோவலனுடன் சென்று மாதவியின் நடனத்தைக் கண்டு களிக்கிறாள். (ப. 27)

கண்ணகியிடம் ஊடல் உணர்வு இல்லை என்பது இன்னொரு குற்றச்சாட்டு (ம. ரா. பொ. குருசாமி, 'சிலப்பதிகாரச் செய்தி'. ப. 30) கோவலன் நலம் பாராட்டும் போது கூட அவள் மறுபேச்சு பேசாததைச் சுட்டிக் குறை கூறப்படுகிறது. "கோபிப்பானேன்! பிறகு சமாதான மாவானேன்!" என்று வினா தொடுக்கிறாள் கலைஞரின் கண்ணகி. சிறு பிணக்குக் கூட இல்லாமல்

அன்பான வாழ்க்கை வாழ நினைக்கும் கண்ணகிக்கு ஊடலும் கூடலும் தேவையில்லாததாகிறது. ஆனால், அவளும் வள்ளுவரின் தலைவியைப் போல ஊடத்தான் செய்கிறாள். 'பிரியவில்லையா, பிரியமில்லையா' என ஊடுகிறாள். (ப. 37)

கோவலன் கண்ணகியை விட்டுப பிரிந்து செல்வதற்கு அவனுடைய இளமைப் பருவமும், அவன் இச்சையை உணர்ந்து கண்ணகி நடந்து கொள்ளாமையும் தகுந்த காரணங்கள் (எஸ். ஆர். மார்க்க பந்து சர்மா, சிலம்பின் சிந்தனை ப. 52) என்பது இன்னொரு குற்றச் சாட்டு. கலைஞரோ கண்ணகியின அன்பை நாடகத் திரைப்பட உத்தியாக மாற்றுகிறார் கோவலன் வருகை நோக்கி, கண்ணகி தனியாகவே கடற்கரையில் காத்திருக்கிறாள். கோவலன் வரும் படகைக் கண்டவுடன் சதிராடி வருகிறாள். அலைகளால் தழுவப்பட்டு, இருவரும் தழுவிக் கொள்கின்றனர் (ப 26) ஈடு இணையற்ற தன் அன்புப் புதையலை இடையில் வந்த மாதவி பறித்துக் கொண்டு போய் விடுவாளோ என்று நடுங்குகிறாள். (ப. 33) ''அவருக்கு என் மீதுள்ள அன்பு—நெடுவானத்தில் எழுகின்ற மின்னல் அல்ல. தொடுவானத்து எல்லையையும் கடக்கின்ற ஒளிப்பிழம்பு! என்றைக்கும் அவர் என்னுடையவர்" (ப. 44) என்று கோவலனின் அன்பு ஆழத்தைக் கூறுகிறாள்,

எனவே. கோவலன் தன்னை விட்டுப் பிரிவதற்குக் கண்ணகியின இரக்க உணர்வுதான் காரணம். வேறு காரணங்கள் அல்ல. யவனக் கிழவனின் பேச்சால் மாதவி அழுவதைக் கண்ட இவள், அவளைக் காப்பாற்றச் சொல்லிக் கோவலனிடம் கெஞ்சுகிறாள். (ப. 31). கோவலனை அழைத்துச் செல்ல மாதவியிடம் இருந்து தூது வந்த போதும் ''நீங்களே போய நிலைமையை விளக்கினால் அவள் மனதுகுமு ஒரு சாந்தி ஏற்படும் அல்லவா?'' என்று சொல்லி 'சீக்கிரம் திரும்பிவிடுங்கள்' என்றுகூறி அவனுடைய

மேலங்கியைக் கொண்டுவந்து தந்து, காலணியைக் கொண்டு வந்து காலில் மாட்டிவிட்டு, "மாதவி நல்ல பெண். அவள் மனமும் நோகக்கூடாதல்லவா? நானே ஒரு நல்ல மணமகனைப் பார்த்து, திருமணம் செய்து வைக்கிறேன்" (ப. 38) என்று இவளே தன் கணவனை மாதவியின் வீட்டிற்கு அனுப்பி வைக்கிறாள்.

இளங்கோவடிகள், கோவலனைப் பிரிந்த மாதவியின் துயரைக் காட்டுகின்ற அளவிற்குக் கண்ணகியின் துயரைக் காட்டவில்லை. இந்தக் குறையைக் கலைஞர் நீக்குகிறார். கோவலன் மீண்டும் உரோமாபுரிக்குப் போவதாகக் கூறியவுடன் 'முத்துச் சுமை ஏற்றிக் கத்து கடல் கீறிச் செல்லுகையிலே குத்துவிளக்கொன்றை இங்குச் செத்து மடிய விட்டுச் செல்கின்றோம் என்று நினைப்பீரோ? அத்தான்' என்று புலம்புகிறாள். (ப.36-37) கோவலன் மாதவியிடம் சென்றபோது, அவன் உருவப்படத்தின் முன் நின்று 'எரிமலையின் மூச்சை என்மீது திருப்பி விட்டீர்களா? ஈட்டியிலே கூர்பார்க்க என் இதயந்தான் கிடைத்ததா?' (ப. 50) என்று அழுகிறாள். இந்திரவிழா நிகழ்ச்சிகளும் அவளை வருத்த, ஒரு முறையாவது அவனைப் பார்த்தால்தான் முடியும் என்று வெளியில் ஓடுகிறாள். (ப. 54)

மாதவி

சங்க இலக்கிய அகத்துறைப் பாடல்கள், தலைவன் தலைவி பரத்தை ஆகியோரிடையே நிகழும் மும்முனைப் போராட்டத்தை விளக்குவது போல, சிலப்பதிகாரக் கதையும், கோவலன், கண்ணகி, மாதவி இவர்களிடையே நடைபெறும் 'மும்முனைப் போராட்டமாக இருப்பதால் கதைப் போக்கில் மாதவி பெறும் பங்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. கலைஞரின் நாடகம் ஒரு தலைவனையே விரும்பும் ஒப்பற்ற இரு தலைவியரின் கதையாக அமைந்துள்ளதால் தலைமை மாந்தர் நிலையில் வைத்து மாதவி எண்ணப்படுகிறாள்.

கண்ணகிக் குலமகளுக்கு மகப்பேறு கொடுக்காமல் விலை மகளுக்குப் மகப்பேறு கொடுத்தமை, இளங்கோவடிகள் செய்த பல புரட்சிகளுள் ஒன்று. "ஆமாம் மா...தா...வி...தான்! இனிமேல் நீ மாதாவிதான்! மாதா... மாதா...நீ மாதா...நான் பிதா" என்று மாதவியின் பெயருக்கேநயம்படக்கூறுகிறார் கலைஞர். (ப 47)காவியக் கோவலன் மாதவியை நலம் பாராட்டவில்லையென் றாலும் நாடகக் கோவலன் மாதவியை நலம் பாராட்டு மாறு செய்கிறார். (ப.43)

காவியத்தில் கண்ணகிக்கும் மாதவிக்கும் இருந்த தொடர்பு புலப்படுத்தப் படவில்லை. மணிமேகலையை, மாபெரும் பத்தினி கண்ணகி மகள் என்று மாதவி குறிப் பிடுகிறாள். கலைஞர், அவர்களுக்கிருக்கும் உறவு முறையைச் சிறப்பாகக் காட்டுகிறார். மாநாய்கன் மாதவியைத் திட்டும்போது, "மாதவியை இகழாதீர்கள்— அவள் என்னைவிட உயர்ந்தவள்; அழகில் மட்டுமல்ல, அன்பிலும் கூட" (ப. 45) என்று கண்ணகி கூறுவதன் மூலமாக நாடகத்தில் மாதவியை உயர்த்துகிறார்.

காவியத்தில் மாதவியால்தான் தன் செல்வம் இழந்த தாகக் கோவலன் கூறுகிறான். நாடகத்தில் மாதவி அறியாமல் கோவலனின் செல்வத்தைக் கவர்கின்றனர் சித்திராபதியும் கூனியும். இதை அறிந்த மாதவி கடிவ தோடு அப்பொற்குவியலை, மாசாத்துவானிடம் சேர்க் கிறாள். மாசாத்துவானும் 'நீ மாற்றுக் குறையாத பசும் பொன்' என்று கூறுவதுடன் அவளையும் மருமகளாக நினைக்கிறார். (ப. 61,67)

மாதவி பொன்னுக்காகவும் பொருளுக்காகவும் கோவலனை விரும்பினாள்; அதன் காரணமாகவே கோவலன் வெறுப்புற்று வீடு திரும்பினான் எனக் 'கோவிலன் கதை', 'கண்ணகி வழக்குரை' ஆகிய நூல்கள குறிப்பிடுகின்றன.

"சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைத்த
இலம்பாடு நாணுத் தரும்"
(சிலம்பு : கனாத்திறம் 69-71)

என்னும் கோவலன் கூற்றும் இதற்குக் காரணமாக அமைந்தது. மாதவியின் மீது கூறப்படும் இப்பழியைக் கலைஞர் துடைத்து விடுகிறார்.

கண்ணகிக்கு உரியவளைக் தனக்கு உரியவனாக ஆக்கிக் கொண்டவள் என மாதவியைக் குறை கூறுவர். அந்தக் குறையையும் நீக்குகிறார் கலைஞர். அந்தணன் மனைவியின் துயரத்தைக் கண்ணகியின் துயரத்தோடு ஒப்பிட்டுக் காட்டுகிறாள் மாதவி. கோவலன் கண்ணகியைப் போய்ப் பார்த்து வந்தால்தான் பேசுவதாகவும் ஊடல் கொள்ளுகிறாள். (ப. 49) தன் குழந்தை மணிமேகலை 'கண்ணகியை உரித்து வைத்தது போல் இருக்கிறது' என்று பெருமை கொள்கிறாள். அவளைத் தமக்கையின் குழந்தையாகவே கருதுகிறாள்.

கோவலன் இறந்த செய்தியைக் கேள்வியுற்ற மாதவி தன்னிடமிருந்த கலையைத்துறந்து துறவு பூண்டதாகவும், தன் மகள மணிமேகலையையும் துறவுக்கோலம் கொள்ளுமாறு செய்ததாகவும் காப்பியம் காட்டுகிறது. கலைஞரோ மாதவியை மட்டுமே துறவியாக்கி மணிமேகலையைக் குழந்தையாகவே காட்டுகிறார். தாயின் குற்றத்திற்கு மகளும் தண்டனையடைவதா என்ற வாதமே மணிமேகலையைக் குழந்தையாகப் படைத்தது.

கானல் வரிப் பாட்டிலேயே கோவலன் மாதவி பிரிவு அமைகிறது. இந் நாடகமோ பிரிவுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக மாதவி,வீரன் சிலையருகில் நின்று காதல்மொழி பேசுவதாகக் காட்டுகிறது. விளையாட்டு வினையாகி விடும் என்று வயந்த மாலை கூறிய அறிவுரைக்கும் செவி சாய்க்காது ஊடல் காரணமாக விளையாட்டாகச் செய்த

செயல் அவள் வாழ்வின் அவலத்திற்குக் காரணமாக அமைந்து விடுகிறது.

துணை மாந்தர்கள்

கவிஞருமாகிய கலைஞர் புறப்பாடல் பாடுபவனாகப் பாண்டியன் நெடுஞ்செழியனைக் காட்டுகிறார். இளங்கோவடிகள் பாண்டியன் பெயரைக்கூடக் கூறாமை குறிப்பிடத்தக்கது.

ஆடல் மகளின் நடனத்தில் ஈடுபட்டமைக்காகப் பாண்டியன் தேவி ஊடுவதாக இளங்கோவடிகள் காட்டுகிறார். இந்த நாடகத்தில் தேவி வருவதும் தெரியாமல், சிலம்பைப் பற்றி அவள் கேட்ட கேள்விக்கும் பதில் கூறாமல், கல்வியைப் பற்றிய புறப்பாடல் எழுதுவதற்காக அவள் ஊடுகிறாள். (பக் 73) பாண்டியனின் கவிப்புலமை தேவியின் ஊடலுக்குக் காரணம் என இரண்டையும் ஒன்றாக்கும் கலைஞரின் நாடகத்திறன் வியத்தற்குரியது.

கவுந்தியடிகள் வாயிலாகவும் கோவலன் வாயிலாகவும் பாண்டியனின் நீதிமுறை காப்பியத்துள் போற்றப்படுகிறது. அவன் மலைவாணர், அருளாளர் என்ற இரு தமிழ்வாணருக்கு நீதி உரைக்கும் காட்சியைக் காட்டி அவனுடைய ஆழ்ந்த அறிவையும், ஆராய்ந்து கூறும் பண்பையும் நாடகம் விளக்குகிறது. (ப. 69) கலைஞரின் நாடகத்தில் கண்ணெதிரே காட்சியாகக் காணும்போது அவனுடைய நீதிமுறை நம்முடைய நெஞ்சில் நிலைத்து விடுகிறது. இத்தகு சிறப்புடையவன் கண்ணகியின் முன்னே குற்றவாளியாகி நீதி உரைக்கும் தகுதியையும் இழந்து அமைச்சர்களால் விசாரணை செய்யப்படும் போது அவனுடைய வீழ்ச்சி படிப்போரின் உள்ளத்தை உருக்குவதாக அமைந்து விடுகிறது.

அரசியின் காற்சிலம்பு காணாமல் போய்விட்டது என்று கூறிய தலைமைப் பொற்கொல்லனிடம், "நூறு கொல்லர்

களையும் நாளை நமது நீதி மன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தும். நானே விசாரணை செய்து கள்வனைக் கண்டு பிடிக்கிறேன்" என்று கூறுகிறான் நெடுஞ்செழியன். பாண்டியனின் நீதிவழுவா நெறிமுறையையும், ஆராய்ந்து நீதி வழங்கும் பண்பினையும் அவன் செயல் வாயிலாகவும், பேச்சு மூலமாகவும் தெளிவுபடுத்தியுள்ளார். இத்தகை யோன் நெறி பிறழ்ந்து உயிரிழந்தான் எனக் காட்டும் போது அவன் வீழ்ச்சி அவலத்தை மிகுவிக்கிறது.

சிலம்பு திருடிய கள்வன் அகப்பட்டு விட்டான் என்று பொற்கொல்லன் கூறியவுடன் அரசியின் ஊடலால் ஏற்பட்ட மனமயக்கத்தால், "பாண்டிய நாட்டில் கள் வனா...ம்... உடனே அவனைக் கொன்று வருக" (ப.79) என ஆணையிடுகிறான். நூறு கொல்லர்களை விசாரிக்கப் போவதாகக் கூறியவன் ஒருவரையும் விசாரிக்காமல் கொன்று வரும்படி கூறுகிறான். இதன் காரணமாகத் தன்னுயிரையும் இழக்கிறான்.

கலைஞர் மூலநூல் ஆசிரியரை நாடகமாந்தருள் ஒருவராக்கி அவர்தம துறவு வாழ்க்கையைக் கதைபோக்கு தொடர்பு படுத்தியுள்ளார். விதி, ஊழ், நிமித்தம் ஆகியன மூடநம்பிக்கை என அறிவுறுத்த,

"விதிவிட்ட வழியில் நடப்போம் என்று இருந்தால் வேதனைக்களமாகி விடும் தமிழ் நாடு". (ப.22) என்பதை வலியுறுத்தவும் இளங்கோவைப் படைத்துள்ளார்.

மாசாத்துவானும், மாநாய்கனும் காப்பியத்தில் பெயரளவில் சுட்டப்பட்ட பாத்திரங்களேயன்றி, சொல் வளவில் நடமாடும் பாத்திரங்களாகக் காட்டப்பட வில்லை. இந்நூலில், மாசாத்துவானும் மாநாய்கனும் கண்ணகி, மாதவி ஆகியோரின் பண்பு நலனை விளக்கிக் காட்ட உருவாக்கப்பட்ட பாத்திரங்களாகும்.

சித்திராபதி இழிந்த பாத்தமைச் சமுதாயத்தின் பிரதி நிதியாக அமைந்திருந்திருப்பதால் அவளை இளங்கோ

பெயரளவில் கூட சுட்ட விரும்பவில்லை. கலைஞர், மாதவி யின் பண்புகளை மிகுதிப் படுத்திக்காட்ட அவர்களை உருவாக்குகிறார். அவர்கள் கோவலனின் பொருளைக் கவரவில்லை என்றால், கோவலன் மதுரை செல்ல நேர்ந் திருக்காது. கதையோட்டமே முடிந்திருக்கும். மாதவியின் சிறப்பையும் அறிய முடியாது. கதையை நடத்திச் செல்வ தற்கு உறுதுணையாக அமைகிறவர்கள் இவர்கள் என்பதை அறியலாம்.

கிரேக்கக் கிழவன் கலைஞர் படைத்த புதிய பாத்திரம் எனலாம். இவன் வாயிலாகப் பழந்தமிழரின் வணிகச் சிறப்பினை அவர் புலப்படுத்துகிறார். தமிழ் நாட்டு முத்தினை வாங்கிச் செல்வதற்காகக் கிரேக்க நாட்டி லிருந்து கோவலனோடு தமிழகம் வந்தவன் அவன். கோவ லன்மாலையை வாங்குவதற்கு ஒருகருவியாக, அக்கிரேக்கக் கிழவன் அமைகிறான். கோவலனை மாதவி தன் மாளிகைக்கு அழைத்துச் செல்லும் காட்சிக்கு அந்தப் பாத்திரம் (கிரேக்கக் கிழவன்) ஒரு சாதனமாக—கருவி யாக—அமைகிறது என்று அறிஞர் அண்ணா அவர்கள் இந்நூலின் முன்னுரையில் கூறுவது முற்றிலும் பொருத்த மானதே.

அதிகாரி

பொற்கொல்லர், சமுதாயத்துச் சுயமரியாதையைக் காப்பதற்காகக் கலைஞரால் உருவாக்கப்பட்ட புதிய படைப்பு இவன். அந்தச் சமுதாயத்திற்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்கும் கருவியாகக் கலைஞரால் படைக்கப்பட்டுள்ளான். காப்பியத்தில் கோப்பெருந்தேவி யின சிலமபைக் கவர்ந்த பாத்திரமாகக் காட்டப்பட்ட பொற்கொல்லன் பாத்திரத்தை அந்த 'அதிகாரி' செய் கிறான்.

கவுந்தி

அருகனை அன்றிப் பிற தெய்வத்தை வழிபடாத வராகவும், மிகுந்த சினமுடையவராகவும், தவவலிமை

மிக்கவராகவும், கண்ணகியைப் பொற்புடைத் தெய்வ மாகப் போற்றுபவராகவும் காப்பியத்தில் படைக்கப் பட்ட கவுந்தியடிகளுக்கும் கலைஞரின் கவுந்தியடிகளுக் கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. கலைஞர் கவுந்தியடி களைச் சமணத்துறவியாகப் படைத்தாலும், மதவெறி உடையவராகக் காட்டவில்லை.

சிலப்பதிகாரக் கதை மாந்தர்கள் இன்றைய சமூகச் சூழலுக்கு ஏற்ப நாடகத்தில் மாற்றி அமைக்கப் பட்டுள்ளனர். இதற்குக் காரணம் நாடக ஆசிரியர், தாம் வாழும் சமுதாயத்தை உற்று நோக்கி, காலத்தின் தேவையை உணர்ந்து, உணர்ந்தவற்றைக் கருத்தோவிய மாக்க விரும்பியதே ஆகும்.

கொள்கைவழி மாற்றம்

"புரட்சியெல்லாம் மனப்புரட்சி
கிளர்ச்சியெல்லாம் உளக்கிளர்ச்சி
எழுச்சியெல்லாம் எழுத்தில் பேச்சில்"

என்று கலைஞரே கூறுவது போன்று புரட்சி அவர் இரத் தத்தில் ஊறிய ஒன்று. "களத்திலே உங்கள் தலைகள் பறிபோகலாம்; ஆனால் கனல் கக்கும் கண்களோடு அவை கொய்யப்படட்டும். தசைகள் கிழித்தெரியப்படலாம். ஆனால் சுயமரியாதை இரத்தத்தின் சூடு தணியாமல் அவை கிழிக்கப்படட்டும்." என்று சேரனின் வாயிலாகக் கலைஞர் சேரனின் தன்மான உணர்வை மட்டுமின்றி, தன்னுடைய தன்மான உணர்வையும் புலப்படுத்துகிறார்.

இந்தச் சமுதாயத்திற்குத் தற்போதைய சூழ்நிலையில் குறிப்பிட்ட ஒரு கருத்து — அது எவ்வளவு பழமையானா லும், மிகச் சிறந்த புதுமையே ஆனாலும் — தேவை என்று நாடக ஆசிரியன் கருதுவானானால், அதனை அவன் எந்த வகையிலும் சொல்லியே தீருவான் என்பது கலைஞரின் நாடகத்தைப் பொறுத்தவரைக்கும் முற்றிலும் பொருத்த மானதே.

கலைஞர் இந்நாடகத்தில் செய்துள்ள கொள்கைவழி மாற்றங்களை மூன்று நிலைகளில் பகுக்கலாம். அவை (1) சுயமரியாதைக் கொள்கையின் காரணமாக, புராணக் கருத்துகளை எதிர்த்தல், அதனால் சில காட்சிகளை விடுத்தல், சிலவற்றை மாற்றம் செய்தல். (2) பகுத்தறிவுக் கொள்கையின் காரணமாக இயற்கை இறந்த நிகழ்ச்சி களை ஏற்காமல் விடுத்தலும் சில மாற்றங்களைச் செய் தலும் (3) தமக்கே இயல்பாக உள்ள தமிழுணர்வு, தமிழின உணர்வு ஆகியவற்றைப் புலப்படுத்துதல் என்பன.

புராணக் கருத்துகளை எதிர்த்தல்

சடங்குகளும், சமய நம்பிக்கைகளும் தமிழ்ச் சமுதா யத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதாகக் கருதி, அவற்றின் பொய்ம்மை முகமூடியைக் கிழித்து மக்க ளுக்கு உண்மையை உணர்த்த நாடகத்தைக் கருவியாகத் தேர்ந்தெடுக்கிறார் கலைஞர். தாம் சார்ந்த கட்சிக் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் பிரச்சாரக் கருவி யாக, கட்சியின் குரலை எதிரொலிக்கும் ஒலிபெருக்கி யாக நாடகத்தைப் பயன்படுத்துகிறார் அவர்.

சிலப்பதிகாரத்தில், கண்ணகியின் திருமணம் வேக நெறியில் நடப்பதால் அதை ஏற்றுக் கொள்ளாத கலைஞர், அந்தக் காட்சியையே நீக்கிவிடுகிறார். காப்பியம் திருமணத்தில் தொடங்க, கலைஞர் கடற்கரைக் காட்சியில் தொடங்குகிறார். மாதவி தன் வாழ்வைப் பறித்துக் கொள்வாளோ என்றஞ்சும் கண்ணகி,

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம்
செய்து நிகழ்த்திய திருமணம் சக்தியற்றுப்
போய்விடுமோ எனக் கலங்கினேன்" (ப. 33)

என்று கோவலனிடம் கூறுகிறாள். இக்கூற்று உண்மை யாவதைக் காட்டி, அந்தணர்கள் நடத்தும் வைதீகத் திருமணம் சிறப்பிழக்கும் தன்மையை நிலைநாட்டுகிறார் கலைஞர்.

கண்ணகியின் சொல்லாற்றலைக் குறிக்கத் தேவந்தி யிடம் கண்ணகி கூறிய 'பீடன்று' (கனாத்திறம் 64) என்ற சொல்லை ஆய்வாளர்கள் சிறப்பிப்பர். சூரியகுண்டம், சோம குண்டம் மூழ்கிக் காமக் கோட்டம் வழிபடும்படி கூறும் தேவந்தியின் உரையாடலைக் கலைஞர் அறவே விட்டுவிடுகிறார்.

சோதிடத்தில் நம்பிக்கையற்ற கலைஞர், சோதிடனின் கூற்றைப் பொய்ப்பிப்பதற்காகவே இளங்கோவடிகளைத் தன் நாடகத்தில் ஒரு பாத்திரமாகவே மாற்றுகிறார். அடிகளாரே, நிமித்தகனைப்பார்த்து, "நீர் பெருமையோடு பேசினீரே, இந்த விதியின் வீழ்ச்சி, மதியின் வெற்றி! தோல்வி கண்ட முகத்தைத் தொங்க விட்டுக்கொண்டு உமது தொழிலையே துறந்து விட்டு என்னைத் தொடர்ந்து வாரும்" (ப.22) என்று எள்ளி நகையாடு கிறார். நிமித்தகனும் தனக்குள் "இப்போது பிழைபபே போனது; இனி மாளிகைப பக்கம போனால் மானம் போய்விடும். தோல்வி! பெரிய தோல்வி!" (ப.22) என்று சொல்லி ஓடுவதாகக் காட்டப்படுகிறது. இக்காட்சி தேவையற்றதாயினும் தன் கொள்கையை நிறுவவும், நாடகம் காண்போருக்கு நகைச்சுவையை ஊட்டவும் இது கலைஞர் கையாளுகின்ற புதிய உத்தியாகிறது.

வழக்குரைக்கும் கண்ணகியைச் சிபிச்சக்கரவர்த்தி, மனு நீதிச்சோழன் ஆகிய புராணகால அரசர்களைக் கொண்டு பழம்பெருமை பேசி வழக்காடும்படி விடவில்லை ஆசிரியர். மாறாக, இக்கால நிலைக்கேற்ப, "உன் மீது வழக்குரைக்க வந்தவள் நான். குற்றவாளி நீ! அதனால் தீர்ப்பளிக்கும் உரிமை உன் கையில் இல்லை" என்று (ப.85) இன்றைய வழக்கறிஞரின் வாதத்திறமையோடு பேசும்படி செய் கிறார். அதுமட்டுமன்று; முடியாட்சி அரசைக் குடியாட்சி நிலைமைக்கு மாற்றுவதாகவும் அவர் காட்டுகிறார்.

கீரிப்பிள்ளையைக் கொன்ற பாவத்திற்குப் பரிகாரம் செய்ய, பெரும் பொருள் கொடுத்து, வைதிக நெறிச்சடங்கு

களைச் செய்கிறான் இளங்கோவின் கோவலன். கலைஞரின் கோவலனோ, தமிழ் நெறி தந்த பழக்கத்தால் 'அந்தணரே, பாம்பு குழந்தையைக் கடிக்குமா கடிக்காதா என்று தெரியாமலே கீரி பாம்பைக் கொன்றுவிட்டது. அதுபோலவே கீரி குழந்தையைக் கடித்ததா கடிக்க வில்லையா எனத் தெரியாமலே உன் மனைவி அதைக் கொன்று விட்டாள்! அதனால் சரிகுச் சரி ஆகி விட்டது" (ப.48) என்று தர்க்க முறையில் நீதி வழங்கு கிறான்.

இளங்கோவின் கவுந்தியடிகள் கோவலனின் துன்பத்தை ஆற்ற இராமன், நளன் ஆகியோரைப் பற்றி யும் ஊழின் திறத்தைப் பற்றியும் கூறுகிறார். கலைஞரின் கவுந்தியடிகள் தவறு செய்தவர்கள் தங்கள் தவற்றை உணரும்போது, அதுவே பெருந்தண்டனையாகிறது. (ப. 35) என்று காலத்திற்கேற்ப அறிவுரை கூறுகிறார்.

அரசவையில் நிமித்தகனுக்கும் இளங்கோவிற்கும்வாக்கு வாதம் நடக்கிறது. "மூத்தவன் காடாள வேண்டும், இளையவன் நாடாள வேண்டும் என்ற விதியை யாராவது மாற்ற முடிந்ததா?" என்று கூறித் தன் கொள்கைக்கு அரண் தேடுகிறான் அவன். "பரதனும் ஆளவில்லை. பதினாலு வருடம் பாதரட்சை அல்லவா நாடாண்டது! பழைய இதிகாசங்களைக் காட்டி விதியை நிலைநிறுத்த எண்ணாதீர்கள். இதோ நான் உடைக்கிறேன்...உமது ஆரு டத்தை அறிவால் வெல்லுகிறேன்" (ப.20) என்று இளங்கோ—அல்ல-அல்ல—கலைஞர் பேசுகிறார்.

இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்

முற்பிறப்புக் கதைகளும் மறுபிறப்பு நம்பிக்கைகளும் கலைஞரின் நாடகத்துள் இடம் பெறவில்லை. அவர் கருத்துப்படி, நம்ப இயலாத ஒன்றை— பகுத்தறிவுக்குப் பொருந்தாத ஒன்றை—மக்களிடையே பரப்புவது பொருந் தாது. இதன் காரணமாகவே, சமுதாயத்தில் நிலவி வரும்

சில நம்பிக்கைகளுக்கு நாடகத்தில் இடமில்லாதவாறு செய்துளளார். சில கிளைக்கதைகளையும் ஒதுக்கித் தள்ளு கிறார்.

மாதவியை ஊர்வசி மரபில் வந்தவள் என்று தெய்வத் தன்மை ஏறறாமல் (அரங்கேற்று 1-7) சித்திராபதியின் மகளாகவே கலைஞர் காட்டுகிறார்.

கணணகி—கோவலனை இழித்துரைத்த வம்பப்பரத் தரைக் கவுந்தியடிகள் 'முளளுடைக் காடடில் முதுநரி யாகுக" எனச் சாபம் இடுகிறார். (நாடுகாண் 219-245) கலைஞர் இக்காட்சியை நீக்குகிறார்.

கவுந்தி, கோவலன், கண்ணகி மூவரும் செல்லும் வழியில், வான் வழியாகச் சாரணர்கள் இறங்கி அருகக் கடவுளைத் தொழுகின்றனர். (நாடுகாண் 209-218) அவர் களின் சமண சமயக் கொள்கைகளையும் கலைஞர் நீக்கு கிறார். மதுரை வரும் வழி இடையூறுகளையெல்லாம் இளங்கோவடிகள் சமண சமயக் கொள்கைகளாகக் காட்ட அவற்றிலிருந்து ஒரு நீதியைக் கோவலன் கற்ப தாகக் கலைஞர் காட்டுகிறார். (ப. 66)

காடுறை தெய்வம் வசந்த மாலையின் வடிவில் வந்து கோவலனை மயக்க நினைக்கிறது. கோவலன் துர்க்கை மந்திரத்தை உச்சரிக்க, அது "புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும் உரைக்காதே" என வேண்டி மறை கிறது. (காடு காண். 170—200) இந்நிகழ்ச்சியைக் கலைஞர் நீக்குகிறார்.

கலைஞர் கனவுகளையோ உற்பாதங்களையோ நம்பாததால், அவற்றைக் காட்டவில்லை. தேவந்தியையும் சாலினியையும் தெய்வத்தோடு தொடர்புடையவர் களாகக் காட்டவில்லை.

தன் கொள்கைக்கு ஒவ்வாத இடங்களில் மாற்றமும் செய்கிறார் கலைஞர். காவியத்தில் மணிமேகலை பெயர்

கூட்டல் தெய்வ நிகழ்ச்சியோடு சம்பந்தப் படுத்தப் படுகிறது. (அடைக்கலம் 28-39) அதுநாடகத்தில் சிறப்புப் பெயராக்கப் படுகிறது (ப. 51)

காவியத்தில் அஃறிணை உயிர்கள் வாயிலாகஇயற்கை இறந்த நிகழ்ச்சிகளாகப் பாண்டியனின் செங்கோல் திறம காட்டப்படுகிறது. (புறஞ்சேரி 5-10) பாண்டியனின் நடு நிலையைக் காட்ட மலைவாணர், பேராளர் என்போரின் வழக்கைக் காட்டுகிறார் கலைஞர். (ப. 69) இவ்வழக்கின் மூலம் அரசனின் கூர்த்த அறிவு, நீதி, விசாரிக்கும் திறன், தமிழறிவு, தமிழறிஞர்களை ஆதரிக்கும் சிறப்பு, குற்றம் செய்தவர்களையும் தண்டிக்காமல் மன்னிக்கும் மாண்பு ஆகியவற்றையும் புலப்படுத்தும் முறையில் கலைஞரின் கலைத்திறன் தெளிவாகிறது.

மதுரையை எரித்தலில் பெருமாற்றம் செய்கிறார் கலைஞர். கண்ணகியை அங்கியங் கடவுள் ஏவல் கேட்க வில்லை. மதுராபதித் தெய்வம் பழம் பிறப்புக் கதை கூறவில்லை. நகிலைத்திருகிப் போடுவதால் மதுரை எரிய வில்லை. மாறாக, கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டு கண்ணகி வேகமாக ஓடுகிறாள். அருகிலிருந்த குத்துவிளக்கு ஒன்று சரிந்து குடிசை தீப்பற்றி எரிகிறது. மற்றவர்களும் கோவலன் கொலை நிகழ்ச்சியால் அதிர்ச்சி யுற்று நிற்க மதுரை எரிவதைக் கண்டும் அதை அணைக்க இயலவில்லை (ப. 82)

கண்ணகி வேங்கை மரத்தின் அடியில் நின்றபோது வானிலிருந்து இந்திர விமானம் இறங்கி, அவளை ஏற்றிச் சென்றதைக் குன்றக் குறவர்கள் பார்த்ததாகக் காட்டுகிறார் இளங்கோவடிகள். (காட்சி 57-62) கலைஞரோ மலை மக்களின் வாயிலாக, ''திடீரென ஒரு நாள் அவளைக் காணவில்லை—எங்குப் போனாளோ, தெரியாது. கணவன் தான்—இறந்தவன்— திரும்பி வந்தானோ அல்லது அவள் தான் அவனோடு போய் விட்டாளோ—தெரியாது எங்களுக்கு! அவளைப் போல்

ஒரு பெண்ணை இதுவரை நாங்கள் கண்டதில்லை" (ப. 24) என்று கூறுகின்றனர். காவியத்தில் கண்ணகியின் தெய்வக் கோலம் காட்டப்படுகிறது. கலைஞர் இக்காட்சியை விட்டு விடுகிறார். காவியத்தில் கண்ணகிக்குச் சிலை எடுக்கும் போது, மாதவி மணிமேகலை தவிர மற்றவர் எல்லோரும் வருகின்றனர். நாடகத்திலோ இவர்கள் இருவர் மட்டுமே வருகின்றனர். இவ்வாறு கலைஞர் பல்வேறு மாற்றங்களைத் தம் நாடகத்தில் செய்கிறார்.

தமிழுணர்வு

கலைஞரின் சிந்தனைகள் அனைத்தும் தமிழ், தமிழன், தமிழகம் என்ற எல்லைக்குள வட்டமிடுகின்றன. "தமிழ் உணர்வோடு வாழ்வோம். தமிழர் என்ற உணர்வோடு வாழ்வோம். தமிழன் யாரையும் தாழ்த்தமாட்டான், யாருக்கும் தாழமாட்டான்" (மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்று) (ப. 47) என்ற கலைஞரின் கொள்கை இந்நாடகத்தில் நன்கு காட்டப்படுகிறது. தமிழ்மொழி உலகளாவிய நிலையில பரவவேண்டும் என்ற நோக்கத்துடன் யவனக்கிழவனுக்குக் கோவலன் தமிழாசானாகும் படிசெய்கிறார். வாழ்க தமிழ்! என்று நாடகத்தைத் துவக்கும் ஆசிரியர் செங்குட்டுவனின்—தமிழனின்—இமய வெற்றியோடு நாடகத்தை முடிக்கிறார். தமிழ்நாட்டு வளம் என்றென்றும் வாழ்க என்று செங்குட்டுவனின் வாயிலாகக் (ப.24) காட்டுகிறார். கோவலனின் தமிழ் நெஞ்சைக்காட்ட,கொலைக்களத்தில் அவனைப்பேசவைக்கிறார்.

ஒற்றைச்சிலம்பு

சிலப்பதிகாரத்தைப் படிப்பவர் அனைவர் நெஞ்சிலும் நிழலாடுன்ற ஓர் ஐயம் ஏன் காவிய ஆசிரியர் ஒற்றைச் சிலம்பை விற்குமாறு செய்கிறார்? அது உலகியலுக்கு ஒத்ததா? அதனால் தானே கோவலன் கொலையே நிகழ்

கிறது?சிலம்பைவாங்குபவர் எவராயினும் அணிவதற்காகத் தானே வாங்குவர்? அதை உருக்கி உள்ள இருக்கும் மாணிக்கப்பரலை எடுப்பதற்காகவோ சிலம்பைவாங்குவர்? ஒற்றைச் சிலம்பை வாங்கினால் காலில் போட்டுக் கொள்ள முடியுமா? என்பனபோன்ற ஐயங்கள் எழத்தான் செய்கின்றன.

ஒரு சிலம்பைக் கழற்றிய கண்ணகி, இன்னொரு சிலம்பைக் கழற்றப் போகும்போது கோவலன் "ஒரு சிலம்பு உன் காலிலேயே இருக்கட்டும். அந்த ஒற்றைச் சிலம்பு ஒலி எழுப்பும் போதெல்லாம் உத்தமியாம் உனக்குக் கேடு நினைத்த இந்த உன்மத்தனின் உள்ளத்தில் ஆயிரமாயிரம் சம்மட்டியடிகள் விழுந்து கொண்டேயிருக்கட்டும்...புத்தி வரட்டும்" (ப. 76) என்று சொல்லித் தான் பார்த்து வருந்த வேண்டும் என்பதற்காகவே ஒற்றைச் சிலம்பைக் கண்ணகி காலில் அணிய விடுகிறான். இது கலைஞரின் கருத்தாகப் புலப்படுகிறது.

பாண்டிய மாதேவி என் ஒற்றைச் சிலம்பைக் கொடுத்தாள் என்ற வினாவும் உடன் எழுகிறது. பாண்டிய மாதேவியின் காலில் இருந்த ஒரு சிலம்பு பழுதாகிவிட்டதால் கழன்று விடுகிறது. பாண்டியன் இன்னொரு சிலம்பையும் கொடு என்று கேட்கும்போது "காலிலே சிலம்பில்லாமல் இருப்பதா? வேண்டாம். இதை மாத்திரம் சீர் செய்தால் போதும்" என்று ஒற்றைச் சிலம்பையே கழற்றிக் கொடுக்கிறாள். (ப 70) என்று கலைஞர் ஒற்றைச் சிலம்புக்கான காரணங்களை இருவர் நிலைகளிலும் காட்டுகிறார்.

இந்நாடகத்திலிருந்து கலைஞரின் நோக்கங்கள் நமக்குத் தெளிவாகின்றன. சிலப்பதிகாரக் கதையைப் பாமர மக்களும் உணரும் வண்ணம் தனக்குப் பொருத்தமான முறையில் அறிமுகப்படுத்த வேண்டும்; இளங்கோவடிகளின் கருத்திற்கு மேலும் வலுவூட்ட வேண்டும்.

பாத்திரங்களின் பண்பு நலனை மிகுதிப்படுத்த வேண்டும். இளங்கோவடிகள் குறிப்பாகவும் மறைமுகமாகவும் உணர்த்தியவற்றை ஐயப்பாடுகளுக்கு இடமின்றித்தெளிவு படுத்தவேண்டும். அடிகள் சொல்லாமல் விட்ட சில வரலாற்று உண்மைகளைச் சொல்லவேண்டும். தமிழர்தம் பெருமையை உலகுக்கு உணர்த்த வேண்டும். இரண்டாம் நூற்றாண்டுத் தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்ட வேண்டும். திராவிட இயக்கத்தின் சுயமரியாதைக் கொள்கையை உணர்த்த வேண்டும். இக்காலச் சமுதாயச் சிந்தனையை உணர்த்தும் வகையில்—காலத்திற்கேற்ற முறையில்—கருத்து மாற்றங்களைச் செய்யவேண்டும். பகுத்தறிவுக் கொள்கைக்குப் பொருந்தாதவற்றை—இயற்கைக்கும் பொருந்தாதவற்றை — விலக்கவேண்டும் என்பன போன்ற உயர்ந்த கொள்கைகளை இந்நாடக நூலின் வழியாக உணரமுடிகிறது.

சிலப்பதிகாரம் ஒரு நாடகம்
(அரங்க. வெங்கடாசலம் பிள்ளை)

இலக்கியப் பயிற்சியின்மை காரணமாகப் பலரால் சிலப்பதிகாரத்தை முழுமையாக அறிய இயலவில்லை. அனைவரும் இந்நூலைப் பயிலவும், வரலாற்று உணர்ச்சி பெறவும், சிறப்புக் கூறுகளை அறியவும் சிலப்பதிகாரத்தை நாடகமாக்கியதாகக் கரந்தைக் கவியரசு அரங்க. வெங்கடாசலம் பிள்ளை இந்நூலின் முன்னுரையில் கூறியுள்ளார். அதனால் மாணவர்க்கு உரிய ஒள்ளிய நடையில் —நாடக மாந்தர்க்கு உரிய தெள்ளிய நடையில்—இந்நாடகம் அமைக்கப் பெற்றுள்ளது. மக்கள் அறிய வேண்டி சிலப்பதிகாரப்பாடல்கள் ஆங்காங்குபுகுத்தப்பட்டுள்ளன. சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஒளிக்காட்சிக்கு ஏற்ப மூலநூலில் உள்ள மங்கல வாழ்த்துப் பாடல், அரங்கேற்

றுக்காதை, இந்திரவிழா வூரெடுத்த காதை ஆகிய காதை கள் நீக்கப்படடுள்ளன.

சில மாற்றங்கள்

1. கோவலன் கண்ணகியை நலம் பாராட்டிய போது கூட அவள் மறுமொழி பேசியதாக இளங்கோவடிகள் கூறவில்லை. இந்நாடகத்தில் கோவலனும் கண்ணகியும் நிலா முற்றத்தில் அமர்ந்து பேசுவதாக மனையறம்படுத்த காதையில் ஆசிரியர் கூறுகிறார். (1)

2. அந்தி மாலைச் சிறப்பு செய்காட்சியில் கண்ணகி யின் தோழியராக மரகதம், மாணிக்கம என்னும் இருவர் புதிதாக அறிமுகப்படுத்தபபடுகின்றனர். கண்ணகியின் உயர்பண்புகள் தோழியரின் உரையாடல் வழியாக வெளிப்படுதல் நாடகத்திற்கு இயல்பாயுள்ளது. (2)

3. கானல் வரியில் இளங்கோவின் கோவலன், மாதவி யுடன் ஊடி, அவளைத் தனியாக விட்டுச்செல்கிறான்.

"உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை
நெகிழ்ந்தவனாய்ப்
பொழுதீங்குக் கழிந்ததாகலின் எழுதும என்றுட
னெழாது
ஏவலாளருடன் சூழ்தரக் கோவலன் தான் போன
பின்னர்" (கானல்வரி 52)

என்று அவன் மாதவியைப் பொறுப்பில்லாமல் தனியாக விட்டுச் சென்றதை அடிகள் குறிக்கிறார் இந்நாடகத்தில் கோவலன் பொறுப்புடையவனாகக் காட்டப்படுகிறான். மாதவியைப் பிரிந்து சென்றவன் மீண்டும் அவளிடம் வந்து "நீ தோழியர்களுடன் இல்லம் சேர்க. நான் பின் வருவேன்" எனக் கூறுகிறான். (3)

4 வேனிற்காட்சியில் வசந்தவல்லி கோவலனிடம் மாதவியின் கடிதத்தைக் கொடுக்கிறாள். இளங்கோவின் கோவலனோபடிக்காமலே திருப்பிக்கொடுத்துவிடுகிறான்.

இந்த நாடகத்தில் கோவலன் படித்துவிட்டுத் திருப்பிக் கொடுக்கிறான். (4)

5. கனாத்திறம் உரைத்த காதையில் ஒரு குறத்தி கண்ணகிக்குக் குறி கூறுகிறாள். இக்காட்சி ஆசிரியரின் படைப்பாகும். (5)

6. நாடுகாண் காட்சியில் கோவலன் புகார் நகரைப் பார்த்துப் புலம்புகிறான். அவனுடைய கூற்றிலிருந்து அவனுடைய தாய்நிலப்பற்று தெரியவருகிறது. ஒவ்வொரு வரும் பிறந்த மண்ணின் மீது பற்றுக் கொள்ளவேண்டும் என்னும் ஆசிரியரின் உள்ள வெளிப்பாடாக இது அமை கிறது. (6)

7. கவுந்தியடிகள் கண்ணகிக்கும் கோவலனுக்கும் ஏற்கெனவே தெரிந்தவராகக் காட்டப்படுகிறார். தெரியாதவர்களைத் துணையாகச் சேர்த்துக் கொள்வதை விட தெரிந்தவர்களை வழித்துணையாகக் கொள்ளல் சிறந்தது என்று ஆசிரியர் நினைத்தமை புலப்படுகிறது (6)

8. சாரணர்கள் கவுந்தியடிகளிடம் கூறிய கூற்றை எவரும் பொருட்படுத்தியதாக இளங்கோவடிகள் காட்ட வில்லை. நாடக ஆசிரியர் சாரணரின் கூற்றைக் கண்ணகி அறிந்து கலங்குவதாகக் காட்டுகிறார். (6)

9. ஊர்காண் காட்சியில் மதுரை நகர வீதியை நகரத்தார் ஒருவர் சுற்றிக் காட்டுகிறார். நகரத்திற்குப் புதியவன் ஒருவன் தானாகச் சுற்றிப் பார்ப்பதை விட வழிகாட்டி சுற்றிக் காட்டப் பார்ப்பது இயல்பாகவும் நாடகத்திற்குச் சிறப்பாகவும் அமைகிறது. (10)

10. கொலைக்களக் காட்சியில் 'மதுரையில் வீற்றிருக் கும் அருமைத் தமிழ்த்தாயை வணங்கித் துணைக்கொண்டு செல்வேன்' என்று கோவலன் கூறுகிறான். இப்பகுதி ஆசிரியரின் தமிழ்ப்பற்றை நமக்குத் தெரிவிக்கிறது (12)

11. ஊர்சூழ் வரியில் கண்ணகியின் நிலையைக்கண்ட நகர மங்கையர் தம்முள் கூடிப்பேசுவது நாடகத்திற்கு ஏற்றவாறு உள்ளது. (15)

12. தான் கண்ட தீக்கனாவினைப் பாண்டியமாதேவி மன்னனிடம் கூறிக்கொண்டிருக்கும்போதே இளங்கோ வின் கண்ணகி புகுந்து விடுகிறாள். நாடகத்தில் பாண்டிய மாதேவி தான் கண்ட தீக்கனாவினைத் தோழியரிடம் கூற அவர்கள் தேவிக்கு ஆறுதல் கூறுகின்றனர். இப்பகுதி நாடகத்திற்குப் பொருத்தமாகயிருக்கிறது. (16)

13. இளங்கோவின் கண்ணகி பாண்டியமாதேவி இறந்ததும் தெரியாமல் வஞ்சினம் கூறிக் கொண்டிருக் கிறாள். இந்நாடகத்தில் கண்ணகி வஞ்சினம் கூறும் போது பாண்டியமாதேவியின் தோழி பேசுவதாகக் காட்டப்படுகிறது. (17)

14. குன்றக் குரவையில், இந்திர விமானத்தில் கோவலன் வந்து கண்ணகியை அழைத்துச் செல்வதாக இளங்கோவடிகள் காட்டுகிறார். இந்த நாடகத்தில், இந்திர விமானத்தைக் காட்டுதல் அருமையானதால் கண்ணகி திடீரென்று மறைந்துகணவனுடன் கூடுவதாகக் காட்டப்படுகிறது. வேடுவர்கள் வியப்புடன்,

> "நெஞ்சில் எழும் தீயால் நீள்மதுரை சுட்டெரித்த
> அஞ்சில் நறுங்கூந்தல் ஆயிழையை நாயகனை
> விஞ்சும் அமரர்கள் தம் விண்ணுலகில் ஏற்றினரே!
> மிஞ்சுறுமெல்லடியின் பாவையைநாம்போற்றுவமே!"
> (ப.114)

என்று போற்றுகின்றனர். (20)

இவ்வாறு, கரந்தைக்கவியரசு அரங்க. வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் நாடகத்திற்கு ஏற்றமுறையில் சிலப்பதி காரத்தில் பற்பல மாற்றங்களைச் செய்துள்ளார்.

நாடகச் சிலம்பு
(கு. திருமேனி)

புலவர் கு. திருமேனி அவர்கள் சிலப்பதிகாரக் காவியத்தை நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற முறையில் நாடகமாக்கியுள்ளார். இதுபுகார், மதுரை, வஞ்சி என்று மூன்று காண்டங்களையும் ஐந்து களங்களையும், நாற்பத்தேழு காட்சிகளையும் கொண்டு விளங்குகிறது.

சிலப்பதிகாரக் கதைப்போக்கில் ஆசிரியர் மாற்றம் செய்யவில்லை. காப்பியத்தில் சிக்கல் இருப்பது போல் தோன்றும் இடங்களில் சிக்கலை அவிழ்க்கும் முயற்சியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன; நாடகத்திற்கு ஏற்ற முறையில் கதைக்குமேலும் அழகு சேர்க்கும் முயற்சியில் சில கற்பனைக் காட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன; காவியத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள சில பகுதிகளுக்குத் தெளிவு தரும் முயற்சியில் விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

1. இளங்கோவடிகள் தம் காவியத் தொடக்கத்தில் ஞாயிறு, திங்கள், பூம்புகார் ஆகியவற்றை வாழ்த்துகிறார். இப்பகுதியை நாடக ஆசிரியர் நாட்டு வாழ்த்தாக மாற்றியுள்ளார். மன்னவன்கோயில் மணியோசை கேட்டவுடனே எல்லோரும் எழுந்து இந்நாட்டு வாழ்த்துப் பாடலைப் பாடிவிட்டுத் தலை குனிந்து வணங்கிவிடுத்தத்தம் வினையில் ஈடுபடுவதாக ஆசிரியர் காட்டியிருப்பது நாடகத்திற்கும் இக்கால நடப்பு நிலைக்கும் பொருந்துவதாக உள்ளது. (1:1)

2. இளங்கோவடிகள், கண்ணகி கோவலன் திருமணத்திலிருந்து தன் காவியத்தைத் தொடங்கியுள்ளார். ஆனால் இந்நாடகத்தின் முதற்காட்சியில் பெற்றோர் இருவரும் ஒருங்கிருக்கும்போது மாடலன்

வந்து கண்ணகி கோவலன் திருமணத்திற்கு வழி வகுக் கிறான். மணமக்களுக்குப் பெற்றவர் ஒப்புதலுடன் திருமணம் நடப்பதாகக் காட்டப்படுகிறது. நாடகத்திற்கு ஏற்ப, பல பெண்களின் குறைகளைக் கூறும் முறை உளவியலையும் உலகியலையும் ஒட்டி அமைகிறது. (1:2) அவர்களினின்றும் கண்ணகியை வேறுபடுத்திக் காட்டவும் அவள் உயர்வை விளக்கிக் காட்டவும் இம்முறை சிறப் பாக அமைகிறது

3 சிலப்பதிகாரத்தினின்றும் கோவலன் கண்ணகி யின் மனப் பொருத்தத்தை அறிய முடியவில்லை. நாடகத் தில், கண்ணகியின் பெயரை மாசாத்துவான் கூறியவுடன் கோவலன் மகிழ்கிறான். கோவலன் என்ற பெயரைக் கேட்டவுடன் கண்ணகியும் மயிர் சிலிர்த்து மெய்வியர்த்து நாணத்தால் நிலம் கிளைத்து நிற்பதால் அவள் உள்ளத்தை உணர முடிகிறது. நாடக அமைப்பிற்கேற்ப மணமகள் கண்ணகியை நையாண்டி செய்யும் போக்கில் வள்ளி சண்பகம், எழிலி, முல்லை ஆகிய தோழியர் நகை யாடுவதும் சிறக்கிறது. அவளை அமர்த்தி, கும்மியடிப் பதும் இயற்கையாக அமைகிறது. (1:3)

4. பச்சை மாலையை வாங்குவதற்கு முன் கோவலன் மாதவியைக் கண்டதாகக் காவியத்தில் இளங்கோவடிகள் கூறவில்லை. நாடகத்தில், மருவூர்ப் பாக்கத்துள்ள பொழிலில் ஆயிரங் கணிகையர் சூழ்ந்த போது கோவலன் வருவதாகவும், அவன் பத்தாண்டுச் சிறுமியான மாதவி யின் யாழிசையைச் சுவைப்பதாகவும் ஆசிரியர் காட்டு கிறார். (1:6)

5. கோவலன் வீட்டிற்கு மாடலன் வரும் நேரத்தில் அவன் இசை நுணுக்கம் என்ற நூலைப் படித்துக்கொண் டிருப்பதாகக் காட்டப்படுவது நாடகத்திற்குப் பொருந்தும் வகையில்அமைந்துள்ளது, (1:8) 'விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' என்று காவியக் கண்ணகி

கோவலனிடம் ஏக்கத்தோடு குறிக்கிறாள். சிலப்பதிகாரத் தில் விருந்தோம்பும் காட்சியை நேராகக் காட்டவில்லை. நாடகச் சிலம்பில் மாடலன் விருந்தினனாக வந்தபோது அவனுக்கு விருந்தோம்புகின்ற சிறப்பை ஆசிரியர் அழகாகக் காட்டுகிறார். (1 :8)

6. மாதவியின் அரங்கேற்றத்தில் சோழன் மாதவிக் குப் பச்சைமாலையைக் கொடுப்பதை மட்டுமே இளங்கோவடிகள் காட்டுகிறார். சோழனின் பெயர் கூடக் குறிக்கப்படவில்லை. இந்நாடகத்தில் சோழ அரசன் கரிகாலனின் மேற்பார்வையில் நடன அரங்கம் அமைக்கப்படுகிறது. மாசாத்துவானையும் மாநாய்கனை யும் நேராகவே அமைச்சர் சென்று அழைக்கிறார். மாசாத்துவான் தன் மகன் கோவலனை அனுப்புவதாகச் சொன்னதையும் மன்னனிடம் அறிவிக்கிறார். நடனம் முடிந்ததும் ஆயிரத்தெட்டு கழஞ்சுப் பொன், தலைக் கோல் தானம், பச்சை மாலை ஆகியவற்றைக் கொடுக் கிறான். மாதவி சோழனுக்கு நன்றி கூறுகிறாள். (1:10)

7. காப்பியத்தில் கோவலன் அரங்கத்தில் அமர்ந்து மாதவியின் நடனத்தைப் பார்த்தானா இல்லையா என் பதை அறிய முடியவில்லை. நாடகத்தில் இருவரும் நோக் கெதிர் நோக்கி ஒருவர் நெஞ்சில் மற்றவர் இடம் பெறு கின்றனர். நடனம் ஆடிவிட்டுத் தன் மனைக்குச் சென்ற மாதவி தன் தோழி வயந்தமாலையிடம் தன் காதலைக் கூறி, கோவலன் போகிற வழியில் பச்சைமாலையை விற்பது போல் நடிக்க வேண்டுமென்றும் இதனை வாங்கு வோர்க்கு மாதவி உரியவள்என்று கோவலனுக்குக்கேட்கும் படியாகக் கூறவேண்டுமென்றும் சொல்லி அனுப்புகிறாள். மாலை வாங்கிய கோவலன், மாதவியைக் கண்டவுடன் நலம் பாராட்டுதல் இயற்கையாக அமைந்து நாடகத் திற்குச் சுவை கூட்டுகிறது. (2:1)

8. சிலப்பதிகாரத்தில் கண்ணகி மாதவியைப் பற்றிக் குறையோ நிறையோ சொன்னதாக இளங்கோவடிகள் அமைக்கவில்லை. நாடகச் சிலம்பில் மணிமேகலையின் பிறந்த நாள் விழாச் செய்தியினைக் கேட்கும் கண்ணகி மாதவியைப் புகழ்ந்து கூறுவதாக அமைக்கிறார். "ஆருயிர் என்னையும் மறந்து இத்தனைக் காலம் தன்னுடன் வாழு மாறு அன்பு காட்டி ஆர்வமூட்டி அவர் வழி நின்று வேண்டுவ செய்கிறாள் என்றால், என்னைவிடஎத்துணை மேம்பட்டவள் அவள் தெரியுமா?" (2:2) என்று கண்ணகி புகழ்வது அவளுடைய பெருந்தன்மையையும் மாதவியின் மாண்பையும் ஒருங்கே புலப்படுத்துகிறது.

9. மதுரையில் ஆயர்பாடியில் கோவலனுடன் சேர்ந்து கண்ணகியும் உண்டதாக ஆசிரியர் இளங்கோவடிகள் கூறவில்லை. இந்நூலில் சமவுரிமையோடு கணவனுடன் கண்ணகி அமர்ந்து உண்கிறாள். (3:7)

10. பாண்டியன் ஆடல் மகளின் கோலத்தில் ஈடுபட்டதால் தலைவலி வருத்தம் தன்மேலிட்டுப் பாண்டிய மாதேவி ஊடியதாக இளங்கோவடிகள் கூறுகிறார். தேவியின் ஊடலுக்குக் காரணம் தெளிவாகவில்லை. இந்நூலில் பாண்டியன் ஆடல் மகளின் ஆட்டத்தையும் அழகையும் தேவியிடம் விவரித்துக் கூறுகிறான். (3:9) தேவியின் ஊடலுக்குக் காரணம் தெளிவாக்கப்படுகிறது.

11. கோவலன் கொலையுண்டதும் ஊர் மக்கள் வீதியின் கூட்டம் கூட்டமாக நிற்கின்றனர். 'நம் சிலம்பு அவன் கையில் இருந்தால் அவனைக் கொல்ல வேண்டும். சிலம்புடன் கொண்டு வா' என்று சொல்ல நினைத்தவர் 'கொன்று கொண்டு வா' என்று சொல்லி விட்டாராம் என்று குடி மக்களில் ஒருவன் பேசுவதாகக் காட்டப்படுகிறது. (4 : 3)

12. தென்னவன் சேரனுக்குக் கப்பம் அனுப்புகிறான். "வற்கடம் மலிந்தமையால் உரிய காலத்தில், குறித்த

திறைப்பொருள் அனுப்ப இயலாமற் போயிற்று. அடுத்து வரும் ஆண்டுகளில் கூட்டிப் பெறலாம்." என்று மடல் வரைகிறான். இதைக் கண்ட சேரன் 'பாண்டிய வேந்தன் வெந்து நொந்து தீட்டிய முடங்கல் என்னைத் தீய்க் கின்றது. இவர்கள் கொணர்ந்த திறைப்பொருளோடு இன்னும் இரட்டித்த பொருளைப் பாண்டியர்க்கு என் அளிப்பாகக் கொடுத்தனுப்புக" என்று கூறுகிறான். இந்நிகழ்ச்சி, பாண்டியனின் நிலைமையையும் சேரனின் இரக்கம், பெருந்தன்மை ஆகிய உயர்ந்த பண்புகளையும் அறிவிக்கிறது. நாடகக் காட்சிக்கும் சிறப்பாக அமை கிறது. (5:3)

13. சிலப்பதிகாரத்தில் கனகவிசயர் வாய் காவாமல் தமிழ் மன்னரைப் பழித்ததாக இமயமலையிலிருந்து வந்த முனிவர்கள் கூறுகின்றனர். இந்நூலில் கனகவிசயர் வாய்காவாமல் பேசியமை, இந்நாடகத்திற்கு ஏற்ப ஒரு களமாகப படைத்துக் காட்டப்படுகிறது. (5:4)

14. போர்க்களக் காட்சியை விரித்துக் கூறும் காட்சி நாடகத்திற்கு ஏற்ற உத்தியாகவும் சுவையூட்டுவதாகவும் உள்ளது. (5:5)

15. செங்குட்டுவன் வடபுலம் சென்று வெற்றிபெற்ற பின்னர் போர்க்களத்தில் வீரம் பல புரிந்த வீரர்களுக்கு வரிசையறிந்து பரிசில் பல தரும் காட்சி நாடகத்திற்குச் சுவையூட்டுகிறது.

இவ்வாறு கு. திருமேனி நாடகத்திற்கேற்பவும், சில ஐயங்களுக்கு விளக்கம் தரும் முறையிலும், தெளிவு இல்லாதவற்றிற்குத் தெளிவு தரும் வகையிலும் மாற்றங் களைச் செய்திருக்கிறார்.

சிலம்புச் செல்வி

(மு. வை. அரவிந்தன்)

சிலப்பதிகாரம் நாடகமா? காவியமா? என்பது இன்றைய திறனாய்வாளர்களிடையே தீராத சிக்கலாகவே உள்ளது. அதைத் தீர்த்து வைக்க முனைந்துள்ளார் பேராசிரியர் மு. வை. அரவிந்தன். சிலப்பதிகாரக் காவியத்தைச் சொற்கள் மாற்றாமல் கருத்தை மாற்றாமல் அப்படியே நாடகமாக்கியுள்ளார். கண்ணகியின் கதையை மட்டுமே நாடகமாக்கியுள்ளதால் ஆசிரியர் வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகளை விடுத்துள்ளார்.

இன்றைய திறனாய்வாளர்கள் நாடகம் எவ்வாறு அமைய வேண்டும் என்று இலக்கணம் கூறுகின்றனரோ அவ்விலக்கண அடிப்படையில் இந்நாடகத்தை உருவாக்கியுள்ளார். மொத்தம் ஐந்து அங்கங்களையும் நாற்பத்தேழு காட்சிகளையும் அமைத்து இந்நாடகத்தை உருவாக்கியுள்ளார். தொடக்கம், வினை எழுச்சி, உச்ச நிலை, வினை வீழ்ச்சி, முடிவு என ஐந்து பகுதிகளுக்கும் பெயரிட்டுள்ளார். முதல் அங்கமான 'தொடக்கம், கண்ணகி கோவலன் திருமணத்திலிருந்து, கோவலன் கண்ணகியை மதுரைக்குச் செல்ல அழைக்கும் வரை பதினான்கு காட்சிகளால் பின்னப்பட்டுள்ளது. இரண்டாவது அங்கமான 'வினை எழுச்சியில்' கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிப் புறப்படுவதிலிருந்து மதுரையில் மாதரி இல்லம் புகுவது வரை அமைக்கப்பட்டுளளது. மூன்றாவது அங்கமான 'உச்சநிலையில்', மாதரி கண்ணகிக்கு ஒப்பனை செய்வது முதல் கோவலன் இறத்தல் வரை நாடகமாக்கப்பட்டுள்ளது. நான்காவது அங்கமான 'வினைவீழ்ச்சியில்', ஆயர்பாடியில் மாதரி வீட்டில் தீக்குறிகள் தோன்றுவது முதல் கண்ணகி மதுரை நோக்கி அனைவது வரை படம் பிடிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது அங்கமான 'முடிவில்' மதுராபதித் தெய்வம் கண்ணகிக்கு முற்பிறவிக் கதையை உரைத்தல் முதற் கொண்டு கண்ணகி வானவூர்தி ஏறுதல் வரை கூறப்பட் டுள்ளது. சிலப்பதிகாரப் பதிகத்தைக் 'கதைச்சுருக்க மாகவும்' இளங்கோவின் அறவுரைகளை 'முடிவுரை யாகவும்' ஆசிரியர் அமைத்துள்ளார். காவியத்தை அப்படியே நாடகமாக்கியதால்சிறு மாற்றமும் இந்நூலில் இல்லை எனலாம்.

கல் சுமந்த கசடர்
(சி. என். அண்ணாதுரை)

அண்ணாவின் நாடகங்கள் என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட நூலில் இந்நாடகமும இடம் பெற் றுள்ளது. இதில் ஒன்பது காட்சிகள் உள்ளன. தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்த அறிஞர் அண்ணா, ஆரியர் தமிழர் போராட்டத்தை விளக்கும் முறையில் இந்நாடகத்தை உருவாக்கியுள்ளார். கண்ணகிக் குக் கல் எடுக்க இமயம் நோக்கிச் சென்ற சேரன் செங்குட்டுவன் வட புல அரசர்களை வென்றதோடு வடவர்களின் தலையில் கல் ஏற்றி வந்த நிகழ்ச்சி அறிஞர் அண்ணாவின் உள்ளத்தைக் கவர்ந்ததால் இந்நாடகம் உருவாயிற்று அதனால் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வரலாற்றுப் பகுதியை வடுத்து, வஞ்சிக் காண்டத்தை மட்டுமே மையமாக அமைத்து அண்ணா இந்நாடகத்தை உருவாக்கியுள்ளார். வடவர்கள்பால் அண்ணா கொண் டிருந்த வெறுப்புணர்ச்சியைக் 'கல் சுமந்த கசடர்'என்னும் தலைப்பே அறிவிக்கிறது. சிலப்பதிகார நிகழச்சியைத் தன் கொள்கைகளை வலியுறுத்தும் பிரச்சாரக் கருவியாக அவர் மாற்றிக் கொண்டார். அதனால் இந்நாடகத்தில்

கதை நிகழ்ச்சியைவிடத் தன் கொள்கைகளுக்கே முதன்மை கொடுத்துள்ளார். சேரன் செங்குட்டுவனை அண்ணா, தன் மறுபதிப்பாக — பகுத்தறிவாளனாக — மாற்றியுள்ளார். இதை இந்நாடகத்தின் இரண்டாம் காட்சி உறுதிப்படுத்துகிறது. கதைக்குத் தொடர்பில்லாதிருந்தும் தன் கொள்கையை வலியுறுத்துவதற்காகவே இக் காட்சியை அவர் உருவாக்கியுள்ளார்.

சேரனும் ஒரு புராணிகனும் தனியாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர். புராணிகன் இராமாயணக் கதையைக் கூறுகிறான். "வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டமளிக்க இராமன் வாக்களித்தான்" என்ற புராணிகனின் வார்த்தைகளைக் கேட்ட சேரன் செங்குட்டுவன் "யார் வாக்களித்தது? மனைவியை இழந்து எப்படிக் கண்டு பிடிப்பது என்று மார்க்கம் தெரியாது மருண்டு போயிருந்த இராமன் வாலியைக்கொல்வதாக வாக்களித்தானா? என்ன மறையவரே! வேடிக்கையாக இருக்கிறதே. வாலியின் வீரதீர பராக்கிரமத்தைப் பற்றிப் பலர் கூறுவர்" (ப. 275) என்று மறையவருக்குப் பதிலடி கொடுக்கிறான். "அவதார புருஷனுக்குத்தான் மனைவி பறிபோகும் ஆபத்து நேரிட்டது போலும்" (ப. 275) என்று எள்ளி நகையாடுகிறான். "பேஷ், உன் இராமன் பெரிய வஞ்சகனாகவல்லவோ காணப்படுகிறான்" (ப. 276) என்று இராமனைப் பற்றிச் சேரன் செங்குட்டுவன் கூறும்போது புராணிகர் காதுகளைப் பொத்திக் கொள்கிறார். இதைக் கண்ட சேரன், "ஆம், மறையவரே! அந்த வஞ்சகத்தைக் காதால் கேட்பது கூடத் தகாததுதான். அண்ணன் தம்பிக்குள் சண்டை! இந்த ஆரிய இராமனிடம் அந்த வானரன் முறையிட்டான். நீதிமானாக—தர்மவானாக—இருப்பின், இருவருக்குள் நேரிட்ட விரோதத்தைப்போக்க, சமரசம் உண்டாக்கியிருக்க வேண்டும். அப்பா வாலி! வா இப்படி, ஒரு தாய் வயிற்றுதித்த நீங்கள் இப்படி விரோதித்துக் கொள்வதா? இதோ பார் என்னை! என்

பக்கத்தில் இருப்பது இலட்சுமணன். என் தம்பி. என்னைத்தான் என் சிற்றன்னை பதினாலு ஆண்டு காடு செல்ல வேண்டுமென்றாள். நான் விரைவாகக் கிளம்பி னேன். என் தம்பி இலட்சுமணன் என்னை விட்டுப் பிரிய மனமின்றி, தானும் வனவாசம் ஏற்றான். இப்படி இருக்க வேணடும் அண்ணன் தம்பி ஒற்றுமை, என்று கூறியிருக்க வேண்டாமா? அதை விட்டான். அண்ணன் தம்பிக்குள் சண்டை கிளப்பிச் சண்டைக்குள் புகுந்கான்" (ப .276) என்று சேரன் செங்குட்டுவன் இராமன் செய்த அநியாயத்தை எடுத்துக் கூறினான்.

கனக விசயர்கள் தமிழ் மன்னர்களைப் பழித்ததைக் கேட்டபோது சேரன் செங்குட்டுவன் கொதித்தெழு கிறான் "இடம கிடைக்காது திண்டாடி இங்கே வந்த சடங்கள் இப்போது படமெடுத்தாடும் பாம்பாகி விட்ட னவா? ரோம் நாட்டு வீரரும் யவன நாட்டுத் தீரரும், தமிழரின் வீரத்தைப் பாராட்ட, கலிங்கமும் காந்தாரமும் வங்கமும அங்கமும் மூவேந்தரின் திறத்தைப் பாராட்டி யிருக்க, பிழைக்க வந்த கூடடம் நம்மை இழிவாகப் பேசு வதா? தமிழகம் அவ்வளவு தாழ்ந்து விட்டதா?" (ப. 277—278) என்று சேரன் பொங்கி எழுகிறான்.

வில்லவன் கோதையும் தமிழ் வீரர்களுக்கும் புரோகிதர் களுக்கும் உள்ள வேறுபாட்டைக்கூறுகிறான். "களத்திலே வீரர்களின் விழியிலே கேல் பாயும். பார்ண சாலைகளிலே அந்தணன் வயிற்றிலே, வகைவகையான உண்டி பாயும்... வீரனின் இரத்தம் அங்கே சிந்தும். இங்கே வேதியர் கூட்டம் விலாப்புடைக்கத் தின்று, தின்றது செரிக்கச் சந்தனம் பூச, பூசிய சந்தனம் சிந்தும்." என்ற வில்லவ னின் கூற்று, புரோகிதர்களின் ஊழல்களை அம்பலப் படுத்துகிறது.

தமிழர்களை எள்ளிய கனகவிசயரை நினைத்துப் பொங்கும் சேரன் செங்குட்டுவனின் வீரமொழிகள் ஆரியர்களின் அழிவையும் தமிழர்களின் உயர்வையும்

புலப்படுத்துவதாய் அமைந்துள்ளன. ''ஆற்றோரத்திலே ஆடு மேய்த்து, மலைச்சரிவிலே மாடு மேய்த்து, மானையும் பன்றியையும் விரும்பித் தின்று, நெருப்பையும் நீரையும் கும்பிட்டு, சோமரசமும் சுரபானமும் பருகி, பௌண்டரீக யாகமும் பிறவும் செய்து கிடந்த கூட்டம், கோட்டை களைத் தகர்த்து, கொத்தளங்களைத் தூளாக்கி, படைபல வென்று, தடைபல கொன்று, தன்மானத்தையே தரணி வாழ் மக்கள் போற்ற வேண்டும் எனப் பரணி பாடி வாழும் தமிழரை—நம்மை—நிந்திப்பதா? பச்சை கண்டு இச்சை கொண்ட நச்சு நினைப்பினர் செங்குருதி பாய்ச்சிச் செந்தமிழர் வீரத்தை நிலை நாட்டி, தங்கக் கோட்டை யிலே வைரமணிகள் என ஒளிவிட்டு விளங்கும் வீரராம் தமிழரைக் கேலி மொழி பேசுவதா? ஆஹா! அவ்வளவு துணிந்து விட்டதா இந்த ஆற்றலற்ற கூட்டம்! எவனுடைய தயவு கிடைத்து விட்டதாம் அந்தப் பவதி பிக்ஷாந் தேஹிகளுக்கு! யார் அவர்களுக்குத் துணை? தேவனா! மூவனா? தேய்ந்து வாழும் சந்திரனா? தெருப் புழுதியுடன் விளையாடும் வாயுவா? சாக்கடையிலும் சரச மாடும் வருணனா? எந்தக் கற்பனைக் கடவுளை நம்பி இந்தக் காரியம் செய்யத் துணிந்தனர்?" (ப. 279) என்ற சேரனின் வீரமொழியில் தமிழரின் உயர்வையும் ஆரியர் களின் புன்மையும் அவர்கள் வணங்கும் தெய்வங்களின் புன்மையும் புலப்படுத்தப்படுகின்றன.

அண்ணா அவர்கள் தமிழர்களின் உயர்வைத் தமிழர் களுக்கு அறிவுறுத்தவும், ஆரியர்களின் புன்மையை எடுத்துக் காட்டித் தமிழர்கள் ஆரியர்களை இனங்கண்டு கொள்ளவும் சிலப்பதிகாரக் கதையைக் கருவியாக்கிக் கொண்டார்.

இமயத்தில் நாம்

(ரா. வேங்கடாசலம்)

ரா. வேங்கடாசலம் அவர்களால் எழுதப்பட்ட 'இமயத்தில் நாம்' என்னும இந்நாடகம் டி. கே. எஸ். சகோதரர்களால் நடிக்கபபட்டது. பிறகு இது 1949 இல் நூலாகவும் அச்சிடப்பட்டது.

இந்நாடகம் கோவை ஷண்முகா அரங்கில் 25.6.48 ஆம் தேதி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் அரங்கேறியது இந்நாடகத்தில் சிலப்பதிகாரத்தில் காணப்படும்மாந்தர்களான இமயவரம்பன், செங்குட்டுவன் இளங்கோ, வில்லவன் கோதை, சாத்தனார், கனக விஜயன், வேண்மாள் முதலிய பாத்திரங்கள் வருகின்றனர். சிலப்பதிகாரத்தில் இடம் பெறாத மாந்தர்களான செவ்வேள், கஜன், சோமன், சிம்மன், ரஜன், குஜன், (ஆரிய ஒற்றர்கள்) கரும்பு, பங்கஜம் (கனக விசயனின் மனைவி, பொற்றொடி (இளங்கோவின் காதலி) முல்லை, கிள்ளை (பொற்றொடியின் தோழிகள்) பொன்னி, குழலி, முத்து, அன்னம் (சேர அரண்மனைத் தாதியர்கள்) ஆகிய கற்பனைப் படைப்புகளும் இதில் இடம் பெற்றுள்ளனர். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களுக்குத் தூய தமிழ்ப் பெயர்களும் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வடமொழிப் பெயர்களும் இதில் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நாடகம் தமிழர்களின் சிறப்பையும் ஆரியர்களின் புன்மையையும் விளக்க எழுந்தது. அதனால் வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்நூலில் ஆசிரியர் சில மாற்றங்களைச் செய்துள்ளார்.

1. இதன் தொடக்கமே 'இமயத்தில் நாம்' என்னும் நாடகத்தின் பெயரை நிறுவுகிறது. இமயவரம்பன் இமயத்தின் உச்சியில் வில், புலி, கயல் என்னும் சின்னங் கள் பொறித்த தமிழ்க் கொடியை நாட்டுகிறான். சேரன் தனக்குரிய வில்கொடியை மட்டும் நாட்டாமல் மூவேந்தருக்குமுரிய தமிழ்க் கொடியை நாட்டியது தமிழருக்குள் ஒருமைப்பாட்டை உண்டாக்குவதற்காக இருக்கலாம்.

''வாழ்வு சிறிதென்றெணணி மானம் பெரிதென்
றெண்ணும்
மறத்தமிழர் தங்குலத்திறத்தைப் புவி வியக்க
ஊழிதோறும் தமிழன் ஒருவன் அறம்நிலைக்க
ஊன்குருதி இறைத்து வான்புகழே சிறக்க"

இமயத்தை வெற்றி கொண்டதாக அனைவரும் பாடுகின்றனர் (காட்சி 1)

2 தமிழர்களின் புகழை—பெருமையை—தமிழர்களுக் கும் ஆரியர்களுகும் உணர்த்துவது ஆசிரியரின் கொள்கையாதலால் இந்நாடகத்தில தமிழர்களின் பெருமை ஆங்காங்கே கூறப்படுகிறது.

அ. சிறப்பாக, ஆரியர்களின் வாயால் தமிழர்களின் பெருமையைக் கூறவைக்கிறார் ஆசிரியர். ''தமிழர் குணங்களில் முக்கியமாகப் பீபார் என்றாலே போதும்; ஆண்கள் மட்டுமல்ல. பெண்களும் பொங்கி எழுகிறார் கள். பிறந்த நாடுதான் அவர்களுக்குப் பிரதானம்; நாட்டின் மானமே தன்மானமாக மதிக்கிறார்கள். தொட்டில் ஆட்டும் பெண்டிர் கரங்கள் கூட வாள் கொடுத்து அனுப்புகின்றன. அவர்கள் குழறி எழும் எழுச்சி வேகம் கார்காலப் பேரிடியின் குமுறலையும் சிதறடித்து விடும் எனலாம்" என்று சிம்மன் என்னும் ஒற்றன் மூலம் கூறவைக்கிறார். (ப.3)

ஆ. ஆரியர்களின் தில்லுமுல்லுகளையும் தமிழர் களுக்கு அறிவுறுத்துவது ஆசிரியரின் நோக்கமாதலால் அதையும் சிம்மன் என்னும் படைப்பின் மூலம் ஆசிரியர் புலப்படுத்துகிறார். "அவா வீரத்தை ஒடுக்கி, ஒத்துமையை செதச்சு, கலைகளை நசுக்கி, ஒழிச்சு உருவில்லாமல் பண்ணிப்புடலும்னு கங்கணம் கட்டிண்டு ராப்பகலா அலைஞ்சோம். வாத்தியாரா ஒட்கார்ந்தோம். நிமித்தகர் வேடம் போட்டு வரும் பொருள் சொன்னோம். மகரிஷிகளாக மாறி அவர்களுக்குச் சொர்க்க வழி காட்டினோம். வருஷக்கணக்காக அவதிப்பட்டோம்" (ப.3) என்னும் கூற்றில் தமிழர்களை ஒழிக்க ஆரியர்கள் கையாண்ட புன்மை முறைகள் புலப்படுத்தப்படுகின்றன.

இ. தமிழர்களின் வீரமும் ஆரியர்களின் வீரமின்மை யும் ஒருசேர உணர்த்தப்படுகிறது. "தன்மானம் காத்து தரமோங்கி வாழ்ந்த தமிழச்சி வயிற்றிற் பிறந்த தமிழச்சி நீ; உனக்குச் சந்தோஷம் வேறாடி, நீ மகா சக்தி பொருந்தியவள். உன் அப்பன், பாட்டன் அனைவருமே வீரத்தியாகிகள். தன்மானமே தனிப்பெருமையாகக் கொண்டவர்கள். நீயும் வீரமறத்திதானடி. உன் செல்வம் நாட்டின் மானம்"(ப.9) என்ற சேர நாட்டு மூதாட்டியின் கூற்று வீரத்தைப்புலப்படுத்துகிறது. 'யுத்தம்புரியறதுக்கோ நம்மாலே ஆகாது. சொப்பனந்தான். இந்த மண்ணோட விசேஷமோ என்னமோ தெரியலை. மொரசு சத்தம் கேட்டா போதும். மூலையிலே முடங்கிக் கிடக்கிற கிழட்டுப்பய கூடக் கத்தியெடுத்திண்டு சண்டைக்குக் கிளம்பிடறான்'(ப.11)என்னும்ஆரியஒற்றனுடையகூற்றும் தமிழனுடையவீரத்தையும்,ஆரியனின் கோழைமையையும் பறை சாற்றுகின்றன.

ஈ. தமிழர்களின் நாட்டுப் பற்றை ஆசிரியர் இமயவரம்பன் மூலம் எடுத்துக் காட்டுகிறார். 'நீங்கள் காணும் உங்கள் சாம்ராஜ்யம் சாதாரணமானதல்ல. எண்ணிறந்த வீரர்களின் செந்நீர் பாய்ந்து எத்தனையோ

பத்தினிகளின் சாம்பலால் எருவிட்டு வளர்த்திருக்கும் தனிப்பேரரசு. (காட்சி.5) என்பதில் தமிழர்களின் நாட்டுப் பற்றை அறிய முடிகிறது.

2. ஆரியர்கள் தமிழின் பெருமையை இகழ்ந்து கூறுகின்றனர். தங்கள் தேவபாஷையின் இழிலையும் புகழ்ந்து பேசுகின்றனர். இதன் மூலமாக ஆரியர்களின் புன்மையை வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். "கிழட்டுப் பருவத்திற்கு (தமிழுக்கு) கன்னி எனபபட்டம். சபாஷ்! இது ஒன்று போதாதா அவர்கள் அசட்டுத் தனத்தைஅறிவிக்க! ஆயிரம் வருஷங்கள் ஆகிவிட்டன. பல்லுப் போய் உயிர்ஊசலாடும கிழட்டுப் பிணம்தானே! அவளைக் கன்னி கன்னி எனப் பருவம் தெரியாமல் உளறிக கொட்டும் பதர்கள் கூட்டம் (ப.107) என்று தமிழ் மொழியையும், அம்மொழியைப் புகழும் மக்களையும் இகழ்கின்றனர். "நம்முடைய ஆரிய பாஷைககு நிகராக உலகிலேய வேறு பாஷை உண்டா? தேவ பாஷைபின்னா! எல்லார் வாயிலையும ஆமபுட்டு, வாடாமே, லதங்காமே, வந்தவாளெல்லாம் தீண்டாமே, செதறாமே, ஏட்டிலேய பத்தரமா வச்சு, பொத்திப் புகழும் நம்ம ஆரிய பாஷைகுன்னா அந்தக் கன்னிங்கற அழகிய பருவத்தைக் குறிக்கிற அற்புதப் பெயர் பொருந்தும். காலம் தெரியாமே பருவம்தெரியாமே உருவம் தெரியாமே உயர்வா நெனச்சு உளறித் திரியற பேதைத் தமிழருடைய பேத்தலே நம்ம அவந்தி மகாராஜாவும் ஒப்புக் கொளகின்றார்" என்று ஆரிய ஒற்றன் கஜன் கூறுகிறான். (ப. 107-108)

3 நிமித்தகனை ஆரிய ஒற்றனாக ஆசிரியர் காட்டுகிறார். இவ்விவாற்றர்கள் தொடர்ச்சியாக அண்ணன் தம்பி கூட்டுறவைச் சிதைத்து, நாட்டில் பிளவுண்டாக்கிப் படையெடுப்புக்குரிய சூழ்நிலையை உண்டாக்கச் சூழ்ச்சி செய்கின்றனர். பகைவரை நேருக்கு நேராக நின்று தாக்காமல், மறைவாகத் தாக்கி அழிக்கும் ஆரியரின் புன்மையை அறிவுறுத்துவதாகவும்இதுஉளளது.

செங்குட்டுவனுக்கும் இளங்கோவுக்குமுள்ள உடன் பிறப் புணர்ச்சியையும தமிழரின் உயரிய பண்பாட்டையம் இக் கற்பனை சீரிய முறையில் விளக்கிக் காட்டுகிறது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வாயிலாக இளங்கோ வின் துறவுக்கான காரணம் கூறப்படுகிறது. இந்நூலில் இளங்கோவின் துறவிற்கு முதன்மை கொடுக்கப் படுகிறது. நிமித்தகன் குறி கூறிய சமயத்தில் செங்குட்டுவன் இல்லை. இளங்கோ, அணிமணிகளைக் களைந்த பிறகே செங்குட்டுவன் வீரமுரசம் ஒலிக்க வரு கிறான். 'நான் மட்டுமல்ல! இந்தப் பீடத்தை என் பின் சந்ததியும் எண்ணாதிருக்க அந்தச் சந்ததியும் வேண் டேன்" (ப. 22) என்று துறவு பூண்கிறார் இளங்கோ "இந்த மாயக்காரன் சந்ததி மடிய வேண்டும். இவன் சொல், சூழ்ச்சியென உலகம் அறியவேண்டும். அதற் கெனவே நான் வெளியேறுகிறேன். உலகம் உய்ய கலையாதரவு வேண்டும். புவி வாழக் கவியரங்கில் பயின்று கலை உயர வழி கற்று வந்திருக்கிறேன். அதனால் புவியாளப் பிறந்தவர் தாங்கள் தான். நான் கவி ஆளுவேன். அதோ! என் கவிதைத் தேவி என்னை அழைக் கிறாள். நான் போகிறேன். பைந்தமிழ்ச் சிலம்பொலி என் வாழ்நாளை இனிமைப்படுத்தும்" என்று கூறித் துறவு மேற்கொள்கிறார். (ப. 26)

இளங்கோவும் ஆரியர்களின் கொள்கைகளை வெறுப் பவராக—எதிர்ப்பவராக—உள்ளார். "பழமை தொட்டே எலும்புருக்கி நோய்போல் மனித உரிமையையும் அறிவை யும் அடிமைப்படுத்திச் சமூகத்தின் வளர்ச்சியையும், செல்லரித்தாற்போல் அரித்து, மக்களை மூடநம்பிக்கைக் குள் தள்ளி அதனால் உடல் நோகாமல் உண்டு கொழுத்து வரும் இவர் போன்றார் வாக்கினால் அறிவிலிகள் மட்டுமல்ல; அரசர்களும் மயங்கி இருக்கிறார்கள்." ப. 26) என்னும் இளங்கோவின் கூற்று ஆரியர்களைப் படம் பிடிக்கிறது. இளங்கோ துறவு பூண்டமையே

இமயவரம்பனின் இறப்பிற்குக் காரணமாகவும் கூறப்படுகிறது.

5. பொற்றொடி என்ற தமிழணங்கு இளங்கோவின் பாத்திரத்தை உயர்த்துகிறது. ஏதோ திடீரென்று ஏற்பட்ட ஆவேசத்தால் அரசைத் துறந்தவரல்ல இளங்கோ. வனிதையர் மயக்கிலும் மனத்தைத் தளர விடாதபடி வஜ்ஜிர உள்ளம் படைத்த துறவியென்பதை நாம் உணர முடிகிறது. பொற்றொடியின் கலையை இரசித்த இளங்கோ அவள் காதலை ஏற்றுக் கொள்ள வில்லை. தமிழ் மகளிரின் காதல் தூய்மையானது உள்ளத் தொடர்புடையது என்பதை, பொற்றொடி, சேவையில் ஈடுபடுவதன் மூலம் அழகாகச் சித்திரிக்கிறார் ஆசிரியர். எல்லாவற்றையும் துறந்த இளங்கோவால் தமிழைத் துறக்க முடியவில்லை. "தமிழ்! தமிழ்! தமிழ்! என்னும் ஆரணங்கை நான் காதலித்தேன். அவள் என்னை ஆர்வத் துடன் தழுவிக் கொண்டாள்" (ப. 149) என்று இளங்கோ தன் தமிழுள்ளத்தைக்குறிக்கிறார். "இனியதமிழுக்குப்பணி செய். இன்ப நிலை தானே வந்து எய்தும்" (ப. 149) என்று கூறுவதால் பொற்றொடி இளங்கோவிற்குப் பணி விடை செய்ய முற்படுகிறாள்.

மனம் விரும்பிய மங்கையரையெல்லாம் மனைவி யாக்கி மகிழ்ந்திருந்த மன்னர்களிடையே சேரர் திலகம் ஒருவனே, ஒரே பெண்ணுக்கு இடமளித்துப் பெண்மை யைப் போற்றினான் என்ற பெற்றியை உண்டாக்கு கிறார் ஆசிரியர். பொற்றொடியின் கற்பனையில்லாவிட் டால் வேண்மாளின் பாத்திரம் இவ்வளவு சிறப்பெய்தி யிருக்க முடியாது. வேண்மாளின் வாக்கே இமயப் படை யெடுப்பிற்கு எழுச்சியூட்டியது.

6 நகைச்சுவைக்கென்று கரும்பு, செவ்வேள் என்னும் இரு பாத்திரப் படைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன புறநானூற்றுப் பாடல்களில் நாம் காணும் மறக்குடி

மகளிர் வழிவந்த மங்கையராகத் தோன்றுகிறாள் கரும்பு. மணவாளன் கோழையானாலும் வீறு கொண்டெழச் செய்யும் ஆற்றலுடையவள் தமிழ்ப் பெண் என்று கரும்பின் மூலம் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

7. கனகவிஜயர் என்னும் இருவரை ஒருவராகவே காட்டுகிறார் ஆசிரியர். எதிர்ப்புச் சக்தியை இருவர்மேல் ஏற்றுவதும் வெற்றியின் சின்னமாகிய இமயக் கல்லை இருவரும் சுமந்து வருவதும் காட்சிக்கும் அழகாயிராது. கருத்திற்கும் சிறக்காது என்று அவர் நினைத்திருக்கலாம். நடிக்கும் நாடகமாதலால் ஆள் குறைப்பும் ஒரு காரண மாகலாம்.

8. கனக விஜயனின் மனைவியாக, பங்கஜம் என்னும் தன்மானமுடைய பெண்ணைப் படைத்துள்ளார். கனகவிஜயன் போர்க்களத்திலிருந்து தப்பியோடியதைக் கேட்ட பங்கஜம், "கோழைக்குக் கழுத்துக் கொடுத்த அபாக்கியவதி நான்தான். நேர்நின்று வீரமரணம் ஏற்க அஞ்சிய ஆரியன் மனைவி நான்தான். உயிரை உயர்வாக மதித்து உருமாற்றி, ஓடிய உலுத்தனின் மனைவி நான் தான். அவன் வீரமரணம் அடைந்திருந்தால் அக்னியில் விழுந்து வீரமரணம்அடைந்திருப்பேன். அவன் கள்வனைப் போல் காஷாயம் தாங்கி ஓடினான். கோழையின் மனைவி என உயிர் வாழவா?" என்று கூறிப் பங்கஜம் கத்தியை எடுத்துக் குத்திக்கொண்டு இறக்கிறாள். (ப 153) செங்குட்டுவனால் வீரப்பெண் இவள் என்று போற்றிக் கூறும் சிறப்புடையவளாகிறாள்.

9. கனகவிஜயன் தன் மகள் மல்லிகைக்குச் சுயம்வரம் நடத்துகிறான். தன் தந்தை கனகவிஜயன் தமிழ்ப்புலத்து மன்னர்களுக்கு அழைப்பு அனுப்பாமையை அவள் அறிய வில்லை. அதனால் அங்கு வந்திருந்த வடபுலத்து மன்ன ருக்கு மாலையிடாமல் தமிழகத்து மன்னருக்கே மாலை யிட விரும்புகிறாள். தன் தந்தையிடம் தமிழக மன்னர்

கள் ஏன் வரவில்லை என்று கேட்கிறாள். வட ஆரிய மன்னர்களைவிடத் தமிழ் மன்னர்கள்தான் சிறந்தவர்கள் என்பதைக் குறிக்கவே ஆசிரியர் இப்புதிய நிகழ்ச்சியை அமைத்துள்ளார் போலும்.

இவ்வாறு ஆசிரியர் தம் கொள்கைகளுக்கேற்ப, நாடக அமைப்பிற்கேற்ப, பலவேறு புதுமைகளைச் செய்துள்ளார்.

குடமலைத் தெய்வம்

[அரசு]

புலவர் அரசு அவர்கள் 1953-இல் குடமலைத் தெய்வம் என்னும் நாடக நூலை எழுதினார். இந்நூலில் கண்ணகியின்கதைமுதலிடம பெறவில்லை. கண்ணகிக்குக் கோயில் எடுத்த சேரன் செங்குட்டுவனைப் பற்றிய நிகழ்ச்சிகளே முதன்மை பெறுகின்றன. சேரனைப் பற்றிய இளங்கோவடிகளின் கருத்துகளுடன், புலவர் அரசுவின் கற்பனையும் இழைந்து இந்நாடகம் உருவாக்கப் பெற்றுள்ளது. 27 காட்சிகளைக்கொண்ட இந்நாடகம் "தமிழனின் செந்நீரிலுள்ள கோழையணுக்கள் மடிந்து வீர அணுக்கள் செறிந்து ஆக்கம் பெற வேண்டும்" என்னும் உயர் நோக்கத்தில் படைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, கதைப்பாடல்கள் அனைத்திலும் வஞ்சிக் காண்டம் நீக்கப்பட்டுள்ளன. வஞ்சிக் காண்டம் வேண்டுமா? வேண்டாமா? வஞ்சிக்காண்டம் இளங்கோ வடிகள் எழுதியதா? இல்லையா? என்பனபோன்ற வினாக்கள் ஒருபுறம் எழுகின்றன. இந்நூலாசிரியர் வஞ்சிக்காண்டத்தை மட்டுமே மையமாகக் கொண்டு இந்நாடகத்தைப் படைத்துள்ளார். புகார், மதுரைக் காண்டங்களை விடுத்துள்ளார் என்பது குறிக்கத்தக்கது. இந்நூலிலும் ஆசிரியர் சில மாற்றங்களைச் செய்துள்ளார்.

1. கண்ணகி வேங்கைமர நிழலில் வந்து நின்றவுடன் இந்திரவிமானம் வருவதாக இளங்கோவடிகள் காட்டு கிறார். இந்நூலாசிரியர் குன்றக் குறவர்களுக்குத் தன் நிலையை எடுத்துக் கூறும் கண்ணகி, தவம் செய்து கணவனை அடைவதாகக் காட்டுகிறார்.

2. வடபுலத்திலிருந்து வந்த முனிவர்கள், கனக விசயர்கள் வாய்காவாமல் உரைத்த செய்திகளைச் சேரன் செங்குட்டுவனிடம் உரைப்பதாக, இளங்கோவடிகளும் கூறுகிறார். இந்நூலில் விருந்துக் கூடத்தில் அவமதிக்கப் பட்ட துறவிகள் வந்து சேரனிடம் வடவர்களைப் பற்றிக் கூறல் இயல்பாய் அமைகிறது.

3. சேரன்செங்குட்டுவனைவீரனாகவும்புகழுடையவ னாகவும், கற்புடையவனாகவும் இளங்கோவடிகள் காட்டு கிறார். அவன்கனகவிசயரைப் போரில் வென்று கண்ணகி யின் கல்லைச்சுமக்க வைத்ததால் வடவர்தமிழர் போராட் டத்தை நீக்க விரும்பிய ஆசிரியர் அரசு, இருவருக்குள்ளும் பகைமையை ஒழிக்க—ஒற்றுமையை உண்டாக்க—மண வினையைப் புகுத்துகிறார்: அதனால் கனக விசயரின் தங்கை ஆரியாங்கனை என்னும் பேரழகி, செங்குட்டுவன் முதன்முறை வடநாடு சென்றபோது கண்டு காதல் கொண்டதாக ஆசிரியர் புதுமையாகப் படைக்கிறார். அவள் தன் தமையன்களைப் போரிட வேண்டாம் என்று தடுக்கிறாள். கனகவிசயர் சேரனிடம தோற்றபிறகு அவளும் அவளுடைய தோழியும் நாட்டியப் பெண்களின் தோற்றத்தில், பாசறையில் இருந்த சேரன் செங்குட்டுவன் முன் நடனமாடுகின்றனர். அவன் அவைக்களத்தில் நாட்டியப் பெண்களாகப் பதவி பெறுகின்றனர். ஆரியாங் கனை தன் காதல் நிறைவேறாது என்று நினைத்து தற் கொலை முயற்சியில் ஈடுபடுகிறாள். தக்கநேரத்தில் அத் தற்கொலையைத் தடுத்த சேரன் அவளுடைய காதலையும் ஏற்றுக் கொள்ளுகிறான். அரசக் குடியில் பிறந்த

ஆரியாங்கனை வேண்மாளுடன் போட்டியிடாமல்அரசை விரும்பாமல்–காதலியாகவே இருக்கவிரும்புகிறாள். அவளுடைய விருப்பத்தின்படி கனக விசயரையும் விடுவிக்கிறான் அரசன். வடவர் தமிழர் பகையைத் திருமணம் மூலமாக ஒழிக்க விரும்பும் ஆசிரியரின் இம்முயற்சி சேரன் செங்குட்டுவனின் கற்புடைமைக்கு இழுக்கு தருவதாகவும் அமைகிறது. கோவலனுக்குக் கோயில் எடுக்காமல் கண்ணகிக்குக் கோயில் எடுக்கும் சேரனும் இரண்டாவதாக இன்னொருத்தியை விரும்புவதால் ஒரு கோவலனாக மாற்றம் பெறுகிறான். இரு அரசக் குடும்பங்கள்—இரு வேறு வகையான நாகரிகமுள்ள குடும்பங்கள்—ஒன்று படுவதற்கு இம்மண நிகழ்ச்சியை ஆசிரியர் அறிமுகப்படுத்தினாலும் அது சேரன் பாத்திரப் படைப்பில் கரும்புள்ளியாய் அமைகிறது.

கண்ணகியோ மாதவி

(கோரா)

கண்ணகியோ மாதவி என்னும் இந்நாடகத்தை டாக்டர் கோரா எழுதியுள்ளார். இந்நாடகத்தில் மூன்று காட்சிகள் உள்ளன.

அண்மைக்காலம் வரை சீனா, ஜப்பான், ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளில் ஆண்கள் குழந்தைப் பேற்றை மனைவியரிடமும், உடல் உள்ளத் துணையைக் கணிகையரிடமும் பெறுகின்றனர் என்பது நாகரிக வரலாற்று உண்மை. உடல் உள்ளத் துணையையும் மனைவியரிடமும் பெறவேண்டும் என்பதுதான் இன்றைய உலகத் திருமணக் கோட்பாட்டின் வளர்ச்சி. இதுவே பெண்டிரின் தனித்துவ வளர்ச்சிக்கும் சுதந்திர எழுச்சிக்கும் வித்திட்டு வருகிறது. இந்தக் கருத்தின் அடிப்படையில் தான் இந்நாடகத்தை எழுதியதாக ஆசிரியர் தன் நூலின்

முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். எதிர்காலத்தில் நிச்சயம் ஏற்படப்போகும் மாறுதல்களைச் சுட்டிக் காட்டும் சிறுமுயற்சியே இந்நாடகம் என்றும் அவர் அறிவிக்கிறார்.

இந்நாடகத்தில், எமலோகத்தில் எமன், கற்பின் அடிப் படையில் பிரிக்கப்படும் தமிழகப் பெண்கள் கோப்பை (File) கண்ணகி தேவியாருக்கு அனுப்பிவிட்டுக் காத்திருக் கிறான். ஏனென்றால், "அவர்கள்தான் தமிழ்க்கற்பின் இலக்கணம். அவர்கள் பார்த்துக் கையெழுத்துப் போட்டு விட்டால் மும்மூர்த்திகள் ஆடிட்டில் அப்ஜக்ஷன் வராது. புலவர் பட்டிமன்ற அப்பீல் மனுத் தொல்லை இருக்காது" (ப.4) என்று எமன் கூறும் பகுதி கற்புக்கு இலக்கணமாகக் கண்ணகியை வரையறுக்கும் பட்டிமன்றப் புலவர்களை மறைவாகச் சாடுகிறது. எமலோகத்தில் கண்ணகி தேவி யின் முகவரியாக "தெய்வலோகம், தமிழகப் பிரிவு, கற்புக் கரசியர் வார்டு, முதல் தெரு முதல் ஏழு மாட மாளிகை களில் முதல் மாளிகை' (ப. 8) என்று கூறப்பட்டுள்ளது. இது நகைச் சுவையாகவும் சிந்தனைக்குரியதாகவும் உள்ளது.

பிறகு எமனிடம் ஒருத்தி வந்து கோபத்துடன், "அந்தக் 'கற்புக்கரசி' பைலைக் கண்ணகிக்கு அனுப்பி யிருக்கக் கூடாது. எனக்கு அனுப்பியிருக்க வேண்டும்" என்று கூறுகிறாள். தன்னை மாதவி என்றும் அறிமுகப் படுத்திக் கொள்கிறாள். "நீங்கள் நரகலோகத்தில் இருப்ப தாக ஞாபகம்" என்று எமன் கூற, மாதவி, "ஆமாம் இருபது வருடங்களுக்கு முன்பு நரகலோகத்தில்தான் இருந்தேன். பிறகு நவீனப் புலவர்கள் வந்து பட்டிமன்ற மனு போட்டு வாதிட்டு வாதிட்டு என்னைத் தெய்வ லோகத்திற்குக் கொண்டு வந்து விட்டார்கள். சில வருடங் களாகக் கண்ணகியுடன் சரிசமமாகத் தங்கியிருக்கிறேன்" (ப. 11) என்ற மாதவியின் கூற்றிலிருந்து, இக்காலப் புலவர்களின் நிலையை ஆசிரியர் தெளிவாக்குகிறார்.

இதில், கண்ணகி வேலைக்குச் செல்லாமல் வீட்டிலிருக்கும் இறைச் செல்விக்காக (அக்காலக் கற்புடைய பெண்ணுக்காக) வாதாடுகிறாள். மாதவி வேலைக்குச் செல்லும் பூங்கோதை என்னும் (இக்காலக் கற்புடைய) மாதுக்காக வாதாடுகிறாள். இருவரும் தங்களுடைய பிரதிநிதிகளுக்கு அதிக மதிப்பெண்கள் தரவேண்டுமென்று விரும்புகின்றனர். இறுதியில் வழக்கு மன்றத்தில் முடிவு ஏற்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். கண்ணகியும் மாதவியும் வாதி, பிரதிவாதிகளிடம் வினாத் தொடுக்கின்றனர். இதன் மூலம் உண்மையான கற்புடையவள் பூங்கோதைதான் என்று கண்ணகி மாதவி இருவருமே முடிவு எடுக்கின்றனர். இறுதியில் இருவரும் வேறு வேறாக இல்லாமல் கண்ணகியோ மாதவி என்ற பெயரில் இணைகின்றனர்.

கற்பு என்ற சொல் ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியாத பெண்ணடிமை நிலையைக் கண்ணகியின் வாழ்விலும், காலத்திற்கேற்ற முறையில் கற்புத் திறனும், பெண்ணுரிமையும் உடைய நிலையை மாதவியின் வாழ்விலும் ஆசிரியர் படைத்துள்ளார். தன் நாடகத்தின் மூலம் இரண்டாம் நூற்றாண்டையும், இருபதாம் நூற்றாண்டையும் ஆசிரியர் இணைக்கும் திறன் போற்றுதற்குரியது.

சித்திரப் பாவை

(புத்தனேரி. ரா. சுப்பிரமணியம்)

சித்திரப் பாவை என்னும் நாட்டிய நாடகம், கவிஞர் புத்தனேரி. ரா. சுப்பிரமணியம் அவர்களால் மாதவியின் மேல் எழுதப் பெற்றது. இது இன்னும் அச்சாக வில்லை. செல்வி அ. மல்லிகை இந்நாடகத்தில் மாதவியாக நடனம் ஆடியுள்ளார். சிலம்பை ஒட்டிய இந்நாட்டிய நாடகத்தில் ஆசிரியர் சில புதுமைகளையும் செய்துள்ளார்.

1. இதில் மாதவி தன் தோழியுடன் இறைவணக்கம் பாடுகிறாள். (காட்சி 1)

2. சிலப்பதிகாரத்தில் கோவலன் மாதவியின் அரங்கேற்றத்திற்குச் சென்றதாகவோ, நடனத்தைக் கண்டதாகவோ குறிப்பில்லை. இந்நாடகத்தில் சோழன் அவையில் மாதவி நடனமாடுகிறாள். நடனத்தைக் கண்டு கோவலன் மயங்குகிறான். நடன முடிவில் மன்னர் மாதவிக்குப் பச்சை மாலை பரிசளிக்கிறார். மாலையுடன் மாதவி திரும்பியபோது கோவலனின் பார்வையில் மயங்கி நிற்க, மாலை நழுவி விழுகிறது. உடனே கோவலன் அதனை எடுத்து மலருடன் சேர்த்துத் தருகிறான். இவ்வாறு இருவரின் உள்ளமும் ஒன்று படும் சூழ் நிலையை ஆசிரியர் அழகுறக்காட்டியுள்ளார். (காட்சி 37)

3. கண்ணகியும் கோவலனும் ஊஞ்சலில் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். கண்ணகியின் பணிவிடையும் மாதவியின் வனப்பும் மாறி மாறிக் கோவலனின் மனத்தில் ஊசலாடுகின்றன.

"குலமாது கண்ணகியுன் மனைவிளக் கானாள்
கலைமாது மாதவியுன் மனவினைக் காவாள்
ஒரு கண் கண்ணகி மறுகண் மாதவி
இருபெண் களினால் இலங்குமுன் இல்லறம"

என்று கோவலனின் மனச்சான்று பேசுகிறது. அதனால் மாதவியையும் ஏற்கலாம் என்ற முடிவிற்கு வருகிறான் கோவலன். (காட்சி 4)

4. கோவலனைக் கண்ட மாதவி, அவன் நினைவினால் ஏங்குவது நாடகத்திற்கு ஏற்ற உத்தியாக அமைகிறது. (காட்சி 5)

5. கோவலன் தனிமையில் மாதவியை நினைத்துப் பாடிக் கொண்டிருக்க அங்கு வந்த தோழன் மாதவியின் காதல் நிலையை உணர்த்துகிறான். (காட்சி 6) இது சங்க காலத்துப் பாங்கற் கூட்டம் என்னும் காதல் நிலையை விளக்குகிறது.

6. கோவலன் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகி வழக்குரைத்து, பின் தன் கணவனைக் கூடுகிறாள். கோவலனிடம் அன்பு கொண்ட மாதவி ஏன் உயிர் துறக்கவில்லை என்ற வினாவிற்கு விடையை ஆசிரியர் இந்நாடகத்தின் மூலம் தருகிறார். அழகுச் சிலையான சிறுமிமணிமேகலையின் உள்ளத்தில் காதல் போதை தோன்றும்படியாக, மாதவியின் தாய் சித்திராபதி ஆடல் பயிற்றுவித்துக் கொண்டு பாடுகிறாள். அந்நேரத்தில் மாதவி திடீரென்று வந்து வெறுப்புடன் தாயை நோக்கிப் பாடுகிறாள்.

'மயக்கும் ஆடல் பாடல் என்றன்
மகளுக்கு வேண்டாம் – ஆண்கள்
மனக்குரங்கின் பிடியில் இவளும்
அகப்பட வேண்டாம்
தவக்குலத்தின் ஆசி இவளைத்
தழுவட்டும் அம்மா! இவள்
தாழ்விலாத அறநெறியில்
வளரட்டும் அம்மா'

என்று கூறிச் சிறுமியை இழுத்துக் கொண்டு மாதவி செல்கிறாள். மாதவி சிறிது நேரம் பிரிந்திருந்த போதே இந்நிலை என்றால் மாதவி இறந்திருந்தால் மணிமேகலையை எந்த இழிநிலையில் வளர்த்திருப்பாள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க இக்காட்சி துணை செய்கிறது. (காட்சி 17)

7. கோவலன் இறந்ததையும் கண்ணகி இறந்ததையும் மாடலன் மூலம் கேள்வியுற்ற மாதவி குமுறி அரற்றுகிறாள். சோக வெறியில் நடனம் ஆடுகிறாள். மூர்ச்சையாகிறாள். அந்நேரத்தில் அறவண அடிகள் புத்தனின் கருணையைக் கூறி வருகிறார். இக்காட்சி மாதவி துறவுப்பாதை நோக்கிச் செல்லும் வழிகாட்டியாக அமைகிறது. (காட்சி 17)

8. இந்திர விழாவில் கலந்து கொள்ளுமாறு மாதவியைத் தூண்ட, தோழனும் தோழியும் வருகின்றனர். இருவரும்மாதவியின் வருகையை ஆவலோடு எதிர்நோக்க, மாதவியின் 'புத்தம் சரணம் கச்சாமி' என்னும் குரல் கேட்டு, திடுக்கிடுகின்றனர்.

"புயலுக்குப் பின்னாலே அமைதி கண்டேன்
புத்தரது பெருவெள்ளக் கருணை கண்டேன்
துயரத்தின் சிகரத்தில் சாந்தம் கண்டேன்
சுகமெல்லாம் துறக்கின்ற சுகமும் கண்டேன்"

என்னும் மாதவியினுடைய மொழி கேட்டு, தோழனும் தோழியும் விழுந்து கும்பிடுகின்றனர். (காட்சி 21)

மாற்றங்கள்

1. மாதவியைப் பிரிந்த வந்த கோவலன்,

"சலம்புணர் கொள்கைச் சலதியோடாடி,
குலம்தரும் வான்பொருள் குன்றம்"

தொலைத்ததாக, கண்ணகியிடம் கூறுகிறான். மாதவியிடம் குற்றம் காண விரும்பாத ஆசிரியர் கோவலன் வறுமையுற்றதற்குக் காரணமாக வேறொன்றைக் குறிப்பிடுகிறார். கோவலனின் நண்பனான மாடலன்,

"கடல்மீது புயல்மோதிக்
கப்பல் கவிழ்ந்ததே
கடன்பட்டார் உனதுதந்தை
கடமையினை உணர்ந்து வா!
காதலினைத் துறந்து வா
கண்ணகியைக் காக்க வாவா!"

என்று பாடுகிறான். இதைக்கேட்டு திகைத்து நிற்கும் கோவலனிடம் மாதவி, "மடல் கண்ட பின்னரும் வாளா விருப்பது மாபெருங்குற்றமன்றோ? தடையின்றிச் செல்லுவீர்! தந்தை தாய் மனைவியின் சங்கடம் தீர்த்து

வாரீர்" என்று கூறி அனுப்புகிறாள். இப்படி, கணவனின் கடமையை நினைவுறுத்தும் சிறந்த குலமகளாக மாதவியைக் கவிஞர் காட்டியுள்ளார். (காட்சி 9)

2. கோவலன் பாடியது போன்றே மாதவியும் வேறொருவன் மேல் மனம் வைத்ததுபோல் பாட, அதனால் மனம் வேறுபட்டுப் பிரிவதாக இளங்கோவடிகள் கானல்வரியில் காட்டுகிறார். இந்திர விழாவில் கோவலனும மாதவியும் களிப்புடன் பாடிக்கொண் டிருக்கும்போது பாடலில் பேதம் ஏற்பட்டு கோவலன் மாதவியை வெறுத்துச் செல்கிறான். கோவலன்,

"இனியொரு பேச்சும் வேண்டேன்
இனியவள் மூச்சும் வேண்டேன்
கனியிதழ்ச் சிரிப்பும் வேண்டேன்
கணிகையின் அணைப்பும் வேண்டேன்"

என்று மாதவியிடம் வெறுப்புற்றுப் பிரிகிறான். மாதவி சோகமே உருவாகத் துடித்து, அடியற்ற மரம் போல் சாய்ந்து மூச்சில்லாமல் இருக்கிறாள். அவளுக்குப் பின்னால் தற்செயலாக அறவண அடிகள் கடற்கரையில் தன்போக்கில் நடந்து செல்லும் நிலையில், புத்தனின் அருளைப் பாடிக்கொண்டே செல்கிறார். அடிகள் ஒவ்வொரு அடியாகப் பாடும்போது கொஞ்சம் கொஞ்ச மாக மூர்ச்சை தெளிந்த மாதவி அதிர்ச்சியுற்ற நிலையில் அவரைப பின்தொடர்கிறாள். மாதவி துறவு மேற்கொள் வதற்கான நல்ல அடித்தளத்தை நாடக ஆசிரியர் அமைக் கிறார்.(காட்சி 14)

இருபத்தோரு காட்சிகளைக் கொண்ட இந்நாட்டிய நாடகத்தை எழுதிய கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியன் அவர்கள் இங்ஙனம் பல புதுமைகளை உருவாக்கியுள்ளார், சில மாற்றங்களையும் செய்துள்ளார்.

மணிமேகலையில் கண்ணகி

சிலப்பதிகாரத்தில் கோவலனுடைய ஒருயிர்க்குப் பாண்டியனும் அவன் தேவியுமாகிய ஈருயிர்கள் மடிந்தன. அதன் பிறகும் கண்ணகி சீற்றம் தணியாமல் மதுரையை எரித்து, அங்குள்ளோரைக் கொன்றாள். இஃது அறச் செயலா என்ற எண்ணம் சிலப்பதிகாரத்தைப் படிப்பவர் நெஞ்சில் எழுதல் இயல்பே. இவ்வெண்ணம் மணிமேகலை யின் ஆசிரியராகியசாத்தனாரின் நெஞ்சிலும் நிழலாடியது. அவர் தன் நூலில் 26-வது காதையான 'வஞ்சி மாநகர் புக்க காதை'யில் மணிமேகலையின் வாயிலாக இக் கேள்வியை எழுப்பி விடை காண முயல்கிறார். (மணி 26:1-69) கடவுளாக இருந்த கண்ணகியையும் கோவலனையும் கண்டு தொழுது,

"அற்புக்க ணில்லாது நற்றவம் படராது
கற்புக் கடன் பூண்டு நுங்கடன் முடித்த
தருளல் வேண்டுமென்று" (மணி 26: 7-9)

மணிமேகலை கேட்க, தான் மதுரையை எரித்தது தவறென்று உணர்ந்த கண்ணகி விடை கூறுகிறாள்.

சாத்தனார் கண்ணகியின் கதையை முதலில் அறிந்து மற்றவர்களுக்குக் கூறியவர். ஆயினும் அவர் தன் சமயக் கோட்பாட்டிற்கேற்ப மாற்றி எழுதியுள்ளார். இளங்கோவின் கண்ணகி, மதுரையை எரித்ததுதவறென்று உணராதவள். சாத்தனாரின் கண்ணகி தன் தவறுணர்ந் தவள். செங்குட்டுவன், கண்ணகிக்கு மட்டும் கோயில் கண்டதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. மணிமேகலை, கோயிலில் கண்ணகியுடன் கோவலனும் இருந்ததாகக் கூறுகிறது. ஆனால் மணிமேகலையைக் கண்டு அவனும் பேசவில்லை. மணிமேகலையும் அவனிடம் பேசவில்லை. இளங்கோவடிகள் உரைசால் பத்தினியை உலகோர் ஏத்த மானிட மகளைத் தெய்வமாக்கினார். ஒருவர் முற்பிறவி யில் செய்த இருவினைகளையும் நுகர்ந்தே தீரவேண்டும் என்னும் பௌத்த சமயக்கொள்கையை நிலைநாட்ட விரும்பிய சாத்தனார் முற்பிறவியில் செய்த நல்வினையால்

கண்ணகி தேவநிலையை அடைந்ததாகக் கூறுகிறார். ஆயினும் மதுரையை எரித்த தீவினையை நீக்கப் பிறவிகள் பல பெற்று, உழன்று, இறுதியில் புத்த ஞாயிறு தோன்றுங் காலத்தில் நிர்வாண மடையப் போவதாகக் கூறுகிறாள். இளங்கோவடிகள் கண்ணகியைச் சமணச்சமயத்தில் சேர்க்கவில்லை. சைவனான செங்குட்டுவன் கண்ணகியைச் சைவ சமயத்தவளாக மாற்றவில்லை. சித்தலைச் சாத்தனாரோ அவளைப் பௌத்த சமயத்தவளாக்கு கிறார்.புத்தனால் தான் பிறவிப்பேறடைய முடியும் என்று கண்ணகி நிலைநாட்டுகிறாள். அதுவரை சித்துகள் செய்து கொண்டிருப்பேன் என்றும் கூறுகிறாள். இதற்குக் காவிரிப் பூம்பட்டினத்திலுள்ள புத்த விகாரங்கள் ஏழினையும் கணவனுடன் ஏத்தியமையே என்றும் காரணம் கூறுகிறாள். பல சமய வாணரின் திறம் கேட்டும் உண்மை அறியாமல் இறுதியில் பௌத்த சமயத்தைப் பின் பற்றுவாய் என்றும் மணிமேகலைக்கு வருங்காலம் உரைக் கிறாள். இவ்வாறு சாத்தனார் கற்புக் கண்ணகியைப் பௌத்தக் கண்ணகியாக மாற்றுகிறார். இந்நூல் சிலப்பதி காரச் சமகால நூலானாலும் கதையில் நடந்த நிகழ்ச்சி சரியா எனத் தீர்வு காண முயல்வதாக அமைகிறது. பாத்திரத்தின் சமயத்தில் மட்டும் மாற்றம் செய்திருக் கிறது. கண்ணகியின் கற்பை விட, கண்ணகியின் பௌத்த சமயக் கோட்பாட்டிற்கே முதன்மை கொடுக்கிறது.

இவ்வாறு சிலப்பதிகாரத்திற்குப் பின்னால் தோன்றிய ஆசிரியர்கள் பலர் தங்கள் கொள்கை, சமயம், காலச் சூழலுக்கு ஏற்பவும், கற்புடைமையைப் பெண்களின் உள்ளத்தில் நிலைநிறுத்தவும், பரத்தையரின் புன்மை உணர்த்தி, ஆடவர்களின் பரத்தமையை நீக்கவும், காளி வழிபாட்டினைப் பரப்பவும் கண்ணகியின் கதையைத் தங்கள் விரும்பியபடி பாடல்களிலும் நாடகங்களிலும் மாற்றம் செய்துள்ளனர்.

—;0:—

உசாத்துணை நூல்கள்

மூல நூல்கள் :

அண்ணாதுரை, சி. என்., 'கல்சுமந்த கசடர்' அண்ணாவின் நாடகங்கள், பரிமளம் பதிப்பகம், முதல் பதிப்பு 1971.

அய்யாசாமி, ரா , 'சிறுவர் சிலம்பு' முதல் பதிப்பு 1974.

அரசு, புலவர் 'குடமலைத் தெய்வம்' கழக வெளியீடு, 1953.

அரவிந்தன் மு. வை. 'சிலம்புச் செல்வி', கண்ணம்மை வெளியீடு, 1977.

இளங்கோவன், ஜி. சி., 'இளங்கோவின் காதலி' மலேசியா 1971.

இளந்திரையன், சாலை. 'சிலம்பின் சிறுநகை' பாரி, 1965.

கந்தசாமிக் கவிராயர், 'கண்ணகி வெண்பா' பார்வதி பதிப்பகம், அம்பா சமுத்திரம், 1972.

கந்தையா, வி. சீ. 'கண்ணகி வழக்குரை', காரைத் தீவு இந்துசமய விருத்திச்சங்கம், இலங்கை, 1968.

கருணாநிதி, மு., 'சிலப்பதிகார நாடகம்', தமிழ்க்கனி பதிப்பகம், 2-ஆம் பதிப்பு, 1975.

கோரா, டாக்டர். 'கண்ணகியோ மாதவி' சிவகாமி பதிப்பகம், முதல் பதிப்பு 1976.

சங்கரதாஸ் சுவாமிகள், டி, டி., 'கோவலன் சரித்திரம்' நவரத்தின நாடகச் சரித்திரங்கள், பி. நா. சிதம்பர நாத முதலியார் சன்ஸ், மதுரை, 1937

சங்கரலிங்கக் கவிராயர், ச. சு., 'கோவலன் சரித்திரம்' இரத்தினம் நாயகர் ஆண்டு சன்ஸ், சென்னை 1977.

சம்பந்தம் பிள்ளை, சு., 'பூம்புகார்ப் பத்தினி', (ஆண்டு இல்லை.)

சுந்தரம். பி. 'கண்ணகிக்கும்மி', வெளியிடப்படாத எம். ஏ. ஆய்வேடு, 1986.

சீநிவாஸாசாரியார், 'கோவல வெண்பா', 1900.

ஞானமணி, சீ. 'சிலப்பதிகாரம்', 1979.

தமிழொளி, 'விதியோ வினையோ', புதுமைப் பிரசுரம், இரண்டாம் பதிப்பு, 1971.

திருமேனி, கு. 'நாடகச் சிலம்பு', முதல் பதிப்பு 1959.

நடராசன், தி. (பதிப்) 'கோவலன் கர்ண்ணகை கதை', 1979.

நவநீத கிருட்டிணன், அ. க., 'கண்ணகி கதை' (வில்லுப் பாட்டு) கழகம், 1953.

பாரதிதாசன், 'கண்ணகி புரட்சிக் காப்பியம்' பாரி, 3-ஆம் பதிப்பு, 1979.

புகழேந்திப் புலவர், 'கோவலன் கதை' லைஜயந்தி பிரஸ் 1914.

புத்தனேரி சுப்பிரமணியம், ரா., 'சித்திரப்பாவை' கையெழுத்துப் பிரதி.

பொன்னிவளவன், 'மாதவி காவியம்' மாதவி கலை மன்ற வெளியீடு, 1975.

முனிசாமி, எ. வெ., 'சிலப்பதிகார செம்பொருட் காவியம்' தமிழ்மணி புத்தகப்பண்ணை, முதல்பதிப்பு, 1981.

யோகி, ச. து. சு, 'கண்ணகி', தமிழ்க் குமரி, 1963.

விசுவநாதம் கி. ஆ. பெ. 'கற்பு' தமிழ்ச்செல்வம், ஆறாம் பதிப்பு, 1963.

வீரபத்திரன், 'வட்டப்பாறையில் வதைப்பட்ட கோவலன் கண்ணகி நாடகம்', இரத்தினம் நாயகர் சன்ஸ். (ஆண்டு இல்லை)

வேங்கடாசலம், ரா. 'இமயத்தில் நாம்', நாடகப் பண்ணை, மதுரை, 1949

ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 'கோவலன் கதை ஏட்டுச் சுவடி. எண் 6203, கேரளம்.

மேற்கொள் நூல்கள் :

குருசாமி. ம. ரா. போ. சிலப்பதிகாரச் செய்தி, பாரி, 1955.

சிதம்பரநாதச் செட்டியார், இளங்கோவின் இன்கவி, நாவலர் புத்தக நிலையம், மதுரை 1974.

நடராசா, எஃப். எச்ஸ்.சி., ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு, அரசு வெளியீடு, 1970.

மாணிக்கவாசகம், தி. செந்தமிழ்ப்பாவை, மதுரை, 1959.

மார்க்கபந்து சர்மா, சிலப்பதிகார இரசனை, இலக்கியப் பதிப்பகம், காரைக்குடி, 1948.

ரகுநாதன், சி., இளங்கோவடிகள் யார்? மீனாட்சி புத்தக நிலையம், 1984.


T 821.081 414
SAR
CT13252



013252



221.3310